# கள்வனின் காதலி



சக்தி திருமலை



# கள்வனின் காதலி

சக்தி திருமலை

அன்பு இல்லம்
கே.கே.பி. காம்ப்ளக்ஸ்,
எண். 107/2, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.

## நூல் குறிப்பு

| | |
|---|---|
| ◆ நூல் தலைப்பு | **கள்வனின் காதலி** |
| ◆ ஆசிரியர் | சக்தி திருமலை |
| ◆ மொழி | தமிழ் |
| ◆ முதற் பதிப்பு | டிசம்பர், 2014 |
| ◆ உரிமை | ஆசிரியருக்கு |
| ◆ தாளின் தன்மை | 11.6 K.g. வெள்ளைத் தாள் |
| ◆ நூலின் அளவு | 1 × 8 கிரவுன் |
| ◆ அச்சு எழுத்து | 11 புள்ளிகள் |
| ◆ மொத்தப் பக்கங்கள் | 556 |
| ◆ பைண்டிங் | சாதா அட்டை |

**விலை: ரூ. 250.00**

வெளியிடுவோர் **அன்பு இல்லம்**
கே.கே.பி. காம்ப்ளக்ஸ்,
எண். 107/2, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.

கணினி அச்சு மாதா பிரிண்டர்ஸ், சென்னை - 116.

அச்சிட்டோர்: கே.வி.எஸ். ஆப்செட், சென்னை - 14.

# கள்வனின் காதலி

# கள்வனின் காதலி

## 1

தூண்டிற் புழுவினைப் போல் - வெளியே
சுடர் விளக்கினைப் போல்,
நீண்ட பொழுதாக - எனது
நெஞ்சம் துடித்ததடீ!
கூண்டுக் கிளியினைப் போல் - தனிமை
கொண்டு மிகவும் நொந்தேன்
வேண்டும் பொருளை யெல்லாம் - மனது
வெறுத்து விட்டதடீ...!

- பாரதியார்

உலகில் உள்ள சிறியவர் முதல் பெரியவர்வரை வலியர் முதல் வறியர்வரை அனைவருக்கும் பாரபட்ச

மின்றி விடியும் இயற்கையின் கொடையான காலைப் பொழுது... மனிதனுக்கு விடியற்காலைப் பொழுதை விட மனதிற்குப் புத்துணர்ச்சியைத் தருவது எதுவுமில்லை.

ஒரு பக்கம் பக்கத்து வீட்டில் பாடும் கந்த சஷ்டி கவசமும், மறுபக்கம் பறவைகளின் கலகல த்வனியும்...

எதிர்வீட்டில், "அம்மா பால்..." என்றபடி வரும் பால்காரனின் சப்தமும்... எல்லாவற்றிற்கும் மேலாக நம் அனுமதியின்றியே நம் மீது மெதுவாக ஆட்சி செலுத்த ஆரம்பிக்கும் செல்லச் சர்வாதிகாரியான இளஞ்சூரியனின் கதிர்களும்... 'அடப் போய்யா... இதைவிடச் சொர்க்கம் உண்டா?' என்று நம்மைக் கேட்க வைக்கும்...

ஆனால் இவ்வளவு ரம்மியமான காலைப் பொழுதை மனதார அனுபவிக்கும் பாக்கியம் நம் நாதன் விலாஸில் வேலை செய்பவர்களுக்குக் கிடைக்கவில்லை.

குறுக்கும் நெடுக்குமாக அந்த அறையை அளந்து கொண்டிருந்தாள் பொற்கொடி. நாதன் விலாஸில் புதிதாக வேலைக்குச் சேர்ந்துள்ள வேலையாள்.

அவளுக்கு அந்த வீட்டைப் பற்றியும் தெரியாது. அந்த வீட்டின் உரிமையாளர் பற்றியும் சரிவரத் தெரியாது. பாவம், அவள் வேலைக்குச் சேர்ந்தே மூன்று நாட்கள் தான் ஆகியிருந்தன. எனவேதான் அந்தத் தவறைச் செய்து தொலைத்திருந்தாள்.

அவள் முகத்தில் நிறைந்திருந்த பதற்றத்தையும் வியர்வையையும் பார்த்துக் கொண்டேதான் இருந்தார் சமையல்காரத் தாத்தா மாணிக்கம்.

ஆயினும் முணுமுணுத்துக் கொண்டிருந்த திருவாசகத்தைப் பாதியில் நிறுத்திவிட்டு, அவளிடம் குசலம் விசாரிக்க மனமில்லை.

எனவே திருவாசகத்திற்கே ஒரு மனதாக ஓட்டுகளைப் பதிவு செய்து அதிலேயே ஒன்றிப் போனார். அதைப் பொற்கொடியும் கவனித்துக் கொண்டுதான் இருந்தாள்.

"சே... போயும் போயும் இந்த வீட்டுல வந்து வேலைக்குச் சேர்ந்தேன் பாரு. என் புருஷன் அப்பவே மிலிட்டரிகாரரர் வீட்டுக்கு வேலைக்குப் போன்னு சொல் லிச்சு... நான்தான் மிலிட்டரின்னு பயந்துக்கிட்டு இங்க வந்து தொலைச்சிட்டேன். இதுக்கு நான் பேசாம அங்கேயே வேலைக்கு இருந்திருக்கலாம்...

"இங்க என்னடான்னா... நின்னா குத்தம், நடந்தா குத்தம்.... போதாக்குறைக்கு இந்தப் பெரிசு பாரு, எனக்கென்ன என்று தேவாரம் பாடிக்கிட்டு இருக்கு..." என்று மனதிற்குள் பேசுவதாக நினைத்துக் கொண்டு, சற்று சத்தமாகவே முணுமுணுக்க... மாணிக்கமோ, தன் சிரிப்பை நீண்ட வெண்மீசையின் கீழ் மறைத்தபடி,

"அது தேவாரம் இல்லை பொற்கொடி... திருவாசகம். சொல்றதையும் செய்றதையும் புரிஞ்சு செஞ்சா நீயேன் பிரச்சினையில் மாட்டப் போறே... நீ வந்து மூணாவது நாளில் இது எட்டாவது பிரச்சினை... உன் மேல பஞ்சாயத்து கூடிக்கிட்டே போகுது. இது எங்கே போய் முடியப்போகுதோ தெரியலை!" என்று தன் வயதிற்கேற்ற குறும்புடன் கூற...

பொற்கொடி பதறி, "பெரிசு... தேவாரம்... சீ... திருவாசகம் பாடின வாயாலே எனக்கு ஆப்பும் பாடி வைக்குறியே. நானே முதலாளியைக் காலையிலயே கடுப்பேத்திட்டேனேங்கிற பதற்றத்துல இருக்கேன்... என்னைச் சபிச்சிராதே பெரிசு... நான் இனிமே உன் சமையலைக் குத்தமே சொல்லாமே சாப்பிட்டுக்கிறேன்," என்று ஒருவிதச் சமாதான உடன்படிக்கைக்கு வர...

மாணிக்கம் தாத்தா அதே சிரிப்புடன், "அது... அந்தப் பயம் இருக்கணும்... சொல்லு, என்ன தப்பு பண்ணே... இன்னைக்குத் தம்பியை எப்படிக் கடுப் பேத்தினே..?" என்று கேட்க...

பொற்கொடி, "எல்லாம் எனக்குத் தேவைதான் பெரிசு. நான் என்னமோ முதலாளியை வெறுப்பேத் தணும்னே கங்கணம் கட்டிக்கிட்டு வந்த மாதிரி பேசுறே. இந்த மாதிரி நாலு தடவை சொல்லி வை, உருப்பட்டிரும்..." என்று தன் நாடியை நொடிக்க...

மாணிக்கம், "அய்யோ... பார்த்து... பார்த்து... தாவாங் கட்டை உடைஞ்சிடப் போகுது..." என்று நக்கலடிக்க...

பொற்கொடி தலையில் அடித்து, "பெரிசு... உங்கிட்ட பேசுறதுக்கு நான் என்னையே செருப்பால நாலு அடி அடிச்சிக்கலாம். விடு. நீ சமைக்கிற வேலையைப் பாரு..." என்று கம்மிய குரலில் கூற...

இப்போது மாணிக்கம் தாத்தா தன் குறும்புத் தனத்தைக் கொஞ்சம் தள்ளி வைத்து, "விடு புள்ள. இங்க இருக்கிறது நாம இரண்டு வேலையாளுங்க. உனக்கு நான் ஆறுதல். எனக்கு நீ ஆறுதல். வேற யாருகிட்ட

போய் உன் பிரச்சினையைச் சொல்லுவே. எங்கிட்டயே சொல்லு..." என்று கூற,

பொற்கொடி அவரைக் கனிவுடன் பார்த்தபடி கூற ஆரம்பித்தாள். நாதன் விலாஸில் எப்போதுமே நேரந் தவறாமை மிகவும் முக்கியமாகக் கருதப்படும் ஒன்று... நேரத்தைத் தவறினால் வேலையையும் அங்கே தவற விட்டு விட வேண்டியதுதான்.

அங்கு வீட்டு வேலை செய்யும் பொற்கொடிக்குக் காலை ஏழு மணியே வேலை நேரம் ஆரம்பித்துவிடும். ஆனால் 6.50க்கே வந்துவிட்ட பொற்கொடி, பால் பாக்கெட்டில் இருந்து பாலை எடுத்து காஃபி போடுவதற் கென அவள் உள்ளே வந்து கொண்டிருந்த வேளையில், அபாய மணி போல் அந்த வீட்டின் தொலைபேசி... அவள் அந்த தொலைபேசியை எடுக்காமல் விட்டிருந்தால் எவ்வளவோ நன்றாக இருந்திருக்கும்.

கைபேசிகள் பெருகி வரும் இந்தக் காலத்தில் கைபேசியில் அழைத்தும் எடுக்காமல் உதாசீனப் படுத்தப் பட்டுத்தான் வீட்டுத் தொலைபேசிக்கு அழைப்பு வரும் என்பது அவளின் எட்டாவது படித்த மூளைக்குத் தெரியவா போகிறது.

ஆயினும் தொலைபேசியை அடிக்கவிட்டால் எங்கே தன் வேலை போய் விடுமோ என்ற பயத்தில் அதை எடுத்துப் பேச ஆரம்பித்தாள்.

"ஹல்லோ..." என்ற அவளின் நீண்ட அழைப்பு மறுமுனையை எரிச்சல் படுத்த...

"என்னடி ஹல்லோ... யாருடி நீ..." என்று அதிகாரமாக ஒலித்தது ஒரு பெண்மணியின் குரல்.

பொற்கொடியோ, "நான் யாரா இருந்தால் என்னடி! முதலில் நீ யாருன்னு சொல்லுடி கஸ்மாலம்..." என்று வந்த நல்ல வார்த்தைகளை மனதுக்குள்ளே அடக்கிக் கொண்டு.

"நான் பொற்கொடி... வேலைக்காரிம்மா. நீங்க யாரு?" என்று தயங்கிக் கேட்க...

மறுமுனை, "ஓஹ... நான் யாருன்னு தெரிஞ்சா தான் கொடுப்பீங்களோ! போய் அர்ஜுன்கிட்ட கொடு ஃபோனை..." என்று தன் பேச்சில் இரட்டிப்பு அதிகாரத் துடன் கூற...

பொற்கொடி சுத்தமாகப் பதறித்தான் போனாள்.

"அய்யோ... என்ன பண்றது... முதலாளியைக் கேக்குறாங்களே. அவரை எழுப்பணுமே. இன்னைக்கு நமக்குக் காலையிலேயே ஆப்பா?" என்று யோசிக்க,

மறுமுனை, "ஏய்! என்ன புசுபுசுன்னு மூச்சு மட்டும் கேக்குது. ஆளைக் காணோம். இருக்கியா?" என்று கேட்க,

பொற்கொடி, "ஹான்... இருக்கேங்கம்மா... ஆனா அய்யா தூங்குறாங்கம்மா!" என்று தயங்க...

மறுமுனை, "ஏய்... என்ன எங்கிட்டயே உன் வேலையைக் காமிக்கிறியா? நீ ஃபோனைக் கொண்டு போய்க் கொடு... அதெல்லாம் அவன் ஒண்ணும் சொல்ல மாட்டான்..." என்று கூற...

பொற்கொடி, "இதோ... இதோ போறேங்கம்மா..." மூன்று மூன்று படிகளாக ஏறி அவன் அறையை அடைந்தாள். ஊரில் இருந்த மொத்தக் கடவுளையும் வேண்டியபடி கதவைத் தட்ட...

அவளின் அதிர்ஷ்டக் கடவுள் துணை புரிந்தாற் போலும் அர்ஜுன் ஏற்கெனவே விழித்திருந்தான். தன் மடிக்கணினியில் ஏதோ பார்த்துக் கொண்டிருந்தவன், கதவைத் திறக்க... பொற்கொடியும் இழுத்துப் பிடித்த மூச்சை விட... அவளை மேலும் கீழும் பார்த்த அர்ஜுன், "எதுக்கு இப்படி ரயில் இஞ்சின் மாதிரி மூச்சு விடுற. எனக்கு காஃபி வேணும். போய்ப் போட்டு எடுத்துட்டு வா..." என்று அதட்ட...

பொற்கொடி தயங்கி, "அய்யா.. உங்களுக்கு ஃபோன்..." என்று கார்டுலெஸ் ஃபோனைக் கொடுக்க...

அர்ஜுன், "என்ன ஃபோனா?..." என்று சந்தேகமாகப் பார்க்க,

பொற்கொடி, "ஆம்," என்று தலையசைத்து அவனிடம் தந்தாள்.

அர்ஜுன், "யாரு... யாரா இருந்தாலும் என் செல்ஃபோனுக்குத்தானே பேசுவாங்க!" என்றபடி வாங்கி அவன் காதில் வைக்க... பொற்கொடிக்கு உள்ளூரப் பெருமை பொங்கியது.

"எப்படியோ சீக்கிரமே வந்து நம்ம அய்யாவுக்கு ஃபோன் பண்ணவங்ககிட்ட அவரைப் பேச வைச்சிட்டோம். வந்த மூணு நாளில் இந்த ஒரு வேலைதான் உருப்படியா நடந்திருக்கு..." என்று பெருமூச்சு விட்டாள்.

அவள் பெருமூச்சு விடுவதற்குள், அர்ஜுனிடம் மறுமுனை என்ன பேசியதோ? அந்தத் தொலைபேசி சுக்கு நூறாக உடைத்தெறியப்பட்டது. திருவாளர் அர்ஜுன் விஸ்வநாதன் கையால்...

பொற்கொடி திரும்பிப் பார்க்க, அங்கே கோபக் கனலாய் நின்றிருந்தான் அர்ஜுன்.

"இப்ப உங்கிட்ட ஃபோனை அட்டெண்ட் பண்ணுன்னு சொன்னேனா? இல்லை, உனக்கு அதுக்கு ஏதாவது எக்ஸ்ட்ரா சம்பளம் கொடுக்கிறாங்களா? கொஞ்சமாச்சும் அறிவிருக்கா? ஃபோன் வந்தா அவங்க நம்மளுக்கு வேண்டியவங்களா, வேண்டாதவங்களானு ஒரு அறிவு வேணாம். சரி, அதை விடு, அதுதான் தெரியாது. அது பாட்டுக்கு அடிக்கட்டும்னு பேசாம விட்டிருக்க வேண்டியதுதானே. அதுக்குக் கூடவா அறிவில்லை. சொல்லு. ஏன் மண்ணு மாதிரி நிக்கற... வாயைத் திறந்து பேசு..." என்று கத்த...

பொற்கொடிக்கு வாய் பேசியதோ இல்லையோ, கண்கள் நன்றாகவே பேசின. இல்லையில்லை. அழுதன. கண்களில் இருந்து தாரை தாரையாகக் கண்ணீர் விழ,

அதைப் பரிதாபமாகப் பார்க்காமல் ஒரு வித அருவருப்புடன் பார்த்த அர்ஜுன், "இதைப் பாரு. இப்படி அழுது சீன் போடுற வேலை யெல்லாம் வேற யார்கிட்டேயாவது வைச்சிக்கோ. எங்கிட்ட வேணாம்... புரிஞ்சுதா? இன்னைக்கு என் நாளே உன்னால வீணாப் போச்சு... என் மூட் மொத்தமும் காலி. இனியும் ஏன் நிக்கிற? கெட் அவுட் ஆஃப் மை சைட்... கெட் லாஸ்ட்..." என்று கத்த...

அதற்கு மேல் அங்கு நிற்க அவள் என்ன முட்டாளா...!

அப்போது ஓடி வந்ததுதான். கேட்டனுக்கு... இல்லை யில்லை... போலீஸுக்குப் பயந்து பதுங்கிக் கிடக்கும் தீவிரவாதி போல் மாடிப் படி அடியிலேயே குடித்தனம் கொண்டிருந்தாள்.

அத்தனையும் கூறி முடித்த பொற்கொடியைக் கேள்வியாகப் பார்த்தார் மாணிக்கம் தாத்தா.

"ஆமா புள்ள. ஃபோன்லே அப்படி யாருதான் பேசினது. தம்பி இவ்ளோ கோபப்படுற அளவுக்கு யாரு அவருக்கு எதிரி?" என்று கேட்க,

பொற்கொடி கவலையுடன், "எனக்கென்ன பெரிசு தெரியும். ஆனா அந்தம்மா குரலில் அதிகாரம் தூள் பறந்தது. நானும் ரொம்ப நெருங்கின சொந்தமா இருக்கும்னு நினைச்சு ஏமாந்துட்டேன். பெரிசு... ஒண்ணும் பிரச்சினை ஆகாதுல்ல. அவர் கீழே வர்றதை நினைச்சா எனக்குப் பக்குபக்குன்னு இருக்கு. என்னை வேலையை விட்டுத் தூக்கிற மாட்டாரே!" என்று நப்பாசையுடன் கேட்க...

மாணிக்கம் தாத்தா தன் அக்மார்க் புன்னகையைச் சிந்தியபடி, "நீ தப்பிக்க ஒரே ஒரு வழிதான் இருக்கு, பொற்கொடி!" என்று கூற,

பொற்கொடி ஆசையுடன், "என்ன பெரிசு... என்ன?" என்று கேட்க,

மாணிக்கம், "இன்னைக்குப் பாரதி வரணும்னு வேண்டிக்கோ. அவ வந்தால்தான் நீ தப்பிக்க வழி இருக்கு..." என்று கூற...

பொற்கொடி, "பாரதியா! யாரு பெரிசு...? நான் கேள்விப்பட்டதே இல்லையே?" என்று சந்தேகத்துடன் கேட்க...

மாணிக்கம், "முண்டம்... அவதான் உன்னைக் கேள்விப்படணும். நீ வந்தே மூணு நாள்தான் ஆச்சு. உனக்கெங்கே தெரியப் போகுது. அவதான் அர்ஜுன் தம்பியோட காரியதரிசி. இந்த பி.ஏ.னு சொல்வாங்களே, அது..." என்று கூற...

பொற்கொடி, "பி.ஏ. தானே... அப்ப அவங்களும் அவர்கிட்ட வேலை செய்றவங்கதானே...!" என்று சாதாரணமாகக் கூற...

மாணிக்கம், "உன் அவசரப் புத்தியாலதான் நீ வாங்கிக் கட்டற... கொஞ்சம் நான் சொல்ல வர்றதைக் கேளு... உனக்குப் புண்ணியமா போகும்... அவளும் வேலை செய்றவதான். ஆனா அவர் வழிக்கே போய் அவரை மடக்குற வித்தை அவளுக்கு மட்டும்தான் தெரியும். இல்லைன்னா யாரும் ஒரு வருஷம் கூடத் தாக்குப் பிடிக்காத தம்பிகிட்ட நாலு வருஷம் தாக்குப் பிடிக்குமா?" என்று பெருமையாகக் கூற...

பொற்கொடி, "ஓஹ்... அப்ப பலே ஆளுதான். ஆனா அவங்களை நான் பார்க்கவே இல்லையே...?" என்று கேட்க...

மாணிக்கம், "அவளுக்கே வருஷத்துக்கு ஒரு வாரம்தான் லீவ் கிடைக்குது. அதான் அவ கிராமத்துக்குப் போயிருக்கா. ஏதோ புதுக்கோட்டை பக்கத்தில நெடு வாசல்னு சொன்னதா ஞாபகம். தங்கமான பொண்ணு.

என் பேத்தி மாதிரி..." என்று கூறும்போதே, அவர் முகம் கனிந்தது.

ஆனால் பொற்கொடியின் முகமோ விழுந்தது. "அய்யய்யோ... அப்ப இன்னைக்கு வர மாட்டங்களா? இன்னைக்கு எனக்கு விருந்துதான் போலிருக்கு..." என்று கூற,

மாணிக்கம், "கடவுளை நம்பு பொற்கொடி. எது வேணா நடக்கும்..." என்று சிரித்துக் கொண்டே நடுவில் விட்ட தன் திருவாசகத்தை முணுமுணுக்கத் துவங்க...

பொற்கொடியோ யாரென்றே தெரியாத அந்தப் பாரதி வரவேண்டுமென்ற தன் வேண்டுதலைத் துவக்கி னாள்.

காலை எட்டு மணி.

மாணிக்கம் தாத்தா சாப்பாட்டு மேஜையில் எல்லாச் சிற்றுண்டிகளையும் எடுத்து வைத்தபடி இருக்க...

அங்கே அர்ஜுனின் பொது மேலாளர் ரவியும் உதவி மேலாளர் நந்தினியும் தங்கள் வருகையைப் பதித்தனர்.

பொற்கொடி அவர்களைக் கேள்வியுடன் பார்க்க... ரவியும் நந்தினியும் மாணிக்கம் தாத்தாவிடம், "தாத்தா, காலையிலயே சார் ஃபோன் பண்ணி வரச் சொன்னார். என்ன தாத்தா சிரபுஞ்சியா... சகாராவா?" என்று தங்கள் சங்கேத பாஷையில் கேட்க,

மாணிக்கம் தாத்தா சிரிப்புடன், "தகதகன்னு கொதிக்கிற சகாரா!" என்று கூற,

இருவரும் தலையில் கை வைத்துக் கொண்டனர்.

நந்தினி, "ரவி, உண்மையைச் சொல்லுங்க. நீங்க ஏதாவது செஞ்சீங்களா?" என்று கேட்க,

ரவி, "ஏய்... என்ன நான் உன் சீனியர். அதை முதலில் ஞாபகம் வச்சிக்கோ. அப்புறம் அதுக்கு மேல ஒரு விஷயம். நான் எதுவும் செய்யலை!" என்று கூற,

நந்தினி, "ஆமா. பெரிய சீனியர். இனிமே நந்து, இந்த.... இந்தக் கணக்கு இடிக்குது, அந்தக் கணக்கு இடிக்குதுன்னு சொல்லிட்டு வாங்க. அப்புறம் பார்த்துக் கிறேன்..." என்று கறுவ,

ரவி, "அம்மா தாயே! அடி மடியில கை வைக்காதேம்மா! நீ என்னை வாடா போடான்னு கூடக் கூப்பிட்டுக்கோ. ஆனா இப்போ வீசப் போற புயலில் வறுபடப் போறது நாம ரெண்டு பேரும்தான். அதை ஞாபகம் வச்சிக்கோ..." என்று கூற,

நந்தினி, தாத்தாவிடம், "என்ன தாத்தா... என்ன ஆச்சு?" என்று கேட்க,

தாத்தாவோ பரிதாபமாகப் பொற்கொடியைப் பார்க்க... அதற்குள் ரவியின் கைபேசி அர்ஜுனின் எண்களுடன் அலறியது. அதைப் பார்த்த இருவரும் ஒரு நிமிடம் கூடத் தாமதிக்காமல், ஓடியே சென்று அர்ஜுனின் அலுவலக அறையை அடைந்தனர்.

பொற்கொடி மெல்ல வந்து தாத்தாவிடம், "இந்தம்மா தான் பாரதியா?" என்று கேட்க,

தாத்தா சிரித்து, "இல்லை பொற்கொடி! இவங்களாம் மேனேஜருங்க. இவங்களும் ரொம்ப நல்லவங்கதான். ஆனால், தம்பியைப் பார்த்தா ரொம்பப் பயம்.." என்று கூற,

பொற்கொடி, பெருமூச்சுடன், "அய்யாவைப் பார்த்தா யாருக்குத்தான் பயமாக இருக்காது. அதை விடு... அது என்ன சிரப்பு... சகாரான்னுகிட்டு...?" என்று புரியாமல் கேட்க,

பெரியவர் வாய் விட்டுச் சிரித்தார். பின், "அர்ஜுன் தம்பி மனநிலைதான்... அப்படி பேர் வைச்சிருக்காங்க. அது சிரப்பு இல்லை... சிரபுஞ்சி. சிரபுஞ்சின்னா ரொம்ப ஜாலியா இருக்காருன்னு அர்த்தம். அதே சகாரான்னா ரொம்பக் கோபமா இருக்காருன்னு அர்த்தம். நானும் மூணு வருசம் வேலை பார்க்கிறேன். இதுவரைக்கும் அவர் சகாராவைத் தவிர வேற எந்த மனநிலைக்கும் போய் நான் பார்க்கலை..." என்று மெல்லிய குரலில் கூற,

பொற்கொடியோ, "அவர் போகிறாரோ இல்லையோ, நான் இந்த வீட்டை விட்டுப் போகப் போகிறது உறுதி..." என்று முணுமுணுத்து விட்டு உள்ளே செல்ல... அவளைப் பரிதாபமாகப் பார்த்தார் மாணிக்கம் தாத்தா.

மேலே அர்ஜுனின் சத்தம் பயங்கரமாகக் கேட்டது. கோப்புகள் எல்லாம் வெளியே பறந்து வர... உள்ளே அர்ஜுன், "யூ இடியட்ஸ்... ஒரு ஃபைலைக் கூட மெயின்டெயின் பண்ணத் தெரியலை. நீங்கள்லாம் படிச்சுத்தானே வேலைக்கு வந்தீங்க... யூஸ்லெஸ் ஃபெல்லோஸ். இனிமே உங்களுக்கு இங்க்ரீமெண்ட்டும்

கிடையாது. ஒரு மண்ணும் கிடையாது..." என்று காட்டுக் கத்தல் கத்த...

ரவி, "இல்லை சார்... நீங்க திடீர்னு கூப்பிட்டீங்களா, அதான்..." என்று தயங்க,

நந்தினி, "ஆமா சார். ஒரு இரண்டு நாள் டைம் கொடுங்க. எல்லாம் பெர்ஃபெக்டா ரெடி பண்ணிடுறோம்," என்று கூற,

அர்ஜுன் பல்லைக் கடித்தான். "ஓஹ்... அப்ப உங்ககிட்ட ஒரு மாசம் முன்னாடியே நான் ஃபைலைப் பார்க்கப் போறேன்னு சொல்லி பெர்மிஷன் வாங்கிட்டுத் தான் நான் பார்க்கணும். திடீர்னு பார்த்தா இப்படித்தான் குழப்பி வைப்பீங்க, இல்ல. அதனாலதானே தெரிஞ்சது உங்க பெருமை. வாங்குற சம்பளத்துக்கு இந்த வேலை கூடப் பார்க்காமல் ஆபீஸ்ல அப்படி என்னதான் செய் றீங்க?" என்று அவன் பாட்டுக்குக் கத்தி விட்டுத் திரும்ப,

ரவி, நந்தினியின் காதில், "நந்தினி! பாரதி என்னைக்கு வருவா? என்னால இனிமே தாங்க முடியாது. இப்பவே காதில பிசுபிசுன்னு ரத்தம் வர ஆரம்பிச்சிருச்சு..." என்று கூற,

நந்தினி, "அவளே பாவம் சார்... இவர்கிட்ட இருந்து வருஷத்துக்கு ஒரு வாரம்தான் லீவ் கிடைக்குது. அதுகூடக் கிடைக்கலைன்னா அவள் எப்பவோ போய்ச் சேர்ந்திருப்பா..." என்று கிசுகிசுப்பாகக் கூற, ரவியும் அதை ஆமோதித்தான்.

அதே நேரம் கீழே...

மாணிக்கம் தாத்தா, "இன்னைக்கு என்னாச்சு... காலையிலயே ராடு விட ஆரம்பிச்சுட்டார்?" என்று புரியாமல் பார்க்க...

பொற்கொடியோ, "அது கண்டிப்பா என்னால்தான். என் சீட்டு கிழியப் போகுது தாத்தா!" என்று அழ ஆரம்பிக்க...

மாணிக்கம் தாத்தா அவளைச் சமாளிக்க வழி தெரியாமல் திணற...

மேலே வேறு அர்ஜுன் தன் மேலாளர்கள் இருவரையும் கோபம் தாங்காமல், "கெட் அவுட்!" என்ற ஒற்றை வார்த்தையில் வெளியேற்ற...

இப்படி அனைத்தும் தாறுமாறாய் ஆகிக் கொண்டிருக்கும் நேரம்... "தாத்தா, எப்படி இருக்கீங்க? நீங்க செஞ்ச எனக்குப் பிடிச்ச மசால் வடையைச் சாப்பிட மூணு நாள் முன்னாடியே ஓடி வந்துட்டேன்...." என்றபடியே துள்ளிக் குதித்துத் தன் புன்னகை முகம் மாறாமல் அங்கே வந்து கொண்டிருந்தாள், அனைவரின் ஆபத்பாந்தவள் அனாதரட்சகி பாரதி.

## 2

உணவு செல்லவில்லை - சகியே
உறக்கங் கொள்ளவில்லை!
மனம் விரும்பவில்லை - சகியே
மலர் பிடிக்கவில்லை!
குணம் உறுதியில்லை - எதிலும்
குழப்பம் வந்ததடீ!

குணமும் உள்ளத்திலே – சுகமே
காணக் கிடைத்ததில்லை!

அவளைக் கண்டு தாத்தா முகம் மலர பொற்கொடியோ யோசனையாய்த் தாத்தாவிடம், "இந்தக் குள்ளக் கத்திரிக்காய் யாரு?" என்று தன் வழக்கமான வாய்த் துடுக்குடன் கேட்க...

தாத்தா அவளை முடிந்த மட்டும் முறைத்தார்.

பொற்கொடி அவர் முறைப்பில் பயந்து, "இப்போ நான் என்ன சொல்லிட்டேன்னு இப்படி முறைக்கிற?" என்று கேட்க,

அதற்கு முன், "ஏன் பொற்கொடியை முறைக்கிறீங்க தாத்தா! இந்தக் குள்ளக் கத்திரிக்காய் பேரு பாரதின்னு சொல்ல வேண்டியதுதானே?" என்று கூர்மையான பார்வையில் கூற,

பொற்கொடி அதிர்ந்தாள்.

தாத்தா, அவளிடம், "நீ சொன்னப்போ கூட நான் நம்பலை. ஆனா இன்னைக்குக் கண்டிப்பா உனக்குச் சீட்டு கிழியத்தான் போகுது..." என்று கூற,

பொற்கொடி அதற்கு மேல் தாங்காமல், "ஓஓஓ..." என்று அழ,

பாரதியோ ஓடி வந்து, அவள் தோளைப் பிடித்து, "எதுக்கு பொற்கொடி அழற! அய்யோ! இங்க பாரு... நான் ஒண்ணும் தப்பா நினைக்கலை. நான் கூட உன்னை

மாதிரி வாயாடிதான். நாமெல்லாம் ஒரே இனம். இதுக்குப் போய் அழுதுக்கிட்டு... கண்ணைத் துடை..." என்று அதட்ட,

பொற்கொடி அவளை ஆதுரமாகப் பார்த்து, "அம்மா, என் பேர் உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்க,

அதற்குப் பாரதி பதில் சொல்லுமுன், "அவளுக்கு எப்படித் தெரியாம இருக்கும்... அவள் ஆபீஸை மட்டும் கவனிச்சுக்கலை. வீட்டையும்தான். இந்த வீட்டுல ஒரு துரும்பு கூட அவளுக்குத் தெரியாமல் போகவும் செய் யாது. வரவும் செய்யாது..." என்று தாத்தா முந்திக் கொண்டு கூற, பாரதி தன் முத்துப் பற்கள் தெரியச் சிரித்தாள்.

பின், "விடுங்க தாத்தா... நான் அவள் வேலைக்குச் சேரும்போதே ஊருக்குப் போயிட்டேன். அப்புறம் வந்த மூணு நாளும் பார்க்கலை. அதான் தெரியலை. ஆனா பொற்கொடி... நான் ரொம்பக் குள்ளமாவா இருக்கேன். சே... எல்லாம் எங்கம்மாவைச் சொல்லணும். அவங்க ஜீன் கொஞ்சம் சேர்ந்திடுச்சு. அதனாலதான்..." என்று சொல்லிச் சிரிக்க,

பொற்கொடி கையைக் கூப்பி, "அம்மா, என்னை மன்னிச்சிடுங்க. இதுக்கு மேல தேவையில்லாமல் ஒரு வேலை செய்ய மாட்டேன். ஒரு வார்த்தை பேச மாட்டேன். இன்னைக்கு ஒரு நாள் ஐயா என்னை வேலையை விட்டுத் தூக்காம பார்த்துக்கோங்கம்மா..." என்று கெஞ்ச,

பாரதி சிரிப்புடன், தாத்தாவிடம், "என்ன தாத்தா... சுட்டெரிக்கும் சகாராவா?" என்று கேட்க,

தாத்தா ஆமோதிப்பாக, மேலும் கீழும் தலையாட்டினார். பின், "ஆமா பாரதி, நீ எப்படி மூணு நாள் முன்னாடியே வந்த?" என்று கேட்க,

பாரதி, "சகாரா என்னை மட்டும் விட்டு வைக்குமா என்ன? நேத்து சாயந்திரமே எனக்கு ஓலை வந்திடுச்சு. கடைசி நிமிஷத்துல பஸ் கிடைக்காம கிடைச்ச பஸ்ஸுல ஏறி நேரா வர்றேன். ரொம்ப பசிக்குது, தாத்தா. ஏதாவது இருக்கா?" என்று கேட்க,

தாத்தாவின் மனம் அந்த ஐந்தடி உயரத்தில் குழந்தை முகமும் முத்துச் சிரிப்பும் கொண்ட குறும்புக் குழந்தையைப் பார்த்து நெகிழ்ந்தது. பின், "என்ன பாரதி, உனக்கில்லாததா? வா. சாப்பிடலாம்..." என்று கூற, பொற்கொடியோ தீயின் மேல் நிற்பது போல் நின்றாள்.

"இந்த அம்மாவுக்குக் கொஞ்சம் கூடப் பயமில்லையா? மேலே ஐயா ருத்ரமூர்த்தியாட்டம் நிக்கிறாரு. இவங்க என்னடான்னா ரவா தோசை கேக்குறாங்களே...!" என்று வியந்து கொண்டிருக்கும் போதே, மேலிருந்து தடதடவென ஓடி வந்த ரவியும் நந்தினியும், "பாரதி... பாரதி... தாயே! வந்துட்டியா? எங்களால சகாராவோட வெப்பத்தைத் தாங்க முடியலை. சுத்தமா முடியலை பாரதி. என்னாச்சுன்னே தெரியலை. ரெண்டு நாளா பருவநிலை சரியில்லை. இன்னைக்குக் காலையிலயே நாங்க அதுகிட்ட சிக்கிக்கிட்டோம். ப்ளீஸ் தாயே, பரதேவதை! எங்களைக் காப்பாத்து..." என்று கதற,

பாரதி சோர்வுடன், "சார், மேடம்... நீங்க ரெண்டு பேரும் என்னை விடப் பெரிய நிலையில் இருக்கீங்க.

உங்களால முடியாததா என்னால் முடியும். நான் ஏற்கெனவே ரொம்ப டயர்டா இருக்கேன். நானும்தான் பாஸ்கிட்ட திட்டு வாங்கணும். அதுக்கு எனக்குத் தெம்பு வேண்டாமா?

"ப்ளீஸ் சார்... எதுவா இருந்தாலும் சாப்பிட்டுப் பேசலாம். நீங்களும் உட்காருங்க. தாத்தா சூப்பரா ரவா தோசை ஊத்தித் தருவார்..." என்று சப்புக் கொட்ட,

நந்தினி அவளிடம் சென்று, "பாரதி, நாங்க என்னதான் உன்னை விடப் பெரிய நிலையில் இருந்தாலும் உன் அளவிற்கு அனுபவம் எங்களுக்கு வருமா? இப்படிப்பட்டவர் கிட்டயே நாலு வருசம் குப்பை கொட்டியிருக்கியே... அது உன்னாலதான் முடியும். அந்த ரவா தோசை எங்கேயும் போயிடாது. உனக்காகவே ஸ்பெஷலா தாத்தாவை ஊத்தித் தரச் சொல்றேன். கொஞ்சம் அவரைப் போய்ப் பார்த்துட்டு வா..." என்று கூற,

ரவியும், "ப்ளீஸ் பாரதி.... நாளைக்கு உனக்குப் பிடிச்ச காஜு கத்லி வாங்கித் தர்றேன்டா... ப்ளீஸ்!" என்று வார்த்தைக்கு வார்த்தை ப்ளீஸ் கொட்ட...

பாரதியே இப்போது சிறு கிலியுடன், "பாஸ் என்ன அவ்ளோ கோபமாவா இருக்காரு... அய்யய்யோ! இப்போ எனக்குப் பயமா இருக்கே..." என்று நடுங்க,

பொற்கொடி அவளிடம் வந்து, "ஆமா அம்மா... அதுக்கு ஒரு வகையில் நானும் காரணம். நான் ஒரு போக்கத்தவ. சும்மா இல்லாம ஒரு ஃபோனை எடுத்துத் தொலைச்சிட்டேன். யாரு பேசினாங்களோ? அப்போ

திலிருந்து ஐயா ரொம்பக் கோபமா இருக்காரு..." என்று கூற,

பாரதி, சிறு யோசனைக்குப் பின், "பொற்கொடி, பேசினது யாரு? ஒரு லேடியா?" என்று கேட்க...

பொற்கொடி வியப்புடன், "ஆமா, அம்மா..." என்றாள்.

பாரதி இப்போது யோசனையில் ஆழ்ந்து, "அய்யய்யோ... அப்போ ஒரு ரெண்டு நாளைக்கு இப்படித்தான் இருப்பார். நான் வரலை, இந்த விளை யாட்டுக்கு. நான் போறேன்பா..." என்று கூறிவிட்டுச் செல்ல எத்தனிக்க...

ரவி, நந்தினி, பொற்கொடி மூவரும் அதிர்ந்தனர்.

பொற்கொடி, "என்னம்மா நீங்க... தாத்தா என்னவோ உங்களைப் பத்தி ரொம்பச் சொல்லிச்சு. நீங்க என்ன டான்னா இப்படிப் பயப்படுறீங்க?" என்று உசுப்பேற்ற...

பாரதி, "பொற்கொடி, அவர் உங்களையாவது வாயால திட்டுவார். என்னை யெல்லாம் அடிச்சுத் துவைச்சுக் காயப் போட்டுடுவார். அதனாலதான் எல்லாரும் என்னைக் கூப்பிடுறது... ஏன்னா, உன் ஐயாவுக்குச் சிக்கின அடிமை நான். ஆனா, இன்னைக்கு என்னால அடி வாங்கத் தெம்பில்லை..." என்று கூற,

நந்தினி, "அதெல்லாம் ஒண்ணும் பண்ண மாட்டார் பாரதி... ப்ளீஸ்டா..." என்று கெஞ்ச,

பாரதி, "உங்களுக்கெல்லாம் மனச்சாட்சியே இல்லையா? ஒரு சின்னப் பொண்ணைச் சிங்கத்தோட

குகையில தூக்கிப் போடுறீங்களே... நான் மாட்டேன். நான் பாவம்..." என்று அலறினாள்.

ரவி சற்றே எரிச்சலுடன், "இவளை இப்படியெல்லாம் சொன்னாக் கேட்க மாட்டாள். நந்தினி, கமான்..." என்று கூறி, அவள் கதறக் கதறக் குண்டுக்கட்டாக... அவன் ஒரு பக்கமும் அவள் ஒரு பக்கமும் தூக்கிக் கொண்டு அர்ஜுனின் அலுவலக அறைக்குள் நுழைந்தனர்.

பாரதி, "என்னை விடுங்க. என்னை விடுங்க. நான் வர மாட்டேன்..." என்று கதறிய கதறல் அந்த வீடு முழுவதும் எதிரொலிக்க...

அந்தச் சத்தத்தில், அர்ஜுன் தன் அறைக் கதவைத் திறக்க...

இவ்வளவு நேரம் கத்திய நம் பாரதி இப்போது நல்ல பிள்ளையாகத் தன் கையை விடுத்து, அர்ஜுனிடம், "குட் மார்னிங் பாஸ். என்னை வரச் சொன்னீங்களே... எப்படி கரெக்ட் டைமுக்கு வந்தேன் பார்த்தீங்களா பாஸ். அதுதான் பாரதிங்கிறது... நீங்க ரொம்ப லக்கி பாஸ்... இல்லாட்டா என்னை மாதிரி ஒரு சின்சியர் பி.ஏ. உங்களுக்குக் கிடைச்சிருக்க மாட்டா..." என்று அந்த பி.ஏ.வில் சற்றே அழுத்தம் கொடுத்துக் கூற,

அர்ஜுன் அவன் எரிச்சலை வெளிப்படையாகவே காட்டினான். "ஷட் அப். உன்னை நான் எட்டு மணிக்கு வரச் சொன்னேன். நீ ஒன்பது மணிக்கு வந்துட்டு... என்ன கீழே ரவா தோசை தின்னுட்டு இருந்தியா?" என்று கூற,

பாரதி வியந்து, "பாஸ், நீங்க ரொம்ப புத்திசாலி பாஸ். இங்க இருந்துட்டே கீழே உள்ளதெல்லாம் பிட்டுப்

பிட்டு வைக்கிறீங்களே... ஆனாலும் நீங்க தோத்துட்டீங்க பாஸ். நான் சாப்பிடலை. இவங்க சாப்பிட விடாம நீங்க கூப்பிடுறீங்கன்னு தூக்கிட்டு வந்துட்டாங்க..." என்று சோகத்துடன், ரவியையும் நந்தினியையும் கை காட்ட... அவர்கள் அவளை என்ன செய்வது என்று தெரியாமல் அசடு வழிந்தனர்.

அர்ஜுன், "அவங்களுக்காவது சின்சியாரிட்டின்னா என்ன என்று தெரிஞ்சிருக்கே... இல்லாட்டி உன்னை மாதிரி தடிமாடாவா இருப்பாங்க..." என்று கூற,

ரவியும் நந்தினியும் பெருமிதத்தில் திளைக்க...

பாரதி வெகுண்டு, "பாஸ், எனக்கே வருஷத்துக்கு ஒரு வாரம்தான் லீவ் தர்றீங்க. ஆனா அதையும் இந்த வருசம் முழுசா அனுபவிக்க விடாம பாதியிலேயே ரத்து பண்ணிட்டீங்க. நியாயமா நான்தான் உங்க மேல கோபப்படணும்... நீங்க என்னடான்னா என்னைத் திட்டுறீங்க..." என்று கூற,

அர்ஜுன் தன் கட்டை விரலை நீட்டிக் கோபத்துடன், "இதைப் பாரு. நான் உன் பாஸ். அதை முதலில் ஞாபகம் வச்சிக்கோ. நான் கூப்பிட்டா நீ வந்துதான் ஆகணும்..." என்று சொல்லி முடிப்பதற்குள் நடுவில் புகுந்த நம் பாரதி...

அவனைப் போலவே முகத்தை வைத்துக் கொண்டு, "இல்லன்னா... இந்த வேலையை விட்டுப் போயிட்டே இரு. அதானே பாஸ்... அடப் போங்க பாஸ்... இந்த நாலு வருசத்துல நாலாயிரம் வாட்டி சொல்லிட்டீங்க. வேற ஏதாவது வசனம் முயற்சி பண்ணுங்க பாஸ்.

உங்களால முடியும்..." என்று கண நேரத்தில் ஒரு இயக்குனராகவே மாறி அவனுக்குப் பாடம் நடத்த...

ஒரு நீண்ட பெருமூச்சு விட்ட அர்ஜுன், அங்கே கையைப் பிசைந்து கொண்டு நின்றிருந்த ரவியிடமும் நந்தினியிடமும் தன்மையாக, "நீங்க கீழே போங்க. நான் வர்றேன்...." என்றான்.

அதற்குள் பாரதி திரும்பி, "போய்ச் சாப்பிடுங்கப்பா. நீங்க எப்படியும் சாப்பிடாமத்தான் வந்திருப்பீங்க. பசிக்கும்..." என்று அன்பாகக் கூற, அவர்கள் சிரித்தனர்.

அதுதான் பாரதி. அர்ஜுனிடம் கண்டிப்பு... கண்டிப்பு மட்டும்தான் எதிர்பார்க்க முடியும்.

ஆனால் பாரதியிடம் தோழமை, நட்பு, கரிசனம் அனைத்தையும் பார்க்கலாம்.

அர்ஜுனின் செயல்களால் அவன் கம்பெனியை விட்டே போக வேண்டும் என்று முடிவெடுத்தவர்கள் கூட, பாரதியின் சிரிப்பால் அந்த முடிவைக் கைவிட்டுள்ளனர். இந்த நான்கு வருடங்களாகச் சென்னையில் நாதன் குரூப்ஸ் என்ற பெயரை அறியாதவர் யாருமே இல்லை எனலாம்.

அந்த அளவிற்கு அசுரத்தனமாக உழைத்தது அர்ஜுன் என்றால்... அவனுக்குப் பக்க பலமாக வேலைக்குச் சேர்ந்த பாரதியும் அந்த வெற்றிக்கு ஒரு காரணம்தான். ஆனால் அதை அர்ஜுன் ஒரு நாளும் ஒத்துக் கொண்டதில்லை.

சரி, இப்போது கதைக்கு வருவோம்.

அர்ஜூன், "நீ உன் மனசில என்னதான் நினைச்சிட்டு இருக்கே? என்னையே கிண்டல் பண்ற அளவுக்கு உனக்குத் தைரியம் வந்திருச்சா...? கொன்னுடுவேன் உன்னை. ஜாக்கிரதை! நீ என்கிட்ட வேலை செய்றவதான். ஞாபகம் வச்சிக்கோ. வேலை செய்றவ மட்டும்தான்!" என்று கூற, பாரதியின் முகம் அதிர்ச்சி காட்டியது.

அவள் முக மாறுதலைப் பார்த்தவன், "என்ன... என்ன ஆச்சு?" என்று புரியாமல் கேட்க,

பாரதி, "ஐயோ பாஸ்... தப்பு நடந்து போச்சு!" என்று அலற,

சத்தியமாக அர்ஜுனுக்கு ஒன்றும் புரியவில்லை. "என்ன சொல்றே... எனக்கு ஒண்ணும் புரியலை..." என்று கூற,

பாரதி, "பாஸ், நான் இந்த ரூமுக்குப் பச்சைக் கலர் கர்ட்டன்தான் வாங்கிக் கொடுத்தேன். என்ன இது... சிவப்புக் கலர் கர்ட்டன் போட்டிருக்கு. நல்லாவே இல்லை பாஸ்... யார் மாத்தினாங்கன்னே தெரியலை. இருங்க பாஸ்... இரண்டு நிமிஷம்... மாத்திடுறேன்..." என்று கூற,

அர்ஜூன் எரிச்சலுடன், "ஏய்! மாத்தினே, கொன்னுடுவேன். நான்தான் சிவப்பு செலக்ட் பண்ணேன்..." என்று கூற,

பாரதி, "பாஸ், இருக்கிற கோபம் போதாதா! இதில தினமும் வேற சிவப்புப் பார்க்கணுமா? யூ நோ இந்தக் கலரெல்லாம் நம்ம உணர்வுகளைப் பிரதிபலிக்கும்..." என்று கூற,

அர்ஜுன் நக்கலாக, "அதுக்காகவா... இல்லை, உனக்குச் சிவப்பு பிடிக்காது. அதனாலயா?" என்று கூற,

பாரதி வியப்புடன், "அய்யோ பாஸ்! எனக்குச் சிவப்பு பிடிக்காதுன்னு உங்களுக்கு எப்படித் தெரியும்! என்னை இம்ப்ரெஸ் பண்ணப் பார்க்கிறீங்களா?" என்று கண்ண டித்துக் கேட்க,

அர்ஜுன், தன் பொறுமையை இழுத்துப் பிடிக்கப் போராடி... பின், "ஆமா. பெரிய ரதிதேவி... இம்ப்ரெஸ் பண்றாங்க. இதுக்காக ஆளனுப்பியா தெரிஞ்சிக்க முடியும். அதான் ஆபீஸ் பியூன் கிட்ட கூட வாயாடி, எது பிடிக்கும், எது பிடிக்காதுன்னு சொல்லி வெச்சிருக்கியே... அது போதாதா?" என்று பதிலடி கொடுக்க...

பாரதி, "ஹிஹி..." என்று அசடு வழிய...

அர்ஜுன் இப்போது சீரியஸாகி, "அதை விடு. உன்கிட்ட நான் ஆயிரம் வாட்டி சொல்லியிருக்கேன். அவங்களை ஃபோன் பண்ண விடாதே... எனக்கு டென்ஷன் ஆகுதுன்னு... ஆனா, நீ அதைக் காது கொடுத்துக் கேட்கிறதா இல்லை. இனிமே எனக்கு ஃபோன் வந்தது நான் என்ன செய்வேன்னு எனக்குத் தெரியாது..." என்று கத்த,

பாரதி, காதைப் பொத்திக் கொண்டு, "பாஸ், இனிமே கத்துறதா இருந்தா ஒரு பத்தடி தள்ளி நின்னு கத்துங்க. என் காது ஜவ்வு ஏற்கெனவே கிழியுற நிலையில இருக்குன்னு என் இ.என்.டி. டாக்டர் அங்கிள் சொல் லிட்டார். இனிமே கத்தினா... நீங்க ஒரு நல்ல காது

கேட்கிற பி.ஏ.வை இழக்க வேண்டி வரும்..." என்று கூறி மறுபடியும் கண்ணடிக்க...

அவள் கூறிய பி.ஏ.வின் உண்மையான அர்த்தத்தை அறிந்த அர்ஜுன்... "இனிமே பி.ஏ.ன்னு சொன்னே... வாய்க்குச் சூடு வைச்சிடுவேன். அப்புறம் இந்தப் பேச்சை மாத்துற வேலை எல்லாம் வேணாம். அவங்க இனிமே எனக்கு ஃபோன் பண்ணாம பார்த்துக்க வேண்டியது உன் பொறுப்பு. மீறி ஃபோன் வந்திச்சு... நான் கொலைகாரனா மாறிடுவேன். ஓடிப் போயிடு!" என்று கூறித் தன் வேலையைப் பார்க்க...

பாரதி, "ஓ.கே. பாஸ். ஆனா, நான் இதைச் செய்யணும்னா நீங்க இப்போ சாப்பிடணும். ஏற்கெனவே லேட் ஆயிடுச்சு. உங்களுக்கு அல்சர் வேறு இருக்கிறது என்பதைத் தாழ்மையுடன் ஞாபகப்படுத்துகிறேன். வாங்க பாஸ்..." என்று கையைப் பிடித்து இழுத்துச் செல்ல,

அர்ஜுனோ, "சீ... விடு. நானே வர்றேன்..." என்று எகிற,

பாரதி, தோளைக் குலுக்கி, "ஓ.கே. பாஸ்..." என்று தன் வழக்கமான வசனத்தைக் கூறிவிட்டுப் புள்ளி மானாய்க் கீழே ஓடினாள்.

பின்னே அவள் ரவா தோசை காலி ஆகிவிடுமே!

அர்ஜுன் கீழே இறங்கி வரும் இரண்டு நிமிடத்தில் பாரதி இரண்டாவது தோசையை உள்ளே தள்ளிக் கொண்டிருக்க... அவளை நினைத்துத் தலையில் அடித்தபடி வந்து சேர்ந்தான் அர்ஜுன்.

பாரதியிடம் வாயடித்துக் கொண்டிருந்த ரவியும் நந்தினியும் இப்போது வாயை மூடிக் கொண்டு சாப்பிட ஆரம்பிக்க...

திடீரென்று பாரதி, "இந்தச் சாப்பாட்டு மேஜை யெல்லாம் கொஞ்சம் மாறியிருக்கே... யார் தாத்தா செஞ்சது?" என்று கேட்க,

தாத்தாவிற்குத் தெரியும், அவள் வேண்டு மென்றுதான் கேட்கிறாள் என்று. அவளுக்குத் தெரியா மலா இந்த வீட்டில் நடந்துவிடும். ஆனால் வெளிக் காட்டாமல், "பொற்கொடிதான் கொஞ்சம் மாத்தி வைச்சா பாப்பா. நானும் விட்டுட்டேன்..." என்று கூற,

பாரதி, "தாத்தா, பொற்கொடி எங்கே? கொஞ்சம் கூப்பிடுங்க..." என்று கூற, தடதடக்கும் இதயத்துடன் அங்கே வந்து சேர்ந்தாள் பொற்கொடி.

அவளைக் கண்டு அர்ஜுன் முறைக்க... பொற்கொடியோ எச்சில் விழுங்க, அவனைப் பார்க்க...

பாரதி, "பாருங்க பாஸ். கொஞ்சம் மாத்தினாலும் நல்லா இருக்குல்ல... வீடே சுத்தமா இருக்கு, பாருங்களேன். இதுக்கு முன்னாடி இருந்த முனுசாமி சரியே இல்லை பாஸ். பொற்கொடி எல்லாத்திலேயும் சிரத்தை எடுத்துப் பண்றாங்க இல்ல.

"இங்க மட்டுமில்லை பாஸ். வரும்போது பார்த்தேன்... வெளியே தோட்டத்துல கூட நிறைய மாற்றம். நீங்க அதெல்லாம் பார்க்கணும் பாஸ். ரொம்ப அழகா இருக்கு..." என்று கூறினாள்.

அர்ஜுனின் கோபம் சற்றே மட்டுப்பட்டு, "எல்லாம் சரிதான். இனிமே அதிகப்பிரசங்கித்தனமான வேலையெல்லாம் பார்க்க வேணாம்னு சொல்லு..." என்று கூற,

பொற்கொடி, கையைக் கூப்பி, "மன்னிச்சிடுங்கய்யா. இனிமே நான் இது மாதிரியெல்லாம் செய்ய மாட்டேன். ரொம்ப நன்றி பாரதிம்மா..." என்று தழுதழுப்பாகக் கூற,

பாரதி, "சீ... என்ன பொற்கொடி! இதுக்கெல்லாம் போய்... உங்க மனச்சாட்சிப்படி வேலை பாருங்க. போதும்..." என்று கூற, பொற்கொடி நன்றியுடன் பார்த்தாள்.

அவ்வளவு நேரம் அவள் பாரதியை நம்பவில்லை. இந்தச் சிறு பெண் அர்ஜுனை எப்படிச் சமாதானப்படுத்த முடியும் என்றே எண்ணியிருந்தாள். ஆனால் வாமனன் போல் உருவத்தில் சிறியதாக இருந்தாலும் ரொம்ப உணர்ச்சிவசப்படாமல் அவன் வழிக்கே சென்று அவனை மடக்கும் வித்தையைப் பாரதி தெரிந்துதான் வைத்திருந்தாள் என்பதை இப்போது நம்பினாள் பொற்கொடி.

இல்லாவிட்டால், காலையில் இருந்து திட்டு வாங்கியவர்களை அவன் வீட்டிலேயே சாப்பிட வைத்து, பொற்கொடிக்கும் மன்னிப்பு அளிக்க விட முடியுமா? இந்தப் பெண்ணிடம் ஏதோ இருக்கிறது... என்று யோசித்து மாய்ந்து போனாள்.

அது மட்டுமில்லை. தாத்தாவிடம், "தாத்தா, சமையல் கேஸ் தீர்ந்து போயிருக்குமே..." என்று யோசனையாகக் கேட்க,

அது அப்போதுதான் ஞாபகம் வந்த மாணிக்கம் தாத்தா பதறி, "ஆமா பாப்பா. ரெண்டு நாள் முன்னாடியே காலி. நான் சொல்ல மறந்துட்டேன்..." என்று மன்னிப்பு வேண்டும் குரலில் கேட்க,

பாரதி சிரித்து, "இதுல என்ன தாத்தா இருக்கு... மனுஷங்கன்னா ஞாபக மறதி வரத்தான் செய்யும். நாம என்ன ரோபோவா?" என்று கூறிவிட்டு, அர்ஜுனை ஒரு பார்வை பார்த்தவள்... அவன் முறைப்பைப் பார்த்து, "நான் ஊருக்குப் போகும்போதே சொல்லிட்டுப் போயிட்டேன் தாத்தா. ஒரு பத்து நாளில் வந்திடும்..." என்று கூற, தாத்தா பெருமூச்சு விட்டார்.

பின், "தாத்தா! காய்கறி, மளிகைச் சாமானெல்லாம் வாங்கணும்னு சொன்னீங்களே... நீங்க போகாதீங்க. உங்களுக்கு பி.பி. இருக்கு. என்கிட்ட கொடுங்க. நான் வாங்கிட்டு வர்றேன்..." என்று கூற,

அர்ஜுன் உடனே, "நீயா... நீ ஏன் போற? உனக்கென்ன வேற வேலை இல்லையா?" என்று கூற, அங்கிருந்த அனைவரும் அவனை ஒரு மாதிரிப் பார்க்க...

அவன், "என்ன பார்க்கறீங்க! அவ இதைச் சாக்கா வைச்சிக்கிட்டு வேலை செய்யாம ஓடி வந்திடுவா. அதுதான் சொன்னேன்..." என்று கூற,

பொற்கொடி புகுந்து, "பாரதிம்மா... என்கிட்ட கொடுங்கம்மா. நான் வாங்கிட்டு வர்றேன்..." என்று கூற, பாரதியும் அர்ஜுனை முறைத்துக் கொண்டே சம்மதித்தாள்.

அர்ஜுன், "இப்போ எதுக்கு முறைக்கிற?" என்று கேட்க,

பாரதி, "இல்லை. காலையில எட்டு மணியில இருந்து ராத்திரி பன்னிரண்டு மணி வரை வேலை பார்த்து சண்டே கூட நீங்க கூப்பிட்டா வந்து வேலை செய்யறேன். என்னை நீங்க இப்படிச் சொல்றீங்கன்னு நினைச்சா... எனக்குச் சிரிப்புதான் பாஸ் வருது..." என்று கூற,

அர்ஜுன், அலட்சியமாக, "இப்போ என்ன... உனக்குச் சிலை வைக்கச் சொல்றியா?" என்று கேட்க,

பாரதி இப்போது குறும்பாக, "அதுக்கென்ன பாஸ்... ஷாஜகான் மும்தாஜுக்குத் தாஜ்மகால் கட்டின மாதிரி எனக்கு நீங்க சிலை வைங்களேன்..." என்று கூற,

நந்தினி அவள் தலையில் குட்டி, "பாரதி... புரிஞ்சுதான் பேசுறியா? அவங்க ரெண்டு பேரும் புருஷன் பொண்டாட்டி. நீ அவருக்கு பி.ஏ..." என்று கூற,

அர்ஜுனுக்கு அப்போதுதான் புரையேறியது. நந்தினியைப் பார்த்து, "நந்தினி, இனிமே பி.ஏ.ங்கிற வார்த்தை என் காதில விழுந்தது... நான் என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது!" என்று கூறி விட்டு, தட்டிலேயே கை கழுவி விட்டு எழ, அங்கிருந்த அனைவரும் அவனின் செயலைப் புரியாமல் பார்க்க...

பாரதி பொங்கி வந்த சிரிப்பைத் தனக்குள்ளேயே அடக்கினாள். அவளுக்கும் அர்ஜுனுக்கும் நடுவில் பிளேட்டோனிக் பிளே லவ் என்று கூறுவார்களே, அதுபோல் ஒருவித உறவு உண்டு. அதை இருவரும் வெளிக் காட்டிக் கொண்டதில்லை. பாரதி என்னதான் அவனிடம் சில்மிஷம் செய்தாலும், கல்போல் இருப்பானே

தவிர... அவளை அடக்கும் வழியைப் பற்றி அவன் யோசித்ததே இல்லை. அதற்கு என்ன காரணம்? போகப் போகத் தெரியும்.

## 3

அழகுள்ள மலர்கொண்டு வந்தே - என்னை
அழ அழச் செய்து பின்
'கண்ணை மூடிக்கொள்.
குழலிலே சூட்டுவேன்' என்பான் - என்னைக்
குருடாக்கி மலரினைத் தோழிக்கு வைப்பான்.
தீராத விளையாட்டுப் பிள்ளை - கண்ணன்
தெருவிலே பெண்களுக் கோயாத தொல்லை!

இப்படி ஒரு வழியாகப் போராட்டத்துடன் முடிந்த காலைச் சிற்றுண்டி அர்ஜுனின் பல்வேறு கட்டளைகளால் பாரதியை விழி பிதுங்க வைத்தது.

அப்படி அவளிடம் வேலைகளை அடுக்கிக் கொண்டிருந்தான் அர்ஜுன். "இதைப் பாரு, இன்னைக் குள்ள அந்தக் கோயம்புத்தூர் ஸ்பின்னிங் மில் கொட்டேஷன் ரெடியாகணும். ஓ.கே..." என்று ஆரம் பித்தவன், "அந்தக் குன்னூர் எஸ்டேட் லீஸுக்கு வருதாம். அந்த உரிமையாளரைக் கூப்பிட்டு என்கிட்ட பேசச் சொல்லச் சொல்லி ஒரு வாரம் ஆச்சு. உனக்கு அது உன் மரமண்டையில் இருக்கா?" என்ற வழி வந்து,

"என் பெட்ரூமில் உள்ள ஃபர்னிச்சர்ஸ் எல்லாம் கேவலமா இருக்கு. அதை மாத்தச் சொல்லிக் காட்டுக்

கத்தல் கத்தினாலும் உனக்குக் காது கேட்காது. அதுக்கு வேற ஒரு இ.என்.டி. அங்கிள் காரணம் சொல்லுவே... அப்புறம், இன்னைக்கு நைட் ஒரு பார்ட்டி இருக்கு. நான் ஏழு மணிக்கெல்லாம் கிளம்பிடுவேன். ஆனா, நீ கொஞ்ச நேரம் இருந்து எல்லா வேலையும் முடிஞ்சதும்தான் வரணும். சரியா?

"என் தலை அந்தப் பக்கம் போனதும், நீயும் ஆபீஸை விட்டுக் கிளம்பிடாதே!" என்று கேட்க, அவன் கூறிய அனைத்திற்கும் தலையாட்டிய பாரதி... இதற்கு மட்டும் ஒரு பார்வை வீச...

அர்ஜுன், "என்ன பார்வை.. பார்ட்டிக்குப் போறது என் இஷ்டம். அதில் நீ தலையிடாதேன்னு ஆயிரம் வாட்டி சொல்லியாச்சு..." என்று அலட்சியமாகக் கூற,

பாரதியும் சிரிப்புடன், "நானும் ஆயிரம் வாட்டி சொல்லிட்டேன். நீங்க பார்ட்டிக்குப் போனா எனக்கு எந்தக் கவலையும் இல்லைன்னு. ஆனா உங்களுக்குத்தான் நான் எதார்த்தமா பார்த்தாலும் குதர்க்கமாத் தோணுது..." என்று நக்கலாகக் கூற,

அர்ஜுன், "பேச்சு... இந்தப் பேச்சு மட்டும் இல்லைன்னு வைச்சிக்கோயேன். உன்னை எந்த மடையனும் மதிக்க மாட்டான்..." என்று கோபத்துடன் கூற,

பாரதி, "ஏன் பாஸ்... அது இந்த மடையனுக்குக் கூடப் பொருந்துமா?" என்று தன் சுட்டு விரலை அவனை நோக்கிக் காட்டிக் கேட்க,

அர்ஜுன், பல்லைக் கடித்துக் கொண்டு, "ஒழுங்கா நான் சொன்ன வேலையைச் செஞ்சிட்டு வாயை மூடிட்டு

இரு. அதிகப்பிரசங்கித்தனமாப் பேசாதே. உன்னை ஒண்ணும் சொல்ல மாட்டேன்னு உன் இஷ்டத்திற்கு ஆடாதே. அதுக்கு நான் ஆள் இல்லை..." என்று கூற,

பாரதி, "நீ ஒண்ணும் சொல்லாததுதானே பிரச்சினை. சொன்னாப் பிரச்சினையே இல்லையே, கண்ணா..." என்று கண்களில் ஏக்கத்தைத் தேக்கிக் கூற,

அர்ஜுன் அதிர்ந்து சுற்றும் முற்றும் பார்த்தான். நல்லவேளை. ரவியும் நந்தினியும் அப்போதே கிளம்பி விட்டிருந்தனர்.

பின் அவள் பக்கம் திரும்பி, "ஏய்... என்னடி கொழுப்பா?" என்று கேட்க,

பாரதி, "ஆமா. நீ அப்படியே என்னை உட்கார வைச்சுச் சாப்பாடு போடுற பாரு. அதான் கொழுப்பு!" என்று போலியாகச் சலித்துக் கொள்ள,

அர்ஜுன், நக்கல் சிரிப்புடன், "அதானே பார்த்தேன். உன்னை உட்கார வைச்சு வேற சாப்பாடு போடணுமா? அப்புறம் என் சொத்தையும் உன் பேர்ல எழுதி வைச்சிடவா?" என்று கேட்க,

பாரதி அதிர்ந்து போய் அவனைப் பார்த்தாள்.

அது சாதாரண வார்த்தைதான். ஆனால் பாரதிக்கு ஏனோ பழைய நினைவுகள் வந்து சூழ்ந்து கொள்ள, அர்ஜுனை ஒரு அடிபட்ட பார்வை பார்த்தாள். அதில் இருந்த ஏதோ ஒன்று அவனை உறுத்த, "இப்போ எதுக்கு இந்தப் பார்வை... நான் என்ன ஊர் உலகத்துல நடக்காததையா சொல்லிட்டேன். சரி, நான் சொன்ன

வேலையெல்லாம் செய். ஏதாவது சொதப்பினா... நான் என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது..." என்று எச்சரிக்க,

பாரதி சட்டென்று மனதுக்குள், 'அவன் இப்படித்தான் என்று தெரியுமே... அப்புறம் என்ன... விடு!' என்று தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொண்டு, தன் புன்னகை முகத்தை வலிய வரவைத்து, "ஓ.கே. பாஸ்..." என்று தன் வழக்கமான வசனத்தைக் கூற, அர்ஜுனுக்கு ஏதோ ஒரு வித நிம்மதி பரவியது.

பின் தன் குறும்பு திரும்ப, "பாஸ்... பாஸ்... நீங்க ஆபீஸ்தானே போறீங்க. என்னையும் டிராப் பண்ணுங்க பாஸ்... ப்ளீஸ், இன்னைக்கு ஒரு நாள்... நான் பஸ்லதான் வந்தேன் காலையில... என் ஸ்கூட்டி ஹாஸ்டலில் இருக்கு..." என்று கூற,

அர்ஜுன், "முடியாது..." என்று இடம் வலமாகத் தலையாட்டினான்.

பாரதி, பாவமாக முகத்தை வைத்துக் கொண்டு, "என்ன பாஸ்... இந்த விஷயத்தில் மட்டும் ஏன் இப்படிப் பண்றீங்க... என்னால சத்தியமா முடியலை பாஸ்... இந்த ஒரு வாட்டி டிராப் பண்ணுங்க..." என்று கெஞ்ச,

கெஞ்ச... கல் போல் நின்றிருந்தான் அவன். பின், "உன்னால முடிஞ்சா பஸ்ஸில் வா. இல்லன்னா... தாத்தாவோட பழைய சைக்கிள் ஒண்ணு இருக்கும். அதில் வா. காரில் ஏறும் வேலையெல்லாம் வைச்சிக்காதே. நான் ஒத்துக்க மாட்டேன்.

"ஆனா ஒண்ணு... எப்படியும் நீ ஆபீஸுக்கு வந்துதான் ஆகணும். மட்டம் போட்டே... உன்னைக் கொன்னுடுவேன்..." என்று எச்சரித்து விட்டுக் காரில் ஏறி வினாடிகளில் பறக்க...

பாரதி அவன் போகும்வரை பார்த்து, "வெவ்வவ்வே..." என்று ஒழுங்கு காட்டியபடி உள்ளே வந்தாள்.

ஒழுங்கு காட்டியபடி வந்தவளைத் தாத்தா, "என்ன பாப்பா... இன்னைக்கு லீவா?" என்று மறைத்து வைத்த சிரிப்புடன் கேட்க,

பாரதி அவரை முறைத்து, "என்ன தாத்தா நக்கலா? நானே கடுப்பில இருக்கேன். வெறுப்பேத்தாதீங்க. கிடைக்கிறதே வருஷத்துக்கு ஒரு வாரம் லீவ். அதையும் பாதியிலே கெடுத்துட்டு இப்போ ஒரு பெரிய லிஸ்ட்டே கொடுத்துட்டு போயிருக்கார். அதுவும் காரிலே கூட்டிட்டுப் போகணும்னு மருந்துக்குக் கூடத் தோண மாட்டேங்குது. உங்க பழைய சைக்கிளில் வரணுமாம். நான் வர மாட்டேன்னு நினைச்சாரா? நான் போய்க் காட்டுறேன். தாத்தா... உங்க சைக்கிள் சாவியைக் கொடுங்க..." என்று வீராவேசமாகக் கேட்க, தாத்தாவிற்குச் சிரிப்புத் தாள வில்லை.

"அது என்னமோர் பாப்பா... நீ இங்க என்கிட்ட யெல்லாம் நல்லா வாய் பேசுற. ஆனா அர்ஜுன் தம்பிகிட்ட உனக்கு வாய் வரவே மாட்டேங்குது..." என்று அதே கிண்டலுடன் கூற,

பாரதி அவரிடம் அசடு வழிந்து, “என்ன சொல்றீங்க தாத்தா? அதுக்குன்னு சம்பளம் கொடுக்கிற முதலாளியை எதிர்த்துப் பேச முடியுமா?” என்று கேட்க,

தாத்தா சமையலறை ஆணியில் மாட்டியிருந்த தன் சைக்கிள் சாவியை எடுத்தவாறே, “எனக்கென்னமோ அவர் உனக்குச் சம்பளம் கொடுக்கிற மாதிரி இல்லை. நீதான் அவருக்குச் சம்பளம் கொடுக்கிற மாதிரி இருக்கு...” என்று அவளிடம் சென்று கொடுக்க...

பாரதி, ஒரு வித மர்மப் புன்னகையுடன், “போட்டு வாங்காதீங்க தாத்தா...” என்றபடியே, அந்தச் சைக்கிளில் புறப்பட்டுச் செல்ல... தன் புன்னகை மாறா முகத்துடன் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தார் மாணிக்கம் தாத்தா.

**மு**ந்திய நாள் மாலையில் இருந்து இன்று காலை வரை அலைந்த சோர்வு பாரதியை மிகவும் அலட்டியது.

தாத்தாவின் சைக்கிள் வேறு சரிவர பிரேக் பிடிக்காமல் போக... அதை அழுத்துவதே பெரும் பாடாக இருந்தது. வழிநெடுகப் பாரதியின் புலம்பலைத்தான் தெரு வில் சென்றவர்கள் அனைவரும் கேட்டுக் கொண்டிருந் தனர்.

“இது உனக்குத் தேவையாடி பாரதி... எதுக்கு இந்த வீண் வீராப்பு? பேசாம பஸ்ஸிலேயே போயிருக்கலாம். இப்போ நெஞ்சுக் கூடு மொத்தமும் வலிக்குது. சும்மா இல்லைடி... உன் வாய்க்குத்தான் நீ வாங்கிக் கட்டுற!” என்று பாரதி தனக்குத் தானே அர்ச்சனை செய்து கொள்ள... அங்கு செல்பவர்கள் அனைவரும் அவளை ஒரு மாதிரிப் பார்க்க... அது தாங்காமல் பாரதி மேலும்,

"இது வேறயா... உன்னை எல்லாரும் பைத்தியம்னு நினைக்கிறாங்கடி. எல்லாம் உன்னால வந்தது. இப்படி லூசா இருந்தால் எல்லாரும் உன்னை அப்படித்தான் நினைப்பாங்க..." என்று வாய்க்கு வந்தபடி புலம்பியபடியே, தன் அலுவலகத்திற்கு வந்து சேர... ஏதோ ஒரு இடத்திற்குப் போய் விட்டு அர்ஜுனும் அப்போது அலுவலகத்திற்கு வர...

தன் சைக்கிளில் முன்னாடி சென்றவள், அவனைப் பார்க்காமல் வாட்ச்மேனிடம், "என்ன அங்கிள்... எப்படி இருக்கீங்க? உங்களுக்குப் பேரன் பிறந்திருக்கான்னு வாட்ஸ் அப்-ல ஸ்டேட்டஸ் போட்டிருந்தீங்க. பார்த்தேன். ரொம்பச் சந்தோஷம் அங்கிள். பையன் எப்படி இருக்கான்?" என்று தன் வேலையான குசல விசாரிப்பை ஆரம்பிக்க...

காவலாளியும் அவளுக்குத் தோதாக, அவளிடம் கதை பேச ஆரம்பிக்க... அர்ஜுன்தான் பாவம். ஹாரன் அடித்து அடித்து ஓய்ந்து போனான். என்னதான் இருந்தாலும் பேரனைப் பற்றிப் பேச ஆரம்பித்ததில் காவலாளியின் கவனம் சற்றுப் பிசகிவிட்டதுதான்...

அர்ஜுன் பல்லைக் கடித்துக் கொண்டு, மறுபடியும் ஹாரன் அடிக்க... பாரதி திரும்பாமல் யார் என்றே தெரியாமல், அர்ஜுனிடம், "யோவ்... என்ன அவசரம்? அதான் பேசிட்டு இருக்கோம்ல..." என்று கெத்தாகக் கூற,

அர்ஜுன், "வண்டிக்கு வழி விடாம இருக்கிறது மில்லாம... எகத்தாளமா பண்ற!" என்று கறுவியபடி மெலிதான வேகத்தில் வண்டியை முன் செலுத்த... அது

பாரதியின் சைக்கிளில் மோதி, அவள் சடாரென்று கீழே விழுந்தாள்.

"ஐயோ... அம்மா..." என்று கத்தியபடி, அவள் கீழே விழ,

காவலாளி, "ஐயோ பாரதிம்மா..." என்று கத்தி, பதறிப் போய்த் தூக்க...

சற்று நேரத்தில் அலுவலகத்தில் பாதியே கீழே வந்து விட்டது.

"பாரதி... பாரதி... என்னாச்சு? அடி ஒண்ணும் படலையே?" என்று ரவியும்,

"பார்த்து வரக் கூடாதா? இப்போ பாரு..." என்று அவளுடைய சிராய்ப்புகளுக்கு மருந்திட்டவாறு நந்தினியும்,

டைப்பிஸ்ட் வத்சலா, "பாரதிம்மா... எந்த நேரத்துல ஊர்ல இருந்து கிளம்பினியோ... காத்துக் கருப்பு அடிச்சிடுத்து. இந்தா திருநீறு, இட்டுக்கோ..." என்று அர்ஜுனை முறைத்தவாறே கொடுக்க... அர்ஜுனுக்கு இந்தப் பெண்மணி தன்னைத்தான் காத்து கருப்பென்று கூறுகிறாரோ என்று சந்தேகமே வந்தது.

இப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகத் தங்கள் அன்பை வெளிப்படுத்த... பாரதியோ கெத்தாக அர்ஜுனைப் பார்க்க... அவனுக்குச் சினம் பொங்கியது.

'ஏதோ கோபத்துல லேசா இடிச்சிட்டேன். அதுக்கு இவங்க அடிக்கிற லூட்டியை என்னால தாங்க முடியலை சாமி. இதை இப்படியே விட்டா சரிவராது...' என்று மனதில்

நினைத்தவன், "என்ன இங்கே கூட்டம். அதெல்லாம் பாரதியே பார்த்துக்குவாங்க. அவ என்ன எல்.கே.ஜி. படிக்கிற குழந்தையா...? எல்லாரும் போய் உங்க வேலையைப் பாருங்க. ம்ம்... போங்க..." என்று அதட்ட, அனைவரும் முணுமுணுத்தவாறே உள்ளே செல்ல...

பாரதிக்கு வாய்க் கொழுப்பு அடங்குமா? "ஏன் பாஸ்... என்கிட்ட சாரி கேட்கப் போறீங்களா? அதுக்கு உங்க மனசு துடிக்குதுன்னு எனக்குத் தெரியும். சாரியெல்லாம் வேணாம், பாஸ். நீங்க செஞ்ச தப்பை உணர்ந்து எனக்கு ஒரு மேக்னம் ஐஸ் கிரீம் வாங்கிக் கொடுத்தாப் போதும், பாஸ். என் மனசு குளிர்ந்திடும்..." என்று பரவசத்துடன் கூற,

அர்ஜுன், "சாரி கேட்கணும்தான். ஆனா உன்னை இடிச்சதுக்கு இல்லை... அவ்ளோ மெதுவா இடிச்சதுக்கு. உன்னை யெல்லாம் 80 கிலோ மீட்டர் வேகத்தில வந்து இடிச்சிருக்கணும். வா உள்ளே..." என்று கத்த,

பாரதி, திருதிருவென விழித்தபடி, "பாஸ்... அய்யோ பாஸ்... எனக்குக் கீழே விழுந்ததில் கை, காலெல்லாம் வலிக்குது பாஸ்... முடியலை..." என்று கையைக் காலைப் பிடித்துக் கொள்ள,

அவள் செய்கையைப் பார்த்து, அங்கே ஓடி வந்த காவலாளி, "என்ன பாரதிம்மா... கை காலெல்லாம் வலிக்குதா? நான் ஏதாவது மாத்திரை வாங்கிட்டு வரவா?" என்று கேட்க,

அர்ஜுன், அவரை முறைத்து, "அவ உங்களைக் கூப்பிட்டாளா? உங்க வேலையை மட்டும் பாருங்க..."

என்று அதட்ட, அவர் தலை குனிந்தபடியே அந்த இடத்திலிருந்து சென்றார்.

பின், அவளிடம் திரும்பி, "இந்தப் பசப்புற வேலையெல்லாம் என்கிட்ட வேணாம். சும்மா நடிக்காமல்... வந்த வேலையைப் பாரு. இந்த மாதிரி நடிப்பெல்லாம் நான் நிறையத் தடவை பார்த்திருக்கேன்..." என்று ஒரு மாதிரிக் குரலில் கூற,

பாரதிக்கு இப்போது முகம் மாறியது. அவனை ஒரு பார்வை பார்த்தபடி ஒன்றும் பேசாமல் உள்ளே செல்ல... அர்ஜுன் அவளைப் பின் தொடர்ந்தான்.

மதியம்வரை அவனிடம் தேவையில்லாமல் அவள் பேசவில்லை. அவன் கூறிய வேலைகளைச் செய்து கொண்டு, அளவாகப் பேச... அர்ஜுனுக்கு என்னவோ போல் இருந்தது.

ஆனாலும் அதை வெளியே காட்டிக் கொள்ள வில்லை. மதிய உணவு நேரம் நெருங்கும் வேளையில், அவனிடம் வந்து அவன் அலுவலகத் தொலைபேசியை எடுத்து, "பாஸ்... குன்னூர் எஸ்டேட் உரிமையாளருக்கு ஃபோன் போடுறேன். அவர்கிட்ட நான் பேசிட்டேன். நான் சொல்ற மாதிரிச் செய்யுங்க. அந்த எஸ்டேட் நம்மளுக்குத் தான்..." என்று கூற,

அர்ஜுனுக்கு இதெல்லாம் புதியதில்லை. அவனுக்கு ஒன்று வேண்டுமென்றால் பாரதி எப்படியும் செய்து முடிப்பாள். அதில் அவனுக்கு எந்த விதச் சந்தேகமும் இல்லை என்பதால் சரியென்று தலையாட்ட...

“முதலில் பேசும்போது ரொம்பக் கடுமையாப் பேசாதீங்க. அப்புறம் எப்பவும் டென்ஷனானா ஃபோனைப் போட்டு உடைப்பீங்களே... அது மாதிரி பண்ணவே கூடாது. கொஞ்சம் அவருக்கும் பேச டைம் கொடுங்க... அவர் நக்கலாகப் பேசினாலும், நீங்க கோபப்படாம, நிதானமாப் பேசுங்க. ப்ளீஸ்... ப்ளீஸ்...” என்று ஆயிரம் அறிவுரை கூற, அர்ஜுன் அவளை முறைக்க...

பாரதி, கெஞ்சலுடன், “என் கண்ணா இல்லை... ப்ளீஸ்!” என்று கூற,

அர்ஜுனுக்கு வியர்த்தது. இவ்வளவு நேரம் இருந்த மனக் கிலேசம் எல்லாம் அவள் ஒற்றை வார்த்தையில் பறந்தோட... ஆனாலும் அவன் கல் போன்ற மனமும் முகமும் அதை வெளித் தெரியாமல் தடுத்துவிட... கொஞ்சம் அழுத்தமாகவே அவளிடம் இருந்து தொலைபேசியை வாங்கி அவ்ளை ஒரு பார்வை பார்க்க... பாரதிக்குச் சிரிப்பு வந்தது.

“ஹப்பா... என்னா கெத்து! தாங்க முடியலைடா சாமி...” என்று அவன் பார்வைக்கு அர்த்தம் தெரிந்தவளாய்... அந்த உரிமையாளரின் எண்களை அழுத்தினாள்.

பின் ஏதோ ஞாபகம் வந்தவளாய், “பாஸ்... அப்புறம் இன்னொரு விஷயம். ஃபோனை எடுத்ததும் வாழ்க வளமுடன் என்று சொல்லணும்... ஓ.கே.?” என்று கூற,

அவளை முறைத்தபடி, “அவ்வளவுதானா? இன்னும் இருக்கா?” என்று கேட்க,

பாரதி யோசித்து, “இப்போதைக்கு இவ்ளோதான். நீங்க பேசும்போது ஏதாவது தோணினா சொல்றேன்...” என்று கூற,

அவள் சிறு பிள்ளைத்தனத்தை நினைத்து அவனுக்குச் சிரிப்பு வந்தாலும், அதை அடக்கி, அந்த உரிமையாளர் கோபாலனிடம் பேசத் துவங்கினான்.

அவர் எடுத்ததும் இவன், “ஹலோ...” என... அவன் வாயைப் பொத்தி, “வாழ்க வளமுடன்...” என்று கிசுகிசுப்பாகக் கூற, அர்ஜுனும் அவ்வாறே கூற,

தமிழ்ப் பற்றாளரான கோபாலனுக்கு முதல் பேச்சிலேயே ஒரு பிடித்தம் ஏற்பட்டது. ஆனாலும் அவர் தன் வழக்கமான நக்கல் பேச்சை ஆரம்பிக்க...

“என்ன சார்... நீங்க சொல்ற விலைக்கு எங்க வாசப்படி வரைக்கும்தான் வரும். அதை மட்டும் உங்க பேர்ல எழுதி வைக்கவா?” என்று கேட்க,

அர்ஜுன் பல்லைக் கடிக்க... பாரதி அவனைப் பார்த்து, “ப்ளீஸ்...பொறுமை!” என்று கெஞ்ச...

அர்ஜுன், “அப்போ நீங்க ஒரு விலை சொல்லுங்க...” என்று தன்மையாகக் கூற,

அவர் கூறிய விலை அதிகப்படியாகத் தோன்ற... அவன் இப்போது நக்கலாக, “ஆமா, சார். நீங்க சொன்ன விலைக்குத் தாஜ்மகாலையே வாங்கிடலாம் போல...” என்று கூற,

கோபாலனும் சளைக்காமல், “அப்போ அதையே வாங்கிக்கோங்க சார்.... என்னை ஆளை விடுங்க!” என்று கூற,

அர்ஜுனுக்கு பி.பி. எகிறி, "அடச்சே..." என்று கூறித் தொலைபேசியைக் கீழே போட்டு உடைக்கப் பார்க்க... ஒரு கை நீண்டு அவன் உடைப்பதைத் தடுத்து அர்ஜுனிடம் இருந்து லாவகமாகத் தொலைபேசியை வாங்கியது. வேறு யார்... எல்லாம் பாரதிதான்.

அர்ஜுன் அதிர்ந்து நிற்க... பாரதி கோபாலனிடம், "வாழ்க வளமுடன் சார்! சாருக்கு ஒரு முக்கியமான மீட்டிங். அதான்... நான் பேசுறேன். எப்படி சார் இருக்கீங்க?" என்று பேசத் துவங்க,

மறுமுனையில் அவரும் ஏதோ பேச... பாரதியின் முகத்தில் திருப்தி இல்லை.

"சார்... நீங்க இப்படிச் சொல்லக் கூடாது. தமிழைக் கரைச்சுக் குடிச்சவர் நீங்க. திருவள்ளுவரே சொல்லி யிருக்கார்.

இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்

என்று. நாங்க உங்களை அவமானப்படுத்தி இன்னா இருந்ததா நீங்க நினைச்சா... எங்களைக் கூனிக் குறுக வைக்கிற மாதிரி நன்மை செய்திடுங்களேன்..." என்று சமயோசிதமாகக் கூற, கோபாலனால் அவள் புத்திசாலித் தனத்தை மெச்சாமல் இருக்க முடியவில்லை. ஆனாலும் அர்ஜுன் பேசிய பேச்சுகளை மன்னிக்க முடியாமல், ஒரு வாரம் கழித்துத் தன் முடிவைக் கூறுவதாகக் கூறித் தொடர்பைத் துண்டிக்க...

பாரதி அங்கே புகை பிடித்துக் கொண்டிருந்த அர்ஜுனை முறைத்து, அவனிடம் சென்று, “ஐ டோல்ட் யூ... அர்ஜுன்! கிளிப் பிள்ளைக்குச் சொல்ற மாதிரிச் சொன்னேன். பொறுமையாப் பேசு... பொறுமையாப் பேசுன்னு... நான் சொன்னதையும் மீறி ஃபோனை... ஓஹ்.. யூ ஆர் மேக்கிங் மீ கோ மேட் அர்ஜுன்...” என்று மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டு கத்த... அவன் ஒன்றும் பேசாமல் நின்றான்.

பின் பாரதி, “மத்த விஷயம் மாதிரி நானே பேசி முடிச்சிருக்கணும். உன்கிட்ட பேசச் சொன்னேன் இல்ல... எனக்கு வேணும். இப்பப் பாரு... அவரு பட்டும் படாமல் பதில் சொல்றார். நாலு வருசம் அர்ஜுன்... உனக்கு நான் ஒவ்வொரு தடவையும் பொறுமையா உன் கேரக்டரை மாத்துன்னு சொல்லிச் சொல்லி எனக்கு வெறுத்துப் போச்சு, அர்ஜுன். எல்லாரும் என்னை மாதிரியே இருக்க மாட்டாங்க. அதைப் புரிஞ்சிக்கோ. எப்போதான் என்னை ஒரு மனுஷியா மதிச்சு நான் சொல்றதையும் கேட்பே...?” என்று கூற,

அர்ஜுன் அடிபட்டாற் போல் நிமிர்ந்து, அந்த வார்த்தைகளை வீசினான். “ஓஹ்... என்கூட இருக்கிறது உனக்கு அவ்ளோ கஷ்டமா இருக்குல்ல. அப்போ இந்த வேலையை விட்டுப் போ. என்னைத் தனியா விட்டுப் போ. உன்னை யாரும் கெஞ்சி இங்க இருக்கச் சொல்லலை. நான் இப்படித்தான். என்னால என்னை மாத்திக்க முடியாது!” என்று கத்த...

அப்போதுதான் பாரதிக்கு அவள் செய்த தவறு தெரிந்தது. ‘அவன் இப்படித்தான் என்று தெரியும்தானே.

அதற்கு மேல் அவனைக் குற்றம் கூறி என்ன பிரயோஜனம்?' என்று நினைத்துத் தன்னைத் தானே சமாதானப் படுத்தியவளின் கண்களுக்கு இப்போது அர்ஜுன் ஆண் மகனாக இல்லை. ஒரு ஐந்து வயதுக் குழந்தை போல்தான் தெரிந்தான்.

பள்ளித் தேர்வில் கணக்குப் பாடத்தில் குறைவான மதிப்பெண் பெற்றுத் தன் தாயிடம் அடி வாங்கும்போது, "எனக்குத்தான் மேத்ஸ் வராதுன்னு சொல்றேனில்ல. நான் இப்படித்தான். எனக்கு இது பிடிக்கலை. நான் எங்கேயாவது போறேன்..." என்று கோபத்தில் குழந்தைகள் அழுது கொண்டே கூறுமே... அது போல்தான் அவள் கண்களுக்கு அர்ஜுனும் தெரிந்தான். அவன் மேல் உள்ள கோபம் எல்லாம் வழக்கம் போல் பனியாக உருக... சிரிப்புடன் அவனிடம் வந்து,

"கண்ணா, நான் இருந்தாலும் பி.ஏ.வாத்தான் இருப்பேன். இந்த ஆபீஸை விட்டுப் போனாலும் பி.ஏ. வாத்தான் போவேன். ஞாபகம் வச்சிக்கோ!" என்று கூற,

அர்ஜுன் ஒரு நிமிடம் அதிர்ந்து, பின், "ஏய்... வாயை மூடு. இல்லை, உன்னை..." என்று அதட்ட,

பாரதி கைக்கடிகாரத்தைப் பார்த்து, "பாஸ், ஏற்கெனவே நீங்க லஞ்ச்சுக்கு ஒரு மணி நேரம் லேட். கமான் பாஸ். இப்பவே நீங்க களைச்சிட்டீங்கன்னா நைட் பார்ட்டியில் உங்களால ஜாலியா இருக்க முடியாது. கம் பாஸ்... சாப்பிடுங்க!" என்று தன் வழக்கமான அவன் உணவைப் பரிமாறும் வேலையை ஆரம்பிக்க...

சில நேரம் பாஸ் என்றும், சில நேரம் கண்ணா என்றும் கோபப்படும் சமயத்தில்... அர்ஜுன் என்று மாறி மாறி வரும் அவளின் விளிப்புகளுக்கு அர்த்தம்.

தெரிந்தவன் அவள் கூறிய விசயம் அவன் மனதைக் கிழித்தாலும் கல்லாக்கிக் கொண்டு சாப்பிட அமர்ந்தான்.

பாரதி, "பாஸ், நீங்க சாப்பிடுங்க. நான் போய் ஏதாவது கொட்டிக்கிட்டு வர்றேன்..." என்று கூறிவிட்டு நகர முற்பட... அர்ஜுன் அவள் கையைப் பிடித்துத் தடுத்து, "நில்லு!" என்று கூற,

பாரதி மகிழ்ந்து, "பாஸ்... தேங்க் யூ பாஸ். இன்னைக்காவது உங்ககூட என்னைச் சாப்பிடக் கூப்பிடணும்னு உங்களுக்கு மனசு வந்துதே... தாத்தா எனக்கும்தான் சமைச்சுத் தந்திருப்பாருன்னு எனக்குத் தெரியும் பாஸ்!" என்று பெருமிதப்பட,

அர்ஜுன் அவளைப் பார்த்து நக்கலாக, "ஆனாலும் உனக்கு ரொம்ப நம்பிக்கை. எனக்கெல்லாம் கனவில் கூட உன்கூடச் சாப்பிடணும் என்கிற எண்ணம் வராது..." என்று கூற,

பாரதி சளைக்காமல், "அதனால என்ன பாஸ்... என் சாப்பாட்டைக் கொடுங்க. நான் நம்ம ஆபீஸ் லஞ்ச் ரூமில் அரட்டை அடிச்சிக்கிட்டே சாப்பிடுறேன். சந்தோஷம்னா அது பாஸ்... இந்த ஏ.சி. ரூமில் உட்கார்ந்து சாப்பிடுற துக்கு அங்கே வந்து சாப்பிடுங்க பாஸ். ஃபைவ் ஸ்டார் ஹோட்டலுக்கே போக மாட்டீங்க. அவ்வளவு ஜாலியா இருக்கும்..." என்று கண்களில் ரசிப்புத் தன்மையைத்

தேக்கிக் கூற, அர்ஜுனின் முகத்தில் எரிச்சல்தான் மண்டியது.

‘இவளை எவ்வளவு அவமானப்படுத்தினாலும் இவள் அதிலும் ஒரு நல்லதைக் கண்டுபிடிக்கிறாளே!’ என்று நினைத்துக் கொண்டு, பேச்சை மாற்றி, “எப்போ பார்த்தாலும் சாப்பாடு சாப்பாடு... இன்னைக்கு நான் சாப்பிட்டு முடிச்சதுக்கு அப்புறம்தான் நீ போகணும். இன்னைக்கு மட்டுமில்லை. இனிமேலும் அப்படித்தான்...” என்று கட்டளை இட்டவனைக் கோபப் பார்வை பார்த்து,

“பாஸ். இதெல்லாம் அநியாயம், அக்கிரமம். ஏற்கெனவே கீழே விழுந்த பொண்ணு. கொஞ்சம் கூடப் பரிதாபமில்லையா?” என்று கெஞ்ச,

அர்ஜுன் பரிதாபப்படுவது போல் பாவ்லா செய்ய... பாரதி மகிழ்ச்சியுடன், “பார்த்தீங்களா பாஸ்... உங்களுக்கே பாவமா இருக்கு. என்னை விடுங்க பாஸ்...” என்று கையை இழுக்க,

அர்ஜுன், “சும்மா நடிக்காதே. கீழே விழுந்தேங்கிற பேர்ல எல்லாரும் உனக்குச் செஞ்ச உபச்சாரம் எனக்குத் தெரியும். வத்சலாவோட புளியோதரையையும் ரவா கேசரியையும் அரை மணி நேரம் முன்னாடிதானே வயித்துக்குள்ள தள்ளினே. இன்னும் ஒரு மணிநேரத்துக்கு இந்த இடத்தை விட்டு நகரக் கூடாது...” என்று அதட்ட,

வேறு வழியின்றிப் புளியோதரையை வாங்கிச் சாப்பிட்ட தன் வாயை நொந்தபடி அவனுடன் அமர்ந்தாள் பாரதி.

இவ்விருவரின் அன்னியோன்யமான உறவிற்கு விரைவில் ஒரு அதிர்ச்சிகரமான பிரிவு நெருங்குவதை, பாவம்... அவர்கள் அறியவில்லை.

அந்தப் பிரிவை இவர்கள் தாங்குவார்களா?

# 4

பாலுங் கசந்ததடீ - சகியே
படுக்கை நொந்ததடீ!
கோலக் கிளி மொழியும் - செவியில்
குத்த லெடுத்ததடீ!
நாலு வைத்தியரும் - இனிமேல்
நம்புதற் கில்லை யென்றார்;
பாலத்து சோசியனும் - கிரகம்
படுத்து மென்று விட்டான்!

அன்றிரவு பாரதி தன் விடுதிக்குத் திரும்பும்போது மணி பன்னிரண்டு.

ரவிதான் அவளை விடுதியில் விட்டு விட்டுச் சென்றான். கொஞ்சம் வாயாடுவான் என்றாலும், மிகுந்த தகுதி யெல்லாம் பார்த்துப் பழகாத நல்ல நண்பன் போல்தான் அவன்.

அவளை இறக்கி விட்டுவிட்டு, “சரி, பாரதி. நான் வர்றேன். பத்திரமாப் போ!” என்று கூறிவிட்டு, வண்டியைக் கிளப்ப...

பாரதி புன்னகையுடன், "தேங்க்ஸ் சார். போய்த் தூங்குங்க. அதுக்குன்னு வண்டியிலேயே தூங்கிடாதீங்க..." என்று கிண்டலடிக்க,

ரவி உல்லாசமாக, "ஆமா. உனக்கு டிரைவர் வேலை பார்த்தேன் இல்லை. எனக்கு இது தேவைதான். வாயாடாமல் போய்த் தூங்கு..." என்று கூறி விட்டுச் சென்றான்.

பாரதி, தன் கைபேசியை எடுத்துக் காப்பாளரை அழைக்க... நல்ல வேளை, அந்த விடுதிக் காப்பாளர் அர்ஜுனின் குடும்பத்திற்கு வேண்டியவர் என்பதால், அவளை ஒன்றும் கூறாமல் ஒரு கண்டிப்பான பார்வை யுடன் கதவைத் திறந்து விட... அசடு வழியும் சிரிப்புடன், "சாரி மேடம். இனிமேல் லேட்டாகாது... பிராமிஸ் மேடம்...!" என்று கூற,

காப்பாளரோ, நக்கலாக... "இது மாதிரிக் கிட்டத்தட்ட நீ நூறு வாட்டி சொல்லியாச்சு. நீ எடுக்கிற சத்தியத்தை எல்லாம் தண்ணியில் கூட இல்லை. காற்றில்தான் எழுதி வைக்கணும். ஆமா, ஒரு வாரம் ஊருக்குப் போறேன்னு சொன்னே. என்னாச்சு... மூணு நாள் முன்னாடியே வந்துட்டே?" என்று கேட்க,

பாரதி, "இல்லை மேடம்! ஆபீஸில் வேலை ஜாஸ்தி. அதான் லீவ் கேன்சல் ஆகிடுச்சு..." என்று கூற,

இதுவரை நக்கலாகப் பார்த்துக் கொண்டிருந்த காப்பாளரின் முகத்தில் பரிதாபம் தோன்றி, "சீ... பாவம்மா நீ... விடுமுறையே கிடையாதா உனக்கு. சரி, சரி... போய்த்

தூங்கு. காலையிலே பேசிக்கலாம்..." என்று தன் விசாரணையை முடிக்க...

முதன் முறையாகத் தன் விடுமுறை ரத்தானதுக்கு மகிழ்ச்சியடைந்தாள் பாரதி.

"ஹப்பா... நல்லவேளை. பரிதாபப்பட்டு விட்டுடுச்சு. இல்லை... கூட ஒரு மணி நேரம் விசாரணை நடத்திக் கொன்னிருக்கும்..." என்று தனக்குள் முனகியபடியே மாடியேறி வந்து தன் அறைக் கதவைத் தட்ட... கதவைத் திறந்த அவள் அறைத் தோழி மஹதி, "ஐயோ, பேய்..." என்று அலற,

அதிர்ந்து போய், அவள் வாயைப் பொத்தி, அறைக்குள் அழைத்துச் சென்று கதவைப் பூட்டி, "அடியேய்... நான்தான்டி பாரதி... கத்தித் தொலையாதே. இல்லை... அதுக்கு ஒரு பஞ்சாயத்து நடக்கும்..." என்று கெஞ்ச...

தன் வாயைப் பொத்தியிருந்த அவள் கையை விலக்கிய மஹதி, "பாரி... நீயா! உனக்குத்தான் ஒரு வாரம் லீவ் ஆச்சேடி!" என்று கூற,

பாரதி கோபத்துடன், "ஏய்... வாயில நல்லா வந்திடும். வாயை மூடுடி. காலையில் இருந்து பார்க்கிற வங்க எல்லாம் இதே கேள்வியைக் கேட்டுக் கடுப்பேத்து றீங்க...!" என்று கூற,

இப்போது கொஞ்சம் தெளிந்த மஹதி, "ஆமாடி... ஏன் கேட்க மாட்டாங்க. வருசத்துக்கு ஒரு தடவைக்கு ஊருக்குப் போறவங்ககிட்ட எல்லாம் அப்படித்தான்

கேட்பாங்க. என்னாச்சு உன் பாஸுக்கு? உன்னை வேலை வாங்காமல் இருக்க முடியலையாக்கும்..." என்று கிண்டலாகக் கேட்க,

பாரதி பெருமூச்சுடன், "அடப் போ, மகி... ஏதோ முக்கியமான டெண்டராம். அதான் லீவ் கேன்சல்..." என்று கூற,

மஹதி, "நீ சரியில்லை பாரி. நானும் உன்கூட மூணு வருஷமா ரூம் மேட்டா இருந்து பார்த்துக் கிட்டுத்தான் இருக்கேன். உன் பாஸ் பண்ற அலம்பலுக்கு அளவே இல்லை. இவ்ளோ வேலை செய்யுற... ஆனா அதுக்கான அங்கீகாரம் உனக்குக் கிடைச்சு நான் பார்த்ததே இல்லை. சண்டே கூட வேலைக்குப் போற. உனக்குன்னு கிடைச்ச ஒரே ஆறுதல் இந்த ஒரு வாரம் லீவ்தான். "இப்போ அதுக்கும் ஆப்பா... நீ இப்படியே இடம் கொடுத்துட்டு இருந்தேன்னு வை. உன் பாஸ் உனக்குக் கல்யாணமாகி முதலிரவு அன்னைக்குக் கூட வேலைக்கு வரச் சொல்வார்..." என்று கூற, பாரதி கலகலவெனச் சிரித்து, "அதெல்லாம் கூப்பிட மாட்டார் மகி... நான் கல்யாணமானா வேலையை விட்டுருவேன்..." என்று கண்ணடித்துக் கூற,

மஹதி, "நீ நினைச்சிக்கிட்டு இரு. உன் பாஸ் உன்னை வேலையை விட்டு அனுப்பவே மாட்டார்..." என்று கூற,

பாரதி மனதுக்குள், 'அவர் எப்படா என்னை வேலையை விட்டு அனுப்பலாம்னுதான் இருக்கார். நான்தான் அவரை விட மாட்டேங்குறேன்...' என்று நினைத்துக் கொண்டு,

மஹதியிடம், "அதெல்லாம் அனுப்பிடுவார் மகி... கவலைப் படாதே. ஆமா, நீதான் ஒன்பது மணிக்கே குறட்டை விட ஆரம்பிச்சிடுவே... இன்னைக்கு என்ன இவ்ளோ நேரம் முழிச்சிருக்கே... தூங்கின மாதிரித் தெரியலையே!" என்று கேட்க,

மஹதி வெட்கத்துடன், "இன்னைக்கு வினோத் மும்பை போறார். அதான் போறதுக்கு முன்னாடி..." என்று முடிப்பதற்குள்,

"கண்ணே... மணியேன்னு கொஞ்சினாராக்கும்..." என்று சிரிப்புடன் கேட்க,

மஹதி அவள் தலையில் குட்டினாள்.

வினோத்... மஹதியின் அத்தை மகன். சிறு வயதிலேயே ஒன்றாக வளர்ந்தவர்கள். இப்போது காதலர்கள். வீட்டிலும் பேசி முடித்து அடுத்த வருடம் திருமணம் என்று முடிவாகி இருந்தது.

பின் மஹதி, "சீ போடி. இந்தா, உனக்குப் பிடிச்ச வெண்ணிலா கேக். உன் ஞாபகம் வந்து வாங்கினேன். அப்புறம் பார்த்தா நீயே வந்துட்டே..." என்று கூறி நீட்ட...

அதைக் கிட்டத்தட்ட பறித்த பாரதி, "ரொம்ப தேங்க்ஸ் செல்லம். சாயந்திரம் குடிச்ச ஒரு காபியோட சரி. செம பசி..." என்று அவள் வேகவேகமாகக் காலி செய்ய...

மஹதியின் கண்கள் நிறைந்தன. "என்ன பாரி... இவ்ளோ கஷ்டப்பட்டு நீ அங்கே வேலை செஞ்சுதான் ஆகணுமா? உன் பாஸுக்குக் கொஞ்சம் கூட மனச்சாட்சி இல்லையா? அப்படி என்ன உனக்குப் பிடிவாதம்

அங்கேதான் வேலை செய்யணும்னு...?" என்று கேட்டாள் மஹதி.

பாரதி சிரித்து, "வீட்டுல நான் ஒருத்திதான் நிரந்தரமா சம்பாதிக்கிறேன் மகி. விவசாயம் பண்ணி அண்ணன் தனியாக் கஷ்டப்படுது. எங்க ஒரே ஆதரவான சித்தப்பா வுக்கும் வயசாயிடுச்சு. முன்னே மாதிரி இல்லை. அதான் ஏதோ என்னால முடிஞ்ச உதவி.

"அதுவுமில்லாமல் இங்க எல்லாரும் என்கிட்ட ரொம்ப ஒட்டிக்கிட்டாங்க. அவங்களைப் பிரிஞ்சு வருவதும் கஷ்டம்தான்..." என்று கூற,

மஹதி, "ஹும். நீ என்னைக்கு நான் சொல்றதைக் கேட்டு இருக்கே... உன்னைத் திருத்த முடியாது. இந்த ஹாஸ்டலில் எல்லாரும் அவங்கவங்க அறைத் தோழி யோட ஜாலியா சுத்துறாங்க. ஆனா பாரு... என் ரூம்மேட் பேய் மாதிரி பன்னிரண்டு மணிக்குக் கதவைத் தட்டுது..." என்று கூற,

பாரதி, "கவலைப் படாதே செல்லம்... உன் கல்யாணத்துக்கு ஒரு வாரம் முன்னாடியே வந்து... ஏன்டி இங்கே வந்தே என்று நீ திட்டுறபடி என் வேலையைக் காட்டுறேன்..." என்று கூற,

மஹதி, "அதெல்லாம் ஒண்ணும் சொல்ல மாட்டேன். நீ வந்தாலே போதும்..." என்று சிணுங்கலுடன் கூற,

பாரதி ஒரு நீளமான கொட்டாவியை விட்டு, "சரி மகி... தூங்கலாமா? முடியலை. காலையில வேற ஏழு மணிக்கெல்லாம் கிளம்பணும்..." என்று சோர்வுடன் கூற,

மஹதியும் தலையாட்டி விட்டு விளக்கை அணைக்க... இருவரும் படுக்கையில் விழுந்ததுதான் தாமதம்... உறங்க ஆரம்பித்தனர்.

இதோடு பாரதியின் நாள் அன்று முடிந்தபாடில்லை. இரவு ஒரு மணி இருக்கும். அவள் உறங்க ஆரம்பித்த சிறிது நேரத்திலேயே அவளின் கைபேசி தன் சிணுங் கலை ஆரம்பிக்க... பாரதி உறக்கத்திலேயே அதை உயிர்ப்பித்து, "என்ன பாஸ்... பார்ட்டி எப்படிப் போச்சு? மட்டையா இன்னைக்கும். பப்ல இருக்கிற மொத்தத் தையும் காலி செய்திருப்பீங்களே... சரி, விடுங்க. அப்படியே பார்க்கிங் இடத்துக்குப் போங்க. எப்பவும் மூணாவது வரிசையில் நாலாவதா நிக்கும். அதான் உங்க கார். ஹோண்டா சிட்டி ஐவரி கலர். அதுகிட்ட போங்க. உள்ளே ஒருத்தர் தூங்கிட்டு இருப்பார். அவரை எழுப்பி நீ சேகரான்னு கேளுங்க. நீங்க வேற எதுவும் பேச வேண்டாம். அவரே உங்களை வீட்டுக்குக் கூட்டிட்டுப் போயிடுவார். குட் நைட் பாஸ். ஸ்வீட் ட்ரீம்ஸ்..." என்று கூறிவிட்டுக் கைபேசியை அணைக்க...

அருகில் படுத்திருந்த மஹதி எழுந்து விளக்கைப் போட்டு, அவளை முறைக்க ஆரம்பித்தாள்.

திடீரென்று வெளிச்சத்தில் கண் திறந்த பாரதி, "ஏய் என்னடி... லைட்டை ஆஃப் பண்ணு... ப்ளீஸ்!" என்று கெஞ்ச...

அவள் கெஞ்சலில் உருகாமல் மஹதி, "ஏய், உனக்குக் கொஞ்சம் கூட ரோஷமே கிடையாதா? இல்லை... சாதாரண அறிவு கூட இல்லையா? அந்த

ஆள் என்னடான்னா நல்லாக் குடிச்சிட்டு தன் கார் எங்கே நிக்குதுன்னு கூடத் தெரியாமல் உனக்கு ஃபோன் பண்றான். நீயும் அவனுக்கு விளக்கம் சொல்லிட்டு இருக்கே. இதெல்லாம் கொஞ்சம் கூட நல்லா இல்லை பாரி...

"நல்லவேளை. நான் இன்னைக்கு முழிச்சிட்டு இருந்தேன். அதனால எல்லாம் தெரியுது. ஆனா இது உங்களுக்குள்ள அடிக்கடி நடக்குது போல..." என்று கண்டிப்புடன் கேட்க,

பாரதி குற்ற உணர்வுடன் தலையாட்டினாள்.

அவள் முகத்தைப் பார்த்து இளகி, அவளிடம் வந்து, "இதெல்லாம் தப்பு பாரி... இந்த பாஸ் – பி.ஏ. உறவெல்லாம் ஒரு லிமிட்டோடதான் இருக்கணும். நீ வாழ வேண்டிய பொண்ணு. முதலில் அதை ஞாபகம் வச்சிக்கோ..." என்று கூற,

பாரதி, "நான் என்ன பண்றது மகி... அவருக்குத் தினமும் குடிக்காமல் இருக்க முடியாது. நான் இப்போ பேசலைன்னா அடுத்த நாள் டோஸ் விழும். அதான்..." என்று தயங்க,

மஹதி, "சரி சரி... விடு. இனிமே ஃபோன் வந்தா எடுக்காதே. அது பாட்டுக்கு அடிக்கட்டும்..." என்று கூறும்போதே மஹதிக்குத் தெரியும்... பாரதி அதைக் கண்டிப்பாகப் பின்பற்ற மாட்டாள் என்று. ஆனாலும் என்னவோ அவளிடம் கண்டிப்பாக அறிவுறுத்த வேண்டுமென்று நினைத்தாள். அதைச் செய்தும் விட்டாள்.

ஆனால், பாரதி, "சரி மகி... இனிமே நீ சொல்ற மாதிரியே கேட்கிறேன். இப்போ தயவு செய்து தூங்க லாமா? முடியலை!" என்று கொஞ்ச...

மஹதி சிரித்தபடியே படுத்துச் சட்டென்று எழுந்து, "ஆமா பாரி... அதெப்படி உன் பாஸுக்கு அவ்ளோ போதையிலும் உனக்கு ஃபோன் பண்ணணும்னு மட்டும் ஞாபகம் இருக்கு..." என்று நக்கலான பார்வையுடன் கேட்க...

பாரதி முகத்தில் எரிச்சலைக் காட்டி, "ஏய், என்கிட்ட அடி வாங்காமல் படுத்துத் தூங்குடி. வந்துட்டா கேள்வியின் நாயகி... கடுப்பைக் கிளப்பிக்கிட்டு..." என்று அதட்ட,

மஹதி கப்சிப் என்று அமைதியாகிப் படுத்து விட்டாள்.

பாவம் மஹதிக்குத் தெரியவில்லை. இனியும் அர்ஜுனால், தன் தோழியால் தன்னுடைய தூக்கம் பல நாள் கெடப் போகிறது என்று!

அடுத்த நாள் காலை அமைதியாக விடிந்திருந்தது.

வழக்கம் போல் எழுந்திருக்க மனமின்றி... சற்று நேரம் புரண்டு விட்டு மறுபடியும் உறங்கிப் பின் அரக்கப் பரக்க எழுந்து புறப்பட்டு, அலுவலகத்திற்குக் கிளம்பும் அந்த ஒரு மணிநேரத்தில் மஹதி அர்ஜுனை ஆயிரம் முறையாவது திட்டியிருப்பாள். அனைத்தையும் கண்டும் காணாமல் தன் தோழியைச் சமாதானப்படுத்தி விட்டுக் கிளம்பினாள்.

அப்போதும் மஹதி, "இதைப் பாரு. இனிமேல் எனக்கு நடு ராத்திரியில் எல்லாம் போன் செய்ய வேண்டாம்னு உன் பாஸ்கிட்ட சொல்ற. இல்லை... உன்னைக் கொன்னுடுவேன்..." என்று பயமுறுத்தி விட்டே தன் தோழியை அனுப்ப... பாரதி அவள் கன்னத்தைப் பிடித்து, "எனக்குக் கிடைச்ச தோழிகளிலேயே நீதான் பெஸ்ட் மகி. ஐ லவ் யூ..." என்று கொஞ்ச,

மஹதி ஒரு முறைப்புடன், "சும்மா தாஜா பண்ணாதே... கிளம்பு!" என்று கூற,

பாரதி ஒரு பெருமூச்சுடன், "நல்லதுக்கே காலமில்லைடா சாமி..." என்று போலியாக அலுத்துக் கொண்டு, அலுவலகத்திற்குக் கிளம்பினாள்.

நேரமாகி விட்டதே என்று சற்று வேகமாகத் தன் ஸ்கூட்டியில் சென்று சரியாக எட்டே கால் மணிக்கு அலுவலகத்தில் இருந்தாள்.

அங்கே ஈ, காக்கா கூட இல்லை. ஆனாலும் அர்ஜுனின் கட்டளைப்படி அவளின் வேலை நேரம் காலை எட்டு மணி. ஆசுவாசமாக உள்ளே நுழைந்த வளுக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

காலையில் அவளுக்கு முன்னரே வந்து தன் அறையில் அமர்ந்திருந்தான் அர்ஜுன். எப்போதும் ஒன்பது மணி வருபவன் இன்று எட்டு மணிக்கே வந்திருக்க...

'ஐயோ... என்ன இவர் இவ்வளவு சீக்கிரமா வந்துட்டார். பாரதி! இன்னைக்கு உனக்கு ஆப்புடி...' என்று நினைத்துக் கொண்டே,

அறைக் கதவைப் படாரென்று திறந்து கொண்டு உள்ளே நுழைந்து, "பாஸ்... என்ன பாஸ்.. இவ்ளோ சீக்கிரம் வந்துட்டீங்க. ஏதாவது பிரச்சினையா?" என்று கேட்க,

தலையைப் பிடித்துக் கொண்டு மேஜை மேல் சாய்ந்திருந்த அர்ஜுன் எழுந்து, "ஏய், அவுட். கதவைத் தட்டிட்டு உள்ளே வர மேனர்ஸ் கூடத் தெரியாதா? ஆயிரம் தடவை சொல்லிட்டேன். போய்க் கதவைத் தட்டிட்டு உள்ளே வா!" என்று சீற,

பாரதி, "கமான் பாஸ்... இதில் என்ன இருக்கு?" என்று கெஞ்ச,

அர்ஜுன், "டு வாட் ஐ சே... அவுட்!" என்று கத்த...

பாரதி சிணுங்கலுடன் தரையை உதைத்துக் கொண்டு வெளியே சென்றாள்.

இரண்டு நிமிடம் ஐந்து நிமிடம் ஆனது.

வெளியே சென்றவள்... சென்றவள்தான். ஆளையே காணவில்லை. அர்ஜுன் அவள் வருவாள்... வருவாள் என்று எதிர்பார்த்துப் பின், 'என்ன ஆச்சு... வெளியே போன்னு சொன்னதைத் தப்பாப் புரிஞ்சிட்டு இந்த லூசு இதான் சாக்குன்னு ஹாஸ்டலுக்கே போயிடுச்சா?' என்று நினைத்து, வெளியே வந்து ஆபீஸ் முழுக்கத் தேடினான். அவள் கிடைக்கவில்லை.

'சொல்லாமல் எங்கேயும் போக மாட்டாளே...' என்று நினைத்துத் தன் அறைக்கு வந்து அமர்ந்து, குழப்பத் துடனே கண்ணை மூடச் சரியாகப் பதினைந்து நிமிடங்கள்

கழித்து, "ஹலோ பாஸ்... மே ஐ கம் இன்..." என்ற குரல் அவனை எழுப்ப...

எழுந்த உற்சாகத்தை மறைத்து அழுத்தமாக, "எஸ்... கம் இன்..." என்று அனுமதி அளித்தான்.

உள்ளே வந்த பாரதி, "பாஸ்... உங்க குரல் செம ஸ்மார்ட்டா கேட்குது பாஸ். கெத்து பாஸ் நீங்க. இனிமே கதவைத் தட்டிட்டுத்தான் வருவேன். ஓ.கே. சரி... இந்தாங்க. இதைக் குடிங்க. ஆஹ்... சீக்கிரம் பிடிங்க பாஸ். சுடுது..." என்றவளின் கையில் காபிக்கோப்பை காபியாலும் நறுமணத்தினாலும் மிதந்து கொண்டிருந்தது.

ஒரு கையில் ஃபிளாஸ்க்குடனும் ஒரு கையில் காபி கப்போடும் நின்றவளிடம், "எதுக்கு... இது நான் கேட்டேனா?" என்று எரிந்து விழ,

பாரதி அசராமல், "பாஸ், வரும்போதே பார்த்தேன். தலையைப் பிடிச்சுட்டு இருந்தீங்க. நேத்து பார்ட்டி ஹாங் ஓவர்... ஓ.கே. ஓ.கே. முறைக்காதீங்க பாஸ்... அதான் நானே நாயர் கடைக்குப் போய் உங்க ஃபிளாஸ்க்கில் காபி வாங்கிட்டு வந்தேன். நாயர் அண்ணா நமக்குக் கொஞ்சம் தோஸ்த் வேற. அதான் பேசிட்டே இருந்துட் டோம்.

"ஆனா, பாஸ்... நாயர் உன்னியப்பம் ஒண்ணு தந்தார் பாருங்க. ஆஹா, அப்படியே நாக்கில் நீர் ஊறுது பாஸ். இதைச் சாப்பிட்டுத்தான் போகணும்னு ஒரே அன்புத் தொல்லை. இந்தப் பாரதிக்குத்தான் அடுத்தவங்க கஷ்டப் பட்டா தாங்காதே. அதான் ரெண்டு சாப்பிட்டு வந்தேன்.

தாமதமாயிடுச்சு. இந்தாங்க பாஸ்...” என்று அவன் தன் கையால் வாங்க மாட்டான் என்பதை உணர்ந்து கோப்பையை மேஜையில் வைத்தாள்.

அர்ஜுன் சலிப்புடன், “எதுக்குன்னு ஒரு வார்த்தை கேட்டதுக்கு ஒரு பக்கத்துக்குப் பேசணுமா? நீ அந்த உன்னியப்பத்துக்காகத்தான் போனேன்னு எனக்குத் தெரியும். சும்மா எனக்குக் காபி வாங்க... சாக்கு...” என்று திட்டினாலும், அந்தக் காபியை மெதுவாகக் குடித்து முடித்தான். பிறகுதான் கொஞ்சம் தெம்பே வந்தது அவனுக்கு.

உண்மையிலேயே நேற்றைய போதை அவனை மிகவும் படுத்தியிருந்தது. வீட்டிலும் இருக்க முடியாமல் தான் ஆபீஸுக்கு வந்திருந்தான். அவன் முகம் பார்த்து அவள் செய்கிற அனைத்தும் அவனுக்குப் புரிந்திருந் தாலும், அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

பாரதி அவன் குடித்து முடிக்கும்வரை பொறுமை யாய் இருந்து, “பாஸ், வீட்டிலே கிச்சன், பாத்ரூம் பைப்பில் தண்ணீர் வரலைன்னு தாத்தா சொன்னார். பிளம்பர் அனுப்பிட்டேன். பைப் லைன் எல்லாம் மாத்தணுமாம். துருப் பிடிச்சிருச்சாம். மூணாயிரம் ஆகுமாம். எனக்குத் தெரிஞ்ச மத்த பிளம்பர்ஸ் கிட்டயும் கேட்டு செக் பண்ணிக்கிட்டேன். அதுவே குறைவுதான்னு சொல்றாங்க. அதான் இந்தச் செக்கில் சைன் வேணும் பாஸ். பேங்க்கில் இருந்து பணம் எடுக்கணும்...” என்று கூற,

அர்ஜுன் எரிச்சலுடன், “கையெழுத்துப் போடுன்னு மட்டும் சொன்னாப் போதும். இந்தக் கதையெல்லாம் பேசி

என் நேரத்தை வீணடிக்காதே..." என்று கூறி, வெற்றுக் காசோலையில் கையெழுத்திட்டுத் தந்தான்.

அதை வாங்கிய பாரதி, "பாஸ்... என் மேல உங்களுக்கு இருக்கிற நம்பிக்கைக்கு நான் என்ன பாஸ் கைம்மாறு செய்யப் போறேன்..." என்று நடிகர் திலகம் அளவிற்குப் பேச,

அர்ஜுன் அவளைக் கையமர்த்தி, "ரொம்ப சீன் போடாதே. உன் மேல உள்ள நம்பிக்கையால இல்லை. என் மேல உள்ள நம்பிக்கையால்தான். என்னை ஏமாத்தினவங்களை நான் அவ்ளோ சீக்கிரம் விட்டுட மாட்டேன். ஏன்னா... நான் ஏற்கெனவே சில பேரால நிறைய அடிபட்டுட்டேன்..." என்று அழுத்தமாகக் கூற,

பாரதி, "ஒரு நாளைக்கு ஒரு தடவையாவது இதையெல்லாம் பேசலைன்னா உங்களுக்குப் பொழுது போகாதா பாஸ்...?" என்று அவனை இலகுவாக்கக் கேட்க...

அதுவே அவனுக்கு எரிச்சல் மூட்டியது.

"ஓஹ்... அதைக் கேட்க உனக்கு அவ்ளோ சலிப்போ... அப்போ அனுபவிச்சவன் நான்... எனக்கு எப்படி இருக்கும்? சே... இதையெல்லாம் நான் ஏன் உன்கிட்ட சொல்லணும்! போ. போய் வேலை இருந்தால் பாரு, போ..." என்று கத்த,

பாரதி அவனைச் சமாதானப் படுத்தும் வழி தெரியாமல், அந்த அறையை விட்டு நடந்தாள்.

# 5

புல்லாங் குழல்கொண்டு வருவான் - அமுது
பொங்கித் ததும்புநற் கீதம் படிப்பான்;
கள்ளால் மயங்குவது போல - அதைக்
கண்மூடி வாய்திறந் தேகேட் டிருப்போம்!
அங்காந் திருக்கும்வாய் தனிலே - கண்ணன்
ஆறேழு கட்டெறும் பைப்போட்டு விடுவான்;
எங்காகி லும்பார்த்த துண்டோ? - கண்ணன்
எங்களைச் செய்கின்ற வேடிக்கை யொன்றோ?

அர்ஜுனிடம் காலையிலேயே சுப்ரபாதம் லட்சார்ச்சனை எல்லாம் கிடைக்கப்பெற்ற பாரதி, "சே... என்ன வாழ்க்கைடா இது..." என்று அலுத்துக்கொண்டே தன் வேலையைத் துவங்க... சிறிது நேரத்தில் அலுவலகத்தில் ஒவ்வொருவராக வர ஆரம்பித்தனர்.

அந்த அலுவலகத்தில் அவளுக்கென்று ஒரு அறை எல்லாம் இல்லை. ஒரு மூன்று பக்கங்களைக் கொண்ட தடுப்புச் சுவர் மட்டும்தான். தனியறை கேட்டு அர்ஜுனிடம் வாங்கிக் கட்டிக்கொள்ள விருப்பமில்லாததால் அவளும் போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து என்று வாழ்ந்து கொள்ளப் பழகிவிட்டாள்.

சிறிது நேரத்தில் அவளுக்கு வேலைகள் குவிய ஆரம்பித்தன. அவளின் கைபேசி நிற்காமல் அலற ஆரம்பித்தது. இதில் பாரதியின் நிர்வாகத் திறனைப் பற்றிக் கூறியே ஆக வேண்டும். அர்ஜுனிடம் நேரம் பார்த்து எடுத்துக் கூறித் தங்கள் காரியத்தைச் செய்ய, பாரதிதான்

சரியான ஆள் என்பதால் எல்லோரும் அவள் மூலமாகத்தான் அர்ஜுனை நெருங்குவார்கள்.

ஒருவரையும் புண்படுத்தாத பேச்சும், புத்திசாலித் தனமும், நிறைய நகைச்சுவை உணர்வும் கொண்ட பெண்ணை யாருக்குத்தான் பிடிக்காது.

"நீங்க ஒண்ணும் கவலைப்படாதீங்க சார்... கூடிய சீக்கிரம் உங்க கோரிக்கையை அவர்கிட்ட சொல்றேன். ஆனால் எங்களுக்குத் தரம்தான் முக்கியம். அதில் நீங்க எதுவும் குறை வைக்காமல் தரணும்..." என்ற மறைமுக வேண்டுதலும்,

அதே சமயம் வேலையில் பின்தங்கியவர்களை, "சார்... உங்க வேலையில் நாங்க எந்தத் தவறும் சொல்லலை. ஆனா ரொம்ப லேட் ஆக்குறீங்களே... அதான் சாருக்குப் பிடிக்கலை. அதுக்கு நீங்க இப்படி பிரச்சினை பண்ணா எப்படி... சரி, சார். உங்களுக்கு இந்த ஒரு வாட்டி சான்ஸ் கொடுக்கிறோம். அதுக்கப்புறமும் நீங்க இப்படி செஞ்சா உங்க ஒப்பந்தத்தைப் பத்திக் கவலைப் படாமல் நீங்களே ஒதுங்கிடுங்க. ஆனா, இதுக்காக அடிக்கடி ஆபீஸுக்கு வந்து சாரைத் தொல்லை செய்றதை அவர் விரும்பலை..." என்று கண்டிப்பையும் சரிவிகிதத்தில் காண்பிக்கத் தெரிந்தவள் பாரதி. அர்ஜுன் போல் உணர்ச்சிவசப்பட மாட்டாள்.

அர்ஜுன் கூட, "நீ இப்படி வழிஞ்சாதான் எல்லாரும் உன் பின்னாடியே சுற்றுவாங்கன்னு நினைப்பா? எதுவா இருந்தாலும் வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டுன்னு முடிக்கிற பழக்கமே கிடையாதா உனக்கு...? தப்பு

செஞ்சவங்க கிட்ட போய் எதுக்குக் கெஞ்சிக்கிட்டு இருக்கே என்றே எனக்குத் தெரியலை. முன்ன பின்ன செத்தாதான் சுடுகாடு தெரியுங்கிற மாதிரி ஏதாவது கம்பெனியைப் பார்த்திருந்தால்தானே அதோட அருமை புரியும்..." என்று சீறினாலும்,

தன் வழக்கமான புன்னகையுடன், "ஆமா... சாரி. நான் கம்பெனியே பார்த்ததில்லை. படிச்சு முடிச்சதுமே எனக்கு வேலை கிடைச்சிடுச்சு. நான் எதுக்கு வேற கம்பெனிக்குப் போகணும்?" என்று அப்பாவியாகக் கேட்க,

அர்ஜுன் ஒரு கூர்மையான பார்வையுடன், "என்னடி குத்திக் காட்டுறியா?" என்று கேட்க,

பாரதி, "போங்க பாஸ்... எப்போ பார்த்தாலும் தப்புத் தப்பாப் புரிஞ்சிக்கிட்டு... என்னைக்காவது நான் சொல்ல வந்ததை உருப்படியாகச் சொல்ல விட்டிருக்கீங்களா?" என்று கூற,

அர்ஜுன் அவளைக் கையமர்த்தி, "அம்மா, தாயே... நீ ஒண்ணும் சொல்ல வேண்டாம். உன் வேலையை மட்டும் பாரு..." என்று கூற,

பாரதி வெளியேறாமல், "கண்ணா..." என்று அழைத்து ஒரு மாதிரி ஊடுருவும் பார்வையுடன் நாற்காலியில் அமர்ந்திருந்த அவன் அருகில் வந்தாள்.

இவ்வளவு நேரம் அவளை அதட்டிக் கொண்டிருந்த அர்ஜுன், இப்போது பதறி, "ஏய்... இப்போ எதுக்குக் கிட்டே வருகிற? எனக்கு இதெல்லாம் பிடிக்காது, போயிடு..." என்று மெல்லிய குரலில் கூற,

அதைக் கேட்காமல், பாரதி அவன் அருகில் வந்த வண்ணம் இருக்க... அர்ஜுனோ எச்சில் விழுங்கி, "ஏய்... உனக்கு என்ன ஆச்சு? கிட்ட வராதே. முதலில் வெளியே போ..." என்று அழுத்தமாகக் கூற,

பாரதி அவனைக் கண்டு கொள்ளாமல், அவன் அருகில் நெருங்கி வர, அவள் மூச்சுக் காற்று இவன் மேல் பட, அர்ஜுனின் முகம் நோக்கி அவள் குனிய... அவள் தன்னை முத்தமிடப் போகிறாள் என்று நினைத்து, அர்ஜுன்,

"பாரதி, இது ஆபீஸ். இதெல்லாம் தப்பு. பிஹேவ் யுவர்செல்ஃப்..." என்று தனக்கே கேட்காத குரலில் கூற,

பாரதி நமட்டுச் சிரிப்புடன் மனதுக்குள், "ஆனாலும் உனக்கு ரொம்ப ஆசைதான் கண்ணா..." என்று நினைத்துக் கொண்டு வெளியே அப்பாவியாக, அவன் பலவீனத்தை ரசித்துப் பின் அவன் முகத்தைத் திருப்பி, "பாஸ், உங்க தலைமுடி ஓரத்தில் இன்னும் ரெண்டு வெள்ளை முடி வந்திருக்கு பாஸ். போன வாரம் கூட ரெண்டுதானே இருந்தது. எனக்கு அது பிடிக்கலை. நான் வேணா உங்களுக்கு டை வாங்கிட்டு வரவா?" என்று தன் முட்டைக் கண்ணை உருட்டிக் கேட்க,

அர்ஜுனுக்கு உடம்பெல்லாம் தளர்ந்து போய், "சே..." என்றானது. பின் கண நேரத்தில் தன் முகத்தை மாற்றி, "இதுக்குத்தான் கிட்ட வந்தியா? உனக்கு அறிவே இல்லையா? முதலில் இதை உன் மர மண்டையில் ஏத்திக்கோ. இங்கே நான் பாஸ்... நீ பி..." என்று கூற வந்தவன் தடுமாற...

பாரதி, கலகலவெனச் சிரித்து, "சொல்லுங்க பாஸ்... அதான் வாய் வரைக்கும் வந்திருச்சே... நான் உங்க பி.ஏ.ன்னு சொல்லுங்க பாஸ்... ப்ளீஸ்!" என்று கெஞ்ச,

அவன் அதைக் கண்டு கொள்ளாமல், "அசிஸ் டெண்ட்... புரியலை... தமிழில் எடுபிடி. சரியா? அந்த இடத்தில் நீ நின்னா உனக்கும் நல்லது. எனக்கும் நல்லது..." என்று அவள் முகம் பார்க்காமல் திரும்பிக் கொண்டு கூறினான்.

பாரதிக்கு என்று ரோஷம் இருந்திருக்கிறது? அதே சிரிப்புடன், தன் வழக்கமான, "ஓ.கே. பாஸ்!" உடனே அதை ஏற்றுக் கொண்டு, "ஆனா பாஸ்... ஏதோ இது ஆபீஸ். இதெல்லாம் தப்புன்னு சொன்னீங்களே... அது என்ன தப்பு பாஸ்?" என்று மறுபடியும் தன் அப்பாவி முகத்தை வைத்துக் கொண்டு கேட்க, அர்ஜுனுக்குக் கோபம் பற்றிக் கொண்டு ஏறியது.

அவன் ஏதோ கூற வாயைத் திறப்பதற்குள்... பாரதியே, "கெட் அவுட். இதுதானே பாஸ்... நீங்க கஷ்டப்படாதீங்க பாஸ்... நான் உங்களுக்கு அதைச் சொல்ற கஷ்டம் கூடக் கொடுக்க மாட்டேன். ஏன்னா நான் உங்க பி.ஏ. பாருங்க..." என்று சிரிப்புடன் கூற,

அர்ஜுன் ஒன்றும் பேசாமல் கதவை நோக்கிக் கைகாட்ட... பாரதி சிரிப்புடன் அறையை விட்டு வெளியேற, அவளையே உணர்ச்சியற்ற பார்வை பார்த்துக் கொண்டிருந்தான் அர்ஜுன்.

இப்படியாகப் பெரும் மாற்றங்களின்றிச் சாதாரணமாகவே நாட்கள் கடக்க... பாரதியின் சேட்டைதான் குறைந்தபாடில்லை.

ஆனால் அர்ஜுனும் சளைத்தவனா என்ன? அவளின் குறும்புகளுக்கு அவ்வப்போது பதிலடி கொடுத் தாலும்... அவளும் தன் வழக்கமான அனைத்தையும் தன் சிரிப்பினால் மறைத்து ஜெயித்து வந்தாள்.

அப்படித்தான் ஒரு நாள்... காலையிலேயே ஒரு கோப்பில் அவசரக் கையெழுத்து வாங்க வேண்டியிருந்த தால், அவன் வீட்டிற்குச் சென்றிருந்தாள் பாரதி.

தாத்தா காபியுடன் அவளை உபசரிக்க... பொற் கொடி நாற்காலியை இழுத்துப் போட்டு, "என்னம்மா... இப்போவெல்லாம் நீங்க அடிக்கடி வீட்டுக்கு வருவதே இல்லை. நேத்துதான் தாத்தாகிட்ட சொல்லிட்டு இருந்தேன். நல்லவேளை, இன்னைக்கு நீங்களாவே வந்துட்டீங்க..." என்று மகிழ்ச்சியுடன் கூற,

பாரதி, மரியாதை நிமித்தமாகச் சிரித்து, "என்ன பண்றது பொற்கொடி... ஆபீஸில் இருக்கிற வேலைக்குப் பேசாமல் துணிமணியெல்லாம் எடுத்துட்டு அங்கேயே போய்த் தங்கிடலாமான்னு பார்க்கிறேன். ஹாஸ்டலுக்குப் போகவே நேரம் கிடைக்க மாட்டேங்குது. அதனாலதான் அடிக்கடி வரமுடியலை. ஆமா பொற்கொடி... உன் புருஷ னுக்கு உடம்பு சரியில்லைன்னு சொல்லி யிருந்தியே... இப்ப எப்படி இருக்கு?" என்று ஞாபகமாகக் கேட்க,

பொற்கொடி நெகிழ்ச்சியுடன், "அதுக்கென்னம்மா... நீங்க சொன்ன டாக்டர்கிட்டதான் கூட்டிட்டுப் போனேன்மா... கைராசியானவரு... மருந்து கொடுத்து இப்போ பரவா யில்லை. நேற்றிலிருந்து வேலைக்குப் போகுது. நீங்களும் உங்க உடம்பைப் பார்த்துக்கோங்க. நான் வந்த

அன்னைக்குப் பார்த்ததுக்கு இப்ப ரொம்ப இளைச்சிட் டீங்க...” என்று கரிசனமாகக் கூற,

பாரதி வாய் விட்டுச் சிரித்தாள். “அய்யோ... பொற்கொடி! உன் முதலாளி என்னடான்னா என்னைச் சாப்பாட்டு ராமின்னு திட்டிக்கிட்டு இருக்கார். நீ என்னடான்னா... இப்படிச் சொல்றே. அவர் மட்டும் இதைக் கேட்டார் என்று வைச்சிக்கோ... அன்னைக்கு மாதிரி சகாரா வெப்பப் புயல்தான் அடிக்கும். அப்புறம் பாரதிம்மா என் வேலையைக் காப்பாத்துங்கன்னு அழக் கூடாது. ஜாக்கிரதை!” என்று பொய்யாய் மிரட்ட,

பொற்கொடி, “போங்கம்மா... உங்களுக்கு எப்பவுமே விளையாட்டுதான். தாத்தாகிட்டயே கேட்போம். நீ சொல்லு தாத்தா... பாரதிம்மா இளைச்சிட்டாங்கதானே?” என்று மாணிக்கத்திடம் கேட்க,

மாணிக்கம் தாத்தா குறும்புச் சிரிப்புடன், “நீ ஒரு மாசத்துக்கே இப்படிச் சொல்றியே பொற்கொடி... நான் வேலைக்குச் சேர்ந்தப்போ பாப்பா இதை விடக் குண்டா கொழுகொழுன்னு இருந்துச்சு. கன்னம் ரெண்டும் புசுபுசுன்னு பூனைக்குட்டி போல இருக்கும். ஆனா, இப்போ அதில் பாதி கூட இல்லை. பாவம்... அவ்ளோ வேலை. அதுவும்தான் என்ன செய்யும்! சரியான நேரத்துக்குச் சாப்பிடாமல், தூங்காமல் உடம்பு விட்டுப் போச்சு...” என்று கம்மிய குரலில் கூற,

பாரதிக்கு அதெல்லாம் நினைவில் இருந்தாலும், வலுக்கட்டாயமாக விலக்கித் தள்ளி, தன் அரிதாரத்தைப் பூசி, “நான் டயட்டில் இருக்கேன் தாத்தா! நீங்க எதுக்கு

இவ்ளோ ஃபீல் பண்றீங்க... சிக்குனு இருந்தால்தானே இந்தக் காலத்துப் பசங்க எல்லாம் கொஞ்சமாச்சும் பார்ப்பாங்க..." என்று மிகவும் சோகமாகக் கூற,

பொற்கொடியும் தாத்தாவும் ஒரு கணம் திகைத்துப் பின் சிரித்து விட்டனர்.

தாத்தா அவள் தலையை ஆதுரத்துடன் கோதி, "சரியான போக்கிரி. உனக்கென்ன பாப்பா... உன் மனசுக்கு ராஜகுமாரனே வருவான்..." என்று அவர் சொல்லிக் கொண்டிருந்த வாய் முகூர்த்தம் அங்கே தடதடவென்று மாடிப்படி அதிர வந்து சேர்ந்தான் அர்ஜுன்.

தன் மாநிறத்திற்கு ஏற்ற சந்தன நிற ஃபார்மல் சட்டையில் ஆக்ஸின் நறுமணம் கமழ வந்தவன்... மற்றவர் கண்களுக்கு எப்படித் தெரிந்தானோ இல்லையோ... பாரதி யின் கண்களுக்கு மன்மதனாகத் தெரிய... தாத்தாவுடன் பேசிக் கொண்டிருந்தவள், "தா...பா...த..." என்று திணற...

தாத்தாவும் பொற்கொடியும் புரியாமல் அவள் கண்கள் சென்ற இடம் நோக்கிப் பார்த்தவர்கள்... அங்கே அர்ஜுன் வருவதைக் கண்டுகொண்டு, ஏதோ புரிந்து, தங்களுக்குள்ளேயே சிரித்துத் தங்கள் வேலையைப் பார்க்கச் சென்றனர்.

(சே... இப்படியா ஜொள்ளு விடுவே பாரதி!) அவள் திணறியதையும் மற்றவர்கள் கள்ளச் சிரிப்புடன் சென்றதையும் பார்த்த அர்ஜுனுக்கு ஏனோ உச்சி முதல் உள்ளங்கால் வரை பற்றிக் கொண்டு எரிந்தது.

வேகமாக அவள் அருகே வந்தவன், அவள் பார்வையைக் கண்டதும், "சந்தோஷமா... இப்ப

சந்தோஷமா? இப்ப வீட்டில் உள்ளவங்களுக்குச் சந்தேகம் வந்திடுச்சு. அப்படியே ஆபீஸில் இருக்கும்போது இப்படிப் பாரு... உருப்பட்டிரும்..." என்று சீறினான்.

பாரதி அப்போதுதான் தன் கனவிலிருந்து மீண்டு, மண்ணுலகிற்கு வந்தாள். தன் செய்கையை உணர்ந்து வெட்கி, "பாஸ்.... நான்..." என்று திணற,

அர்ஜுன் அவளைக் கையமர்த்தி, "ஒண்ணும் பேசாதே. வாயைத் திறந்தா நான் என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது..." என்று கத்தியவன், "அடியேய்... நீயெல்லாம் ஒரு பொண்ணு. சே... இப்ப எதுக்கு இந்தப் பார்வை பார்த்தே! என்ன... பார்வையாலேயே என்னை மடக்கலாம்னு திட்டமா? எல்லா ஆம்பளைங்க மாதிரி என்னை எடை போடாதே. இந்தப் பசப்புற வேலை எல்லாம் வேற யார்கிட்டயாவது வைச்சிக்கோ. சே.... உன்னை ஏதோ வித்தியாசம்னு நினைச்சேன். ஆனா நீயும் மத்தப் பொண்ணுங்க மாதிரின்னு நிரூபிச்சிட்டே..." என்று அவளைக் கடித்துக் குதற...

பாரதி என்றைக்கும் இல்லாமல் அன்று மனதளவில் மிகவும் காயப்பட்டாள்.

அவன் பேசிய பேச்சில் கிட்டத்தட்ட அதிர்ந்து, "பாஸ்... என்னையா தப்பா...." என்று திணற,

அர்ஜுன், "ஆமா. உன்னைத்தான் சொல்றேன். சே... ஆம்பளைங்களைப் பார்த்ததே இல்லையா? கொஞ்சம் கூட வெட்கமில்லாம..." என்று முடிப்பதற்குள்,

பாரதி இப்போது குரலை உயர்த்தி, "அர்ஜுன்..." என்று அழைக்க,

அவள் மாற்றத்தில் அர்ஜுனே குழம்பினாலும் வெளிக்காட்டிக் கொள்ளாமல், "என்ன அர்ஜுன்? நீ இருக்க வேண்டிய இடத்தை அடிக்கடி மறந்திடுற பாரதி... அதுதான் இதுக்கெல்லாம் காரணம். என்ன இப்படி எடுபிடியா இருக்கிறது கஷ்டமா இருக்கா? அதான் என்னைக் கல்யாணம் பண்ணி இதுக்கெல்லாம் எஜமானி ஆகிடலாம்னு பார்க்கிற!

"இதுக்குத்தான் நான் அன்னைக்கே சொன்னேன் பாரதி... உனக்கு இதெல்லாம் சரிப்பட்டு வராதுன்னு. நீதான் பிடிவாதமா நின்னே... இப்போ அனுபவிச்சுத்தான் ஆகணும். உன்னால முடியலைன்னா போயிட்டே இரு. அதுக்காக என்னை வளைச்சிடலாம்னு நினைக்காதே. அது உன்னால முடியாது..." என்று பேசிக்கொண்டே சென்றான்.

பாரதிக்கு அப்போதும் தன் மீதுதான் கோபம் வந்ததே ஒழிய... அவன் மீது வரவில்லை.

சே... ஏன் அவனை அப்படிப் பார்த்தோம்... என்று தன்னைத் தானே நொந்து கொண்டாள். அவள் பாழாய்ப் போன காதல் மனது, மருந்திற்குக் கூட அவன் மேல் கோபத்தைப் பிடித்து வைக்க மறுக்க... தன்னுடனே சண்டையிட்ட பாரதி, அவன் கூறியதை எல்லாம் புறம் தள்ளிவிட்டு, எல்லாப் பழியையும் தன்மீதே போட்டுக் கொண்டாள்.

பேசிக் கொண்டிருந்தவனைக் கையமர்த்தித் தன்மையாக, "சாரி பாஸ்... நான் செஞ்சது தப்புதான். இனிமேல் இப்படி நடக்காது. உங்ககிட்ட இனிமேல் இந்த

மாதிரி வம்பு பண்ண மாட்டேன். சத்தியம். இது சாதாரணமா இந்தப் பாரதி போடுற சத்தியம் இல்லை. நான் என் உயிரா நினைக்கிற உங்க மேல சத்தியமாச் சொல்றேன். இனிமேல் என்னால் உங்களுக்கு எந்தத் தொந்தரவும் வராது. ஆனா ஒண்ணு பாஸ்... என்னைக் கேவலம்னு சொன்ன வாயாலேயே... ஒரு நாள் உங்க வாயாலேயே என்னை நல்லவனு சொல்லுவீங்க. அந்த நேரம் சீக்கிரமே வரும். இப்ப இந்த ஃபைலில் கையெழுத்துப் போடுங்க..." என்று நீட்ட,

அர்ஜுன் ஒரு நிமிடம் அவள் பேச்சில், செய்கையில் குழம்பினாலும், சட்டென்று சுதாரித்து, அதை வாங்கிக் கையெழுத்திட்டவாறே... "அந்த நாள் என்னைக்கும் வராது. அந்த நம்பிக்கை எனக்கு இருக்கு..." என்று கூற, பாரதி மர்மச் சிரிப்புடன், "அது மட்டும் இந்த ஜென்மத்தில் நடக்காது பாஸ்... அந்த நாள் வந்தே தீரும்..." என்று அழுத்தமாகக் கூறி விட்டு, அங்கிருந்து சென்றாள்.

அன்றிலிருந்து முன்பு மாதிரி அவனிடம் வம்பு செய்வதை அடியோடு நிறுத்தினாள் பாரதி. வெறும் கேலி, கிண்டல். அவ்வளவுதான்.

அர்ஜுனே, "ஹப்பா... என்னா வீராப்பு! கண்ணைப் பார்த்துக் கூடப் பேச மாட்டேங்கிற. உனக்கு இவ்ளோ ரோஷம் இருக்கும்னு எனக்குத் தெரியாதே... நானே உன்னை நம்பிடுவேன் போலிருக்கு..." என்று அவளை நக்கலடிக்க...

பாரதி மென்மையாக, "அய்யய்யோ...! என்னை நம்பாதீங்க பாஸ். நான் இந்த பி.ஏ.வா இருக்கும்போது

தான் இப்படிக் கண்ணியமா இருப்பேன். வேற பி.ஏ.வா இருக்கும்போது என்கிட்ட இந்தக் கண்ணியத்தை எல்லாம் எதிர்பார்க்காதீங்க..." என்று பதில் கொடுத்துவிட்டுச் சென்றாள்.

அர்ஜுன் பல்லைக் கடித்து, "ஏய்... உன்னை எல்லாம் திருத்தவே முடியாது... சே..." என்று மேஜையில் குத்தித் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டது, வேறு விசயம்.

**அ**ன்று அதிசயமாகப் பாரதி சிறிது நேரம் ஓய்வு கிடைக்க... நெடுநாட்களுக்குப் பிறகு மதிய உணவு அறைக்கு வந்தவளை அனைவரும் வாயைப் பிளந்து பார்க்க...

அவளோ, "இப்ப எதுக்கு இந்த ரியாக்ஷன். சாப்பிடத்தானே வந்தேன். உங்களோட முடியலைடா சாமி!" என்று போலியாக அலுத்துக் கொண்டாள்.

வத்சலா, "ஏன் ஆச்சரியமா இருக்காது... நீ லஞ்சுக்கு வந்து எவ்ளோ நாளாச்சு தெரியுமா?" என்று கேட்டாள்.

அங்கே வந்த ரவியும் கண்களைக் கசக்கி... "நான் காண்பது கனவா இல்லை நிஜமா? பாரதியா நீ... அதுவும் லஞ்ச் ரூமிலயா?" என்று கேட்க,

நந்தினிதான் முன்வந்து, "சார், போதும். அவளை வாரினது.... பாவம், அவளே இன்னைக்குத்தான் சாப்பிட வந்திருக்கா... வா, பாரதி! நீ இல்லாமல் லஞ்ச் ஹவரே களை கட்டலை. உட்காரு..." என்று அழைக்க,

பாரதி, “மேடம்... அட்லீஸ்ட் நீங்களாவது என்னைக் கூப்பிட்டீங்களே! அது சரி. மாமி வத்தக் குழம்பு வாசனை தூள் கிளப்புதே. எனக்குத் தராமல் சாப்பிட ஆரம்பிச்சிட்டேள் பார்த்தேளா! என்கிட்ட இருந்து தப்பிக்க முடியாது. அதான் நான் வந்துட்டேன்...” என்று கூறி, உரிமையுடன் அவருடைய உணவை எடுத்துக் கொள்ள... வத்சலா சிரித்தார்.

ரவி, “மேடம், இன்னைக்கு நீங்க சாப்பிட்ட மாதிரி தான். அவள் உங்களோடதைக் கேட்ட மாதிரி நீங்க அவ ஹாஸ்டல் சாப்பாடைக் கேளுங்க. அவ கொடுக்கிறாளான்னு பார்க்கலாம்...” என்று கேட்க,

பாரதி முகத்தைச் சுழித்து, “ஈஈஈ... அது சாப்பிடப் பிடிக்காமல்தான் நானே உங்க சாப்பாட்டைப் பிடுங்கிச் சாப்பிடுறேன்... ஹாஸ்டலில் சாப்பிடுறதை விட்டுப் பல வருசமாச்சு. அது தெரியாம சின்னப் புள்ளத்தனமா பேசாதீங்க சார்...” என்று வாயடிக்க...

வத்சலா, “விடுங்க ரவி சார். அவள் ஆசையாச் சாப்பிடுறதே அழகு. நீ சாப்பிடு பாரதி...” என்று கூற, அங்கே கலகலப்பாக மதிய உணவு துவங்கியது.

பாரதி ரவியிடம், “ரவி சார்... அன்னைக்கு ஏதோ உங்க ரூமில் அவள் வருவாளா... அவள் வருவாளா? என்று சூர்யா மாதிரி கையைக் கையை ஆட்டி ஆட்டிப் பாடிக்கிட்டு இருந்தீங்க. என்ன சார், வீட்டுல பொண்ணு பார்க்கிறாங்களா?” என்று அவனைக் கிண்டலடிக்க... அங்கிருந்த அனைவரும் வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரித்தனர்.

ரவி அவளை முறைத்து, “அதெல்லாம் இல்லை. எனக்காவது கல்யாணமாவது... இதைக் கேளு பாரதி... நாலு நாளா ஸ்வீப்பர் கனகம்மா வரலை. ரூமெல்லாம் குப்பை. அந்த விரக்தியில்தான் பாடிக்கிட்டு இருந்தேன்...” என்று அப்பாவியாகக் கூற,

பாரதி கலகலவெனச் சிரித்து, “சே.... இவ்ளோதானா! நானும் என்னவோன்னு நினைச்சேன். பார்த்து சார்... இன்னொரு தடவை பாஸ் ஊரில் இல்லாத நேரமாப் பார்த்துப் பாடுங்க. அவர் மட்டும் பார்த்தார்... ‘நான் அடிச்சா தாங்கமாட்டே... நாலு மாசம் தூங்க மாட்டே... பாடிப் பாரு, வீடு போய்ச் சேர மாட்டே...’ என்று உங்க பாட்டுக்கு எசப்பாட்டு பாட ஆரம்பிச்சிடுவார்...” என்று கூற, அங்கே சிரிப்பலை அடங்க வெகு நேரமானது.

நந்தினி, “ஏய்... நம்ம ரிசப்ஷனிஸ்ட் ரீட்டா முடியை முழுசா கர்ல் (சுருட்டை) பண்ணியிருக்கா பார்த்தியா... அழகா இருக்குல்ல... ஆனா இதைச் சாக்கா வைச்சிட்டு ஓவரா அலட்டுறா!” என்று பாரதியின் காதில் ரகசியமாகக் கூற,

அதற்குப் பாரதி அவள் காதில், “பாவம் மேடம்... அதைச் செஞ்சிட்டு அவங்க படுகிற பாடு.. நேத்து ரெண்டு குருவி அவங்க தலையில் இருந்து பறந்து போச்சு, பார்க்கலையா நீங்க...” என்று சீரியஸான முகத்துடன் கூற, நந்தினிக்கு அதைப் புரிந்து சிரித்துப் புரையேறித் தண்ணீரைக் குடித்து அடக்குவதற்குள் போதும் போதும் என்றாகி விட்டது.

பாரதி இருக்கும் நேரத்தில் உணவு இடைவேளை இப்படித்தான் கலகலப்பாகச் செல்லும். ஒருவரை ஒருவர் கலாய்த்துக் கொண்டும் சிரித்துக் கொண்டும் நாட்டு நடப்புகளையும் அலுவலக நடப்புகளையும் அலசி முடிப்பதற்குள் உணவு தீருமோ இல்லையோ... உணவு இடைவேளை முடிந்துவிடும்.

இப்படி அவர்கள் அரட்டை அடித்துக் கொண்டி ருக்கும்போது வத்சலா திடீரென்று ஓடி வந்து, "பாரதி, பாஸ் வர்றார்.." என்று அறிவிப்புக் கொடுக்க...

பாரதியோ அலட்டிக் கொள்ளாமல், "வரட்டும் மேடம், பார்த்துக்கலாம்..." என்று அப்பளத்தைக் கடித்துக் கொண்டி ருந்தாள்.

ரவி, நந்தினியிடம், "ஆனாலும் இவளுக்கு ரொம்பத்தான் திமிர்..." என்று முணுமுணுக்க...

பாரதி, "திமிரெல்லாம் இல்லை சார். உங்க பாஸ் எந்த நேரம் என்ன செய்வார் என்று எனக்குத் தெரியும். அந்தத் தைரியம்தான்..." என்று கூற,

ரவி, "அப்போ இப்ப எதுக்கு பாஸ் இங்க வர்றார் என்று சொல்லு. நான் நீ சொல்றதை உண்மைன்னு ஒத்துக்கிறேன்..." என்று கூற,

பாரதி, "இதென்ன பிரமாதம்... வந்து, இங்க என்ன அரட்டை... வாங்குற சம்பளத்துக்கு வேலை பார்க்கணும்னு ஒரு எண்ணமே வராதா? அப்புறம் உங்ககிட்ட... இவ கூடச் சேர்ந்து உங்க பேரை நீங்களே கெடுத்துக்காதீங்க. ப்ளா ப்ளா... ப்ளா..." என்று கூற,

அதற்குள் கதவைத் திறந்த அர்ஜுன், "என்ன இங்க அரட்டை... வாங்குற சம்பளத்துக்கு வேலை பார்க்கணும்னு ஒரு எண்ணமே வராதா?" என்று ஆரம்பித்து, அவள் கூறியது போலவே கூற...

அங்கிருப்பவர்கள் சிரிப்பை அடக்குவதற்குள்... போதும் போதும் என்றானது. அது புரியாமல் அர்ஜுன் மேலும், "இவள்தான் உருப்படலை. இவகூட சேர்ந்து நீங்களும் உங்க பேரைக் கெடுத்துக்காதீங்க. இதை பாரு... இரண்டு நிமிஷத்தில் நீ என் கேபினில் இருக்கணும்... மைண்ட் இட்!" என்று ஃபைனல் டச்சாகக் கூறிச் செல்ல... அங்கிருந்த அனைவரும் வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரித்தனர்.

பின் பாரதி, "சரிப்பா. இப்போ நான் போகலைன்னா என் சீட்டு கிழிஞ்சிடும். நான் போறேன்..." என்று கூறி விட்டு ஓடினாள்.

பின் ஒன்றரை நிமிடத்திலேயே அவன் கேபினுக்குச் சென்றவளைப் பார்த்து முறைத்த அர்ஜுன், "ஆமா, தெரியாமல் தான் கேட்கிறேன். உன் வாய்க்கு ரெஸ்ட்டே கொடுக்க மாட்டியா? இந்த ஆபீஸில் உள்ள எல்லாரையும் கைக்குள்ள போட்ட திமிரு... சரி விடு. எனக்கு உன்கூடப் பேசக் கொஞ்சம் கூட விருப்பமில்லை. நீ சொல்ற புண்ணாக்குக் காரணம் கேட்கவும் பிடிக்கலை. இந்தா, இந்தப் பேப்பர்ஸில் கையெழுத்துப் போடு..." என்று நீட்ட, அவளும் மறுபேச்சுப் பேசாமல் அவன் நீட்டிய இடத்தில் படித்துக் கூடப் பார்க்காமல் கையெழுத்திட்டாள்.

இது எப்போதும் நடப்பதுதான். சில நேரங் களில் இது போல் ஏதாவது பேப்பர்களில் கையெழுத்து

வாங்குவான். அது என்னவென்று அவனும் கூறியதில்லை. அவளும் கேட்டதில்லை. ஏன் ஒரு பார்வை கூடப் பார்த்ததில்லை. அவன் மேல் அப்படி ஒரு குருட்டுத்தனமான நம்பிக்கை அவளுக்கு.

அதை வாங்கிய அர்ஜுன், "உனக்குக் கொஞ்சம் கூட அறிவில்லை. இப்படித்தான் படிச்சுப் பார்க்காமல் கையெழுத்து போடுவியா? எத்தனை வாட்டி சொல்லியாச்சு... படிச்சுப் பாரு... படிச்சுப் பாருன்னு..." என்று எரிந்து விழ,

பாரதி, தன் வழக்கமான புன்னகையுடன், "என்கிட்ட என்ன பாஸ் இருக்கு? என்னை ஏமாத்தி வாங்குறது... நீங்க கேட்டா நான் தரமாட்டேன்னா சொல்வேன். என்னை என்ன வேணா நினைச்சுக்கோங்க பாஸ்... நான் இந்த உலகத்தில் என்னை விட உங்களைத்தான் நம்புறேன். நம்புவேன்..." என்று கூறிவிட்டுச் செல்ல, அவள் பேச்சில் அயர்ந்து நின்றான் அர்ஜுன்.

அவள் அவன் மேல் வைத்திருக்கும் அபரிமிதமான நம்பிக்கையை... அளவில்லாத காதலை... அவன் குலைக்கும் நாள் நெருங்குகிறது என்பதை இருவரும் அறியவில்லை.

## 6

கனவு கண்டதிலே – ஒரு நாள்
கண்ணுக்குத் தோன்றாமல்
இனம் விளங்கவில்லை – எவனோ
என்னகந் தொட்டு விட்டான்!

வினவக் கண்விழித்தேன் - சகியே
மேனி மறைந்து விட்டான்;
மனதில் மட்டிலுமே - புதிதோர்
மகிழ்ச்சி கண்டதடி!

"ஹேப்பி பர்த் டே டியர் மகி செல்லோ... ஹேப்பி பர்த் டே யூ..." என்று பிறந்த நாள் பாடலையே சுப்ர பாதமாகப் பாடி மஹதியை எழுப்பிக் கொண்டிருந்தாள் பாரதி.

இதழ்களில் புன்முறுவல் தவழ... கண்களைத் திறந்த மஹதி, "அடடா... என்ன வேகம்! கூடவே இருக்கிற ஒரு உயிர்த் தோழிக்குப் பன்னிரண்டு மணிக்கு டாண்ணு விஷ் பண்ணாமல் ஆற அமர காலையில விஷ் பண்றே!" என்று சிறு பொய்க் கோபத்துடன் கேட்க... அவள் குரலில் இருந்தே அவளுக்குச் சிறிதளவும் கோபம் இல்லை என்பதை உணர்ந்த பாரதி சிரிப்புடன்,

"ஏன் சொல்ல மாட்டே... ராத்திரி பன்னிரண்டு மணிக்குத்தான் வினோத் முந்திக்கிட்டாரே... சரி, போனாப் போகுது, பிள்ளை ஃபோனை வைக்கும், அப்புறமா விஷ் பண்ணலாம்னு பார்த்தா பேசுறே... பேசுறே, விடியற் காலை மூணு மணிவரைக்கும் பேசுறே. காத்திருந்து சோர்ந்து போய்த் தூங்கியே போயிட்டேன். நியாயப்படி நான்தான் உன் மேல் கோபப்படணும்... அதுக்கு மாறா நீ கோபப்படுறே... எல்லாம் நேரம்டா சாமி..." என்று அலுத்துக் கொள்ள,

மஹதி அவள் கன்னத்தைப் பிடித்து, “அய்யோ! சாரிடி செல்லம்... நேத்துன்னு பார்த்து வினோத் ஃபோனையே வைக்க மாட்டேங்கறார்.... நான் என்ன செய்யறது...” என்று மெல்லிய வெட்கத்துடன் கூற,

பாரதி, “போதும்... போதும். பிறந்த நாள் அன்னைக்காவது பொய் பேசாம இரு. இந்தா, ஏதோ இந்த ரூம்மேட்டால முடிஞ்ச சின்ன கிஃப்ட்...” என்று கூறித் தான் வாங்கி வைத்திருந்த சுடிதாரை அவளுக்குப் பரிசாக அளித்தாள்.

கிளிப்பச்சையில் மெல்லிய சரிகை வைத்த அந்தக் காட்டன் சுடிதார் அவள் மனதைக் கொள்ளை கொள்ள... அப்படியே பாரதியைக் கட்டிக் கொண்டாள்.

மகி, “ரொம்ப அழகாயிருக்குடி. இன்னைக்கு நான் இதைத்தான் உடுத்துவேன்...” என்று கூறிவிட்டுத் தன் வேலைகளை ஆரம்பிக்க...

பாரதி அதில் நெகிழ்ந்தாலும், “மகி, இது ஒரு எழுநூறு ரூபாய் சுடிதார்தான். மாசக் கடைசி வேற. காசு குறைவாத்தான் இருந்தது. இது வேணாம்டி. அதான் வினோத் ஒரு அனார்கலி சுடிதார் வாங்கித் தந்தார் இல்லை... அதை உடுத்து. அது ரொம்ப அழகா இருக்கும்...” என்று தன் மன உறுத்தலைக் கூற,

மகி அவளை முறைத்து, “அதெல்லாம் முடியாது. எனக்குப் பிடிச்சதைத்தான் நான் உடுத்திப்பேன். இன்னைக்கு என் பிறந்த நாள். எல்லாம் என் இஷ்டப் படிதான் நடக்கணும். அது மட்டுமில்லை. இன்னைக்குச் சாயந்திரம் நீ எங்ககூடத்தான் டின்னர் சாப்பிடுறே.

சரியா... பாஸ் சொன்னார், அவர் சொன்னார்... இவர் சொன்னாருன்னு நீ வராமல் இருந்தே, நான் என்ன செய்வேன் என்று எனக்கே தெரியாது. புரியுதா?" என்று கட்டளையிட,

பாரதி அதிர்ந்து, "மகி, நோ. வாய்ப்பே இல்லை. பாஸ் விடவே மாட்டார். சாரி, மகி. நீங்க ரெண்டு பேரும் போய்ச் சாப்பிடுங்க. ஆனா ஒண்ணு. கண்டிப்பா எனக்குப் பார்சல் வாங்கிட்டு வரணும்..." என்று கண்ணடித்துக் கூற,

மஹதி, "இதைப் பாரு. இன்னைக்கு என் பிறந்த நாள். என் மனசைக் கஷ்டப்படுத்தணும்னு நினைச்சா நீ வராதே. நான் சந்தோஷமா இருக்கணும்னு நினைச்சா நீ வா... அவ்வளவுதான்!" என்று கூறிவிட, பாரதி என்ன செய்வதென்றே தெரியாமல் முழிக்க...

மஹதி,"அய்யோ... பாத்ரூமில் பக்கெட் வைக்க மறந்துட்டேன் பாரி. நான் இன்னைக்கு ஆபீஸ் போன மாதிரிதான். ஒருத்திகளும் விட மாட்டாங்களே...!" என்று பதற,

பாரதி சிரித்து, "பிறந்த நாள் மங்கையே... உன் பக்கெட்டை நான் ஏற்கெனவே வைச்சிப் பாத்ரூமில் இடம் பிடிச்சிட்டேன். நீ போய்க் குளிக்கிறது மட்டும்தான் பாக்கி. சீக்கிரம் போய்ப் பல் தேய்ச்சுக் குளி. அழுக்குப் பேபி. எனக்கு ஆபீஸுக்கு டைம் ஆச்சு. நான் கிளம்புறேன்..." என்று கூறிவிட்டுக் கிளம்ப,

மஹதி, "தேங்க்ஸ் பாரிக் குட்டி. நீ இல்லாட்டி நான் என்னதான் செய்யுறது... அதான் உன் பாஸும் உன்னை விட மாட்டேங்குறார். சரி, மறந்துடாதே. சாயந்திரம் ஏழு

மணி... டின்னர் ஓ.கே!" என்று கூறிவிட்டுக் குளியலறைக்கு விரைய,

பாரதி, 'அய்யோ... இந்த பாஸ் ராத்திரி பத்து மணிக்குக் கிளம்புறேன்னு சொன்னாலே முறைப்பார். ஏழு மணிக்கு பர்மிஷன் கேட்டால் ருத்ரமூர்த்தியாவே மாறிடு வாரே... பாரதி! இன்னைக்கு உனக்குச் சங்குதான்டி...' என்று நினைத்துக் கொண்டே, தன் ஸ்கூட்டியை உசுப்பினாள்.

தன் வேலை யெல்லாம் முடித்தவள்... மதியம் மூன்று மணி அளவில், "சரி... மெதுவாப் போய் அவர் மூட் எப்படி இருக்குன்னு பார்ப்போம். அப்படியே மூட் நல்லாவே இருந்தாலும்... உனக்கு பர்மிஷன் கிடைக்கப் போறதில்லைதான். இன்னைக்குக் கையில் காலில் விழுந்தாவது வாங்கிடணும். இல்லைன்னா மகி ஏர்லயே பறந்து பறந்து அடிப்பாள்..." என்று முணுமுணுத்தபடியே அவன் அறைக்குச் சென்றாள்.

ஞாபகமாகக் கதவைத் தட்டி, அனுமதி கேட்க...

"யெஸ்... கம் இன்..." என்று அதிகாரக் குரல் அவள் காதை நிறைத்தது.

குரலைக் கேட்டு நடுங்கியபடியே அவள் உள்ளே செல்ல... அங்கே என்றைக்கும் இல்லாத அதிசயமாகச் சிரித்தபடி தன் கைபேசியில் பேசிக் கொண்டிருந்தான் அர்ஜுன்.

அவன் சிரிப்பது எட்டாவது அதிசயத்தை விட அபூர்வமானது என்பதால் அவள் அதிர்ந்து போய்ப்

பார்க்க... அவளுக்கு அடுத்ததாகக் கதவைத் திறந்து கொண்டு வந்த ரவியும், அவளைப் போலவே குழம்பி நின்றான். பின் பாரதியின் காதில், "என்ன பாரி, இன்னைக்கு அதிசயமா சகாரா பாலைவனத்தில் சிரபுஞ்சி சாரல் அடிக்குது...!" என்று புரியாமல் கேட்க,

பாரதியும் தனக்குத் தெரியாது... என்று உதட்டைப் பிதுக்கினாள்.

பின் கைபேசியை வைத்த அர்ஜுன், "ரவி, அந்த ஸ்பின்னிங் மில் ஒப்பந்தம் நமக்குக் கிடைச்சிருக்கு. ரொம்ப நாள் கஷ்டப்பட்ட ஒப்பந்தம் இது. இப்ப ரொம்பச் சந்தோஷமா இருக்கு. அது சொல்லத்தான் உங்களைக் கூப்பிட்டேன். இதனால நமக்கு எவ்ளோ லாபம் வரும் தெரியுமா? நம்ம கோயம்புத்தூர் பிராஞ்சில் இன்னும் நிறைய ஆட்கள் வேணும் ரவி.

"சோ... அதுக்கு ஆள் எடுக்கிற வேலையை ஸ்டார்ட் பண்ணிடுங்க. அதுக்கப்புறம் இன்னொரு முக்கிய மான விஷயம்... நம்ம எம்ப்ளாயீஸ் எல்லாருக்கும் இங்க்ரீமெண்ட் கொடுக்கிறதா இருக்கேன். அதை எல்லா ருக்கும் கன்வே பண்ணிடுங்க..." என்ற சந்தோஷமான விஷயத்தைக் கூற, பாரதி, ரவி இருவரின் முகமும் மலர்ந்தது.

பிறகு அர்ஜுன், "சரி ரவி... நீங்க போய் வேலையைப் பாருங்க. இதைச் சொல்லத்தான் கூப்பிட் டேன். நீங்க போகலாம்..." என்று கூற,

ரவி அங்கிருந்து வெளியேற... பாரதி அங்கேயே நின்றிருந்தாள். ஏதோ நிழலாட்டத்தில் அர்ஜுன் நிமிர்ந்து

பார்க்க... அங்கே திருட்டு முழியுடன் நின்றிருந்த பாரதியைப் பார்த்து முறைத்தான்.

பின் நக்கலாக, "என்ன பார்க்கிறே! நான் இங்க்ரீமெண்ட் என்று சொன்னது மத்தவங்களுக்குத்தான். உனக்கு இல்லை..." என்று குண்டைத் தூக்கிப் போட...

அவளோ அசால்ட்டாக, "எனக்கு என்னைக்கு பாஸ் இங்க்ரீமெண்ட் தந்திருக்கீங்க? இந்த ஆபீஸ்லயே ஒரே சம்பளத்தில் நாலு வருசமா வேலை செய்யுறது நான்தான். அது எனக்குத் தெரியாதா? அதை விடுங்க பாஸ்... நான் உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்..." என்று மெலிதாக ஆரம்பிக்க...

அர்ஜுன், "இதைப் பாரு. நான் இன்னைக்கு நல்ல மன நிலையில் இருக்கேன். தயவு செய்து அதைக் கெடுக்காமல் இங்கே இருந்து போயிடு..." என்று உணர்ச்சியற்ற குரலில் கூற,

பாரதி மனதளவில் மிகவும் காயப்பட்டாள். அங்கிருந்து கிளம்பிக் கண்காணாத இடத்திற்குப் போய் விடலாமா என்று கூட நினைத்தாள். ஆனாலும் ஒரு நிமிடம் மஹதியின் முகம் மனதில் வந்தது. அதே சமயம் தான் செல்லாவிட்டால் அவள் முகத்தில் ஏற்படும் ஏமாற்றமும் தோன்ற... அவளுக்குள் இருந்த ரோஷம் என்றால் என்னவென்றே தெரியாத பாரதி, 'எவ்வளவோ பண்ணிட்டோம். இதைப் பண்ண மாட்டோமா?' என்று சற்றே எட்டிப் பார்த்த ரோஷத்தைத் தலையில் தட்டி உட்கார வைத்து விட்டு, "ஹிஹி... சார், அது வந்து... வந்து... உங்ககிட்ட ஒண்ணு கேட்கணும்..." என்று வழிய, அதற்குள் அர்ஜுனின் கைபேசி சிணுங்க ஆரம்பித்தது.

பாரதி தந்த எரிச்சல் போதாதென்று இது வேறு அவனுக்கு எரிச்சல் தர... வேண்டாவெறுப்பாக அதை எடுத்துக் காதிற்குத் தந்தவன்... "ஹலோ!" என்று ஒரு வார்த்தைதான் கூறினான்.

அதற்குள் மறுமுனையில் ஒரு இளம் பெண் குரல், "அர்ஜுன், தயவு செய்து ஃபோனை வைக்காதே. நான் கொஞ்சம் பேசணும்..." என்று கூற,

அர்ஜுன் கோபத்தில் பல்லைக் கடித்து, "சே..." என்று கூறிக் கைபேசியை அணைக்க முயல...

"அர்ஜுன்... என் மேல் சத்தியம். ஃபோனை வைக்கக் கூடாது ப்ளீஸ்... நான் சொல்றதைக் கொஞ்சம் கேளு..." என்று மறுமுனை கெஞ்ச... அவள் குரலில் அவன் மறுகினாலும், வெளியே காட்டவில்லை.

பாரதிக்கோ ஒன்றும் புரியவில்லை. 'இவர் எதுக்கு இவ்ளோ டென்ஷன் ஆகிறார்...' என்று புரியாமல் அவனையே பார்க்க...

மறுமுனை என்ன கூறியதோ... அர்ஜுன் தன் கோபத்தைப் பிடித்து இழுத்து, "இதைப் பாரு, உங்க சங்காத்தமே வேண்டாம்னு நான் விலகிப் பல வருசம் ஆச்சு. என்னைத் துரத்தித் துரத்தி இருக்கிற நிம்மதியைத் தயவுசெய்து குலைக்காதே. நான் இப்போதான் கொஞ்சம் மறந்துட்டு இருக்கேன் எல்லாத்தையும். மறுபடியும் பழசை எல்லாம் ஞாபகப்படுத்தி என்னை மிருகம் ஆக்காதீங்க.

"அப்புறம் நான் என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது. மறுபடியும் என்னை உசுப்பி விட்டீங்கன்னா கொலை கூடச் செய்யத் தயங்க மாட்டேன். ஜெயிலுக்குப்

போறது எனக்கு ஒண்ணும் புதுசு இல்லை. அது உனக்கே தெரியும். ஞாபகம் வச்சிக்கோ..." என்று கத்திவிட்டு ஃபோனை வைக்க... பாரதிக்கு இப்போதுதான் அவன் யாரிடம் பேசுகிறான் என்று புரிந்தது.

அதை எண்ணிப் பழைய நினைப்பில் மனம் அதிர்ந்து சுருங்கினாலும், அதை மறைத்து, "பாஸ்..." என்று மென்மையாக அழைக்க... அவள் அழைப்பில் கரையத் துவங்கிய மனதை அடக்கி, "இதைப் பார்... இந்த விஷயத்தைப் பற்றிப் பேசுறதா இருந்தால் தயவுசெய்து வெளியே போயிடு. என்னைக் கொஞ்சம் நிம்மதியா இருக்க விடு... என் வாழ்க்கையில் சந்தோஷம் வருவதே பெரிய விசயம். அப்படியே வந்தாலும் அதைக் குலைக்கிறதுக்குன்னே இந்த மாதிரி ஆளுங்களை அனுப்பிடுறான், உங்க சோ கால்ட் ஆண்டவன். அதில் நீயும் ஒருத்தி..." என்று கத்த,

பாரதி அவன் கூறியதைக் காதில் வாங்காமல், மேஜையின் மேல் இருந்த தண்ணீரைக் காட்டி, "நான் கொடுத்தா குடிக்க மாட்டீங்க. நீங்களே அந்தத் தண்ணியைக் குடிச்சு ஆசுவாசப்படுத்திக்கோங்க..." என்று கூற, அவளை முறைத்த அர்ஜுன், "என்னடி நக்கல் பண்றியா?" என்று கேட்க,

பாரதி ஒரு விரக்திச் சிரிப்புடன், "முதலில் நீங்க உங்களை நம்பினால்தானே மத்தவங்களை நம்புவீங்க பாஸ். இப்ப இருக்கிற நிலையில் நான் என்ன பேசினாலும் தப்பாத்தான் தெரியும். எல்லார் மீதும் நம்பிக்கை யின்மைதான் தோணும். இப்போ மட்டுமா, நாலு வருசமா நான் அதைத்தானே அனுபவிக்கிறேன்.

“விடுங்க பாஸ். நீங்க ரெஸ்ட் எடுங்க. இல்லை, வீட்டுக்குக் கிளம்பிப் போய் உங்களுக்குப் பிடிச்ச பாட்டு ஏதாவது கேளுங்க. இல்லையா, எனக்குப் பிடிச்ச இளையராஜா பாட்டு கேளுங்க. மனசு லேசாயிடும்...” என்று புன்னகையுடன் கூறிவிட்டுத் தான் வந்த வேலையைச் செய்யாமல் அனைத்தையும் செய்துவிட்டுத் தன் இருக்கைக்குத் திரும்பினாள்.

அன்று ஏனோ அவனிடம் அனுமதி கேட்க விருப்பமில்லாமல் போக... வழக்கம் போல் பதினோரு மணிக்கு வந்த அறைத் தோழியைச் சினத்துடன் உறுத்து விழித்தாள் மஹதி.

அவளைப் பார்த்த பாரதி பயந்தாலும், வெளியே காட்டாமல், “ஹாய் செல்லம்... எனக்காக எதுக்கு வெயிட் பண்றே... தூங்க வேண்டியதுதானே?” என்று இலகுவாகக் கேட்க,

மஹதி எரிச்சலுடன், “இனிமே வர்ற நாளெல்லாம் நான் அதைத்தான் செய்யப் போறேன். உன்னைப் பத்திக் கவலைப்பட நான் யாரு... நீதான் என்னை ஒரு ஃப்ரெண்டாவே நினைக்கலையே... என்னைப் பத்திக் கொஞ்சமாவது நினைச்சிருந்தா... என் மேல் கொஞ்சமாவது அன்பு வைத்திருந்தால்... நீ இன்னைக்கு வராமல் இருந்திருப்பியா?

“உனக்கு நான் எவ்வளவு முக்கியம்னு நீ எனக்குத் தலையில் குட்டிச் சொல்லித் தந்துட்டே, தாயி... இனிமே நான் உன்னை எந்தத் தொந்தரவும் செய்ய மாட்டேன்...” என்று கையைக் கூப்பிக் கூற,

பாரதி, "மகி... சாரி மகி... என்ன நடந்ததுன்னா?" என்று ஆரம்பிக்க,

மஹதி, "நீ எதுவும் சொல்ல வேண்டாம். நீ சொல்ற நொண்டிச் சாக்கெல்லாம் கேட்டுக் கேட்டுச் சலிச்சுப் போச்சு. எத்தனை தடவை மூக்கறுப்பு பட்டாலும் எனக்கு அறிவே வரப் போறதில்லை. நீயும் நான் சொல்றதைக் கேட்கப் போறதில்லை. இனிமே நான் எதுவும் கேட்க மாட்டேன்..." என்று கத்த,

பாரதி, "மகி, என் நிலைமையைப் புரிஞ்சுக்கோ. இந்த ஒரு வாட்டி மன்னிச்சிடு. இனிமே இப்படி..." என்று கூறியவளைக் கையமர்த்தியவள்,

"ஒண்ணும் வேண்டாம். உனக்கு உன் ஆபீஸ்தான் முக்கியம். உன் பாஸ்தான் முக்கியம். அவரையே கட்டிக்கிட்டு அழு. பாவி, வினோத்தை விட நான் உனக்குத்தான் முக்கியத்துவம் கொடுத்தேன். ஆனா, நீ கேவலம் உன் முதலாளிகிட்ட என்னை விட்டுக் கொடுத்துட்டியே... உன்கிட்ட பேச எனக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கலை. நான் தூங்குறேன். போ...

"உன் பாஸ் நடுராத்திரியில் போதை தலைக்கேறி ஃபோன் பண்ணுவான். அவனுக்கு வழி சொல்லு!" என்று மேலும் பத்து நிமிடங்கள் கத்தி விட்டு ஓய்ந்து, தன் படுக்கையில் விழுந்தாள்.

அதுவரை மௌனமாக நின்ற பாரதிக்கு அப்போது தான் சுயநினைவு திரும்பியது. மரம் போல் நின்றிருந் தாளே ஒழிய... அவளைச் சமாதானப்படுத்த முயல வில்லை.

அவளுக்குத் தெரியாதா மஹதியைப் பற்றி...! என்னதான் அவளைத் திட்டினாலும் அவளால் பேசாமல் இருக்க முடியாது. இரண்டு நாளைக்குத்தான் அவள் கோபம் எல்லாம். பின் பாரதி லேசாக இருமினால் போதும். அவளுக்கு ஓடிவந்து பணிவிடை செய்ய ஆரம் பித்து விடுவாள்.

ஆனால் இப்போது சமாதானப்படுத்தச் சென்றால் அவளை அடக்குவது கஷ்டம் என்பதால், தன் மனதைக் கட்டுப்படுத்தித் தானும் படுக்கையில் விழுந்தாள்.

மஹதியும் பாரதியும் படுத்தார்களே தவிர, உறங்கவில்லை. மஹதிக்கோ அவள் உணவருந்த வராத ஏமாற்றத்தில் ஆற்றாமையில் உறக்கம் வரவில்லை.

ஆனால், பாரதியின் மனதில் ஆழ்கடலில் ஆழ்ந்திருந்து எழும் சுனாமி போல் காலையில் இருந்து சற்று முன்புவரை நடந்த நிகழ்ச்சிகள் அனைத்தும்... போதாக் குறைக்கு அர்ஜுனின் பேச்சுகள் உண்டாக்கிய காயமும் ஆறாமல் வாட்ட... பொங்கி வந்த கண்ணீரை முயன்று அடக்கியபடி படுத்திருந்தாள்.

'அழாதே பாரதி... நீ அழ மாட்டே. எந்தச் சூழ்நிலை வந்தாலும் சிரிச்சுக்கிட்டே சந்திப்பேன்னு திருவுக்குச் செய்து கொடுத்த சத்தியத்தை மறந்துட்டியா? இப்ப நீ அழுதா அது நீ இல்லை... திரு தோற்றுவிட்டதா அர்த்தம். தயவுசெய்து அழாதே...' என்று அழுகையை அடக்கத் தெரிந்தவளுக்கு, அந்தத் திருவின் நினைவுகளை அடக்கத் தெரியவில்லை.

அதை எல்லாம் நினைத்தபடி கண்களில் உறக்கத் திற்கான சாயல் சிறிதும் இல்லாமல் படுத்திருந்தவள்...

இரவு 12.30 மணிக்குத் தன் கைபேசியின் சிணுங்கலில் உயிர் பெற்றாள்.

மஹதியின் வாய் முகூர்த்தமோ, அல்லது பாரதி கெட்ட நேரமோ... அழைத்திருந்தது வேறு யாரும் இல்லை, அர்ஜுன்தான்.

அவன் பெயரைப் பார்த்து அதிர்ந்தவள், திரும்பி... மஹதியின் படுக்கையைப் பார்த்தாள். அவள் தூங்கவில்லை என்று அவளுக்கும் தெரியும். ஆனால் இந்த நேரத்தில் வெளியே போய்ப் பேச முடியாது. அதற்காக அவன் அழைப்பை எடுக்காமலும் இருக்க முடியாது. அவனிடம் மண்டை இடி வாங்குவதை விடத் தோழியின் திட்டு எவ்வளவோ மேல் என்று நினைத்துக் கைபேசிக்கு உயிர் கொடுத்தாள்.

மறுமுனையில் அர்ஜுன் தலைக்கேறிய போதையில் இருந்தான் என்பதை அறிந்து, பாரதி ஒன்றும் பேசாமல், "பாஸ்... உங்க கார் நாலாவது வரிசை..." என்று கூறி முடிப்பதற்குள்,

அர்ஜுன் இடைப் புகுந்து, "இல்லை... வீட்டுக்கு வந்துட்டேன்..." என்றான், மென்மையாக.

அவளுக்குத் தெரியும், அர்ஜுன் போதையில் இப்படித்தான் பேசுவான். காரணம் வேறு எதுவும் இல்லை. குற்ற வுணர்ச்சிதான். அப்போதுதான் அவனுடைய மென்மையான முகத்தைக் காட்டுவான். ஆனாலும் அவனால் அவளிடம் பேசாமல் இருக்க முடியாது.

பாரதி இப்போது குறும்பாக, "அடடே! வெரி குட் பாஸ். வீட்டுக்குப் போயிட்டீங்களே... அப்புறம் எதுக்கு ஃபோன் பண்றீங்க?" என்று கேட்க,

அதைக் கேட்ட மஹதி, கோபத்தில், "ஆமா. அவன் ஒலிம்பிக்கில் தங்கம் வென்றிருக்கான் பாரு. வெரிகுட் ஒண்ணுதான் குறைச்சல்..." என்று முணுமுணுத்தது, பாரதிக்குத் தெளிவாகக் கேட்டது.

சிரிப்பை அடக்கியபடி, அர்ஜுனிடம் மீண்டும் விசாரித்தவள்... அவனிடம் வந்த பதிலில் அதிர்ந்துதான் போனாள். அதாவது, "இல்லை... எனக்குத் தூக்கம் வரலை. நீதான் சொன்னியே இளையராஜா பாட்டு கேளுன்னு. என்கிட்ட அ...அந்தப் பாட்டெல்லாம் இல்லை. இப்ப நீ பாடு..." என்று கூற,

பாரதிக்கு நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக் கொள்ள, "பாஸ்... என்ன பாஸ், உளறாமப் போய்த் தூங்குங்க..." என்று அதட்ட,

அர்ஜுனுக்கு இப்போது கோபம் வந்து, "ஏய்... நான் உன் பாஸ். நான் சொன்னா நீ செஞ்சுதான் ஆகணும்... பாடு..." என்று கத்த.

பாரதிக்குச் சிரிப்பதா அழுவதா என்றே தெரிய வில்லை. "பாஸ்... எனக்குப் பாட்டெல்லாம் பாட வராது, பாஸ்..." என்று கெஞ்ச,

மஹதிக்குக் கோபம் தலைக்கேற, எழுந்து உட்கார்ந்து, பாரதியை முறைத்தாள்.

பின், "என்ன... பாடணுமா? வேணா... ஒண்ணு செய்யேன். இங்க கூப்பிட்டு உன் பாஸுக்குத் தொட்டில் கட்டித் தாலாட்டுப் பாடு..." என்று கத்த,

பாரதி ஒன்றும் பேசாமல், "ப்ளீஸ் மகி... கொஞ்சம் சும்மா இரு..." என்று சைகையாலேயே கைகூப்பிக் கேட்க,

மஹதி, "எக்கேடோ கெட்டுப் போ. இதெல்லாம் நல்லதுக்கு இல்லை..." என்று தலையில் அடித்துக் கொண்டு மீண்டும் படுக்க...

பாரதி, அர்ஜுனிடம், "பாஸ்... சத்தியமா எனக்குப் பாட்டெல்லாம் வராது. போய்த் தூங்குங்க பாஸ். இன்னைக்கு உங்களுக்கு ஜாஸ்தியாகிடுச்சு..." என்று கூற,

அர்ஜுன், "நீதானே சொன்னே... நீதான் செஞ்சாகணும். இப்போ நீ பாடல, நான் நேரா ஹாஸ்டலுக்கு வருவேன். எப்படி வசதி?" என்று குண்டைத் தூக்கிப் போட...

அதிர்ந்த பாரதி, "பாஸ்... இப்போ உங்களுக்கு என்னதான் வேணும்? ஏன் இப்படிப் பண்றீங்க?" என்று அயர்ந்த குரலில் கேட்க,

அர்ஜுன், "நான் இப்போ தூங்கணும். நீ பாடணும். அதுவும் நீ சொன்னியே இளையராஜா பாட்டு... அது... அது வேணும்..." என்று கூறினான்.

பாரதி, "சரி, பாடுறேன். ஆனா ஒரு தடவைதான். அப்புறம் தூங்கிடணும்..." என்று கூற,

அர்ஜுன், அந்தப் போதையிலும் கெத்தாக, "ஹ்ம்ம்... பார்க்கலாம்..." என்றான்.

பாரதி சிறிது நேரம் யோசித்து அவளுக்குப் பிடித்த பாட்டைப் பாடத் துவங்கினாள்.

"லாலி லாலி லாலி லாலி
லாலி லாலி லாலி லாலி
வரம் தந்த சாமிக்குப் பதமான லாலி
ராஜாதி ராஜனுக்கு இதமான லாலி
குறும்பான கண்ணனுக்குச் சுகமான லாலி
ஜகம் போற்றும் தேவனுக்கு வகையான லாலி...
ஆரிராரோ ஆரிராரோ
ஆரிராரோ ஆரிராரோ

கல்யாண ராமனுக்குக் கௌசல்யை நானே!
கல்யாண ராமனுக்குக் கௌசல்யை நானே!
யதுவம்ச வீரனுக்கு யசோதை நானே!
யதுவம்ச வீரனுக்கு யசோதை நானே!
கருயானை முகனுக்கு மலையன்னை நானே!
பார்போற்றும் முருகனுக்குப் பார்வதியும் நானே!
ஆரிராரோ ஆரிராரோ
ஆரிராரோ ஆரிராரோ!

ஆனந்தகண்ணனுக்கு ஆழ்வாரும் நானே!
ஆனந்தகண்ணனுக்கு ஆழ்வாரும் நானே!
ஸ்ரீராமன் பாடிவந்த கம்பநாடன் நானே!
ஸ்ரீராமன் பாடிவந்த கம்பநாடன் நானே!
ராமராஜனுக்கு வால்மீகி நானே!
ஆகாய வண்ணனுக்குத் தியாகய்யர் நானே!

வரம் தந்த சாமிக்குப் பதமான லாலி
ராஜாதி ராஜனுக்கு இதமான லாலி

குறும்பான கண்ணனுக்குச் சுகமான லாலி
ஜகம் போற்றும் தேவனுக்கு வகையான லாலி...
ஆரிராரோ ஆரிராரோ
ஆரிராரோ ஆரிராரோ!”

அந்தப் பாட்டைப் பாடி முடித்தவளுக்குத் தன்னை மீறி அழுகை பொங்கி வர... தன்னை மீறி ஆரிரா ரோவை மட்டும் கூறிக் கொண்டே இருந்தாள்.

மறுமுனையில் அர்ஜுன் உறங்க ஆரம்பித்ததை அவன் மெலிதான குறட்டையின் மூலம் உணர்ந்தாலும் ஏனோ கைபேசியை அணைக்க அவளுக்கு விருப்ப மில்லை.

கையில் கைபேசியை வைத்துக் கொண்டு சிலை போல் அமர்ந்து கண்ணீர் வழிய அவள் பாடிக் கொண் டிருக்க... அவளைப் பார்த்துக் கொண்டிருந்த மஹதி, அவள் பாட்டைப் பாடும் போது அவள் கண்களில் இருந்த தாய்மையும் பெருமிதமும் காதலும் கண்டு அதிர்ந்து விட்டாள்.

அவ்வளவு உணர்ச்சிவசப்பட்டு மஹதி இதுவரை பார்த்ததே இல்லை. வினோத்திடம் தனக்குக் கூட இவ்வளவு நாள் தோன்றாத தூய்மையான உணர்வு களைப் பாரதியின் முகத்தில் அன்று பார்த்தாள்.

அவளே அவனுக்கு, கௌசல்யை ஆகவும், யசோதையாகவும், ஆழ்வாராகவும், வால்மீகியாகவும் மாறி மாறிப் பாடியது போல் இருந்தது. அன்றைக்குத்தான் அவள் மூன்று வருடங்களாகப் பார்த்திராத பாரதியைப்

பார்த்தாள். அன்றுதான் அவளுக்குப் பாரதிக்கும் அர்ஜுனிற்கும் நடுவில் இருக்கும் உறவின்மீது சந்தேகம் வந்தது.

அந்த இரவும் அவளுக்கு உறங்கா இரவாகியது.

அது எத்தகைய உறவு? அதை எப்படி மஹதி அறிவாள்?

## 7

எண்ணும் பொழுதி லெல்லாம் – அவன்கை
இட்ட விடத்தினிலே
தண்ணென் றிருந்ததடீ – புதிதோர்
சாந்தி பிறந்ததடீ!
எண்ணியெண்ணிப் பார்த்தேன்; அவன்தான்
யாரெனச் சிந்தை செய்தேன்!
கண்ணன் திருவுருவம் – அங்ஙனே
கண்ணின் முன் நின்றதடீ...!

காலை படுக்கையை விட்டு எழ முடியாமல் தலையில் பாரம் கவிழ்த்தாற்போல் வலிக்க... மிகுந்த சிரமத்துடன் கண் விழித்தாள் பாரதி.

எப்போதும் எழும்வரை சோம்பலாய் எழுந்தாலும், எழுந்தவுடன் வரும் சுறுசுறுப்பு இன்று காணாமல் போய் அப்படியே உட்கார்ந்தபடி தன் தொடையைக் கட்டிக் கொண்டு, அமர்ந்திருந்தாள். ஏனோ மனதில் விரக்தியும் இயலாமையும் சூழ்ந்திருக்க... பார்வை இலக்கின்றி

வெறித்தபடி அமர்ந்திருந்தவளின் முன், 'ணாங்க்...' என்று காபிக் கோப்பையை வைத்தாள் மஹதி.

அந்தச் சத்தத்தில் பதறிப் போய்ச் சுயநினைவுக்கு வந்தவள்... "என்ன... என்ன மகி?" என்று திணற,

மஹதி கோபத்துடன், "ஆஹ்... ராத்திரி முழுக்கப் பாடி ரொம்பச் சோர்ந்து போயிருப்பீங்க இல்லை மேடம்... போதாக் குறைக்கு அழுகை வேற... அதான் காபி கொண்டு வந்தேன்..." என்று கடுகடு முகத்துடன் கூற, பாரதிக்கு இவ்வளவு நேரம் இருந்த மனநிலை மாறிச் சிரிப்பு வந்தது. இதுதான் மஹதி. கோபப்பட்டாலும் அவளுக்கு ஏதாவது ஒன்று என்றால் அவளால் தாங்க முடியாது... என்று பாரதிக்குத் தெரியும்.

இப்போது சந்தோஷத்துடன் பாரதி மஹதியைக் கட்டிக் கொண்டு, "தேங்க் யூ சோ மச் மகி செல்லம்..." என்று கொஞ்ச,

மஹதியும் இளகி, "போதும், போதும். நீ வேணா என்னை ஃப்ரெண்டா நினைக்காமல் இருக்கலாம். ஆனால் நான் உன்னை அப்படி நினைக்க மாட்டேன்..." என்று குத்தலாகக் கூற, பாரதி மௌனமாக எழுந்து, தன் வேலைகளைச் செய்தாள்.

அவளுக்குத் தெரியும். மஹதிக்கு ஏதோ சந்தேகம் வந்திருக்கிறது. அதான் இந்தக் குத்தல் பேச்சு என்று. சந்தேகம் சந்தேகமாகவே இருக்கட்டும். அதற்குத் தெளிவு கொடுக்க இது நேரமில்லை என்று நினைத்தவள்... "சரி மகி. நீ ரொம்பக் கோபமா இருக்கே. எனக்கு ஆபீஸுக்கு

டைம் ஆச்சு. நான் கிளம்பணும்... நான் வந்து உன்கிட்ட திட்டு வாங்கிக்கிறேன்..." என்று குறும்பாகக் கூறிவிட்டுக் குளியலறைக்குச் செல்ல...

மஹதி மர்மச் சிரிப்புடன், "போ... போ. நீ எவ்ளோ நாள்தான் என்கிட்ட இருந்து தப்பிக்க முடியும்! நீயாவே என்கிட்ட மாட்டுவே. அப்புறம் பார்ப்போம்..." என்று மனதுக்குள் கூறிக்கொண்டு தன் வேலைகளைச் செய்யத் துவங்கினாள்.

குளித்துக் கிளம்பி அலுவலகத்திற்கு வந்த பாரதி, தன் வேலைகளைச் செய்யத் துவங்க... சிறிது நேரத்தில் ஒவ்வொருவராக வருகை அளிக்கத் துவங்கினர்.

திடீரென்று அலுவலகத்தில் சலசலப்புத் தோன்ற... அவள் இருக்கைக்கு ஓடி வந்த ரவி, "பாரதி, நம்ம கம்பெனிக்குச் சிறந்த வளர்ந்து வரும் நிறுவனம்... அதாவது 'பெஸ்ட் அப்கம்மிங் ஃபார்ம்' அவார்ட் கிடைச்சிருக்கு. இப்போதான் தகவல் வந்தது..." என்று மகிழ்ச்சி பொங்கக் கூற,

பாரதி அதிர்ச்சியுடன், "சார்... நெஜமாவா சார்?" என்று கேட்க,

ரவி, "நெஜமா பாரதி... உன் மேல வேணா சத்தியம் பண்ணவா? சார் கூட ஃபோன் பண்ணிச் சொன்னார். சரி பாரதி... நான் ஒரு கிளையண்டைப் பார்க்கப் போறேன். சார் கேட்டால் சொல்லிடு..." என்று கூறிவிட்டுச் செல்ல, அவ்வளவு நேரம் அடங்கியிருந்த பாரதி... நேராக யாரும் பார்க்காமல் தன் கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்தாள்.

**சி**றிது நேரத்தில் ஓய்வறைக்குச் சென்று, தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு இருக்கையில் அமர... அனைவரும் அவளைச் சூழ்ந்து கொண்டனர்.

பெருமிதமும் சந்தோஷமும் பொங்க... அங்கு வேலை செய்தவர்கள் தங்கள் மலரும் நினைவுகளைப் பகிரத் துவங்கினர்.

"பாரதி, இனிமே உன் பாடுதான் திண்டாட்டம். வேலை மென்னியைத் திருகிடும்..." என்று சிலர் வருத்தப்பட,

அவளிடம் வந்த நந்தினி, அவள் கையைப் பிடித்துக் கொண்டு, "எவ்ளோ பெருமையா இருக்கு இல்லை... ஒரு வருசம் முன்னாடி ஏதோ ஒரு கம்பெனி என்று வேண்டா வெறுப்பாத்தான் சேர்ந்தேன் பாரதி...

"வந்த முதல் நாள் நீ ஒரு வார்த்தை சொன்னியே... ஞாபகம் இருக்கா? 'மேடம், உங்களுக்குக் கொஞ்சம் விருப்பமில்லாத மாதிரி இருக்கு. சின்னக் கம்பெனியா இருக்கேனு நினைக்காதீங்க. இந்தக் கம்பெனியைப் பெரிய கம்பெனியாக நான் கண்டிப்பாக மாத்துவேன் என்று நினைக்கணும். யார் கண்டா, உங்களாலதான் இந்தக் கம்பெனி முன்னேறணும்னு இருந்தால் அதை யாரால மாத்த முடியும்....' அப்படின்னு சொன்னியே! ஞாபகம் இருக்கா? அப்படியே நடந்திருச்சு. ஆனால் அதுக்குக் காரணம் கண்டிப்பா நான் இல்லை பாரதி... நீதான்..." என்று நெகிழ்ச்சியாகக் கூற,

பாரதி நெளிந்து, "என்ன மேடம், இப்படிச் சொல்றீங்க! இது மட்டும் பாஸ் காதில் விழுந்தது...

அவ்வளவுதான். அவரால்தான் மேடம் இந்த வளர்ச்சி...” என்று கூற,

நந்தினி, “இந்தக் கம்பெனி வேணா அவரோடதா இருக்கலாம் பாரதி. ஆனா, ராவு பகலா வேலை செஞ்சு இந்த ஆபீஸ் தொடங்கின நாளில் இருந்தே நீ உழைச்ச உழைப்புக் கொஞ்ச நஞ்சம் இல்லை...” என்று கூற,

வத்சலாவும் அதை ஆமோதித்தார். “அது உண்மைதான்டிம்மா. இல்லைன்னா... அந்தத் துர்வாச முனிவர் கூட இவ்ளோ நாள் வேலை பார்த்துக் கழிச்சிருப்பியா? கண்டிப்பா இந்த வெற்றிக்குக் காரணம் நீதான்...” என்று ஆச்சரியப்பட...

பாரதி காதுகளைப் பொத்தி, “போதும்... போதும். நீங்க வைக்கிற புகழ் மழையில் நான் மூழ்கிடுவேன் போல இருக்கு. நீங்க இப்படி எல்லாம் பேசினா எனக்குத் தலைக்கனம் வந்திரும். என் குணம் மாறிடும். ப்ளீஸ் பா... எல்லாரும் உழைச்சோம். எல்லாரும் ஜெயிச்சோம். சரியா?” என்று கெஞ்ச, அவள் குறும்பில் அனைவரும் கலகலவெனச் சிரித்தனர்.

அப்போது அங்கே வந்து சேர்ந்தான் அர்ஜுன். வழக்கத்திற்கு மாறாக அவன் முகத்தில் சந்தோஷம் கூத்தாடியது. எதையோ சாதித்து விட்ட திருப்தி அவன் முகத்தில்...

அவன் முகத்தில் தோன்றி இருக்கும் உணர்வுகளை இன்ச் இன்ச் ஆகக் கண்டுகொண்டாள் பாரதி. அவளுக்குத் தெரியும். இன்று அவன் மனம் ஆனந்தக் கூத்தாடும்

என்பது. அர்ஜுன் பட்ட துன்பத்திற்கெல்லாம் இன்றுதான் பரிசளிக்கும் நாள். மொத்தத்தில் இன்றுதான் ஆறு வருடம் கழித்து, அவன் உயிர்த்தெழுந்திருக்கிறான் என்பது...

அவன் பட்ட துன்பத்தை எல்லாம் நினைத்து அவள் மனதில் இவ்வளவு நாள் அழுத்திக் கொண்டிருந்த துன்பம் எல்லாம் இன்று பறந்தோடி விட... அவளும் அவனோடு சேர்ந்து புதிதாகப் பிறப்பெடுத்திருந்தாள்.

சந்தோஷம் மின்னும் முகத்துடன் வந்தவன், அலுவலகத்தின் நடுவில் நின்றுகொண்டு, "எல்லாருக்கும் விஷயம் தெரியும்னு நினைக்கிறேன். நம்ம கம்பெனிக்குச் சிறந்த வளர்ந்து வரும் நிறுவனம் என்ற விருது கிடைக்கப் போகுது. நான் உங்க எல்லாரையும் ரொம்பக் கடிந்து பேசியிருக்கேன். யாருக்கும் என்மேல நல்ல அபிப்பிராயம் இல்லைன்னு எனக்குத் தெரியும்.

"ஆனால், அதை எல்லாம் கவலைப் படாமல் கையாண்டு இந்தக் கம்பெனியை இந்த நிலைமைக்குக் கொண்டு வந்த எல்லாருக்கும் நன்றி. இன்னைக்குச் சாயந்திரம் ஹோட்டல் சோழாவில்தான் விழா நடக்குது. அதுக்கு எல்லாரும் வரணும். அதனால் இன்னைக்குக் கம்பெனி விடுமுறை. எல்லாரும் வீட்டுக்குப் போய் உங்கள் குடும்பத்தோட விழாவில் கலந்துக்கணும்.

"அதுமட்டுமில்ல... அடுத்த வாரம் நம்ம கம்பெனி சார்பா மூணு நாள் ஊட்டி டூர் அரேஞ்ச் பண்ணலாம்னு முடிவெடுத்திருக்கேன். இவ்வளவு நாள் என்னைச் சகிச்சுக்கிட்டு என்கூட இருந்த எல்லாருக்கும் என் சின்னப் பரிசு..." என்று நிறுத்தியவன், பின், "அது மட்டுமில்லை. இந்த வெற்றிக்கு உறுதுணையாக இருந்த இங்கு வேலை

பார்க்கும் ரவி, நந்தினி, ரீட்டா, வத்சலா... (என்று காவலாளி பெயர் வரை கூறியவன்... மிகக் கவனமாகப் பாரதி பெயரைச் சொல்லாமல்) அனைவருக்கும் நன்றி. இந்த வெற்றிக்கு நீங்களும் காரணம். இன்னைக்குக் கண்டிப்பா மறக்காமல் விழாவுக்கு வந்துடுங்க. இப்போ நீங்க கிளம்பலாம்..." என்று கூற, அனைவரின் முகத்திலும் மகிழ்ச்சிச் சாரல் அளவில்லாமல் வீசியது.

ஆனால், அனைவருக்கும் பாரதியைப் பற்றி அவன் ஒரு வார்த்தை கூடக் கூறாமல் விட்டது நிறையவே நெருடல்தான்.

வத்சலா கவலையுடன், "என்னதான் இருந்தாலும் தன் பி.ஏ. தானே என்று ஒரு எகத்தாளம் அவருக்கு இன்னும் போகலை பாரேன். அப்படி என்ன பாரதி செஞ்சிட்டா அவருக்கு. வாட்ச் மேன் பேரைக் கூடச் சொல்றார். பாரதி பேரைச் சொல்ல மாட்டேங்கிறார்..." என்று அங்கலாய்க்க...

பாரதி, "அதை விடுங்க மேடம். என் வேலையை நான் செய்றேன்... அவர் சொல்லித்தான் செய்றேனா என்ன... நீங்க கிளம்புங்க. சாயங்காலம் கண்டிப்பா அந்த மயில் கழுத்து கலர் பட்டுப் புடவைதான் கட்டிக்கிட்டு வரணும். அப்புறம் அங்கிளையும் ராதாவையும் கூட்டிக் கிட்டு வாங்க. பாவம், அவங்களுக்கு ஒரு நாளாவது உங்க சாப்பாட்டில் இருந்து விடுதலை கிடைக்கும்..." என்று கண்ணடிக்க...

வத்சலா, "போடி வாலு. உனக்கு எப்போதான் கோபம் வரப் போகுதோ?" என்று சொல்லிக் கொண்டே கிளம்ப...

பாரதி சிரித்தபடியே நந்தினியிடம் திரும்பி, "என்ன மேடம் பார்க்கிறீங்க... இப்போவே கிளம்பினாத்தான் நீங்க மேக்-அப் செய்துட்டு வரச் சரியா இருக்கும். அப்புறம் மறந்துடாமல் அன்னைக்கு வாங்கினீங்களே... அந்த ஆன்ட்டிக் நெக்லெஸ். அதைப் போட்டுக்கிட்டு வாங்க... பாந்தமா இருக்கும்..." என்று கூற,

நந்தினி, "நல்ல வேளை ஞாபகப்படுத்தினே... அதை நான் மறந்தே போயிட்டேன்..." என்று கூறி, பின் குறும்பாக, "சும்மா சொல்லக் கூடாது. நல்லாவே பேச்சை மாத்துறே..." என்று அவள் தலையில் லேசாகக் குட்டிவிட்டுச் செல்ல... பாரதி கலகலவெனச் சிரித்தாள்.

பின் பியூன் ராமு வந்து அவளிடம், "மேடம், சார் கூப்பிடுறாங்க..." என்று அழைக்கவும்,

நந்தினி, "போச்சுடா. இன்னைக்குக் கூட உனக்கு லீவ் இல்லை போலிருக்கு..." என்று அலுத்துக் கொள்ள,

பாரதி, "அதெல்லாம் இல்லை மேடம்... இன்னைக்கு ஏதும் வேலை இல்லை. நான் கிளம்பத்தான் போறேன். சும்மா கூப்பிட்டிருப்பார்..." என்று கூற,

நந்தினி, "ஓஹ்... எனக்குப் புரிஞ்சிடுச்சு. உன்னைத் தனியாப் பாராட்டி ஏதோ கிஃப்ட் தரத்தான் கூப்பிடுறார் போலிருக்கு. சரி, நீ போ. சாயங்காலம் உன்னைக் கவனிச்சிக்கிறேன்..." என்று சந்தோஷமாகக் கிளம்ப...

பெருமூச்சுடன், 'ஆமா. அவர் கிஃப்ட் தந்து நான் வாங்குறது இந்த ஜென்மத்தில் நடக்காது...' என்று மனதுக்குள் கூறிவிட்டு, பாரதி திரும்பி, "இதோ வர்றேன்

ராமுண்ணா... நீங்க கிளம்புங்க. சாயந்திரம் உங்க குழந்தைகளைக் கண்டிப்பா கூட்டிட்டு வாங்க. சின்னவளைப் பார்த்து ரொம்ப நாளாச்சு..." என்று கூற,

ராமு, "சரிங்கம்மா..." என்று நெகிழ்ச்சியுடன் கூறிவிட்டு, அங்கிருந்து கிளம்பினான்.

பாரதிக்கு அர்ஜுனின் அறையின் அருகில் செல்லச் செல்ல ஏதோ ஒரு தயக்கம் சூழ்ந்துகொண்டது. இதுவரை ஆயிரக் கணக்கான தடவை அவன் அறைக்குச் சென்றிருக்கிறாள்தான். ஆனால் இன்று இருவருக்குமே உணர்ச்சிகரமான நாள். அதனால்தானோ என்னவோ அவளுக்குக் கால்கள் தளர்ந்து போய்விட்டன. ஆனாலும் ஏதோ சமாளித்துக் கொண்டு அவன் அறைக் கதவைத் தட்டி, "சார், மே ஐ கம் இன்..." என்று கேட்டு, அவன் அனுமதி அளித்ததும் உள்ளே சென்றாள்.

அங்கே அர்ஜுன் ஜன்னலைப் பார்த்தபடி சாய்ந்து நிற்க, பாரதி சூழ்நிலையை மாற்ற வேண்டி, "கங்கிராட்ஸ் பாஸ்... சாதிச்சிட்டீங்க. எனக்குத் தெரியும் பாஸ்... நீங்க சாதிப்பீங்கன்னு..." என்று வளவள என்று பேச, அர்ஜுன் அவளை முறைத்தான்.

பின் அவள், "பார்த்தீங்களா பாஸ்... நான் நேத்து பாடிய பாட்டு எவ்ளோ ராசி..." என்று ஆரம்பிக்க,

அர்ஜுன் பல்லைக் கடித்து, "ஷட் அப்!" என்று கத்த, பாரதி அதிர்ந்து போய் நிற்க...

அவனோ, "வாய் ஓயாமல் பேசுறதுக்கு உனக்கு வலிக்கவே செய்யாதா? உன் பேரைக் கூடச் சொல்லாமல்

உன்னை அங்கே அவமானப்படுத்தினேன். மானம் உள்ளவளா இருந்தா... இதோ இப்பவே ஆபீஸை விட்டுப் போயிருப்பாள். ஆனா நீ... எதுக்காக என்னைச் சுத்திச் சுத்தி வர்ற?" என்று கத்த, பாரதி வாய் பேச முடியாமல் நின்றாள்.

அர்ஜுன் அவளைப் பேசவிடாமல் வாயாலேயே அவளைச் சுட்டுப் பொசுக்கியிருந்தான்.

"சரி. நீ போக மாட்டே. இங்கேயேதான் இருந்து என் உயிரை எடுப்பே இல்லை. இருந்துட்டுப் போ. எல்லாம் என் தலையெழுத்து..." என்று அவள் மனதைக் காயப்படுத்தியவன், பின், "சரி... நான் இன்னைக்கு விழாவில்..." என்று ஆரம்பித்து, அவள் கைப்பையைப் பார்த்தவன்...

"ஓஹோ... மேடம் கிளம்பிட்டீங்களோ? நான் லீவ் சொன்னது மத்தவங்களுக்குத்தான். உனக்கு இல்லை... லீவ் வேணும்னா எதுக்கு ஆபீஸுக்கு வர்ற... ஜாலியா வீட்டுலயே இருக்க வேண்டியதுதானே... டைம் பாஸுக்கு வந்து ஏன் என் கழுத்தை அறுக்கிறே?" என்று கத்திவிட்டுத் திரும்ப... அங்கே பாரதி இல்லை.

அவன் கேள்வியுடன் வந்து வெளியே பார்க்க... அங்கே தன் இருக்கையில் அமர்ந்து ஏதோ கணினியில் டைப் அடித்துக் கொண்டிருந்தாள்.

அவனுக்கு அவள் செயல் எல்லாம் புதிராக இருக்க... ஒன்றும் பேசாமல் அரை மணி நேரத்தில் வந்து, அவனிடம் அவன் பேசப் போகும் பேப்பரைத் தந்தவளிடம்,

நக்கலாக, "என்ன ராஜினாமா கடிதமா?" என்று அர்ஜுன் கேட்க,

"அதுக்குள்ளே தர மாட்டேன் பாஸ்... அதுக்கு இன்னும் நேரம் இருக்கு. இது நீங்க பேசவேண்டிய ஸ்பீச் பாஸ்... கொஞ்சம் பரவாயில்லாம எழுதியிருக்கேன். படிங்க... கொஞ்சம் மெதுவாப் பேசுங்க பாஸ். எப்பவும் பேசுற மாதிரி வேகமாப் பேசாதீங்க..." என்று கூறிவிட்டு, அறைக் கதவுவரை சென்றவள்...

"அப்புறம் எப்பவும் போடுவீங்களே... ஒரு கிரே சூட்! அதைத் தயவுசெய்து போடாதீங்க பாஸ்... உங்களுக்கு நல்லா இருக்காது. ஏதோ சொல்லணும்னு தோணிச்சு... சொன்னேன். அப்புறம் என்னைப் புண்படுத்தணும்னு உங்களை நீங்களே தாழ்த்திக்காதீங்க பாஸ்... நான் எந்த இடத்தில் நிக்கணும்னு எனக்குத் தெரியும். நான் அப்படி ஒதுங்கும்போதுதான் உங்களுக்கு அந்த வலி தெரியும்..." என்று கூறிவிட்டுச் செல்ல... அவன் அவள் பேச்சிற்கு அர்த்தம் புரியாமல் விழித்தான்.

ஆனால், அன்று மாலையே அவன் கூறியதற்கான அர்த்தம் அவனுக்குப் புரிந்தது. அவள் அவன் சொல் படியே ஒதுங்கினாள்.

ஆனால் அவனால்தான் தாங்க முடியவில்லை.

ஆம். அனைவரும் வந்திருந்த அந்த விழாவிற்குப் பாரதி வரவில்லை.

நடுக் காட்டில் தனித்து விடப்பட்ட குழந்தை போல் திணறிப் போனான் அர்ஜுன்.

# 8

அம்மைக்கு நல்லவன் கண்டீர்! - மூளி
அத்தைக்கு நல்லவன், தந்தைக்கு மஃதே,
எம்மைத் துயர் செய்யும் பெரியோர் - வீட்டில்
யாவர்க்கும் நல்லவன் போலே நடப்பான்
கோளுக்கு மிகவுஞ் சமர்த்தன் - பொய்ம்மை
சூத்திரம் பழிசொலக் கூசாச் சழக்கன்;
ஆளுக் கிசைந்தபடி பேசித் - தெருவில்
அத்தனை பெண்களையும் ஆகா தடிப்பான்!
தீராத விளையாட்டுப் பிள்ளை - கண்ணன்
தெருவிலே பெண்களுக் கோயாத தொல்லை!

**அ**ன்று விழா நிறைவாகவே இருந்தது. நான்கு வருடங்களுக்கு முன்னால் அனைவரின் கேலிக்கும் நக்கல் பார்வைக்கும் ஆளான அந்த நிறுவனம், இன்று சிறந்து வளர்ந்து வரும் நிறுவனமாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறது. இதற்கு எல்லாம் முழுமுதற் காரணமாகத் தன்னையே நினைத்துக் கொண்டிருப்பவன் மகிழ்ச்சியில் திளைத்தும் பெருமிதத்தில் குளித்தும் இருக்க வேண்டும். ஆனால் அவனோ யாருக்கு வந்த விருந்தோ என்பது போல அமர்ந்திருந்தான்.

அந்த விருதை வாங்கியவனுக்கு ஏதோ தான் நடை பிணம் ஆகிவிட்டது போல ஒரு உணர்வு வந்திருந்தது. எவ்வளவோ மறைத்தும் நடித்தும் சாதாரணமாக இருக்க முடியவில்லை.

அவன் அந்த வளாகத்திற்கு வந்தவுடன் முதலில் தேடியது பாரதியைத்தான். 'எங்கே போனா... கொஞ்சம் முன்னாடியே வந்தால்தான் என்ன... சே! எல்லாத்தையும் சொல்லிச் சொல்லித்தான் செய்ய வைக்கணும்...' என்று கறுவியவனின் மூளைக்குத் தெரியவில்லை, அவன் அடிமை இன்று வரவே போவதில்லை என்பது.

அந்த எரிச்சலுடனே அவள் கைபேசிக்கு அழைக்க... எப்போதும் முதல் ரிங்கிலேயே எடுக்கப்படும் கைபேசி இன்று கேட்பாரற்று அணைந்து கிடந்தது.

பின் அந்த அழைப்பை ரத்து செய்து விட்டு இன்னொரு தடவை அழைக்க... அதுவும் ஸ்விட்ச் ஆஃப் என்று வந்தது.

இப்படிக் கிட்டத்தட்ட இருபது தடவையைத் தாண்டும் போதுதான் அவனுக்குச் சந்தேகம் எழுந்தது. மதியம் தான் கூறிய வார்த்தைகள் ஒவ்வொன்றாக ஞாபகம் வர... கூடவே அவளின் வார்த்தைகளும் ஞாபகம் வந்தன.

'நான் எந்த இடத்தில் நிக்கணும்னு எனக்குத் தெரியும். நான் அப்படி ஒதுங்கும்போதுதான் உங்களுக்கு அந்த வலி தெரியும்...'

அவனுக்கு வலித்தது. நிஜமாகவே வலித்தது. ஆனால், அதை வெளியே காண்பிக்க அவன் அணிந் திருந்த முகமூடி அனுமதி அளிக்கவில்லை.

எனவே, தன் வழக்கமான செயலாக அனைத் தையும் மனதில் அடியிலிட்டு மூடி... அங்கே விழா மேடைக்குச் சென்றான். தன்னைத் தானே ஒரு முறை

உற்றுப் பார்த்தான். கையில் அவள் தந்த பேச்சுரை இருந்தது. அவள் கூறியது போலவே சாம்பல் நிறமன்றி நீல நிற சூட் அணிந்திருந்தான். அப்போதுதான் யோசித்துப் பார்த்தான்.

'அவ அப்பவே முடிவு செய்திருக்கா. அதான் முதல்லயே எல்லாத்தையும் செஞ்சிருக்கா...' என்பது உறைக்க, விழாவும் ஆரம்பித்தது. ஆனால் அவனோ எதையும் கவனிக்கும் நிலையில் இல்லை. மேடையில் யாரோ ஒருவர் அவன் செயல் பெருமைகளைக் கூறிக் கொண்டிருக்க... அவனோ ஐம்பதாவது தடவையாகப் பாரதியின் கைபேசிக்கு அழைத்துக் கொண்டிருந்தான். எடுக்கப்படவில்லை.

ஆனால் முன்பு போல அவன் கோபத்தில் உடைக்கவில்லை. அப்போது பார்த்து அவள் அழைத்தால் என்ன செய்வது என்று நினைத்து உடைக்கும் எண்ணத்தைக் கைவிட்டான். ஆனால், அவன் நம்பிக்கை பொய்த்துப் போனது.

விழாவில் யாரோ அவனுக்குப் பூங்கொத்து, பொன்னாடை அணிவித்துக் கௌரவித்தனர். அதை வாங்கிப் பணிந்து கழற்றியவன், தன்னையும் மீறிப் பக்கத்தில் பாரதி இருப்பது போல், "ஏய்... இதை வாங்கு..." என்று கூற வந்து...பின் நாக்கைக் கடித்துக் கொண்டான்.

ஒரு வழியாக விழா நல்லபடியாக முடிய... அவனால் அங்கு நிற்க முடியவில்லை.

ஆற்றாமையும் இயலாமையும் போட்டி போட, "என்னைப் பழிவாங்கிட்டே இல்லை... என்னைத் தனியா

நிக்க வச்சிட்டே இல்ல..." என்று மறுபடி மறுபடி அதையே அசை போட்டவனை மேலும் உசுப்பேற்ற அவன் அலுவலக வேலையாட்கள் அனைவரும்,

"என்னாச்சோ... பாரதி வராதது விழா களை கட்டலை. அவள் இருந்தா பூனைக் குட்டி மாதிரி சுறுசுறுன்னு ஓடிட்டு இருந்திருப்பா. ம்ஹூம்... என்ன சொன்னாரோ நம்ம சார்...? கோவிச்சிக்கிட்டாளோ என்னவோ?" என்று வத்சலா நந்தினியிடம் புலம்ப...

நந்தினி, "இல்லையா. மேடம்...! காலையில அவளை எல்லார் முன்னாடியும் எவ்ளோ அவமானப் படுத்தினார். நல்லா வேணும். இப்படித் தேமேன்னு நின்னாத்தான் அவள் அருமை புரியும்..." என்று கூற,

வத்சலாவும், "ஆமா. நீங்க சொல்றதும் சரிதான். அவளும் மனுஷிதானே... சரி, வாங்கோ. நமக்கு எதுக்கு வம்பு!" என்று நகர,

அவனால் அதற்கு மேல் ஒரு நிமிடம் கூட இருக்க முடியவில்லை. ரவியிடமும் மற்றவரிடமும் ஏதோ காரணத் தைக் கூறிவிட்டு டிரைவர் சேகரை வெளியே பிடித்துத் தள்ளிவிட்டு... நேரே அவன் தன் காரை எடுத்துக் கொண்டு சென்றது, ஒரு மதுபானக் கடைக்கு.

ஆனால், அவனை இவ்வளவு தூரம் பாரதி வாட்டியது... அவன் மேல் இருந்த கோபத்தால்... அது மட்டுமன்றி திடீரென்று எட்டிப் பார்த்த ரோஷத்தால் என்று நீங்கள் நினைத்தால் உங்களைக் கட்டுப்படுத்திக் கொள் ளுங்கள். அது காரணம் இல்லை. அவள் வராததற்கு முழுக்க முழுக்கக் காரணம் மஹதிதான்.

என்றைக்கும் இல்லாமல் தனக்கு முன்னாடியே அறைக்கு வந்து சேர்ந்திருந்த பாரதியை ஆச்சரியமாகப் பார்த்த மஹதி... அவள் முகத்தை வைத்தே ஏதோ சரியில்லை என்று முடிவெடுத்தாள். படுக்கையில் கவிழ்ந்து படுத்திருந்த பாரதியை நெருங்கி அவள் மீது இருந்த கோபமெல்லாம் பறந்தோட, அவள் தலையைக் கோதி, "என்னாச்சு பாரி?" என்று கேட்க,

அவள் மஹதியை ஒரு பார்வை பார்த்து விட்டுத் தலையைத் தாழ்த்திக் கொண்டாள்.

அவளுக்கா தெரியாது, தன் தோழியைப் பற்றி... "என்ன உன் பாஸ் காய்ச்சி எடுத்துட்டாரா?" என்று தீர்க்கமாகக் கேட்க...

பாரதி அதிர்ந்து போய் அவளைப் பார்க்க, மஹதி சிரித்து, "என்ன பார்க்கிற! இவ்ளோ வருசமா உன்கூட இருக்கேன். உன்னைப் பத்தித் தெரியாதா? அதிசயமா சீக்கிரம் வந்திருக்கும்போதே எனக்குத் தெரியும். ஏதாவது பிரச்சினையா இருக்கும்னு..." என்று கூற, பாரதி தலையாட்டி அதை ஆமோதித்தாள்.

மஹதிக்குக் கோபம் தலைக்கேற, "என்ன நினைச்சிட்டு இருக்கார் அவர்... அவருக்கு என்ன நீ அடிமையா! என்ன மனுஷன் இவர்... கொடுக்கிற பிசாத்து சம்பளத்துக்கு இவ்ளோ வேலை வாங்கி அது மட்டும் போதாதுன்னு உன்னை அவமானப்படுத்துறார்.

"அதுமட்டுமா... உனக்குக் கொஞ்சமாச்சும் மரியாதை இருக்கா அங்கே... இதில் அப்பப்ப ராத்திரி வேற ஃபோன் பண்ணித் தொல்லை செய்துக்கிட்டு... நான் சொல்றேன்,

பாரி... நீ இந்த வேலையை விட்டுட்டு வா. இதை விடக் கைநிறையச் சம்பளத்தோட வினோத் கிட்ட சொல்லி நான் வேலை வாங்கித் தர்றேன்..." என்று கூற, பாரதியின் முகத்தில் ஒருவித ஏளனச் சிரிப்பு.

மஹதி, "என்னடி... முடியாதுன்னு பார்க்குறியா... என்னால் முடியாதுன்னு பார்க்குறியா? என்னால் கண்டிப்பா முடியும்டி. பார்க்குறியா! ப்ளீஸ் பாரி... சொல்றதைக் கேளு. நீ அவன்கிட்ட இனிமேலும் வேலைக்குப் போனேனு வை... அவன் உன்னைப் பேசிப் பேசியே சாகடிச்சிடுவான். ப்ளீஸ் பாரி... ஏதாவது பேசு பாரி... பேசு!" என்று உலுக்க,

பாரதி உணர்ச்சியில்லாத முகத்துடன், "மகி... நான் உன் மடியில் படுத்துக்கவா?" என்று கெஞ்சும் குரலில் கேட்க,

மஹதிக்கு அவளை என்ன செய்வதென்றே தெரியாமல் தலையாட்ட... பாரதியும் அவள் மடியில் படுத்துக் கொண்டாள். அவள் மனம் முழுதும் புழுக்கமாக இருந்தது.

காற்றுப் போக முடியாத ஜாடிக்குள் பல பொருட்களைப் போட்டு அடைத்தால் எப்படி இருக்குமோ... அப்படித்தான் இருந்தது. அதனால் அவளால் எந்த முடிவையும் எடுக்க முடியாமல் தடுமாறினாள்.

இப்படி யோசித்துக் கொண்டிருக்கும் வேளையில்... அவளுக்குத் தன்னை மீறி உறக்கம் வர, அப்படியே மஹதி மடியில் படுத்தவாறு உறங்கிவிட்டாள்.

மஹதியும் அப்படிச் சாய்ந்தவாறே உறங்கி விட... சரியாக ஏழு மணிக்குப் பாரதிக்கு விழிப்பு வந்தது. பதறி அடித்து எழுந்தவள், “ஐயோ மகி... ஃபங்ஷன் மகி... மறந்து போய்த் தூங்கிட்டேன். நான் போகணும்... மகி. இல்லைன்னா பாஸ் திட்டுவார்...” என்று பதற, அவளை உறுத்து விழித்தாள் மஹதி.

சிறிது நேரத்திற்கு முன்னால் வாழ்க்கையே முடிந்து விட்டது போல் பார்த்த பார்வை என்ன? இப்போ படுத்தும் அலப்பரை என்ன... என்று நினைத்தவள்... இதை இப்படியே விட்டால் தன் தோழிக்குச் சாகும்வரை புத்தி வராது என்பதை உணர்ந்து, “என்ன சொன்னே பாரி?” என்று புரியாதது போல் கேட்க...

அவளோ, “இன்னைக்கு அவார்ட் தர்றாங்க மகி... அதுக்குச் சோழாவில் ஃபங்ஷன். நான் போயே ஆகணும் மகி...” என்று மீண்டும் பதற, யாரும் எதிர்பார்க்காமல் அவள் கன்னத்தில் பளாரென அறைந்தாள் மஹதி.

சிறிது நேரம் பாரதிக்கு என்ன நடந்தது என்றே தெரியவில்லை. கண்களில் பொறி பறக்க... கீழே விழுந்தவளைத் தூக்கிப் படுக்கையில் அமர வைத்து, மஹதி கண்களில் கண்ணீர் வழிய... “ஏன்டி... ஏன்டி இப்படி இருக்கே... கொஞ்சம் கூடத் தன்மானமே கிடையாதா உனக்கு? அவன் உன்னை அசிங்கப்படுத்தினாலும் அவன் பின்னாடியே போற அளவுக்கு என்னடி இருக்கு அவன்கிட்ட... என்கிட்ட என்ன மறைக்கிறே?” என்று கேட்க,

பாரதி பொங்கிய அழுகையை அடக்க... உதட்டைக் கடித்துச் சிரமப்பட்டாள். அதைப் பார்த்த மஹதி, “ஓஹ்...

சொல்ல மாட்டே இல்லை. சரி, சொல்லாதே. ஆனா ஒண்ணு, நீ இன்னைக்கு எங்கேயும் போகக் கூடாது. இங்கேயேதான் இருக்கணும். மீறிப் போனா நான் என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது. ஞாபகம் வைச்சிக்கோ!" என்று கூறிவிட்டு, அவள் கைபேசியை எடுத்து ஆஃப் செய்யவும்... அர்ஜுன் அவளை அழைக்கத் துவங்கவும் சரியாக இருந்தது.

ஆனால் பாரதியோ விழிகளில் கெஞ்சலுடன், "மகி ப்ளீஸ்... நான் போகலைன்னா அவன் திகைச்சுப் போயிடுவான். இந்த ஒரு வாட்டி..." என்று கேட்க,

மஹதி நக்கலாக, "அவன் என்ன சின்னப் பாப்பாவா... வாயிலே விரல் வைச்சாக் கூடக் கடிக்கத் தெரியாமல் இருக்க...! போடி, போய் வேலையைப் பாரு. இன்னைக்கு உனக்கு பாஸும் கிடையாது. ஃபோனும் கிடையாது..." என்று மறுக்க...

அடுத்ததாக வந்த பாரதியின் அனைத்துக் கெஞ்சல்களும் கொஞ்சல்களும் தள்ளுபடி செய்யப்பட... பாரதி கோபத்தில் மூக்கு விடைக்கச் சென்று படுக்கையில் விழுந்தாள்.

அதைப் பார்த்த மஹதி, "ஆமா. என்கிட்ட மட்டும் கோபம், ரோஷமெல்லாம் வரும். ரொம்ப சீன் போடாதே..." என்று கூறி விட்டு வெளியேற...

பாரதி தன் இயலாமையை நொந்தபடி சலித்துக் கொண்டாள். ஆனால், அதோடு அவளின் நாள் முடிய வில்லை. இரவு பத்தரை மணிக்குப் போல மஹதியிடம்

வந்த பாரதி, "மகி, ஃபங்ஷன் எல்லாம் முடிஞ்சிருக்கும். தயவுசெய்து இப்பவாவது ஃபோனை ஆன் பண்ணு. இல்லை, முறைக்காதே. அண்ணன் ஏதாவது ஃபோன் செய்ததுன்னா...?" என்று தயங்கித் தயங்கிக் கேட்க...

அவள் கூறுவது சரி என்று நினைத்த மஹதி, கைபேசியை ஆன் செய்து கொடுக்கவும்... அடுத்த நிமிடம் அலற ஆரம்பித்தது.

மஹதி புரியாமல் பார்க்க... பதறிப் போய் உயிர்ப்பித்த பாரதியின் முகம் மறுமுனையில் கூறிய செய்தி கேட்டு வெளிறிப் போனது. அவள் முகமாற்றத்தைக் கண்டுகொண்டவள் அவள் அருகில் சென்று நிற்க...

பாரதி, "என்ன தாத்தா சொல்றீங்க... இன்னும் வீட்டுக்கு வரலையா? அவர் எப்போதும் லேட்டாத்தானே தாத்தா வருவார்..." என்று விசாரிக்க,

மறுமுனையில் தாத்தா, "இல்லை பாப்பா... சேகரைப் பிடிச்சு வெளியே தள்ளிட்டு அவரே வண்டியை எடுத்துட்டுப் போயிருக்கார். கண்டிப்பா குடிக்கத்தான் போயிருப்பார். குடிபோதையில் அவரே வண்டி ஓட்டிட்டு வந்தால் பெரிய ஆபத்தாச்சே பாப்பா... அதான் எனக்குக் கையும் ஓடலை. காலும் ஓடலை.." என்று பதற,

பாரதி, "என்ன தாத்தா சொல்றீங்க? அவரே வண்டியை ஓட்டிட்டுப் போயிருக்காரா?" என்று கேட்க,

மாணிக்கம் தாத்தா, "ஆமா பாப்பா. எனக்கு யாருகிட்ட சொல்றதுன்னே தெரியலை. சேகர் என்னை

வரவேண்டாம்னு அவனே தேடிப் போயிருக்கான். அதான் உனக்கு விவரம் சொல்லக் கூப்பிட்டேன். நீ இந்த ராத்திரியில் கிளம்பிடாதே பாப்பா... காலம் கெட்டுக் கிடக்குது. உன்கிட்ட சொல்லாமல் இருக்கிறது என்னவோ போல இருந்தது. அதான் சொன்னேன்..." என்று கூற,

பாரதி, "தாத்தா, நீங்க பதட்டப்படாதீங்க. கண்டிப்பா கிடைச்சிடுவார். நான் கிளம்பி வர்றேன்..." என்றாள்.

தாத்தா, "சொன்னாக் கேளு பாரதி. நீ வர வேண்டாம். பொம்பளைப் புள்ள..." என்று மறுக்க...

பாரதி, "அதெல்லாம் இல்லை தாத்தா. நான் இதைவிட எல்லாம் தாமதமாக வந்திருக்கேன்..." என்று கூறிவிட்டு அழைப்பை ரத்து செய்தவள் வேக வேகமாகச் செல்ல எத்தனிக்க... அப்போதுதான் மஹதியின் முகத்தைப் பார்த்தாள். அதில் கோபம் தாராளமாகவே தாண்டவமாடியது.

அதைப் பார்த்து ஒன்றும் கூறாமல் அவள் தளர்ந்து போய் அமர்ந்து விட்டாள். அவளால் இவளை மீறியும் செல்ல முடியவில்லை. அதே சமயம் அர்ஜுன் என்ன ஆனான் என்றே தெரியாமல் நிம்மதியாக இருக்கவும் முடியவில்லை. நட்பிற்கும் காதலுக்கும் இடையில் சிக்கி அயர்ந்து போய்ச் சிலை போல் அமர்ந்திருந்தவள் அருகில் சென்றாள் மஹதி.

அவள் தோளைத் தொட்டு, "என்ன உன் பாஸைக் காணோம்னு மேடம் கிளம்பிட்டீங்க போல..." என்று நக்கலாகக் கேட்க,

பாரதி பாவமாக, “இல்லை... நீ திட்டுவே. அதான்... நீ சொன்னாப் போறேன்...” என்று நப்பாசையுடன் அவள் முகத்தைப் பார்க்க...

மஹதி, “அப்போ நான் சொன்னால்தான் நீ போவே...” என்று மார்பில் கையைக் கட்டிக் கேட்ட விதத்தில் கிண்டல்தான் இருந்தது.

அதுகூடப் புரியாத பாரதி, ‘ஆம்...’ என்பது போல் தலையாட்ட...

மஹதியோ, “அப்போ சரி. நீ போகாதே. படுத்துத் தூங்கு...” என்று கூற,

“மகீஈஈ....” என்று கிட்டத்தட்ட பாரதி அலறினாள்.

பின் மஹதி சிரிப்புடன், “என்ன நீதானே சொன்னே... நான் சொன்னால்தான் போவேன்னு... நான் சொல்றேன், படுத்துத் தூங்கு...” என்று கூற,

பாரதியின் கண்கள் தாரை தாரையாகக் கண்ணீர் வார்த்தன. முகத்தை மூடிக் கொண்டு அழ ஆரம்பித்த வளைச் சிறிது நேரம் பார்த்துக் கொண்டே இருந்தாள் மஹதி.

மஹதி மனதுக்குள், ‘என்னை என்ன அவ்ளோ முட்டாள் என்று நினைச்சியா பாரி! அவனை நீ முதலாளியா மட்டும் நினைச்சிருந்தால் இன்னைக்கு இவ்ளோ துடிச்சிருக்க மாட்டே... உன் முகமே நீ பொய் சொல்றதைக் காட்டிக் கொடுக்குது. இப்போ கூட எனக்காக என் முகத்துக்காகத்தான் உன்னைக் கட்டுப்படுத்திக்கிட்டு இருக்கே. உன்னைச் சோதிக்கத்தான் நான் இன்னைக்கு

உன்னைத் தடுத்தேன். நான் உனக்கு வைச்ச டெஸ்ட்டில் நீ தோத்துட்டே. உன்மேல உள்ள சந்தேகம் நிரூபண மாயிடுச்சு...' என்று நினைத்தவள்,

அவள் அருகில் சென்று, தோளைத் தட்டி, "இப்போ எதுக்கு இப்படி அழற? என்னை வில்லி ரேஞ்சுக்கு ஆக்குற மாதிரி இருக்கு, நீ அழறது... என்ன பண்றது... நல்லதுக்கே காலம் இல்லை... சரி, நீ கிளம்பு.... உன் பாஸைத் தேடிப் போ..." என்று கூற, சிலிர்த்து எழுந்த பாரதி, அவள் காதுகளையே நம்ப முடியாமல் பார்க்க... மஹதி அவள் முகமாறுதலைப் பார்த்து, "அய்யோ... ஒரு வார்த்தையில் முகமே பிரகாசமாயிடுச்சு..." என்று கேட்க,

பாரதி, "மகி... நீ நிஜமாத்தான் சொல்றியா? நான் போகட்டா...?" என்று கேட்க,

மஹதி தலையாட்டி, "ஆமா. நீ போ... ஆனால் ஒரு நிபந்தனை!" என்று கூற, பாரதியின் முகம் கேள்விக் குறியைத் தாங்கி நின்றது.

மஹதி, "நானும் வருவேன். உன்னைத் தனியா விட்டுட்டு எனக்குத் தூக்கம் வராது. கொஞ்ச நாளாவே உங்க ரெண்டு பேரால என் தூக்கம் போச்சு. இன்னைக்கும் போகட்டும். ஆனா அது கொஞ்சம் பிரயோ ஜனமாவாவது இருக்கட்டும். நானும் வர்றேன்..." என்று கூற,

பாரதி தயங்கினாள். "இல்லை மகி... நான் மட்டும்னா பரவாயில்லை. நீயும் பிரச்சினையில் மாட்டி..." என்று ரொம்பவே திணறினாள்.

அதற்கு மஹதி, "போதும்... நீ எவ்ளோ நாள் தனியா நடுராத்திரி வந்திருக்கே. அப்படியே என்னைத் தூக்கிட்டுப் போயிடுற மாதிரி... நீ கிளம்பு. நானும் வர்றேன்..." என்று கூற,

பாரதி அவள் அன்பில் நெகிழ்ந்து, அவளை ஒரு முறை கட்டிக் கொண்டாள். அவளைப் பொய்க் கோபத் துடன் விலக்கி நிறுத்திய மஹதி, "போதும். ஐஸ் வைக்காதே. உன் பாஸ் எங்கே போனாருன்னு பார்ப் போம். வா... அவர்கிட்ட நாலு வார்த்தை நறுக்குன்னு கேட்கணும்..." என்று கூறி, அவளை அழைத்துக் கொண்டு சென்றாள்.

அவளை நிறுத்திய பாரதி, "மகி, இப்போ எப்படி வெளியே போறது? வார்டன் ஹாஸ்டலுக்கு லேட்டா வர்றது கூட ஒத்துக்கும். ஆனா வெளியே போக பர்மிஷன் கொடுக்காது..." என்று கூற,

மஹதி, "இப்போ யாரு அதுகிட்ட பர்மிஷன் வாங்கப் போறா?" என்று கண்ணடித்துக் கேட்க, பாரதி அவளைப் புரியாமல் பார்த்தாள்.

பின் கண நேரத்தில் அவள் வெளியேறி... பின்னால் சரியாகக் கவனிக்கப்படாமல் இற்றுப் போயிருந்த கேட்டை ஒரு தள்ளுத் தள்ள... ஒரு கையோடு கழண்டு வந்தது.

பாரதி, "அடிப் பாவி. இதை நான் பார்த்ததே இல்லையே..." என்று ஆச்சரியப்பட,

மஹதி, "இந்த ரகசிய வழிதான் இந்த ஹாஸ்டலில் உள்ளவங்களுக்குத் தங்கச் சுரங்கம் மாதிரி. இதைப் பத்தி

வெளியே மூச்சு விடக் கூடாது. இதைக் கழட்டுறது பெரிசில்லை. வாட்ச்மேனுக்குக் கொஞ்சம் கூடச் சந்தேகம் வராமல் இப்படி வைக்கணும். அதான் முக்கியம். நீயும் கத்துக்கோ!" என்று கூறிவிட்டுக் கற்றுக் கொடுக்க... பாரதியும் நல்ல பிள்ளையாய்க் கற்றுக் கொண்டாள். அப்படியே அந்தக் கேட்டைத் திறந்து கொண்டு அப்படியே வைத்து விட்டு அவர்கள் ஓடத் துவங்கினர்.

எங்கெங்கோ தேடித் தேடி அலைந்தனர் இருவரும். அவன் வழக்கமாகப் போகும் கிளப்களில் சென்று விசாரிக்க... அவன் அங்குமில்லை.

நல்ல வேளை சேகரும் துணைக்கு வந்ததால் அவர்களால் கொஞ்சம் தைரியமாகத் தேட முடிந்தது.

"சேகரண்ணா... ஏன் இப்படிச் செஞ்சார்? விழாவில் யாராவது ஏதாவது சொல்லிட்டாங்களா?" என்று கேட்க,

சேகர், "எனக்குத் தெரியாதுங்கம்மா. ஏதோ கோபமா வந்தார். நான் சுதாரிக்கிறதுக்கு முன்னாடியே என்னைத் தள்ளி விட்டுட்டுப் போயிட்டார். எனக்குக் கொஞ்ச நேரம் என்ன செய்யுறதுன்னே தெரியலை..." என்று வருந்திய வனைச் சமாதானப்படுத்திய பாரதி, "இவ்ளோ பெரிய ஊரில் நாம் எங்கே போய்த் தேடுறது?" என்று மலைப்பாக உணர்ந்தாள்.

ஊரெல்லாம் தேடிக் களைத்து... அவர்கள் நடை பாதையில் உள்ள இருக்கையில் அமர்ந்தார்கள்.

மஹதி, "சுத்திச் சுத்தி உங்க பாஸ் வீட்டுப் பக்கத் திலேயே வந்துட்டோம். அவர் எங்கேதான்டி போயிருப் பார்..." என்று கூற,

பாரதிக்கும் ஒன்றும் புரியவில்லை. மூவரும் சோர்வுடன் ஒருவரையொருவர் பார்க்க... பக்கத்தில் இருந்த பூங்காவில் ஒரு வித முனகல் குரல் கேட்டது.

"என்னை ஏமாத்திட்டே... என்னைப் பழிவாங்கிட்டே..." என்பதை யாரோ திருப்பித் திருப்பிக் கூறிக் கொண்டிருக்க,

பாரதி, "யாரோ முனகிற மாதிரி இல்லை... இந்தப் பார்க்கிலிருந்துதான் வருது..." என்று கூற,

சேகர், "பார்க்தான் பூட்டியிருக்கே மேடம்..." என்று யோசனையுடன் கூற,

மஹதி, "பூட்டியிருந்தால் என்ன... இந்தச் சுவரைத் தாண்டி உள்ளே போக முடியாதா? நானே தாண்டிடுவேன்..." என்று கூற,

சேகர் பதறி, "வேணாம்மா... அவன் யாரோ எவனோ... இருங்க. நானே பார்க்கிறேன்!" என்று கூறிவிட்டுத் தாவிக் குதித்து உள்ளே சென்றான்.

அங்கே ஒரு பலகையில் கவிழ்ந்து படுத்து எவனோ ஒருவன் முனகிக் கொண்டிருந்தான்.

சேகர், "சே... எவனோ தண்ணியடிச்சிட்டு படுத்திருக்கான் போலிருக்கு..." என்றவாறே அருகில் செல்ல, போகப் போகத்தான் அவன் பக்கவாட்டு முகம் நன்றாகத் தெரிந்தது.

அது வேறு யாருமல்ல... அர்ஜுன்தான் போதையில் புலம்பியவாறே படுத்திருந்தான்.

சேகர் பதறி, "இந்தம்மாவிற்கு எப்படி குரல் வைச்சே தெரிஞ்சது?" என்று ஆச்சரியப்பட்டு விட்டு, "மேடம்,

பாஸ்தான் மேடம். போதையில் படுத்திருக்கார்...” என்று கத்த,

பாரதி ஒரு நிமிடம் கூட யோசிக்காமல் சுவரேறிக் குதிக்க... மஹதி, “ஏய்... அடிப் பாவி. மெதுவாடி... விழுந்து வைக்காதே. இவளை வைச்சிக்கிட்டு நான் என்னதான் பண்றது?” என்று அவளும் அவள் பின்னோடே குதிக்க...

சேகர் அர்ஜுனைத் தூக்கப் பார்த்து முடியாமல் திணறினான்.

“ஏய்... என்னை விடுறா... என்னை விடு...” என்று தடுக்க...

பாரதி அவனிடம் சென்று, “பாஸ்... என்ன பாஸ் நீங்க... வாங்க பாஸ்.. சேகரண்ணா, தூக்குங்க...” என்று அவள் ஒரு பக்கக் கையைத் தூக்கிப் பிடிக்க,

அவள் முகத்தையே உற்றுப் பார்த்த அர்ஜுனின் முகம்... அந்தப் போதையிலும் பிரகாசமாகிப் பின் சுருங் கியது. அதைப் பாரதி கவனித்தாளோ... இல்லையோ... மஹதி நன்றாகவே கவனித்தாள். அதன்பின், “ஏய்... நீ எதுக்குடி வந்தே? நீதான் என்னை இன்னைக்கு அவமானப்படுத்திட்டு வராமல் இருந்தவள்தானே! உனக்கு என்னடி அக்...அக்கறை, போடி...” என்று உளற,

பாரதி, “ஆமா. வராமல்தான் இருந்தேன். அதுக் குன்னு வேலையை விட்டா போயிட்டேன். ஏன் எனக்கு மட்டும் கோபமே வராதா? நீ பேசுற பேச்சை எல்லாம் நான் பொறுத்துக்கணுமா என்ன...?” என்று அவளும் உணர்ச்சிவசப்பட்டுப் பன்மையில் இருந்து ஒருமைக்குத் தாவ... சேகர் ஆச்சரியப்பட்டான்.

ஆனாலும் ஒன்றும் பேசாமல், "சார்... வாங்க சார்... வீட்டுக்குப் போகலாம்," என்று அவனை அழைக்க...

அவனை விலக்கிய அர்ஜுன், "ஏய் விடுடா... யாரும் என்னைத் தொடக் கூடாது. என்னடி சொன்னே... வேலையை விடுவியா? வேலையை மட்டும் விடு. உன்னைக் கொலை பண்ணிடுறேன்..." என்று அவளிடம் கத்த,

பாரதி, "என்னமோ காலையில வேலையை விட்டுப் போன்னு கத்தினே?" என்று கேட்க,

அர்ஜுன், "ஏய், நான் அப்படித்தான்டி சொல்வேன். அதுக்காக நாலுபேர் முன்னாடி என்னை இப்படித்தான் அவமானப்படுத்துவியா? என்னைப் பழிவாங்கிட்டியேடி... பாவி!" என்று அவளைத் திட்ட,

பாரதி, "நானா! நீதான்டா என்னைத் தினம் தினம் சித்திரவதை செய்யுற, பாவி...!" என்று அவனைப் பதிலுக்குத் திட்ட...

அவள் தோளை அழுத்திய மஹதி, "சும்மா இரு பாரி. அவர்தான் சுயநினைவு இல்லாமல் கத்துறாருன்னா... நீயும் கூட கூடப் பேசிட்டு. சேகரண்ணா... அவர்கிட்ட பர்மிஷன் எல்லாம் கேட்காதீங்க. குண்டுக்கட்டா தூக்குங்க. வீடு பக்கத்தில்தானே... உங்களால் முடியுமா?" என்று கேட்க,

சேகர், "ஒண்ணும் பிரச்சினை இல்லைம்மா. நான் பார்த்துக்கிறேன்..." என்று அவனை அப்படியே அலாக் காகத் தூக்கிக் கொண்டான்.

"ஏய்... விடு விடு. ஏய்... இதெல்லாம் உன் வேலையா? உன்னைச் சும்மா விடமாட்டேன்டி..." என்று கறுவ... பாரதி இறுகிய முகத்துடன் அவர்களைப் பின் தொடர்ந்தாள்.

ஒரு வழியாக அவனைத் திமிறத் திமிற வீடு வந்து சேர்த்தவர்களுக்கு மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கியது.

அவனை இதற்கு மேல் சாப்பிடவெல்லாம் வைக்க முடியாது என்று அறிந்த பாரதி, தாத்தாவிடம், "தாத்தா! ஒரு கிளாஸ் பால் மட்டுமாவது குடுங்க தாத்தா... பாவம். அல்சர் வேற... அதான்!" என்று கூற,

அவனை அவன் அறையில் படுக்க வைத்து விட்டுத் தாத்தாவும் பாலை எடுத்துக் கொண்டு, "தம்பி, இந்தாங்க. இதைக் குடிங்க..." என்று வற்புறுத்த, அடுத்த நிமிடம் கோப்பை தரையில் உருண்டது.

"எனக்கு எதுவும் தேவையில்லை. எல்லாரும் வெளியே போங்க. முக்கியமா அதோ நிக்கிறாளே, அவளை வெளியே போகச் சொல்லுங்க..." என்று கத்த ஆரம்பிக்க,

பாரதி முறைக்க... அர்ஜுன், "என்ன முறைக்கிறடி! எனக்குத் தெரியும்டி. உலகத்தில் உள்ள எல்லாப் பொண்ணுங்களும் இப்படித்தான் சுயநலவாதிங்க. ஒரு சின்னக் கஷ்டம் வந்தால் விட்டுட்டு ஓடத்தானே பார்ப்பீங்க. உங்களைப் பத்தி எனக்குத் தெரியாதா? ஆறு வருசம் முன்னாடியே எனக்குத் தெரியும். அதிலும் நீ என்ன வெல்லாம் வசனம் பேசினே... நாலு வருசம் முன்னாடி..." என்று ஆரம்பிக்க,

பாரதி ஓடியே சென்று அவன் வாயைப் பொத்தி, "தாத்தா... இன்னொரு கிளாஸ் பாலை எடுத்து வாங்க..." என்று உத்தரவிட,

அர்ஜுன் அவள் கையை எடுக்கப் படாத பாடு பட்டான். ஆனால் அவளோ உடும்பாக அவனைப் பிடித்திருந்தாள்.

அவர் தன் வயதிற்கும் மீறி ஓடியே சென்று இன்னொரு கோப்பை பால் எடுத்து வர... பாரதி, "நீங்கள்ளாம் கொஞ்சம் வெளியே இருங்க. ப்ளீஸ்..." என்று கூற, மற்றவர்கள் ஒத்துக் கொள்ள...

மஹதி, "பாரி... அவர் ரொம்ப முரட்டுத்தனமாக நடந்துக்கிறார்..." என்று தயங்க,

பாரதி, "ப்ளீஸ் மகி... எனக்கு ஒண்ணும் ஆகாது. நீ போ..." என்று அழுத்தமாகக் கூற, இதுவரை அவள் இப்படிப் பேசுவதைப் பார்த்திராத மூவரும், மௌனமாக அங்கிருந்து அகன்றனர்.

அவர்கள் சென்றதும் அவன் வாயிலிருந்து கையை எடுத்ததுதான் தாமதம்... அவன் எகிற ஆரம்பித்தான். "ஏய்... உனக்கு அவ்ளோ தைரியமா?" என்று கத்த,

பாரதி, "ஆமாடா... இதைக் குடி..." என்று நீட்ட,

அர்ஜுன், "எனக்கு வேண்டாம். முதலில் நீ இங்க இருந்து வெளியே போ... போடி!" என்று கத்த,

பாரதி, "இப்போ உனக்கு என்னதான் பிரச்சனை... நான் வராததுதானே. இனிமே நான் எங்கேயும் போகலை. சரியா! இதைக் குடி. ப்ளீஸ்!" என்று அமைதியாகக் கூற,

அர்ஜுன் அவளை ஒரு வெற்றுப் பார்வை பார்த்து, “இல்லை... என் வாழ்க்கையில் எதுவுமே எனக்கு வாய்க் காது. நான் ஒரு கேவலமானவன். ஒரு காலத்துல பரதேசியா தெருவில் நின்னேன். ஜெயிலுக்குப் போனேன். இன்னைக்கு எனக்குக் கிடைச்ச பெரிய விருது, அதுகூட எனக்குச் சந்தோஷமா அமையலை... நானெல்லாம் எதுக்கு வாழணும்... நான் ஒண்ணுக்கும் லாயக்கு கிடையாது. நான் வாழக் கூடாது. நான் சாகணும்...” என்று விரக்தி தலைக்கேறி, கணநேரத்தில் தன் இடுப் பறையில் இருந்து அந்தத் துப்பாக்கியை எடுத்தான்.

அவனிடம் துப்பாக்கி இருப்பது பாரதிக்கும் தெரியும். பாதுகாப்பு கருதி லைசென்ஸோடு தான் அதை வைத் திருந்தான். ஆனால் அவன் திடீரென்று அதை எடுக்கவும் அரண்டு போனாள் பாரதி. அவனோ, “நான் சாகணும். நான் சாகணும்...” என்று கூறியபடி, லாக்கை ரிலீஸ் செய்ய...

பாரதி, “அர்ஜுன், துப்பாக்கியைக் கொடு. நீ ரொம்ப எமோஷனலா இருக்கே... ப்ளீஸ் கொடு...” என்று கெஞ்ச,

அர்ஜுன், “ஏய்... நீ யாரு, அதைச் சொல்றதுக்கு... நீ எனக்கு யாரு... எங்கே இருந்தோ வந்துட்டு ஏன் என்னை இப்படி ஆட்டி வைக்கிறே! இனிமே என்னால் வாழ முடியாது...” என்று துப்பாக்கியை நெற்றிப் பொட்டில் வைக்கப் போக...

பாரதி கோபம் தலைக்கேறி, அவன் கன்னத்தில் பளாரென்று அறைந்தாள். அவள் அவனை அடித்த வேகத்தில் துப்பாக்கி எங்கேயோ சென்று விழுந்தது.

அர்ஜுன் அதிர்ந்து போய்ப் பார்க்க, “நீ இன்னும் கொஞ்சம் கூட மாறலை அர்ஜுன்... இத்தனை வருசமும் நான் உன்னை மாத்தியிருக்கேன்னு நினைச்சேன். ஆனால் உன்னை நாலு வருஷம் முன்னாலே எப்படிப் பார்த்தேனோ... அப்படித்தான் இப்பவும் இருக்கே...

“சே! உன்னைப் பார்க்கவே எனக்குக் கேவலமா இருக்கு அர்ஜுன். எவ்வளவு கஷ்டம்... எவ்ளோ பொய்... என் வாழ்க்கை எப்படிப் போனாலும் பரவாயில்லைன்னு என் சித்தப்பா, அண்ணன் எல்லாரையும் விட்டு உன் பின்னாடி வந்ததுக்கு இன்னைக்கு வருத்தப்படுறேன், அர்ஜுன்...” என்று முகத்தைத் திருப்ப... அவள் முகத்தில் இதுவரை காதலையும் குறும்பையும் மட்டுமே பார்த்து வந்த அர்ஜுன், இப்போது அவள் முகத்தில் வழிந்த இயலாமையையும் வருத்தத்தையும் கண்டு அதிர்ந்து நின்றான்.

அவன் போதை கொஞ்சம் கொஞ்சமாகத் தெளிய ஆரம்பித்தது.

## 9

பெண்ணே, உனதழகைக் கண்டு - மனம்
பித்தங் கொள்ளுதென்று நகைத்தான் - அடி
கண்ணே எனதிரு கண் மணியே - உனைக்
கட்டித் தழுவமனங் கொண்டேன்...
திக்குத் தெரியாத காட்டில் - உனைத்
தேடித் தேடி இளைத்தேனே...

**போ**தை கொஞ்சம் கொஞ்சமாகத் தெளிய, அவளை உறுத்து விழித்தவனைப் பார்த்தவள்....

"என்ன பார்க்கிறே... நீ என்னைத் தோக்கடிச்சிட்டே அர்ஜுன்... உன் மேல் நான் வைச்சிருந்த நம்பிக்கையைச் சுக்குநூறாய் உடைச்சிட்டே... உனக்கு ஞாபகம் இருக்கா? நாலு வருசம் முன்னாடியும் நீ சாவைத் தேடிப் போனே. அப்போ கூட எனக்கு இவ்ளோ கோபம் வரலை. அப்போ கூட உன்னை அடிச்சேன்தான். ஆனா என் மனசில் ஒரு நம்பிக்கை இருந்தது. நீ எப்படியாவது பெரிய ஆளா வருவேனு... ஆனா இன்னைக்கு இவ்வளவு வளர்ந்தும் உன் மனசில் வெறுப்பு வருதுன்னா... அதுக்கு என்ன காரணம்னு எனக்குப் புரியலை அர்ஜுன்... சுத்தமாப் புரியலை.

"அன்னைக்கு நீ சாகிறதுக்கு முயற்சி பண்ணப்போ உன் செயலில் ஒரு நியாயம் இருந்தது. வாழ்க்கையில் உனக்கு எதுவுமே இல்லை. அதனால் அது தப்புன்னு சொல்ல முடியாது. ஆனா இன்னைக்கு நீ செஞ்சதுக்குக் காரணம் உன் வீம்பு... பிடிவாதம். எப்போதான் நீ அதை விடப் போறேனு எனக்குத் தெரியலை. நீ செத்துப் போயிருந்தா உன் கம்பெனியோட கதி... அதில் வேலை செய்றவங்களோட கதி... இதெல்லாம் கொஞ்சம் கூட நினைச்சுப் பார்க்காமல் எப்படி அர்ஜுன்..." என்று கண்களில் கோபம் மின்னப் பேசிக் கொண்டிருந்தவளைக் கையமர்த்திய அர்ஜுன்,

"ஏய், போதும் நிறுத்து... நானும் போனாப் போகுதுன்னு பார்த்தால் ஓவராப் பேசிட்டுப் போறே. நான்

இப்படித்தான். உன்னால் என்கூட இருக்க முடிஞ்சா நான் செய்றதை எல்லாம் சகிச்சிக்கிட்டு இரு. இல்லைன்னா இப்பவே இங்கே இருந்து போயிடு. ஒண்ணு மட்டும் ஞாபகம் வைச்சிக்கோ. நம்ம ஒப்பந்தப்படி என் மனசு மாறுகிறவரைக்கும் நீ இப்படி இருந்துதான் ஆகணும். அந்தப் பொறுமை கூட இல்லைன்னா எப்படி?

"நானா உன் குடும்பத்தை எல்லாம் விட்டுட்டு வரச் சொன்னேன். நீயாத்தானே வந்தே... இது நீயா தேடிக் கிட்டது பாரதி. இதில் வர எல்லா வினைகளையும் நீதான் சந்திச்சாகணும். என்ன பண்றது? இன்னும் எனக்கு உன் இனத்து மேல நம்பிக்கை வரலையே?" என்று நக்கலாகக் கூற,

பாரதி பதில் கூறாமல், அவனை உறுத்துப் பார்த்து, "ஏன் அர்ஜுன்... நாலு வருசம் நான் உன்கூடவே தானே இருந்திருக்கேன். ஒரு நிமிசம் ஒரு வினாடி கூடவா நான் அவளை மாதிரி பொண்ணு இல்லைன்னு உனக்குத் தோணலை..." என்று அடிபட்ட குரலில் கேட்க,

அர்ஜுன் யோசிப்பது போல் பாவனை செய்து... பின், "இல்லையே... வாழ்க்கையில் யார் மேலயும் சீக்கிரம் நம்பிக்கை வைக்கக் கூடாதுன்னு என் அனுபவம் எனக்கு ரொம்பக் கத்துக் கொடுத்திருக்கே. அந்தப் பாடம் மட்டும் நான் செத்தாலும் மறக்காது. அதனால் இந்த நாலு வருசம் ரொம்பக் குறைவான நேரம். நான் ஒண்ணும் உன்னைக் கட்டாயப்படுத்தலை. உனக்கு முடியலைன்னா... இப்பவே கிளம்பலாம், மேடம்... நான் தடுக்க மாட்டேன்..." என்று குரூரச் சிரிப்புடன் கூற,

பாரதி, "தட்ஸ் இட். போதும் போதும் அர்ஜுன்... ரொம்பப் பேசாதே. உன் வாழ்க்கை உனக்கு என்ன பாடம் கத்துக் கொடுத்ததோ... ஆனா என் வாழ்க்கை எனக்குக் கத்துக் கொடுத்தது ஒண்ணே ஒண்ணுதான். முயற்சி... விடாமுயற்சி. அது ஒண்ணு மட்டும்தான். ஒரு நாள் இல்லை... ஒரு நாள் என்னைப் பத்தின உன் அபிப் பிராயம் கண்டிப்பா மாறும். நீயா உன் காதலை உணருவே...

"நான் சொல்றது புரியுதா? காதலை உணருவே... அதாவது நீ என்னை எப்பவோ காதலிக்க ஆரம்பிச் சிட்டே... அதை உணரத்தான் இல்லை. சீக்கிரமே அது நடக்கும். அதுவரைக்கும் நான் காத்திருப்பேனே தவிர, கோழை மாதிரி ஓட மாட்டேன். நீயா நானா என்று இனிமே பார்க்கலாம். படுத்துத் தூங்கு. குட் பை. நாளைக்கு ஆபீசில் பார்க்கலாம், பாஸ்..." என்று கண நேரத்தில் அவனை பாஸாக்கி அங்கிருந்து கிளம்பினாள்.

அவளைக் கோபம் தெறிக்கும் விழிகளுடன் பார்த்துக் கொண்டிருந்தான் அர்ஜுன்.

**வெ**ளியே வந்தவளுக்கு அப்போதுதான் மஹதி யின் நினைப்பே வந்தது.

"சாரி... சாரி, மகி... ஏதோ ஞாபகத்தில் பேசிட்டே இருந்துட்டேன். வா, போகலாம்..." என்று இழுத்தவள் மஹதியின் முறைப்பைக் கண்டுகொள்ளாமல், தாத்தா விடம், "நீங்க போய்த் தூங்குங்க தாத்தா. அவர் படுத் துட்டார். இப்பவே படுத்தால் ஒரு நாலு மணி நேரமாவது தூங்கலாம். போங்க தாத்தா!" என்று அனுப்பி வைக்க,

சேகர், "வாங்கம்மா... காரிலேயே போகலாம். நான் கொண்டு போய் விடுறேன்..." என்று அழைக்க,

பாரதி ஒரு மெல்லிய சிரிப்புடன், "எதுக்கு சேகரண்ணா... அதெல்லாம் வேணாம். பாஸுக்கு நான் காரில் ஏறினால் பிடிக்காது. அதுவும் இல்லாமல் அவர் சம்பளம் கொடுக்கிற முதலாளி. நான் சாதாரணக் காரியதரிசி. நான் எப்படி அவர் காரில்....? விடுங்க அண்ணா... நாங்களே போயிக்கிறோம்...!" என்று கூற,

அவள் தன்மானத்தைக் கண்டு அனைவரும் நெகிழ்ந்தனர்.

பின் மஹதிதான் இடையில் புகுந்து, "ஏதாவது ஆட்டோ இருந்தால் தெரு முனையில் பிடிச்சுப் போயிக் கிறோம். மத்தப்படி எதுவும் வேணாம். வர்றோம்... இப்பவே ரொம்ப தாமதமாயிடுச்சு..." என்று கூறிவிட்டுப் பாரதியுடன் நடக்க...

சேகர் ஓடியே வந்து, "இருங்கம்மா... எனக்குத் தெரிஞ்ச ஆட்டோ இருக்கு. பக்கத்தில்தான். நான் கூப்பிட்டுச் சொல்லி விட்டுப் போறேன். காலங்கெட்ட காலத்தில் தனியாகப் போக வேண்டாம்..." என்று கூறி, அவனுக்குத் தெரிந்த ஆட்டோக்காரரை அழைத்து, அவர்களை அனுப்பி வைத்தான்.

ஆட்டோவில் வரும்பொழுதும் சரி... விடுதிக்கு வந்த பிறகும் சரி... மஹதி நடந்த விஷயத்தைப் பற்றி ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை.

மெதுவாகப் பாரதியே, "மகி... இன்னைக்கு நடந்ததைப் பற்றி உனக்கு எதுவுமே கேட்கத் தோண

லையா?" என்று கேட்டதற்குக் கூட, ஒரு வெற்றுப் பார்வைதான் பதிலாகக் கிடைத்தது.

பாரதிக்கே அவளைப் பார்த்துப் பயமாக இருந்தது. 'இவ காச்மூச்சுன்னு கத்தினால் கூடப் பரவாயில்லை. இப்படிப் பேசாமல் கழுத்தறுக்கிறாளே... உள்ளே பேசின தெல்லாம் வெளியே கேட்டிருக்குமோ! ஆமா நான் கத்தின கத்து ஊருக்கே கேட்டிருக்கும். வெளியே கேட்டிருக்காதா? ஆனா யாரும் எதுவும் கேட்க மாட்டேங்கிறாங்களே...! சரி. என்னதான் நடக்கப் போகுதுன்னு பார்ப்போம்...' என்று தனக்குள்ளேயே புலம்பி விட்டுப் படுக்கச் சென்றாள்.

காலை எழுந்ததும் வழக்கம் போல் பாரதி கிளம்பி அலுவலகத்திற்குப் புறப்பட... அப்போதும் மஹதி எழவில்லை.

சரியென்று அவளை எழுப்பாமல் அவள் மட்டும் கிளம்பிச் சென்றாள்.

வழக்கம் போல் அவள் அலுவலகம் செல்ல... அங்கே ஒரு கூட்டமே சூழ்ந்து கொண்டது.

"ஏன் வரலை பாரதி... நீ வராமல் விழாவே சோபிக்கலை தெரியுமா! பாஸுக்கும் உனக்கும் சண்டையா?" என்று ஆரம்பித்து, "நீ நேத்து வராததை நினைச்சி வேலையை விட்டே போயிட்டியோன்னு பயந் துட்டோம், தெரியுமா!" என்று பேச்சு எங்கேயோ போக...

பாரதி எல்லாரையும் கையமர்த்தி, "அய்யோ போதும், போதும். நேத்துக் கொஞ்சம் ஜூரம். எழுந் துக்கவே முடியலை. அதான் லீவ். அதுக்கு ஏற்கெனவே

பாஸ் கிட்ட வாங்கிக் கட்டிக்கிட்டேன். நீங்களும் இதைப் பற்றியே பேசி என் வேலைக்கு ஆப்பு வைச்சிடாதீங்கப்பா. ப்ளீஸ்... சீட்டுக்குப் போங்க..." என்று கெஞ்ச,

அனைவரும், "இதுக்குத்தான் கொஞ்சமாச்சும் ஓய்வு எடுக்கணும்கிறது. இந்த மனுசன் கிட்ட இன்னும் எவ்வளவு பாடுபடப் போறியோ?" என்று அனுதாபங்களுடன் கலைய ஆரம்பித்தனர். அவர்களிடம் ஒரு புன்னகையை மட்டும் உதிர்த்து விட்டுத் தன் வேலையை ஆரம்பித்தாள்.

அன்று முழுக்க ஒருவித இறுக்கமான சூழ்நிலையே இருவருக்குள்ளும் நிலவியது.

பாரதியும் தேவையில்லாமல் அவனிடம் பேச வில்லை. அவனும் அதைக் கண்டு கொள்ளவில்லை. இதனால் அவளுக்கு இடைவேளை கூடக் கிடைத்தது. அதில்தான் அவள் ஒன்றைக் கவனித்தாள்.

டைப்பிஸ்ட் வத்சலா அடிக்கடி தன் கண்களில் வழியும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டிருப்பதை.

எப்போதும் கலகலவென இருக்கும் அந்த அறை இன்று அமைதியாக இருக்கும் காரணம் தெரியாது... பாரதி, "என்னாச்சு... எல்லாரும் ஏன் உம்முன்னு இருக்கீங்க... வத்சலா மேடம், காலையில் இருந்து பார்க்கிறேன்... நீங்க சரியில்லை. ஏன்?" என்று கேட்க,

வத்சலா, "இல்லை பாரதி... அதெல்லாம் ஒண்ணு மில்லை. நான் நல்லாத்தான் இருக்கேன்..." என்று வெளிவரத குரலில் கூற,

பாரதி, "இதெல்லாம் நான் வாங்கிக்கிறதா இல்லை. உங்க முகமே சொல்லுது... ப்ளீஸ், மேடம். என்ன

பிரச்சினை என்று சொன்னால்தானே தெரியும்!" என்று கூற,

வத்சலா கண்களில் வழியும் கண்ணீரை அடக்கி, "என்ன சொல்றது பாரதி... எல்லாமே என் நேரம். என் பொண்ணு நேத்து தூக்கமாத்திரை சாப்பிடப் போயிட்டா, பாரதி..." என்று கூறிவிட்டு, அடக்க முடியாமல் அழ ஆரம்பித்தார்.

பாரதி அதிர்ச்சியுடன், "என்ன மேடம் சொல்றீங்க... எனக்கு ஒண்ணும் புரியலை!" என்று கேட்க,

நந்தினி, "ஆமா பாரதி... நேத்து ஏதோ சத்தம் கேட்குதேன்னு கதவைத் திறந்து பார்த்திருக்காங்க போல் இருக்கு. அவ தூக்கமாத்திரை சாப்பிடப் போயிருக்கா..." என்று கூற,

வத்சலா, "ஒரு இரண்டு நிமிஷம் தாமதிச்சிருந்தா... அவ அதைச் சாப்பிட்டிருப்பா பாரதி... அதை நினைக்க நினைக்க உடம்பெல்லாம் பதறுது..." என்று குமுற,

பாரதி, "ஆனா ஏன் இந்த முடிவெடுத்தா மேடம்...? நல்லாப் படிக்கிற பொண்ணுதானே... மார்க் ஏதாவது குறைவா?" என்று கேட்க,

வத்சலா, "அதெல்லாம் ஒண்ணுமில்லை பாரதி. எல்லாப் பெத்தவங்களும் வயித்தில் நெருப்பைக் கட்டிக் கிட்டுத்தான் பொண்ணுங்களைக் காலேஜ் அனுப்ப வேண்டியதா இருக்கு. எல்லாம் எங்க தலையெழுத்து. யாரோ ஒரு பெரிய ரௌடியோட பையனாம்... அவ காலேஜில் படிக்கிறானாம். இவளை லவ் பண்றேன்னு பின்னாடியே சுத்தியிருக்கான்.

"இவ முடியாதுனு சொல்லிச் சொல்லிப் பார்த்திருக்கா. அவன் கேட்கலை. ஒரு நாள் கைநீட்டி அறைஞ்சிட்டாளாம். அவன் அதை மனசில் வைச்சிக்கிட்டு இவள் முகத்தை மார்ஃப் பண்ணி ஆபாசப் படங்களைத் தயாரிச்சு இவகிட்டயே தந்து... நீ ஒத்துக்கலைன்னா நெட்டில் விட்டுருவேன்... என்று பயமுறுத்தறானாம் பாரதி... இவளும் இந்த அசிங்கத்தை எப்படி வெளியே சொல்றதுன்னு தெரியாமல்..." என்று முடிக்க முடியாமல், வாயில் புடவைத் தலைப்பை வைத்துக் கொண்டு அழ,

அவர் முதுகை ஆதரவாகத் தடவிக் கொடுத்த பாரதி, "இதைப் பாருங்க மேடம். நீங்களே உடைஞ்சு போயிடக் கூடாது. பாதகம் செய்பவரைக் கண்டால் நீ பயங் கொள்ளல் ஆகாது பாப்பா. மோதி மிதித்து விடு பாப்பா! அவர் முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பானு பாரதி சொன்னது தான் எனக்கு இப்போ ஞாபகம் வருது.

"நான் சாயந்திரம் அவளைப் பார்க்க வர்றேன். என்னால முடிஞ்சது. அவளுக்கு மனத் தைரியம் கொடுக் கிறேன். எல்லாப் பிரச்சினையும் சீக்கிரம் சரியாகிடும். நீங்க கவலைப்படாதீங்க. ஒரு ரெண்டு மூணு நாளில் எல்லாப் பிரச்சினையும் முடியப் போகுது, பாருங்க..." என்று கூறியவளைப் பார்த்த வத்சலா,

"ஏதோ பாரதி... உன் வார்த்தையைக் கேட்டதுக்கு அப்புறம் கொஞ்சம் ஆறுதலா இருக்கு. ஆனா அந்தப் படுபாவி சொன்னபடி செஞ்சிட்டான்னா... நாங்க குடும்பத்தோட சாக வேண்டியதுதான்..." என்று கூற,

அவர் வாயைப் பொத்திய பாரதி, "சீ... இப்படி யெல்லாம் சொல்லக் கூடாது, மேடம்... கண்டிப்பா

எல்லாப் பிரச்சினையும் முடியும்..." என்று கூறிவிட்டு, "சரி. நான் என் சீட்டுக்குப் போறேன். வேலை இருக்கு..." என்று வெளியே வந்தவள்... நேரே சென்றது ஓய்வறைக்குத் தான்.

அங்கே சென்றவள்... கைபேசியை எடுத்துக் காதிற்குத் தாராளமாக அளிக்க... மறுமுனையில் ரிங் போய் எடுக்கப்படவும், "ஹலோ திரு... நான் பாரதி பேசுறேன். எனக்கு நீ ஒரு ஹெல்ப் செஞ்சே ஆகணும். புரியுதா?" என்று கட்டளையிட,

மறுமுனையில் சிரிப்புச் சத்தம் கலகலவெனக் கேட்டது.

வழக்கம் போல நாட்கள் நகர ஆரம்பித்தன.

இரண்டு நாட்கள் கழிந்த நிலையில் அன்று மாலை அர்ஜுன் வீட்டிற்குத் தொழில் சம்பந்தப்பட்ட சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சிற்றுண்டிகள் அனைத்தும் ஹோட்டலில் ஆர்டர் செய்து அனைத்து ஏற்பாடுகளையும் செவ்வனே செய் திருந்தாள் பாரதி.

"பாஸ்... நான் சொன்னால் உங்களுக்குக் கோபம்தான் வரும். ஆனா தயவுசெய்து உங்க கோபத்தை எல்லாம் மூட்டை கட்டி வைச்சிக்கிட்டு இந்த மீட்டிங்கை முடிச்சிடுங்க. ஒண்ணுமில்லை... கீழே வந்து ஹாய் என்று ஒரு வார்த்தை. அப்புறம் கொஞ்சம் கொறிச்சிட்டா... அவ்வளவுதான். இவங்க எல்லாம் நம்ம போட்டியாளர்கள். நீங்க இப்போ விருதெல்லாம் வாங்கியிருக்கீங்க. அதனால்

இவங்களைக் கொஞ்சம் மஸ்கா போட்டாத்தான் நல்லது...” என்று கூற,

அர்ஜுன், “உன் மனசில் என்னதான் நினைச்சிட்டு இருக்கே... நீயே சொல்ற! அவங்க போட்டியாளர்கள் என்று. அப்புறம் அவங்களைக் கூப்பிடுறதில் ஏதாவது நியாயம் இருக்கா? உழைப்பு மேல் நம்பிக்கை இருக்கிறவன் இப்படி எல்லாம் மஸ்கா போட மாட்டான். அப்படி என்ன நாம குறைஞ்சு போயிட்டோம். எனக்குக் கீழே வரவே அசிங்கமா இருக்கு...” என்று எகிற,

பாரதி, “பாஸ்... இவங்க இப்போ போட்டியாளர்களாக மட்டும்தான் இருக்காங்க. எதிரிங்க இல்லை. இப்படி எல்லாம் நாம மூவ் பண்ணாத்தான் உங்களுக்கு எந்தக் கஷ்டமும் வராது. எனக்கு உங்க வெற்றியை விட, உங்க பாதுகாப்புதான் முக்கியம். உங்களுக்கு யாரும் விரோதிங்க வரக் கூடாதுன்னுதான் நான் இவ்ளோ பாடுபடுறேன். ப்ளீஸ்...பாஸ்!” என்று கெஞ்ச,

அவளை நக்கலாகப் பார்த்தவன், “ஆண்டவன் உனக்கு நேர் புத்தியைக் கொடுத்திருக்கானோ... இல்லையோ, குறுக்குப் புத்தி நிறையக் கொடுத்திருக்கான். சரி. வர்றேன். நீ முதலில் போ!” என்று கூற,

பாரதி சிரிப்புடன், “எப்படியோ பாஸ்... எனக்கு ஏதாவது புத்தி இருக்குதுன்னு ஒத்துக்கிட்டீங்களே... அதுவே போதும். அப்புறம் பாஸ்... ஞாபகம் வச்சிக் கோங்க. ஒரு ஹாய்... ஒரு ஹாண்ட்சேக். ஒரு கடி... அவ்வளவுதான். அவ்வளவேதான்... ஓ.கே.” என்று கூறிவிட்டுச் சிட்டாகப் பறந்து செல்ல... அவளையே

கூர்மையான பார்வையுடன் பார்த்துக் கொண்டிருந்தான் அர்ஜுன்.

கீழே சென்றதும் அவர்களுடன் அமர்ந்து பேச்சைத் துவங்க... பாரதியின் முகத்தில் பெருமிதம் தாளவில்லை. தான் கூறிய வார்த்தைக்காக... அவனுக்குப் பிடிக்க வில்லை என்றாலும் செய்கிறானே... இதை விடவா அவனால் காதலை உணர்த்த முடியும்! ஆனால் இது எப்போது அவனுக்குப் புரியும்... என்று ஏதேதோ எண்ணங்களில் மூழ்கியவளைக் கலைத்தது, அர்ஜுனின் குரல்.

"ஏய்... ஏதாவது சாப்பிட எடுத்து வந்து எல்லாருக்கும் வை..." என்று கட்டளையிட,

அவளும் வாங்கி வைத்திருந்த சிற்றுண்டிகளை நிரப்ப...

அர்ஜுன், "என்ன... சாப்பிட மட்டும் எடுத்து வைக்கிறே! டீ, காபி ஏதாவது எடுத்து வா..." என்று மீண்டும் கட்டளையிட, பாரதி அவனை அதிர்ந்து நோக்கினாள்.

"பாஸ்... அது வந்து..." என்று திணற,

அர்ஜுன், "என்ன... ஏதாவது சொல்லித் தொலை..." என்று கத்த,

பதறிய பாரதி, "அதில்லை பாஸ். தாத்தா இன்னைக்கு லீவ். ஊருக்குப் போயிருக்கார். சமையலுக்கு ஆளில்லை. பொற்கொடியும் சீக்கிரம் போயிட்டா..." என்று மெல்லிய குரலில் கூற,

அர்ஜுன், “நான் என்ன கேட்டேன்... டீ, காபி தானே கேட்டேன். நீயே போட்டு வந்து கொடு...” என்று சாதாரணமாகக் கூற, பாரதிக்குத் தலை சுற்ற ஆரம்பித்தது.

அவன் இவளைக் கீழ்த்தரமாக நடத்துகிறானே என்பதற்காக அல்ல... சுத்தமாக அவளுக்குச் சமையலைப் பற்றி எதுவும் தெரியாது. விடுதியிலேயே இருப்பதால் அவளுக்குச் சமையல் செய்யும் அரிய பாக்கியம் கிட்டவில்லை. வீட்டிலோ சமையலறை எந்தத் திசை என்றே தெரியாது.

திக்கித் திணறி, “பாஸ்... அது வந்து...” என்று கூறுவதற்குள்,

அர்ஜுன், “இப்ப நீ கிச்சனுக்குப் போறியா? இல்லை... உன் வீட்டுக்குப் போறியா?” என்று கேட்க,

பாரதி சிணுங்கலுடன் தரையை உதைத்துக் கொண்டு சமையலறைக்கு வந்தாள்.

‘அதானே... என்னடா கொஞ்ச நேரமா கழுதை உதைக்காமல் இருக்கேனு நினைச்சேன். நெஞ்சிலயே உதைச்சிருச்சு. அய்யய்யோ! எனக்கு ஒரு நாளைக்குப் பத்து டீ குடிச்சுத்தான் பழக்கம். போட்டுப் பழக்க மில்லையே... கடையில் இருந்து வாங்கி வரலாம்னு பார்த்தாலும் நடுநாயகமா உட்கார்ந்து இருக்கானே... என்ன பண்றது? பாரதி! யோசி... யோசி...’ என்று குதிக்க...

அவள் கையில் இருந்த கைபேசி தவறிக் கீழே விழுந்தது. தன் ஸ்மார்ட் கைபேசி... ஐந்து வருடமாகத்

தான் பொக்கிஷமாக வைத்திருக்கும் கைபேசி. அதைப் பார்த்ததும்... பாரதிக்குச் சட்டென்று ஒரு யோசனை தோன்றியது.

"யெஸ்... இருக்கிற ஒரே நம்பிக்கை நம்ம கூகுளாண்டவர்தான். அடிரா கூகுளை... தட்டுறா சர்ச்சை..." என்று கேப்டன் ஸ்டைலில் கூறிக் கொண்டவள்,

'ஹவ் டு பிரிப்பேர் டீ!' என டைப் செய்து, அது கூறிய பல்லாயிரக் கணக்கான வழிகளில் தனக்குத் தெரிந்த வழி ஒன்றைத் தேர்ந்தெடுத்து, அதன்படி பல இடங்களில் சுட்டுக் கொண்டு, தன் தேநீரைப் போடுவதற்குள் ஐந்து முறை அவள் பெயரை ஏலம் விட்டான் அர்ஜுன்.

இருக்கிற அத்தனை தெய்வங்களையும் வேண்டிக் கொண்டு, ஒரு துளியைச் சுவைத்துப் பார்த்தாள். பரவாயில்லை. கொஞ்சம் வாயில் வைக்கும்படியாகவே இருந்தது.

ஒரு வழியாக அதைக் கொண்டு வந்து வைக்க... அதைக் குடித்த முகங்கள் சுழிக்காமல் இருக்க... அதைப் பார்த்துப் பாரதிக்குப் பெருமை தாளவில்லை.

தனக்குத் தானே ஒரு சபாஷைப் போட்டுக் கொண்டு அவர்களை வழியனுப்பி வைத்தாள்.

அவர்களை வழியனுப்பி வைத்து விட்டு வந்தவளைக் கோபத்துடன் எதிர்கொண்டான் அர்ஜுன்.

அவள் கேள்விக்குறியுடன் பார்க்க... "உனக்குத்தான் சுட்டுப் போட்டாலும் சமைக்க வராதே. அப்புறம் எப்படிக் கொஞ்சம் ஒழுங்கா டீ போட்டே?" என்று கேட்க,

பாரதி நக்கலாக, "ஓஹோ... அப்போ இதெல்லாம் தெரிஞ்சே செஞ்சீங்களா! அதாவது அவங்க முன்னாடி நான் அசிங்கப்படணும். அதானே உங்க ஆசை. சாரி பாஸ்... நீங்க வேணா என்னை மாட்டிவிடலாம். ஆனா என் ஃபோன் என்னைக் கைவிடாது. சும்மா இல்லை பாஸ்... ஐந்து வருசமா வைச்சிருக்கேன். நெட்டில் பார்த்து தான் டீ போட்டேன். சொதப்பாம நல்லாவே வந்தது என் அதிர்ஷ்டம்...." என்று கூறி, அவன் முன் தன் கைபேசியை ஆட்டி ஆட்டிக் காண்பிக்க...

அர்ஜுன், "எங்கே உன் ஃபோனைக் கொடு. அதில் அப்படி என்ன விசேஷம்னு பார்க்கலாம்..." என்று கேட்க, அவளும் யோசிக்காமல் கொடுக்க...

அதை வாங்கிப் பார்த்தவன், "நீ என்னோட எடுபிடி. நீ இப்படி காஸ்ட்லியான ஃபோன் வைச்சிருந்தால் பார்க்கிறவங்க என்ன நினைப்பாங்க. அதனால் இனிமே இந்த ஃபோன் உனக்கு வேணாம். சரியா? இப்போதான் ஆயிரம் ரூபாய்க்கு எல்லாம் ஃபோன் வந்திருக்கே. அதை வைச்சிக்கோ!" என்று கூறி, கண்ணிமைக்கும் நேரத்தில் அவள் சிம் கார்டைக் கழற்றிக் கொடுத்து, அவள் ஃபோனைத் தன் பாக்கெட்டில் போட்டுக் கொண்டான்.

பாரதி பதறி, "பாஸ்... அது முன்னாடியே... அதாவது நான் உங்களைப் பார்க்கிறதுக்கு முன்னாடியே வாங்கினது பாஸ். ப்ளீஸ் கொடுங்க பாஸ்..." என்று கெஞ்ச,

அர்ஜுன், "இப்பவே போனா உன் சிம் கார்டாவது கிடைக்கும். இல்லைன்னா அதுவும் கிடைக்காது. எப்படி வசதி?" என்று கூற,

பாரதி, "பாஸ்... சரி. போனாப் போகுது. அப்படியே மெமரி கார்டையும் கழற்றிக் கொடுங்க. அதில் முக்கியமான ஃபோட்டோஸ் இருக்கு..." என்று கேட்க,

அர்ஜுன், "இப்போ கிளம்புறியா? இல்லை, ஃபோனைத் தூக்கிப் போட்டு உடைக்கவா?" என்று நக்கலாகக் கேட்க,

பாரதி, "சரி. வைச்சிக்கோங்க. அதையே அவிச்சுச் சாப்பிடுங்க. நல்லாச் செரிக்கும்..." என்று ஆற்றாமையுடன் கத்தி விட்டுத் தன் ஸ்கூட்டியைக் கிளப்பிச் சென்றுவிட்டாள்.

அவள் சென்றதும் தன் பாக்கெட்டில் இருந்த கைபேசியை எடுத்து மென்மையுடன் தடவிக் கொடுத்தான் அர்ஜுன்.

**வி**டுதிக்கு வந்ததும் அவளுக்கு ஒரு இன்ப அதிர்ச்சி காத்திருந்தது. அங்கு வத்சலா அவளுக்காகக் காத்திருந்தார், தன் பெண் ஜனனியுடன்.

பாரதி ஆச்சரியத்துடன், "என்ன மேடம்... நீங்க இங்க வந்திருக்கீங்க?" என்று கேட்க,

வத்சவா முகம் கொள்ளாச் சிரிப்புடன், "இன்னைக்கு ரொம்பச் சந்தோஷமா இருக்கேன் பாரதி... நீ சொன்ன மாதிரி மலை போல வந்த கஷ்டமெல்லாம் பனி போல விலகிடுச்சு... அதான் பக்கத்தில் உள்ள கோவிலுக்கு வந்தேன். உன்னைப் பார்க்கணும் போலத் தோணித்து. அதான் வந்தேன்..." என்று கூற,

பாரதி, "என்ன மேடம்... அந்தப் பிரச்சினை முடிஞ்சிடுச்சா?" என்று கேட்க,

ஜனனி, "ஆமா, அக்கா. நீங்க அன்னிக்கு எங்க வீட்டுக்கு வந்து அட்வைஸ் செய்தீங்களே... அப்புறம் எனக்குக் கொஞ்சம் தைரியம் வந்திச்சு. காலேஜ் போக ஆரம்பிச்சேன். அப்புறமாத்தான் விஷயம் தெரிஞ்சது. அவனையும் அவன் அப்பாவையும் போலீஸ் கைது செய் துட்டாங்களாம். அவன் என்னை மட்டும் இல்லைக்கா... பல பெண்களை இப்படி பிளாக்மெயில் செய்திருக்கான். அவங்களில் யாரோ கம்ப்ளெயின்ட் செய்திருக்காங்க போலிருக்கு...

"அந்த ஃபோட்டோஸ் எல்லாம் போலீஸே டெஸ்ட்ராய் பண்ணிட்டாங்க. அதுவும் இல்லாமல் யார் பெயரையும் இழுக்காமல் கொலை கேஸ், கஞ்சா கேஸ் மாதிரி கேஸ்களில் தான் பிடிச்சிட்டுப் போயிருக்காங்க. வெளியே வருவதே பெரிய விஷயமாம்...!" என்று கண்களில் மகிழ்ச்சி மின்னக் கூற,

பாரதி, "ரொம்பச் சந்தோஷம் ஜனனி... இவங்களை மாதிரி ஆளுங்ககிட்ட இருந்து நாமளும் பாதுகாப்பாக இருக்கணும் ஜனனிம்மா. சமூக வலைத் தளங்களில் தேவையில்லாமல் நம்ம ஃபோட்டோஸ் போடுறது... கண்ட கண்ட பேரையும் யார் எவருன்னே தெரியாம ஃப்ரெண்ட்ஸ் ஆக்கிக்கிறதெல்லாம் ரொம்பத் தப்பு. இது இரண்டு பக்கமும் கூர் உள்ள கத்தி. அதை நாமதான் ஜாக்கிரதை யாகக் கையாளணும். புரியுதா? அதனால்தான் ஈசியா உன் ஃபோட்டோவை எடுத்து மார்ஃப் பண்ணியிருக்கான். அதனால் இனிக் கவனமாக இரு..." என்று கூற,

வத்சலா, “நல்லாச் சொல்லும்மா. எனக்குத்தான் எதுவும் புரிய மாட்டேங்குது. நீ சொல்லியாச்சும் கேட் கிறாளா... பார்ப்போம். அது சரி, பாரதி... இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்?” என்று கேட்க,

பாரதி நாக்கைக் கடித்து, “அய்யோ உளறிட் டேனே...” என்று நொந்து கொண்டு... “இல்லை மேடம்... இப்போவெல்லாம் இப்படித்தான் தப்பு நடக்குது. பொதுவாச் சொன்னேன்...” என்று கூற,

ஜனனி, “இனிமே நீங்க சொல்ற மாதிரியே கவனமாக இருக்கேன்க்கா... இன்னைக்குத்தான் புதுசாப் பொறந்த மாதிரி இருக்கேன்க்கா!” என்று தழுதழுப்புடன் கூற,

அவளை அணைத்துக் கொண்ட பாரதி, “சியர் அப் மை கேர்ள்... இந்த உலகமே உன்னோடது. போய் அதைக் கொண்டாடு... அதை விட்டுட்டு மூலையில் முடங்காதே!” என்று அவளை உற்சாகப்படுத்தி விட்டு, இருவரையும் அனுப்பி விட்டுத் தன் அறைக்கு வர... மஹதி அவளை ஒரு பார்வை பார்த்து விட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

அந்த நாளுக்குப் பிறகு அவளிடம் சரியாக மஹதி பேசுவதே இல்லை. அவளே ஏதாவது கேட்டாலும் ஒரு வார்த்தை இரண்டு வார்த்தை பதில். அவ்வளவே.

ஆனால், இன்று பாரதி விடுவதாக இல்லை. மஹதியின் அருகில் அமர்ந்து, அவள் முகத்தைத் திருப்பி, “இன்னைக்கு நீ பேசுறியோ... இல்லையோ... நான்

பேசித்தான் ஆவேன். ஏன்னா இன்னைக்கு ரொம்பச் சந்தோஷமா இருக்கேன். உனக்குத் தெரியுமா? எங்க வத்சலா மேடம் பொண்ணு..." என்று ஆரம்பிக்க,

மஹதி, "நிறுத்து. என்ன சொல்லப் போறே? அந்த ரௌடியோட பையன் அவளை மிரட்டினது சொல்லப் போறியா...இல்லை... நீ உன் திரு கிட்ட சொல்லி அவனை மட்டுமில்லாம அவங்க அப்பாவையும் தூக்கி உள்ளே போட்டதைச் சொல்லப் போறியா?" என்று கேட்க,

பாரதி தன் விழிகள் இரண்டும் வெளியே குதித்து விடும் அளவிற்கு அதிர்ந்தாள். "என்ன மகி... என்ன சொல்றே?" என்று திணற,

மஹதி ஒரு மெல்லிய சிரிப்புச் சிரித்து, "என்ன... உன்னைப் பத்தி எனக்கெல்லாம் தெரிய வந்திருச்சு. நீ யாரு... எதுக்காக வந்திருக்கே? ஏன் ஏழையாக நடிக்கிறே... யாருக்காக நடிக்கிறே... எல்லாம் தெரியும்..." என்று கூற,

பாரதி, "ஏதாவது தண்ணி அடிச்சிட்டியா? ஏதேதோ பேசுறே... சும்மா உளறாம போய்ப் படு. நான் ஒண்ணும் ஏழையா நடிக்கலை..." என்று கூற,

மஹதி நக்கலாகச் சிரித்து, "ஆமாம். ரொம்ப ஏழைதான். டி.ஐ.ஜி. சித்தப்பாவும், டி.ஜி.பி. அண்ணாவும் போதாக்குறைக்குப் பூர்வீகச் சொத்து கிட்டத்தட்ட ஐம்பது கோடி இருக்கிற சாதாரணப் பொண்ணு. பரம ஏழை தான்..." என்றபடியே ஒரு புகைப்படத்தை நீட்ட... அதில் காக்கிச் சட்டை அணிந்து விரைப்பாக இருந்த தன்

சித்தப்பா மற்றும் அண்ணனின் நடுவில் அவர்கள் கழுத்தைப் பிடித்துக் கொண்டு, முகமெல்லாம் சிரிப்பாகத் தொங்கிக் கொண்டிருந்தாள் பாரதி.

அதைப் பார்த்து எச்சில் விழுங்கிய பாரதியைப் பார்த்த மஹதி, அதே சிரிப்புடன், “அது மட்டுமில்லை. இந்தப் பரம ஏழைப் பொண்ணு ஹார்வர்ட் யூனிவர்சிட்டி மாதிரி சின்ன பல்கலைக்கழகத்தில் எம்.பி.ஏ. முடிச்சிட்டு இங்க ஒரு கம்பெனியில் பிசாத்து சம்பளத்துக்கு வேலை பார்க்குது. அப்படின்னா அவளுக்கு எவ்ளோ கஷ்டம் இருக்கும்...” என்று அவளிடம், அவள் இதுவரை தன் பெட்டியில் மறைத்து வைத்த அந்தப் புகழ் பெற்ற பல்கலைக் கழகத்தின் பட்டத்தை வீச... பாரதி கிட்டத்தட்ட மயங்கி விழும் நிலைக்கே சென்றாள்.

அவளைக் கண்ட மஹதியின் முகம் மர்மப் புன்னகையை வீசியது.

## 10

காதால் இந்த உரை கேட்டேன் – அட
கண்ணா வென்றலறி வீழ்ந்தேன் – மிகப்
போதாக வில்லையிதற் குள்ளே – என்றன்
போதந் தெளியநினைக் கண்டேன்!
கண்ணா வேடனெங்கு போனான்? – உனைக்
கண்டே யலறிவிழுந் தானோ? – மணி
வண்ணா! எனதபயக் குரலில் – எனை
வாழ்விக்க வந்த அருள் வாழி!

"மா... என்னை அஜுன் மறுபடியும் கிள்ளிட்டான்..." என்றபடி தன் தாயிடம் ஓடிச் சென்றாள் ஐந்து வயதுப் பாரதி. அதைக் கண்டு அவளை விட ஐந்து வயது மூத்தவனான பத்து வயது அர்ஜுன் வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரித்தான்.

அவளின் சத்தம் கேட்டுப் பாரதியின் தாய் ஷர்மிளாவும் அர்ஜுனின் தாய் வேதவல்லியும் ஓடியே வந்தனர்.

அழுதுகொண்டே வந்த பாரதியை ஷர்மிளா தூக்கும் முன், தான் முந்திக் கொண்டு தூக்கிய வேதவல்லி, "என்னடா செல்லம்... அர்ஜுன் என்ன செஞ்சான்?" என்று அவள் கண்ணீரைத் துடைத்தவாறே கேட்க,

கண்ணீரைத் தன் பிஞ்சுக் கைகளால் துடைத்துத் தன் முகமெங்கும் ஈஷிக் கொண்டிருந்த பாரதி, வேதாவின் செயலால் அதை நிறுத்தி... "ஆஹ் வேதாம்மா... அஜுன் என்னை மறுபடியும் கிள்ளிட்டான். எப்போ பார்த்தாலும் திட்டிக்கிட்டே இருக்கான்... வேதாம்மா. ஏன்னு கேட்டேனா... என்னைக் கிள்ளிட்டான், வேதாம்மா... வலிக்குது, வேதாம்மா!" என்று புகார்ப் பட்டியலை வாசிக்க...

ஷர்மிளா, "எப்போ பார்த்தாலும் அவன்கூட சண்டை போடுறதே வேலையா வைச்சிக்கிட்டு இருக்கே. பொம்பளைப் பிள்ளைதானே... கொஞ்சம் விட்டுக் கொடுத்தாதான் என்ன? எல்லாம் உன் அப்பாவும் சித்தப்பாவும் கொடுக்கிற செல்லம்..." என்று சலித்துக் கொள்ள,

வேதவல்லி, "சும்மா இரு, ஷர்மிளா. குட்டியைத் திட்டாதே. அர்ஜுனும் லேசுப்பட்டவன் இல்லை. இருடா

குட்டி... நாம அர்ஜுனை அடிக்கலாம்..." என்று பெரிய மனுஷி பாரதியிடம் கூறிவிட்டு, "கண்ணா... டேய் கண்ணா... இங்கே வா..." என்று அர்ஜுனை அழைக்க...

எதைப் பற்றியும் கவலைப் படாமல் பாரதியை முறைத்தபடி வந்து சேர்ந்த அர்ஜுன், "ம்மா... என்னைக் கண்ணா கண்ணான்னு கூப்பிடாதே. என் பேரு அர்ஜுன்..." என்று கெத்தாகக் கூற,

வேதவல்லி பல்லைக் கடித்து, "மன்னிச்சிடு பெரிய மனுஷா... தெரியாமக் கூப்பிட்டுட்டேன்..." என்று கூறிவிட்டு, ஷர்மிளாவிடம் திரும்பி,

"கொஞ்சமாச்சும் பயமிருக்கா பாரு, ஷர்மி.. எவ்வளவு எகத்தாளம்... டேய், குட்டியை ஏன்டா கிள்ளினே?" என்று கேட்க,

அர்ஜுன், "பின்னே... அதான் அவங்க வீடு இருக்கு இல்ல... அதில் போய் வீடியோ கேம் விளையாட வேண்டியதுதானே... எதுக்கு எப்போ பார்த்தாலும் என் வீடியோ கேமை எடுத்து நோண்டிட்டு இருக்கா? அதுவும் இல்லாமல் எனக்குப் பிடிக்காதுன்னு தெரிஞ்சே... கண்ணா, கண்ணான்னு கூப்பிடுறா. செம கோபம் வந்திச்சு. அதான் கிள்ளினேன்..." என்று கூற,

வேதவல்லிக்குக் கோபம் தலைக்கேறியது. அவன் பேச்சைக் கேட்டு, ஷர்மிளா முகம் வாட... பாரதியோ மூக்கு விடைக்கப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"டேய், அவ சின்னப் பொண்ணுடா. அவ பிறந்ததில் இருந்து நம்ம வீட்டில்தானே இருக்கா. நானும் ஷர்மிளா ஆன்ட்டியும் இருக்கிற மாதிரி. நீயும் அவளும்

ஃபிரண்ட்ஸா இருக்கணும்னுதானே உன்கூட விளையாட வர்றா... வேற யார்கிட்ட போவா? என்னவோ அவ வர்றதே பிடிக்காத மாதிரிப் பேசுற?" என்று கேட்க,

அர்ஜுன் சிறிதும் யோசிக்காமல், "ஆமா. அவ இந்த வீட்டுக்கு வர்றதே பிடிக்கலை எனக்கு. என் திங்ஸ் எல்லாம் எடுக்கிறது சுத்தமாப் பிடிக்கலை... என் வீடு இது. இதுக்கு யாரும் வரக் கூடாது. அவ்வளவுதான்!" என்று கத்திவிட்டுத் தன் அறைக்குச் சென்று முடங்கிக் கொண்டான்.

அவன் மனநிலையைக் கண்டு வேதவல்லிக்குச் சர்வமும் பதறியது. இது என்ன மாதிரிக் குணம் இவனுக்கு... பிறந்ததில் இருந்து தனியே பத்து வருடங்கள் ஒற்றைப் பையனாக வளர்ந்து விட்டதால், அவன் மனம் குறுகிவிட்டதா? இல்லையே... அவன் ஒரு வயதுத் தங்கை யாழினியை நன்றாகத்தானே கொஞ்சு கிறான்.

பாரதியிடமும் அவள் அண்ணன் ராமிடமும் மட்டும் ஏன் இந்த வீராப்பு? அவர்களிடம் மட்டும் அல்ல, பள்ளி யிலும் அவன் குணத்தில் எந்தவித மாற்றமும் இல்லை.

பள்ளி விட்டு வரும் வழியில் ராமையும் பாரதியையும் சுற்றி ஐந்து பேராவது வருவார்கள். ஆனால் இவன் மட்டும் தனியாக, அதுவும் அடம் பிடித்துக் காரில்தான் வருவான்.

'சின்னப் பையனுக்குக் கார் எதுக்குங்க? ராம், பாரதி கூட வேனில் வரட்டுமே... நிறையப் பிள்ளைகளும் இருப் பாங்க...' என்று வேதவல்லி கேட்டாலும்,

அவள் கணவர் ஹரிஹரன், "என்ன... என் பையன் ஸ்கூல் வேனிலேயா...! என்ன விளையாடுறியா, வேதா? அவன் ராஜா மாதிரி இருக்கணும். நீ சும்மா இரு..." என்று அடக்கி விடுவார்.

அவர் கூறுவது போல் ராஜாதான் அவன். அந்தக் காலத்திலேயே அவர் சேர்த்து வைத்த லட்சக்கணக்கான சொத்துகளுக்கு அவனும் அவனது தங்கை யாழினியும்தான் வாரிசுகள். அதனால் அவன் மனதில் கொஞ்சம் கொஞ்சமாகப் புகழ்ப் போதை ஏற்றி வைத்திருந்தார் ஹரிஹரன். அதை எல்லாம் நினைத்து வருந்திய வேதவல்லி நிகழ்காலத்திற்குத் திரும்பி, "பார்த்தியா ஷர்மி... அம்மா என்று ஒரு பாசமே இல்லைம்மா அவனுக்கு. அப்பா... அப்பாதான் எல்லாம். அவர் குணம் முழுக்க அச்சில் வார்த்தாற்போல் அவனிடம் இருக்கு. ஒருத்தரும் தேவையில்லை. தன்னைச் சுற்றித்தான் இந்த உலகமே சுழலணும்னு நினைக்கிறவங்க.

"பணத்தை வைத்து எடை போடுற குணம் ரெண்டு பேருக்கும். இவனை விட ரெண்டு வயதுச் சின்னவன் தானே ராம். இப்படியா இருக்கான்... எல்லாம் நான் வாங்கிய வரம்!" என்று அலுத்துக் கொள்ள,

அவள் வாயை மூடிய ஷர்மிளா, "இப்படியெல்லாம் சொல்லாதே, வேதா. பிள்ளைகளை நாமளே அப்படிச் சொல்லக் கூடாது. சின்னப் பையன்தானே அவன். போகப் போகச் சரியாகிடும். யாழி குட்டி சிணுங்குறா பாரு... நீ போய் பால் கொடு!" என்று சமாதானப்படுத்த... இன்னும் அவள் முகம் தெளியாததைக் கண்டு...

பாரதி, “வேதாம்மா... அழாதீங்க. நான் பெரிய ஆளாகி நிறையக் காசு சம்பாதிச்சு வீடியோ கேம் வாங்கிக்கிறேன். இனிமே அவன்கிட்ட எதுவும் கேட்டுத் தொல்லை பண்ண மாட்டேன். நீங்க அழாதீங்க, வேதம்மா...” என்று அவர் கண்களில் இருந்து வழிந்த முதல் கண்ணீரை அழுந்தத் துடைக்க... பாசம் மேலிட, அவளை அணைத்துக் கொண்ட வேதவல்லி,

“என் செல்லமே... உன் மனசு வேற யாருக்குடா வரும்... ஆனா அவனை ஒதுக்கிடாதேடா செல்லம்... நீங்க எல்லாம்தான் அவனுக்கு நல்ல புத்தி கத்துக் கொடுக் கணும். எப்பவும் அவன் கூடவே இருக்கணும்டா குட்டி... சரியா?” என்று கேட்க,

அவள் என்ன கூற வருகிறாள் என்று புரியா விட்டாலும், புரிந்தாற் போல் தலையாட்டியது, அந்தப் பொம்மை.

அதைக் கண்ட ஷர்மிளா, “பார்த்தியா வேதா... புரியாவிட்டாலும் கெத்தா தலையாட்டுது. இது பொழைச் சுக்கும். எனக்குக் கவலையே இல்லை...” என்று போலியாகப் பெருமூச்சு விட,

வேதவல்லி செல்லமாகத் தன் தோழியின் தலையில் குட்ட... பாரதி தன் தாயைக் கண்டு கலகலவெனச் சிரிக்க ஆரம்பித்தாள்.

வேதவல்லியும் ஷர்மிளாவும் கடந்த பல வருடங் களாகப் பக்கத்துப் பக்கத்து வீடுகளில் குடியிருந்து வருகின்றனர். ஹரிஹரன் போல் இல்லை என்றாலும், ஷர்மிளாவின் கணவர் மேகநாதன் சிறிய அளவில் கடன்

உதவி வழங்கல் நிறுவனம் ஒன்றை நிறுவி யாருக்கும் பாதகமில்லாமல் நடத்தி வந்தார்.

மேகநாதனின் குடும்பம் சற்றே பெரியது. அவரின் தாய், தந்தை, ஒரு தம்பி மற்றும் மனைவி, மகன், மகள் எனக் குடும்ப பாரம் அதிகப்படி என்பதால் அவரால் பெரிய அளவில் முன்னேற இயலவில்லை. ஆனாலும் நியாயமான ஒழுக்கமான வாழ்க்கையைக் கடைப்பிடிக்க எவ்வளவு சம்பாதிக்க வேண்டுமோ அவ்வளவு சம்பாதித்தார்.

இரண்டு வருடங்களுக்கு முன் வயதான தந்தையும் தாயும் அடுத்தடுத்து இறக்க... சற்றே தடுமாறிய மேகநாதன் தன் விடாமுயற்சியால் தன் தொழிலை முன்னேற்றக் கடினமாக உழைத்துக் கொண்டிருந்தார்.

ஹரிஹரன் தன் வீட்டையும் வசதியையும் பெருக்கிக் கொண்டே போக, வேதவல்லி அடம் பிடித்து அதே வீட்டில் தான் இருப்பேன் என்று கூறியதால், அதே வீட்டை மாளிகையாக்கி இருந்தார். ஆனால் மேகநாதனின் வீடோ முன்பு இருந்தாற்போலவேதான் இருந்தது. ஆனால் மேகநாதன் மற்றும் ஷர்மிளாவின் குணத்திற்கு அந்தப் பல கோடி சொத்துகள் துளியும் ஈடாகாது.

எந்த நேரத்தில் எந்த உதவி வேண்டுமானாலும் மேகநாதனின் கதவைத் தட்டினால் கிடைக்கும் என்று அந்தத் தெருவிற்கே தெரியும்.

அவ்வளவு ஏன்... ஹரிஹரன் வெளியூர் சென்று விட, பிரசவ வேதனையில் போராடிய வேதவல்லியை மருத்துவமனையில் சேர்த்து, கூடவே இருந்து பார்த்துக்

கொண்டனர் அந்தத் தம்பதியர். முதன் முதலில் யாழினியைக் கையில் வாங்கியது ஷர்மிளாதான். இதில் மனதை உருக்கும் விஷயம் என்னவென்றால்... அன்று மேகநாதனின் தாயின் திதி. அதைக் கூடப் பாதியில் விட்டு விட்டு வேதவல்லிக்காக ஓடியோடி உதவி செய்த மேகநாதனிடம் தழுதழுப்பாக அவள் நன்றியுரைக்க...

"என்ன தங்கச்சி... இதுக்கெல்லாம் நன்றி சொல்லிட்டு... என் அம்மா திதி அன்னைக்கு உன் பொண்ணு பொறந்திருக்கா. அது என் தாயே வந்து பொறந்ததாதான் நினைக்கிறேன். போன உயிருக்கு மரியாதை செய்றதை விட, உலகத்துக்கு வரப் போற உயிருக்குச் செய்யுற உதவிதான் பெரிசும்மா. நீ மனசை வருத்திக்காதே..." என்று பெரிய மனதுடன் கூறிய மேகநாதனை அலட்சியப் பார்வையுடன் பார்த்துக் கொண்டிருந்தார், ஹரிஹரன்.

"அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே
உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே..."

என்ற மகாகவியின் முழக்கத்தைத் தன் மழலை கலந்து, வேதவல்லியிடம் கூறிக் கொண்டிருந்தாள் பாரதி.

பாரதி என்ற பேருக்கு ஏற்றாற்போல் மையால் மீசை வரையப் பெற்று முண்டாசு கட்டப்பட்டு கையில் கோப்பையுடன் வெற்றிப் பெருமிதத்துடன் பாடிக் கொண்டிருந்தவளைக் கண்களில் நீர் தழும்பப் பார்த்துக் கொண்டிருந்தாள், வேதவல்லி.

அதைக் கண்ட திருச்சிற்றம்பலம், "என்னக்கா இது... குட்டியைப் பார்த்து அழுதுக்கிட்டு..." என்று தன் சாந்தமான

குரலில் கேட்க... அவனை வாஞ்சையுடன் பார்த்தார், வேதா.

திருச்சிற்றம்பலம் மேகநாதனின் தம்பி. அவனைத் திரு என்றுதான் அனைவரும் அழைப்பர். தன் இருபத் தைந்து வயதில் அத்தனை மனமுதிர்ச்சி கொண்டவனை யாரும் பார்க்க முடியாது.

எதிலும் மனம் பிறழாத நடுநிலையான குணம் கொண்டவன். பாரதிக்குத் தன் சித்தப்பன் என்றால் உயிர். அப்பாவின் வேட்டியை விடச் சித்தப்பாவின் கைலியைப் பிடித்துக் கொண்டு நடந்துதான் அவளுக்குப் பழக்கம்.

அவனைப் பார்த்த வேதா, "அப்படியே பாரதி மாதிரியே இருக்கா பாரேன் திரு. அச்சுப் பிசகாம எல்லாப் பாட்டையும்... அதான் பிள்ளைக்கு முதல் பரிசு கிடைச் சிருக்கு. அய்யோ... என் கண்ணே பட்டிரும் திரு. சுத்திப் போடணும். இரு, கற்பூரம் எடுத்து வரேன்..." என்று உள்ளே போய்க் கற்பூரம் எடுத்து வந்து சுத்திப் போட்டுக் கொளுத்தினாள்.

அதைப் பார்த்தபடி வந்த ஷர்மிளா, "என்ன, வேதாம்மாவுக்கு ஐஸ் வைக்க வந்தாச்சா? உன்னை ஹோம் வொர்க் செய்யச் சொன்னா, இங்கே வந்து கூத்தடிக்கிறியா?" என்று அதட்டலாகக் கேட்க,

வேதா அவரை அதட்டி, "இப்போ எதுக்குப் பிள்ளையை வையுறே...? மாறு வேஷத்தில் மொதப் பரிசு வாங்கிட்டு வந்திருக்கா... அதை என் கிட்டே சொல்லாமல் இருப்பாளா? எப்போ பார்த்தாலும் அதட்டிக்கிட்டு..." என்று கூற,

ஷர்மிளா, “நீயும் சப்போர்ட்டுக்கு வந்திட்டியா? இனி அவளைக் கையில பிடிக்க முடியாது. ஏற்கெனவே சித்தப்பா செல்லம்,” என்று தன் மைத்துனனை வார,

அதைக் கேட்டுச் சிரித்த திரு, “அண்ணி... என் பொண்ணுக்கு நான் செல்லம் கொடுக்கிறேன். உங்களுக்கு ஏன் கோபம் வருது...?” என்று கேட்க,

ஷர்மிளா, “ம்ஹூம்... நாளைக்கே உங்களுக்குக் கல்யாணம் ஆகட்டும்... அப்புறம் எப்படி உங்க பொண்ணுக்குச் செல்லம் கொடுக்கிறீங்கன்னு பார்ப்போம்,” என்று விளையாட்டாகக் கூற,

உடனே தீவிரமாக முகத்தை மாற்றிய திரு, “அண்ணி... யார் வந்தாலும் போனாலும் எனக்கு ராம், பாரதிக்கு அடுத்துதான். அவங்கதான் எனக்கு எப்பவுமே முதல். இனி இந்த மாதிரிப் பேசி மனசைக் கஷ்டப் படுத்தாதீங்க அண்ணி,” என்று மென்மையாகக் கூற,

வேதா, “என்ன திரு... அவள் சும்மா விளை யாட்டுக்குப் பேசுறா. உங்களைப் போய் அப்படி நினைப்பாளா?” என்று பரிந்துரைக்க,

அப்போதும் அவன் முகம் துணுக்குற்றிருக்க, ஷர்மிளா தன் மைத்துனனைப் பெருமையாக நோக்கி, பாரதியைத் தூக்கி அவன் கையில் தந்து, “இந்தாங்க திரு. இனிமே பாரதி உங்க பொண்ணு. ராம் உங்க பையன்தான். நீங்கதான் இவங்களுக்குப் பொறுப்பு. எங்களை விட உங்களுக்கு அவங்க மேலே உரிமை ஜாஸ்தி. போதுமா?” என்று கேட்க,

அவளைப் பெருமிதத்துடன் பார்த்த திரு, இப்போது கண்களில் குறும்பு மிளிர, "அண்ணி... நீங்களும் அண்ணனும் உங்க வேலையைப் பார்த்துக்கிட்டு ஜாலியா இருங்க. இனி இவங்க ரெண்டு பேரும் என் புள்ளைங்க. பொறுப்பை எங்கிட்ட ஒப்படைச்சிட்டீங்க இல்ல... நாளைக்கு நீங்களே ஆச்சரியப்படுவீங்க பாருங்க... கவலையே படாதீங்க..." என்று கூறிவிட்டுக் கெத்தாகக் காலரைத் தூக்க,

பாரதிக்குப் புரிந்ததோ புரியவில்லையோ, தன் செல்லச் சித்தப்பாவைக் கட்டிக்கொண்டு முத்தமிட, அதை வேதாவும் ஷர்மிளாவும் ஆதுரத்துடன் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அப்போது திருவிற்குத் தெரியவில்லை. தான் இவ்வாறு கூறியதால், தன் அண்ணனும் அண்ணியும் தம் பிள்ளைகளை அவன் பொறுப்பில் விட்டு விட்டுக் கவலையே இல்லாமல் மண்ணுலகை விட்டே செல்லப் போகின்றனர் என்பது.

# 11

நல்லதோர் வீணை செய்தே – அதை
நலங்கெடப் புழுதியி லெறிவ துண்டோ?
சொல்லடி சிவசக்தி! – எனைச்
சுடர்மிகு அறிவுடன் படைத்து விட்டாய்!
வல்லமை தாராயோ இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே!

சொல்லடி சிவசக்தி! – நிலச்சுமை என
வாழ்ந்திடப் புரிகுவையோ?

அன்று நடுநிசியில் தன் வீட்டிற்கு வந்த ஹரிஹரனுக்குக் கதவைத் திறந்து விட்ட வேதா, முதலில் கூறிய வார்த்தை, "உங்க பையனைக் சாப்பிடக் கூப்பிடுங்க. நான் கூப்பிட்டுக் கூப்பிட்டு நொந்தே போயிட்டேன்," என்பதுதான்.

ஒன்றும் புரியாத ஹரிஹரன், "வந்ததும் வராதது மாகப் பஞ்சாயத்துக்குப் பிராது கொடுக்க ஆரம்பிச் சிட்டியா? இன்னைக்கு என்ன பிரச்சினை?" என்று சற்றே எரிச்சல் எட்டிப் பார்க்கக் கேட்க,

வேதா, "நான் என்ன செய்தேன் அவனுக்கு? அவனுக்கு நான் என்ன சொன்னாலும் தப்பு... ஏது சொன்னாலும் தப்பு... எல்லாம் நீங்க கொடுக்கிற செல்லம்," என்று அலுத்துக் கொண்டே, அவனது கோட்டைக் கழற்றி வாங்கிக் கொண்டவளை உறுத்துப் பார்த்த ஹரிஹரன்,

"அதான் கேட்கிறேன்... என்ன சொன்னே என்று...?" என்று அழுத்தமாகக் கேட்க,

வேதா அவனைப் பார்த்து, "அதானே... என்னைத் தானே குத்தம் சொல்வீங்க. பக்கத்து வீட்டுப் பாரதி இன்னைக்கு ஏதோ போட்டியில் முதல் பரிசு வாங்கிட்டு வந்தது. இவன் வந்ததும் ஆசையா இவன் கிட்டே காமிச்சது. இவன் ஒண்ணும் சொல்லாட்டாக் கூடப்

பரவாயில்லை... அந்தக் குட்டியைப் பிடிச்சுக் கீழே தள்ளி விட்டுட்டான். அதான் ரெண்டு அடி போட்டேன். உடனே போய் மேலே ஒளிஞ்சிக்கிட்டான். சாப்பிடவும் வரலை... கதவையும் திறக்க மாட்டேங்கிறான்," என்று கம்மிய குரலில் கூற,

ஹரிஹரன், "உனக்கு நான் எத்தனை வாட்டி சொல்றது வேதா, அந்தப் பொண்ணை நம்ம வீட்டில் விடாதேன்னு. அவ வந்தாலே இவன் டென்ஷன் ஆகிறான். அதுமட்டுமில்லை... நீ அந்த ஷர்மிளா கூட உறவாடறதும் எனக்குப் பிடிக்கலை. நம்ம ஸ்டேட்டஸ் என்ன இப்போ...? அதை மனசில் வெச்சிக்கிட்டு அதுக்கேத்த மாதிரிப் பழகுன்னு உங்கிட்டே ஆயிரம் சொல்லிட்டேன். ஆனாலும் அந்த யூஸ்லெஸ் மேகநாதன் குடும்பத்தோடதான் நட்பு பாராட்டிக்கிட்டு இருக்கே. இது என்ன பழக்கம் வேதா?" என்று எரிந்து விழ,

வேதா அதிர்ந்து போனாள். "என்னங்க... என்ன பேசுறீங்க நீங்க...? அவங்க நமக்கு எவ்வளவோ உதவி செய்திருக்காங்க. அதுக்கெல்லாம் நாம ஜென்ம ஜென்மத்துக்கும் கடன் பட்டிருக்கோம். சின்ன உதவியா இருந்தாலும் அவங்க செய்த மனசை நினைச்சுப் பாருங்க. என்னால உங்களை மாதிரி ஸ்டேட்டஸ் பார்த்தெல்லாம் பழக முடியாதுங்க. எனக்கு மனுஷங் களோட மனசுதான் முக்கியம். இதுக்காக எல்லாம் என்னால் ஷர்மிளாகூடப் பழகாம இருக்க முடியாது. நீங்க எனக்கு அட்வைஸ் பண்றதை விட்டுட்டு உங்க பையனுக்குப் புத்தி சொல்லுங்க," என்று படபடவெனப் பொரிய,

அவளிடம் பேசிப் பயனில்லை என்று சலித்து விட்டு, அர்ஜுனின் அறைக் கதவை மெல்லத் தட்டி, "அர்ஜுன்..." என்று அழைத்தார் ஹரிஹரன்.

இதுவரை வேதவல்லி காட்டுக் கத்தல் கத்தியும் திறக்காத அர்ஜுன், தன் தந்தையின் மெல்லிய தட்டலுக்குப் படாரென்று கதவைத் திறந்து, "அப்பா..." என்று அவரை ஓடி வந்து அணைத்துக் கொள்ள, அவனை ஆயாசத்துடன் பார்த்தாள் வேதா.

தன்னை அணைத்துக் கொண்ட அர்ஜுனின் தலையைக் கோதியவாறே, அவனை விலக்கிய ஹரி, "என்ன அர்ஜுன்... என்னாச்சு? சாப்பிடாம வந்து படுத்திட்டே?" என்று ஆதுரத்துடன் கேட்க,

அர்ஜுன் அவர் கழுத்தைக் கட்டியபடி, "அப்பா... எப்போ பார்த்தாலும் அம்மா என்னை அந்தப் பாரதியோட கம்பேர் பண்ணிக்கிட்டே இருக்காங்கப்பா. எனக்குப் பிடிக்கவே இல்லை. இன்னைக்கு அவ ஃபர்ஸ்ட் பிரைஸ் வாங்கிட்டான்னு அவளை விட்டு என்னை வெறுப் பேத்துறாங்கப்பா. எனக்கு ரொம்பக் கோபம் வந்திடுச்சு. அதான் தெரியாமத் தள்ளிட்டேன்பா. அதுக்கு அம்மா என்னை அடிச்சிட்டாங்கப்பா... பாருங்க..." என்று தன் முதுகில் அடி விழுந்த தடத்தைக் காட்ட, வேதா பல்லைக் கடித்தாள்.

"ஆமா... நீ தப்புப் பண்ணது பெரிய விஷய மில்லை... நான் அடிச்சதுதான் பெரிய விஷயம். ஏன்டா இப்படி இருக்கே?" என்று அலுத்துக் கொள்ள,

அர்ஜுன் அவளை முறைக்க, ஹரிஹரன், "வேதா... சும்மா இருக்க மாட்டே. எப்பவும் தூரத்துப் பச்சை அழகாத்தான் தெரியும். என் பையனையும் அந்த உருப்படாதவன் பொண்ணையும் சேர்த்து வெச்சு எப்போ பார்த்தாலும் பேசுறதை முதலில் விடு. நம்ம அந்தஸ்துக்கு அவனைப் பத்திப் பேசுறதே தப்பு. இதுல அவன் குழந்தைகளை வேற நீ கொண்டாடிக்கிட்டு இருக்கிறே," என்று கடிந்து கொள்ள, வேதா பேச முடியாமல் மௌன மானாள்.

ஹரிஹரன் அத்தோடு நிற்காமல், "இதோ பாரு வேதா... நீ அந்த வீட்டுக்குப் போய்க்கோ, வந்துக்கோ, அங்கே உள்ளவங்களோட தொடர்பில் இருந்துக்கோ. அதையெல்லாம் உன்னோட வெச்சிக்கோ. என்னையும் நம்ம பிள்ளையையும் இதில் இழுக்காதே. அவ்வளவு தான்..." என்று கத்தி விட்டு அர்ஜுனைத் தூக்கிக் கொண்டு சாப்பிட அழைத்துச் சென்றார்.

அர்ஜுன் அவர் கழுத்தைக் கட்டி, உற்சாகமாக முத்தமிட, வேதவல்லிக்கோ மனம் முழுவதும் குழப்பம் வியாபித்தது.

'என்னவாயிற்று ஹரி, உங்களுக்கு? ஏன் அர்ஜுனின் மனதில் விஷம் ஏற்றுகிறீர்கள்? அவன் சின்னப் பையன். ஐந்தில் வளையாதது ஐம்பதில் எப்படி வளையும்? சிறு வயதில் இருந்து நான் பார்த்த ஹரிதான் நீங்களா? என் அம்மா 'ஹரி... ஹரி...' என்று கொண் டாடிய அவரின் தமையனின் மகன் இல்லை இப்போது இருப்பது. நீங்கள் யார் ஹரி? ஏன் இந்த மாற்றம்?' என்று பலவாறு யோசித்தவாறே தன் படுக்கையில் விழுந்தாள்.

தன் வாழ்வை ஒரு அபாய சூன்யம் துரத்துவது போல் இருந்தது.

"அம்மா... ம்மா..." என்று அழுது கொண்டே ஓடி வந்தாள் பாரதி.

அதைப் பார்த்த திரு, "ஆரம்பிச்சிட்டா ஐந்தருவி... அது எப்படித்தான் கண்ணில் கண்ணீர் கபால்னு வருதோ?" என்று கிண்டல் செய்ய,

அவனை முறைத்த பாரதி, "தித்தப்பா... உன் பேச்சு கா... போ, என்னைக் கிண்டல் செய்யுறே," என்று கத்த,

ஷர்மிளா, "ஆமா... சித்தப்பாவுக்குத் தித்தப்பான்னு சொல்லு, அர்ஜுனுக்கு அஜுன்னு சொல்லு... 'ச'வும் தடுக்கும், 'ர''வும் தடுக்கும். ஆனா கோபம் மட்டும் தங்கு தடையின்றி வரும்," என்று அவளை வார,

திரு சிரித்து, "ஹா... ஹா... ஆமா அண்ணி, கோபம் வந்தால்தான் சரமாரியாத் தடுக்குது. மத்த சமயம் நல்லாத்தான் பேசுறா. சரி... திருவையும் சித்தப்பையும் சேர்த்துக் கலந்து தித்தப்பான்னு கூப்பிடுறான்னு மனசைத் தேத்திக்க வேண்டியதுதான்," என்று சிரித்தபடி கூற,

பாரதிக்கோ, தன் பிரச்சினையை விட்டு விட்டு, இவர்கள் தன்னையே வாருகிறார்களே என்று இன்னும் கோபம் அதிகரித்தது.

அதைச் சரி செய்யும் வண்ணம், அவள் பின்னாடியே வந்த ராமுவும் மூக்கு விடைக்கக் கோபத் துடன் வந்து சோபாவில் அமர்ந்து, தன் தலையைப் பிடித்துக் கொண்டான். அதைப் பார்த்த திருவும் ஷர்மிளாவும் துணுக்குற்றனர்.

"குட்டி அழறது சகஜம். நீ ஏன்டா கோபமா வர்றே? என்ன விஷயம்? அர்ஜுன் வீட்டுக்குத்தானே போனீங்க? அவன் ஏதாவது சொன்னானா?" என்று திரு கேட்க,

ஷர்மிளாவும் அவன் அருகில் அமர்ந்து, "என்னடா ராம்... என்னாச்சு? வேதாம்மா எதுக்குக் கூப்பிட்டிருந் தாங்க?" என்று கேட்க,

ராம், "அம்மா... இனிமே எங்களை அங்கே போகச் சொல்லாதேம்மா. அந்த அர்ஜுன் இருக்கானில்லம்மா... அவன் ரொம்ப மோசமாப் பேசுறான்மா," என்று கூற,

திரு, "என்னடா... என்ன நடந்ததுன்னு சொன்னாத் தானே தெரியும். ஒழுங்காச் சொல்லுங்க ரெண்டு பேரும்..." என்று கேட்க,

பாரதி புகுந்து, "இல்லை சித்தப்பா... வேதாம்மா எனக்கு ஒரு கொலுசும், ராமுக்கு பார்க்கர் பென்னும் தரக் கூப்பிட்டிருந்தாங்க. நாங்க போனோமா... அங்கே அந்த அஜுன்... அந்த அஜுன்..." என்று கூறிவிட்டு அழ ஆரம்பிக்க,

திரு அவளை அணைத்துக் கொண்டு, "என்னடா குட்டி... அழாதேடா கண்ணு. சொல்லு..." என்று ஆசுவாசப் படுத்த,

ராம், "அந்த அர்ஜுன் சொல்றான் சித்தப்பா... அவன் ஸ்டேட்டஸ் வேற, எங்க ஸ்டேட்டஸ் வேறயாம். நாங்க ரொம்ப ஏழையாம். இந்த மாதிரி அவங்க அம்மா கிட்டே வாங்கித்தான் நாங்க வாழறோமாம். இந்த வீடே அவங்கம்மா கொடுத்த பணத்தில்தான் கட்டினோமாம். அவங்க அப்பா சொன்னாராம்.

“அதனால் இனிமே எங்க கூட விளையாட மாட்டானாம். எங்களுக்கு ரொம்ப அசிங்கமாப் போச் சும்மா. ஏம்மா... நாம ஏழையாம்மா? நாம டெய்லி நல்லா சிரிச்சிக்கிட்டுத்தானே இருக்கோம். நல்லாத்தானே சாப்பிடுறோம், டிரெஸ் போடுறோம். நாம என்னம்மா குறைஞ்சு போயிட்டோம்?” என்று கத்த,

பாரதி, “ஆமாம்மா... இப்படித்தான் சொன்னான். அதுக்கு வேதாம்மா அடிச்சாங்க. அப்புறமும் அவன் எங்களை முறைச்சிக்கிட்டே போறான்மா...” என்று முறை யிட,

ஷர்மிளாவுக்கு விபரீதம் புரிந்தது. ஹரிஹரன் ஏதோ தங்கள் குடும்பத்தைப் பற்றி அவதூறாகப் பேசியிருக்கிறார். அதுதான் அர்ஜுனின் மனதில் பதிந்து போய் இவ்வாறு வெளிவந்திருக்கிறது என்று. இந்த வீட்டைக் கட்ட வேதா கடனாகப் பத்தாயிரம் தந்தாள்தான். ஆனால் அதை இரண்டே மாதத்தில் வட்டியுடன் தந்து விட்டார் மேகநாதன்.

“கடன் அன்பை முறிக்கும் தங்கச்சி. வேற வழியில்லாமல்தான் கடன் வாங்கிட்டேன். இப்போ பணம் வந்ததும் அதைத் திருப்பித் தருவதுதானே முறை!” என்று அவள் கையில் கொடுத்து விட்டுத்தான் மறுவேலை பார்த்தார்.

அதை இப்போது அர்ஜுன் கூறுகிறான் என்றால், தங்களைப் பற்றிய பேச்சு எழுந்திருக்கிறது என்றுதானே அர்த்தம் என்று நினைத்தவள், திருவைப் பார்க்க, அவனும் ஆறுதலாகத் தலையசைத்துக் குழந்தைக்களைத் தூக்கித் தன் மடியில் வைத்துக் கொண்டு,

"ஓ... இதுக்குப் போயா இவ்வளவு அலப்பரை... அவன் புரியாமல் சொல்லியிருக்கான். நாம ஏழைங்க இல்லேடா... நீங்களே சொன்னீங்களே, டெய்லி சிரிச்சிக் கிட்டு இருக்கோம்னு. மனசில் சந்தோஷம் இல்லாத வன்தான் பரம ஏழை. மத்தவங்களுக்கு உதவி செய்யுற மனசில்லாதவங்கதான் கேவலமான ஏழை. அப்படிப் பார்த்தா... நாம ரொம்பப் பணக்காரங்க. புரியுதா? பணம் ஒண்ணு மட்டும் பெரிய விஷயம் இல்லடா கண்ணு... சரியா? இனிமே நீங்க அந்த வீட்டுக்குப் போக வேண்டாம். என்ன அண்ணி?" என்று கேட்க,

ஷர்மிளாவும் அரை மனதுடன் தலையாட்ட, திரு, "போதுமா? சரி, மணியாகிடுச்சு... போய்ச் சாப்பிடுங்க. இன்னைக்கு உங்களுக்குப் பிடிச்ச மெனு. ம்ம்... கமான்," என்று அழைத்துக் கொண்டு செல்ல, மனதில் கலக்கத் துடன் பார்த்துக் கொண்டிருந்தாள் ஷர்மிளா.

**அ**ன்றிலிருந்து அர்ஜுனின் வீட்டிற்கு ராமுவும் பாரதியும் செல்வதைக் குறைத்துக் கொண்டனர். வேதாவே அழைத்துச் செல்ல வந்தாலும், ஒரேயடியாக மறுத்து ஷர்மிளாவின் பின் ஒளிந்து கொள்ள, வேதா மிகவும் மனமொடிந்து போனாள்.

அதற்கு ஷர்மிளா, "விடு வேதா... சின்னப் பிள்ளை களுக்கு என்ன தெரியும்? போகப் போக அவனைப் பத்திப் புரிஞ்சு, சேருவாங்க. விடு," என்று சமாதானப் படுத்த,

வேதா அழுகையுடன், "இல்லை ஷர்மிளா... அவனுக்கு நல்ல புத்தி சொல்ல ஆளில்லை. அதான்

இப்படி ஆகிட்டான். குறைந்த பட்சம் உன் பிள்ளைகளுடன் சேர்ந்தாவது நல்ல வழி ஆவான்னு நினைச்சேன். அதுக்கும் கொடுத்து வைக்கலை. என் பிள்ளை யாருமில்லாமப் போயிடுவான் போலிருக்கே..." என்று தழுதழுக்க,

ஷர்மிளா, "அதெல்லாம் இல்லை வேதா. நாளைக்கு ஏதாவது அவசரம்னா அர்ஜுனை ரெண்டு பேரும் பார்த்துப்பாங்க. அவங்களைப் பத்தி எனக்குத் தெரியும். என்ன கோபமாக இருந்தாலும், ரெண்டும் மனசில் வெச்சுக்காதுங்க. ஆனா என்ன... கொஞ்சம் டைம் எடுக்கும். விடு. இதுக்குப் போய் மனசு வருத்தப் பட்டுக்கிட்டு..." என்று அவளைச் சமாதானப்படுத்துவதற்குள் ஷர்மிளாவிற்குப் போதும் போதும் என்றானது.

அன்றிலிருந்து குழந்தைகளுக்குக் கோடை விடுமுறை தொடங்கியது. தங்கள் சொந்த ஊரான அம்பாசமுத்திரத்தில் இருக்கும் குலதெய்வம் கோயிலுக்கு நேர்த்திக் கடன் செலுத்தப் போகலாம் என்று ஷர்மிளா விருப்பப்பட,

மேகநாதனும், "ஆமா ஷர்மி... நாமளும் பொங்கல் விடணும்னு நினைச்சு நினைச்சுத் தட்டித் தட்டிப் போகுது. எப்பவோ நேந்துகிட்டது... போய் முடிச்சிட்டு வருவோம். டேய் பிள்ளைகளா... என்ன, அம்பைக்குப் போகலாமா?" என்று கேட்க,

பாரதியும் ராமுவும் துள்ளிக் குதித்தனர்.

"ஹய்யா... ஜாலி. அம்பைக்குப் போய்த் தாமிர பரணியில் குளிக்கலாம். அப்பா, எனக்கு நீச்சல் கற்றுத் தருவியா?" என்று பாரதி கேட்க,

மேகநாதன், "ஆமா குட்டி... கண்டிப்பா கத்துத் தரேன்," என்று உச்சி முகர,

திரு, "அண்ணா... அதிசயமா ஐந்தருவி சிரிக்குது," என்று கூற,

பாரதி, "தித்தப்பா..." என்று பல்லைக் கடிக்க,

ராமோ, "பார்த்துக் குள்ளச்சி... அப்படியே மூழ்கிடப் போறே... இருக்கிற உயரத்துக்கு இந்த ஆசை வேற...?" என்று வார,

மேகநாதன், "டேய், சும்மா இருடா. நீ இந்த வயசிலேயே உயரமா இருந்தா அதுக்கு அவ என்ன செய்வா? என் பொண்ணு குள்ளமா இருந்தாலும் அழகுதான். சரி. நாமெல்லாம் நாளைக்கு அம்பைக்குக் கிளம்பறோம். என்ன, சரியா?" என்று கேட்க,

ஷர்மிளாவின் முகத்தில் மட்டும் லேசாக வாட்டம் தெரிய, திரு, "என்னாச்சு அண்ணி... ஏன் உங்க முகமே சரியில்லை?" என்று கேட்க,

ஷர்மிளா, "அதில்லை திரு... நம்ம கூட வேதாவும் வந்தா நல்லா இருக்குமே..." என்று கூற, தன் மனையாளின் மனநிலை புரிந்த மேகநாதன்,

"எனக்கு மட்டும் ஆசையில்லையா ஷர்மி. ஆனா ஹரிஹரன் ஒத்துக்க மாட்டாரே. வேணும்னா அர்ஜுனைக் கூட்டிட்டுப் போலாம். என்ன சொல்றே?" என்று கேட்க,

பாரதி மற்றும் ராமின் முகம் இருண்டது. ஆனாலும் தங்கள் தந்தையை எதிர்த்துப் பேச முடியாமல் மௌனம் சாதிக்க,

ஷர்மிளா, "சரிங்க... நான் கேட்டுப் பார்க்கிறேன்," என்று சொல்லி விட்டு, வேதாவின் வீட்டிற்குச் சென்று விஷயத்தைக் கூறிவிட்டு வர,

சிறிது நேரம் கழித்து வந்த வேதா மகிழ்ச்சியுடன், "ஷர்மிளா... அவர் எங்கேயோ வெளியூர் போறாராம். ரெண்டு நாள்தானே, அதனால் என்னையும் அர்ஜுனை யும் போயிட்டு வரச் சொன்னார்..." என்று கூற,

ஷர்மிளா மனம் மகிழ்ந்தாலும், குறும்புடன், "அவ்வளவு சீக்கிரம் அண்ணன் ஒத்துக்க மாட்டாரே... என்ன சொல்லிச் சமாளிச்சே?" என்று கேட்க,

வேதா, "அவர் என்னைக்குக் கேட்டதும் ஒத்துக் கிட்டார்? முதலில் கூடவே கூடாதுன்னு சொன்னார். அப்புறம் கொஞ்சம் கொஞ்சமாப் பேசிச் சமாளிச்சிட்டேன். சரி, நாமளும் வெளியூர் போறோம்... அவங்களும் போயிட்டு வரட்டும்னு நினைச்சு விட்டுட்டார்," என்று கூற,

ஷர்மிளா, "இப்போதான் நிம்மதியா இருக்கு வேதா. உன்னை விட்டுட்டுத் தனியா எப்படிப் போறதுன்னு நினைச்சிக்கிட்டே இருந்தேன். இனிமே ஜாலியாப் போகலாம்," என்று கூறிவிட்டு, பெண்கள் இருவரும் நாளைக்கான பயணத்துக்கு ஏற்பாடு செய்ய ஆரம் பித்தனர்.

**"ஏ**ய் ராம். எனக்கு அவன் வந்தது கொஞ்சம் கூடப் பிடிக்கலைடா!" என்று நூறாவது முறையாகக் கூறிய பாரதியைச் சிரிப்புடன் பார்த்தான், அவள் சகோதரன் ராம்.

அவர்கள் தங்கள் குலதெய்வம் கோயிலுக்கு வந்து பொங்கலிடும் வேலையில் இருந்தனர். பெரியவர்கள் அனைவரும் தங்கள் வேலையில் மூழ்கி இருக்க, தான் எடுத்து வந்த கையளவு வீடியோ கேமை விளையாடிக் கொண்டு, ஒரு வித அலட்சியத்துடன் அமர்ந்திருந்த அர்ஜுனைப் பார்த்துப் பாரதிக்குப் பற்றிக் கொண்டு வந்தது. அதனால்தான் மேற்கூறிய வசனம்.

அதைக் கேட்ட ராம், “என்னடி பண்றது? இன்னும் ஒருநாள்தான்... பொறுத்துக்கோ. நாளைக்கு இந்நேரம் ரயில் ஏறிடுவோம். எனக்கும்தான் பிடிக்கலை. ஆனால் என்ன பண்றது... நம்ம அம்மா அப்பாவுக்குப் பிடிச் சிருக்கே!” என்று சமாதானப்படுத்த,

பாரதி, “அண்ணா, பாருண்ணா... வந்ததில் இருந்து நம்ம கிட்ட பேசக் கூட இல்லை. அவன் பாட்டுக்குப் பெரிய இவனாட்டம் உட்கார்ந்து இருக்கான், சீன் பார்ட்டி. இதில் இந்த அம்மாவும் அப்பாவும் வேற, போய்ப் பேசு பேசுன்னு சொல்றாங்க...” என்று கத்த,

ராம், “ஏய்... கத்தாதே! சரி, அம்மா அப்பா சொன்னா நீ கண்டுக்காதே. நான் பார்த்துக்கிறேன். நாமளா போய் அவன் கிட்ட பேச வேண்டாம், சரியா...? டீல்...” என்று கேட்க,

பாரதியும் அர்ஜுனை முறைத்தவாறே, “ஓ.கே. டீல்,” என்று ஒத்துக் கொண்டாள்.

ஃ வடிவத்தில் கற்களைக் கூட்டி விறகுகள் வைத்து, நெருப்பு மூட்டி, ஊதுகுழலால் ஊதி ஊதிப் பெரிதாக்கிப்

புத்தம் புதுப் பச்சரிசியில் பாலும் நெய்யும் விட்டுக் கிளறிக் கிளறி, அதனோடு வெல்லத்தையும் சேர்த்துப் பொங்க லிட்டுக் கொண்டிருந்தனர் மேகநாதன் ஷர்மிளா தம்பதியர்.

அனைவரும் மகிழ்வதற்கேற்பப் பொங்கல் பானை யும் பொங்கி விட, அனைவரின் மனதும் பக்தியிலும் நிம்மதியிலும் பொங்க ஆரம்பித்தது.

ஷர்மிளாவும் வேதாவும்தான் ஓடியாடி வேலை பார்த்துக் கொண்டிருந்தனர். சாமிக்குப் படைத்த பொங் கலைத் தன் பிள்ளைகளுக்குக் கூட முதலில் தராமல், அர்ஜுனுக்கு ஊட்டி விட்டுச் சிறிது யாழினியின் வாயிலும் வைத்தாள் ஷர்மிளா. அதைக் கண்டு அனைவரின் முகத்திலும் ஆனந்தம் இருந்ததே தவிர, வெறுப்பு இல்லை.

அர்ஜுனைத் தன் பிள்ளைகளிடம் சேர்க்க மேகநாதன் எடுத்த அத்தனை முயற்சிகளும் வீணாக, அவர்களாகவே சேரட்டும் என்று விட்டு விட்டார் அவர்.

வந்த கையோடு யாழினிக்கு மேகநாதனின் மடியில் வைத்தே முடியிறக்கிக் காது குத்தி விட்டாள் வேதா.

மேகநாதன் கூட, "தங்கச்சி... உன் சொந்தத்தில் யாரையாவது வெச்சி செய்மா... ஹரிஹரன் வேற இல்லாத சமயம் இப்படிச் செய்யறது தப்பும்மா..." என்று தயங்க,

வேதா, "அய்யோ அண்ணா... அவருக்கு இந்தச் சம்பிரதாயத்தில் எல்லாம் நம்பிக்கை கிடையாது. அதான் அர்ஜுனுக்குக் கூட இதெல்லாம் செய்யலை. உங்களை விட்டா எங்களுக்கு வேற யாருண்ணா இருக்கா? எனக்கு

யாழினிக்கு உங்களை வெச்சிச் செய்யணும்னு ஆசையா இருக்குண்ணா. ஒரு வயசுதானே ஆகுது. அதான் ஒண்ணும் தப்பில்லை... எனக்காக அண்ணா..." என்று கெஞ்ச,

மேகநாதனும் வேறு வழியின்றி ஒத்துக்கொள்ள, யாழினிக்கு முடியிறக்கிக் காது குத்தும் சடங்கு துவங்கி இனிதாக நிறைவுபெற, அனைவரும் மனங்கொள்ளாச் சந்தோஷத்துடன் தங்கள் இருப்பிடத்திற்குச் சென்றனர்.

அப்போது அவர்களுக்குத் தெரியவில்லை, அவர்கள் சேர்ந்து ஒன்றாக இருக்கிற இறுதி நிகழ்ச்சி இதுதான் என்று.

அடுத்த நாள் காலையே ராமுவும் பாரதியும் மேகநாதனின் கழுத்தைக் கட்டிக் கொண்டு தொங்க ஆரம்பித்து விட்டனர்.

"அப்பா... ஆத்துக்குப் போகலாம்ப்பா. இன்னைக்குச் சாயந்திரம் போயிடுவோம்தானே! அதுக்குள்ள எனக்கு ஆத்துக்குப் போயே ஆகணும்," என்று அடம் பிடிக்க,

அர்ஜுனோ, "ஆத்துக்கெல்லாம் நான் வரலை. எனக்குப் பிடிக்காது," என்று முகத்தில் அடித்தாற்போல் கூற,

பாரதி, "உன்னை யாரு கூப்பிட்டா? எங்கப்பா கிட்ட நாங்க கேட்கிறோம். நாங்க போவோம்... நீ இங்கேயே இரு," என்று கூற,

அதைக் கேட்ட வேதாவின் முகம் வாட, அதைப் பார்த்த ஷர்மிளா, "ஏய்... வாயிலேயே போடுவேன். என்னடி, திமிரா?" என்று எகிற,

அர்ஜுன் பல்லைக் கடிக்க, ராம் அவனை எரிச்சலுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

வேதா, "விடு ஷர்மி. அவங்க போகட்டும். இவனுக்கும் தனியா இருந்தாத்தான் புத்தி வரும்," என்று கூற,

மேகநாதன் நடுவில் புகுந்து, "யாரும் யாரையும் விட்டுட்டுப் போக வேண்டாம். எல்லோரும் போவோம், சரியா? ம்ம்... கிளம்புங்க..." என்று உற்சாகத்துடன் கூற,

அனைவரும் ஒரு வழியாகச் சமாதானமாகிக் கிளம்ப ஆரம்பித்தனர்.

வீட்டை விட்டு அனைவரும் காலை 9 மணியளவில் கிளம்ப, கடைசியாக வீட்டைப் பூட்டி விட்டு வந்த மேக நாதன் காலில், அங்கிருந்த பூச்செடி தடுக்கியது.

ஷர்மிளா பதறி, "என்னங்க, தடுக்குது. கொஞ்சம் உட்காருங்க..." என்று கூற,

மேகநாதன், "சீ லூசு... தெரியாமல் காலை வெச்சாத் தடுக்கத்தான் செய்யும். சும்மா பயப்படாம வா," என்று அவளை அழைத்துக் கொண்டு காரில் ஏறி அமர்ந்தார்.

ஒரு வழியாகக் குழந்தைகளின் ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம், சிறு சிறு ஊடல்களுடன் தாமிரபரணி ஆற்றிற்கு வந்தனர் அந்தக் குடும்பத்தினர்.

தன் அழகான வெளித் தோற்றத்தோடும், சலசலவெனச் சத்தத்தோடும் மிகப் பெரும் ஆபத்தை உள்ளடக்கிச் சுறுசுறுப்பாக ஓடிக் கொண்டிருந்தாள் அந்த ஆற்று மங்கை.

வந்தவுடனேயே குழந்தைகள் இறங்கித் தெறித்து ஓட, அவர்களின் பின் திருவும் ஓடினான். பின் ராம் நீச்சலடிக்க, திரு, பாரதிக்கு நீச்சல் கற்றுக் கொடுக்க,

அர்ஜுன் மட்டும் ஆற்றின் பக்க வாட்டில் சற்றே தூரமாக இருந்த யாருமில்லாத படித்துறையில் அமர்ந்து, தன் ஆஸ்தான வீடியோ கேம் விளையாட்டை விளையாட ஆரம்பித்தான்.

வேதா, யாழினியைப் பசியாற்ற காருக்கு எடுத்துப் போக, மேகநாதன் தன் மனைவி ஷர்மியின் அருகில் நெருங்கி, "இந்த வயசிலும் எவ்ளோ அழகா இருக்கேடி. கொள்ளை அழகுடி நீ..." என்று மையலுடன் கூறி, அவள் கையைப் பிடித்துக் கொள்ள,

ஷர்மிளா பதறி, "சீ... என்னங்க இது? கையை விடுங்க..." என்று தன் கையை விடுவித்துக் கொள்ள,

மேகநாதன், "அடடா... வெட்கத்தைப் பாரு. ஏன் கையைப் பிடிச்சா என்ன? என் பொண்டாட்டி கை... நான் சாகிறவரைக்கும் பிடிப்பேன்," என்று கண்களில் காதலைத் தேக்கிக் கூற,

ஷர்மிளா குறும்புடன், "ம்ஹூம்... இன்னைக்கு என் புருஷன் சரியில்லை. இனி நான் உங்க பக்கத்தில் இருந்தால் எல்லோரும் என்னைக் கிண்டல் பண்ற நிலைமைக்குக் கொண்டு வந்து விட்டுருவீங்க. நான் போறேன்..." என்று ஓடப் பார்க்க,

அவளைப் பிடித்து உட்கார வைத்தார் மேகநாதன். "போதும்... போதும். நீ எங்கேயும் போக வேண்டாம்.

இங்கே இருந்து குழந்தைகளைப் பாரு. நான் போய் ஏதாவது தின்பண்டம் வாங்கியாறேன். தண்ணியில இருந்து வெளியே வந்ததும் குழந்தைகளுக்குப் பசிக்கும்..." என்று சொல்லி விட்டு நடந்த தன் கணவனையே காதலுடன் பார்த்துக் கொண்டிருந்தாள் ஷர்மிளா.

அப்போதுதான் அந்த விபரீதம் நடந்தது. திரு, யாரோ தன் நண்பன் வந்திருப்பதைக் கண்டு கரையேறிப் பேச ஆரம்பிக்க, ராமுவும் பாரதியும் அவனோடு கரை யேறினர்.

ராம் தன் தாயை நோக்கிப் போக, பாரதியோ அர்ஜுனைக் கண்டு தன் குறும்புத்தனம் மேலோங்க, அவன் இருந்த படித்துறைக்குச் சென்று, "ஓ... சீன் பார்ட்டி இங்கேதான் இருக்கியா? எங்க கூட எல்லாம் சேர மாட்டே இல்லை... உன்னை என்ன செய்யறேன்னு பார்..." என்று கூறிக்கொண்டு, அவன் பின்னால் நின்று அவனைப் பயமுறுத்துவதற்காகப் "பே..." என்று கத்த, அர்ஜுன் பதறி எழ, யாரும் உபயோகப்படுத்தாத அந்தப் படித்துறையின் பாசி அவன் கால்களை வழுக்க, சடாரென்று படிகளில் உருண்டு ஆற்றுக்குள் விழுந்தான் அவன்.

கண் இமைக்கும் நேரத்தில் நடந்து விட்ட அந்த நிகழ்ச்சியில், என்ன செய்வதென்று தெரியாமல் பாரதி அப்படியே நின்று விட, அரைகுறையாகக் கற்றுக் கொண்ட நீச்சல் கை கொடுக்காமல், தண்ணீரில் மூழ்க ஆரம்பித்தான் அர்ஜுன். எல்லோருமே தொலைவில் இருக்க, யாருக்கும் எதுவும் தெரியவில்லை.

இந்நிலையில் திருவும் தன் நண்பனோடு பேசிக்கொண்டே பக்கத்தில் இருந்த சந்தைக்குச் சென்று

விட, பாரதி அப்போதுதான் சுயநினைவு வந்து, “அம்மா...” என்று கத்தினாள்.

அது கேட்காமல் போக, “ம்மா... அஜுன்... தண்ணி... தண்ணியில் விழுந்துட்டான்...” என்று தன் சக்தியெல்லாம் சேர்த்துக் கொண்டு கத்த, முதலில் வந்தது ஷர்மிளாவும் ராமுவும்தான்.

அதன் பின்னாடியே, “ஐயோ அர்ஜுன்...” என்றபடி வேதா ஓடி வர,

சுற்றும் முற்றும் பார்த்தாள் ஷர்மிளா. தன் கணவனும் மைத்துனனும் கண்களுக்குத் தெரிகிறார்களா என்று பார்த்தவள், அவர்கள் இல்லை என்றதும் அர்ஜுனைப் பார்க்க, அவனோ தண்ணீரைக் குடித்து அரை மயக்கத்திற்குப் போய்க் கொண்டிருந்தான்.

வேதா, “ஐயோ அர்ஜுன்... அர்ஜுன்...” என்று தலையில் அடித்துக் கொண்டே ஓடி வர,

சற்றும் யோசிக்காமல் தண்ணீருக்குள் குதித்தாள் ஷர்மிளா. அந்த இடத்தில் ஆழம் வேறு அதிகமாக இருக்க, அர்ஜுனைப் பிடிப்பதற்குள் அவளின் பாதி சக்தி வடிந்து போனது. அர்ஜுனும் மயக்கத்திற்குச் சென்று விட, ஒரு வழியாக அவன் தலைமுடியைக் கொத்தாகப் பிடித்து மேலே இழுத்துக் கரையை நெருங்கினாள்.

அதைக் கண்டு அனைவரின் முகமும் பிரகாசமாக, ஷர்மியும், “அர்ஜுன்... ஒண்ணுமில்லை அர்ஜுன்... ஆன்ட்டி இருக்கேனில்லே... ஒண்ணுமில்லை...” என்று அவனை ஆசுவாசப்படுத்தியவாறே கரையை நெருங்க அப்போதுதான் அது நிகழ்ந்தது.

ஆற்றுக்குள் சுழல் ஒன்று உருவானது. சிறியதாக ஆரம்பித்த சுழல், பெரிதாக, ஷர்மிளாவும் அர்ஜுனும் அதில் மூழ்க ஆரம்பிக்க,

வேதா, “ஐயோ ஷர்மி... அர்ஜுன்... ஐயோ... நான் என்ன பண்ணுவேன்... என்ன பண்ணுவேன்...” என்று மடார் மடார் என்று தலையில் அடித்துக் கொண்டு மயங்கி விழ, ராம் தன் தந்தையையும் சித்தப்பாவையும் அழைத்து வர ஓடினான்.

பாரதி சிலையாக நிற்க, மிகக் கடுமையாக மாறிய அந்தச் சுழலில் மாட்டிக் கொண்டனர் ஷர்மிளாவும் அர்ஜுனும். சுழற்றி அடித்த சுழலில் ஒரு பாறையில் மோதிய ஷர்மிளாவின் இடுப்பெலும்பு நொறுங்கியது. வலி அவள் உச்சிவரை தாக்க, இனிமேல் தன்னால் உயிர் பிழைக்க முடியாது என்று தெரிந்து, மூழ்கிய அர்ஜுனிடம் தன் உயிர்க்காற்றை ஊதியபடி இருந்தாள்.

“அர்ஜுன்... மனசு விட்டுறாதே. நான் உன்னைக் கண்டிப்பா கா... காப்பாத்துவேன். பயப்படாதே... முழிச்சுக்கோ...” என்று தன் உடம்பில் இருந்த மிச்சமான உயிர்க் காற்றையும் அவன் வாயோடு தன் வாயை வைத்துப் புகட்ட, ஒரு கட்டத்தில் அவள் ஊதிய காற்றின் பலனாக அவன் லேசாக இரும ஆரம்பித்தான்.

அந்தச் சமயத்திலும் அவனுக்காக மகிழ்ந்த அவள், “நீ உயிரோட இருக்கணும் அர்ஜுன்... நல்லா இருக்கணும். என்னால நீந்த முடியலை. இந்த ஆன்ட்டியை மறந்துடாதே!” என்று தன் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு, தன் உடம்பில் இருந்த சக்தி முழுவதையும்

திரட்டி, ஒரு தடவை முழுதாக எழுந்து, அவனைக் கரையை நோக்கித் தள்ளினாள்.

அப்போது அவன் சரியாக நகரவில்லை. மீண்டும் தள்ளினாள். இப்படித் தள்ளித் தள்ளி அவனைச் சுழலில் இருந்து விலக்கி, அவள் சுழலில் மாட்டிக் கொண்டாள்.

அவனைத் தள்ளி விட்டுக் கரையில் ஸ்தம்பித்துப் போய் நின்றிருந்த பாரதியைப் பார்த்த ஷர்மிளா, ஒரு தெய்விகச் சிரிப்புடன், "அர்ஜுனை நல்லாப் பார்த்துக்கோ குட்டி..." என்று கத்த, அந்தச் சுழல் அவள் உயிரைக் குடிக்கும் ஆசையில் இழுத்துச் சென்றது.

ராம் வந்து விஷயத்தைக் கூறியதும், உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு வந்த மேகநாதனுக்கு, அப்போதுதான் தன் மனைவியைச் சுழல் அடித்துச் செல்வது புரிய, ஓடிச் சென்று குதித்து, அர்ஜுனை முதலில் இழுத்து வந்து கரையில் போட்டார். பின் தன் மனைவியின் பின்னாலேயே சென்றவர்,

"ஷர்மி... ஷர்மி..." என்று கத்திக் கொண்டே அவளைப் பிடித்து இழுக்க,

ஷர்மிளா, "நான் பிழைக்க மாட்டேங்க. பாறையில் இடித்து உடம்பு ரணமாயிடுச்சு. என்னை விடுங்க... கிட்டே வராதீங்க..." என்று தீனமான குரலில் கூற,

மேகநாதன் ஒரு முடிவுடன் சுழலின் உள்ளுக்குள் சென்றார். ஷர்மிளா அவரை அதிர்ந்து போய்ப் பார்க்க, அவளை நெருங்கி அவள் கையைப் பிடித்துக் கொள்ள, இந்த முறை அவர் கையை ஷர்மிளா விலக்கவில்லை.

கண்களில் காதலுடன் எதுவும் செய்யத் தோன்றாமல் தன் கணவனுடன் ஒன்ற, அவளது உயிரைக் குடித்த சுழல், பசியாறாமல் மேகநாதனின் உயிரையும் குடிக்கும் ஆசையில், இருவரையும் ஒரு பெரிய பாறையின் மீது மோத, தலையில் பலமாகக் காய முற்றதால், நிமிடங்களில் அவர்களின் உயிர்ப் பறவை ஜோடியாகப் பறந்து சென்றது.

## 12

விசையுறு பந்தினைப் போல் - உள்ளம்
வேண்டிய படிசெல்லும் உடல்கேட்டேன்!
நசையுறு மனங்கேட்டேன் - நித்தம்
நவமெனச் சுடர்தரும் உயிர்கேட்டேன்!
தசையினைத் தீச்சுடினும் - சிவ
சக்தியைப் பாடுநல் லகங்கேட்டேன்!
அசைவறு மதிகேட்டேன் - இவை
அருள்வதில் உனக்கேதுந் தடையுளதோ?

'சங்கிலித் தொடர் வினை' என்று பௌதீகத்தில் கற்றுத் தருவர். ஒரு சிறு வினை எவ்வாறு ஒரு தொடர் வினையை உருவாக்குகிறது என்று அனைவரும் வியந்திருக்கலாம்.

ஆனால், அதை அந்தக் குடும்பம் கண்ணுக்கு முன் பார்த்திருந்தது. யாருமே இல்லாத அந்த நேரத்தில், அவர்கள் அந்த ஆற்றுக்குச் சென்றது அவர்கள் குற்றமா?

அல்லது, அர்ஜுனைப் பயமுறுத்திய பாரதி குற்றமா? இல்லை... ஒன்றையும் யோசிக்காமல் சட்டென்று ஆற்றில் குதித்த ஷர்மிளாவின் குற்றமா?

அல்லது, மனைவியை மரணத்தில் கூடப் பிரியக் கூடாது என்று பின்னாடியே குதித்து உயிர் விட்ட மேக நாதனின் குற்றமா?

இதில் யாரும் குற்றம் செய்யவில்லை. அவரவர் மனதிற்கு அந்தந்த நிலைக்கு என்ன தோன்றியதோ, அதைச் செய்தனர். அந்த நேரத்தில் அவர்களுக்கு மற்றவரைப் பற்றிய எந்த எண்ணமும் வரவில்லை.

அது மேற்கூறிய அனைவருக்குமே பொருந்தும். ஆனால், அதனால் பாதிக்கப்பட்டவர்கள் யார் என்று பார்ப்போம்.

தண்ணீரில் அமிழ்ந்து, சிறிது உப்பி, அந்த நிலையிலும் பற்றிய கைகளை விடாமல் கிடத்தப்பட்டிருந்த ஷர்மிளாவையும் மேகநாதனையும் கண்ட அந்த ஊர் மக்களுக்கு, மனம் பாறையாகக் கனத்தது. ராமுவும் பாரதியும் கதறிய கதறலில் அங்கே ஓடி வந்த ஊர் மக்கள், இருவரின் உடலையும் பெரும் பாடு பட்டுக் கிட்டத்தட்ட ஆறு மணி நேரம் கழித்துக் கண்டுபிடித்தனர்.

ஆனால், அனைவரும் மிகவும் வருந்தியது திருச் சிற்றம்பலத்தைப் பார்த்துத்தான். கிட்டத்தட்டப் பைத்தியக் காரனைப் போல் உளறிக் கொண்டிருந்தான்.

"ஐயோ... எவ்வளவு பெரிய பாவம் செய்து விட்டேன். இந்த நேரம் பார்த்தா நான் அவங்க கூடப் போகணும்?

எந்த நேரமும் கூடவே சுத்திட்டு இருப்பேனே... இப்படிக் காலம் முழுக்க என்னைப் பாவியாக்கிட்டுப் போயிட்டியே அண்ணா... இந்தச் சின்னப் பிள்ளைகளை நான் எப்படிக் காப்பாத்தப் போறேன்? அப்பா அப்பான்னு உசிரை விடுமே!

"என்னை அம்மா மாதிரிப் பார்த்துக்கிட்டீங்களே அண்ணி... இந்த மகன் மேலே நம்பிக்கை இல்லாமலா நீங்களே குதிச்சீங்க? ஐயோ... நான் பாவி. நான் வாழவே கூடாது. நான் வாழவே கூடாது..." என்று அங்கிருந்த மரத்தில் கொண்டு போய்த் தலையை மோத, அந்த ஊர் மக்கள் அவனைத் தடுத்து,

"என்ன தம்பி... நீங்களே மனசு விட்டா இவங்க எல்லாரையும் யார் சமாதானப்படுத்துறது? இந்த மாசமே அப்படித்தான் தம்பி. ஆற்றுச் சுழல் ஜாஸ்தியா வரும். ஒரு வாரம் முன்னாடி வெள்ளம் வந்த ஆறு. அதான் நாங்க யாருமே அந்தப் பக்கம் போகாமல் இருந்தோம். இப்படி வந்து மாட்டிக்கிட்டீங்களே தம்பி. சீக்கிரமா ஆக வேண்டிய காரியத்தைப் பாருங்க. நீங்க ஒருத்தர்தான் ஆம்பிளையா இருக்கீங்க. நீங்கதான் முன்னிருந்து நடத்தணும்..." என்று ஒரு பெரியவர் கூற,

அப்போதுதான் திருவிற்குப் புரிந்தது. ஆம்! இனி நாம்தான் எல்லாம். தான் இப்படி நொடிந்து விட்டால், இவர்கள் அனைவருக்கும் யார் பொறுப்பு என்று தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொண்டு, தன் அண்ணன் அண்ணியின் இறப்பின் சோகத்தைச் சற்றே தள்ளி வைத்தான். இல்லை... தள்ளி வைக்கும் கட்டா யத்தில் இருந்தான்.

மயக்கத்திலிருந்து தெளிந்த அர்ஜுன் அதிர்ச்சியில் உறைந்திருக்க, அவனை அணைத்தபடி அழுது கொண்டிருந்தாள் வேதா.

அவளிடம் சென்று, "அக்கா... தயவுசெய்து அழாதீங்க. யாழினிக்குப் பால் கொடுங்க. அர்ஜுனைச் சமாதானப்படுத்துங்க. நீங்கதான் பார்த்துக்கணும்.." என்று தன் துக்கத்தை மறைத்துக் கொண்டு கூற,

வேதா அவன் கையைப் பிடித்து, "என்னை மன்னிச்சிடுன்னு கேட்கக் கூட எனக்குத் தகுதியில்லை திரு. என்னால்தான் திரு... நான்தான் விழுந்திருக்கணும்... அதுக்குப் பதிலா ஷர்மி... எனக்கு இன்னும் கண்ணு முன்னே இருக்கு திரு... ஐயோ... என்னால முடியலையே திரு. சாகும் போது கூட கையைப் பிடிச்சிக்கிட்டு... எவ்ளோ காதல் திரு அவங்களுக்குள்ளே... இந்தப் பிள்ளைகளைப் பத்தி கூட நினைக்கலையே!" என்று முனகலுடன் கூற,

திரு, அவளைச் சமாதானப்படுத்தும் பொருட்டு, "இதில் தப்பு உங்க மேலே மட்டுமில்லை அக்கா. எல்லார் மேலேயும்தான். நானும் நிரபராதி இல்லை. அதனால் நீங்க மட்டும் நினைச்சு நினைச்சு உருகுறதை நிறுத்துங்க. அவங்க வாழ்வில் மட்டுமில்லை, சாவிலும் ஒண்ணா சேர்ந்துட்டாங்க. இந்தக் கொடுப்பினை யாருக்கு வரும்?

"அண்ணிதான் அன்னைக்கே ராமுவும் பாரதியும் என் பொறுப்புன்னு சொல்லிட்டாங்களே... அந்த நிம்மதியில் தான் அக்கா, ஒண்ணா போயிட்டாங்க. இனி அது என் கவலை. அதுவும் ஒரு உயிரைக் காப்பாத்தத்தானே தங்கள் உயிரை அர்ப்பணிச்சாங்க. அதை நாம தப்பாகப்

பேசக்கூடாது," என்று பலவாறாகக் கூறி அவளைத் தேற்றினான்.

தன் தாயின் காலைப் பிடித்துக் கொண்டு அழுது கொண்டிருந்த ராமின் பின்னால் அமர்ந்த பாரதி, ராமிடம், "அண்ணா... ஏன் அண்ணா இவ்ளோ நேரம் தூங்கறாங்க, அம்மாவும் அப்பாவும்? ஏன் எல்லாரும் அழறீங்க...? அவங்களை எழுப்புங்கண்ணா... நாம வீட்டுக்குப் போகலாம்..." என்று, கள்ளங்கபடமின்றிக் கூற,

அவளை ஓடி வந்து அணைத்துக் கொண்ட திரு, "அம்மாவும் அப்பாவும் எழ மாட்டாங்கடா. அவங்க சாமியாகிட்டாங்க..." என்று கதற,

ராமுவும், "ஆமா குட்டி... அவங்க சாமியாகிட்டாங்க... தாத்தாவும் பாட்டியும் ஆனாங்க இல்லை... அந்த மாதிரி..." என்று தன் தங்கையையும் சித்தப்பாவையும் கட்டிக் கொண்டு அழ,

பாரதி அதிர்ந்து, "அப்போ தாத்தா பாட்டி மாதிரி, இனிமே வரமாட்டாங்களா? இல்லை... இல்லை... எனக்கு அம்மா வேணும். இனிமே நான் சண்டை போட மாட்டேன். அண்ணா, ப்ளீஸ்... அண்ணா, அம்மா அப்பாவை வரச் சொல்லுண்ணா. நான் இனிமே அடமே பண்ணமாட்டேன். அவங்களை வரச் சொல்லுண்ணா..." என்று கத்தியபடியே,

தன் தாய் தந்தையின் உடலிடம் சென்று, "நீங்க மட்டும் ஒண்ணா போயிட்டீங்க. என்னையும் கூப்பிட்டுப் போங்கப்பா. இனிமே நான் நல்ல பிள்ளையா இருக் கேம்மா... அம்மா! என்னை அடிம்மா... எப்பவும்

கொட்டுவியே... கொட்டும்மா... அப்பா... ஏதாவது செய் யுங்கப்பா. ஏன் எதுவும் செய்ய மாட்டேன்றீங்க...?" என்றவள்,

திருவிடம் சென்று, "சித்தப்பா... ஏதாவது செய் சித்தப்பா. எனக்கு அம்மா அப்பா வேணும் சித்தப்பா. அவங்களை எழுப்பு. ப்ளீஸ்... நான் என்ன சொன்னாலும் செய்வே இல்லை. சித்தப்பா... ஏதாவது பண்ணு... எனக்கு அம்மா அப்பா வேணும்..." என்று உலுக்கியவளைப் பற்றி,

"நான் என்னடி செய்வேன்? அவங்க செத்துப் போயிட்டாங்கடி. இனிமே நான்தான் உனக்கும் ராமுவுக்கும் எல்லாம். அம்மாவும் நான்தான், அப்பாவும் நான்தான். அவங்க போயிட்டாங்க குட்டி..." என்று கத்த, பாரதி அதிர்ச்சியில் மயங்கி விட்டாள்.

பதறிப் போன வேதா, அவளை ஓடி வந்து தூக்கி, "என்ன திரு... சின்னப் பொண்ணைப் போய் இப்படி அதட்டுவாங்களா?" என்று கடிந்து கொள்ள,

திரு உறுதியுடன் முடிவெடுத்திருந்தான். "இல்லை அக்கா... அவ மயக்கத்திலேயே இருக்கட்டும். அதுக் குள்ளே நாம செய்ய வேண்டியதை முடிச்சிருவோம். இது எங்க சொந்த ஊர்தான். இங்கேயே அவங்களோட இறுதிச் சடங்கை முடிப்போம்..." என்று கூற,

வேதா, "திரு... மெட்ராசுக்கு எடுத்துப் போக வேண்டாமா?" என்று கேட்க,

திரு, "இல்லைக்கா. ஏற்கெனவே உடல் நல்ல நிலையில் இல்லை. அவங்களை இன்னும் பாடுபடுத்த

வேண்டாம். இங்கேயே செய்துடலாம்...” என்று தழுதழுப்புடன் கூற,

வேதா கண்ணீருடன் ஷர்மிளாவிடம் சென்று, “ஷர்மி... நீ என்னை விட்டுப் போயிட்டியாடி. இன்னும் என்னாலே நம்ப முடியலையேடி. ஆத்துல குதிக்கிறதுக்கு முன்னாடி என்னை ஒரு பார்வை பார்த்தியே... அது மட்டும்தான் என் கண்ணுல நிக்குதுடி. ஏன்டி இப்படிச் செஞ்சே? என்னைக் கடன்காரியா ஆக்கிட்டுப் போயிட்டியேடி பாவி... இவனைக் காப்பாத்தணும்னு உனக்கென்னடி தலையெழுத்து...?” என்று கதற,

அங்கே எந்தவித உணர்வையும் காட்டாமல் வந்து சேர்ந்தார் ஹரிஹரன். வந்தவர், அவர்களின் மேல் பெயருக்கு ஒரு மாலையைப் போட்டு விட்டு, அர்ஜுனை அழைக்க, அப்போதுதான் சுயநினைவு வந்தாற்போல், “அப்பா...” என்ற அலறலுடன் ஓடிச் சென்று அவர் மடியில் விழுந்தான் அர்ஜுன்.

முன்பே அர்ஜுனுக்கு அதிர்ச்சிதான். தண்ணீரில் விழுந்ததும் மயங்கியதும்தான் அவனுக்கு நினைவிருந்தது. ஷர்மிளா குதித்ததோ மேகநாதன் கரையில் போட்டதோ எதுவுமே அவனுக்கு நினைவில்லை. ஆனால், தன்னைக் காப்பாற்றப் போய்த்தான் இறந்தார்கள் என்று தெரிந்தது.

அது அவனுக்கு முதலில் அதிர்ச்சியைத் தந்து நெகிழ வைத்தாலும், அதன் பிறகு அவனைப் பார்த்த எல்லோரும், உன்னால்தான் அவர்கள் உயிரை விட்டார்கள் என்று கூறும்போது பயமும் குற்ற உணர்வும் தான் தோன்றியது.

இவை எல்லாவற்றிற்கும் மேல், தன் தாயே இப்படி அவர்களிடம்,

"அவனைக் காப்பாத்தணும்னு உனக்கென்னடி தலையெழுத்து..." என்று கதறும்போது, அவனின் குற்ற வுணர்ச்சி வெறுப்பாக மேலோங்கியது. அந்தப் பத்து வயதுச் சிறுவன், மனதளவில் சுக்கல் சுக்கலாக நொறுங் கினான். அவனால் அந்த வயதில் அவ்வளவுதான் சிந்திக்க முடிந்தது.

கிட்டத்தட்ட சாவையே தொட்டு விட்டு வந்திருக்கும் தன் மகனைக் கண்டு கொள்ளாமல், அவனைக் காப் பாற்றி உயிர் விட்டவர்களையே உயர்வாக நினைக்கும் வேதாவிடம் இருந்து அந்த நிமிடத்தில் இருந்து விலகத் துவங்கினான். அவனைக் காப்பாற்ற நினைத்து உயிர் விட்டவர்களின் உயிர்த் தியாகத்தின் அருமையை அவனின் பக்குவ மில்லாத மனதால் உணர முடியவில்லை. இப்படியான எண்ணப் போராட்டங்களில் இருந்தவன், ஹரிஹரன் வந்ததும், தன் ஒரே பற்றுக்கோலான அவரைக் கண்டதும் ஓடிச் சென்று கட்டிக் கொள்ள, அதைப் பார்த்த ராமின் கண்கள் துடித்தன.

தன் தாயும் தந்தையும் யாருக்காக உயிர் விட்டார்களோ, அதை அவன் கொஞ்சம் கூட மதிக்காமல், ஏனோ தானோ என்று வந்த ஹரிஹரனைப் பார்த்து ஓடியதைக் கண்ட அந்த எட்டு வயதுச் சிறுவனுக்கு ரௌத்திரம் வராதா என்ன? அக்னியில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ?

எனவே ஓடிச் சென்று அர்ஜுனைப் பிடித்தவன், "ஏன்டா... உன்னைக் காப்பாத்தத்தானே எங்க அம்மாவும்

அப்பாவும் சாமி கிட்டப் போனாங்க. நீ கொஞ்சம் கூட ஃபீல் பண்ண மாட்டியா? அப்பான்னு ஓடுறே...? எங்க அம்மாவையும் அப்பாவையும் உங்க அப்பா திருப்பித் தருவாராடா... சொல்லுடா?" என்று அவனைப் பிடித்துத் தள்ள, இதைச் சற்றும் எதிர்பார்க்காத அர்ஜுனின் தலை சுவரில் மோதி, இரத்தம் வழியத் துவங்கியது.

அதைப் பார்த்த திரு ஓடி வந்து, "ராம்... என்ன பண்ற...?" என்று அவனைப் பிடிக்க,

ராம் அதே ரௌத்திரத்துடன், "விடுங்க சித்தப்பா... நாம எவ்ளோ அழறோம்... அவன் கொஞ்சமாச்சும் அழறானா பாருங்க சித்தப்பா. அவனால்தானே சித்தப்பா எல்லாம்..." என்று கத்தி முடித்து அழ ஆரம்பிக்க, அர்ஜுன் தலையின் வேதனை தாங்காமல் நடுங்கினான்.

ஹரி, "என்னய்யா நினைச்சிட்டு இருக்கீங்க உங்க மனசுல? ஏதோ உதவி செஞ்சீங்கன்னு வந்தால், என் பையனையே அடிக்கிறீங்க?" என்று ஆர்ப்பாட்டம் செய்ய ஆரம்பித்தார்.

அர்ஜுனுக்குப் பாரதியால்தான் தண்ணீரில் விழுந்தேன் என்று கூறத் தோன்றியது. ஆனால், ஏனோ கூறாமல், மயங்கிக் கிடந்த அவளைத் தீப்பார்வை பார்த்துவிட்டு, ஹரிஹரனிடம், "அப்பா... நாம போகலாம்ப்பா... எனக்கு இங்கே இருக்கப் பிடிக்கலைப்பா. எல்லாரும் என்னைத் திட்டறாங்கப்பா..." என்று முனக,

ஹரியும் வெகுண்டு, "நீ சொன்னாலும் சொல்லாட்டியும் நான் உன்னைக் கூட்டிட்டுத்தான்டா போகப்

போறேன். சே... குடும்பமா இது? எவ்ளோ ரத்தம்... ஏய் வேதா... கிளம்பு," என்று கூற,

வேதாவோ அவன் அடிபட்டதைக் கொஞ்சம் கூடக் கண்டு கொள்ளாமல், தன் தோழியின் முகத்தையே பார்த்தபடி, "நீங்க போங்க... நான் வரலை," என்று அழுத்தமாகக் கூற, அர்ஜுனுக்குத் தலையில் இன்னொரு இடி விழுந்தது. அவள் மேல் அவனுக்கு இன்னும் வெறுப்பு அதிகரிக்க, இதை எல்லாம் யோசிக்கும் நிலையில் வேதா இல்லை.

ஹரிதான் அதிர்ச்சியுடன், "இவன் நம் பையன்டி. அவன் தலை உடைஞ்சி இரத்தம் வருது. இனியும் இங்கேதான் இருக்கணுமா? வாடி போகலாம்," என்று கத்த,

வேதா அதே உணர்ச்சியற்ற குரலில், "நீங்க போங்க... நான் வரலை," என்று கூற,

ஹரிஹரன், "எக்கேடோ கெட்டுப் போ. உனக்கு எப்போ வரணும்னு தோணுதோ வா. ஆனால், நானும் என் பையனும் இங்கே ஒரு நிமிஷம் கூட இருக்க மாட்டோம்," என்று எரிச்சலுடன் கூறி விட்டு அவனை இழுத்துக் கொண்டு செல்ல, அர்ஜுன் கடைசியாக ஷர்மிளாவையும் மேகநாதனையும் பார்த்து விட்டு, மற்ற யார் முகத்தையும் திரும்பிக் கூடப் பார்க்காமல் தன் தந்தையுடன் சென்றான்.

ஆனால், அதுதான் அவன் வாழ்க்கையில் காணப் போகும் மிகப் பெரும் அடிகளுக்கு வித்தாய் அமைந்தது.

ஆயிற்று... ஷர்மிளாவும் மேகநாதனும் மண்ணுலகத்தை விட்டுச் சென்று ஒரு வாரம் முடிந்திருந்தது. திருதான் அனைவருக்கும் ஆறுதலாக இருந்து, அந்தக் குடும்பத்தைத் தாங்கினான். ராம் கூடக் கொஞ்சம் தேறிவிட்டான். ஆனால், பாரதியின் நிலைதான் மோசமாக இருந்தது.

அந்த ஒரு வாரத்தில் துரும்பென மாறி விட்டிருந்தாள். ஏதோ சூனியத்தையே வெறித்துப் பார்த்தவளின் கண்கள், ஏதோ கவலையைத் தாங்கி இருக்க, இப்படியே விட்டால் அவளையும் இழந்து விடுவோம் என்று நினைத்த திரு, ஒரு நாள் அவளைக் கட்டுப்படுத்தி உட்கார வைத்து,

“குட்டி... உனக்கென்னடா ஆச்சு? அம்மா, அப்பா வேற எங்கேயும் போகலைடா. உன்கூடவேதான் இருக்காங்க. முன்னேயாச்சும் நீ ஸ்கூலுக்கெல்லாம் போனா அவங்களைப் பிரிஞ்சுதானே இருக்கணும்... ஆனால், இப்போது அப்படி இல்லை. எப்பவும் எங்கே போனாலும் உன் கூடவே இருப்பாங்க. சரியா... இப்போ சாப்பிடுடா குட்டி...” என்று கூற, அவள் குட்டிக் கண்களில் நெடு நாளைக்குப் பிறகு சிறு கீற்றான ஒளி தோன்றியது.

அதைக் கண்டு கொண்ட திரு, “ஆமாம்டா... இனிமே சாமியா அப்பாவும் அம்மாவும் உன் கூடவே இருப்பாங்க. அவங்களைப் பார்க்க முடியாது, உணரத்தான் முடியும். நீ நல்லது செஞ்சா பாராட்டுவாங்க, கெட்டது செஞ்சா தண்டிப்பாங்க. அதான்... நீ அவங்க கிட்டே இருந்து தப்பிக்க முடியாது...” என்று விளையாட்டாகக் கூறி,

அவளுக்கு உணவை ஊட்ட, நெடுநாள் கழித்து அவள் வாய் உணவை விழுங்கியது.

பின், "நெஜமா சொல்றியா சித்தப்பா... அவங்க என் கூடவேதான் இருக்காங்களா?" என்று கூற,

அவள் அறியாமலேயே அவள் வாயில் உணவை ஊட்டியவன், "ஆமா குட்டி... நம்ம கூடவேதான் இருக்காங்க. அவங்களுக்கு நம்மளைத்தானே பிடிக்கும்? அதனால் நம்ம கூடத்தான் இருப்பாங்க. சரியா? அதுக்கு நீ நல்லாச் சாப்பிட்டு, நல்லாப் படிச்சு, அவங்களுக்குப் பிடிச்ச மாதிரி இருக்கணும். சரியா?" என்று மென்மையாகக் கூற,

பாரதிக்குள் ஏதோ ஒன்று உறுத்த, "சித்தப்பா... நான்தான்... என்னால்தான்..." என்று திணற,

திரு புரியாமல், "என்னடா... உன்னாலதான்... என்னாச்சு?" என்று கேட்க,

பாரதி, "என்னை அவங்களுக்குப் பிடிக்காது சித்தப்பா. நான்தான் அர்ஜுனைப் பயமுறுத்தினேன். அதனால்தான் அவன் விழுந்தான். லேசாத்தான் பயமுறுத்தினேன் சித்தப்பா... அதுக்குப் போய்... என்னைப் பிடிக்காதுதானே சித்தப்பா...?" என்று அழ,

அவனுக்கு அந்தப் பிஞ்சு மனதை நினைத்து மனது கனத்தது. சிறு குழந்தைகளால் மனதில் எதையும் வைத்துக் கொள்ள முடியாது. இந்த விஷயத்தில்தான் அவள் தன்னையே வருத்திக் கொள்கிறாள் என்று திரு புரிந்து கொண்டான்.

ஆனால், அவன் முன்னமே கூறியது போல், இந்த மரணத்தில் அனைவருமே குற்றவாளிகள். யாருமே நிரபராதிகள் அல்ல. போன உயிர்களுக்காக வாழும் ஓர் உயிரிடம் குற்ற உணர்ச்சியைப் புகுத்த அவன் விரும்ப வில்லை.

எனவே, "இல்லைடா... அப்பா அம்மாவுக்கு உன்னைப் பிடிக்காமல் இருக்குமா? இப்போ அவங்க சாமிடா. அதெல்லாம் மன்னிச்சிடுவாங்க. நீ அதுக்குப் பதிலா, பெரிய ஆளாகி, நாலு பேருக்கு நல்லது செய். அதுவே அவங்களுக்குப் போதும்," என்று கூற, பாரதியின் முகம் இப்போது மிகவும் பிரகாசித்தது.

"சரி, சித்தப்பா. நான் பிக் கேர்ள் ஆகி எல்லோருக்கும் ஹெல்ப் பண்ணுவேன். அப்புறம்... அம்மா கூட... அம்மா கூட என்னைப் பார்த்துச் சிரிச்சு, அர்ஜுனை நல்லாப் பார்த்துக்கோன்னு சொன்னாங்க சித்தப்பா கடைசியில... அவனுக்கும் ஹெல்ப் பண்ணுவேன்..." என்று கண்ணீருடன் கூற, திருவிற்குத் தன் அண்ணியை நினைத்துப் பெருமையாக இருந்தது.

கரையத் துவங்கிய மனதை வெளிக்காட்டாமல், "சரிடா குட்டி... அர்ஜுனுக்கும் ஹெல்ப் பண்ணுவோம். இந்தா ஒரு வாய்..." என்று ஊட்ட,

தன் மனப் பாரம் அனைத்தும் நீங்கியவளாய்த் தன் சிற்றப்பனிடம் ஒன்றினாள் பாரதி.

திருவும் அவள் சிறிதாவது இயல்பானதை நினைத்து அமைதி கொண்டான். இனிப் பிரச்சினை இல்லை என்று

நினைத்தவன் எண்ணம் பொய்ப்பது போல், அந்தக் குடும்பத்திற்கு அடுத்தடுத்து இடிகள் விழுந்தன.

இரண்டு நாட்கள் கழித்து மேகநாதனின் ஃபைனான்ஸ் கம்பெனியில் பணத்தைப் போட்டவர்கள், ஒன்றன்பின் ஒன்றாக வர ஆரம்பித்தனர்.

கடந்த இரண்டு வருடங்களாகக் கம்பெனி கைக் கடிப்பாகத்தான் ஓடிக் கொண்டிருந்தது. அதனால் மேக நாதன் பெருமளவு வங்கியில் கடன் வாங்கியிருந்தார்.

தனியார் வங்கி என்பதால் கெடுபிடிகள் சற்று அதிகமாகவே இருந்தன. அதற்காகத் தன் வீட்டுப் பத்திரத்தை வைத்திருந்தார்.

அது தெரிய வந்த திருவிற்குச் சர்வமும் நடுங்கியது. எல்லாம் சேர்த்துக் கிட்டத்தட்ட வங்கிக் கடன் பத்து லட்சம் ஆக இருந்தது. இந்தக் காலத்திலேயே பத்து லட்சம் பெரிய தொகைதான் என்றால், அந்தக் காலத்தில் சொல்லவே தேவையில்லை.

கடன் தொகைக்காக வீட்டை ஜப்தி செய்யும் நோட்டீஸ் வந்திருந்தது.

அதைப் பார்த்த திரு நொறுங்கிப் போனான். அவன் வீட்டிற்கு வந்த கடன் அதிகாரிகள், வீட்டை நோட்டமிட்டு, "இதோ பாருங்க திரு... உங்க அண்ணன் வாங்கின கடன், அதுக்கான வட்டி, இந்த வீட்டு மதிப்பையும் மீறுது. அதனால் இந்த வீட்டுப் பொருட்களையும் நாங்க ஜப்தி செய்யறோம். இன்னும் ஒரு வாரம் கெடு. அதுக்குள்ளே நீங்க வேற ஏதாவது வழி இருக்கான்னு பாருங்க.

இல்லை... நாங்க ஜப்தி செய்யறதைத் தவிர எங்களுக்கு வேற வழி தெரியலை..." என்று கூறி விட, திருவிற்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

விஷயம் தெரிந்து ஓடி வந்த வேதா, "திரு... என்னப்பா ஆச்சு?" என்று பதற,

திரு, "எல்லாம் போச்சு அக்கா. என்ன செய்யற துன்னே தெரியலை. தலையெல்லாம் சுத்துதுக்கா," என்று தழுதழுக்க,

வேதா, "எவ்ளோ பணம் வேணும்னாலும் நான் தரேன் திரு. அவர் கிட்ட இருந்தாவது வாங்கித் தரேன். நீ கவலைப்படாதே!" என்று சமாதானப்படுத்த,

திரு, "என்னக்கா நீங்க... பணத்துக்காகவா அண்ணி உயிரை விட்டாங்க. நீங்க இப்படிக் கேட்டதே சந்தோஷம் அக்கா... என் அண்ணாவும் சரி, அண்ணியும் சரி... உயிரோட இருந்திருந்தால், இதுக்குக் கொஞ்சம் கூட ஒத்திருக்க மாட்டாங்க. ப்ளீஸ் அக்கா... இனிமேல் இப்படியெல்லாம் கேட்காதீங்க..." என்று கூறி விட,

வேதா, "திரு... இப்படி எல்லாம் சொல்லாதே. நான் கடன் பட்டிருக்கேன். என் உயிரைக் காப்பாத்தித் தந்தவள் உங்க அண்ணி. சரி, கடனாவாச்சும் வாங்கிக்கோ. என்னை ரொம்பக் கூனிக் குறுக வைக்காதே," என்று மன்றாட, அதைக் கட்டாயமாக மறுத்தான் திரு.

"இதோ பாருங்க அக்கா... நீங்க ஏதாவது நல்லது செய்யணும்னு நினைச்சீங்கன்னா... எங்களை மறக்காம இருங்க. அது போதும். பணத்தைக் கொடுத்து எங்களைத்

தாழ்த்தப் பார்க்காதீங்க," என்று பிடிவாதமாகக் கூற, அதற்கு மேல் வேதாவால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

"ஏங்க... நான் சொல்றதைக் கொஞ்சம் கேளுங்க. அவங்க நமக்குச் செஞ்சது பெரிய உதவி. அதுக்கு இந்தப் பணம் எல்லாம் ஒண்ணும் இல்லைங்க. கொஞ்சம் மனசு வெச்சு அவங்களுக்கு உதவி பண்ணுங்க," என்று தன்னிடம் கெஞ்சிய தன் மனைவியை மேலும் கீழும் பார்த்தார் ஹரிஹரன்.

வேதா, "என்னங்க பார்க்கிறீங்க? நான் சொல்றதைக் கொஞ்சம் கேளுங்க," என்று வேண்ட,

ஹரிஹரன், "அவன் குடும்பத்துக்கு நீ உதவி செய்யணும்னு நினைக்கிறே... நல்ல விஷயம்தான். ஆனால், எனக்கு அவங்க அவமானப்படுத்தினதுதானே கண்ணில் நிக்குது. என் பையன் ரத்தத்தோட நின்னது தானே கண்ணில் நிக்குது..." என்று உணர்ச்சியற்ற குரலில் கூற, வேதா அதிர்ந்தாள்.

"என்னங்க சொல்றீங்க... நம்ம பையனைக் காப்பாத்தப் போய்த்தான் அவங்க செத்தாங்க. அதை மறந்துட்டீங்களா? நீங்க என்னடான்னா, அதைத் தவிர மத்ததெல்லாம் ஞாபகம் வெச்சிட்டு இருக்கீங்க," என்று கூற,

ஹரிஹரன், "போதும் வேதா... இதையே எத்தனை தடவைதான் சொல்லுவே? ஒவ்வொருவருடைய முக்கியத் துவமும் மாறுபடும் வேதா. என்னைப் பொறுத்தவரை என்னோட ஸ்டேட்டஸ்தான் முக்கியம். அதை ஞாபகம் வெச்சிக்கோ," என்று கூற,

வேதா கூர்மையான பார்வையுடன், "சரிங்க... உங்களுக்கு ஸ்டேட்டஸ்தான் முக்கியம். அது பாதிக்காமல் இருந்தால் அவனுக்கு உதவி செய்வீங்களா?" என்று கேட்க,

ஹரிஹரன், "கண்டிப்பா வேதா... இப்போ கூட ஒண்ணும் கெட்டுப் போகலை. அன்னைக்கு நடந்ததுக்கு மன்னிப்புக் கேட்டு, அவனே என் கிட்ட வந்து பணம் கேட்கட்டும்... நான் பணம் தரேன்," என்று அசால்ட்டாகக் கூறினார்.

பின், "என்ன வேதா பார்க்கிறே? அன்னைக்கு நடந்தது என்னால மறக்க முடியலை. நான் ஒண்ணும் பணமே தர மாட்டேன்னு சொல்லலையே. அவனே வந்து மன்னிப்புக் கேட்டுப் பணம் கேட்கட்டும்... நான் கண்டிப்பாத் தரேன். நான் ஜென்டில்மேன். இதில் வாக்குத் தவற மாட்டேன்..." என்று கூற,

வேதா அவரிடம் நெருங்கி வந்தாள். "அந்தக் குடும்பம் உங்க பையனைக் காப்பாத்தத் தன் உயிரை விட்டுச்சு. அது உங்களுக்கு ஞாபகம் இல்லை. சரி, அவங்க அதுக்கு முன்னே கூட எவ்வளவோ உதவி செஞ்சிருக்காங்க. அது கூடவா ஞாபகம் இல்லை. இப்படி வாய்ப்புக் கிடைச்சதுன்னு பழி வாங்க நிற்கிறீங்க..." என்று கேட்க,

ஹரிஹரனின் முகம் இருண்டது. "ஆமாடி... நான் இப்படித்தான். ஒரு வார்த்தை, ஒரு செயல், என் மனசில் நின்னா நின்னதுதான். அதை யாராலும் மாத்த முடியாது. அது யாராக இருந்தாலும் அவர்களைப் பழி வாங்க நான் என்ன வேணும்னாலும் செய்வேன்," என்று கத்த,

வேதா அவரைப் புழுவைப் பார்ப்பது போல் பார்த்தாள். "உங்களுக்குள்ள இப்படி ஒரு கீழ்த்தரமான குணமா? அப்படி அவன் கெஞ்சித்தான் நீங்க பணம் தருவீங்கன்னா, இப்ப நானே சொல்றேன்... உங்க பணம் தேவையில்லை. அவங்க கடனை அடைக்கட்டும்... இல்லை, குடும்பத்தோடு எங்கேயாவது போகட்டும். அவங்க உங்க கிட்ட வந்து கை கட்டி நிக்க நான் ஒத்துக்க மாட்டேன்," என்று குமுறி விட்டுத் தன் அறையில் போய்க் கதவைச் சாத்திக் கொண்டு அதன் மேல் சாய்ந்தாள்.

இப்படி ஒரு அரக்க குணம் ஹரஹரனுக்குள் இருக்கிறது என்பதை அறிந்த வேதாவின் மனம் கொந்தளிக்க ஆரம்பித்தது. ஆனால், அவளுக்குத் தெரிய வில்லை, அவரின் இந்தக் குணம்தான் அர்ஜுனையே பிற்காலத்தில் சிதறடிக்கப் போகிறது என்பதை.

இருந்த சொற்பக் காசில் அன்று நான்கு இட்லிகளை வாங்கி வந்து, இரண்டை ராமிற்கும் இரண்டைப் பாரதிக்கும் ஊட்டி விட்டு, ஒரு கிளாஸ் தண்ணீர் மட்டும் குடித்து விட்டுப் படுத்துக் கொண்டான் திரு. பல நாட்களாக இப்படித்தான் ஓடிக் கொண்டிருக்கிறது.

வங்கிப் பணம் அனைத்தையும் எடுத்து பைனான்ஸ் கம்பெனிப் பயனாளிகளுக்குக் கொடுத்தாயிற்று. வேலை யும் ஒன்றும் சொல்லிக் கொள்ளும்படியாகக் கிடைக்க வில்லை. படிப்பு படிப்பு என்றே இருந்தாயிற்று. அதுவும் எம்.எஸ்.ஸி. கெமிஸ்ட்ரிக்கு இந்தக் காலத்தில், அதுவும் மெட்ராஸில் எடுத்ததும் வேலை கிடைக்குமா?

இப்படி மலையாக எழுந்த கவலைகள், அவன் கண்களைத் தூக்கம் அண்டாமல் தொல்லை செய்தன.

சாப்பாட்டிற்கும் வழியில்லை. இன்று பிள்ளைகளுக்காவது சாப்பாடு போட முடிந்தது. நாளை அதுவும் இருக்காது.

தான் பசி தாங்கலாம்... பிள்ளைகள் தாங்குமா? 'பேசாமல் தூக்க மாத்திரை தின்று உயிரை விட்டு விடலாமா?' என்ற நினைப்பு கூட வந்தது.

அதை உடனே உலுக்கியவன், 'சே... ஏன்டா இப்படி நினைக்கிறே? நீ சாவு... அந்தப் பச்சை மண்ணுங்க என்ன பாவம் செய்தது? அதுங்க ஏன் சாகணும்?' என்று நினைக்கையிலேயே கண்களில் கண்ணீர் வழிய ஆரம்பித்தது.

'அண்ணா! ஏன்ணா எனக்கு இந்த நிலையைக் கொடுத்தே? ஒரு நிமிஷம் யோசிச்சிருக்கலாமே அண்ணா... சாகறதுக்கு முன் ஒரு நிமிஷம் யோசிச் சிருந்தா இந்த நிலை வந்திருக்குமா? நான் பரவாயில் லைண்ணா... என்னை நம்பி இரண்டு பிள்ளைகளை விட்டுட்டுப் போயிருக்கியே! அதுகளை என்ன பண்றது? பயமா இருக்குண்ணா... நான் வழி தவறிடுவே னோன்னு...! பயமா இருக்கு. உங்க நம்பிக்கையைக் காப்பாற்றுவேனோன்னு பயமா இருக்கு...' என்று தன் அண்ணன் அண்ணி ஜோடியாகச் சிரித்துக் கொண்டு இருந்த படத்திற்கு முன் மண்டியிட்டு அழுதான்.

அப்போது, "சித்தப்பா..." என்று குரல் கேட்க, பதறிப் போய்த் திரும்பிப் பார்க்க, அங்கே கண்களைக் கசக்கிக் கொண்டு, தூக்கக் கலக்கத்தில் பாரதி நின்றிருந்தாள்.

"சித்தப்பா... என்ன பயம்?" என்று கேட்ட மழலை யைக் கட்டிக் கொண்டு அழுதான் திரு.

பின், "தெரியலைடா குட்டி... சித்தப்பாவுக்கு ஏனோ பயமா இருக்கு..." என்று கூற,

பாரதி தன் முத்துப் பல்லைக் காட்டி, "சித்தப்பா... நான் ஒரு பாட்டுப் பாடவா? பயமெல்லாம் போயிடும்..." என்று கொஞ்ச,

அந்த வாழ்க்கையின் அஸ்தமன காலத்திலும் அவள் புன்னகை, அவன் மனத்தில் பூப் பூக்க வைத்தது.

அவளைப் பூப்பந்தாய்த் தூக்கி மடியில் வைத்து, "என்ன பாட்டுடா குட்டி? பாடுங்க..." என்று கன்னத்தில் முத்தமிட,

அழகாய் வெட்கப்பட்ட அந்த ஐந்து வயது மொட்டு, தான் மாறுவேடப் போட்டியில் பாடிப் பரிசு வென்ற பாட்டைப் பாட ஆரம்பித்தது.

"அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே
இச்சகத்து உளோரெல்லாம் எதிர்த்துநின்ற போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே!
துச்சமாக எண்ணி நம்மைத் தூறு செய்த போதினும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே!
பிச்சை வாங்கி உண்ணும் வாழ்க்கை
பெற்றுவிட்ட போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே
இச்சை கொண்ட பொருளெல்லாம்
இழந்துவிட்ட போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே..."

என்று தன் அழகான மழலையில் பாடியவள், சட்டென்று நிறுத்தி, “ம்ம்... அப்புறம்... சரியா ஞாபகமில்லை சித்தப்பா...” என்று மறுபடியும் தன் முத்துப்பல் காட்டிச் சிரிக்க,

அவளை வாரியணைத்த திரு, “போதும்டா, போதும்... நீ சாமிடா. சரியான நேரத்தில் என் மனசைத் தெளிய வெச்சிட்டே. எனக்கு இனிமே பயமே இல்லை. ஆபீசில் வேலை செய்தால்தான் வேலையா? என் எண்ணம் மாறிடுச்சுடா. ஏதாவது கௌரவமான வேலை... ஏன், மூட்டை தூக்கியாவது உங்க இரண்டு பேரையும் காப்பாத்துவேன் குட்டி... இது என் அண்ணன் அண்ணி மேலே சத்தியம்!” என்று சத்தியம் செய்ய,

அவன் கூறுவது எதுவும் புரியவில்லை என்றாலும், அவனைக் கட்டிக் கொண்டு சிரித்தாள் பாரதி.

வாழ்க்கை தனக்குத் தரக் காத்திருக்கும் வாய்ப்புகளைத் தேடி அன்று புறப்படத் தயாரானான் திரு. அந்த முயற்சிகளுக்கு ஒளி வீசுவதைப் போல் சூரியனின் கதிர்கள் அந்த வீட்டிற்குள் விடியலாக நுழைந்தன.

## 13

கனிகள் கொண்டுதரும் கண்ணன்
கற்கண்டு போலினிதாய்
பனிசெய் சந்தனமும் – பின்னும்
பல்வகை யத்தர்களும்
குனியும் வான்முகத்தான் – கண்ணன்
குலவி நெற்றியிலே

இனிய பொட்டிடவே - வண்ண
மியன்ற சவ்வாதும்...

அந்த முடிவை எடுத்ததும் திருவிற்கு வாய்ப்புகள் வானளவு விரிந்தது போல் இருந்தது.

ஆனாலும் அவனுக்கு அந்த வாய்ப்புகளை எந்த வழியில் அணுகுவது என்று தெரியவில்லை. வீட்டை ஜப்தி செய்ய இன்னும் இரண்டு நாட்களே மிச்சம் இருந்தன. அதற்குள் அந்த வீட்டை மீட்க முடியாது. எனவே வேறு வீடு பார்த்துத்தான் ஆக வேண்டும். பார்த்துப் பார்த்துக் கட்டிய வீட்டைப் பிரிவது மனதை அறுத்தாலும், இப்போது அவனுக்குள்ள நினைப்பெல்லாம் ஒரு வேலை வாங்குவது மட்டும்தான்.

அதனால் மட்டுமே... தாங்கள் மூவரும் வாழ முடியும் என்பதை உணர்ந்தே இருந்ததால், வீட்டைப் பற்றிய மனத்தாங்கல்கள் அப்போதைய சூழலில் அவனுக்குத் தேவையற்றதாகப் போயின.

எனவே வங்கி அதிகாரிகளைச் சந்தித்து, ஜப்தி விபரங்களைக் கேட்டறிந்தான். அதற்குரிய ஆவணங் களில் கையொப்பமிட்டு வந்தான்.

பின் பெங்களூரில் இருக்கும் தன் நண்பன் ரவியைத் தொலைபேசியில் அழைத்தான், வேதாவின் வீட்டிலிருந்து.

ரவி, "ஏன்டா... இதை முதலிலேயே சொல்லி யிருக்கலாம் இல்லை. இவ்வளவு நடந்திருக்கு... என் கிட்டே

ஒரு வார்த்தை கூடச் சொல்லலையேடா...!" என்று கடிந்து கொண்டவன்,

"உனக்கே தெரியும்டா... நானே மெடிக்கல் ரெப்பா பொழைப்பு பொழைச்சிக்கிட்டு இருக்கேன். இந்தச் சமயத்தில் என் கம்பெனியில் ஏதும் வேலை வாய்ப்புகள் இருக்கிறதான்னு தெரியலைடா. நான் இதை ஏன் சொல்றேன்னா... உனக்குத் தேவையில்லாத நம்பிக்கை கொடுக்க விரும்பாமல்தான். ஆனாலும் நீ இங்கே வாடா... கண்டிப்பாக உனக்கு ஒரு வேலை பார்த்துக் கொடுக் கிறேன்," என்று அழுத்தமாகக் கூற, அதுவே அந்த நிலையில் திருவிற்குப் போதுமானதாக இருந்தது.

"இந்த நம்பிக்கை போதும்டா. நான் கண்டிப்பா வரேன். ஏதாவது ஒரு வேலைடா... இதுதான் வேணும்னு இல்லை," என்று கூற,

அவனை நினைத்துப் பரிதாபப்பட்ட ரவி, "டேய்... நீ கோல்டு மெடலிஸ்ட். நீயே இப்படிப் பேசினா எப்படிடா... நாங்க உன்னைப் பத்தி என்னவெல்லாம் நினைச்சிருந் தோம்..." என்று கூற,

திரு விரக்தியுடன், "டேய் ரவி... நானே எத்தைத் தின்னா பித்தம் தெளியும்னு இருக்கேன். தயவு செய்து இப்படி யெல்லாம் கேட்டு என் நம்பிக்கையைக் குறைக்காதே! நான் இன்னைக்கே பெங்களூருக்கு வரேன். ஏதாவது ஒரு வேலை. எங்க மூணு பேரோட அரை வயிறு நிறைகிற மாதிரி இருந்தால்கூடப் போதும்," என்று வேண்ட, அதற்கு மேல் ரவியால் ஒன்றும் பேச முடியவில்லை.

ஆனாலும், "டேய்... கேட்கிறேன்னு தப்பா நினைக்காதே. உன் அப்பாவைப் பெரியப்பா ஏமாத்திப் பல சொத்துகளை எழுதி வாங்கிட்டாரே... அதைக் கேஸ் போட்டு வாங்கினா என்ன?" என்று கேட்க,

திருவுக்கு அது ஞாபகம் வந்தது. அவனுடைய பெரியப்பா, தன் தந்தையை ஏமாற்றிப் பல சொத்துகளை வாங்கியிருந்தார். அதை எல்லாம் அண்ணனின் முயற்சியால், அவனின் வெற்றிகளால் முழுதாக மறந்தே இருந்தனர். அதை நினைத்து நேரத்தைக் கடத்த திரு விரும்பாததால்,

"இல்லை ரவி... நீ சொல்றது சரியா வராது. இப்போ அதுக்கு நேரம் இல்லைடா. ப்ளீஸ்டா... இதுக்கு மேலே எதுவும் கேட்காதே!" என்று கெஞ்ச,

ரவி பதறி, "ஏய்... சாரிடா. உன் வசதிக்காகத்தான்டா சொன்னேன். நீ உடனே கிளம்பி வாடா. உனக்கு என்னால முடிஞ்ச உதவியைக் கண்டிப்பாகச் செய்றேன். சரிடா... இந்த வீட்டம்மா முறைக்கிறாங்க... நான் போனை வைக்கிறேன்..." என்று கூறிவிட்டுத் தொலைபேசியை அணைத்தான்.

திருவும் ஒருவித நிம்மதியுடன் தொலைபேசியை வைத்து, அவனையே பார்த்துக் கொண்டிருந்த வேதாவின் கைகளில் பத்து ரூபாயைத் தந்தான்.

"இந்தாங்க அக்கா... எஸ்.டி.டி. நிறைய நேரம் பேசிட்டேன். இந்தாங்க..." என்று கூற, வேதா அவனை அடிபட்ட பார்வை பார்த்தாள்.

"ஏன் திரு... என்னை மனச்சாட்சியும் நன்றியும் கொஞ்சம் கூட இல்லாத மிருகம் என்றே நினைச்சிட்டே இல்லை. சரி, அந்தப் பணத்தைக் கொடு," என்று வாங்கிக் கொள்ள,

அவர் முக மாற்றத்தைக் கண்டு பதறிய திரு, "ஐயோ... சாரி அக்கா. உங்களைக் கஷ்டப்படுத்தணும்னு நான் சொல்லலை. நீங்க அன்னைக்குச் சண்டை போட்ட சத்தம் எங்க வீடு வரை கேட்டது. ஹரிஹரன் சாருக்கு எங்களைப் பிடிக்காதுன்னு தெரியும். ஆனால், இவ்ளோ பிடிக்காதுன்னு அன்னைக்குத்தான் தெரிஞ்சது. அதனால் எங்களால் எந்த விதப் பிரச்சினையும் இல்லாமல் பார்த்துக்கிறேன்," என்று தலை குனிந்தபடி கூற,

வேதா, "நீ ஏன் தலைகுனியுறே திரு... நான்தான் குனியணும். ஆனால், தயவு செய்து இந்தப் பணத்தை வாங்கிக்கோ திரு. கொஞ்ச நஞ்சம் இருக்கிற மனுஷத் தன்மையும் எனக்கு இல்லைன்னு காண்பிச்சிடாதே. நீ இன்னைக்கே பெங்களூருக்குக் கிளம்பறியா?" என்று கேட்க,

திருவும், "ஆமா அக்கா. இன்னைக்குச் சாயந்திரமே கிளம்பலாம்னு இருக்கேன்," என்று கூற,

வேதா, "சரி. போறதுக்குப் பணம் இருக்கா?" என்று கேட்க,

திரு ஒரு நிமிடம் அதிர்ந்து, பின் சுதாரித்து, "இருக்கு அக்கா. அது இருக்கு தாராளமா..." என்று கூற,

வேதா அதை நம்பவே செய்தாள். பின், "போகும் போது ஒரு வார்த்தை சொல்லிட்டாவது போ திரு..." என்று

கூறி விட்டு, அவனிடம் பதில் எதிர்பார்க்காமல் உள்ளே செல்ல, அவளைப் பரிதாபமாகப் பார்த்தபடி வெளியேறி னான்.

உண்மையில் அவனிடம் இருந்தது அந்தப் பத்து ரூபாய்தான். அதை வைத்துக் கொண்டு பெங்களூருக்கு எப்படிச் செல்வது என்று அவனுக்குத் தெரியவில்லை. அதே சமயம் வேதாவிடம் கேட்கவும் மனம் ஒப்பவில்லை.

எனவே யோசிக்க ஆரம்பித்துத் தன் கைகளைப் பிசைய, கண நேரத்தில் அவன் முகம் பிரகாசமடைந்தது. பெங்களூருக்குச் செல்லப் பணம் பெறும் வழியும் தெரிந்தது.

மாலைக்குள் ராமுவுக்கும் பாரதிக்கும் பள்ளியில் இருந்து மாறுதல் ஆவணம் பெற்று, மற்ற வேலைகள் அனைத்தையும் முடித்தான்.

ராமுவுக்கும் பாரதிக்கும் முழுதாக ஒன்றும் புரிய வில்லை என்றாலும் அடம் பிடிக்காமல் பள்ளி மாற ஒப்புக் கொண்டனர். தங்கள் சித்தப்பாவை அவ்வளவு தூரம் நம்பினர். எனவேதான் அவன் வீட்டை விட்டுக் கிளம்பும்போதும் அவர்கள் ஒன்றுமே பேசவில்லை. ஆட்டுக் குட்டி போல் அவன் பின்னாலேயே சென்றனர்.

பாரதிக்குத்தான் ஏதோ ஒன்று உறுத்தியது. எனவே திருவிடம், "சித்தப்பா... இனிமே வேதாம்மா, அர்ஜுன் எல்லாம் பார்க்க முடியாதா?" என்று பாவமாகக் கேட்க, அவன் மனது கனத்தாலும், அதை வெளியே காட்டாமல்,

"இல்லைடா... நீ நல்லாப் படிச்சு பிக் கேர்ள் ஆகி வந்து, வேதாம்மா, அர்ஜுனை எல்லாம் பார்க்கலாம்.

அவனும் பிக் பாயாகிடுவான். சரியா? இப்போ நாம வேற வீட்டுக்குப் போறோம். அங்கேயும் உனக்கு பிரண்ட்ஸ் கிடைப்பாங்க," என்று வாய்க்கு வந்ததைக் கூறிச் சமாதானப் படுத்தினான்.

பாரதியும் ஒன்றும் பேசாமல் அமைதியாகி விட்டாள். அந்த வயதில் அதுதான் அவளால் செய்ய முடியும். அவளுக்கு இப்போதைக்குச் சித்தப்பனின் ஆதரவைத் தான் ஆதாரமாக நினைத்தாள்.

எனவே மௌனமாவதை விட, வேறு ஒன்றையும் அறியவில்லை, அந்த மொட்டு.

மாலை வேதாம்மா கண்ணீர் மாலையுடன் அவர்கள் மூவரையும் வழியனுப்பினாள். ஹரிஹரன் வழக்கம் போல் வரவில்லை. ஆனாலும் வேதா, "எங்களை மறந்துடாதீங்கடா... மறக்காமல் வாரம் ஒரு தடவையாவது போன் பண்ணு திரு. எதையும் மனசில் வெச்சிக்காதேப்பா..." என்றவள், பாரதியையும் ராமையும் கட்டியணைத்து முத்தமழை பொழிந்தாள்.

அர்ஜுனையும் மிரட்டி, அவர்களை வழியனுப்பக் கூட்டி வந்திருந்தாள். ராமோ அர்ஜுனை முறைத்தபடி இருக்க, அவனோ யாருக்கு வந்த விருந்தோ என்று தெனாவட்டாக இருக்க, திரு பாசமாக அவன் கேசத்தைக் கோதி, "நல்லாப் படிக்கணும், அர்ஜுன். அம்மாவை நல்லாப் பார்த்துக்கணும்... சரியா?" என்று கேட்க, அவனும் தலையசைத்தான்.

பாரதி தயங்கித் தயங்கி அவனிடம் வந்து, "அ... அஜுன்... ஏதாவது ஹெல்ப் வேணும்னா கேளு... பை..."

என்று கூற, அவன் வெறுப்பாய் முகத்தைத் திருப்பிக் கொள்ள, வேதா அதைக் கவனிக்கும் மனநிலையில் இல்லை.

அவள் பாரதியின் மனதை நினைத்து மெச்சி, "என் தங்கம்... நல்லபடியா இருக்கணும்டா... சித்தப்பாவைக் கஷ்டப்படுத்தக் கூடாது..." என்று மறுபடியும் அவள் உச்சியில் முத்தமிட, அங்கே மௌனம் மட்டுமே ஆட்சி செய்தது.

இப்படி மனம் நெகிழ, அவர்கள் மூவரையும் வழியனுப்பினாள் வேதா.

தன் அண்ணன் தனக்குப் பரிசாகத் தந்த மிக விலையுயர்ந்த கைக் கடிகாரத்தை மனதைக் கல்லாக்கிக் கொண்டு விற்று, தன் பயணச் செலவுக்கும் மற்றச் செலவுகளுக்கும் வைத்துக் கொண்டான் திரு. அந்த நூற்றைம்பது ரூபாயுடன் பெங்களூருக்கு வண்டி யேறினான்.

அந்த மூவரும் தங்களுக்கான வாழ்வைத் தேடி, வெளியூரில் அடியெடுத்து வைத்தனர்.

**பெ**ங்களூரில் வாழ்க்கை ஓகோவென்று இல்லை என்றாலும், சற்றே நிம்மதியை அவர்களுக்குத் தந்திருந்தது.

ரவி, அவன் தங்கியிருந்த வீட்டுக்குக் கீழேயே, ஒரு போர்ஷனை வாடகைக்கு எடுத்திருந்தான்.

"டேய்... வீடுன்னா பெரிசா இல்லைடா. ஒண்டுக் குடித்தனம்தான். ஒரே அறை... அவ்வளவுதான். சின்ன

மண்ணெண்ணெய் ஸ்டவ் வாங்கிக்கலாம் சமைக்க. இல்லைன்னா, இந்த ரோட்டோரக் கடையில் ஒரு பாட்டியம்மா இட்லிக் கடை வெச்சிருக்காங்க. பத்து ரூபாய் தான் ஆகும் ஒரு நாளைக்கு. வயிறாரச் சாப்பிட்டுக்கலாம். பாத்ரூம் எல்லாம் பொதுதான்டா. கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிக்கோ. மாசம் ஐந்நூறு ரூபாய் வாடகை. இரண்டாயிரம் அட்வான்ஸ். நீ கவலைப்படாதேடா... அட்வான்ஸ் என் கிட்டே இருந்ததைப் புரட்டிக் கொடுத்திட்டேன்," என்று கூற, அவன் கையைப் பிடித்துக் கொண்டு, பேச முடியாமல், அவனையே பார்த்துக் கொண்டிருந்தான் திரு.

ரவி, "ஏய்... என்னடா இதுக்குப் போய் உணர்ச்சி வசப்பட்டுக்கிட்டு... பிள்ளைகளும் அழுதுங்க பாரு. அப்புறம் மறந்துட்டேன்... டேய், உனக்கு ஒரு வேலை பார்த்திருக்கேன்டா... ஆனா..." என்று இழுக்க,

திரு, "என்னடா... தயங்காமல் சொல்லு. என்ன வேலையாக இருந்தாலும் எனக்கு ஓ.கே.!" என்று கூற,

ரவி, "உன் அறிவுக்கு இந்த வேலை எல்லாம் ஒண்ணுமே இல்லைடா. ஆனாலும்... என்னால இதைத் தவிர எந்த வேலையையும் கண்டு பிடிக்க முடியலைடா..." என்று தயங்க,

திரு, "டேய்... நான் மூட்டை தூக்கக் கூடத் தயாராகத்தான் வந்திருக்கேன். நீ என்னடான்னா தயங்கிக் கிட்டு இருக்கே. நியாயமான வழியில் எந்த வேலையாக இருந்தாலும் சரிடா..." என்று கூற,

ரவி, "இல்லைடா... நான் ஆர்டர் எடுக்கிற மெடிக்கல் ஷாப்போட ஓனர் ஒருத்தர் எனக்குத் தெரியும். ரொம்ப நல்லவர்டா. ஆனால், வயசானதால் கடையைப் பார்த்துக்க ஆள் வேணும்னு சொல்லிட்டு இருந்தார். அதான் உன்னை அந்த வேலைக்கு..." என்று இன்னும் தயங்கிக் கொண்டிருக்க,

திரு மென்மையாகச் சிரித்து, "டேய்... இதுக்கு ஏன்டா தயங்குறே? எனக்கு இந்த வேலையே போதும்டா. இதை விடவா நல்ல வேலை இருக்கு... இதுக்குப் போய்த் திக்கிட்டு இருக்கே?" என்று கூற,

ரவி, "டேய்... நான் உன்னை விடக் குறைவா படிச்சவன்டா. நானே மாசம் ஆறாயிரம் வாங்குறேன். ஆனா நீ கோல்ட் மெடலிஸ்ட்டா. அதில் இரண்டாயிரம் தான்டா சம்பளம்..." என்று தழுதழுப்பாகக் கூற,

திரு, "டேய்... நான் ஊரில் இருந்து நூத்தைம்பது ரூபாய்தான்டா கொண்டு வந்தேன். ஆனால், இங்கே இரண்டாயிரம் சம்பாதிக்கப் போறேன். அது போதும்டா. இப்போதைக்கு எனக்குத் தேவை இந்த வேலை. நீ ஒண்ணும் கவலைப்படாமல் கிளம்பு. இப்பவே மெடிக்கல் ஷாப்புக்குப் போகலாம்..." என்று கூறிக் கிளம்பச் சென்ற அவனையே வியப்புடன் பார்த்தான் ரவி.

மருந்துக் கடையின் முதலாளி இக்பால் தமிழ் நாட்டுக்காரர்தான். கிட்டத்தட்ட 60 வயது இருக்கும். சற்றே இறுக்கமாக இருந்தாலும் நல்லவராகவே தோன்றினார்.

"இதோ பாருங்க தம்பி... நான் தொழில் விஷயத்தில் கரெக்டா இருப்பேன். இது நாலு பேரு உயிரைக்

காப்பாத்துற தெய்விகத் தொழிலாகத்தான் நான் நினைக்கிறேன். அதனால் மனசெல்லாம் தொழிலில்தான் இருக்கணும். நீங்க வேற சின்ன வயசுக்காரங்களா இருக்கீங்க. அப்புறம் ஏதாவது கெட்ட பேர் வந்துட்டா... அல்லா கசம்... நான் என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது," என்று ஆணித்தரமாகக் கூற,

ஒரு விரக்திச் சிரிப்புச் சிரித்த திரு, "எப்போ என் அண்ணன் அண்ணி இந்த ரெண்டு பிள்ளைகளை யும் என் பொறுப்பில் விட்டுட்டுப் போனாங்களோ... அப்போவே என் மனதில் இருந்த இளமைக்கான உணர்வுகள் எல்லாம் மரத்துப் போச்சு சார். பாசம் மட்டும்தான் மிச்சம் இருக்கு. இந்தப் பிள்ளைகளுக்காகத் தான் உங்க முன்னாடி நிற்கிறேன். உங்க நம்பிக்கையை நான் கண்டிப்பாகக் காப்பாத்துவேன் சார்," என்று உறுதி யுடன் கூற,

அவனின் உறுதி அவருக்குப் பிடித்திருந்தது. தன் மகன் வயதில் இருக்கும் அவனிடம் இருந்த மன முதிர்ச்சியைக் கண்டு ஆச்சரியப்பட்டவர், ராமையும் பாரதியையும் அழைத்து, உச்சி கோதி, "சின்னப் பிள்ளைகளா இருக்கேப்பா... எப்படித் தனியாளாகக் கவனிச்சுப்பே? ஒரு கல்யாணத்தைப் பண்ணிக்கோ!" என்று கூற,

திரு, தன் புன்னகை முகம் மாறாமல், "இப்போ தானே சார் சொன்னேன்... என் உணர்வுகள் எல்லாம் மரத்துப் போச்சு சார். அதுவும் இல்லாமல் இப்போ நான் இருக்கும் நிலையில் - அதாவது நடக்கவே தெரியாத ஒருத்தன் எப்படி சார் மாரத்தானில் ஓட முடியும்?

எப்படியாவது இவங்களைக் காப்பாத்துவேன் சார். ஒரு வாய்ப்பு மட்டும் கொடுங்க சார்..." என்று கெஞ்ச, அவர் மனம் இளக ஆரம்பித்தது.

"சரி தம்பி... உன் கண்ணில் நேர்மை தெரியுது. இரண்டாயிரம் கொடுக்கிறதாகத்தான் இருந்தேன்... கூட ஐந்நூறு சேர்த்துப் போட்டுத் தரேன். பக்கத்தில்தான் என் வீடு. என் பொண்டாட்டி, ஒரு மகன், மருமகள், ஒரு பேரன். என் மகள் நிக்காஹ் செய்து கொடுத்து இப்போ சவுதியில் இருக்கா. இதுதான் என் குடும்பம். முன்னாடி மாதிரி ஓடி ஓடி வர முடியலை. வயசாயிடுச்சு... அதான் உன்னை மாதிரி ஒரு ஆள் தேடிட்டு இருந்தேன். நீ ஏதோ பெரிய படிப்புப் படிச்சிருக்கேன்னு ரவி தம்பி சொல்லிச்சு. அதனால நான் அவ்வளவாகக் கத்துக் கொடுக்க வேண்டாம் இல்லை...?" என்று கேட்க,

திரு தெளிவுடன், "ஒரு இரண்டு நாள் டைம் கொடுத்தாப் பேதும் சார். நான் கத்துக்கிறேன் சார்..." என்று நம்பிக்கையுடன் கூற,

முகம்மது நிம்மதியுடன், "இன்ஷா அல்லாஹ்... அப்படின்னா நாளைக்கே வேலைக்கு வந்திடுப்பா... சரியாக ஒன்பது மணிக்கெல்லாம் எனக்கு நீ இங்கே இருக்கணும்... சரியா?" என்று கறாருடன் கூற,

திருச்சிற்றம்பலம், "கண்டிப்பா சார்... ரொம்ப நன்றி சார்..." என்று கைகூப்பி நன்றி தெரிவித்தான்.

அவரிடம் விடை பெற்று விட்டு, ரவியுடனும் ராம் பாரதியுடனும் வெளிவந்தவனுக்கு உலகமே புதிதாக இருந்தது.

அன்றிலிருந்து வாழ்க்கை ஒரு மாதிரி நிலைப் பாட்டிற்கு வந்தது. மாதம் இரண்டாயிரத்து ஐந்நூறுதான் சம்பளம் என்றாலும், அந்த ஊரில் செலவுகளுக்கு ஏற்ப சிக்கனமாக இருக்கக் கற்றுக் கொண்டான் திரு. முன்பு போல் ராமையும் பாரதியையும் தனியார் பள்ளியில் சேர்க்காமல், அரசுப் பள்ளியில்தான் சேர்த்தான்.

ரவி கேட்டதற்கு, "படிப்புங்கிறது மனுஷனுக்குக் கிடைக்கிற வரம் ரவி. அந்த வரம் தனியார் பள்ளியில் மட்டுமில்லை, அரசாங்கப் பள்ளிகளிலும் கிடைக்கும். பூமியில் புதைஞ்சி தோண்டித் தோண்டிக் கிடைக்கிற வைரம்தான் படிப்பு. அதைத் தோண்டுகிற கடப்பாறை முக்கியமில்லை. தோண்டுகிறவனோட முயற்சிதான் முக்கியம். அறிவுள்ள பிள்ளைகள் எங்கே படிச்சாலும் ஜெயிக்கும். நீ கவலைப்படாதே!" என்று சமாதானப் படுத்தியவன், அவர்களை அரசுப் பள்ளியில் சேர்த்தான். இதனால் அந்தச் செலவு குறைந்தது.

அதுவும் இல்லாமல், சாப்பாட்டிற்கும் பெரிதாகச் செலவில்லை. ஒரு நாளைக்கு நாற்பது ரூபாயில் தெரு வோரக் கன்னடப் பாட்டியின் இட்லிக் கடையில் மூன்று வேளைச் சாப்பாடு மூன்று பேருக்கும் பசியாற்றியது. இதனால் அரிசி, பருப்பு வாங்கும் செலவு இல்லை.

அவர்கள் அறைக்கு மின்சாரம் எதுவும் இல்லாததால் வெறும் வாடகை மட்டும்தான். முதலில் கொஞ்சம் கஷ்டமாக இருந்தாலும், மொட்டை மாடிக் காற்று அவர்களுக்குச் சொர்க்கத்தைக் காட்ட, அதற்கு அடிமையாகிப் போயினர்.

முதலில் கன்னடம் கொஞ்சம் தடுமாறினாலும், இப்போது கொஞ்சம் கலப்பினமாகப் பேசிச் சமாளிக்க ஆரம்பித்தான். ராம், பாரதி இருவரையும் தன் மார்பிலேயே போட்டுத் தூங்க வைப்பான். யாருக்காவது உடம்பு சரியில்லை என்றால், இவன் பட்டினி கிடந்து பேணுவான்.

அவர்களின் துணி துவைப்பதிலிருந்து பாரதிக்கு ஜடை பின்னுவதிலிருந்து ஷூவிற்குப் பாலிஷ் போடுவது வரை கண்ணுக்குக் கண்ணாய் இருந்து பார்ப்பான். காலை 8.30க்கெல்லாம் அவர்களைப் பள்ளியில் விட்டு விட்டுச் சரியாக 9 மணிக்குக் கடையில் இருப்பான்.

ஆனாலும் வீட்டுப் பிரச்சினைகளால் அவன் வேலையில் ஒருபோதும் கோட்டை விட்டதில்லை. கொஞ்சம் கொஞ்சமாக அனைத்தையும் கற்றுக் கொண்டு, தன் மனச்சாட்சிக்குத் தக்கவே வேலை பார்த்தான்.

இரவு 8 மணிவரை அவனுக்கு வேலை என்பதால், பிள்ளைகளைப் பார்க்க யாரும் இல்லாமல் தடுமாற, முகம்மதுவே மனமிரங்கி, “ஏன்பா திரு... பேசாமல் பிள்ளைகளை ஸ்கூலில் இருந்து கூட்டி வந்து நம்ம வீட்டுக்குக் கொண்டு வந்து விட்டு விடுப்பா. நம்ம பேரப் பசங்க இருக்குது இல்லை... கூடச் சேர்ந்து விளையாடிட்டு இருக்கும். பொழுது போகிறது தெரியாது. நீ வீட்டுக்குப் போகும்போது கூட்டிட்டுப் போ...” என்று கூற, அவனுக்கும் அதுவே சரியெனத் தோன்ற, அவ்வாறே செய்தான்.

மாதா மாதம் சம்பளம் வந்தவுடன் முதல் வேலையாக முதலில் ரவிக்குத் தர வேண்டிய இரண்டாயிரத்தில்

தவணையாக ஐந்நூறைத் தந்து விட்டுத்தான் அடுத்த வேலை பார்ப்பான்.

வந்த சில நாட்கள் வேதாவுடன் தொலைபேசியில் பேசிக் கொண்டுதான் இருந்தான். ஆனால், போகப் போக அது குறைந்து, பின் மறைந்தே போய் விட்டது. வாழ்க்கையின் ஓட்டத்தில் முன்னோக்கி ஓடி ஓடி... பின்னால் பார்க்கும் பழக்கமே நமக்கு இல்லாது போகிறதே...! அதில் இதுவும் ஒரு உதாரணம். அதுதான் அவர்கள் செய்த மிகப் பெரிய தப்பு என்பதைப் பிற்காலத்தின்தான் உணர்ந்தனர்.

திருவின் உழைப்பிற்கேற்ப, பாரதியும் ராமும் போட்டி போட்டுக் கொண்டு படித்தனர். இயல்பிலேயே நன்றாகப் படிக்கும் குழந்தைகள்தான் என்பதால், அந்தப் பள்ளி யிலும் அவர்கள் சோடை போகவில்லை. படிப்பில் மட்டுமல்லாது, தன் குறும்புத்தனத்தால், புத்திசாலித் தனத்தால் அனைவரையும் ஈர்த்து விடுவாள் பாரதி.

அப்படித்தான் ஒருநாள் முகம்மதுவிடம், "தாத்தா... நீங்க நல்லா பால் விளையாடுவீங்களா?" என்று அவர் மடியில் அமர்ந்து கேட்க,

முகம்மது யோசித்து, "இல்லை குட்டிம்மா... ஏன் கேட்கிறே?" என்று புரியாமல் கேட்க,

பாரதி, "நசீர் (முகம்மதுவின் பேரன்) உங்க பேர் முகம்மது இக்'பால்' அப்படின்னு சொன்னானா... அதான் கேட்டேன்," என்று அந்தப் பாலில் அழுத்தம் கொடுத்து ஏற்றத்துடன் கூற, அதை எதிர்பார்க்காத அங்கிருந்த அனைவரும் விழுந்து விழுந்து சிரித்தனர்.

முகம்மது வயிறு வெடிக்கச் சிரித்து, "மேரி ப்யாரி பச்சி... என் பேருக்கு இப்படி ஒரு விளக்கம் யாரும் கொடுத்ததில்லை. எவ்ளோ குறும்பு உனக்கு!" என்று கொஞ்சவும், திருச்சிற்றம்பலம் வந்து சேர்ந்தான்.

"என்ன சார்...? ரொம்பத் தொல்லை பண்றாளா?" என்று சங்கடத்துடன் கேட்க,

முகம்மது சிரிப்புடன், "அடப் போப்பா... இவ இருக்கிறதால்தான் என் பி.பி., சுகர் எல்லாம் நார்மலா இருக்கு. என்ன பார்க்கிறே... இவ பேசுற பேச்சில் என் இரத்த அழுத்தம் குறையுது. இவ பின்னாடி ஓடி ஓடி என் சுகரும் குறைஞ்சிடுது. என் ப்யாரி பச்சி..." என்று கொஞ்ச, திருவிற்கு மகிழ்ச்சியாக இருந்தது.

பின் முகம்மது, "சுஷ்மா... தம்பி வந்திருக்கு பார். அந்தக் கோழிக் குழம்பு கொடுத்து விடு," என்று கூற, அதன்படி அவர் மனைவியும் கொண்டு வர,

திரு, "இல்லை சார்... இதெல்லாம் எதுக்கு...?" என்று தயங்கினாலும், முகம்மதுவின் வழக்கமான மிரட்டலில் வாங்கிக் கொண்டான்.

இப்படியாக அவர்கள் வாழ்க்கை தெளிந்த நீரோடை போல் செல்லத் துவங்கியது.

இப்படியாக இரண்டு வருடம் சென்றது. ரவியும் எவ்வளவோ முயன்றான்... அவன் கம்பெனியில் அவனுக்காக எந்தக் காலியிடமும் வந்தபாடில்லை.

ரவியின் கவலை என்னவென்றால், அவன் இப்படியே தேங்கிப் போய் விடுவானோ என்றுதான்.

அவனுடைய தகுதிக்குக் கொஞ்சமும் பொருந்தாத வேலையில் சேர்ந்தான்தான். ஆனால், அந்த நேரத்திற்கு அதுதான் புத்திசாலித்தனமான முடிவு. ஆனால், அதிலேயே தேங்கி விடுவது முட்டாள்தனமல்லவா?

இவ்வாறு நினைத்தாலும் திருவிடம் கூறுவதற்கு என்னவோ தயக்கமாகவே இருந்தது அவனுக்கு. ஆனால் அவன் தயக்கத்தையும் குழப்பத்தையும் திருவே களைந்தான்.

ஒரு நாள் அவன் அறைக்கு வந்தவன், “டேய், எனக்கென்னமோ இந்த வேலையிலேயே தேங்கிடக் கூடாதுன்னு தோணுதுடா. எனக்காக இல்லைடா... இந்தப் பிள்ளைகளுக்கு நான் இதைவிட நல்ல வாழ்க்கையைக் கொடுத்தாகணும். அவங்களை நான் என் அண்ணாவை விடக் கௌரவமா வைச்சிக்கணும்னு தோணுது. இப்படி ஒவ்வொரு ரூபாயையும் எண்ணி எண்ணி எவ்வளவு நாள் செலவழிக்கிறது, சொல்லு!” என்று கூறியவனை மகிழ்ச்சியுடன் பார்த்த ரவி,

“நல்ல முடிவெடுத்திருக்கேடா. நானே இதைப் பத்தி உன்கிட்ட பேசணும்னு நினைச்சேன். அதுக்குள்ளே நீயே முடிவெடுத்துட்டே. என்னடா செய்யலாம்னு இருக்கே? ஏதாவது பிசினஸ் மாதிரி...” என்று கேட்டவனைச் சிரிப்புடன் பார்த்த திரு,

“அதெல்லாம் பணம் இருக்கிறவங்களுக்குத்தான்டா பிசினஸ்... என்கிட்ட இருக்கிற ஒரே மூலதனம் மூளை. அதை வைச்சுத்தான் பிசினஸ் பண்றதா இருக்கேன்...” என்று கூற,

ரவி புரியாமல் பார்த்தான்.

திரு, "என்னடா பார்க்கிற! முகம்மது சார்தான் இந்த ஐடியாவைக் கொடுத்தார். நான் யு.பி.எஸ்.சி., எக்ஸாம் எழுதலாம்னு இருக்கேன்டா. என்ன சொல்றே?" என்று கேட்க,

ரவி முகத்தில் ஆச்சரியம் பொங்கியது. "டேய், சூப்பர்டா. நல்ல முடிவெடுத்திருக்கே. நீ கண்டிப்பா ஜெயிப் பேடா. கவலைப்படாதே... என்ன ஹெல்ப் வேணாலும் என்கிட்ட கேளு..." என்று கூறிய நண்பனைப் பெருமை யாகப் பார்த்தவன்,

"தேங்க்ஸ்டா. முகம்மது சார் சொந்தக்காரர் யாரோ எழுதப் போறாங்களாம். அதனால் அவங்களே எனக்கு எல்லாமே கைட் பண்றேன்னு சொல்லியிருக்காருடா. இனிமே எல்லாம் கடவுள்கிட்ட தான்டா இருக்கு..." என்று கூற,

அவனை அணைத்துக் கொண்ட ரவி, "நீ எல்லாத் திலேயும் ஜெயிப்பேடா. கவலைப்படாதே!" என்று அவனை உற்சாகப்படுத்தினான்.

அன்றிலிருந்து வேலை நேரத்திலும் ஏதாவது ஒரு புத்தகத்தில் மூழ்கியிருக்க ஆரம்பித்தான் திரு. ஆனால், இதனால் எந்தவிதச் சலுகையும் முகம்மதுவிடம் கேட்க வில்லை.

வழக்கம்போல் அவன் வேலையைச் செய்தான். என்ன... கையில் புத்தகத்துடன். அவ்வளவுதான். மதியம் சாப்பாட்டிற்குப் பின் எல்லாம் மருந்துக் கடையில்

அவ்வளவாகப் பரபரப்பில்லாத நேரம் ஆதலால் அவனால் நிம்மதியாகவே படிக்க முடிந்தது.

வீட்டிற்குச் சென்றதும் இரவெல்லாம் மொட்டை மாடியில் மெழுகுவத்தி ஏற்றி வைத்துப் படிப்பான். ஆனாலும் முதல் தடவை அவனால் பிரிலிமினரியில் மட்டும்தான் தேர்ச்சி பெற முடிந்தது. மெயின்ஸ் பரிட்சையில் தேர்ச்சி பெற முடியவில்லை.

ஆனாலும் தோல்விகளும் தடைகளும் அவனுக்கு என்ன புதிதா? இந்த இரண்டு வருடங்கள் அவனுக்குத் தந்த இருபது வருட அனுபவத்தை மேல் கொண்டு வந்தான்.

அதனால் துவளவில்லை. எழுந்தான். ஓடினான். அடுத்த வருடம் பரிட்சையை எழுதினான். அதில் தான் செய்த தவறுகளைத் திருத்திக் கொண்டு, இந்த முறை இரண்டு தேர்விலும் வெற்றி பெற்றான். வெற்றிக் கனி அவனால் ருசிக்கப்பட்டது. பெங்களூரில் தேர்ந்தெடுக்கப் பட்ட ஐந்து பேரில் ஒருவராக வந்தான்.

அவனால் இந்தச் சந்தோஷத்தை முழுமையாக அனுபவிக்க முடியவில்லை. முகம்மது சாரும், அவர் குடும்பமும், ரவி என... அனைவரும் பாராட்டித் தள்ளினர்.

ஆனாலும் மனமெல்லாம் அவனின் அண்ண னிடமும் அண்ணியிடமும் மட்டுமே இருந்தது.

அவர்கள் படத்தின் முன்பு நின்று, "இதெல்லாம் எனக்காக இல்லை அண்ணி. என் பிள்ளைகளுக் காகத்தான். ஆம் அண்ணா... அவங்க என் பிள்ளை

களாகவே மாறிட்டாங்கண்ணா... அவங்களால வந்தது தான் அண்ணா... இந்த வெற்றி. இல்லைன்னா நான் ஒண்ணுமே இல்லைண்ணா. எப்பவும் என் கூடவே இருங்கண்ணா..." என்று மட்டும் வேண்டிக் கொண்டான்.

அடுத்த பிரச்சினை கிளம்பியது. பயிற்சிக்காக ஒரு வருடம் வெளியூர் செல்ல வேண்டி வந்தது.

திரு பதறிப் போனான். "ரவி, ராமையும் பாரதியை யும் கூடவே கூட்டிட்டுப் போயிடட்டுமாடா...?" என்று அப்பாவியாகக் கேட்ட தன் நண்பனை முறைத்த ரவி,

"லூசாடா நீ... கூட்டிட்டுப் போறானாம் கூட்டிட்டு. அங்க அவங்க சொல்ற இடத்தில்தான் தங்கணும். நீ பிள்ளைகளை எங்கேடா தங்க வைப்பே...? அதுவும் இல்லாமல் ஒரு வருசம் படிப்பு என்னாகும்னு யோசிச்சுப் பார்த்தியா?" என்று திட்ட,

திரு ஒன்றும் புரியாமல் விழித்தான்.

ரவி, "நானே பார்த்துப்பேன்டா. ஆனா என்னால் உன்னளவுக்கு எல்லாம் பார்த்துக்க முடியுமான்னு தெரியலைடா. பேச்சிலர் வாழ்க்கையிலயே சுகம் கண்டுட்டேன். அதுவும் இல்லாமல் எனக்கு ஊர் ஊராச் சுத்துற வேலை. அதான் யோசிக்கிறேன்..." என்று கூற,

திரு, "ஏய்... நான் ஒண்ணும் தப்பா நினைக்க லைடா. எனக்கு உன்னைப் பத்தித் தெரியாதா? ஆனா இப்ப குழந்தைங்க எங்கே?" என்று தயங்க,

"ஏங்க சார்... நாங்க பார்த்துக்க மாட்டோமா?" என்று சிரிப்புடன் ஒரு குரல் கேட்க,

சடாரென்று திரும்பிப் பார்த்தனர் இருவரும். அங்கே நின்றிருந்தது முகம்மது சாரேதான்.

திரு, "சார், நீங்களா... உங்களுக்கு ரொம்பச் சிரமம் சார். அதெல்லாம் என்னால் ஒத்துக்கவே முடியாது..." என்று பதற,

ரவியும், "பாய்... உங்களுக்கு வயசாகிடுச்சு. இரண்டும் சின்னப் பிள்ளைகள். உங்களால் சமாளிக்க முடியாது, பாய்!" என்று கூற,

முகம்மது, "ஏன் தம்பி... இவ்வளவு நாள் ஸ்கூலில் இருந்து வந்து கிட்டத்தட்ட நாலு மணி நேரம் நான் பார்த்துக்கிட்டேன்தானே, இதில் என்ன?" என்று கேட்க,

திரு, "சார்... அது வேற... ஆனா முழுசா ஒரு வருசம். கஷ்டம் சார்..." என்று திணற,

கலகலவெனச் சிரித்த முகம்மது, "தம்பி... ஏற்கெனவே என் பையனும் அவன் குடும்பமும் சவுதிக்குப் போயிடுச்சு. வீடே வெறிச்சுன்னு இருக்கு தம்பி. நானும் சுஷ்மாவும் எவ்வளவு நாள்தான் ஒருத்தர் முகத்தையே ஒருத்தர் பார்த்துக்கிட்டு இருக்கிறது. ரொம்ப போரா இருக்கு தம்பி. அதான்... ஒரு வருசம்தானே... சிட்டாய்ப் பறந்திடும்..." என்று கூற,

ஏதோ கூற வந்த திருவைத் தடுத்த முகம்மது, "சரி என்று சொல்றதா இருந்தால் மட்டும் வாயைத் திற. வேற எதுக்கும் திறக்காதே!" என்று மிரட்ட,

திருவிற்குச் சிரிப்பு வந்தது. "சரிங்க சார். உங்க ளுக்கு எது சரின்னு படுகிறதோ செய்யுங்க. ஆனாலும்

பிள்ளைகளை விட்டுப் போறது கஷ்டமாத்தான் இருக்கு...” என்று கம்மிய குரலில் கூற,

அவன் அன்பைப் பார்த்து நெகிழ்ந்த முகம்மது, “அவங்களுக்காகத்தானே எல்லாம் செய்யுற. அவங்க நல்லதுக்காகத்தானே ஒரு நல்ல வாய்ப்பைத் தேடிப் போறே. அதை நினைச்சிக்கோ. கஷ்டம் தெரியாது...” என்று அவனை ஊக்குவித்துப் பயிற்சிக்கு அனுப்பி வைத்தார்.

ஒரு வருடப் பயிற்சியைக் கண்ணை மூடிக் கொண்டு, தன் ஆசாபாசங்களை அடக்கி நன்முறையில் முடித்தான் திரு. பிள்ளைகளின் புகைப்படங்களையே தன் வாழ்வின் ஆதாரமாக வைத்து மூச்சுக்கு முந்நூறு தடவை முத்தமிட்டு, வாரம் ஒரு தடவை தெவிட்டாத அவர்கள் குரல் கேட்டு அழுது அனைத்தையும் தன் மனதிலேயே வைத்துப் பூட்டித் தன் முழுக் கவனத்தையும் பயிற்சியில் வைத்து, கிட்டத்தட்ட பாண்டவர்களின் அஞ்ஞாதவாசம் போல ஒரு வருடத்தைத் தள்ளி...

ஒரு கம்பீரமான ஐ.பி.எஸ். ஆபீசராக அதே பெங்களூரில் வந்திறங்கினான் திருச்சிற்றம்பலம்.

ஆம். அவன் சாதித்து விட்டான். இருளை எதிர்த்து ஒளியைப் பெற்று விட்டான்.

அன்றைய தினம் அவனுக்குள் ஏற்பட்ட சிலிர்ப்பு ஏழேழு ஜென்மப் பிறவி எடுத்தாலும் அவனால் மறக்க முடியுமா என்பது சந்தேகமே!

# 14

கொண்டை முடிப்பதற்கே - மணங்
கூடு தைலங்களும்,
வண்டு விழியினுக்கே - கண்ணன்
மையுங் கொண்டு தரும்!
தண்டைப் பாதங்களுக்கே - செம்மை
சார்த்துசெம் பஞ்சு தரும்!
பெண்டிர் தமக்கெல்லாம் - கண்ணன்
பேசருந் தெய்வமடீ!

வந்து சேர்ந்த அவனை ஒன்பது வயதுப் பாரதியும், பன்னிரண்டு வயது ராமுவும் கட்டியணைத்து முத்தமழை பொழிய...

நெடுநாளைக்குப் பின் தன் பிள்ளைகளின் அன்பில் குளித்து, அவர்களையும் குளிப்பாட்டினான் திரு.

ரவியும் இப்போது புதுக் களையுடன்தான் இருந்தான். ஏனெனில் அடுத்த மாதம் அவனுக்குத் திருமணம். அந்த விதத்தில் அவனைச் சிறிது நேரம் கிண்டல் செய்து கொண்டிருந்த திருவிடம், முகம்மது... "திரு, உனக்கு எங்கே போஸ்டிங்? அந்த விவரம் எல்லாம் தெரியுமா?" என்று கேட்க,

திரு, "ஆமா சார். புனேயில் போஸ்டிங் போட் டிருக்காங்க சார். டி.சி.பி.யா இன்னும் ஒரு வாரத்தில் ஜாயின் பண்ணணும்..." என்று கூற,

முகம்மது, "இன்ஷா அல்லா. ரொம்பச் சந்தோஷம்பா. என் கண்ணு முன்னாடி வளர்ந்த பையன்

இவ்ளோ பெரிய நிலைக்கு வந்தது ரொம்பச் சந்தோஷமா இருக்குப்பா..." என்று நெகிழ,

திரு அவர் கையைப் பிடித்து, "என்ன சார்... நீங்க மட்டும் உதவி செய்யலைன்னா நான் இந்த நிலைக்கே வந்திருக்க முடியாது, சார். உங்களை நன்றி என்ற சின்ன வார்த்தை சொல்லித் தள்ளி வைக்க விரும்பலை சார். என் மனசில் உங்களுக்கெல்லாம் பெரிய இடம் வைச்சிருக்கேன் சார்!" என்று நன்றியுடன் ரவியையும் பார்த்தபடி சொல்ல...

முகம்மது, "என்ன இருந்தாலும் அதே நெடுநெடு பையனாத்தான் என் கண்ணுக்குத் தெரியுற திரு. சரி... அதை விடு. உன்கிட்ட ஒண்ணு கேட்கணுமே..." என்று ரவியை ஒரு பார்வை பார்த்து விட்டுத் தயங்க...

ரவியோ கண்ணாலேயே, "கேளுங்க பாய்..." என்று உசுப்பிக் கொண்டிருந்தான்.

திரு அதைக் கவனித்து, "என்ன சார்... ரவி ஏதோ சைகை காண்பிக்கிறான். என்ன விஷயம்? என்கிட்ட தயங்காமல் சொல்லுங்க!" என்று கூற,

முகம்மது, "அதில்லை திரு... நான் சொன்னா நீ ஒத்துக்க மாட்டேன்னு தெரியும். ஆனாலும் மனசு கேட்கலை..." என்று தயங்கியவர் பின், "நீ இப்போ ஒரு அரசாங்க அதிகாரி. அதுவும் போலீஸ். நேரங்கெட்ட நேரத்தில் வரவேண்டி இருக்கும். போக வேண்டி இருக்கும். இப்போவாச்சும் நீ இங்கே இருந்ததால் நாங்க பார்த்துக் கிட்டோம்.

"ஆனால் இதுவே புனேயில் பிள்ளைகளை யார் கவனிச்சிப்பாங்க? அதனால்தான் சொல்றேன். நீ என்னைத் தப்பா எடுத்துக்கிட்டாலும் பரவாயில்லை. நீ ஒரு நிக்காஹ் செய்துக்கணும் திரு..." என்று சொல்லி முடிக்க, திரு கிட்டத்தட்ட மயக்க நிலைக்கே சென்றான்.

"என்ன சார் சொல்றீங்க... புரிஞ்சுதான் பேசுறீங் களா? டேய் ரவி, இதெல்லாம் உன் வேலையா?" என்று எரிந்து விழ,

ரவி, "இதுக்கு ஏன்டா டென்ஷன் ஆகுறே? எவ்ளோ நாளைக்கு இப்படியே இருப்பே. பிராக்டிக்கலா யோசிடா. சும்மா எல்லாத்தையும் சென்டிமெண்டலாவே பார்க்காதே. அவ்வளவுதான் சொல்வேன்..." என்று கூற,

திரு, "இது ஒண்ணும் பைத்தியக்காரத்தனம் இல்லை ரவி. என்னோட மனசு. என் அண்ணன், அண்ணிக்காக நான் செய்யுற கடமை..." என்று அதட்ட,

முகம்மது, "சரிதான். உன் மனசு எல்லாமே எனக்குப் புரியுது திரு. உனக்கு உன் அண்ணன் பிள்ளைகளைப் பார்த்துக்கிற கடமை இருக்குதான். நான் இல்லைனு சொல்லலை. ஆனால் உன் வாழ்க்கையைக் கொன்னுட்டு நீ அவங்க வாழ்க்கையைக் காப்பாத் தணும்னு உன் அண்ணனும் அண்ணியும் நினைச்சிருப் பாங்களா... சொல்லு!" என்று கூற,

திரு. "சார், தயவுசெய்து என்னைக் குழப்பாதீங்க. நான் தெளிவாத்தான் இருக்கேன், என் முடிவில்..." என்று கூற,

முகம்மது சிரிப்புடன், "ஆமா திரு. நீ இப்போ தெளிவாத்தான் இருக்கே. நாளாக நாளாகக் கண்டிப்பா உன் மனசில் ஒரு ஏக்கம் வரும். இப்போன்னு இல்லை. ராம், பாரதியெல்லாம் வளர்ந்து அவங்கவங்க வாழ்க்கையைப் பார்த்துக்க ஆரம்பிக்கும்போது... அந்தத் தேடல் வரும். நமக்கு ஒரு துணை இருந்தால் நல்லா இருந்திருக்குமேன்னு தோணும்.

"சீ... இந்தப் பிள்ளைகளுக்காக நம்ம வாழ்க்கையைத் தொலைச்சிட்டோமேன்னு விரக்தி வரும். கண்டிப்பா வரும் திரு.... நாமெல்லாம் மனுஷங்கதான். மனமும் குரங்குதான். அது நேரத்துக்கு நேரம் தாவத்தான் செய்யும். நீ காலம் போன காலத்தில் இப்படி வருத்தப் பட்டால் அந்தத் தளிர்கள் வாழ்க்கை நல்லா இருக்குமா? நினைச்சுப் பாரு..." என்று பலவாறான போதனைகள் கூற...

திரு குழம்பினான். தன் முடிவில் தளர்ந்தான். அதைச் சாக்காக வைத்து அவனுக்குப் பெண் பார்க்க ஆரம்பித்தார்கள்.

அங்கேதான் முகம்மது தவறு செய்தார். திருமணம் என்பது ஆசையால் நிகழவேண்டும். அல்லது, காதலால் நிகழவேண்டும்... இவை இரண்டுமே இல்லாமல் திருவின் குழம்பிய மனநிலையால்... அவனின் திருமணத்தை நடத்த எத்தனித்தனர். பரஸ்பரம் புரிந்து நடைபெறும் திருமணமே ஜெயிப்பதில்லை. இது முழுக்க முழுக்கச் சூழ்நிலையின் கட்டாயத்தால் நடக்கும் திருமணம். இதில் எந்த அளவு புரிதல் இருக்கும்?

மணப்பெண் தேடுதல் வேட்டை ஆரம்பித்தது. புனேக்குச் சென்றாலும் முகம்மதுவும் ரவியும் தங்களால் முடிந்த பொறுப்பைச் செய்தனர்.

அவன் பதவியை நினைத்துப் பெண்ணைக் கொடுக்க வந்தவர்கள் இலவச இணைப்பாக ராமுவை யும், பாரதியையும் தருவோம் என்று கூற, விழுந்தடித்து ஓடினர்.

ஆனாலும், ஒரு பெண்வீட்டினர் வந்தனர். அவனை மட்டுமின்றி, அவன் குடும்பத்தையும் ஏற்றுக்கொள்ளும் மனநிலையுடன் வந்தனர். சற்றே வசதி உள்ளவர்கள்தான்.

பெண்ணின் பெயர் கஸ்தூரி. நல்ல இலட்சண மாகவே இருந்தாள். திருவிற்கும் பிடித்துவிடப் பெரிதளவு பேச்சுவார்த்தை இன்றி, அடுத்த முகூர்த்தத்திலேயே திருமணம் நடந்தது.

திருமணம் முடிந்த கையோடு அவர்களிடம் பிரியாவிடை பெற்றுச் சென்றனர், ரவியும் முகம்மதுவும்.

“டேய், கல்யாணத்துக்கு வாடா. அப்பப்போ ஃபோன் பண்ணு. எங்களை மறந்துடாதேடா...” என்று ரவி கிளம்ப,

“நானும் மெக்காவுக்குக் கிளம்புறேன், திரு. அடுத்த மாசம் மகன்கூட சவுதிக்குக் கிளம்புறேன். பல மாசமாகக் கூப்பிட்டுட்டு இருக்கான். இனிமேயாச்சும் போகணும் போல இருக்கு. அப்பப்ப லெட்டர் போடு திரு. ராமையும் பாரதியையும் ஃபோனில் பேச வை!” என்று முகம்மதுவும், தன் மனைவியுடன் விடைபெற்றுக் கொள்ள... தன் வாழ்வில் முக்கியப் பங்கு வகித்த இருவரையும் கண்ணீர்

மல்கத் தன் நெஞ்சில் நிரப்பி, மரியாதையுடன் வழியனுப்பி வைத்தான் திரு.

ராமுவும் பாரதியும் வெகுநாட்களுக்குப் பின் முகம் கொள்ளாச் சிரிப்புடன் சுற்றினர். கூட்டத்தைப் பார்த்ததும் ஆனந்தக் கூத்தாடினர்.

கஸ்தூரிக்கும் முதலில் குழந்தைகளைப் பிடித்தே இருந்தது. அவர்களுக்கு இனிப்புகள் தந்து கூடவேதான் வைத்துக் கொண்டிருந்தாள்.

ஆனால் அவர்களுக்குத்தான் ஏனோ தங்கள் கூட்டுக்குள் கஸ்தூரியை விடவே பிடிக்கவில்லை. சற்றுத் தள்ளியே நின்றனர். சிறு பிள்ளைகள் எப்போதுமே அப்படித்தானே!

புதியவர்களைக் கண்டால் பழக நேரம் எடுக்கும் அல்லவா! ஆனால் இது என்னவோ கஸ்தூரிக்கு எரிச்சலைக் கிளப்பியது. ஆனாலும் வெளிக்காட்டாமல் தன் கணவனுடன் திருமணம் முடித்து, வீட்டிற்குள் அடியெடுத்து வைத்தாள்.

முதல் நாள் இரவே திரு, கஸ்தூரியிடம், "கஸ்தூரி... இந்தச் சினிமாவில் வர்ற மாதிரிச் சொல்றேன்னு நினைக்காதே. நீ எனக்கு மனைவியா இருக்கிறதைவிட ராமிற்கும் பாரதிக்கும் நீ தாயா இருந்தால் ரொம்பச் சந்தோஷப்படுவேன். உனக்குப் பழகக் கொஞ்ச நாள் ஆகும்தான். ஆனால் அவங்கதான் எனக்கு எல்லாம். அதனால் உன் மனசுக்குள் அவங்களுக்கும் ஒரு இடம் கொடு!" என்று கறாராக இல்லாமல்... தன்மையாகவே

பேச... தன் மனம் இறுக்கமெல்லாம் களைந்து, தன் கணவனிடம் காதலுடன் ஒன்றிப் போனாள் கஸ்தூரி.

தன் அண்ணன், அண்ணியை மானசீகமாக வணங்கிவிட்டுத் தன் திருமண வாழ்வில் அடியெடுத்து வைத்தான் திரு.

**மு**தல் ஒரு மாதம் நன்றாகவே சென்றது. புதிதாகத் திருமணமானவர்களுக்கே உரிய சிறு சிறு ஊடல்களுடனும் கூடல்களுடனும் செல்ல... மிகவும் கடினமாகத் தெரிய வில்லை. ஆனால், நாட்கள் செல்லச் செல்லப் பிள்ளைகள் கஸ்தூரியிடம் ஒன்றவே இல்லை. மாறாகத் தங்கள் சித்தப்பாவிடம்தான் சரணடைந்தனர்.

காலையில் சாப்பாடு ஊட்டுவது முதல் படுக்கை விரிப்பதுவரை திரு வேண்டும் அவர்களுக்கு... அவன் இல்லை என்றால் தப்பும் தவறுமாக இருந்தாலும், அவர்களே செய்வார்களே தவிர, கஸ்தூரியை நெருங்க விடமாட்டார்கள்.

ஒரு நாள் திரு காலையிலேயே கேஸ் விஷயமாகச் சென்றிருக்க... கால்களின் ஷூ கயிற்றைத் தப்பும் தவறுமாகப் போட்டுக் கொண்டிருந்த ராமிடம் சென்ற கஸ்தூரி, “ராம், தப்புத் தப்பாப் போடுறே. கொடு. நான் போட்டு விடுறேன்...” என்று கூற,

ராம், “இல்லை சித்தி... நானே செய்துக்கிறேன்...” என்று அதே போல் கோணல் மாணலாகப் போட்டுக் கொண்டு, பள்ளி வேனில் ஏறினான். அது என்னவோ கஸ்தூரிக்கு முகத்தில் அடித்தாற்போல் இருந்தது.

பாரதி சொல்லவே வேண்டாம். சித்தியின் கண் முன்னே கூட வர மாட்டாள். மாறாக, அந்த வயதிலேயே சிறு சிறு வேலைகளைச் செய்யப் பழகிக் கொண்டாள். ஏனோ அவளுக்குக் கஸ்தூரியிடம் ஒன்றவே முடிய வில்லை. தன் சித்தப்பாவிடம் தோன்றிய உரிமைப் பிரச்சினையாகக் கூட இருக்கலாம்.

ஆனால் அதை அறிந்து சீராக்கும் மனப்பக்குவம் கஸ்தூரிக்கும் இல்லை என்றுதான் கூறவேண்டும். இவளும் மன முதிர்ச்சி இல்லாமலே அந்தப் பிரச்சினையைச் சந்தித்தாள்.

இதை எல்லாம் திருவிடம் சொன்னாலும், அவன் பெரிதாகக் கண்டுகொள்ள மாட்டான். "எல்லாம் போகப் போகச் சரியாயிடும், கஸ்தூரி. சின்னப் பிள்ளைதானே! விடு..." என்று கூற,

கோபம் தலைக்கேற அவள் கத்துவாள். "ஆமா. எப்போ பார்த்தாலும் இதை ஒண்ணு சொல்லிடுங்க. என்னைக் கண்டாலே ஏதோ வில்லியைப் பார்த்த மாதிரி ஓடுதுங்க. எனக்கு வர வரக் கடுப்பா இருக்கு. நான் பெறும் என் பிள்ளைகளுக்காவது என்னைப் பிடிக்குதான்னு பார்ப்போம்..." என்று மூக்கு விடைக்க ஒரு நாள் கத்த...

திரு முறைத்து, "என்ன சொன்னே... என் பிள்ளைகளா! அப்போ அவங்க ரெண்டு பேரும் யாரு கஸ்தூரி? ஏன் இப்படி அவசரப்பட்டு வார்த்தையை விடுறே... நீ அவங்களுக்குப் பணிவிடை செய் என்று நான் சொன்னேனா...? அதான் அவங்களே செய்ய ஆரம் பிக்கிறாங்களே... அப்புறம் ஏன் சின்னப் பிள்ளைகள்

மேல வெறுப்பைக் காட்டுற... பேசாமல் படுத்துத் தூங்கு..." என்று அதட்டுவான்.

அது அவளை இன்னும் காயப்படுத்தும். அதனால் அவள் குணம் மாற ஆரம்பித்தது. அவர்கள் மீது வெறுப்பை உமிழ ஆரம்பித்தாள். எதற்கெடுத்தாலும் சண்டை சச்சரவுதான். திருவுக்கு என்னதான் அவள் நடத்தை சிறிதும் பிடிக்கவில்லை என்றாலும், தன் பொறுமையை இழுத்துப் பிடித்துக் கொண்டு அவளைக் காத்து வந்தான். இப்படியே ஆறு மாதங்கள் பறந்தன.

ஒரு நாள் காலை வழக்கம் போல், பாரதி கஸ்தூரியை மறுத்துத் தானே சாப்பிட்டுக் கொண்டு செல்ல... கஸ்தூரிக்குக் கோபம் எகிறியது.

அன்று அதிகாலைதான் வேலை முடித்து வந்து உறங்கிக் கொண்டிருந்த திருவை எழுப்பி, "ஆமா, நீங்க தூங்குங்க. உங்களுக்கென்ன கவலை... உங்க அருமை மகள் மறுபடியும் என்னைத் தவிர்த்து அவளே சாப் பிட்டுட்டுப் போயிட்டா. இதெல்லாம் எனக்குத் தேவையா? சின்னப் பிள்ளைகள் கூட என்னை மதிக்க மாட்டேங்குது என்று நான் குமுறிக்கிட்டு இருக்கேன். நீங்க நிம்மதியாத் தூங்குங்க..." என்று கத்த,

திருவிற்குச் சிறிது நேரம் ஒன்றும் புரியவில்லை. பின் ஓரளவு விவரம் புரிய... அவளைச் சமாதானப்படுத்த வாயெடுத்தவனைக் கையமர்த்தி, கஸ்தூரி, "போதும். என்ன சொல்லப் போறீங்க! சின்னக் குழந்தைகள் கொஞ்ச நாளாகும். அதுதானே...! இதைச் சொல்லிச் சொல்லிக் கேட்டு எனக்குப் புளிச்சுப் போச்சு..." என்று கத்த,

திரு, "கஸ்தூரி, நீ சின்ன விஷயத்தை எல்லாம் பெரிசு பண்றே. அவங்களுக்கு டைம் கொடு. உட்கார்ந்து பேசு. அப்போதான் அவங்களுக்கு உன்னைப் பிடிக்கும். இப்படி மூணாவது மனுஷங்க மாதிரி நடந்துக்கிட்டா அவங்க ஒதுங்கித்தான் போவாங்க. ஒரு வருஷம் அவங்களை முகம்மது பாய் வீட்டில் விட்டிருந்தேன். அவங்க சகஜமாத்தான் இருந்தாங்க. அவங்க எல்லார் கிட்டேயும் மனசு விட்டுப் பழகுற பிள்ளைகள்தான். நீ கொஞ்சம் பதவிசா நடந்துக்கிறதுலதான் இருக்கு."

கஸ்தூரி, "ஆமா... என் மேலதான் தப்பு. நான்தான் ராட்சசி. அதுங்களைப் பாடுபடுத்தறேன். அதைத்தானே சொல்லப் போறீங்க. சரி. நான் அப்படியே இருந்துட்டுப் போறேன். ஆனால், இப்படிப் பொண்டாட்டியைப் பழி சொல்றவர் எதுக்குக் கல்யாணம் செய்துக்கிட்டீங்க? பிரமசாரியாவே இருந்து உங்க பிள்ளைகளைக் கொஞ்சி யிருக்க வேண்டியதுதானே?" என்று ஏதேதோ புலம்ப,

திருவிற்குப் பொறுமை தன் எல்லையைக் கடந்தது. பின், "வாயை மூடு கஸ்தூரி. இனிமே ஒரு வார்த்தை பேசினே, நான் என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது. சே... என் நிம்மதியே போச்சு. இதைவிடப் பல மடங்கு சின்ன வீட்டில் இருந்தாலும் நாங்க மூணு பேரும் சந்தோஷமா இருந்தோம். ஆனால், இப்போ ஒரு நாள் சண்டை இல்லாமல் பொழுது சாயறதில்லை. வீட்டுக்கு வரவே எரிச்சலா இருக்கு.

"இதுக்குத்தான் கல்யாணம் வேணாம் வேணாம்னு தலைப்பாடா அடிச்சிக்கிட்டேன். இப்படி உன்னை என் தலையில் கட்டி வெச்சி என்னைப் பழி வாங்கிட்டாங்க.

இனிமேல் இங்கே இருந்தால் சரிப்பட்டு வராது. நான் ஆபீசுக்குக் கிளம்பறேன். நீ மட்டும் தனியா நிம்மதியா இரு," என்று கத்தி விட்டு, அரை மணி நேரத்தில் தன் அலுவலகத்திற்குச் சென்றிருந்தான்.

அதுவரை ஒன்றும் பேசாமல் சினத்துடன் அவனை முறைத்துக் கொண்டிருந்த மனைவியை அவன் சட்டை செய்யவில்லை.

ஆனால், அன்று மாலை அவனுக்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது. அன்று ஏதோ ஒரு ஃபைலை எடுக்க அவன் வீட்டுக்கு வரும்பொழுதே அவனுக்கு ஏதோ சரியில்லை என்று தெரிந்தது. மூடிக் கிடந்த வாசற்கதவைத் திறந்ததும் குப்பென்று நெடி வர, அவன் பதற்றத்துடன் சமைய லறைக்குச் சென்றான்.

அங்கே, மயங்கி விழுந்து கிடந்தாள் பாரதி. பார்த்தால், கிச்சனில் எரிவாயு சிலிண்டர் மூடப்படாமல் திறந்தே வைக்கப்பட்டு இருந்தது. அதைப் பார்த்ததும் திருவிற்கு உடம்பெல்லாம் பதற ஆரம்பித்தது.

'ஐயோ... கொஞ்சம் விட்டிருந்தால், ஏதாவது பொறி ஏற்பட்டு வெடித்துச் சிதறியிருக்குமே...' என்ற எண்ணம் அவனை ஆட்கொள்ள, ஓடிச் சென்று, மயங்கிக் கிடந்த பாரதியைத் தூக்கிக் கொண்டு கதவு ஜன்னல் எல்லாம் திறந்து விட்டான். சிலிண்டரை மூடினான்.

"குட்டி... குட்டி... எழுந்திருடா. என்னடா ஆச்சு?" என்று உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு அவளை எழுப்ப, லேசாகக் கண்ணைத் திறந்த பாரதி, மூச்சுத்

திணறலுடன் அவனைப் பயத்துடன் கட்டிக் கொண்டு, "சித்... சித்தப்பா... சித்தி அடிச்சிட்டாங்க... வலிக்குது..." என்று உளற,

அப்போதுதான் கஸ்தூரியின் ஞாபகமே வந்தது அவனுக்கு. பாரதியையும் தூக்கிக் கொண்டு மேலே உள்ள அவன் அறைக்குச் சென்று, "கஸ்தூரி... ஏய் கஸ்தூரி..." என்று கதவைத் தட்ட, அது திறக்கப்படவில்லை. இன்னும் கோபமுற்றுக் கதவை உடைத்துக் கொண்டு செல்ல, கட்டிலில் இருந்து பேந்தப் பேந்த விழித்துக் கொண் டிருந்தாள் கஸ்தூரி.

திரு, அவளைப் பார்த்து, வெறுப்புடன் அவளைப் பிடித்து எழுப்பி, "ஏன்டி... ஏன்டி இப்படிச் செஞ்சே?நான் காலையில் திட்டியதை மனசில் வெச்சிக்கிட்டு அந்தப் பச்சைக் குருத்தைக் கொல்லப் பார்த்தியேடி... பாதகி... நீயெல்லாம் ஒரு மனுஷியா?" என்று கேட்க,

கஸ்தூரி, "என்ன சொல்றீங்க? எனக்கு ஒண்ணும் புரியலை..." என்று கூற, அவன் கை அவள் கன்னத்தில் இறங்கியது. ஆத்திரத்தில் அவனுக்குப் பித்தே பிடித் திருந்தது.

கையில் மயங்கிய பாரதியை வைத்துக் கொண்டு முகத்தில் ருத்ர தாண்டவம் ஆடிக் கொண்டிருந்த கோபத்தைக் கொண்டிருக்கும் திருவைத் தன் வாழ்வில் முதன் முறை பார்த்த கஸ்தூரி அதிர்ச்சியடைந்தாள்.

"என்னடி நடிக்கிறே? நீ யெல்லாம் ஒரு பொம்பளை... சே! கேஸ் சிலிண்டரை ஆன் பண்ணி அந்தச் சின்னக் குழந்தையைப் போட்டுட்டு வந்துட்டு, நீ

மட்டும் கதவை அடைச்சிக்கிட்டு பாதுகாப்பா இருக்கியேடி. என்ன இனம் நீயெல்லாம்...?" என்று கூற,

கஸ்தூரி பதறினாள். "இல்லைங்க... நான் ஒண் ணும் செய்யலை. நான் போய் அப்படி யெல்லாம் செய்வேனா?" என்று அதிர,

மறுபடியும் அவளை அறைந்தவன், "வாயை மூடு. உன்னை யெல்லாம் வைக்க வேண்டிய இடத்தில் வெச்சிருக்கணும்... நீ எது செஞ்சாலும் பொறுமையா இருந்தது என் தப்பு. அதனால்தான் இன்னைக்கு இதுக்குத் துணிஞ்சிருக்கே. நீ செய்யாட்டா குழந்தை எப்படி உன் பேரைச் சொல்லும்? நீ அடிச்சேன்னு இவ சொல்றா..." என்று கூற,

கஸ்தூரி தலை குனிந்தாள். "ஆமாங்க... அடிச் சேன். ஆனால், ஏன் என்று..."

திரு கையமர்த்தி, "போதும். இதுக்கு மேல் எதுவும் சொல்லாதே. இதுவே போதும். இனியும் நான் பொறுமை யாக இருந்தால் நான் மனுஷனே இல்லை. நீ செஞ்ச காரியத்திற்கு உன்னைக் கைது செய்திருக்கணும். ஆனால், அதனால் என் குடும்ப மானம்தான் போகும். இனி நான் உன் கூட வாழ முடியாது. நம்ம ரெண்டு பேருக்கும் ஒத்து வராது..." என்று கூறுவதற்குள் பாரதிக்கு மூச்சுத் திணறல் அதிகரித்தது.

அவளைப் பார்த்த திரு, கஸ்தூரியிடம், "நான் இவளை ஆஸ்பத்திரிக்குக் கூட்டிட்டுப் போறேன். திரும்ப வரும்பொழுது நீ இங்கே இருக்கக் கூடாது. நான் கொஞ்சமாச்சும் மனுஷனாக இருக்கிறதாலதான் உன்னை

உயிரோடு விடுறேன். போயிடு... என் கண் முன்னாடியே வராதே! உன்னை மட்டுமில்லை, உன் வீட்டில் உள்ள வங்ககூட என் கண்ணில் படக் கூடாது. அப்படி ஆச்சு... அவங்க உயிர் என் கையால்தான் போகும்,'' என்று எச்சரிக்க,

கஸ்தூரி அவன் கையைப் பிடித்து, "நான் சொல்றதைக் கொஞ்சமாச்சும் கேளுங்க. சத்தியமாகச் சொல்றேன்... எனக்கு எதுவும் தெரியாதுங்க. சின்னப் பிள்ளையைப் போய்..." என்று அவள் கூறி முடிப்பதற்குள் அவளை விலக்கிக் கீழே தள்ளி விட்டுப் பாரதியை மருத்துவ மனைக்குக் கொண்டு சென்றான் திரு.

ஆக்ஸிஜன் குறைந்ததால் ஏற்பட்ட மூச்சுத் திணறல்தான் என்று கூறி, சிறிய சிகிச்சைக்குப் பின், வீட்டிற்கு அனுப்பி வைத்தனர். அவனால் கஸ்தூரி செய் ததை ஒப்புக்கொள்ளவே முடியவில்லை. மனைவிதான் எல்லாவற்றையும் செய்ததாக நினைத்தான்.

இனிமேல் தப்பித்தவறி அவள் கண்ணில் விழிக்கக் கூடாது என்று நினைத்தவன், அவளைத் தன் உலகத் திலிருந்து விலக்கினான். சிறிது பிசகியிருந்தால் பாரதியின் உயிர் போயிருக்கும் என்ற நினைப்பே அவனைப் பல நாட்கள் உறக்கமின்றித் தவிக்க வைத்தது. மானசீகமாகத் தன் அண்ணன் அண்ணியிடம் கதறியழுது மன்னிப்புக் கேட்டும் அவன் குற்றவுணர்ச்சி அடங்கவில்லை.

அன்றே அவன் வார்த்தைப்படி கஸ்தூரி வீட்டை விட்டுச் சென்று விட்டாள். அவள் வீட்டார் யாரும் திருவைத்

தேடி வரவில்லை. அந்தக் காலத்தில. விவாக ரத்து என்பது சாதாரணம் இல்லை, அதேபோல் பிரபலமும் இல்லை.

திரு நினைத்தது என்னவென்றால், தான் இவ்வாறு ஒரு வெற்றுப் பந்தத்திலாவது இருந்தால்தான் தன்னை எதிர்காலத்தில் யாரும் திருமணம் செய்து கொள்ளச் சொல்லி வற்புறுத்த மாட்டார்கள் என்று நினைத்தான்.

அதன்படி, இருவரும் ஒருவர் கண்ணில் ஒருவர் படாத கணவன் மனைவியாய் வாழ ஆரம்பித்தனர்.

கஸ்தூரியை மறக்க திருவிற்கே கடினமாக இல்லை என்னும்போது, ராமிற்கும் பாரதிக்கும் மட்டும் கடினப்படுமா என்ன?

பத்து வயதுப் பெண்ணும் 13 வயது ஆணும் அதைக் காலவோட்டத்தில் மறந்தே போயினர். யாரோ ஒரு பெண்மணி தங்களுடன் ஆறு மாதம் தங்கியிருந்தாள் என்று நினைத்துக் கொண்டனர்.

அவர்களுக்குப் பெரியவர்களின் மனநிலையும் உணர்ச்சிகளும் புரியுமா என்ன? திருவும் ஒன்றும் கஷ்டப்படவில்லை. அவன் ஒன்றும் விரும்பி இந்தத் திருமணத்தைச் செய்யவில்லையே! குழப்பத்தில் வந்தது, குழப்பத்திலேயே முடிந்து விட்டது என்று நினைத்துத் தன் வேலைகளில் தீவிரக் கவனம் செலுத்தினான்.

மாற்றல் வாங்கிக் கொண்டு டெல்லிக்குச் சென் றான். அவர்களைப் பார்த்துக் கொள்ள ஒரு வயதான பெண்மணியை நியமித்தான். அவரால் அன்பு பாராட்ட முடியாவிட்டாலும், எல்லா வேலைக்காரர்களைப் போல்

பிள்ளைகளுக்கு அவன் வரும்வரை பாதுகாவவலராய் இருந்தார்.

மறுபடியும் அவர்களின் கூடு வளர்ந்தது. திரு குழந்தைகளின் ஒவ்வொரு அசைவையும் ரசித்து, அவர்கள் கூடவே இருந்தான். கூடவே அவனுக்கு ஸ்பெஷல் பிராஞ்ச் கமிஷனராகப் பதவி உயர்வும் கிட்ட, அவர்கள் வாழ்க்கைத் தரம் உயர்ந்தது.

அன்பையும் பாசத்தையும் ஆனந்தத்தையும் கொட்டிப் பிள்ளைகளை வளர்த்தான். அவன் மனம் மொத்தத்தையும் அவர்களிடமே திருப்பி, தன் தனிமையில் இருந்து தப்பித்தான்.

ஆண்டுகள் சென்றன. ஒருநாள் வீட்டிற்கு வந்த திருவை நோக்கி ஓடி வந்தான் ராம்.

திரு பதறி, "என்னடா...? என்ன ஆச்சு?" என்று கேட்க,

ராம், "சித்தப்பா... பாரதி சரியே இல்லை. ஸ்கூல் விட்டு வந்தவள், ஓடிப்போய் ரூமுக்குள் ஒளிஞ்சிக்கிட்டா. சாப்பிடக் கூட வர மாட்டேங்கிறா. ரொம்பப் பயமா இருக்கு சித்தப்பா," என்று பாசமுள்ள அண்ணனாய்ப் பதற,

திரு சிரித்து, "பெரிய மனுஷா... ஏதோ நேத்து எனக்குப் பதினாறு வயசாயிடுச்சு, நானும் பெரிய மனுஷன்தான். என்னை யாரும் மதிக்க மாட்டேன்றீங்கன்னு கத்தினே... இப்போ தொடை நடுங்கியாட்டம் பயப்படுறே?" என்று கிண்டல் செய்ய,

ராம் அவனை முறைத்து, "ஹலோ கமிஷனர் சார்... என்ன கிண்டலா? நானும் உங்களை மாதிரிப் போலீஸா

கத்தான் ஆகலாம்னு இருக்கேன். என் கிட்டே வம்பு வெச்சிக்காதீங்க. அந்தக் குரங்கு நீங்க கூப்பிட்டாத்தான் வரும். எனக்கென்ன வந்துச்சு? அதைச் சாப்பிட வைக்க என்னால முடியலை..." என்று கூறிவிட்டுத் தெனாவட்டாக நிற்க,

திரு, "அடிங்க வாலுங்களா... உங்க பஞ்சாயத்து நாளுக்கு நாள் தாங்க முடியலை. வா... உன் தங்கச்சியைப் புலன் விசாரணை செய்யலாம்..."என்று கூறிவிட்டு நடக்க,

ராம் போலியாகச் சலித்துக் கொண்டு, "போலீஸ் புத்தி போகுதா பாரு... புலன் விசாரணையாம்... தேவுடா! எங்க ரெண்டு பேரையும் காப்பாத்து..." என்று வார,

திரு அவன் காதைத் திருகி, "ரொம்பச் சலிச்சுக்காதேடா... போய்த் தோசையை வார்த்து வை. நான் குட்டியைக் கூட்டிட்டு வரேன்," என்று கூற,

ராம், "ஆ...ஆ..." என்று அலறிப் பின், "இதென்னடா அநியாயமா இருக்கு... நான்தான் டெய்லி சமைக் கணுமா? உங்க பொண்ணையும் சமைக்கச் சொல்லுங்க, சித்தப்பா," என்று கத்த,

திரு, "அவளுக்கும் 16 வயசானா கத்துப்பா. அவள் உன்னை விடப் புத்திசாலி. இப்பச் சின்னப் பொண்ணு தானே... சலிக்காமல் போய் வேலையைப் பாருடா..." என்று அவனை நக்கலாகக் கூற,

ராம், "நடத்துங்க நடத்துங்க... எல்லாம் என் தலையெழுத்து. ஒரு வருங்கால ஐ.பி.எஸ்.ஸை எல்லாரும் கிண்டல் பண்றீங்க. இது சரியில்லை, சொல்லிட்டேன்.

போங்க... உங்க குட்டியைக் கொட்டிக்க இழுத்துட்டு வாங்க...” என்று கூறி விட்டு, அடுக்களைக்குள் நுழைய, கோபப்பட்டாலும் தன் தங்கையை விட்டுக் கொடுக்காத அவனைப் பாசத்துடன் பார்த்தபடி பாரதியின் அறைக்குள் நுழைந்தான் திரு.

அங்கே சுருண்டு மடங்கி ஒரு விதப் பயத்துடன் தலை முதல் கால்வரை போர்வையால் மூடிக் கொண்டிருந்த பாரதியைப் பார்த்த திரு,

“என்னடா... என்ன ஆச்சு? ஏன் உன் முகமெல்லாம் வெளிறிப் போயிருக்கு?” என்று பதற, பாரதி அழுகையுடன் அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டாள்.

திரு, அவள் தலையைக் கோதி, “என்னடா... என்ன ஆச்சு? யார் கிட்டேயாவது சண்டை போட்டியா?” என்று மென்மையாகக் கேட்க,

பாரதி, ‘இல்லை...’ என்பது போல் தலையாட்ட, அவனும் ஒவ்வொரு காரணமாகக் கேட்க, அவளும் இல்லை, இல்லை என்று கூறியபடி வந்தாள்.

திரு அவளை விலக்கி, “என்னதான்டா ஆச்சு...? சொன்னால்தானே தெரியும்... என்னம்மா...?” என்று கேட்க, பாரதி அதற்கு மேல் முடியாமல், கண்களில் நீர் மல்க,

“சித்தப்பா... நான் ஏஜ் அட்டென்ட்...” என்று கூறிவிட்டுச் சொல்ல முடியாமல் உதட்டைக் கடிக்க, திருவிற்கு முகம் குழப்பத்தில் இருந்து பிரகாசத்திற்கு மாறியது.

“செல்லம்... நிஜமாவா சொல்றே?” என்று கேட்க, அவள் பதில் கூறாமல் அவனைக் கட்டிக் கொண்டாள்.

“எனக்கு ரொம்பப் பயமாயிடுச்சு சித்தப்பா. டீச்சர்ஸ் எல்லாம் முன்னாடியே இதைப் பத்திச் சொல்லியிருந் தாங்கதான்... ஆனாலும் ரொம்பப் பயந்துட்டேன். உன்னைப் பார்க்கணும் போல இருந்தது. எனக்கு நீ மட்டும்தானே இருக்கே... அதான்...” என்று குழந்தைத் தனத்துடன் கூற, அவள் உச்சியில் முத்தம் பதித்த திருவிற்கு மகிழ்ச்சியால் மனம் நிறைந்தது.

தன் அண்ணன் அண்ணி இருந்தால், பெரிய விழாவே கொண்டாடியிருப்பார்கள். ஆனால், அவர்களை நினைக்காமல் என்னைத் தேடினாள் என்றால், என் மீது எவ்வளவு பாசம்... என்று நினைத்தவனுக்கும் பெரிய விழாவே நடத்த வேண்டுமென்று தோன்றியதுதான்.

ஆனாலும் இந்த நிலையில் அவளுக்கு ஒரு பயம் இருக்கும். அதைப் பெரிதாக்கக் கூடாது. இது ஒரு சாதாரண வைபவம்தான் என்று அவளுக்குப் புரிய வைக்க வேண்டுமென்று நினைத்தவன்,

“இதுக்கு ஏன் பயப்படணும் குட்டி? இது எல்லா ருக்கும் நடக்கிறதுதான். நீ பெரிய மனுஷியாகிட்டேன்னு உன் உடம்பு உனக்குச் சொல்லியிருக்கு. சரியா? எப்படி ராமுக்கு மீசை அரும்பி, கொஞ்சம் கொஞ்சமாக் குரல் மாறிச்சு... அதுபோலப் பொண்ணுங்களுக்கு இப்படிச் சொல்லும். யூ ஷுட் பி ப்ரௌட். போய்க் குளிச்சிட்டு வா. ரமாவை வரச் சொல்றேன். அவங்க உனக்கு எல்லாம் சொல்லிக் கொடுப்பாங்க. நீ பயப்படக் கூடாது,” என்று

அவளைத் தைரியப்படுத்தி, பாரதிக்கு அன்றிலிருந்து திரு, ஒரு சித்தப்பாவாய் மட்டுமல்ல, ஒரு ஆசானாகவும் மாறிப் போனான்.

இப்படி ஒவ்வொரு கட்டத்திலும் ராமுவுக்கும் பாரதிக்கும் இன்றியமையாதவனாய் இருந்தான் திரு.

ராம் யு.பி.எஸ்.சி. எழுதும்போது தன் முழு உதவியை அளித்தான். "இதோ பாரு ராம்... நான் எழுதும் போது எனக்கு வேற வழியில்லை. ஆனால், உனக்கு இதை விடப் பல வழியிருக்குதான். நம்ம குடும்பம் நல்ல நிலையில்தான் இருக்கு. ஆனால், அதை நினைச்சு நீ கோட்டை விட்டுறக் கூடாது. எப்பவுமே ஒரு மனுஷன், தனக்கு இதை விட்டா வேறு வழியில்லைன்னு நினைப் பிருந்தால்தான் தன் முழு முயற்சியையும் காட்டுவான். அதை ஞாபகம் வெச்சி, அது மாதிரியே நினைச்சு எழுதணும். சரியா?" என்று நல்வழியைப் போதிக்க,

ராமுவும் அதை மனதில் வைத்துத் தன் முழு முயற்சியை அளித்துத் திருவை விட ஒரு படி மேல் சென்று முதல் முயற்சியிலேயே தேர்ச்சி பெற்றான்.

பாரதி, "காப்பி கேட்... காப்பி கேட்... அப்படியே என் திருவைக் காப்பி அடிக்கிறே..." என்று அவனை வார,

ராம் அவள் காதைத் திருகி, "வாயை மூடுடி. நான் சித்தப்பாவை விடப் புத்திசாலின்னு ஒத்துக்கோ..." என்று விளையாட்டாகக் கூற,

பாரதி, "நோ வே... எப்பவும் திருதான் எனக்கு ஹீரோ. போடா, காப்பி கேட்..." என்று கூறிவிட்டு, அவன் துரத்தவும், ஓடி வந்து திருவைக் கட்டிக் கொள்ள,

ராமுவுக்குப் பொறாமையாக இருந்தது. "ஏய்... தள்ளுடி. அது என் சித்தப்பா..." என்று அவன் இழுக்க,

பாரதி, "இல்லை... இது என் திரு..." என்று இன்னொரு பக்கம் இழுக்க,

ராம், "அவரைத் திருன்னு பேர் சொல்லிக் கூப்பிடாதேடின்னு எத்தனை வாட்டி சொல்றது...?" என்று ஒரு பக்கம் இழுக்க,

பாரதி, "என் இஷ்டம்... நான் எப்படி வேணா கூப்பிடுவேன். ஓடிப் போடா லூசு..." என்று இன்னொரு பக்கம் இழுக்க,

திரு, "ஏய்... கையைக் கழட்டிப் பிடுங்கிடாதீங்கடா. என் கையை விடுங்கடா. நான் பாவம்..." என்ற அவனின் அலறலை இருவரும் கண்டுகொள்ளவில்லை.

சந்தோஷமாகச் சென்ற அவர்கள் வாழ்வில், ஒருநாள் வீட்டின் ஹாலில் சோபாவில் கன்னத்தில் கை வைத்துக் கொண்டு பாரதி அமர்ந்திருக்க, ராம் அவளிடம் காச்மூச்சென்று கத்திக் கொண்டிருந்தான்.

"உனக்குச் செல்லம் கொடுத்து வளர்த்தது தப்பாப் போச்சுடி. அதான் திமிர் பிடிச்சுத் திரியறே. இல்லைன்னா இவ்ளோ பெரிய வாய்ப்பு... இதைப் போய் வேணாம்னு சொல்வியா?" என்று கத்த, பாரதி ஒன்றும் பதில் பேசாமல் அமர்ந்திருந்தாள்.

அப்போது அங்கே வந்த திரு, "என்னடா டி.சி.பி. உன் அதிகாரத்தை வீட்டிலேயும் ஆரம்பிச்சிட்டியா? ஏன் குட்டியைத் திட்டுறே?" என்று அவள் தலையைக் கோத,

பதில் ஏதும் பேசாமல் அவனைக் கட்டிக் கொண்டாள் பாரதி.

ராம், “ஹ்ம்... இப்படியே செல்லம் கொடுங்க, சித்தப்பா. அதான் தறுதலையாப் போயிட்டா...” என்று கூற,

பாரதி அவனை முறைக்க, திரு, “என்னடா விஷயம்? சொல்லிட்டு அப்புறம் திட்டு,” என்று அதட்ட,

ராம், “ஹார்வர்ட் யுனிவர்சிட்டியில் எம்.பி.ஏ. அப்ளை செய்திருந்தாள், இல்லையா சித்தப்பா... அதுக்குக் கால் லெட்டர் வந்திருக்கு. இவ என்னடான்னா போக மாட் டேன்னு ஒத்தக் கால்ல நிக்கிறா. ஏன்னு கேளுங்க...” என்று கூற,

பாரதி, “எனக்குப் போகப் பிடிக்கலை, சித்தப்பா. அவனைத் திட்ட வேண்டாம்னு சொல்லுங்க,” என்று கூற,

திரு சிரித்து, “அப்புறம் ஏன் அப்ளை பண்ணே?” என்று கேட்க,

பாரதி, “டெல்லியில் இது ஒரு மோகம் சித்தப்பா. எல்லாரும் ஏதோ ஒரு யுனிவர்சிட்டிக்கு வெளிநாட்டில் அப்ளை செய்தாங்க. என் பிரெண்ட்ஸ் செய்யறாங் களேன்னு நானும் செய்தேன். அதுக்காகப் போயே ஆகணுமா சித்தப்பா?” என்று கேட்க, அவள் பதிலைக் கேட்ட திரு, கலகலவெனச் சிரித்தான்.

ராம் எரிச்சலுடன், “சிரிக்காதீங்க சித்தப்பா. அவள் சொல்றதுல ஏதாவது நியாயம் இருக்கா?” என்றவன், பாரதியிடம் சென்று,

"குட்டி... உன்னைத் திட்டணும்னு எனக்கென்ன ஆசையா? உன் நல்லதுக்குத்தான் அண்ணன் சொல்றேன். கொஞ்சம் யோசி. நீ ஒண்ணும் சின்னப் பொண் இல்லை. 20 வயசாகுது. பி.பி.ஏ. முடிச்சிருக்கே. உனக்கு யாரும் சொல்ல வேண்டிய தேவை இல்லை. ஏன் இந்த வீம்பு பிடிக்கிறே?" என்று தன்மையாகப் பேச,

பாரதி, "ஆமா... எல்லாரும் என்னை வீட்டை விட்டு அனுப்புறதிலேயே குறியா இருங்க. யாருக்கும் நான் தேவை இல்லை. போங்க... நான் போறேன்," என்று கத்த,

ராமிற்கும் திருவிற்கும் சிரிப்பு வந்தது. "அட ஐந்தருவி... நீ இன்னும் மாறவே இல்லை. எங்களை விட்டுட்டு இருக்க முடியாதா மேடமுக்கு...?" என்று அவள் முகத்தை நிமிர்த்தியவன்,

"பாரு குட்டி... உன் கஷ்டம் எங்களுக்குப் புரியாதா? நாங்க உன் மேல் எவ்ளோ பாசம் வெச்சிருக்கோம்னு உனக்கே தெரியும். நாங்களே விடுறோம்னா... உன் எதிர் காலத்திற்காகத்தானே! உன் பாசம் உன் எதிர் காலத்தைச் சிதைச்சிடக் கூடாது. அதை ஞாபகம் வெச்சிக்கோ..." என்று புத்திமதி கூற,

பாரதியும் மனமிளகி, "சரிப்பா சரி... ரெண்டு பேரும் நல்லா ப்ரெயின் வாஷ் பண்ணி என்னை ஒரு வழி செய்துட்டீங்க. நான் போறேன். டேய் ராம், தாரை, தப்பட்டை எல்லாம் ரெடி பண்ணு. நான் வெளிநாடு போறதுக்குள்ளே இந்தக் காலனியையே ஒரு வழி பண்ணிட்டுத்தான் போவேன். நீ டி.சி.பி.யா இருக்கிறதுக்கு இந்த உதவியாச்சும் செய்," என்று கெத்தாகக் கூற,

ராம், "அடிக் கழுதை... இவ்வளவு நேரம் காட்டுக் கத்தல் கத்தி நீ காது கொடுத்துக் கேட்கலை. இப்போ சித்தப்பா சொன்னதும் உடனே தலையாட்டுறியா? உன்னை என்ன செய்யறேன்னு பாரு..." என்று அவள் ஜடையைப் பிடித்து இழுக்க,

பாரதி, "ஆஆஆ..." என்று கத்த, திரு வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரித்தான்.

அவர்களுக்கு அந்த வாழ்வு அதிர்ஷ்டகரமாகவே அமைந்தது. திருவின் அப்பாவிடம் ஏமாற்றிச் சொத்துக் களை வாங்கிக் கொண்ட பெரியப்பா, தான் சாகும்போது தனக்கு வாரிசு ஏதும் இல்லாததால், தன் சொத்தையும் சேர்த்து, அதைத் தன் தம்பியின் பிள்ளைகளின் பேருக்கு மாற்றி எழுதியிருந்தார்.

முதலில் திரு அறவே மறுத்தான். ஆயினும் அவரின் வக்கீல், 'இது அவர் தாத்தாவின் ஆசை. பேரப் பிள்ளைகளுக்காகவாவது வாங்கிக் கொள்ளுங்கள்,' என்று கூற, அதை வாங்கி, ராம், பாரதியின் பேரில் சரிசமமாக எழுதி வைத்தான். அந்தச் சொத்துகளின் மதிப்பு கிட்டத்தட்ட ஐம்பது கோடி.

இதனால் அவர்கள் வாழ்க்கை தங்கு தடையின்றிச் சென்றது.

இதனிடையில் திருவிற்கு டி.ஐ.ஜி.யாகப் பதவி உயர்வும் வர, அவர்களுக்குச் சந்தோஷம் தாளவில்லை.

பாரதி இல்லாததுதான் ராம், திரு இருவருக்கும் கஷ்டமாக இருந்தது. ஆனாலும் அவள் எதிர்காலத்தை

மனதில் வைத்து, ஒவ்வொரு நாளையும் எண்ணி எண்ணிக் கழித்தனர்.

இதற்கிடையில் ஒருநாள் ராம், திருவிடம், "என்ன சித்தப்பா... ஒரு வாரமா உங்க முகமே சரியில்லை. என்ன ஆச்சு?" என்று கேட்க,

திரு அதிர்ந்து, "இல்லையே ராம்... ஏன் கேட்கிறே?" என்று கூற,

ராம் கூர்மையான பார்வையுடன், "உங்களுக்குப் பொய் சொல்ல வரலை சித்தப்பா... உங்க முகமே சொல்லுது. கரெக்டா சொல்லவா... நீங்க அந்த ஜெயில் சுதந்திர தின விழாவுக்குத் தலைமை தாங்கப் போயிருந்தீங்களே... அப்போது இருந்தே ஏதோ மாதிரி இருக்கீங்க," என்று சரியாகக் கூற,

திரு, தான் நன்றாக மாட்டிக் கொண்டோம் என்று உணர்ந்தான். பின், "ராம்... ஏதோ குழப்பம்தான். வேற எந்தப் பிரச்சினையும் இல்லை. அதை நான் பார்த்துக் கிறேன். நீ கவலைப்படாதே!" என்று கூற,

ராம் அப்போதும் சமாதானப்படாமல், "உண்மையாகவா சித்தப்பா...? ஒண்ணும் பிரச்சினை இல்லையே?" என்று விடாமல் கேட்க,

திரு, "ஆமாங்க டி.சி.பி. சார். என்னைச் சொல்லிட்டு நீங்கதான் ரொம்பப் புலன் விசாரணை செய்றீங்க... தேவுடா...!" என்று சிறு வயதில் அவன் கூறுவது போலவே கூற, அவன் சிரித்தான். அப்போது அவன் கைபேசிக்குப் பாரதியின் அழைப்பு வர, அவன் முகத்தில் புன்னகையும் வந்தது.

அதைப் பார்த்த திரு, "என்ன ராம்... உன் பாசமலரா?" என்று கேட்க,

ராம் ஆச்சரியத்துடன், "எப்படிச் சித்தப்பா?" என்று கேட்க,

திரு, "அதான் உன் முகமே சொல்லுதே! என்னதான் நீங்க ரெண்டு பேரும் முடியைப் பிச்சிக்கிட்டுச் சண்டை போட்டாலும், மனசுக்குள்ளே பாசமலர் சிவாஜியும் சாவித்திரியும்தானே!" என்று கூற,

ராம், "அட போங்க சித்தப்பா. அந்தக் குரங்கும் நானுமா? சான்சே இல்லை..." என்றபடி கைபேசியை உயிர்ப்பித்தான்.

எடுத்தவுடன் பாரதி, "போனை எடுக்காமல் எங்கேடா பராக்குப் பார்த்துக்கிட்டு இருந்தே... லூசு. கொஞ்சமாச்சும் அறிவிருக்கா? நான்தான் போன் பண்ணுவேன்னு தெரியுமில்ல..." என்று கத்த,

ராம், "ஏய்... போனை எடுத்தால் ஹலோன்னு சொல்லிப் பழகுடி. சும்மா குய்யோ முறையோன்னு கத்தாதே!" என்று அவளை வார, அதற்கும் அவளும் கத்த, இதை இப்படியே விட்டால் வேலைக்கு ஆகாது என்று நினைத்த திரு, அவன் கைபேசியைப் பிடுங்கி,

"குட்டி... சண்டை போடாமல் உங்களால் இருக்க முடியாதுன்னு தெரியும். அதுக்காக டெய்லி போன் பண்ணிச் சண்டை போடணுமா?" என்று கேட்க,

பாரதி செல்லமாய்ச் சிணுங்கியபடி, "போ திரு... நான் ஒண்ணும் சண்டை போடக் கூப்பிடலை. எனக்குப் படிப்பு

முடிஞ்சது. நான் அடுத்த வாரம் டெல்லிக்கு வரேன்," என்று கூற,

திரு மகிழ்ச்சியுடன், "நெஜமாவாடா குட்டி... ரொம்பச் சந்தோஷம். நீ இல்லாமல் ரொம்பக் கஷ்டமாக இருந் துச்சுடா. சீக்கிரம் வா..." என்று கூறி, ராமிடம்,

"அவள் படிப்பு முடிஞ்சிடுச்சாம், ராம். டெல்லி வராளாம்..." என்று கூற,

ராம் அந்தக் கைபேசியைப் பிடுங்கி, "ஏய்... நிஜமா படிப்பு முடிஞ்சுதான் வர்றியா...? இல்லை உன் மெண்டர் மண்டையை ஏதாவது உடைச்சிட்டியா? அதனால் உன்னைத் துரத்துறாங்களா?" என்று சந்தேகமாகக் கேட்க, பாரதி அவனை மிகவும் நல்ல நல்ல வார்த்தைகளில் பாராட்ட,

"அடிப்பாவி... போதும் போதும்... நோ பேட் வேர்ட்ஸ். சரிடி... ஒத்துக்கிறேன். நீ படிப்பு முடிஞ்சுதான் வர்றே... சே... எப்போ கிளம்பறேன்னு போன் பண்ணு. இப்போ போனை வைடி, பஜாரி..." என்று கத்த,

திரு, கைபேசியைப் பிடுங்கி, "கொடுடா... என் பொண்ணுகிட்ட பேசணும். அவளை ஏதாவது வம்பிழுத் துக்கிட்டே இரு..." என்று அவனைக் கடிந்து கொண்டு, பாரதியிடம் பேச ஆரம்பிக்க, திருவைச் செல்லமாக முறைத்தான் ராம்.

ஒரு வாரம் கழிந்தது. துள்ளிக் குதித்து ஏர்போர்ட் டிற்கு வந்தாள் பாரதி.

'ஜாலி... இனிமே ராம் கூடச் சண்டை போடலாம். திரு கூடச் சுத்தலாம். நினைச்ச நேரத்துக்குச் சாப்பிடலாம்.

விடுதலை...' என்று மனதுக்குள் கூச்சலிட்டபடி ஏர்போர்ட்டிலிருந்து வெளிவந்தவளைக் காக்கிச் சட்டையோடு வரவேற்றான் ராம்.

அவனைக் கண்டதும் மனதெல்லாம் உற்சாகத்தோடு ஓடி வந்த பாரதி, அவனைக் கட்டியணைத்துக் கொள்ள, நெடுநாட்கள் கழித்துப் பார்க்கும் தங்கையைத் தன் கை வளைவுக்குள்ளேயே வைத்து உணர்ச்சியின் பிடியில் இருந்தான் ராம்.

இன்பத்திலும் துன்பத்திலும் கூடவே இருந்து தோள் கொடுத்த தன் அண்ணனை இவ்வளவு நாட்களாகப் பிரிந்திருந்த பாரதியும் அவன் மீது அன்பைப் பொழிய, சில நேரத்துக்கு அங்கே மௌனம் மட்டுமே நிலவியது.

"எவ்ளோ நாளாச்சுடா குட்டி... உன்னைப் பார்க்காமல் ரொம்பக் கஷ்டமா இருந்துச்சுடா..." என்று தழுதழுக்க,

அந்தச் சூழ்நிலையை மாற்றும் வண்ணம், "போதும், சீன் போடாதே. நீதானே பார்சல் செய்து அனுப்பினே. அது சரி... இது என்னடா யூனிஃபார்மோட வந்திருக்கே. எல்லாரும் என்னைத் தீவிரவாதின்னு தப்பா நினைச்சுக்கப் போறாங்கடா லூசு..." என்று கூற,

தன் தங்கையின் பதிலில் சிரித்த ராம், "நீ தீவிரவாதிக்கெல்லாம் தீவிரவாதி ஆச்சே! ரொம்ப சீன் போடாமல் நட. எனக்கு முக்கியமான இன்வெஸ்டிகேஷன் இருக்கு," என்று கூற,

பாரதி சுற்றும் முற்றும் பார்த்தபடி, "உனக்கும் சித்தப்பாவுக்கும் வேற என்ன வேலை? அப்புறம்,

கேட்கணும்னு நினைச்சேன்... சித்தப்பா எங்கேடா? அவர்தானே வரேன்னு சொல்லியிருந்தார்..." என்று கேட்க,

அவள் பெட்டிகளைக் காரினுள் வைத்துக் கொண்டே ராம், "அதை ஏன் கேட்கிறே? நானும் அதைத்தான் சொன்னேன். ஆனால், அவர்தான் ஏதோ வேலை இருக்குன்னு ஜெயிலுக்குப் போயிட்டார். ஏதோ ப்ராப்ளமாம்..." என்று கூறிக்கொண்டே, காரில் ஏறுமாறு கூறினான்.

காரில் ஏறிய பாரதி, "ஓ... என் கிட்டே சொல்லி யிருப்பாரே ராம்..." என்று கூற,

ராம், "அதான் நான் நினைச்சேன். பாரு... அவர் சரியே இல்லை... எப்போ பார்த்தாலும் அந்த ஜெயி லுக்குப் போயிடுறார். வரும்பொழுது அவர் முகமே சரியா இருக்க மாட்டேங்குது. ஒருநாள் ஏதோ சுதந்திர தின நிகழ்ச்சி என்று போனார். அப்போதிலிருந்து இப்படித்தான். சே! நான் ஒரு முட்டாள். வந்ததும் வராததுமாய் இதை யெல்லாம் உன் கிட்டே சொல்றேன் பாரு. சரி. வீட்டுக்குப் போய் ரெஸ்ட் எடு. நான் சாயந்திரம் வரேன்," என்று கூற,

பாரதி, "ராம், ராம்... வீட்டுக்கு வேண்டாம். நான் ஜெயிலுக்குப் போய்ச் சித்தப்பாவைப் பார்க்கப் போறேன். அங்கே விடு," என்று கூற,

ராம், எரிச்சலுடன், "ஏய்... நீ என்ன லுசா...? வீட்டுக்கு வருவார்... அப்புறம் பார்த்துக்கோ. அங்கே யெல்லாம் அலவ் பண்ண மாட்டாங்க," என்று கூற,

பாரதி, "எனக்குத் தெரியும். ஆனால், நீ கூப்பிட்டுச் சொன்னால் கண்டிப்பா அலவ் பண்ணுவாங்க. எனக்குத்

தெரியாது... நான் போயே ஆகணும்...” என்று அடம் பிடிக்க,

அவள் பிடிவாதம் நன்கு அறிந்ததால், வேறு வழியின்றி அங்கே அழைத்துச் சென்று, ஜெயில் அதிகாரியிடம் அனுமதி வாங்கி உள்ளே அனுப்பி வைத்து விட்டுத் தன் சித்தப்பாவை அழைத்து விஷயத்தைக் கூறி விட்டுத் தன் வேலையைப் பார்க்கச் சென்றான் ராம்.

திருவிற்கு ராம் கூறியதைக் கேட்டதும் கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை. ஓடி வந்து பாரதியைச் சந்தித்த திரு, சில நிமிட உணர்ச்சிப் பரிமாறலுக்குப் பின், “நீ ஏன்டா இங்கே வந்தே? இங்கே எல்லாம் வரக்கூடாது. நல்லவேளை, ஆபீசுக்குள்ளேயாவது இருந்தியே... வா, கிளம்பலாம்,” என்று அவளை அழைக்க,

பாரதி அவனைக் கூர்மையான பார்வை பார்த்து, “ஏன் சித்தப்பா... இங்கே யாரைப் பார்க்க வர்றே?” என்று சட்டென்று கேட்க, திரு தடுமாறினான்.

“என்ன சொல்றே? அதெல்லாம் இல்லை, நீ வா!” என்று கூறி, அவள் கைகளைப் பற்ற,

பாரதி அவன் கைகளை விலக்கி, “பொய் சொல் லாதே சித்தப்பா... உனக்கு வரலை. நீ அண்ணனை வேணும்னா ஏமாத்தலாம், என்னை இல்லை. இங்கே யாரோ இருக்காங்க... அவங்களைப் பார்க்கத்தான் வர்றே...” என்று கூற, திரு இமைக்க மறந்து அவளையே பார்க்க,

பாரதி சிரிப்புடன், “என்ன பார்க்கிறே சித்தப்பா? உனக்கு நான் எவ்ளோ முக்கியம்னு எனக்குத் தெரியும்.

ஆனால், அதையும் மீறி நீ இங்கே வந்திருக்கேன்னா... அவங்க என்னை விட முக்கியமானவங்களா உனக்கு இருக்கணும். இல்லை, நம்ம குடும்பத்துக்கு இருக்கணும். சரிதானே? இப்போ சொல்லு... யார் இங்கே இருக்கா?" என்று கேட்க,

திரு உதட்டைக் கடித்துக் கொண்டு பேசாமல் இருக்க, பாரதி அவனை உலுக்கி, "சொல்லு சித்தப்பா... சொல்றியா, இல்லை... நானே போய்ப் பார்க்கவா?" என்று மிரட்ட,

சில விநாடிகள் தயக்கத்திற்குப் பின், "குட்டி... அது வந்து... இங்கே இருக்கிறது..." என்று தயங்க,

பாரதி பொறுமை யிழந்து, "யாரு சித்தப்பா...? தயவுசெய்து சொல்லு!" என்று கூற,

திரு, "இங்கே... இங்கே அர்ஜுன் கைதியா இருக்கான் குட்டி..." என்று கண்களில் கண்ணீர் மல்கக் கூற,

பாரதி, தலையில் இடி விழுந்தது போல், நொறுங்கிப் போனாள்.

## 15

கண்ணன் மனநிலையைத் தங்கமே தங்கம்
கண்டுவர வேண்டுமடி தங்கமே தங்கம்!
எண்ண முரைத்துவிடில் தங்கமே தங்கம் - பின்னர்
ஏதெனிலுஞ் செய்வமடி தங்கமே தங்கம்
கன்னிகை யாயிருந்து தங்கமே தங்கம் - நாங்கள்
காலங் கழிப்பமடி தங்கமே தங்கம்!

அன்னிய மன்னர்மக்கள் பூமியிலுண்டாம் - என்னும்
அதனையுஞ் சொல்லிடடி தங்கமே தங்கம்!

திரு சொன்னதைக் கேட்ட பாரதியின் முகத்தில் தெரிந்த அதிர்ச்சியைப் பார்த்துத் திருவே அதிர்ந்துதான் போனான்.

அவன் நினைத்தது, அவள் காலத்தின் மாற்றத்தில் அர்ஜுனை மறந்தே விட்டாள் என்றுதான். இவ்வளவு நாட்களில் - எப்போது பெங்களூருக்கு வந்தானோ - அப்போதிலிருந்து அர்ஜுனின் பெயரை எடுத்தாலே ராம் எழுந்து போய் விடுவான். பாரதியும் ஒன்றும் வெளிக் காட்டியதில்லை. ஆனால், இன்று அவள் முகத்தில் தெரிந்த மாற்றம் ஒன்றே, அவள் அர்ஜுனை இம்மியளவு கூட மறக்கவில்லை என்பதைக் காட்டிக் கொடுத்தது. சிந்தனையில் மூழ்கியவர் முகத்தில் திட்டுத் திட்டாய் வியர்த்திருக்க, பாரதியின் கேள்வியில் நிமிர்ந்தார்.

"என்ன... எதுக்காக ஜெயிலில் போட்டிருக்காங்க, சித்தப்பா?" என்று தயங்கித் தயங்கிக் கேட்க,

திரு, "கொஞ்சம் பெரிய இடத்து விவகாரம் குட்டி. அட்டெம்ப்ட் மர்டர். அதுவும் ஒரு பொண்ணை..." என்று கூற,

பாரதி, "இல்லை சித்தப்பா... கண்டிப்பாக அர்ஜுன் இப்படிச் செய்ய மாட்டான். அதுவும் ஒரு பொண்ணை... ஏதோ தப்பு நடந்திருக்கு சித்தப்பா. நான் உடனே அவனைப் பார்க்கணும்..." என்று உள்ளே போக எத்தனிக்க,

அவளைத் தடுத்த திரு, "இல்லை குட்டி... நீ போய் எதுவும் ஆகப் போறதில்லை. அவன் ஏற்கெனவே இரண்டு வருஷம் தண்டனையை முடிச்சிட்டான். அடுத்த மாசம் ரிலீஸ்," என்று கூற,

பாரதி ஆழ்ந்த மூச்சை எடுத்துத் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு, "சரி, சித்தப்பா. நான் போய்ப் பார்க்கிறதில் என்ன வந்தது? அவனை ஒரு வாட்டி பார்த்துட்டு வரேன்," என்று கூற,

திரு, "இது சாதாரண ஜெயில் இல்லை, குட்டி. ரொம்பக் கடுமையான காவல் கொண்டது. இதில் நினைச்ச நேரம் போய்ப் பார்க்க முடியாது. சரியா? அதுவும் இல்லாமல் நீ அப்படியே அனுமதி பெற்றுப் போனாலும், அவன் உன்னைப் பார்க்க மாட்டான், குட்டி. எதுக்கு வீணா...?" என்று கம்மிய குரலில் கூற,

பாரதி ஆயாசத்துடன், "எனக்கு ஒண்ணுமே புரியலை, சித்தப்பா. இவன் சென்னையில்தானே இருந்தான்? இங்கே எப்படி? யார் கேஸ் போட்டது? உனக்கு எப்படித் தெரிஞ்சுது?" என்று கேட்க,

திரு, "போன மாசம் சுதந்திர தினத்திற்கு நான் இங்கே தலைமை தாங்க வந்தேன்டா... அப்போதான் பார்த்தேன். முதலில் அடையாளம் தெரியலை. அப்புறம் கோப்புகளைப் பார்த்தப்புறம்தான் இது அர்ஜுன் என்று உறுதி செய்தேன். எனக்கே முதலில் என்ன செய்வது என்றே தெரியலை.

"என்னதான் இருந்தாலும் ஒரு காலத்தில் உறவு போல் இருந்தோமே... அதுக்காகவாவது ஒரு தடவை

பேசுவோம்னு எவ்வளவோ முயற்சி செய்தேன். ஆனால், அவன் இன்னும் மாறவே இல்லை குட்டி... அப்படியேதான் இருக்கான். முகத்தில் அடித்த மாதிரி, பார்க்க முடியாதுன்னு சொல்லிட்டான். இன்னைக்கும் ஏதோ ஒரு நப்பாசையில் பார்ப்போமேன்னு வந்தேன். அதே கதிதான்..." என்று கூற,

பாரதி, "இல்லை, சித்தப்பா. இதை அப்படியே விடக் கூடாது. கண்டிப்பாக நான் அவனைப் பார்த்தே ஆகணும்," என்று ஆணித்தரமாகக் கூற,

திரு அவளை ஆச்சரியமாகப் பார்த்தான். இதுவரை பாரதி அடம் பிடித்து அவன் பார்த்ததே இல்லை. ஆனாலும் தன் சந்தேகத்தை எல்லாம் தள்ளி வைத்தவன்,

பாரதியிடம், "இதோ பாரு குட்டி... நீ இப்போ என்ன செஞ்சாலும் அவன் பார்க்க மாட்டான். திருப்பி அனுப்பிடுவான். இது ஜெயில். ஓரளவுக்கு மேல் நாம் கீழே இறங்கிப் போக முடியாது. ஒரு மாசம்... ஒரே ஒரு மாசம் பொறுத்துக்கோ. அவன் ரிலீஸ் ஆகட்டும். அப்புறம் அவன் கிட்டே பேசிக்கலாம். அதுவும் இல்லாமல் இவ்ளோ நாள் கழிச்சு நீ அவனை எடுத்த வுடன் கைதியாகப் பார்க்க வேண்டாம்டா. சொல்றதைக் கேளு. சித்தப்பா என்னைக் காவது உன் ஆசையை மதிக்காமல் இருந்திருக்கேனா? தயவு செய்து நான் சொல்றதைக் கேளு," என்று கூற,

பாரதியின் மனம் கொஞ்சம் கொஞ்சமாக இளகியது. 'சித்தப்பா சொல்றது சரிதான். அவனை ஒரு கைதியாகப் பார்க்கும் சக்தி தனக்கு இல்லை. எனவே அவன் வெளிவந்த அடுத்த நிமிடமே அவனைப் பார்த்துக்

கொள்ளலாம்...' என்று நினைத்தவள், செல்ல மனமே இன்றித் தன் சித்தப்பாவுடன் சென்றாள்.

ஒரு மாதம்... ஒரே ஒரு மாதம்தான். ஆனால், அவளுக்கு ஒரு யுகத்தை நகர்த்தியது போல் இருந்தது.

தினமும் திருவைப் பல கேள்விகள் கேட்டுப் படுத்தி எடுத்தாள். திருவும் பொறுமையாக அவளுக்கு உறு துணையாக இருந்தான்.

ஆனால், இந்த விஷயம் எதுவும் ராமிற்குத் தெரியவில்லை. பாரதிதான், "சித்தப்பா... இதை இப்போதைக்கு அண்ணா கிட்டே சொல்ல வேண்டாம். அவனுக்கு ஏற்கெனவே அர்ஜுனைப் பிடிக்காது. இப்போ சொன்னால் டென்ஷன் ஆகி, நம்மையும் தடுத்திடுவான். அவனுக்கா தெரிய வரும்போது வரட்டும்," என்று கூற,

திருவும் அதை ஒத்துக் கொண்டான். பாரதியின் காத்திருப்பு முழுமை அடைந்தது. ஒரு மாதம் கழிந்தது. அன்று காலை அர்ஜுன் விடுதலை அடையும் நாள்.

காலையில் எழுந்ததும் சாப்பிடாமல் கொள்ளாமல் எட்டு மணிக்கெல்லாம் ஜெயிலுக்குச் சென்று விட்டாள் பாரதி. திரு எவ்வளவோ கேட்டும் வர வேண்டாம் என்று தடுத்து விட, அவன் அவளுக்கு ஜெயிலுக்குள் செல்ல அனுமதி மட்டும் வாங்கிக் கொடுத்து விட்டுச் சென்று விட்டான்.

ஒரு பதினோரு மணிக்குப் போல் எல்லா அலுவல்களையும் முடித்து விட்டு வந்தான் அர்ஜுன். அவனைப் பாரதிக்குச் சுத்தமாக அடையாளம் தெரிய வில்லை.

27 வயதிற்குள் முகத்தில் இத்தனை மூப்பு வருமா? அவனுக்கு வந்திருந்தது. வாழ்க்கை முழுக்க ஜெயிலில் அடைந்து கிடந்தவன் போல் ஒரு பற்றற்ற பார்வையுடன் ஜெயிலில் இருந்து வெளிவந்த அர்ஜுனைப் பார்க்க அவளால் முடியவில்லை. திரு சொன்னது சரிதான். இப்போது அவன் இப்படி இருந்தால் கைதியாக அவனைப் பார்க்கத் தன்னால் முடிந்திருக்குமா என்பது சந்தேகமே. அவள் நினைத்துக் கொண்டிருக்கும் போதே, அவன் ஜெயிலின் வாயிலைத் தாண்டி வந்தான். அவன் அருகில் வர வரப் பாரதிக்கு நாக்கே எழவில்லை.

"அஜ்... அஜ்..." என்று அவள் திக்க... அவள் அருகே வந்தவன் அவளைச் சிறிதும் அடையாளம் கண்டு கொள்ளாமல் அதே உயிரற்ற பார்வை பார்த்தபடி தளர்ந்த நடையுடன் அவளைக் கடக்க... பாரதி தன் சக்தியெல்லாம் கூட்டி, "அஜுன்..." என்று சட்டென்று தான் சிறு வயதில் கூப்பிட்டது போல் அழைத்துவிட,

அர்ஜுனுக்கு முதலில் எதுவும் தோன்றவில்லை. ஆனால், அவள் கூறிய வார்த்தை காதுகள் வழியாக நரம்பு மண்டலத்துக்குள் நுழைந்து மூளையைத் தொட்டுச் சிலிர்க்க வைக்க... அபபடியே நின்றான்.

இப்போது பாரதிக்குச் சிறிது தைரியம் வர, "அஜுன்... கண்ணா..." என்றழைக்க, மீண்டும் அந்த வார்த்தைகள் அவன் மரத்திருந்த மூளைக்குள் சிலிர்ப் பைக் கிளப்ப, நடுக்கத்துடன் திரும்பியவன், "பா...பாரதி..." என்று காற்றிற்குக் கூடக் கேட்காத குரலில் கூற,

அந்த நொடி அவன் பிசிறு தட்டும் குரல், நடுங்கும் விரல்கள், சக்தி யிழந்த சோர்ந்து போன கண்களில்

ஏற்பட்ட சிறு வெளிச்சம் அனைத்தையும் தன் நெஞ்சுக் கூட்டுக்குள் பதிவு செய்தாள், அந்த 22 வயதுப் பேதை. சிறு வயதில் ஒரு விபத்தில் ஏற்பட்டிருந்த அன்பு அந்த நேரத்தில் அவளை அறியாமலேயே காதலாக உருப் பெற்றது.

பாரதிக்கு அந்த நிமிடம் அவள் வாழ்க்கையிலேயே மறக்கமுடியாது. பெண்கள் அழகுக்குத்தான் மயங்குவர் என்று யார் சொன்னது... இதோ என் கண்முன் எல்லா வற்றையும் இழந்து தன்னையே இழந்து... கிட்டத்தட்ட முற்றும் துறந்த பரதேசியாக நின்றாலும் எப்போதோ சிறு வயதில் பார்த்த, தன்னுடைய பெயரை ஞாபகம் வைத்திருக்கிறானே...

இவன் மேல் காதல் வரக்கூடாதா என்ன? ஆம். அந்தச் சிறையின் வாசலில் அர்ஜுன் என்னும் கைதியிடம் சிறைப்பட்டாள் பாரதி. அவன் நல்லவனா? கெட்டவனா - தன்னைப் பிடிக்குமா, பிடிக்காதா... எதுவுமே அவளுக்குத் தோன்றவில்லை. அவள் மனதில் இருந்த ஒரு பெயர் அர்ஜுன்... அர்ஜுன்.... அர்ஜுன்தான்.

இது சில பேருக்குப் பைத்தியக்காரத்தனமாகக் கூட இருக்கும். காதல் என்பதே ஒருவிதப் பைத்தியக்காரத்தனம் தானே!

அவள் பெயரைக் கூறியதும் பாரதிக்கு ஏற்பட்ட அதே உணர்வுகள் அர்ஜுனுக்கும் தோன்றியதை அவளால் உணர முடிந்தது. ஆனால், அர்ஜுன் சுதாரித்துத் திரும்பி விடுவிடுவென நடக்க ஆரம்பிக்க.. அவனை ஓடிச்சென்று வழியில் மடக்கி, "அர்ஜுன்... நான்தான் பாரதி... என்னை ஞாபகம் இருக்குல்ல...?" என்று கேட்க,

அர்ஜுன், "இல்லை..." என்பது போல் தலை யசைத்தான். ஆனால், பாரதி விடவில்லை. "அப்படியா? தெரியாதா? அப்போ எப்படிக் கரெக்டா என் பேரைச் சொன்னே?" என்று மடக்க,

அர்ஜுன் பதில் சொல்லாமல் அவளைத் தள்ளிவிட்டு நடக்க ஆரம்பிக்க... பாரதி அவன் கையைப் பிடிக்கத், திரும்பி முறைத்த அர்ஜுனிடம், "இல்லை. முறைக்காதே. காலையில் எட்டு மணிக்கே வந்தது. ரொம்பப் பசிக்குது. தனியாப் போகப் பயமா இருக்கு. என்னை ஹோட்டலுக்குக் கூட்டிட்டுப் போறியா?" என்று கேட்க,

அர்ஜுன், அவளை வெறுப்பாய் ஒரு பார்வை பார்த்து, "என்ன வேணும் உனக்கு...? உனக்குப் பசிச்சா நீ போய்ச் சாப்பிடு. என்னை விடு. நான் ஏற்கெனவே கொலை வெறியில் இருக்கேன்..." என்று கத்த,

பாரதி அவன் சத்தத்தில் அதிர்ந்தாலும், வெளியே காட்டிக் கொள்ளாமல், "அர்ஜுன்... ப்ளீஸ், நீ ரொம்பச் சோர்ந்து போயிருக்க. கையெல்லாம் நடுங்குது. வா. போய்ச் சாப்பிடலாம்..." என்று கெஞ்ச,

அர்ஜுன் ஒரு விரக்திச் சிரிப்புடன், "என்ன பிச்சை போடுறியா? உன் பிச்சை எதுவும் எனக்குத் தேவை இல்லை. அந்த அளவுக்குக் கேவலமாப் போயிடலை. முதலில் இங்கே இருந்து கிளம்பு. ஏற்கெனவே உன் சித்தப்பா கிட்ட உங்க குடும்பத்தில் உள்ள யாரையும் பார்க்க விரும்பலைன்னு சொல்லியாச்சு. இனிமே யாராவது வந்தீங்க நான் என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது..." என்று ஆத்திரத்துடன் கூற,

பதிலுக்குத் தன் புன்னகையை உதிர்த்த பாரதி, "நீ இன்னும் மாறவே இல்லை அர்ஜுன். அப்பவும் என்னை உனக்குப் பிடிக்காது. அதான் இப்பவும் பிடிக்கலை. அதைப் பத்தி நான் கவலைப்படலை. ஆனால் ஒரு விஷயம்... உனக்குக் கண்டிப்பா ஞாபகம் இருக்காது. ஆனால் எனக்கு அந்த வயசிலும் மனசில் ஆணியடிச்ச மாதிரிப் பதிஞ்ச விஷயம்.

"என் அம்மாவோட கடைசி ஆசை, அர்ஜுனை நல்லபடியாப் பார்த்துக்கோ என்பதுதான். அதைத்தான் நான் செய்யுறேன்..." என்று கூற,

அர்ஜுனின் முகம் கோபத்தைப் பூசிக் கொண்டது. "ஏன்... ஏன்... உங்க அம்மா என்னைக் காப்பாத்தினாங்க? அவங்க மட்டும் காப்பாத்தலைன்னா நான் நிம்மதியாச் செத்துப் போயிருப்பேன். இந்த வாழ்க்கையை நான் வாழவேண்டிய நிலை வந்திருக்குமா? ஏன்... என் கண்ணு முன்னாடி வந்தே? இவ்வளவு நாள் இருந்த மாதிரி என் கண்ணில் படாமல் இருந்திருக்க வேண்டியதுதானே.

"எனக்கு இருக்கிற கொஞ்ச நஞ்சம் மானத்தையும் கூறுபோட்டு விற்க வந்தியா? கடைசி ஆசையாம்... கடைசி ஆசை. இவ்வளவு நாள் நான் கஷ்டப்பட்டப்ப உங்க அம்மாவோட கடைசி ஆசை ஞாபகம் வரலையா?" என்று திட்ட ஆரம்பிக்க,

பாரதிக்கு மாறாகச் சந்தோஷம்தான் வந்தது. இவன் தன்னைத் திட்டினாலும் தன் மேல் உரிமையோடுதான் இருக்கிறான். இவன் என்ன கேட்க வருகிறான்? இவ்வளவு நாள் எங்கே போயிருந்த... என்றால் மனதளவில் ஏதோ

ஒரு மூலையில் என் ஞாபகம் இருக்கிறது என்றுதானே அர்த்தம்? தன்னைத் தேடியிருக்கிறான் என்றுதானே அர்த்தம்.

ஆனால் அதை அவனிடம் புரியவைக்கும் இடமும் நேரமும் இது இல்லை என்று நினைத்தவள்... சூழ்நிலையைக் கொஞ்சம் தளர்வாகவே கையாள நினைத்தாள். எனவே குறும்பாக, " என்ன பண்றது அர்ஜுன்? உனக்குக் கொஞ்சமாச்சும் மூளை இருக்கும். உன்னை நீயே பார்த்துப்பேனு நினைச்சேன். அதுவும் இல்லாமல் அந்த வயதில் என்னால் என்ன செய்ய முடியும், சொல்லு. அதுவும் இல்லாமல் என்னைக் கண்டாலே உனக்கு ஆகாது..." என்று கூற,

அர்ஜுனுக்குக் கோபம் தலைக்கேறியது. "என்னடி... நக்கல் பண்றியா? இப்பவும் சொல்றேன். உன் உதவி ஒண்ணும் எனக்குத் தேவையில்லை. நீ போகலாம். என்னால் முடிஞ்சவரை நான் வாழுறேன். இல்லைன்னா போய்ச் சாகுறேன். செத்தாலும் உன்கிட்ட வந்து நிற்கமாட்டேன். உன்கிட்ட மட்டும் இல்லை. யார்கிட்டயும் போய் நிற்க மாட்டேன்..." என்று முகத்தில் அடித்தாற்போல் கூற, பாரதிக்குக் கண்கள் கலங்கின.

என்ன வார்த்தைகள் பேசுகிறான்? செத்தாலும் என்னுடன் வரமாட்டானாமா? நான் அப்படி என்ன செய்து விட்டேன்... என்று பலவாறு நினைத்தவள்... கண்ணீரைத் துடைத்து அவன் முகத்தைப் பார்க்க முடியாமல் திரும்பிக் கொள்ள,

அதைக் கேட்டவளின் மனம் புண்பட்டதை அறிந்த அர்ஜுன், மனதைக் கல்லாக்கிக் கொண்டு நடக்க ஆரம்

பித்தான். மனதுக்குள்... 'ஏன்டி... இப்போ வந்தே? நான் இப்படி இருக்கும்போதா நீ என்னைப் பார்க்கணும். என்கிட்ட ஒண்ணும் இல்லையேடி... பரதேசியாத்தானே இருக்கேன். எல்லாம் முடிஞ்சு போச்சுன்னு நான் நினைக்கிற வேளையில் நீ வேற வந்து ஏன் என் வைராக் கியத்தைக் குறைக்கிறே! போயிடு பாரதி, போயிடு...' என்று கூற,

அவன் வேண்டுதலைப் பொய்யாக்கும் வண்ணம் கண நேரத்தில் தன் அழுகையை நிறுத்திச் சிரிப்புடன் ஓடி வந்து அவன் முன் நின்றாள் பாரதி.

"என்ன அர்ஜுன்... இப்படிப் பேசினால் அழுது உன்னை விட்டுடுவேன்னு நினைக்கிறியா? நீ செத்தாலும் பரவாயில்லை, அர்ஜுன்... என் கூட வா. வந்து வாழ்க் கையை ஒரு கை பார்த்து வெற்றியடைஞ்சிட்டு உனக் குன்னு ஒரு பெயரை உருவாக்கிட்டு நீ போய்ச் சாவு. உன்னை இப்படி ஒரு தோத்தாங்கோலியா சாக நான் விடமாட்டேன்..." என்று அழுத்தம் திருத்தமாகக் கூற,

அந்தப் பேச்சில் புன்னகையில்... அவள் பார்வை யில் தெரிந்த ஒளியில் சட்டென்று அமைதியடைந்த தன் மனதை நினைத்து அவனுக்கே ஆச்சரியமாகத்தான் இருந்தது.

இன்னும் அதே சிறிய வயதின் ஜாடை அப்படியே இருந்தது. எப்படியும் 22 வயது இருக்கும். ஆனால், முகத்தில் குழந்தைத்தனம் அப்படியே இருந்தது.

எந்தவித எதிர்மறை எண்ணங்களும் இல்லாதவர் களுக்குத்தான் முகத்தில் ஒரு குழந்தைத்தனம் இருக்கும்.

அது அவனுக்குப் புரிந்தது. அவளிடம் பேசும்போது தானும் அவளைப் போலவே மாறுவது போல் அவனுக்குத் தோன்றியது. எங்கே தான் அவளிடம் தோற்று விடுவோமோ என்றே நினைத்தான்.

ஆனாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல், “ஏன் இப்படி என்னைத் தொந்தரவு பண்றே? நான் யாருன்னு தெரியுமா? ஒரு பொண்ணைக் கொலை பண்ண முயற்சி செய்து ஜெயிலுக்கு வந்தவன். அந்தப் பயம் கொஞ்சம் கூட இல்லையா உனக்கு? என்னைப் பத்தி உனக்கு என்ன தெரியும்? பெரிசாப் பேச வந்துட்டே.

“எல்லா மனுசனும் எல்லாக் காலத்திலும் ஒரே மாதிரி இருக்க மாட்டான். ஆபத்தில் நீயே தலையைக் கொடுக் காமல் வீட்டுக்குப் போய்ச் சேருகிற வழியைப் பாரு...” என்று எச்சரிக்க...

அவன் எச்சரித்ததற்கு நேர்மாறாகக் கலகலவெனச் சிரித்த பாரதி, “ஹா...ஹா... அர்ஜுன்... ஆபத்து எப்பவுமே அழகா இருக்கும் அர்ஜுன். ஈர்ப்பை உண்டாக்கும். அந்த ஈர்ப்பு உன்கிட்ட இல்லை. ஆனால் அதை எல்லாம் மீறி என் மனசுக்குத் தெரியும் அர்ஜுன். நீ நிரபராதி. அப்படியே நீ குற்றவாளியா இருந்தாலும் எனக்குப் பிரச்சினை இல்லை. ஏன்னா இந்த உலகத்தில் யாருமே நிரபராதிகள் இல்லை. இது என் சித்தப்பா எனக்குச் சொல்லிக் கொடுத்தது.

“நம்ம விஷயத்தையே எடுத்துக்கோயேன். நான் உன்னைப் பயமுறுத்தினதனாலதான் நீ ஆற்றுக்குள் விழுந்தே... உன்னைக் காப்பாற்ற என் அம்மாவும்

அப்பாவும்...” என்று கூற முடியாமல் தழுதழுத்துப் பின் ஆசுவாசப்பட்டு, “ஒரு வகையில் பார்த்தால் நானும் குற்றவாளிதான். என் அம்மா, அப்பாவையே கொன்ன கொலைகாரிதான்...” என்று கூறி முடிப்பதற்குள் அனிச்சையாக,

அர்ஜுனின் கை அவள் வாயை மூடியது. பாரதி அவன் ஸ்பரிசத்தில் அதிர்ச்சியுடன் நிமிர்ந்து பார்க்க... கண்ணீருடன் அர்ஜுன் அவள் வாயைப் பொத்தி யிருந்தான்.

பின் அவன் சட்டென்று மனம் மாறி அவன் கையை எடுத்து இளகத் துவங்கிய தன் மனதை இறுக்கப்படுத்தி, “என்ன வார்த்தை பேசுறதுன்னு ஒரு அறிவு வேண்டாம். நீயெல்லாம் ஒரு பொண்ணா! உன் கிட்ட கொஞ்ச நேரம் பேசிட்டு இருந்தால் எனக்குப் பைத்தியமே பிடிச்சிடும். நீ எக்கேடோ கெட்டுப் போ. நான் போறேன். என் பின்னாடி வந்து என்னை ஃபாலோ பண்ற வேலையெல்லாம் வைச் சிக்காதே...” என்று கூறிவிட்டு, அவளைத் தீர்க்கமாக ஒரு பார்வை பார்த்து விட்டு விடுவிடுவென நடந்து சென்றான்.

அவனைத் தன் புன்னகை மாறா முகத்துடன் பார்த்தபடி, ‘நீ எங்கே போனாலும் நான் உன் கூடவே தான் வருவேன் அர்ஜுன். நீ என்னை என்ன செய்தாலும் சரி... என் வாழ்வு இனிமே உன்னோடுதான். நான் ஷர்மிளா - மேகநாதனோட பொண்ணு. நட்புக்காக உயிரையே கொடுத்தவர்கள் அவர்கள். நீ என் காதல் அர்ஜுன்... உன்னை நான் விடுவேனா?

“என் காதல் தோன்றின ஆயுட்காலம் வேணா குறைவா இருக்கலாம். ஆனால் அது வாழப் போற

நாட்கள் ரொம்ப அதிகம். இப்போ இல்லைன்னாலும் என்னைக்காவது ஒரு நாள் என் காதலைப் புரிஞ்சிப்பே...' என்று மனதுக்குள் கூறிக் கொண்டாள்.

அவளிடம் இருந்து பிரிந்து சென்ற அர்ஜுனிற்கு மனதில் தன்னிரக்கமும் விரக்தியும் போட்டி போட்டுக் கொண்டு மேலெழும்பி வந்தது.

தளர்ந்த நடையுடன் எட்டி நடைபோட்டவனுக்குப் பாரதி, தன் சிறு வயது ஞாபகங்களைக் கிளறி விட்டிருந் தாள். எப்படி இருந்த நாட்கள் அவை! அந்தத் துபரச் சம்பவம் நடக்கும்வரை அந்த நாட்கள் எவ்வளவு அழகாக இருந்தன! ஆனால் அந்தச் சம்பவத்திற்குப் பின் தன் வாழ்க்கையே தடம் மாறிவிட்டதே! அம்மாவிடம் இருந்து விலகித் தனித் தீவாக மாறி யாரிடமும் ஒட்டாமல்... தந்தையின் செல்லத்தில் தன்னையே தொலைத்து... காதல் என்று கூறி ஒரு சுயநலப் பிசாசின் பிடியில் விழுந்து, இவை யெல்லாத்துக்கும் மேலாக அந்த நாள்? இதெல்லாமே ஒரு வகை மாயை என்று அறிந்து உணர்ந்து, கைதியாகி... இப்போது பரதேசியாக நிற்கும் போது... மற்றொரு அத்தியாயமா என்று நினைக்கை யிலேயே நடை சோர்ந்தது. அது மே மாதமாதலால் உச்சி வெயில் மண்டையைப் பிளக்கப் பசி வேறு வயிற்றைக் கிள்ள... பாஷை தெரியாத அந்த ஊரில் யாரிடமும் தண்ணீர் கூடக் கேட்க முடியாமல் மயக்க நிலைக்கே சென்றான் அர்ஜுன்.

அதற்கு மேல் நடக்க முடியாமல் ஒரு மரத்தின் நிழலில் அமர்ந்து சோர்வு மேலோங்க அப்படியே படுத்து விட்டான். அவ்வளவு நாட்கள் ஜெயிலில் வேலை பார்த்த

தற்கான கூலி முன்னூறு ரூபாய் தந்திருந்தார்கள். அதைப் பாக்கெட்டில் தொட்டுப் பார்த்துக் கொண்டான். தன் நிலை மயங்கி உறங்கியவன்... பல மணி நேரங்கள் கழித்து, அந்த வழியாகச் சென்ற கான்ஸ்டபிள் ஒருவர் சந்தேகப்பட்டு, "யார் நீ... எழுந்திரு...?" என்று எழுப்ப... பதறி விழித்தவனைப் பார்த்து... "இது தூங்குறதுக்கான இடம் இல்லை..." என்று விரட்டி விட,

அவன் வேறு வழியின்றி எழுந்து நடக்க ஆரம்பித்தான். பொழுது சாய்ந்திருந்தது. பசி வயிற்றைத் துண்டு துண்டாக அறுத்தது. ஆனால், இது பசியாற்ற வேண்டிய நேரம் இல்லை.

மறுபடியும் பாக்கெட்டைத் தொட்டுப் பார்த்தான். பணம் இருந்தது. நேராக அருகில் இருந்த மதுபானக் கடைக்குச் சென்றான்.

200 ரூபாய் செலவழித்துத் தன் உடம்பில் உள்ள ஒட்டுமொத்த ரத்தமும் முங்கிப் போகும் அளவிற்குப் போதை ஏற்றிக் கொண்டான்.

அந்தப் போதை அவனுக்கு அப்போது தேவை. அதுதான் அவனுக்குத் தைரியத்தைக் கொடுக்கும்... என்று நினைத்தவன், பின் எல்லாம் முடிந்த பிறகு மீதம் இருந்த நூறு ரூபாயில் ஒரு ஆட்டோ பிடித்து ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்றான். அங்கு இறங்கியவன் தன் போதை இறங்குமுன் தண்டவாளத்தில் இறங்கி ஆள் இல்லாத ஓரமாக நடக்க ஆரம்பித்தான்.

அது உள்ளூர் அல்லாமல் வெளியூர்களுக்குச் செல்லும் ரயில் நிலையம். ஆதலால் கூட்டம் நிரம்பி

வழிந்தது. கிட்டத்தட்ட ஒன்பது மணி இருக்கும். இருட்டு முழுதாக வியாபித்திருக்க... நடந்தான்... நடந்தான்... நடந்து கொண்டே இருந்தான். ஒரு கட்டத்தில் ஆட்களே இல்லை. ஓரமாக இருந்த மதில் ஓரம் சாய்ந்து நின்றான். போதை அவனைத் தளர்த்தியிருந்தது.

ரயிலுக்காகக் காத்திருக்கத் துவங்கினான். ரயிலில் ஏற அல்ல... ரயில் இவன்மீது ஏற.

"நான் இனிமே எதுக்கு வாழணும்... எனக்கு வேணாம். நான் அசிங்கம். ஏய்... ட்ரெயின். சீக்கிரம் வா... என்னைக் கொன்னுடு. யாராவது வர்றதுக்குள்ள நான் செத்துப் போகணும்..." என்று உளறியபடி நிற்க... அவன் ஆசைப்படி ரயிலும் வந்தது.

ரயில் நெருங்கி வர வர... அவன் மனதில் பயமும், வாழ்க்கையின் மேல் உள்ள வெறுப்பும் போட்டி போட, இறுதியில் வெறுப்பு ஜெயித்தது. அவன் போதை அவனுக்கு முட்டாள்தனமான தைரியத்தைக் கொடுக்க... அந்தத் தைரியத்துடன் தண்டவாளத்தில் சென்று நின்றான்.

ரயில் நெருங்கி வந்தது. அந்த இருட்டில் அவ்வளவு பெரிய ரயில் முன் அவன் தெரிந்தாலே பெரிய விஷயம். அப்படியே தெரிந்தாலும் நிறுத்துவது முடியாத காரியம். அவன் கைகளை மடக்கிக் கொண்டு கண்ணை மூடி நின்றான். ரயிலின் ஹாரன் ஒலி பக்கத்தில் கேட்டது. தன் உயிர் செல்லும் நிமிடத்தை எண்ணிக் கொண்டிருந்தான்.

இன்னும் சில வினாடிகள்தான். ஒன்று இரண்டு மூன்று...

அதற்குள் ஒரு கை அவனைப் பிடித்து இழுத்தது. அவனை இழுத்த அடுத்த நிமிடம் ரயிலும் அவர்களைத் தாண்டிச் சென்றது.

அர்ஜுனிற்குச் சில நிமிடங்கள் ஒன்றும் புரியவில்லை. ஆனால் புரிந்ததும் அவனுக்கு எரிச்சல்தான் வந்தது. கண்களைத் திறந்தவன்... அங்கே கோபத்துடன் நின்றிருக்கும் பாரதியைப் பார்க்க அவனுக்கு இன்னும் பற்றிக்கொண்டு வந்தது. அவன் ஏதோ திட்ட வாயெடுக்க... அதற்கு அவசியமில்லாமல், அவள் கை அவன் கன்னத்தில் பலமாக இறங்கியது.

அவள் அடியில் அவன் தெளிய... கண்கள் கோபத்தில் பிதுங்க, பாரதி, "நீயெல்லாம் ஒரு ஆம்பளையாடா... பேடி மாதிரி தற்கொலை செய்துக்க வர்றே... அரை மணிநேரம் உன்னை வாட்ச் பண்ணாமல் விட்டுட்டேன். அதுக்குள்ளே ஆட்டோ பிடிச்சு ஸ்டேஷனுக்கு வந்து... குடிகாரப்பக்கி..." என்று திட்ட... அப்போதுதான் அவனுக்குத் தெரிந்தது. காலையில் இருந்து அவள் அவனைக் கண்காணித்துக் கொண்டிருந்தாள் என்பது.

அர்ஜுனும் கோபத்தில், "ஏய்... நீ யார் என்னைக் கேட்கிறதுக்கு? என் உயிர்... என் இஷ்டம்..." என்று கூற,

அவன் கழுத்தில் தன் கையை வைத்து நெரிப்பது போல் பிடித்து, "என்னடா சொன்னே... இது உன் உயிர் இல்லைடா. பத்து வயசில் என் அம்மாவும் அப்பாவும் அவங்க உயிரைத் தந்து காப்பாத்திய உயிர். அதை இப்படி நினைத்த நேரத்துக்குப் போக்கிக்க நான் விடமாட்டேன். எங்கம்மா, அப்பாவோட தியாகத்தை நான் பெரிசா நினைக்கிறேன்.

"ஏதோ ஒரு கேவலமான காரணத்துக்காக நீ தற்கொலை செய்துக்கிறதை என்னால் பொறுத்துக்க முடியாது. அதைப் புரிஞ்சுக்கோ. அதைத் தடுக்க எனக்கு எல்லா உரிமையும் இருக்கு..." என்று கூற, அர்ஜுனால் ஒன்றும் பேச முடியவில்லை.

பாரதி, "என்ன பேச முடியலையா? நீ பேசுறதுக்கு எல்லாம் ஓடி ஓடி ஒளிஞ்ச பாரதி இல்லை நான்... அப்படி விலகி விலகிப் போனதனாலதான் நீ இப்படிக் குடிகாரனா, பரதேசியா வந்து நிக்கிறே..." என்று கத்த,

அர்ஜுன், "ஏய், உனக்கு என்னைப் பத்தி என்னடி தெரியும்? நான் ஏன் இப்படி ஆயிட்டேன்னு உனக்குத் தெரியுமா?" என்று அவனும் பதிலுக்குக் கத்த...

பாரதி, "ஏன் தெரியாமல்... நீ ஒரு பிடிவாதக்காரன். வெட்டி ஜம்பம் உனக்கு ஜாஸ்தி. அந்த வீம்பால்தான் இவ்ளோ தூரம் வந்திருக்கே... நீ உங்க அப்பா செல்ல மாச்சே... அதான் இப்படித் தறுதலையா போயிட்டே... ஜெயிலில் இருந்து ரிலீஸ் ஆகறது கூட உன் குடும்பத்துக்குச் சொல்லாமல் இருந்திருக்கியா நீ... உன்னைப் போய் அப்படி வளர்த்தாரேடா அவர்...

"ஏன்டா, சாகப் போறியே... அவர் உன்னைத் தலையில் தூக்கி வைச்சு ஆடுவாரே... அது கூடவா உன் மரமண்டைக்கு ஞாபகம் வரலை. சரி, நீ உன் அப்பா நம்பர் கொடு. நான் அவர்கிட்ட பேசிக்கிறேன்..." என்று கேட்க,

அர்ஜுன் ஒன்றும் பேசாமல் இருந்தான்.

பாரதி அவனை உலுக்கி, “கேட்கிறேனில்லை... சொல்லு. சரி... நம்பர் வேணாம். உன் அப்பா எங்கே இருக்கார்? அதையாவது சொல்லு!” என்று கூற,

அர்ஜுன், “ஏய்... அவரைப் பத்திப் பேசாதே. எனக்கு என்னவோ பண்ணுது...” என்று கத்த,

பாரதி, “ஓ... குத்தமுள்ள நெஞ்சு குறுகுறுக்குதோ... சொல்லுடா. நீ சொல்லாமல் நான் விடமாட்டேன். உன் அப்பா எங்கே?” என்று கேட்க,

அர்ஜுன் அழுத்தமாக, “என் அப்பா நான் மூணு வயசா இருக்கும்போதே இறந்துட்டார்...” என்று கூறினான்.

பாரதிக்குச் சிறிது நேரம் ஒன்றுமே புரியவில்லை. “ஏய்... என்ன சொல்றே? அப்போ ஹரிஹரன் அங்கிள்...” என்று தடுமாற்றத்துடன் கேட்க,

அர்ஜுன், “அவர்... அவர் என் அப்பா இல்லை...” என்று உணர்ச்சியே இல்லாத குரலில் கூற,

பாரதி, அவன் கூறியதைக் கேட்டுப் பேச மறந்து, சிலையாக நின்றாள்.

## 16

சொன்ன மொழி தவறு மன்னவனுக்கே – எங்கும்
தோழமை யில்லையடி தங்கமே தங்கம்!
என்ன பிழைகளிங்கு கண்டிருக்கிறான்? – அவை
யாவுந் தெளிவு பெறக் கேட்டு விடடீ!
மையல் கொடுத்துவிட்டுத் தங்கமே தங்கம் – தலை
மறைந்து திரிபவர்க்கு மானமு முண்டோ?

பொய்யை யுருவமெனக் கொண்டவ னென்றே -
கிழப் பொன்னி யுரைத்ததுண்டு தங்கமே தங்கம்!

**பா**ரதிக்கு அவன் கூறியது தலை முதல் கால்வரை அதிர்ச்சி பேரிடியை உண்டாக்கினாலும்... அதைப் பற்றிப் பேச... இது நேரமில்லை என்பதையும் அறிந்தாள்.

இருட்டிய வேளையில் இவ்வாறு தண்டவாளத்திற்கு வெகு அருகில் நின்று கொண்டு வழக்கடித்துக் கொண்டிருந்தால், கண்டிப்பாகக் காவலர்களின் கையில் சிக்கித் தேவையில்லாத பிரச்சினையில் தலை கொடுக்க வேண்டும் என்று நினைத்த பாரதி, "சரி. இப்போ எதுவும் பேச வேண்டாம். நட. முதலில் இங்கே யிருந்து போகணும்..." என்று கூற,

அர்ஜுன் மறுத்தான். "ப்ளீஸ்... என்னை விட்டுவிடு. நீ போ. எனக்குத் தனியாக இருக்கணும்..." என்று அவள் முகம் பார்க்காமல் கூற

பாரதி, "போதும், அர்ஜுன். என்னை என்ன முட்டாள்னு நினைச்சியா? நீ என்ன திட்டினாலும் நான் உன்னை விட்டுப் போகமாட்டேன். இப்போ என் கூட வா..." என்று அவன் கையைப் பிடிக்க,

அர்ஜுன், அவள் கைகளை உதறி, "ஏய்... உனக்கு ஒரு தடவை சொன்னால் புரியாது? என்னை விடுடி. தயவுசெய்து என்னைத் தொந்தரவு செய்யாமல் போயிடு..." என்று கத்த,

பாரதிக்கு மனம் தளர்ந்தது. இவ்வளவு நேரம் போராடியும் அவன் அவளை நம்பி வராதது அவள் மனதை அறுக்க...

"ஏன் அர்ஜுன்... நான் உனக்கு என்ன பாவம் செய்தேன்... ஏன் என் கூட வரமாட்டேங்குற? நான் என்ன அவ்வளவு கேவலமானவளா? இதோ நட்ட ராத்திரி பத்து மணிக்கு உன்கிட்ட வந்து கெஞ்சிக்கிட்டு இருக்கேன். அதுக்காகக்கூட என்கூட வரணும்னு உனக்குத் தோணலையா... அர்ஜுன்? மறுபடி மறுபடி சொல்றேன்னு நினைக்காதே, அர்ஜுன். உன்னை நல்லாப் பார்த்துக்கணும்னு எங்கம்மா சாகப் போற நிலையிலேயும் நினைச்சாங்க. என்கிட்டயும் சொன்னாங்க. எனக்காக இல்லைன்னாலும் அவங்களுக்காக என்கூட வா... அர்ஜுன்! தயவுசெய்து தற்கொலைக்கு முயற்சி செய்யாதே. நான் காலையிலேயே சொன்ன மாதிரி உன்னை இப்படித் தோத்தாங்கோலியா சாகவிட மாட்டேன். இன்னும் என்னை நம்பலைன்னா உன் பாணிக்கே நானும் வர்றேன்..."

என்று கண்ணீர்க் குரலில் கூறி, அவனைப் போலவே தண்ட வாளத்தின் நடுவே சென்று நின்றாள்.

அப்போதும் அவன் கைகளை முறுக்கிக் கொண்டு பேசாது நின்றானே தவிர, ஒன்றும் செய்யவில்லை.

தூரத்தில் ரயில் வரும் ஒலி கேட்க... பாரதி, "இதோ ரயில் வருது அர்ஜுன்... இன்னும் ஒரு நிமிஷத்தில் இங்கே வந்துவிடும். அதற்குள் முடிவெடு..." என்று கூறியவளின் முகத்தில் சிறிதும் பதற்றமில்லை.

ரயில் நெருங்க நெருங்க... பாரதி பயந்தாளோ இல்லையோ... அர்ஜுன் இறுதியாகக் கரைந்தான், இல்லை இல்லை, கரைக்கப்பட்டான்.

கரையாத அவன் மனம் சட்டென்று கரைந்து, அவள் தளிர்க் கைகளைப் பற்றித் தண்டவாளத்தை விட்டு அகற்ற, ரயிலும் சில விநாடிகளில் காற்றைக் கிழித்துக் கொண்டு சென்றது.

"ஏய்... லூசா நீ? உன் உயிர் மேல் ஆசை இல்லையா உனக்கு? ஏன்... ஏன் இப்படி எல்லாம் பண்றே? என் உயிர் மேல் எனக்கு இல்லாத அக்கறை உனக்கு எதுக்கு?" என்று கத்த,

பாரதி ஒரு விரக்திச் சிரிப்புடன், "உனக்கும் மேலாக உயிர் மேல் ஆசை உள்ளவள்தான் நான். ஆனால், நீ இப்போ விடப் போறேன்னு சொன்னது என் அப்பா அம்மா காப்பாத்திய விலை மதிப்பில்லாத உயிர். அவங்களுக்காக என் உயிர் போனால் தப்பில்லை. இப்போவாவது உன் மனசு மாறுமா அர்ஜுன்?" என்று தழுதழுத்த குரலில் கேட்க,

அதற்கு மேலும் கரையாமல் இருக்க அவன் மனம் இன்னும் முழுதாக இறுகவில்லை. அந்த அரை குறை வெற்றிடத்தின் வழியாக ஈரம் உறிஞ்சப்பட்டது பூஞ்சையாக. அவளின் தூய்மையான அன்பு அவனை அசைத்தது போலும்.

எனவே, "என்னால் இனிமேல் எதுவும் சாதிக்க முடியுமான்னு தோணலை. ஆனால், நீ இவ்ளோ தூரம் கெஞ்சுறே... எனக்கு வேற வழி இல்லை. நான் வரேன்.

எப்படியும் நான் ஒரு பூஜ்யம்தான். அப்படிச் சாகிறதை விட பூஜ்யமா வாழ்ந்துட்டுப் போறேன். வா, கிளம்பலாம்..." என்று உணர்ச்சியற்ற குரலில் கூற,

பாரதிக்கு முகம் பிரகாசமானது. "பூஜ்யத்தோட மதிப்பு, அது இருக்கிற இடத்தைப் பொறுத்துதான் அர்ஜுன். ஒன்றுக்கு முன்னாடி இருந்தால் அதுக்கு மதிப்பில்லை. ஒன்றுக்குப் பின்னால் இருந்தால் பூஜ்யத்திற்கு மதிப்பு வரும். நான் அந்த ஒன்றாக இருக்க ஆசைப்படுகிறேன். எனக்குப் பின்னாடி நீ எப்பவும் இருக்கணும். சரி, அர்ஜுன் வா... போலீஸ் யாராவது வருவதற்கு முன்னால் இந்த இடத்தை விட்டுப் போகலாம்," என்று அவனை அழைத்துக் கொண்டு, அருகில் இருந்த ஒரு உணவகத்திற்குச் சென்றாள்.

அவன் எவ்வளவோ மறுக்க மறுக்க, உணவை அவன் வாய்க்குள் திணித்து வயிற்றை நிரப்பினாள். அப்போதுதான் தன் கைபேசி ஞாபகம் வந்து, அதை எடுத்துப் பார்க்கக் கிட்டத்தட்ட முப்பது தவற விட்ட அழைப்புகள் ராமிடமிருந்தும் திருவிடமிருந்தும் வந்திருந்ததைப் பார்த்தாள்.

அர்ஜுனைச் சாப்பிட வைத்துக் கொண்டே, ராமிடம், "அண்ணா... நாங்க பிரெண்ட்ஸ் எல்லாம் சேர்ந்து, படிப்பு முடிஞ்சதுக்காக சக்சஸ் பார்ட்டி ஒண்ணு ஆர்கனைஸ் பண்ணோம். அதில்தான் இருக்கேன். இன்னும் ஒரு மணி நேரத்தில் வீட்டில் இருப்பேன்," என்று உறுதி அளித்தாள்.

முதல் பத்து நிமிடங்கள் வாய்க்கு வந்ததைக் கோபத்தில் திட்டியவன், பின் இதெல்லாம் டில்லியில் சகஜம் என்பதால், அவனும், "சரி. ரொம்ப லேட்

ஆயிடுச்சுன்னா தனியே வராதே. என்னைக் கூப்பிடு, நான் வரேன்," என்று நம்பித் தன் தங்கையின் பாதுகாப்பையும் அதே சமயம் உறுதி செய்து கொண்டான்.

திருவிடம் மட்டும் தனியே சென்று நடந்ததை எல்லாம் கூறியவள், சீக்கிரம் வருவதாகக் கூறிவிட்டுத் தன் கைபேசியை அணைத்தாள்.

அர்ஜுன், "நீ போ வீட்டுக்கு. நான் இங்கே ஏதாவது பார்க்கில் தங்கிக்கிறேன்," என்று கம்மிய குரலில் கூறும்போதுதான், அவள் மண்டையில் சம்மட்டியால் அடித்தாற்போல், அவனுக்குத் தங்க இடமில்லை என்று ஞாபகமே வந்தது.

உடனே, "எதுக்கு... சாயந்திரம் மாதிரி அந்தக் கான்ஸ்டபிள் உன்னை விரட்டவா? வேண்டாம்... இந்த ஹோட்டல் லாட்ஜிலேயே தங்கு. நான் காலையில் வந்து உன்னைப் பார்க்கிறேன்," என்று கூற,

அர்ஜுன், "இதோ பாரு... நீ எனக்கு ஏதாவது உதவி செய்யறதாக இருந்தால், என்னைத் தனியாக விடு. நான் ஒண்ணும் தற்கொலைக்கு முயற்சி செய்ய மாட்டேன். ஆனால், உன்னோட உதவி எதுவும் எனக்கு வேண்டாம்," என்று கூற,

பாரதி சலிப்புடன், "இதோ பாரு, அர்ஜுன்... நீ எத்தனை வாட்டி இதைச் சொன்னாலும் நான் உன்னைத் தனியே விட மாட்டேன்னு உனக்குத் தெரியும். அப்படி இருந்தும் சொன்னதையே சொல்லி என்னை எரிச்சல் மூட்டாதே. உனக்கு மட்டுமில்லை... எனக்கும் கோபம் வரும்.

"உன்னை என் வீட்டுக்கே கூட்டிட்டுப் போயிருப் பேன். ஆனால், அண்ணனுக்குத் தெரிந்தால் சாமி ஆடிடு வான். அதனால் சமத்துப் பையனா இந்த ஹோட்டலில் தங்கு. நான் பணம் தரேன். ஓ.கே... ஓ.கே. கடனாத் தான்பா... உனக்குப் பணம் வரும்பொழுது திருப்பிக் கொடு. நான் ஒண்ணும் அவ்ளோ பணக்காரி இல்லை," என்று குறும்புடன் கூற,

அர்ஜுனுக்குக் கூட அவள் பேச்சில் மனம் லேசாகிப் போனது. ஆனால் வெளிக்காட்டாமல், "ஆமாம்... எந்த பணக்காரி 'ஆடி' மாதிரி சின்ன வண்டியில் வருவாள்? நீ ஏழைதான்," என்று கடுப்பாகக் கூற,

பாரதியோ ஆச்சரியப்பட்டு, "பாரடா... நீ கூட ஜோக்கெல்லாம் அடிக்கிறே... பரவாயில்லை, மாற ஆரம்பிச்சிட்டே," என்று கூற, அர்ஜுன் திணறினான்.

பின் ஏதோ தோன்ற, பாரதி தன்னிடமிருந்த மொத்தப் பணத்தையும் அவன் கையில் திணித்து விட்டு, அவனைத் திரும்பிப் பார்க்காமல், "ஹோட்டலுக்கு வெச்சிக்கோ. அப்புறம் மத்தச் செலவுக்கும். எவ்ளோ இருக்குன்னு தெரியலை..." என்று கத்தியபடி, தன் காரில் ஏறி வீட்டிற்குக் கிளம்பினாள்.

இந்தப் பன்னிரண்டு மணி நேரத்தில், பாரதி, தன் வாழ்வில் விளைத்த மாற்றங்களை நம்ப முடியாமல் பெருமூச்சு விட்டான் அர்ஜுன்.

அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. வாழ்க்கை ஏன் இப்படித் தன் விசையை மீறிச் செல்கிறது என்று தெரிய வில்லை. அவனைப் பொறுத்தவரை அவன் விரக்தியின்

உச்சியில் இருந்தான். அவனின் எண்ணங்கள் மரத்து விட்டன.

ஜெயிலில் இருந்து வெளியில் வந்தவுடன், அவன் குறிக்கோள் ஒன்றே ஒன்றாகத்தான் இருந்தது. அதுதான் தற்கொலை. இப்போது அதுவும் இல்லை என்றானபிறகு என்ன செய்வதென்றே தெரியவில்லை. வாழ்க்கை என்னும் விளையாட்டில் ஒரு கட்டத்தில் நம்மால் ஒன்றும் செய்ய முடியாத போது, நாம் வெறும் பார்வையாள ராகத்தான் இருப்போம்... பங்கேற்பாளராக இருக்க மாட் டோம். அதே நிலையில்தான் இப்போது அர்ஜுனும் மாறியிருந்தான்.

பாரதி, தன் வாழ்வில் விளையாட இருக்கும் விளையாட்டிற்கு, அவன் பார்வையாளராக மட்டும்தான் அந்தக் கட்டத்தில் இருந்தான்.

அடுத்த நாள் திருவும் பாரதியும் அவனைப் பார்க்க வந்தனர். திருவைப் பார்த்ததும் சட்டென்று ஒருவிதப் பாசம் அவன் கண்களில் தெரிந்தாலும், அது ஒரு அடிபட்ட உணர்வாக மாறி, பின் அவன் முகம் நிச்சலனமாக மாறியதை திரு, பாரதி இருவருமே உணர்ந்தார்கள்.

பரஸ்பர விசாரித்தலுக்குப் பின் திரு, "அர்ஜுன்... உனக்கு அவ்வளவாக எங்கள் மேல் அபிப்ராயம் இல்லைன்னு தெரியும். ஆனாலும் ஒரு காலத்தில் நம்ம ரெண்டு குடும்பமும் ஒண்ணாப் பழகிட்டோம். அதுக்காகக் கேட்கிறேன்... உன் வாழ்க்கையில் என்ன நடந்தது? உன் அம்மாவும் அப்பாவும் எங்கே? ஏன் ஜெயிலுக்குப் போனே? யார் அந்தப் பொண்ணு?

“உன் அப்பா ஹரிஹரன் இல்லையா? நீ விடுதலையான போது ஏன் யாருமே வரலை? தயவுசெய்து இதுக்கெல்லாம் பதில் சொல்லு அர்ஜுன். எங்கள் மேல் நம்பிக்கை இருந்தால், நீ கண்டிப்பாக இதுக்குப் பதில் சொல்லியேதான் ஆகணும்...” என்று அதட்டாமல் வேண்டுகோள் விடுக்க, பாரதியும் அவனிடம் கெஞ்ச,

அர்ஜுன் சில நேர உணர்ச்சிப் போராட்டத்திற்குப் பின், எல்லாவற்றையும் கூற ஆரம்பித்தான்.

அர்ஜுன் சிறு வயதிலிருந்தே - வேதவல்லி நினைத்தது போல் - ஒரு தனித் தீவாகத்தான் வளர்ந்தான். அதற்கு அவன் தந்தையும் ஒரு காரணமே. அவனுக்கு நினைவு தெரிந்த நாள் முதல் செல்வம் பெருக, அவன் தந்தையும் அவனைக் கொண்டாட, அவன் தன் குடும்பத்தைத் தவிர அனைத்தையும் வெறுக்க ஆரம்பித்தான்.

அதிலும் அந்த நாள்... மேகநாதனும் ஷர்மிளாவும் இறந்த அன்று, அவன் தாய் கூறிய அந்த வார்த்தை அவனை ரொம்பவே உலுக்கிப் போட்டது.

‘இவனைக் காப்பாத்தணும்னு உனக்கு என்னடி தலையெழுத்து?’ அந்த வார்த்தைதான் அது.

அன்று முதல் தன் தாயிடம் இருந்து விலக ஆரம்பித்தான். வேதவல்லியைப் பாடம் சொல்லிக் கொடுப்பதில் இருந்து அவனது அனைத்து வேலைகளிலும் விலக்கி வைத்தவன், ஹரிஹரனிடம் ஒன்ற ஆரம்பித்தான். அதனால் வேதவல்லிதான் பாதிக்கப்பட்டாள்.

"என்னங்க... நம்ம பையன் போக்கே சரியில்லைங்க. முன்னாடி எல்லாம் அம்மா, அம்மான்னு என் பின்னாடியே சுத்துவான். இப்போ கண்டுக்கிறதே இல்லை. எனக்கு ரொம்பக் கஷ்டமாக இருக்குங்க..." என்று வருத்தப்பட,

ஹரிஹரனோ முகத்தில் அடித்தாற்போல், "ஆமா... நீ எப்போ நம்ம பையனைப் பத்தி எல்லாம் கவலைப்பட ஆரம்பிச்சே? அன்னைக்கு நான் அவ்ளோ சொல்லியும் நீ அந்த இடத்தை விட்டு வந்தியா? அப்போ எப்படி அவனுக்கு உன் மேல் பாசம் வரும்?" என்று, என்னவோ நக்கீரர் போல் தப்பைச் சுட்டிக் காட்ட, வேதா மனதளவில் இன்னும் அடிபட்டாள்.

இனிக் கணவனிடம் பேசிப் பயனில்லை என்று நினைத்தவள், அர்ஜுனிடம், "கண்ணா... உனக்கு அம்மா மேல் என்ன கோபம்? எதுவாக இருந்தாலும் சொல்லுடா. அதுக்காக இப்படிப் பேசாமல் இருக்காதேடா..." என்று வாஞ்சையாகக் கூற,

அர்ஜுனோ அவளை விலக்கி, "என்னைக் கண்ணான்னு கூப்பிடாதீங்கம்மா... எனக்குப் பிடிக்கலை. அப்பா மாதிரி அர்ஜுன் என்றே கூப்பிடுங்கம்மா..." என்று எரிச்சலுடன் கூற,

அவளோ தன் பாசம் மாறாமல், "என் குட்டிக் கண்ணன்தானேடா நீ... உன்னைத் தவிர யாரைக் கூப்பிடறது...?" என்று கேட்க,

அர்ஜுன், "உனக்கு என்னைப் பிடிக்காதுன்னு எனக்குத் தெரியும். பொய் சொல்லாதே. நான்

ஸ்கூலுக்குக் கிளம்பறேன்... பை...” என்ற ஒற்றை வரியில் அவள் இதயத்தைக் கிழித்து விட்டுச் செல்ல, அந்தப் பத்து வயதுச் சிறுவனின் சொற்களில் அவள் அதிர்ந்துதான் போனாள். அதன்பின் அவள் எவ்வளவோ முயன்றும் அவனிடம் நெருங்க முடியவில்லை.

அவளைப் பொறுத்தவரை அவளின் கண்ணன் அவளை விட்டு விலகியே சென்று விட்டான். எனவே யாழினியைப் பேணி வளர்க்க ஆரம்பித்தாள். அவள் கவனம் முழுவதையும் அவளிடமே கொட்டினாள். தந்தை யின் குணங்கள் அவளுக்கு வந்து விடாமல் தன் கைக் குள்ளேயே வைத்து வளர்த்தாள்.

அதனால் அவள் தாயைப் போலவே வளர்ந்தாள். அர்ஜுனும் என்னதான் தாயிடம் இருந்து விலகிப் போனாலும் தங்கையிடம் அன்பாகத்தான் இருந்தான். அதை நினைத்தே வேதவல்லி அமைதியடைந்தாள். அர்ஜுன் வளர்ந்தான்... அவனுடன் கூடவே கெட்ட சகவாசமும் வளர்ந்தன.

அர்ஜுனிடம் ஒரு குணம் இருந்தது. யார் தன்னைப் பெருமையாகப் பேசினாலும், அவர்களுக்காகத் தன் உயிரையே வேண்டுமானாலும் தருவான். ஆனால், தன் குற்றத்தை யாராவது கூறி விட்டால், அவர்களை வெறுத்து ஒதுக்கி விடுவான்.

அவனின் இந்தப் பலவீனத்தை வைத்தே அவனுக்கு நண்பர்கள் வாய்த்தனர். அவர்களின் கெட்ட சகவாசம் அவனைக் கெட்ட வழிகளுக்கு இட்டுச் சென்றன. புகையிலும் போதையிலும் கைதேர்ந்தவன் ஆனான்.

"டேய் மச்சி... அந்தப் பப்பில் புதுச் சரக்கு ஸ்காட்ச் வந்திருக்குடா... நாம் ட்ரை செய்தே ஆகணும்..." என்று அவனை ஈர்த்து வைத்திருந்தனர்.

அதற்கும் மேலாக, "டேய்... உன்னைப் போலச் செலவு பண்ண ஒருத்தன் பொறந்துதான் வரணும்டா... பணம் இருந்தாலும் பிரெண்ட்ஸுக்காகச் செலவு பண்றவன் தான்டா ஆம்பளை... நீ எங்கேயோ போயிட்ட மச்சான்..." என்று துதி பாடி விட்டால் போதும், அன்று அவர்களுக்கு ஐம்பதாயிரம் வேட்டைதான்.

ஆனால், அவனிடம் அறிவும் சரிக்குச் சமமாக இருந்தது. பரிட்சைக்கு முந்தைய நாள் இரவுதான் அவனின் மனச்சாட்சி விழித்துக் கொண்டு, புத்தகத்தைத் திறந்து பார்க்கச் சொல்லும். ஹரிஹரன் கூட வேத வல்லியின் காதில் விழுமாறு, "இப்போ எதுக்குக் கஷ்டப்பட்டுப் படிக்கிறே அர்ஜுன்? நமக்குப் பத்துத் தலைமுறைக்குச் சொத்து இருக்கு. நீ படிச்சுத்தான் ஆகணுமா?" என்று கேட்டாலும்,

அர்ஜுன், "இல்லை டாட்... எனக்குன்னு ஒரு இமேஜ் இருக்கு. கேவலமான மார்க் வாங்கினால் சரிப்பட்டு வராது டாட்... அதுக்காகத்தான்..." என்று அசால்ட்டாகக் கூறி, வேதவல்லியின் வயிற்றில் பாலை வார்ப்பான்.

அவன் மது அருந்துவது, கெட்டவர்களின் சகவாசம் எல்லாம் தெரிந்தாலும், வேதா உள்ளுக்குள்ளேயே குமைந்தாளே தவிர, அவனைத் திருத்த முயற்சிக்க வில்லை. அவள் மட்டும் அதைச் செய்திருந்தால், அவனுக்கு இந்த நிலை வந்திருக்காதோ?

இளங் கலையிலும் முதுகலையிலும் நல்ல மதிப்பெண்களுடனே தேர்ச்சி அடைந்தான். எம்.ஈ. மேனுபேக்சரிங் என்ஜினீயரிங், சென்னையில் உள்ள புகழ்பெற்ற பொறியியல் கல்லூரியில் முடித்துத் தேர்ந் தான். முதுகலை படிக்கும் போதுதான் அவனுக்கு மினியின் தொடர்பு கிடைத்தது.

என்னதான் பல கெட்ட பழக்கங்களில் ஊறித் திளைத்தாலும் பெண்கள் விஷயத்தில் அவனுக்குப் பிடிப்பு இருந்ததில்லை. ஒழுக்கம் எல்லாம் பார்த்து அல்ல... தேவையில்லாத நேர விரையமாகத்தான் அதை நினைத் தான். அவன் வரையில் பெண்கள் என்றாலே மட்டம்தான்.

ஆனால், அந்த எண்ணத்தை மினி தன் மயக்கும் கண்களாலும், இனிக்கும் பேச்சுகளாலும் மாற்றினாள். மினியின் அப்பா முன்னாள் எம்.பி. டெல்லிதான் அவளுக்குச் சொந்த ஊர். உயர்ந்த இடம்தான். டெல்லி யில் பல ஆண் நண்பர்கள் அவளுக்கு இருந்தாலும், அவளுக்கு என்னமோ அர்ஜுனின் மாநிறத்திலும் அலட்சியப் பேச்சிலும் அசாத்திய அறிவிலும் ஒரு ஈர்ப்பு. எனவே அவன் பின் சுற்ற ஆரம்பித்தாள்.

"அர்ஜுன்... ப்ளீஸ்... என்னை அவாய்ட் பண் ணாதே. நான் எவ்வளவு நாள் உன் பின்னாடி சுத்துறேன். கொஞ்சம் கூட என்னைக் கண்டுக்கவே மாட்டேன்ற. நீ ரொம்ப மோசம் மேன்."

அர்ஜுன், "இதோ பாரு மினி... எனக்கு இதெல்லாம் பிடிக்காது. எனக்கு ஜாலியாக இருக்கணும். வாழ்க்கையை அனுபவிக்கணும்... அவ்வளவுதான். எனக்கு எந்த உறவும்

தேவையில்லை...” என்று இந்தக் கால இளைஞர்களின் ஆஸ்தான வசனத்தைக் கூறினாலும், விடாமல் அவன் கூடவே சுற்றினாள்.

அவள் எவ்வளவுதான் கரணம் போட்டாலும், கழுவும் மீனில் நழுவும் மீனாக இருந்த அர்ஜுன், ஒருநாள் அவன் பலவீனத்தைப் பார்த்து அடிக்க, அவளிடம் விழுந்தான்.

“அர்ஜுன்... இந்த உலகத்தில் நீ இல்லைன்னா வேற யாரையும் என்னால் கல்யாணம் பண்ணிக்க முடியாது, அர்ஜுன். நீதான் முழுமையானவனா என் கண்ணுக்குத் தெரியுறே... நீ என் வாழ்க்கையில் கிடைத்தால் அதை விடச் சந்தோஷம் என் வாழ்வில் இல்லை.

“நீயும் யோசித்துப் பார்... நீயும் அழகு... நானும் அழகு... நீயும் வசதியானவன்... நானும் வசதியானவள்... இதைவிட வேறு என்ன வேணும் டியர். என் அப்பாகிட்ட நான் ஏற்கெனவே சொல்லிச் சம்மதம் வாங்கிட்டேன். உங்க அப்பா பேர் சொன்னதுமே அவர் ஓ.கே.ன்னு சொல்லிட்டார்.

“ஒரே ஸ்டேட்டஸ்... தயவுசெய்து சரி என்று சொல்லு டியர்...” என்று அவனைப் புகழோ புகழென்று புகழ...

சரி என்ன... தவறு என்ன என்று பிரித்துப் பார்க்கத் தெரியாத, பக்குவமில்லாத அர்ஜுன் அன்று அவளிடம் சரணடைந்தான். அவள் காதலை ஆமோதித்தான். காதல் என்பது மனதோடு மனது கலக்கும் சங்கமம். நீ இவ்வளவு... நான் இவ்வளவு என்று எடை போடும்

விஷயமல்ல. அப்படி வந்தால் அது சுயநலம். காதல் அல்ல... அன்று அவனுக்குப் பெண்களையும் புரிய வில்லை. மினியின் சுயநலமும் புரியவில்லை. காதலையும் புரியவில்லை.

ஹார்மோன்களின் விளையாட்டுகளுக்கு அடிமை யாகிப் போனான்.

படிப்பு முடிந்ததும் மினியை வீட்டிற்கு அழைத்து வந்து விஷயத்தைக் கூற, வேதாதான் அதிர்ந்து போனாள்.

மினியின் அரைகுறை ஆடையும் கீச்சுக் குரலும்... மயக்கும் விழிகள்... எதையுமே அவளுக்குப் பிடிக்க வில்லை. ஆனால் ஹரிஹரனோ, "வெரி குட் மை சன். எனக்கு மினியை ரொம்பப் பிடிச்சிருக்கு. நானே தேடினாலும் இந்த மாதிரி மருமகள் எனக்குக் கிடைக்க மாட்டாள்..." என்று கூறிவிட்டு, மினியிடம், "அப்பா கிட்ட சொல்லி எப்போ வசதின்னு கேட்டுச் சொல்லும்மா. நாங்க டெல்லிக்கு வந்து மிச்சப் பேச்சுவார்த்தை நடத்துறோம்..." என்று கூற,

அர்ஜுன் இன்ப மேலீட்டில் தன் தந்தையை அணைத்துக் கொண்டான். "டாட்... ரொம்ப நன்றி. ஐ லவ் யூ டாட். நான் நினைத்துக் கூடப் பார்க்கலை..." என்று கூத்தாடி விட்டு, வேதாவைப் பெயருக்குக் கூட ஒரு வார்த்தை கேளாமல்... மினியைக் கொண்டு விடச் செல்ல... அவனையே ஒரு விஷப் பார்வை பார்த்துக் கொண்டிருந்தார் ஹரிஹரன்.

அவன் மினியை விட்டு விட்டு வீட்டிற்கு வர... வேதா ஹரிஹரனிடம் சண்டை பிடித்துக் கொண்டிருந்தாள்.

“என்னங்க... கொஞ்சம் யோசிங்க. அந்தப் பொண்ணு பார்த்தால்... நம்ம குடும்பத்துக்கு ஒத்து வருவாள்னு தோணலை... அதுவும் இல்லாமல் அவன் கொஞ்சம் பக்குவமில்லாதவன். அவசரப்பட்டு இப்போ எதுக்குக் கல்யாணம்? இப்போதானே படிப்பு முடிஞ்சிருக்கு. கொஞ்ச நாள் போகட்டுமே... வேலை ஏதாவது பார்த்தால்...” என்று கூறுவதற்குள் ஹரிஹரன் எகிறினார்.

“வேதா, நீ அறிவோடதான் பேசுறியா? அவன் எதுக்கு வேலைக்குப் போகணும்... நம்மகிட்ட இல்லாத கம்பெனியா? பணமா? ஏன் வேதா உனக்குக் கொஞ்சம் கூட நம்பிக்கை வராதா அர்ஜுன் மேல...” என்று கத்த,

அப்போது வந்த அர்ஜுனும், “சரியாச் சொன்னீங் கப்பா. அம்மாவுக்கு எப்பவுமே என் மேல் நம்பிக்கை கிடையாது. நான் எப்பவுமே ஒரு படி கீழ்தான் அம்மாவுக்கு...” என்று அவனும் கத்த... ஹரிஹரனும் அவளைப் பொரிந்து தள்ளினார்.

அப்போதுதான் பள்ளி முடித்து வந்த யாழினி, தன் அப்பாவும் அண்ணனும் தன் தாயைத் திட்டிக் கொண் டிருப்பதைப் பார்த்து, “அப்பா... அண்ணா... ஏன் அம்மாவைத் திட்டுறீங்க? அம்மா, ஏம்மா அழுகிற?” என்று வாஞ்சையாகக் கேட்டவாறே, தன் தாயின் கண்ணீரைத் துடைக்க...

ஹரிஹரன், “யாழி... நீ உள்ளே போ...” என்று அதட்ட,

யாழினி, "நான் ஏன் போகணும்? நான் அம்மா கூடத்தான் இருப்பேன்..." என்று அடம் பிடிக்க,

வேதா தன் மகளின் அன்பில் நெகிழ்ந்தாலும், "யாழி... நீ உள்ளே போடா. கொஞ்ச நேரத்தில் அம்மா வர்றேன்..." என்று கூற,

யாழினி, "ம்ஹும்... இவங்க உன்னைத் திட்டுவாங்க அம்மா..." என்று மறுக்க,

வேதா, "இல்லடா... நீ உள்ளே போம்மா. நான் வர்றேன்..." என்று வற்புறுத்தி அனுப்பி வைத்து, ஹரிஹரனிடம், "நான் இப்போ என்னங்க சொல் லிட்டேன்... அந்தப் பொண்ணுகிட்ட ஏதோ கபடம் இருக் குங்க. அதான்... நான் போய் அர்ஜுனைக் கீழா நினைப்பேனா?" என்று தழுதழுக்க...

அர்ஜுன் இப்போது, "ஆமா. எப்பவும் உனக்கு என்மேல் நம்பிக்கை இருந்ததே இல்லை. என் மேல் உனக்குப் பாசம் இல்லை. இல்லன்னா... அன்னைக்கு ஆற்றில் விழுந்து ஷர்மிளா ஆன்ட்டி செத்தப்போ, 'இவனைக் காப்பாத்தணும்னு உனக்கு என்ன தலை யெழுத்து'ன்னு கேட்டிருப்பியா? நான் இன்னும் அதெல்லாம் மறக்கலை..." என்று தான் இதுவரை மனத்தில் வைத்திருந்த விஷயத்தை வெளியிட... வேதவல்லி மிகவும் அதிர்ந்துதான் போனாள்.

"என்ன சொல்றே அர்ஜுன்... நான் போய் உன்னை... அன்னைக்கு நான் என்ன பேசினேன்னு எனக்கே நினைவு இல்லையேடா. நீ தப்பா..." என்று கூறி முடிப்பதற்குள்,

முகத்தில் வெறுப்பும் எரிச்சலும் உமிழ... "வாயை மூடும்மா. உன்னைப் பத்தி எனக்குச் சின்ன வயசிலயே தெரியும். ஆமா, நான் தெரியாமல்தான் கேட்கிறேன். என்னை நீதான் பெத்தியா? இல்லை, குப்பைத் தொட்டியில் இருந்து எடுத்து வந்தியா?" என்று நெஞ்சே அதிரும் வார்த்தைகளைக் கூற, வேதாவிற்குத் தன் இதயம் வெடித்துச் சிதறுவது போல் வலிக்க ஆரம்பித்தது.

தான் பெற்ற மகன் கூற... எதையெல்லாம் கேட்கக் கூடாதோ அதை எல்லாம் கேட்டவள் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு மயங்கி விழ, அவ்வளவு நேரம் அவள் மனதை நோகடித்துக் கொண்டிருந்தவன்... அவள் கீழே விழுந் ததைப் பார்த்து, "அம்மாஆஆஆ..." என்று அலறினான்.

டாக்டர்கள் கையை விரித்து விட்டனர். இப்போ தைக்கு அவரைக் காப்பாற்றி விட்டாலும் அவள் ஆயுட்காலம் ஐந்தோ ஆறோ மாதங்கள்தானாம். ஹார்ட் அட்டாக்குடன் உச்சகட்ட அதிர்ச்சியில் மூளைக்குச் செல்லும் ரத்தக் குழாய் வேறு வெடித்து விட்டதால் கோமாவிற்குச் சென்று விட்டாள் வேதா.

ஒரு சில மாதங்கள் என்ன செய்வதென்றே யாருக்கும் புரியவில்லை. அர்ஜுன்தான், அம்மா... அம்மா... என்று அரற்றினான்.

ஹரிஹரனே கூடத் தேறிவிட்டார். ஆனால் அர்ஜுனால் இதை ஜீரணிக்கவே முடியவில்லை. அது தான் அவனுக்கு விழுந்த முதல் அடி. யாழினிதான் அர்ஜுனுக்குத் தைரியம் கூறவேண்டி ஆனது. "அண்ணா,

அழாதேண்ணா... அம்மா கண்டிப்பா குணமாகிடுவாங்க. அழாதே..." என்று அந்தப் பதினைந்து வயதுப் பேதை அவனைச் சமாதானப்படுத்த....

அவனோ அவளை அணைத்துக் கொண்டு, "எனக்குப் பயமாயிருக்கு யாழி... நான் தப்புப் பண்ணிட் டேன் யாழி... அம்மாவை அப்படிப் பேசியிருக்கக் கூடாது. எனக்குப் பயமாயிருக்கு யாழி..." என்று அரற்ற...

யாழினி மெதுவாகத் தன் அண்ணனின் கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, அவனுடன் ஒன்றினாள்.

உயிர் வாழ்வதற்கு அடையாளமாக மூச்சு மட்டும் விட்டுக் கொண்டு, வேறு எந்தவித அசைவும் இல்லாத தன் அன்னையைப் பார்க்கப் பார்க்க அவனுக்கு மனதை அறுத்தது.

"அம்மா, என்னால்தான் நீ இப்படி ஆயிட்டியா? என்னைத் தயவு செய்து மன்னிச்சிடு. நீ இவ்வளவு சீக்கிரம் என்னை விட்டுப் போவேனு நான் கனவில் கூட நினைச்சதில்லையே... அய்யோ... எழுந்து வா. உன் காலில் விழுறேன். எழுந்து வாம்மா!" என்று கால்களையே பற்றிக் கொண்டு கிடப்பான்.

மினி கூட இரண்டு தடவை பேருக்கு வந்துவிட்டு அவனைத் தன்னுடன் அழைத்துச் செல்ல எவ்வளவோ முயன்றாள்.

அவனோ, "இல்லை மினி... நான் எங்க அம்மா கூட இது நாள்வரை இருந்ததே இல்லை. அவங்க

சாகும்போதாவது நான் கூட இருக்கணும். அவங்களுக்கு இப்படி ஆனதுக்குக் காரணம் நான்தான் மினி. என்னைக் கொஞ்ச நாளைக்குத் தொந்தரவு செய்யாதே!" என்று கூறிவிட, அவளும் தோளைக் குலுக்கிக் கொண்டு சென்று விட்டாள்.

ஹரிஹரன் கூட எவ்வளவோ அவனைத் தேற்ற முயன்றார். ஆனால் முடியவில்லை. ஹரிஹரனால் வீட்டு நிர்வாகத்தைத் தனியே பார்த்துக் கொள்ள முடியவில்லை. அர்ஜுனும் எல்லா நேரமும் தன் தாயுடனே இருந்ததால் தன் ஒன்றுவிட்ட தங்கையான செண்பகத்தைக் கூடவே வைத்துக் கொண்டார்.

அவள் ஒரு விதவை. கிட்டத்தட்ட ஐம்பது வயது இருக்கும். அவள்தான் யாழினியின் பொறுப்பை எடுத்துக் கொண்டு இன்றுவரை வீட்டை நல்லபடியாகப் பார்த்துக் கொண்டிருக்கிறாள். கொஞ்சம் அடாவடியாகப் பேசினாலும், தன் அண்ணன் குடும்பத்தைத் தன் குடும்பமாகப் பார்த்துக் கொள்பவள்.

இப்படியாக ஒரு ஐந்து மாதங்கள் கடந்தன.

ஒரு நாள் அர்ஜுன் வேதாவின் தலைமாட்டில் அமர்ந்து, அவளுக்குத் தன் வழக்கம்போல் ராமாயணம் படித்துக் கொண்டிருந்தான். அப்போது வேதாவின் கால்களில் மெல்லிய அசைவு தெரிந்தது போல் இருந்தது.

அர்ஜுன் பதறிப் பார்க்க... லேசாக வேதாவின் கண்கள் திறந்தன. "அர்...அர்...அர்ஜுன்..." என்று அவளின் உதடுகள் அசைய... அர்ஜுனால் நம்பவே முடியவில்லை.

"அம்மா... அம்மா... நான்தாம்மா... அம்மா, நான் பேசுறது கேட்குதாம்மா... அய்யோ... அத்தை... யாழி எல்லாரும் வாங்க..." என்று கத்த, அவர்களும் மேலே ஓடி வந்து ஆச்சரியப்பட்டனர்.

ஆனால், மனதின் ஓரத்தில் அவர்களுக்கு இது அணையப் போகிற விளக்கின் கடைசி வெளிச்சமோ என்றும் ஒரு பயம் தோன்றியது.

அர்ஜுன் அவள் கன்னத்தை லேசாகப் பற்றி, "அம்மா, என்னை மன்னிச்சிடும்மா. நான் தெரியாமல் பேசிட்டேன்மா... நீ சொன்ன மாதிரி எனக்குப் பக்குவமே இல்லை. கோவிச்சுக்காதேம்மா... ப்ளீஸ்!" என்று கெஞ்ச,

அவன் கையை லேசாகப் பற்றியவள், தன் மூச்சுப்பையை எடுத்து, "இல்... இல்லடா. உன்னை ஏன் கோவிச்சிக்கணும்... எ... என்னைப் புரிஞ்சிக்கிட்டா... அ... அதுவே போதும். நான் உன்னை எப்பவும் கீழா நினைச்சதில்லை, அர்ஜுன். எனக்கு எப்பவும் நீதான் முதல்..." என்று கூற,

அர்ஜுன், "அம்மா... எனக்குப் புரிஞ்சதும்மா. நல்லாவே புரிஞ்சிடுச்சு. நீ என்ன சொல்றியோ, அதைக் கேட்கிறேன்ம்மா... மினியைக் கல்யாணம் செய்துக்க வேணாமா... நான் செய்துக்கலை. ஆனா அதுக்காக இப்படி என்னைப் பயமுறுத்திட்டியேம்மா... எல்லாம் என்னால்தானே!" என்று ஏதேதோ பேசிக் கொண்டே போக...

"உன் மேல்... உன் மேல எந்தத் தப்புமில்லை அர்ஜுன்... எனக்குக் கொஞ்ச நாளாவே உடம்பு சரி

யில்லை. டாக்டர்கிட்ட போனேன். அவர் மூளையில் ஏதோ பிர...பிரச்சினைன்னு சொன்னார். நான்தான் கண்டுக்காமல் விட்டுட்டேன். அ...அதான். என்னை மன்னிச்சிடு. உன... உனக்கு மினியை ரொம்பப் பிடிச்சிருந்தா... கல்... கல்யாணம் செய்துக்கோ!" என்று திணறலுடன் கூற,

அர்ஜுன் பதறினான். "அம்மா, என்ன சொல்றே? உனக்கு முன்னாடியே தெரியுமா? ஏம்மா சொல்லலை? உன்னைக் காப்பாத்தி இருப்பேனே அம்மா... அய்யோ! என்னைப் பாவி ஆக்கிட்டியேம்மா!" என்று கதற, அங்கிருந்த அனைவருக்குமே கண்ணீர் பெருகியது.

யாழினி அருகில் வந்து வேதாவின் கையைப் பிடித்துக் கொள்ள... அவள், "ய...யாழி... அண்ணன் சொல்றதைக் கேட்கணும். சரியா?" என்று கூற, யாழியும் கண்ணீருடன் தலையாட்ட...

அர்ஜுன், "என்னம்மா... என்னவோ பேசறே... நீ சரியாகிடுவேம்மா... உனக்குத்தான் நினைவு திரும்பிடுச்சேம்மா..." என்று கூற,

அதற்குள் அவளின் கண்கள் செருக ஆரம்பித்தன. அவனுக்குப் புரிந்தது. தன் தாய் தன்னை விட்டுப் போகப் போகிறாள் என்பது. இருந்தாலும் தன் குற்றவுணர்வை எல்லாம் தீர்க்க... தன் இறுதி நேரத்திலும் கண்விழித்த தாய்க்குத் தான் என்ன செய்தால் ஆகும் என்று மறுக...

அவளிடம், "அம்மா... என்னைக் கடைசியா ஒரு வாட்டி கண்ணானு கூப்பிடும்மா. எனக்கு ஆசையா இருக்கும்மா. நீ கூப்பிட்டப்போ எல்லாம் மறுத்தேன்.

இப்போதான் அதோட அருமை தெரியுது. அம்மா... ப்ளீஸ்ம்மா...” என்று கதற,

வேதா அந்த நேரத்திலும் ஒரு சிறு புன்னகையுடன் தன் மனமார அவனைக் “கண்ணா...” என்று அழைத்த தோடு, தன் இறுதி மூச்சை நிறுத்த... அங்கிருந்த அனைவரும் கதறலுடன் அவள் மேல் விழுந்து அழுதனர்.

என்னதான் மகன் தாய் மனதை அறுக்கும் கொடூரனாக இருந்தாலும் தாய் மனது அவனை வெறுக் காது. அதே போல்தான் வேதாவும். தான் இவ்வுலகத்தை விட்டுச் செல்லும் இறுதி வினாடிகளில் கூடத் தன் மகனைக் கண்டு களிப்புற்று அவன் குற்றவுணர்ச்சியைச் சற்றே குறைத்து விட்டு நீங்கினாள். ஆனால் அது அவனின் குற்றவுணர்ச்சியை அதிகமாக்கியதே தவிர, குறைக்கவில்லை.

தாய் இருக்கும்வரை அவளின் அருமை புரியாமல் வளர்ந்தவன், அவள் நீங்கியதும் அந்தத் தனிமையை மிகவும் வெறுத்தான். ஹரிஹரனும் சற்றே உடைந்து போனாலும் நாளாக ஆகத் தேறிவிட்டார். அதைப் பார்த்து அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது.

“அப்பா... உங்களால எப்படிப்பா எல்லாத்தில் இருந்தும் சட்டென்று வெளிவர முடியுது? என்னால் முடியலையேப்பா...!” என்று அழுதுகொண்டே, அவரிடம் கேட்க,

அவர் உணர்ச்சியற்ற முகத்துடன், “நான் ஒரு வியாபாரி அர்ஜுன்... ஏற்ற இறக்கம் என் தொழிலில்

மட்டுமல்ல, வாழ்க்கையிலும் சகஜம்தான்..." என்று கூறி விட்டுத் தன் வேலையைப் பார்க்கச் சென்றுவிட்டார்.

ஏனோ அர்ஜுனால் அதிலிருந்து வெளிவரவே முடியவில்லை.

அவனுக்கு அவன் தாய் கடைசியாகக் கூறிய கண்ணா என்ற வார்த்தை மட்டும்தான் ரீங்காரமிட்டுக் கொண்டே இருந்தது.

ஆனால் அவனின் குமைச்சலில் இருந்து வெளிவர மிகவும் உதவியது... யாழினியும் செண்பகமும்தான்.

செண்பகம்தான் அடாவடியாக, "ஏய், அண்ணன் மவனே... இப்படியே பொம்பளை கணக்கா முட்டுக் கட்டிட்டு இருந்தால் எல்லாம் சரியாகிடுமா... நீயும் உங்க அம்மா கூடவே போயிடலாம்னு முடிவுல இருக்கிறியோ... கூமுட்டை... வாடா. இந்தத் தோட்டத்துக்குத் தண்ணி ஊத்து. காய்கறியெல்லாம் வெட்டு..." என்று அவனைச் சிறு சிறு வேலைகள் வாங்கி அவனைச் சோகத்திலிருந்து மீட்டாள்.

முதலில் அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. அதன் பிறகுதான் அவளின் பாசம் புரிய, அவனும் அவளுடனே ஒன்றித் தன் கவலைகளில் இருந்து தன்னை மீட்டான்.

யாழினியும், "அம்மா... அம்மா..." என்று கத்தியவள், இப்போது, "அண்ணா... அத்தை..." என்று அழைக்க மாறியிருந்தாள்.

இப்படியே மூன்று மாதங்கள் அமைதியாகச் சென்றன.

அன்று அர்ஜுனின் 25ஆவது பிறந்த நாள். காலையில் இருந்தே அவனுக்குத் தாயின் நினைப்பும் இன்று ஏதோ தவறாக நடக்கப் போவதாக உள்ளுணர்வும் கூறிக் கொண்டே இருந்தது.

அதே போல் நடந்தது.

காலையில் குளித்து விட்டுத் தாயை வணங்கிவிட்டு அவன் வெளியே வர, அங்கே குடும்ப வக்கீல் ராஜராஜன் முன்னிலையில் ஹரிஹரன், யாழினி, செண்பகம் அனைவரும் குழுமியிருந்தனர்.

ஹரிஹரன் அமைதியாகத் தன் பைப்பைப் புகைத்துக் கொண்டு அமர்ந்திருக்க... அவரின் அசாத்திய இறுக்கத்தையும் முகத்தில் தெரியும் ஒருவிதக் குரோதத் தையும் அவன் இன்றுவரை பார்த்ததில்லை. அவர் அவன் வந்ததை அறிந்து வக்கீலைப் பார்த்துக் கண் ஜாடை காண்பிக்க... அவரும் தொண்டையைச் செருமிக் கொண்டு ஆரம்பித்தார்.

"அர்ஜுன்... வா. உனக்காகத்தான் நாங்க வெயிட் பண்றோம். உங்கப்பா... சாரி! ஹரிஹரன் உயில் எழுதி யிருக்கார். அதை எல்லார் முன்னிலையிலும் படிச்சுக் காட்ட விருப்பப்படுறார். அதான் நான் இங்கே வந்திருக் கேன்..." என்று கூற,

அர்ஜுன் பதற்றத்துடன், "என்னப்பா... இப்ப உயிலுக்கென்ன? இதெல்லாம் ஒண்ணும் வேணாம்ப்பா. நீங்களும் அம்மா மாதிரி ஏதாவது நோயை மறைக்கிறீங் களாப்பா?" என்று உண்மையான பாசத்தில் கேட்க...

ஹரிஹரன் அவனை நக்கலாகப் பார்த்து ஒரு ஏளனச் சிரிப்புடன் வக்கீலைப் பார்த்துக் கண் ஜாடை காட்ட...

வக்கீல் சிறு தலையாட்டலுடன் உயிலைப் படிக்க ஆரம்பித்தார். அதைப் படிக்கப் படிக்க அங்கிருந்தவர்கள் அனைவரையும் அதிர்ச்சி சரமாரியாகத் தாக்கியது.

செண்பகமே ஆடித்தான் போனாள். யாழினிக்கோ தெளிவாக எதுவும் புரியாவிட்டாலும், தன் அண்ணனிற்கு எதிரான விஷயம் என்று புரிந்தது.

ஆம். எதிரானதுதான். தன் சொத்துகள் முழுவதையும் அனுபவிக்கும் உரிமை எல்லாம் யாழினிக்கும் அவள் சந்ததிக்கும் என்று எழுதியிருந்தார் ஹரிஹரன்.

தான் இருக்கும்வரை இது செல்லாது என்றும், தான் இறந்த பிறகுதான் யாழினிக்கு இந்தச் சொத்துகள் முழுவதுமாகச் சேரும் என்றும், மேலும் அர்ஜுன் தன் மகன் இல்லாததால்... அவன் வாழ்விற்கு ஏற்ப சிறு தொகையை மாதா மாதம் யாழினியிடம் பெற்றுக் கொள்ளுமாறும்... அது முடியாத பட்சத்தில் இந்த வீட்டை விட்டு நீங்க வேண்டுமென்றும் அந்த உயிலில் கூறப்பட்டிருந்தது. உயிலைப் படித்து விட்டு வக்கீல் சென்றுவிட, அங்கே மயான அமைதி நிலவியது.

அர்ஜுனிற்கு ஒன்றுமே புரியவில்லை.

முதலில் அவன் கேலிக்காகச் செய்வதோ என்று கூட நினைத்தான். ஆனால் அவரின் முகம் அது நூற்றுக்கு நூறு உண்மை என்று கூற... அர்ஜுன் நொறுங்கிப் போனான்.

அவனுக்குப் பணம், சொத்து இதெல்லாம் தனக்கு இல்லை என்பது கூடப் பெரிதாகத் தெரியவில்லை. ஆனால், 'அப்பா...' அவர் என்னுடைய அப்பா இல்லையா? அந்தச் செய்திதான் அவனை மிகவும் நொறுக்கியது.

இவ்வளவு தந்திரமாக ஒருவரால் யோசிக்க முடியுமா என்று அங்குள்ள அனைவருக்கும் ஆச்சரியமாகத்தான் இருந்தது.

செண்பகம், "ஏண்ணே... உனக்குக் கிறுக்கு முத்திப் போச்சா? அர்ஜுன் உன் மவன் இல்லைன்னு எனக்கே மறந்து போச்சு. ஆனால் நீ இப்படி அவனைத் தத்தளிக்க விட்டுட்டியே அண்ணே..." என்று தன் வழக்கமான அடாவடித்தனம் மீறிக் கதறினாள்.

"ஏண்ணே... அவனுக்கு நீதானே எல்லாம். அப்பா... அப்பான்னு உயிரை விடுவானே. அது பச்சை மண்ணாச் சேண்ணே... இப்போதான் அம்மாவை இழந்துச்சு. அதுக்குள்ள அந்த உண்மையைச் சொல்லி அப்பனும் இல்லைன்னு அவனைக் கைவிட்டுட்டியா? நீ அவங்க அம்மாவுக்கு வாழ்க்கை கொடுக்கும்போது உன்னைப் பெரிசா நினைச்சேனே... நீ இவ்ளோ கீழாப் போயிட்டியே... இல்லை, நீ இவ்ளோ சீக்கிரம் மாறியிருக்க மாட்டே... அப்போ அவன் உன்னிடம் வரும்பொழுதே வஞ்சம் வைச்சு இவ்ளோ வருசம் அவனை நம்ப வச்சு நடிச்சிருக்கே. அய்யோ! அப்படி அந்தப் பிள்ளையைக் கருவறுத்திட்டியே... அண்ணே!" என்று கண்ணீருடன் கத்த... ஹரிஹரன் தன் முகத்தில் அதே குரோதம் மின்ன அமர்ந்திருந்தார். ஆம் கருவறுத்தல்தான்.

அர்ஜுனை இவ்வளவு காலம் நம்ப வைத்து அவனுக்குப் பணத்தாசை காட்டி அவனிடம் ஆணவத்தை வளர்த்துப் பிறகு, அவனைப் பரதேசியாகத் திரியவிட்டால் தான் அவன் துன்பப்படுவான் என்று நினைத்துத்தான் தகுந்த நாட்களுக்காகக் காத்திருந்தார். அது இன்று வரவே அதைச் செயல்படுத்தி விட்டார்.

ஆனால் ஏன் எதற்காக இந்தப் பகை? ஏன் இந்தக் குரோதம்...? பார்ப்போம்.

அர்ஜுன் சிறிது நேரம் மரக்கட்டை போல் இருந்தான். பின் மெதுவாக எழுந்து வந்து, தன் தந்தை... இல்லையில்லை ஹரிஹரன் அமர்ந்திருந்த நாற்காலியில் அவர் காலருகில் அமர்ந்து, அவர் கையைப் பிடித்து, "அப்பா... அத்தை என்னவோ சொல்றாங்க. அது உண்மையா? நான் உங்க மகனில்லையா அப்பா...? உண்மையைச் சொல்லுங்க அப்பா... எனக்கு இந்தச் சொத்து, கார், பங்களா இதெல்லாம் கூட வேணாம்ப்பா... ஆனால், நீங்க என் அப்பா இல்லைன்னு சொல்றாங்க. அது மட்டும் உண்மை இல்லைன்னு சொல்லுங்கப்பா. என்னைப் பழி வாங்கிட்டீங்கன்னு சொல்றாங்க. உங்களால் என்னைப் பழிவாங்க முடியுமா அப்பா?" என்று அவரை உலுக்க... சிறிது நேரம் மௌனம் காத்த அவர் தன் வாயைத் திறந்தார்.

"முடியும் அர்ஜுன்... என்னால் உன்னைப் பழி வாங்க முடியும். நானும் வாங்கிட்டேன். இது நீ பண்ண தப்புக்காக இல்லை. உன் அப்பா செய்த துரோகத் துக்காக..." என்று உணர்ச்சியற்ற குரலில் கூற,

அர்ஜுன் அவரை நம்ப முடியாமல் பார்க்க... அவர், “இன்னும் நம்பலையா? நான் உன் அப்பா இல்லைன்னு... சரி. உன் பெயர் என்ன?” என்று கேட்டார்.

அர்ஜுன் அவரைப் புரியாத பார்வையில், “அர்ஜுன்...அ...” அப்பா என்றழைக்க வந்தவன் நின்றுவிட...

அவர் அழுத்தமாக, “முழுப்பெயர்?” என்று கேட்க, அவனும் தயங்கி, “அர்ஜுன் விஸ்வநாத்!” என்று பதற்றத்துடன் கூற,

அவர், “நம்ம குடும்பத்தில் எல்லாருக்கும் ஒற்றைப் பெயர்தான். உனக்கு மட்டும் ஏன் இரண்டு பெயர் என்று அடிக்கடி கேட்பியே... அது உங்க அப்பா குடும்பத்துப் பெயர். உங்கப்பா பெயர்தான் விஸ்வநாத். ஒருகாலத்தில் என் நண்பன் என்ற பெயரில் வந்த துரோகி...” என்று கண்களில் பகை மின்னக் கூற...

அர்ஜுனிற்கு மூச்சே நின்றுவிடும் போல அதிர்ச்சி தாக்கியது.

## 17

குங்குமம் கொண்டு வரும் - கண்ணன்
குழைத்து மார்பெழுத
சங்கையி லாதபணம் - தந்தே
தழுவி மையல் செய்யும்;
பங்கமொன் றில்லாமல் - முகம்
பார்த்திருந் தாற்போதும்;

மங்களமாகுமடீ - பின்னோர்
வருத்த மில்லையடீ...

**ஹ**ரிஹரன் கூறியதைக் கேட்டதும் அர்ஜுனிற்குத் தான் இந்த உலகில் இருக்கிறோமா இல்லை செத்துப் பரலோகம் போய்விட்டோமா என்றே இருந்தது. அந்த அளவிற்கு அவன் உணர்வுகளும் புலன்களும் ஒவ் வொன்றாக மரத்து வந்தன. இவ்வளவு நாள் தன் பெயர் கூடத் தான் தந்தை என்று கொண்டாடித் திரிந்தவருக்குச் சொந்தமானதில்லை என்று தெரியும்போது, மனிதனாகப் பிறந்த அனைவருக்குமே அத்தகைய நிலை வரலாம்.

இது அர்ஜுனிற்கு விழுந்த இரண்டாவது மரண அடி. அவன் தாய் இறந்ததைக் கூடச் சற்றே விழுங்கிக் கொண்டு வெளிவர முடிந்தது. ஆனால் இதை...?

ஆனால் ஹரிஹரன் அதோடு அவனை விட வில்லை. அவருக்குத் தன் வெற்றியை நிலைநாட்டியே தீரவேண்டுமென்பதால் அர்ஜுனை மேலும் சொற்களால் கிழிக்கத் துவங்கினார்.

ஆம். செத்த பாம்பை மேலும் மேலும் அடித்துப் பிய்க்க ஆரம்பித்தார்.

“என்ன அர்ஜுன்... உன் பேர் கூட எனக்குச் சொந்தமானது இல்லையே... இவ்வளவு நாள் நம்மளைச் சீராட்டி வளர்த்தானேனு பார்க்கிறியா? உன் பெயரை நான் ஏன் மாத்தலைன்னு தெரியுமா? அந்தப் பேரைக் கேட்கும்போதெல்லாம் உன் அப்பா செஞ்ச துரோகம்

எனக்கு ஞாபகம் வரும். அதுதான் இத்தனை வருசத்தையும் என்னை வெறியோட இருக்க வைச்சது.

"உங்க அம்மா கூடக் கேட்டாள், பேரை மாத்திக்கலாம்னு. ஆனால் அவள்கிட்ட காரணம் சொல்லி ஏமாத்த எனக்கா தெரியாது. இவ்வளவு வருசம் நான் உன்னைக் கெடுக்கிறேன்னு தெரிஞ்சும் என் மேல் நம்பிக்கை வைத்தவளாச்சே உங்கம்மா.

"அது மட்டுமில்லை, அர்ஜுன்... நீ அப்படியே உங்கப்பா ஜாடைதான். நீ கூட கேட்பே. ஞாபகம் இருக்கா? ஏன்ப்பா என் முகத்தையே பார்க்கிறீங்க... உங்களுக்கு வேற வேலையே இல்லையான்னு? எனக்கு அதைத் தவிர என்ன வேலை அர்ஜுன்...? உன் அப்பனையே உரிச்சு வைச்சுக்கிட்டு பொறந்திருக்கிற உன்னைப் பழி வாங்கிறதை விட...!" என்று முகத்தில் வெறுப்புப் படரக் கூற, அர்ஜுன் கொஞ்சம் கொஞ்சமாகச் செத்துக் கொண்டிருந்தான்.

ஆனாலும் ஹரிஹரன் விடவில்லை. "இப்ப என்ன பண்றதா இருக்கே அர்ஜுன்...? எல்லாமே நான் செத்ததுக்கு அப்புறம் உன் தங்கச்சிக்குத்தான். இப்போதைக்கு வேணா நான் அனுபவிக்கலாம். சரி... என்ன பண்றதா இருக்கே... மாசா மாசம் ஒரு தொகையை வாங்கிக்கிறியா? இல்லை, வீட்டை விட்டுப் போறியா? ஏன்னா உனக்கும் 25 வயசு ஆச்சு பாரு... எவ்வளவு நாள் உன்னை வைச்சுச் சோறு போடுறது...?" என்று நக்கலாகக் கேட்க,

அவன் அவரை அடிபட்ட பார்வை பார்த்தான். பின், "நான் நீங்க கொடுக்கிற பணத்தை வாங்குவேன்னு

நினைக்கிறீங்களா அப்...? சாரி மிஸ்டர் ஹரிஹரன்..." என்று அப்போதும் அப்பா என்று அழைக்க வந்த தன் நாக்கை வெட்டி அறுத்துவிடலாமா என்று கூட அவனுக்குத் தோன்றியது.

அதை அவன் முகத்தில் இருந்து அறிந்த ஹரி ஹரன், "பரவாயில்லை அர்ஜுன்... அப்பா என்றுதான் கூப்பிட வரும். அதுவும் கொஞ்ச நாட்களில் மறந்துடும். ஆனால் ஒண்ணு, அர்ஜுன்... நீ அப்பா அப்பான்னு கூப்பிடும்போதெல்லாம் எனக்கு அடங்காத எரிச்சல் வரும். அந்தக் கவலை இனி இல்லை. அதுக்கு இந்த மிஸ்டர் ஹரிஹரன் எவ்வளவோ பரவாயில்லை. ஆனால், அர்ஜுன்... நீ ரொம்பத் தைரியசாலி. இவ்வளவு சீக்கிரம் தெளிய ஆரம்பிச்சிடுவேனு நான் நினைக்கலை. ஓ.கே. நான் நினைச்சது மாதிரிப் பணம் வாங்க மாட்டேனு சொல்லிட்டே... சரி, எப்போ வீட்டை விட்டுக் கிளம்பப் போறே?" என்று கேட்க, அர்ஜுன் அவரை வெறுப்பாக முறைத்தான்.

"என்ன அர்ஜுன்... இதெல்லாம் நானே சம்பாதிச்ச சொத்துப்பா... அதுவும் இல்லாமல் நான் உனக்கு ஸ்டெப்-ஃபாதர் தான். உனக்குச் சொத்து தர நான்தான் முடிவு பண்ணணும். ஆனா சட்டத்தில் நிறைய ஓட்டை இருக்கு. உனக்கு ஏதோ கொஞ்சம் கிடைச்சாலும் கிடைக்கும்..." என்று தெனாவட்டாகக் கூற,

அர்ஜுன், "உங்ககிட்ட இருந்து சல்லிக்காசு எனக்குத் தேவையில்லை. கேஸ் எல்லாம் போட்டு உங்ககிட்ட இருந்து வாங்குற அளவுக்கு நான் இயலாதவன் இல்லை.

என்கிட்ட படிப்பு இருக்கு. தன்னம்பிக்கை இருக்கு. அதை முதலில் ஞாபகம் வச்சிக்கோங்க, மிஸ்டர் ஹரிஹரன்..." என்று கத்தினான்.

அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது. இன்று காலையில் எனக்குச் சொந்தமாக இருந்த அனைவரும் இப்போது எனக்கு எதிராகத் திரும்பி விட்டனரே... அவன் நிலையை நினைத்து வருந்தினாலும் துவண்டு போவதற்கு இப்போது நேரமில்லை என்று நினைத்தான். அதனால் அவனும் பதிலடி கொடுக்க...

ஹரிஹரன் அதற்கெல்லாம் அசருவாரா என்ன! நக்கலாக, "சே... இதில்தான் நான் தப்புப் பண்ணிட்டேன், அர்ஜுன்... உன்னைக் கெடுக்கணும்... படிக்காமல் ஆக்கணும்னு எவ்வளவோ முயற்சி செய்தேன். ஆனால் அது மட்டும் நடக்காமல் போச்சு. உங்கம்மா ஒத்துழைக் கலை. அதுவும் இல்லாமல் நீயும் உன் அப்பனை மாதிரியே புத்திசாலியா பொறந்து தொலைச்சிட்ட...." என்று கூற, அர்ஜுனின் பார்வையில் ஒரு வினாடி மெலிதான சாரலான கர்வம் வந்தது.

ஆனால் அதைக் கண்டுகொண்ட ஹரிஹரனோ, "ரொம்பச் சந்தோஷப்படாதே அர்ஜுன்... படிச்சா மட்டும் வேலை கிடைக்காது. அதுக்கு வேறு சில தகுதிகளும் வேணும். அது உனக்குக் கிடைக்காமல் இருக்க என்ன செய்யணும்னு எனக்குத் தெரியும்..." என்று முகத்தில் ஒருவித மிருகத்தனத்துடன் கூற...

அர்ஜுன் அயர்ந்து போனான். அவரை உலுக்கி, "நான் உங்களுக்கு என்ன செய்தேன்... பொறந்ததில்

இருந்து உங்களைத்தானே எல்லாமாகவும் நம்பி யிருந்தேன். ஏன்... ஏன் இப்படிச் செஞ்சீங்க? என் அப்பா உங்களுக்கு என்ன செய்தார்? அவர் என்ன ஆனார்? அம்மாவை நீங்க ஏன் கல்யாணம் செஞ்சீங்க? ப்ளீஸ்... உங்ககிட்ட இருக்கிற எதுவும் எனக்கு வேணாம். உங்க இனிஷியல் கூடவேணாம். ஆனால் எனக்குக் காரணம் வேணும். நான் ஏன் பழி வாங்கப்பட்டேன் என்பதற்கான காரணம் எனக்குத் தேவை..." என்று கத்த,

ஹரிஹரன், "கவலைப்படாதே, அர்ஜுன்... நான் அந்தக் காரணத்தைக் கண்டிப்பா சொல்வேன். ஏன்னா இவ்வளவு நாள் உன்னைச் சீராட்டிப் பாராட்டி வளர்த்த தற்கான காரணமே உன்னை நிராயுதபாணியாக்கி இதை யெல்லாம் சொல்லணும்னுதானே... அந்த வாய்ப்பை விடுவேனா!" என்று ரௌத்திரப் பார்வையுடன் அர்ஜுனைக் குத்திக் கிழிக்கும் தன் கடந்த காலத்தைக் கூற ஆரம்பித்தார்.

**ஹ**ரிஹரனும் அர்ஜுனின் தந்தை விஸ்வநாதனும் மிக நெருங்கிய நண்பர்கள். சிறு வயதிலிருந்து ஒன்றாகப் படித்து விளையாடி உற்ற தோழர்களாகவே மாறிவிட்டனர்.

மதுரைக்குப் பக்கத்தில் உள்ள கிராமம்தான் அவர்கள் ஊர் என்பதால் அங்கே ஊரில் உள்ள அனைவருக்கும் அவர்களின் நட்புப் பிரசித்தம். ஒரு வகையில் தூரத்து உறவு முறை வேறு. கேட்கவா வேண்டும்? ஆனால் என்னதான் நண்பர்களாக இருந் தாலும் இருவரின் குணங்களும் எதிர் எதிர்த் துருவம்தான்.

ஹரிஹரன் எப்போதும் தான் தன்னுடைய நலம்... அதை மட்டுமே பார்ப்பான். மற்றவர்களைப் பற்றி அவனுக்குக் கவலையில்லை. கர்வம் ஜாஸ்தி. அவன் தந்தை இத்தனைக்கும் தாசில்தார் அலுவலகத்தில் குமாஸ்தாதான். ஆனால், அரசாங்க உத்தியோகம் என்பதால் சற்றே ஆணவம் அதிகம்தான் அவனுக்கு. அவன் ஒன்று கேட்டால் அது நடக்க வேண்டும். அப்படி யாராவது அவனை மதிக்காமல் திரிந்தால் அவ்வளவுதான். வஞ்சம் வைத்துப் பழி வாங்குவான். அது தன்னைப் பெற்ற தகப்பனாக இருந்தாலும்தான்.

ஆனால், விஸ்வநாதனோ பரம சாது. பேசினால் கூடக் கேட்காது. அப்படிப்பட்ட அப்பிராணி. அவன் தந்தை மிகவும் வசதியானவர். வட்டிக்குப் பணம் கொடுத்து வாங்கும் தொழிலைச் செய்து வந்தார். தொழில் என்று வந்தால் பெற்ற மகன் கூடப் பிறகுதான். பணத்திற்குத் தான் முதல் இடம். அன்பு காட்டத் தாயும் இல்லாததாலும்... மேலும் அவரின் கண்டிப்பான வளர்ப்பாலும் தந்தைக்குப் பயந்த பிள்ளையாகவே மாறிப் போனான் விஸ்வநாதன்.

எதிர் எதிர்த் துருவங்கள் ஈர்க்கும் என்பது காதலுக்கு மட்டுமல்ல, சில சமயம் நட்பிற்கும் பொருந்தும். அதே போல் அவர்கள் ஈர்க்கப்பட்டனர்.

அவர்கள் நட்பும் குழந்தைப் பருவத்தைத் தாண்டி வாலிபப் பருவம்வரை நகர்ந்தது.

விஸ்வநாதன் நல்ல புத்திசாலி என்பதால் பி.யூ.சி. முடித்ததும் கல்லூரிப் படிப்பிற்குப் பிறகு அந்தக் காலத் திலேயே வங்கி உத்தியோகம் வீடு தேடி வந்தது. அவன்

பண்பான பேச்சும் நாகரிகமான பேச்சும் நிலையான உத்தியோகமும் அனைவரையும் ஈர்க்க... அவன் தந்தை அவனுக்குப் பெண் பார்க்க ஆரம்பித்தார்.

ஆனால் ஹரிஹரனிற்கு அவ்வளவாகப் படிப்பு ஏறவில்லை. எனவே பி.யூ.சி. முடித்த கையோடு ஒரு கடையில் கணக்கராக வேலைக்குச் சேர்ந்து விட்டான். சற்றே பெரிய கடை என்பதால் சம்பளமும் ஓரளவு நன்றாகவே வந்தது.

இதற்கிடையில் ஹரிஹரனிற்கு அவனின் அத்தை பெண் வேதவல்லியைப் பேசி முடிக்க அவன் பெற்றோர் செல்ல...

வேதவல்லியின் அப்பா வாஞ்சிநாதன், "இதைப் பாரு, கோபாலு... நீ அரசாங்க உத்தியோகத்தில் இருக்க லாம். வாய் நிறையப் பீத்தலாம். ஆனால் உன் பையன் அஞ்சுக்கும் பத்துக்கும் கணக்கு எழுதுகிறவன். அவனுக்கு எப்படி என் பொண்ணைக் கல்யாணம் செய்து கொடுக்கிறது? கொஞ்சமாவது புரிஞ்சுதான் பேசுறியா?" என்று முகத்தில் அடித்த மாதிரிப் பேச... பதிலுக்கு அவர்களும் பேச... விசயம் முற்றிக் கைகலப்பானது. அதை அறிந்த ஹரிஹரனின் மனதில் எரிமலை வெடித்தது. தனக்கு நேர்ந்த மிகப்பெரும் அவமானமாக நினைத்தான்.

எனவே, தன் தந்தையிடம், "அப்பா... நீங்க எதுவும் கவலைப்படாதீங்க. என்னைக்கு இருந்தாலும் வேதவல்லி கழுத்தில் தாலி கட்டப்போறது நான்தான்..." என்று அறை கூவல் விட...

இதை அறிய வந்த வேதவல்லியின் அப்பா வாஞ்சிநாதன் அவன் குணத்தை அறிந்து, அடுத்த முகூர்த்தத்திலேயே ஒரு மாப்பிள்ளையைப் பிடித்து அவளுக்குக் கல்யாணத்தை நடத்தி விட்டார்.

இதை அறிந்த ஹரிஹரன் சிலிர்த்து எழுந்தான். "அவ கழுத்தில் தாலி கட்டினவன் எவனா இருந்தாலும் சரி... அவனைக் கொல்லாமல் விடமாட்டேன்..." என்று கத்திக் கொண்டு மண்டபத்திற்குச் செல்ல... அங்கே அவனுக்கு இன்னொரு அதிர்ச்சி காத்திருந்தது.

ஏனென்றால் வேதவல்லியின் கழுத்தில் தாலி கட்டிக் கொண்டிருந்தது, விஸ்வநாதன்.

கெட்டி மேளம் ஒலிக்க... மூன்று முடிச்சுகளை விஸ்வநாதன் கட்ட, ஹரிஹரனிற்கு ரத்தம் கொதித்தது.

கூடத்தின் நடுவே இருந்து முறைத்துக் கொண் டிருக்க.... எல்லாம் முடிந்து அவனைப் பார்த்த விஸ்வ நாதன், அவனைப் பற்றி அறியாமல் மகிழ்ச்சியுடன் எழுந்து ஓடி வந்தான்.

"டேய் ஹரி... வந்துட்டியா? எனக்கு மனசு பதறிட்டே இருந்ததுடா, நீ வரமாட்டியோன்னு... எனக்கு ரொம்பச் சந்தோஷமா இருக்கு..." என்று அப்பாவியாகக் கூற,

அவனைத் தனியே அழைத்துக் கொண்டு வந்த ஹரி, "ஏய், நீயெல்லாம் ஒரு நண்பன். உன்னைப் போய் நல்லவன்னு நினைச்சேனேடா... அவ என் அத்தை பொண்ணுடா. எனக்குப் பார்த்த பொண்ணு. அவளைப் போய்..." என்று கோபம் தெறிக்கக் கத்த...

விஸ்வநாதன், "ஹரி... எனக்குத் தெரியும்டா... என்னை உனக்குப் பிடிக்காதுன்னு... ஆனால் என்னடா பண்றது? எங்கப்பாவைப் பத்திதான் உனக்குத் தெரியு மில்ல... அவர் என் சம்மதத்தைக்கூடக் கேட்கலைடா. பத்திரிகை கூட அடிக்காமல் சடசடன்னு இந்தக் கல்யாணத்தை முடிச்சிட்டார். எனக்கே இரண்டு நாளைக்கு முன்னாடிதான்டா தெரியும். மெட்ராஸில் இருந்து வந்ததும் என்னை வீட்டுக்குள் அடைச்சுப் போட்டுட்டு உன்னைப் பார்க்கவே விடாமல் செய்துட்டார். இல்லைன்னா..." என்று முடிப்பதற்குள்,

ஹரி கையமர்த்தி, "வாயை மூடு. ஏதோ கூடப் பழகின தோஷத்துக்காக உன்னை உயிரோட விடுறேன். இனிமே என் மூஞ்சியிலேயே முழிக்காதே..." என்று கத்திவிட்டு மண்டபத்தை விட்டுச் செல்ல...

அவனைப் பரிதாபமாகப் பார்த்தான் விஸ்வநாதன்.

பாவம்... அவனும்தான் என்ன செய்வான்? அந்த அப்பாவிக்குத் தன் அப்பாவை எதிர்த்துப் பேசும் தைரியம் இல்லை. அவன் பேச்சை மதிக்கும் பழக்கமும் அவருக்கு இல்லை. நட்பிற்கும் கண்டிப்பிற்கும் இடையில் அவரின் அதிகாரம்தான் ஜெயித்தது. அவனால் தன் நண்பனின் பிரிவைத் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

எனவே அவன் கத்தியது, திட்டியது... அவர்கள் பிரிந்தது... எதைப் பற்றியும் வெளியில் கூறாமல், வேத வல்லியுடனான தன் வாழ்வை ஆரம்பித்தான். தன் கையாலாகாத்தனத்திற்காக அவளைத் தண்டிக்க அவன் விரும்பவில்லை. எனவே அவர்கள் தங்கள் மணவாழ்வில் அடியெடுத்து வைத்தனர்.

திருமண நாளன்றே வேதாவிடம் தெளிவுபடுத்திக் கொண்டான் விஸ்வா. "வேதா! உனக்கு ஹரியை மணக்கலையேனு கஷ்டமில்லையே... இந்தக் கல்யாணத் துல உனக்கு விருப்பம்தானே!" என்று தயங்கித் தயங்கிக் கேட்க... வேதா கலகலவெனச் சிரித்து, "அய்யோ! இல்லைங்க. அவர் என் மாமா பையன். அந்த உறவு முறையில்தான் பழக்கம். மத்தப்படி என் மனசில் அவர் மேல் எந்த அபிப்பிராயமும் இல்லை. என் விஸ்வாதான் எனக்கு இப்போதைக்குக் காதலன், கணவன் எல்லாமே..." என்று கூற, அவளை மையலுடன் அணைத்துக் கொண்டான், விஸ்வா.

ஆனால் ஹரி, அதை லேசில் தன் மனதில் இருந்து அழிக்கவில்லை. சாதாரணமானவனாக இருந்தால் மிஞ்சிப் போனால் ஒரு மாதம்... பிறகு தன் வேலையைப் பார்த்துக் கொண்டு போய் இருப்பான். ஆனால் ஹரிக்குத் தான் மன்னிப்பது என்றால் என்னவென்றே தெரியாதே! மனதில் கொஞ்சம் கொஞ்சமாகத் தன் நண்பன் மீது வஞ்சம் வளர்த்துக் கொண்டே இருந்தான்.

அவனுக்கு வேதாவின் மேல் காதலெல்லாம் இல்லை. ஆனால் அவன் கர்வத்திற்குக் கொடுத்த இழுக் காகத்தான் அதை நினைத்தான். ஏனோ அவனை அவனால் மன்னிக்கவே முடியவில்லை. அதை அதிகரிப்பதுபோல் அடுத்தடுத்துக் காரியங்கள் நடந்தேறின.

ஹரியின் அம்மாவிற்கு உடல்நிலை சரியில்லாது போக... மருத்துவம் பார்த்துப் பெரும் பகுதி செலவாகியது. இதனால் கோபால் விஸ்வாவின் தந்தையிடம் வட்டிக்குப் பணம் வாங்கியிருந்தார்.

சிகிச்சைக்காகக் கட்டிய பணத்தைத் திருப்ப முடியாமல் பெரும்பாடு பட... கோபால் திணறிப் போனார்.

அவரால் என்ன செய்வதென்றே தெரியவில்லை. வாங்கிய பணத்திற்கு வட்டியையும் கட்ட முடியாமல் அசலையும் கட்ட முடியாமல் அவர்கள் திண்டாட...

விஸ்வாவின் தந்தை தன் கறாரக் குணத்தால் அவர்கள் ஈடாக வைத்த வீட்டை விட்டு வெளியேறக் கூற... அவர்கள் துயரத்தில் தத்தளித்தனர். ஒரு கணம் தன் சுயநலம் தலைதூக்க ஹரி ஒரு முடிவுடன் தன் கோபத்தை எல்லாம் மூட்டை கட்டி வைத்து விட்டு மெட்ராஸிற்குச் சென்று, விஸ்வாவிடம் கெஞ்ச... விஸ்வா ஊருக்கு வந்து தன் தந்தையிடம் எவ்வளவோ கெஞ்சினான்.

அவன் தந்தை கேட்கவில்லை. அவன் மாறாகத் தன் நண்பன் கேட்ட உதவிக்காக அவரை எதிர்த்துப் பேசிக் கொண்டே இருக்க... விஸ்வாவின் அப்பா கோபம் தாள முடியாமல் பெல்ட்டை எடுத்து அவனை விளாசி னார்.

அதையும் பொறுத்துக் கொண்ட விஸ்வா, "அப்பா... என்னை இன்னும் நூறு அடி கூட அடிச்சிக்கோங்கப்பா. ஆனால் அவனுக்கு அந்த வீட்டைக் கொடுங்கப்பா..." என்று கெஞ்ச,

அவரோ, "இதைப் பாரு. அது என் தொழில். அதில் நீயே தலையிட்டாலும் உன்னைக் கொல்லக் கூடத் தயங்க மாட்டேன். ஞாபகம் வைச்சிக்கோ..." என்று கர்ஜித்து விட்டுச் சென்று விட்டார்.

தன் இயலாமையை ஹரிஹரனிடம் சொல்ல... அவன் கொஞ்சம் கூடக் காது கொடுத்துக் கேட்கவில்லை.

"நினைச்சேன்டா. நீ இப்படித்தான் வந்து சொல்வேனு நினைச்சேன். ஒரு நிமிஷம் உன்னை நல்லவன், அப்பாவின்னு நினைச்சு உன்கிட்ட உதவி கேட்டேன். நீ முடியாதுன்னு சொல்லியிருந்தால் கூடப் பரவாயில்லை. ஆனால், இப்படி நம்ப வைச்சுக் கழுத்தறுத்துட்டே..." என்று அவனைப் பேசவே விடாமல் தானே கத்திக் கொண்டு சென்று விட்டான்.

விஸ்வாவிற்கு ஆயாசமாக இருந்தது. தன்னைப் புரிந்து கொள்ளவே கூடாது என்று கங்கணம் கட்டிக் கொண்டு இருப்பவனிடம் என்னதான் கூறுவது என்று நினைத்துக் கொண்டு, நடப்பது நடக்கட்டும் என்று விட்டுவிட்டான்.

வீட்டைஇழந்து ஊரை விட்டுப் போகலாம் என்று குடும்பத்துடன் கிளம்பிய ஹரிஹரனின் மனதில் இருந்த தெல்லாம் வெறி... வஞ்சம். பகைதான். மெட்ராஸிற்குச் சென்றவன் உழைத்தான்... உழைத்தான்... வெறித்தன மாக உழைத்தான். தன் வஞ்சம் எல்லாம் தீர உழைத் தான். எப்படியோ ஒரு சிறிய - யாருக்கும் உதவாமல் பழுதடைந்து போயிருந்த - ஸ்பின்னிங் மில்லை விலைக்கு வாங்கினான்.

கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறினான். என்ன தான் முன்னேறினாலும் அவன் மனதில் உள்ள பகை விஸ்வா மேலிருந்து போகவில்லை. அவனை எப்படி யாவது பழிவாங்க வேண்டும் என்பதுதான் அவன் வெறி யாக இருந்தது.

இப்படியாக ஒரு நான்கு வருடங்கள் சென்றன. அவனும் தொழிலில் ஓரளவு கால் பதித்தான். பின் ஒரு நாள் அந்தச் செய்தி அவனுக்கு இடியாக வந்தது.

ஆம்... விஸ்வா ஒரு கார் விபத்தில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்து விட்டான்... என்ற செய்திதான் அது.

அவன் அப்படியே உட்கார்ந்து விட்டான். மனம் அதிர்ந்து போனது. தன் நண்பனின் இறப்பால் அல்ல... அவனைப் பழி வாங்க முடியாமல் போய்விட்டதே என்ற வருத்தத்தால்!

விஸ்வாவின் இறப்பை யாராலுமே தாங்க முடியவில்லை. வேதா சிலையாக மாறியிருக்க... மூன்று வயது அர்ஜுன் தன் தாயின் நிலையறியாது அவள் மடியில் அட்டை போல் சுருங்கியிருந்தான்.

ஆயிற்று ஒரு மாதம். விஸ்வாவின் இறப்பிற்குப் பிறகு... ஆனாலும் அங்கே எதுவும் மாறவில்லை. ஆனால் ஒரு நாள் எல்லாமே நிதர்சனத்திற்கு வந்துதானே ஆக வேண்டும்.

எனவே வேதா சிறிது சிறிதாக இயல்பு நிலைக்கு மாற ஆரம்பித்தாள். ஹரி அடிக்கடி வந்து படுக்கையில் கிடந்த தன் மாமாவைப் பார்த்து விட்டுச் செல்வான்.

எப்படியாகப்பட்ட பணக்காரராக இருந்தாலும் தன் பெண்ணை இந்தச் சிறிய வயதில் கைம்பெண்ணாகப் பார்க்கும் தைரியம் அவருக்கு இல்லை. எனவே படுத்த படுக்கையாகி விட்டார்.

அவரைக் கனிவாகவே பார்த்துக் கொண்டான், ஹரி. அதில் ஒரு சுயநலமும் இருந்தது. அவன் அதிர்ஷ்டமாக அதுவும் அவனுக்குப் பலித்தது.

ஒரு நாள் அவர் நிலை மோசமாக... அவன் இவ்வளவு நாள் தந்த கனிவும் பாசமும் அன்று அவனுக்கு வேலை செய்தது... வாஞ்சிநாதன் வாயிலாக.

வாஞ்சிநாதன் தன் இறுதி மூச்சைக் கையில் பிடித்தபடி, "ஹரி... எனக்குத் தயவுசெய்து ஒரு உதவி பண்ணுப்பா. நான் உன்னை உதாசீனப்படுத்திட்டு வேதாவுக்கு வேற மாப்பிள்ளை பார்த்ததற்கு நல்லாவே பட்டுட்டேன்பா... என் பொண்ணு நிலைமை வேற யாருக்கும் வரக்கூடாது. நான் சாகும்போது என் பொண்ணை விதவையாப் பார்க்க எனக்கு மனசில்லைப்பா. என் தங்கச்சி மவன் அருமையை நான் புரிஞ்சிக்கிட்டேன். அவ கழுத்தில் தாலி கட்டுவியாப்பா?" என்று கெஞ்ச,

வேதா, "அப்பா...." என்று கிட்டத்தட்ட அலறினாள். "என்னப்பா... என்னை உயிரோட பார்க்க உங்களுக்கு விருப்பமில்லையா? உங்களுக்கு ஏன்ப்பா இந்த ஆசை... நான் இப்படியே இருந்துட்டுப் போறேன். அவர் செத்து ஈரம் கூடக் காயலைப்பா. அதுக்குள்ளே..." என்று கத்தினாள்.

ஹரிஹரனும், "ஆமா மாமா... அவன் செத்து மூணு மாசம் கூட முடியலை, அதற்குள்... ஒரு வருசமாவது போகட்டும்..." என்று கூற,

வேதா, "அதென்ன ஒரு வருசம் அத்தான்! எவ்வளவு வருசமானாலும் சரி... அதெல்லாம் முடியாது. எனக்கு

இதில் விருப்பமில்லை..." என்று முகத்தில் அடித்தாற்போல் கூற,

ஹரிஹரன், "நான் ஒண்ணும் உன்கூடச் சல்லாபிக்கிறதுக்குச் சொல்லவில்லை, வேதா. சாகக் கிடக்கிற மனுஷனுக்கு ஒரு சின்ன நிம்மதிக்காகச் சொல்றேன். அவ்வளவுதான்!" என்று எகிற... பதிலுக்கு வேதாவும் எகிற... அங்கே வாக்குவாதம் சூடு பிடித்தது.

சில மணிநேர வாக்குவாதத்திற்குப் பிறகு... வாஞ்சி நாதன், "இ... இதைப் பாரு, வேதா! உன்னை மட்டும் தனியா விட்டுட்டு இந்த உலகத்தை விட்டுப் போக முடியலை. அதான் இழுத்துக்கிட்டு கிடக்கிறேன். இந்தக் கட்டைக்குச் சாந்தி கொடும்மா. ஒரு தாலியை மட்டும் வாங்கிக்கோ. இந்தக் கட்டைக்குப் பிராப்தி கொடும்மா..." என்று கையைப் பிடித்துக் கொண்டு கெஞ்ச, அவளுக்கு வேறு வழி இருக்கவில்லை.

அந்த இடத்திலேயே சாமி படத்தில் இருந்த மஞ்சக் கயிற்றை எடுத்து அவள் கழுத்தில் கட்டினான் ஹரிஹரன். கல்லாகச் சமைந்து போய் அதைத் தடுக்க மறந்து நின்றிருந்தாள் வேதா.

இதன்பின் அடுத்த நாளே வாஞ்சிநாதன் மனநிம்மதி யுடன் இந்த மண்ணுலகத்தை விட்டு விடுபட்டார். இறுதிக் காரியங்களுக்குப் பிறகு அவளையும் அர்ஜுனையும் சென்னைக்கே அழைத்து வந்தான் அவன்.

வந்ததும் வேதாவிடம் மென்மையாக, "இதைப் பாரு வேதா... இந்தக் கல்யாணம் உன்னால் ஜீரணிச்சுக்க

முடியாதுதான். ஆனால் நீ எனக்குன்னு படைக்கப் பட்டவள். அதான் எனக்கே கிடைச்சிருக்கே. உன் மனம் மாறுகிற வரைக்கும் என்னால் உனக்கு எந்தக் கஷ்டமும் இருக்காது. ஆனால் ஒண்ணு... உன்னை விட்டுப் பிரிஞ்சிருக்கிற மாதிரி அர்ஜுன்கிட்ட இருந்து விலகியிருக்க மாட்டேன். அவன் என் மகன். சரியா?" என்று மனதில் வஞ்சத்தை வைத்துக் கூற, வேதா அதை அறியாமல் உண்மை என்று நம்பினாள்.

அர்ஜுனை அணைத்துக் கொண்ட ஹரிஹரன், மனதுக்குள், 'விஸ்வா! உன்னைத்தான் என்னால் பழி வாங்க முடியாமல் போச்சு. ஆனால் உன் மகனை என்னால் பழி வாங்க முடியும். நீ எப்படி என்னை இருக்க ஒரு வீடு இல்லாமல் ஊரை விட்டே அவமானப்படுத்தி ஓட விட்டியோ... அதே மாதிரி உன்னையே உரிச்சு வைச் சிருக்கிற உன் மகனை ஓட வைக்கிறேன். இது சத்தியம்!' என்று மனதுக்குள் உறுதிபூண்ட அந்தக் கயவனை அன்று முதல் தன் மனதார நம்பினான் அர்ஜுன்.

அவனைத் தன் அன்பாலேயே குளிப்பாட்டித் தன் வழிக்குக் கொண்டு வந்தான். அவன் கூறும் ஒரு சொல்லை வேதவாக்காக எண்ண வைத்தான். அவன் அர்ஜுன் மீது கொண்ட அன்பைப் பார்த்த வேதாவும் கொஞ்சம் கொஞ்சமாக அவனை விரும்ப ஆரம்பித்தாள்.

ஆனால், விஸ்வாவை மனதில் வைத்துக் கொண்டு அவனோடு வாழ்வது விபசாரத்திற்குச் சமமானது என்பதால் கொஞ்சம் கொஞ்சமாகத் தன் மனதை அவன் பக்கமாகச் சாயவைத்து, கிட்டத்தட்ட இரண்டு வருடங் களுக்குப் பின்தான் அவனை ஏற்றுக் கொண்டாள்

வேதவல்லி. ஆனால் எப்போது ஹரிஹரனுடன் வாழ ஆரம்பித்தாளோ, அன்றிலிருந்து ஒரு நிமிடம் கூட விஸ்வாவை நினைத்ததில்லை. அவனின் நினைவு நாள் அன்று மட்டும் கோவில் அன்னதானம், முதியோர் இல்லத் திற்குச் சாப்பாடு என்று தர்மம் செய்வதோடு சரி. விஸ்வாவைக் கணவன் என்ற நிலையில் இருந்து, 'கடவுள்' என்ற நிலைக்கு மாற்றினாள் வேதா.

எனவே அவளுக்கு அந்த மாறுதல் சுலபமாக இருந்தது. ஹரிஹரனை மிகவும் நம்பினாள் வேதா.

காலமும் அவள் மனக்காயத்தை மாற்றப் பெரிதும் உதவியது. ஆனாலும் குற்ற உணர்வு அவள் மனதை அறுத்துக் கொண்டேதான் இருந்தது.

முதலில் ஏனோதானோ என்று இருந்தவள்... ஷர்மிளாவின் வருகைக்குப் பிறகுதான் கொஞ்சம் உயிர்ப் புடன் திரிய ஆரம்பித்தாள். அவளுடைய உதவியால் தன் மனதை ஹரிஹரன் பக்கமாக முழுவதுமாகச் சாய்த்தாள். ஷர்மிளாவுக்கு எல்லாமே தெரியும். ஆனால் அவள் அந்த விஷயத்தை எல்லாம் தன் கணவனிடம் கூடச் சொல்லவில்லை.

மாறாக வேதாவிடம், "இதைப் பாரு வேதா... உன் வாழ்க்கையில் நடந்தது தாங்க முடியாத விஷயம்தான். ஆனால், கடவுள் உனக்கு அற்புதமான வாழ்க்கையைக் கொடுத்திருக்கார். அதை வாழ்கிற வழியைப் பாரு... இனிமே விஸ்வாவோட பேர் உன் வாயில் வந்தால் கூட தப்பு. அவரை உன் மனசில் இருந்து எடு..." என்று பேசிப் பேசியே அவளை வெளிக் கொண்டு வந்தாள் ஷர்மிளா.

அவளுக்கு அதனால்தான் அர்ஜுன் மீது அளவு கடந்த பாசம். வேதாவே விட்டுக் கொடுத்தாலும் அவனை ஷர்மிளா விட்டுக் கொடுக்க மாட்டாள். இவ்வாறு அவளின் புத்திமதியால் ஹரிஹரனிடம் மனம் ஒன்றி வாழ ஆரம்பித்தாள் வேதா. அதற்கு அடையாளமாக ஐந்து வருடங்களுக்குப் பின் யாழினி பிறந்தாள்.

தன் தோழிக்குக் கொடுத்த வாக்குறுதிப்படி விஸ்வாவைக் கடவுளாக நினைத்தாளே தவிர, வேறு எந்த நினைப்பும் அவளிடம் இல்லை. அதனால் தான் சாகும் தறுவாயில் கூட விஸ்வாவைப் பற்றி ஒரு வார்த்தை அர்ஜுனிடம் கூறவில்லை. அதைப் பற்றி மறந்தே போய் ஹரிஹரனையே அவனின் தந்தையாக நினைத்தாள்.

ஆனால், இறுதியில் தன் கணவனின் உண்மை யான சுயரூபம் அறியாமலேயே இவ்வுலகத்தை விட்டு நீங்கினாள் வேதா..." என்று கூறி முடித்தவர், அந்தத் துக்கம் சிறிதுமின்றி, "எனக்கென்ன ஆசை தெரியுமா? அர்ஜுன்... உன் அம்மாவும் நீ இப்படி நிற்கிறதைப் பார்க்கணும்னு ஒரு சின்ன ஆசை இருந்திச்சு. ஆனா அது பலிக்காமல் அவள் போய்ச் சேர்ந்துட்டா..." என்று கூற, அர்ஜுனின் முஷ்டி இறுகியது.

அதைப் பார்த்த அவர், "என்னடா, கொதிக்குதா...? கொன்னுடலாம் போல இருக்கா...? 25 வருஷமா எனக்கும் அப்படித்தான்டா இருந்தது. உன்னைப் பார்க்கும் போதெல்லாம் கொன்னுடலாம் போல இருக்கும். அப்படிச் செஞ்சிட்டா... உன்னைப் பழிவாங்க முடியாதே. அதான் கட்டுப்படுத்திக்கிட்டேன். இன்னைக்கு எனக்கு ரொம்பச்

சந்தோஷமான நாள். பின்னே எவ்ளோ கஷ்டப் பட்டிருக்கேன். உனக்குப் பணத்தாசை காட்டி, உன்னை யார்கிட்டயும் நெருங்க விடாமல், ஏன் உங்கம்மாகிட்டயே நெருங்க விடாமல்... என்னையே நம்ப வைச்சி... இப்போ ஒண்ணுமில்லாத பரதேசியா உன்னை வீட்டை விட்டு விரட்டப் போறேனே... இதைவிட எனக்கு வேற என்னடா வேணும்..." என்று கர்ஜித்தவர்,

"ஏன் தெரியுமா அர்ஜுன்... உன்னை 25 வருசம் விட்டு வைச்சிருந்தேன். ஏன்னா... உன் அப்பா வேதாவைக் கல்யாணம் செய்துகிட்டது... என் வீட்டைப் பிடுங்கினது எல்லாமே என் இருபத்தைந்தாவது வயதில் தான். அதே வயதில் நீயும் அனாதையா மாறணும்னு நினைச்சேன். மாத்திட்டேன்..." என்று உற்சாகமாகக் கூறியவர்,

"இப்போ சொல்றேன்டா... 25 வருஷமா எதுக்குக் காத்துக்கிட்டு இருந்தேனோ... அந்த வார்த்தையைச் சொல்றேன். உன் தாத்தா எந்த வார்த்தையைச் சொல்லி என்னை வெளியேற்றினாரோ, அந்த வார்த்தையைச் சொல்றேன். நல்லாக் கேட்டுக்கோ..." என்று கூறி விட்டு, "வீட்டை விட்டு வெளியே போடா நாயே..." என்று முகத்தில் கோபம் கொப்புளிக்கக் கூற,

அர்ஜுன் அவர் வார்த்தையால் தாக்கப்பட்டு, "டேய்... துரோகி..." என்று அவர் கழுத்தை நெரிக்க... அதே சமயம் அவன் இத்தனை வருடம் வைத்த பாசம், அவன் இயலாமை அவரைக் கொல்ல விடாமல் அவனை நடுங்க வைக்க... அவன் கண்களில் நீர் தாரை தாரையாக வழிந்தது.

கைகளில் வெறியும் கண்களில் பாசமும் போராட... தன் முன் நின்றிருந்த அர்ஜுனைப் பார்த்துச் சிறிதும் துயரமின்றிக் கிண்டலாகச் சிரிக்க ஆரம்பித்தார் ஹரிஹரன்.

## 18

உண்மை யறிந்தவ ருன்னைக் கணிப்பாரோ
மாயையே - மனந்
திண்மையுள் ளாரைநீ செய்வது
மொன்றுண்டோ - மாயையே
எத்தனை கோடி படைகொண்டு வந்தாலும்
மாயையே - நீ
சித்தத் தெளிவெனுந் தீயின் முன்
நிற்பாயோ - மாயையே...

ஆம். மாயைதான். எல்லாம் மாயைதான். அர்ஜுனைப் பொறுத்தவரை அவன் கிட்டத்தட்ட இருபது வருடங்களாக வாழ்ந்த வாழ்க்கை முழுதும் மாயையே.

அந்த மாயையை உணர முடியாத அளவு அவன் சித்தத்தை ஆணவம் என்ற போதையால் அடக்கி வைத்திருந்தார் ஹரிஹரன். ஆனால் அதை மாயை என்று உணர வரும்பொழுது, அவனால் அதைச் சற்றும் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. ஒரு நாய்க்குட்டியை வாங்கி ஒரு வருடம் வளர்த்துவிட்டு வீட்டை விட்டுப் போ என்றால் உடனே வாலாட்டிக் கொண்டு போய் விடுமா? எத்தனை தடவை விட்டாலும் திரும்பத் திரும்ப வராது? தன்

எஜமானருக்குத் தன்னைப் பிடிக்கவில்லையே என்று கண்ணீர் சிந்தாது? இன்னும் ஒரு படி மேலே போய் அந்த வீட்டிலேயே உயிரை விட்டாலும் விடுமே தவிர, தன் நன்றியை மறக்காது.

அதுவே இப்படி என்றால் அர்ஜுன் ஒரு மனிதனாயிற்றே... அவனும் ஹரிஹரனை மன்னித்திருப்பான்தான். சொல்லப் போனால் அவர் மேல் வைத்திருந்த பாசத்திற்கு அவர் காலைப் பிடித்தாவது கெஞ்சியிருப்பான் தான். ஆனால் ஹரிஹரன் ஒரு மனிதனாக இருந்திருந்தால் மட்டுமே... அவரின் மனம்தான் முற்றிலும் விஷமேறிய நாகமாய் மாறியிருந்ததே. அதைப் பொறுத்துக் கொண்டு போகும் அளவிற்கு அவன் புத்தன் இல்லையே... சாதாரண மனிதன்தான்.

அதனால் அவர் பேசிய ஆத்திரத்தில் அவர் கழுத்தை நெரிக்கப் போய் விட்டான்தான். ஆனால் அவன் மனம் ஒன்றும் ஹரிஹரனைப் போல் துருப் பிடித்துப் போகவில்லை.

அவன் மனம் இன்றுவரை பயன்படாத பக்குவப் படாத தரிசு நிலமாக இருந்திருக்கிறதே தவிர, விஷச் செடிகள் முளைக்கும் காடாக இருந்ததில்லை. என்னதான் தன் தாய் மீது கோபம் கொண்டு அவரை வாட்டி எடுத்தபோதிலும், சாகும் தறுவாயில் அவரை ஒரு குழந்தையாய்ப் பார்த்துக் கொண்டவனும் அவன்தானே.

அதனால் அவனால் முழு மிருகமாக மாற முடியவில்லை. அதனால்தான் அவன் கண்களில்

கண்ணீர்ப் பெருக்கெடுத்தது. ஆனால், அதைக் கண்ட ஹரிஹரனோ ஏளனத்தில் சிரிக்க... அவர் கழுத்தை நெரித்திருந்த கையை விலக்கியவன்... குலுங்கிக் குலுங்கிச் சிரித்த அவரை வெறித்துப் பார்க்க ஆரம்பித்தான்.

சிரித்து முடித்த ஹரிஹரன், “என்ன அர்ஜுன்... என்னைக் கொல்லணும்னு முடிவு செய்துட்டே இல்லை. கொன்னுடு. இப்படி எல்லாம் மிச்சம் வைக்கக் கூடாது. நான் உங்க அப்பனை அவன் கல்யாணத்தன்னைக்கே கொன்னிருந்தால் இன்னைக்கு நீ இவ்ளோ கஷ்டப் பட்டிருக்க மாட்டே இல்லை. அதனால்தான் சொல்றேன். என்னைக் கொன்னுடு. இல்லை... நீ இன்னும் கஷ்டத்தைச் சந்திப்பே...” என்று கண்களில் குரூரத்துடன் கூற... அவன் அதே பார்வையைப் பார்த்துக் கொண்டு இருந்தானே தவிர, ஒன்றும் பேசவில்லை.

மேலும் அவர், “என்ன அர்ஜுன்... யாராவது உதவ மாட்டாங்களான்னு பார்க்கிறியா? கவலைப்படாதே, அர்ஜுன்... இந்த உலகத்தில் இனிமே உனக்கு உதவ ஒருத்தன் கூடக் கிடையாது. நீ இனிமே தனியாள்தான். உன் நண்பர்கள் என்று நீ சில பேரை வைச்சிருக்கியே... அவர்கள் எல்லாமே பக்காச் சுயநலவாதிகள். இந்நேரம் விஷயம் தெரிஞ்சு உன் நம்பரைக் கூட ஃபோனில் இருந்து அழிச்சிருப்பாங்க. அது உனக்கே புரிஞ் சிருக்கும்...” என்று கூற, அர்ஜுனிற்கும் அது புரிந்தே இருந்தது. ஆனாலும் ஒன்றும் பேசவில்லை.

பிறகு ஹரிஹரன், “அப்புறம்... இன்னொரு விசயம். நீ காதலி என்று சொல்லி ஒருத்தியைக் கூட்டிட்டு வந்தியே... அவளுக்கு அடுத்த வாரம் கல்யாணம். என்ன

அதிர்ச்சியா இருக்கா? அந்த உயில், உன் கடந்த காலம் எல்லாத்தைப் பத்தியும் அவங்களுக்கு எப்பவோ சொல் லிட்டேன். கொஞ்ச நாளா அவகிட்ட இருந்து உனக்கு ஃபோன் எதுவும் வந்திருக்காதே. கல்யாணப் பொண்ணு எப்படி ஃபோன் பண்ணுவா?

"ஆனா, ஒண்ணு... இந்த இரண்டு விசயத்தில் நீ எனக்குத் தெரியாமலேயே நல்லது செய்திருக்கே, அர்ஜுன்... நீ மட்டும் உண்மையான நண்பர்களையோ உன் மேல் உயிரையே வைத்திருக்கிற காதலியையோ தேர்ந்தெடுத்திருந்தால் என் பாடு ரொம்பக் கஷ்டமாகி யிருக்கும். இதிலிருந்தே தெரியலை... ஆண்டவன் என் பக்கம் என்று!" என்று எக்காளமிட,

அர்ஜுன் கிட்டத்தட்ட பிணமாகவே மாறியிருந்தான். வாயைத் திறந்து அவனால் பேசக் கூட முடியவில்லை. ஒருத்தரை உடலால் காயப்படுத்துவது வேறு. அதே சமயம் மனதால் உணர்ச்சிகளைக் கொன்று மரக்கட்டையாக மாற்றுவது வேறு ஒன்று. ஹரிஹரன் அதில் கை தேர்ந்தவராக இருந்தார். அவனின் உடல் பலத்திற்கு அவரை அந்த இடத்திலேயே கொன்று போட்டிருக்கலாம். கைகால் உடையும்வரை அடித்திருக்கலாம்தான். அவ்வளவு ஏன்... குறைந்தபட்சம் நாக்கு வறண்டு போகும்வரை, 'நீ செய்த துரோகத்திற்கு உன் கண் முன்னாடியே பெரிய ஆளாகிக் காட்டுகிறேன்...' என்று சவால் பேச்சு பேசியிருக்கலாம்தான்.

ஆனால் இது வாழ்க்கை. ஹீரோயிசத்தைக் காட்டும் சினிமா அல்ல. இங்கே நிதர்சனம்தான் முகத்தில் அறையும். அவனைப் பொறுத்தவரை அடுத்த வேளை

சாப்பாடு எங்கே என்பதே கேள்விக் குறிதான். அந்த அயர்ச்சியிலும் அதிர்ச்சியிலும் சிலையாகிப் போனான் அவன்.

ஒருவன் வாழ்க்கையில் பணப் பிரச்சினையைக் கூடச் சமாளித்து விடுவான். அவன் உழைப்பு அவனுக்குக் கைகொடுக்கும். திருவால் சாதிக்க முடியவில்லையா... அதுபோல்! ஆனால், துரோகத்தை... பழிவாங்கலை... தன்னைச் சுற்றி யாருமே இல்லாத தனிமையை, ஏமாற்றத்தை எந்த மனிதனாலும் தாங்கிக் கொள்ள முடியாது. அது அவன் உடல் உழைப்பை மட்டுமல்ல... மனவலிமையையும் அடியோடு அழிக்கும் விஷச் செடி. அதுதான் அர்ஜுனை உலுக்கிப் போட்டது.

அந்த அளவிற்குத் தன் வளர்ப்பினாலும் மூளைச் சலவையினாலும் அவனை மாற்றியிருந்தார் ஹரிஹரன். 'ஃபேமிலி விக்டிம்' என்று ஆங்கிலத்தில் ஒரு சொல் உண்டு. அதாவது தன் குடும்பத்தினராலேயே ஒருவர் வன்கொடுமைக்கு ஆளாக்கப்படுவது. வரதட்சிணைக் கொடுமை, கணவர் கொடுமை... இதுபோல் இன்ன பிற... அந்தச் சொல்லை இதுவரை பெண்களுக்குத்தான் கூறிக் கொண்டிருந்தனர். ஆனால், முதன் முறையாக அதேபோல் ஒன்றைத் தான் அனுபவிப்பது போல் இருந்தது அர்ஜுனிற்கு. ஆனால் இவ்வளவும் அவன் மனதுக்குள் ஓடிக் கொண்டிருந்ததே ஒழிய, வாய் திறக்கப்படவே இல்லை.

ஆனால், ஹரிஹரன் ஓயவில்லை. "என்னால் இன்னும் நம்ப முடியலை அர்ஜுன்... ஆண்டவன் இப்போ

மட்டுமில்லை. அப்போவே என்கூட இருந்திருக்கான். இல்லைன்னா ஏன் உன் அப்பா இறக்கணும். அதுக்கு ஒரு வருசம் முன்னாடியே அவன் அப்பன் இறக்கணும்... உன் தாத்தா மட்டும் உயிரோட இருந்திருந்தால் கண்டிப்பா எனக்கும் உங்க அம்மாவுக்கும் கல்யாணம் செய்திருக்க விடமாட்டார். ஆனால் என் அதிர்ஷ்டம்... உன் துரதிர்ஷ்டம். அவர் உனக்கு இரண்டு வயசா இருக்கும்போதே போய்ச் சேர்ந்துட்டார்.

"அது மட்டுமில்லை. உன் அப்பா எனக்கும் அவனுக்கும் இருந்த சண்டையைப் பத்தி உங்கம்மா கிட்ட ஒருநாள் ஒரு தடவை சொல்லியிருந்தால் கூட அவ நான் தலைகீழா நின்னாலும் கல்யாணம் செய்திருக்க மாட்டா. ஆனால், உங்கப்பன் என்னைப் பத்தி அதைக் கூடச் சொல்லாமல் எனக்கு நல்லது பண்ணிட்டான்..." என்று கூறும்போதே,

அர்ஜுன் தளர்ந்த நடையுடன் வெளியேற ஆரம் பித்தான்.

அந்த வீட்டிலிருந்து ஒன்றுமே எடுத்துக் கொள்ள வில்லை.

"போதும் சார்... போதும். இதுக்கு மேல் கேட்க எனக்குத் தெம்பில்லை. எனக்கு எதுவும் வேணாம். என் சர்டிஃபிகேட்ஸும் இந்தப் பர்ஸ் மட்டும் எடுத்துக்கிறேன். இதில் கூடப் பணமில்லை. எங்கம்மாவோட போட்டோ இருக்கு. அதுக்காகத்தான்..." என்று காற்றிற்குக் கூடக் கேட்காத குரலில் கூறியவன், அந்த வீட்டை விட்டு வெளி யேறினான்.

அவன் நடந்ததைக் கண்டு ஓடி வந்து அவன் காலைப் பிடித்துக் கதறினாள் யாழினி.

“அண்ணா... அப்பா சும்மா விளையாடுறார் அண்ணா... உன்னைப் போய் அவருக்குப் பிடிக்காமல் இருக்குமா, அண்ணா...? ப்ளீஸ் அண்ணா... போகாதேண்ணா!” என்று அவன் தங்கை காலைப் பிடித்துக் கொண்டு போக விடாமல் தடுக்க... அதை உணரும் நிலையில் கூட அவனில்லை. அவன் பாட்டுக்கு நடந்து கொண்டே சென்றான்.

அர்ஜுனிடம், தனக்கு இந்த வீடும் உரிமையில்லை, அதில் வாழ்பவர்களிடமும் உரிமையில்லை... என்று ஒரு வித விரக்தி அவன் மனதில் வந்து விட்டிருந்தது.

அந்த தந்தைக்குப் பிறந்தவள்தானே இவள். அவர் வளர்த்த தனக்கே அவரின் குணத்தில் பாதி வந்திருக்கும் போது, இவளுக்கு வந்திருக்காதா? போயிடு அர்ஜுன்... இங்கே இருந்து போ. யார் முகத்தையும் பார்க்காதே. யார் குரலையும் கேட்காதே... என்று தனக்குத் தானே கூறிக் கொண்டு அவன் எட்டி நடைபோட...

செண்பகமும் அவனை நோக்கி ஓடி வந்தாள். “எதையும் மனசில் வைச்சிக்காதய்யா... நான் பேசுறேன். உள்ளே வாய்யா... அவன் மனசுக்குள் இவ்வளவு வெஞ் சினத்தை வைச்சிருப்பான்னு நினைச்சுக் கூடப் பார்க்கலையா... எதுவா இருந்தாலும் பேசித் தீர்த்துக்கலாம்...” என்று கூறி முடிப்பதற்குள், உள்ளிருந்து ஹரிஹரனின் கர்ஜனை கேட்டது.

"அவன் கிட்ட யார் சமாதானத்திற்குப் போனாலும் அவங்க அவன் கூடவே இந்த வீட்டை விட்டுப் போகலாம்..." என்று அழுத்தமாகக் கூற, செண்பகம் அதிர்ந்தாள்.

இவனுக்கு இவ்வளவு கல் மனதா... என்று அவள் அதிர்ந்தாலும், இளங்கன்று பயமறியாது அல்லவா!

யாழினி, "சரிப்பா. நானும் அண்ணன் கூட வீட்டை விட்டுப் போறேன். அவன் இல்லாத வீட்டில் நானும் இருக்க மாட்டேன்..." என்று அவரை எதிர்த்து நிற்க,

ஹரிஹரன் வந்து அவள் முதுகிலேயே நாலு போட்டு, "என்னடி... என்கிட்டயே உன் திமிரைக் காட்டு றியா? அவன் ஒரு அனாதை. உங்கம்மா மட்டும்தான் அவன் சொந்தம். அவளே இல்லை... இவன் எதுக்கு இந்த வீட்டில்! யாராவது பாசம் கொண்டாடிட்டுப் போனீங்க... அவ்வளவுதான். உள்ளே போங்க..." என்று செண்பகத் தையும் யாழினியையும் உள்ளே தள்ளிக் கதவைச் சாத்திக் கொண்டார்.

அதைக் கண்ட அர்ஜுன் ஒரு வெற்றுச் சிரிப்புடன் அந்த வீட்டை விட்டு ஒற்றைப் பைசா கூட இல்லாமல் வெளியேறினான். அவன் என்னவோ இத்துடன் முடிந்து விட்டது என்றுதான் நினைத்தான். ஆனால் ஹரிஹரன் விடவில்லை. அவரின் பழி வாங்கும் தாகம் தீராமல் தக்க சந்தர்ப்பத்தை எதிர் நோக்கிக் கொண்டிருந்தார்.

வீட்டை விட்டு நடக்கத் துவங்கிய அர்ஜுனிற்கு ஒரு இலக்கு தோன்றவில்லை. ஏதோ உலகத்தின் எல்லை

யைத் தொடுபவன் போல் நடந்தான். நடந்தான்... நடந்து கொண்டே இருந்தான்.

பசி, தூக்கம், வலி அனைத்து உணர்ச்சிகளும் மரத்துப் போயிருந்தன. அவனால் எல்லாத் துரோகத் தையும் தாங்க முடிந்தது. மினியின் துரோகத்தை மட்டும் தாங்க முடியவில்லை.

வலிய வந்து தன்னை மயக்கியவள் இன்று தன்னிடம் ஒரு வார்த்தை கூடச் சொல்லாமல் திருமணம் செய்வதை நினைத்து அவனுக்கு எரிந்தது. என்னதான் இருந்தாலும் தன் வாழ்க்கையைப் பகிரத் தேர்ந்தெடுத்த துணையாயிற்றே! அவளை மன்னிக்க அவனால் முடிய வில்லை.

“என்னதான் இருந்தாலும் உங்கிட்ட நாக்கைப் பிடுங்கிக்கிற மாதிரி நாலு வார்த்தை கேட்காமல் நான் விட மாட்டேன். என்னை நீயும் பகடைக்காயாக மாத்திட்ட இல்லை... வரேன் டெல்லிக்கு...” என்று சூளுரைத்தவன் சரக்கேற்றிச் செல்லும் லாரி டிரைவரிடம் போய் நின்றான்.

அவர் அவனை மேலும் கீழும் பார்த்து விட்டு, “என்னய்யா... என்ன வேணும்...?” என்று அதட்ட,

அவனோ அசராமல், “டெல்லி போகணும்...” என்றான், உணர்ச்சியற்ற குரலில்.

அவர், “என்னய்யா! பைத்தியமா பிடிச்சிருக்கு...? நீ பாட்டுக்கு வர்றே... டெல்லிக்குப் போகணும் என்கிற... உன் மாமனா நானு... சரி, காசு எவ்ளோ வைச்சிருக்கே...?” என்று கேட்க,

அர்ஜுன், "என்கிட்ட எதுவும் இல்லை. இந்த சர்டி ஃபிகேட்டும் பர்சும் அதில் எங்கம்மா படமும் மட்டும்தான் இருக்கு..." என்று அதே குரலில் கூற... அவன் முகத் தையும் குரலையும் பார்த்து அந்த டிரைவருக்கு மனதை ஏதோ பிசைந்தது.

இவன் நினைத்தால் திருட்டுத்தனமாக ஏறியிருக்க லாம். இருக்கும் சரக்கில் இவனைப் பார்த்திருக்கவே முடியாது. ஆனால் நேர்மையாகத் தன்னிடம் கேட்கிறான். ஒரு தடவைதான் இனாமாக உதவி செய்வோமே என்று நினைத்தவன்,

"சரிப்பா... பார்க்கப் பெரிய இடத்துப் பிள்ளை மாதிரி இருக்கே. என்ன கஷ்டமோ! போற வழியில் இறங்கிக்கோ. பணம் எல்லாம் வேணாம்..." என்று கூற, அவனுக்கு நன்றி கூறக் கூடத் தெம்பின்றி கையை மட்டும் கூப்பிக் கொண்டு லாரியில் ஏறி டெல்லிக்குப் பயணப்பட்டான்.

இரண்டு நாட்களுக்கு அலைந்து திரிந்து, மினியின் வீட்டைக் கண்டுபிடித்தான். 'தேவ் விஹார்' என்ற அந்தப் பங்களா இன்னும் சில நாட்களில் நடக்கப் போகும் திருமண விழாவிற்காக விழாக் கோலம் பூண்டிருந்தது.

அது ஒரு பின்மாலை நேரம் என்பதால், கொஞ்சம் கொஞ்சமாகக் கூட்டம் குறைய ஆரம்பித்திருந்தது.

ஜெயதேவ் முன்னாள் எம்.பி. என்பதால் சற்று அதிக மாகவே கெடுபிடிகள் இருந்தன. அர்ஜுன் அந்த பங்களா விற்குள் மினியைப் பார்க்க அடியெடுத்து வைத்தான். அதற்குள் அவன் பரட்டைத் தலையையும் உடையையும்

பார்த்துக் காவலர்கள் விடாமல் தடுக்க... அவனும் முரண்டு பிடிக்க... தேவே வாயிலுக்கு வந்தார்.

காவலர்களிடம், "என்னய்யா... என்ன இங்க சத்தம்...?" என்று ஹிந்தியில் கேட்க,

அவர்களும் பவ்யமாக, "இவன் சின்னம்மாவைப் பார்க்கணும்னு சொல்றான் சாப்... பார்க்க சந்தேகமா இருக்கு..." என்று கூற,

அவர் அர்ஜுனிடம், "யாரு நீ? என்ன வேணும்...?" என்று அதட்டலாகக் கேட்டார்.

ஜெயதேவ் என்னதான் மத்திய அமைச்சராக இருந் திருந்தாலும் தமிழ்நாட்டுக்காரர்தான். அவன் முகத்தைப் பார்த்ததுமே தமிழ் என்று தெரிந்து போகத் தமிழிலேயே வினவினார். அவன் கூறியது இரு வார்த்தைகள் மட்டும் தான்.

"நான் அர்ஜுன்..." அது மட்டும்தான். அதிலேயே ஜெயதேவின் முகத்தில் வியர்வைப் பூக்கள் பூக்க ஆரம் பித்தன.

அவன் ஒட்டிக் கிடந்த கண்களில் இருந்த ரௌத்திரம், வலி அனைத்தையும் கண்டு அரண்டவர், "ஏய்! நீ எதுக்கு இங்கே வந்தே...? உன்னைத்தான் மினி வேண்டாம்னு சொல்லிட்டா இல்ல... போ... போடா வெளியே..." என்று கத்த...

அர்ஜுன், "அவகிட்ட நான் பேசணும். அவள் ஏன் அந்த முடிவெடுத்தாள் என்று தெரியணும்... நான் வேற எதுக்காகவும் வரலை..." என்று அதே அழுத்தக் குரலில் கேட்க,

தேவ். "இதைப் பாரு... பிரச்சினை செய்யாமல் போ. இல்லை, போலீஸ்தான்... ஒழுங்கா இங்கே இருந்து போ!" என்று கத்த...

அர்ஜுன் அதே கூர்பார்வையுடன் அழுத்தமாக நின்றிருந்தான்.

ஜெயதேவ் யோசனையுடன் அங்கே இருந்து கொஞ்சம் தள்ளி வந்து ஹரிஹரனிற்குக் கைபேசியில் அழைத்தார்.

அவர் எடுத்ததும், "என்ன சார்... அவன் ஒண்ணும் பண்ணமாட்டான். நீங்க பயப்படாமல் கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்யுங்கன்னு சொன்னதுனாலதானே நான் எல்லா ஏற்பாடும் செய்தேன். இப்போ அவன் அய்யனா ராட்டம் வந்து நிக்கறான் சார். எனக்கே அவனைப் பார்க்கப் பயமா இருக்கு..." என்று சாட,

மறுமுனையில் கலகலவெனச் சிரித்த ஹரிஹரன், "ஹப்பாடி! இப்போதான் எனக்கு நிம்மதி. எங்கே அவன் சர்டிஃபிகேட்டெல்லாம் வைத்து வேலை வாங்கிடுவா னோன்னு நினைச்சேன். எலி என் பொறியில் மாட்டிக் கிச்சு, ஜெயதேவ். நீங்க கவலைப்படாதீங்க!" என்று கூற,

ஜெயதேவ், "என்ன சொல்றீங்க... எனக்கு ஒண்ணும் புரியலை... என்ன செய்யணும் நான்? அதை மட்டும் சொல்லுங்க..." என்று கேட்க,

ஹரிஹரன், "உங்ககிட்ட கைத்துப்பாக்கி இருக்கா?" என்று கேட்க,

ஜெயதேவ், "இருக்கு!" என்றார்.

ஹரி, "அப்போ நான் சொல்றபடி செய்யுங்க..." என்று தன் யோசனையைக் கூற, அவரும் கேட்டுக் கொண்டார்.

அதன்படி அர்ஜுனிடம் சென்று, "நீ மேலே வா... மினிகிட்ட பேசிட்டு உடனே போயிடணும். பிரச்சினை செய்யக் கூடாது," என்று கூற... அவனும் அவர்களின் சூழ்ச்சி புரியாமல்... அவர் பின்னாடியே சென்றான்.

மேலே சென்றதும்தான் தாமதம்... அவர் சடாரென்று தன் பாக்கெட்டில் இருந்த துப்பாக்கியை எடுத்துத் தன் வலது தோள்ப்பட்டையில் சுட்டுக் கொண்டு, "அய்யோ! காப்பாத்துங்க... என்னைச் சுட்டுட்டு என் பொண்ணைக் கொல்லப் போறான். காப்பாத்துங்க..." என்று ஹிந்தியில் கதற...

அவர் வீட்டில் இருந்த அனைவரும் வந்து, அவரை ஏந்திக்கொள்ள... அவர் மாஜி மந்திரி என்பதால் அவரின் அந்தரங்கப் பாதுகாவலர்கள் உடனே அவனைப் பிடித்துக் கொண்டு காவல் துறையிடம் ஒப்படைத்தனர்.

அர்ஜுனிற்குச் சிறிது நேரம் ஒன்றுமே புரிய வில்லை. பின் தன்னைச் சிறையில் அடைத்ததும்தான் ஒவ்வொன்றாகப் புரிய ஆரம்பித்தது. மினியை அவன் கடைசிவரை பார்க்கவில்லை.

எங்கே அவர் அலறியதும்தான் அவரின் பாது காவலர்கள் அவனை அடியடி என்று அடித்துக் காவல் துறையினரிடம் ஒப்படைத்து விட்டனரே... அவனைக் காப்பாற்ற யாருமே வரவில்லை.

என்னவோ அவனுக்கு எல்லாம் மரத்து விட்டதாலோ என்னவோ... அவனுக்குச் சிறைக்குச் சென்றது பெரிய தவறாகவே தோன்றவில்லை. அவன் வாங்கிய அடி ஒவ்வொன்றும் அவனுக்கு ஒரு பாடம். வாங்கிய அடிகள் அவன் மனதோடு சேர்த்து உடலின் சக்தியையும் உறிஞ்ச மயக்கமானான் அர்ஜுன்.

அடுத்த நாளே அவனைக் கோர்ட்டில் ஆஜர்படுத்தி பெண்ணைக் கொலை செய்ய முயன்ற குற்றத்திற்காக இரண்டு வருடங்கள் கடுங்காவல் தண்டனையை அனுப விக்கத் துவங்கினான். அது அவன் வாழ்க்கையில் விழுந்த மூன்றாவது அடி.

ஆனால், அவனுக்கு இருந்த கொஞ்ச நஞ்சம் தன்னம்பிக்கையையும் அவனைப் பார்க்க வந்த ஹரி ஹரன் குலைத்தார்.

"என்ன அர்ஜுன்... ஜெயிலுக்கும் விசிட் செய்துட்டே போலிருக்கு. நல்லாப் பார்த்துக்கோ அர்ஜுன். இதுதான் நீ... நான் உன்னை அனுப்பியதும் நீ ஒரு வேலையைத் தேடி யிருந்தால் உனக்கு இந்தக் கஷ்டம் வந்திருக்காது. ஆனால், நீ உன் அறிவை விட உன் உணர்ச்சிகளுக்குத் தான் முக்கியத்துவம் கொடுப்பேனு நான் கணக்குப் போட்டது சரியாகவே இருக்கு.

"இப்போ பார். ஜெயிலுக்குப் போயிட்டு வந்த உனக்கு யாரும் வேலை தர மாட்டாங்க. அதுவும் அட்டெம்ப்ட் மர்டர். ம்ம்... இப்படி மாட்டிக்கிட்டியே அர்ஜுன்! எனக்கே உன்னைப் பார்த்தால் பாவமா இருக்கு. ஆனால், உனக்கு ஒரு விஷயம் தெரியுமா? உன்னை ஜெயிலுக்கு அனுப்ப ஐடியா கொடுத்ததே நான்தான்..." என்று கூற,

அர்ஜுனிற்கு அது அதிர்ச்சியாகவே இல்லை. அவன் ஓரளவு யூகித்தே வைத்திருந்தான். எனவே வாய் பேசாமல் மௌனமாக இருக்க,

"உனக்குப் பேச முடியாதுதான் அர்ஜூன். இனிமேல் உன் வாழ்க்கை முழுக்க உன்னால் எழுந்திருக்கவே முடியாது. நீ அதலபாதாளத்திற்குப் போயிட்டே. தப்பித் தவறி மேலே வந்தால் பார்க்கலாம். நான் வரேன். சாரி, போறேன்!" என்று ஏளனத்துடன் கூறிவிட்டுச் சென்றவரைப் பார்த்து அவனுக்கு எதுவும் தோன்றவில்லை.

அதே வெற்றுச் சிரிப்புதான் தோன்றியது. தன் வாழ்வே இருண்டு போனது போல் இருந்தது... தன் அறைக்குச் சென்று வாய் விட்டுக் கத்தினான். உருண் டான்... புரண்டான்... மயக்கமானான்.

ஆனால் அவனுக்கு அழ மட்டும் வரவில்லை. அது மட்டுமல்ல... அழவே கூடாது என்று வைராக்கியமாக இருந்தான். அனைத்தையும் மனதில் போட்டு அழுத்திக் கொண்டதால் அவன் இயலாமை நாளுக்கு நாள் அதிக மானது.

அன்றிலிருந்து அவன் ஒரு மௌனியானான். யாரிடமும் பேசாமல் தன்னைச் சுற்றி ஒரு வட்டம் போட்டுக் கொண்டான். யாராவது தன்னை நெருங்கினால் விலகி னான். பார்க்க வந்தால் அறவே ஒதுக்கினான். அதனால் தான் திருவைக் கூடப் பார்க்கவில்லை. நெருங்க விடவில்லை.

தான் விடுதலையாகும் நாளை எதிர்நோக்கிக் காத்திருந்தான். அதுவும் வாழ்வதற்காக அல்ல. தான்

அல்லல் படும் பூலோக வாழ்வை முடித்துக் கொள்ளத் தான்... அதன்படியே வெளியே வந்தான்.

"பிறகு நடந்ததுதான் உங்களுக்கே தெரியுமே..." என்று அவன் உணர்ச்சியே அற்ற குரலில் கூறி முடிக்க,

திருவும் பாரதியும் கண்களில் இருந்து கண்ணீர் தாரை தாரையாக வழிய, அதைத் துடைக்கக் கூடத் தோன்றாமல் அமர்ந்திருந்தனர்.

அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த அவர்கள் இருவரும் அவன் கண்களில் இருந்து அப்போதும் கூட ஒரு சொட்டுக் கண்ணீர் வராததைக் கண்டு அதிர்ந்தனர்.

பாரதி ஓடிச் சென்று அவன் காலடியில் அமர்ந்து கொண்டு, "அர்ஜுன், அழுதிடு, அர்ஜுன்... தயவு செய்து அழுதிடு... இப்படி இருக்காதே, அர்ஜுன். தயவு செய்து அழு, கண்ணா... ப்ளீஸ்..." என்று கதற,

திருவும் வந்து தோளை ஆதரவாக அழுத்தி, "எப்படி அர்ஜுன்... இதெல்லாம் நீ எப்படி தாங்கிக்கிட்டேப்பா...? எங்களால் கேட்கக் கூட முடியலையே... நானும் கஷ்டப் பட்டேன்தான். ஏன் தற்கொலை முடிவுக்குக் கூடப் போனேன் தான். அன்னைக்கு மட்டும் பாரதி இல்லைன்னா ஏதாவது ஒரு முடிவு எடுத்திருப்பேன். இது பாரதிக்கே தெரியும். ஆனால், நீ உன்னை ஆற்றுவாரும் இல்லாமல் தேற்றுவாரும் இல்லாமல் இப்படி உடைஞ்சு போயிட்டி யேப்பா... பாரதி சொன்ன மாதிரி அழு, அர்ஜுன். அப்போதான் உன் மனப்பாரம் குறையும். ஆம்பளைங்க

அழக் கூடாதுன்னு யாருப்பா சொன்னது? அவனுக்கு மட்டும் மனசில்லையா என்ன! அழுதிடு அர்ஜுன்..." என்று வேண்ட,

அர்ஜுன் தன் விரக்திச் சிரிப்புடன், "நான் அழுவேன் சார்... அதுக்கான நேரம் வரும்பொழுது அழுவேன்... இப்போ இல்லை..." என்று கூற, அதற்கு மேல் அவனுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை.

திரு, "என்ன அர்ஜுன், சார்... அது இதுனு... அங்கிள்னுதானே சின்ன வயசில கூப்பிடுவே... அதே மாதிரிக் கூப்பிடு..." என்று மென்மையாகக் கூற,

அர்ஜுன், "சின்ன வயசில் இருந்த தகுதி எனக்கு இப்போ இல்லை சார். அதனால நான் சார் என்றே கூப்பிடுறேன்..." என்று கூற,

பாரதி கோபத்துடன், "தகுதி என்பது பணத்தில் இல்லை, அர்ஜுன்... மனதில்தான் இருக்கு. சும்மா உன்னை நீயே தாழ்த்திக்காதே..." என்று அதட்ட,

அர்ஜுன், "எல்லாம் வெளியே இருந்து பார்க்கும் போது அதோட வலி தெரியாது, பாரதி... என் வாழ்க்கைக் குள்ளே வந்து பார்த்தால்தான் தெரியும்..." என்று முகத்தில் அடித்தாற் போல் கூற...

பாரதி பதிலுக்கு ஏதோ பேச வர... திரு அவளைக் கண்ணாலயே அடக்கினான்.

"அர்ஜுன், உன் மனசு இப்போதைக்கு யார்கிட்டயும் நெருங்க விடாது. யாரைப் பார்த்தாலும் சந்தேகக் கண்ணோடுதான் பார்க்கத் தோன்றும். இந்த நிலையில் நீ

என்னதான் எங்களை விலக்கி வைத்தாலும் எங்களால் தள்ளிப் போக முடியாது. உனக்குத் தெரியுமா அர்ஜுன்? நான் பெங்களூருக்குப் போனப்போ என் சொந்தக்காரங்க யாரும் என்னைக் காப்பாத்தலை. நண்பர்கள் இரண்டு பேர்தான் என் வாழ்க்கையில் என்னை முன்னேற வைச் சாங்க.

"இப்போ நான் இந்த நிலைமையில் இருக்கேன்னா அதுக்குக் காரணம் அவங்கதான். யாருன்னே தெரியாத சொற்ப காலம் பழகின எனக்கு அவங்க உதவி செய் திருக்கும்பொழுது சின்ன வயதில் நான் தூக்கிக் கொஞ்சிய உன்னை நான் தள்ளி வைப்பேன்னு நீ எதிர்பார்க்கிறது முட்டாள்தனம்..." என்று கூறியவன்,

"சரி, அர்ஜுன்! இப்போதைக்கு எதுவும் பேச வேண்டாம். நீ உணர்ச்சிவசப்பட்ட நிலையில் இருப்பே... ஒரு இரண்டு நாள் இங்கேயே தங்கிக்கோ... நீ வேற எதைப் பத்தியும் யோசிக்காமல் நல்லா ஓய்வெடு... உடல் ஓய்வானால் மனசும் கொஞ்சம் ஓய்வாகிடும். அப்புறம் நாங்க உன்னை வந்து பார்க்கிறோம்..." என்று கூறியவன், பாரதியிடம், "பேசிவிட்டு வா, குட்டி! நான் காரில் இருக் கேன்..." என்று கூறிவிட்டு, அவன் தோளில் ஆதரவாகத் தட்டிவிட்டுச் சென்றான்.

பாரதி, "அர்ஜுன்... நான் எதுவும் சொல்லப் போற தில்லை... சித்தப்பா சொன்னதுதான் நானும் சொல்லப் போறேன்... ஆனா மறுபடியும் தற்கொலை அது இதுன்னு முட்டாள்தனமா முயற்சி பண்ணாதே... அது மட்டும்தான் எனக்கு வேணும். ஆனால் நீ செய்யமாட்டேன்னு நம்ப றேன், அர்ஜுன்!" என்றவள்...

அவன் எங்கோ பார்த்துக் கொண்டிருக்க,

"நீ என்னை விலக்கி வைக்கிறேனு நல்லாத் தெரியுது, அர்ஜுன்... ஆனால், நான் உன்னை விட மாட்டேன்... உன் முன்னேற்றத்திற்குத் தக்க உதவி செஞ்சிட்டுத்தான் இருப்பேன், கண்ணா..." என்று கூற,

அவன் அவளைச் சட்டென்று பார்க்க...

அவளின் குறும்புத்தனம் மேலோங்க, "பாருடா... கண்ணானு கூப்பிட்டாத்தான் கொஞ்சமாவது தரிசனம் கிடைக்குது... சரி வரேன், கண்ணா. பை..." என்று சிரிப்புடன் கூறிவிட்டு ஓடிச் சென்றவளைக் கண்டு பல்லைக் கடித்தான் அர்ஜுன்.

காரில் வரும் பொழுது பெருத்த மௌனம் நிலவியது. திருதான் அதை உடைத்தான்.

"நீ அவன் தற்கொலை செய்துக்கப் பார்த்தானு சொல்லும்போது எனக்கே அதிர்ச்சியாத்தான் இருந்தது, குட்டி... ஆனால், அவன் மனசில்தான் எவ்வளவு வலி... இந்தச் சின்ன வயதில் அவனுக்கு இதெல்லாம் அதிகம் தான்டா. இவன் வயதில்தான் நானும் கஷ்டப்பட்டேன்... இப்போ இவனும்... கண்டிப்பா சொல்றேன் குட்டி... அர்ஜுன் பெரிய ஆளா வருவான். நீ வேணாப் பாரு..." என்று கூற,

பாரதி, "ஆமா, சித்தப்பா! கண்டிப்பா. எனக்கு இப்போவே அந்த ஹரிஹரனைப் பார்த்து வெட்டிப் போடணும் போல் இருக்கு, சித்தப்பா... என்ன பிறவி அவன்...?" என்று பல்லைக் கடிக்க,

திரு, "விடு குட்டி... அவன் அப்பவே அப்படித்தான்... ஆனால், அர்ஜுனிற்கு இப்படிப்பட்ட துரோகம் செய் வான்னு நான் எதிர்பார்க்கவே இல்லை. அவனால்தான் அர்ஜுன் நம்மளை நம்புறதுக்குக் கூடப் பயப்படுறான்... இப்போதைக்கு ஹரிஹரனைத் தண்டிக்கிறதை விட அர்ஜுனை முன்னேற வைக்கணும். அதுதான் முக்கியம். கெட்டவங்களைக் கடவுள் பார்த்துப்பார்!" என்று கூறிய வனை...

தலை சாய்த்துப் பார்த்த பாரதி, குறும்புடன், "பாருடா திரு... தத்துவமெல்லாம் பேசுது..." என்று நக்கலாகக் கூற,

திரு, "உங்கிட்ட இது ஒண்ணு இருக்கு குட்டி... சீரியஸாப் பேசும்போது காமெடி பண்றது... காமெடியாப் பேசும்போது சீரியஸா இருக்கிறது... என்ன பழக்கமோ?" என்று செல்லமாகச் சலித்துக் கொள்ள,

பாரதி தன் தலையைச் சொறிந்து, "ஆமா இல்ல... அது என்னோட மேனுஃபேக்சரிங் டிஃபெக்ட் போல, சித்தப்பா!" என்று அசடு வழிய,

திரு ஓரக் கண்ணால் அவளைப் பார்த்து, "அதுக்குத் தான் படிச்ச ஒரு இஞ்சினியர் இருக்காரே... அவர்கிட்ட உன்னை ஒப்படைக்கலாமா?" என்று குறும்புடன் கேட்க,

பாரதி அவனிடம் மாட்டிக் கொண்ட அதிர்ச்சியில் பேய் முழி முழித்தாள். "சித்... சித்தப்பா... நீ என்ன சொல்றே?" என்று கேட்க,

திரு, "பாரதிக்குக் கூடத் திக்குதே... உன் ஒவ்வொரு அசைவும் எனக்கு அத்துப்படி குட்டி... உன் அம்மா

அப்பாவை விட நீ என்கூடத் தூங்கின நாட்கள்தான் ஜாஸ்தி... என்னை ஏமாத்த முடியாது. உண்மையைச் சொல்லு, உனக்கு அர்ஜுனைப் பிடிச்சிருக்கா?" என்று கேட்க, பாரதி என்ன சொல்வது என்று தெரியாமல் தலை குனிந்தாள்.

என்னதான் படித்தவளானாலும், சித்தப்பாவிடம் ஒட்டிக் கொள்பவளானாலும், இந்த விஷயத்தை வெளிப் படையாகக் கூற அவளுக்கு ஒரு மாதிரிச் சங்கடமாக இருந்தது. எனவே அவள் மௌனமாக இருக்க...

திரு, "என்ன பேச மாட்டேங்கிற... அதிசயமா இருக்கு. நீ எப்பவுமே நல்ல முடிவுதான் எடுப்பே, குட்டி. அந்த நம்பிக்கை எனக்கு இருக்கு.. ஆனால், இது ஒரு பரிதாபத்தால், ஒரு ஏக்கத்தால் வந்த ஒரு நெருக்கமாக இருக்கலாம். ரொம்ப நாள் கழித்துப் பார்த்த ஒரு நண்பன் கஷ்டப்படுறதைப் பார்க்கும்போது, மனம் அவன்பால் ஈர்க்கப்படுவது சகஜம்தான். ஆனால், அந்த ஈர்ப்பு காதலா இல்லையானு போகப் போகத்தான் தெரியும்.

"நான் இவ்ளோ தூரம் ஏன் சொல்றேன்னா... இதுவே நான் அப்பாவா இருந்திருந்தால் போய் கல்யாணத்தைச் செய்துக்கிட்டு வந்து பாருன்னு தைரியமா சொல்லியிருப்பேன். ஆனால், நான் உன் சித்தப்பா. எனக்கென்று சில எல்லைக் கோடுகள் இருக்கு. நான் இந்த வரையறைக்குள்தான் இருக்க முடியும்.

"நாளைக்கு என் வளர்ப்பை யாரும் குத்தம் சொல் லாத மாதிரி பார்த்துக்க வேண்டியது உன் பொறுப்பு!" என்று தந்தையாய் மாறி அறிவுரை போலும் இல்லாமல்

திட்டுவது போலவும் இல்லாமல் சகஜமாக ஒரு தோழனைப் போல் வெளிப்படையாகப் பேச, அது அவளுக்குப் பிடித் திருந்தது.

எனவே, "சித்தப்பா... நீ சொல்றது எனக்கு நல்லா புரியுது. நான் இப்போதைக்கு அவனுக்கு உதவியா இருக்கத்தான் போறேன். துணையாய் இருக்க இல்லை. என் மனசைப் பத்தி நான் முழுமையாய் அறிஞ்சிட்டுதான் என் மனசை அவன்கிட்ட சொல்வேன் சித்தப்பா. அதுவும் இல்லாமல் எனக்கும் என் எல்லைக் கோடு தெரியும். நான் திரு வளர்த்த பெண், சித்தப்பா... எந்தக் காரணம் கொண்டும் கண்ணியம் தவற மாட்டேன்!" என்று உறுதி யளிக்க...

அவள் கையை நம்பிக்கையுடன் பற்றிக் கொண் டான், திரு.

ஆனால், அவன் நினைத்ததற்கு நேர்மாறாக இரண்டு நாட்கள் கழித்து அவர்கள் போய்ப் பார்க்க... அர்ஜுன் முன்தினமே அறையைக் காலி செய்துவிட்டதாக அந்த ஹோட்டலில் கூற,

திருவும் பாரதியும் ஏமாற்றத்துடன் திரும்பி வந்தனர்.

பாரதி, "நான் நினைச்சேன், சித்தப்பா. அவன் இப்படித்தான் செய்வான்னு நினைச்சேன். அதே மாதிரி செய்துட்டான்... எங்கே போனான், எப்படி இருக்கான், ஒண்ணுமே தெரியலையே, சித்தப்பா!" என்று குழம்ப,

திரு ஆதரவாக, "கவலைப்படாதே குட்டி. என் பதவி இருக்கே... அது எனக்கு உதவி செய்யும். நாளைக்

குள்ளே அர்ஜுன் எங்கே இருக்கான்னு கண்டிப்பா தெரிஞ்சிடும், கவலைப்படாதே...” என்று சமாதானப்படுத்த, அவள் முகம் தெளிந்தது.

அர்ஜுன் அன்று பாரதி கொடுத்த பணத்தில் சென்னைக்கு வந்திருந்தான். வந்தவன் வேலை தேடி அலைந்தான்.

ஹரிஹரன் இருக்கிற எல்லாக் கம்பெனிகளிலும் அவன் ஜெயிலுக்குச் சென்றவன் என்ற செய்தியைச் செவ்வனே பரப்பியிருந்தார். அதுவும் இன்றி எம்.பி. விஷயம் ஆதலால் யாரும் தலையிடத் தயாராக இல்லை.

அதனால் நடந்து கால்தான் வலித்ததே தவிர, வேலை கிடைக்கவில்லை. சரியான சாப்பாடும் இல்லை... கோவில் ஒன்றில்தான் படுத்துக் கிடந்தான். ஆனால், அவன் மனதில் ஒரு நினைப்பு இருந்தது. என்ன செய் தாலும் வாழ்ந்தாலும் செத்தாலும் அது ஹரிஹரன் வாழும் இடத்தில் அதாவது சென்னையில்தான் நடக்க வேண்டும்... என்பதுதான் அது.

அந்த அளவிற்குச் சென்னையில் கால் பதிக்கத் தீவிரமாக இருந்தான்... ஏனோ பாரதியைப் பார்த்ததில் இருந்து மனதில் ஒரு நேர்மறை அதிர்வு ஏற்பட்டிருந்தது. ஆனாலும் அவர்கள் கூடவே இருந்து அவர்களைத் தொல்லை செய்ய அவன் விரும்பவில்லை. வாழ்ந்த காலத்தில் அவர்களை மதிக்காமல் இப்போது மட்டும் அவர்களிடம் சென்றால் அது பெரும் சுயநலம் என்று நினைத்ததால் அவர்களிடம் கூறாமலேயே சென்னைக்கு வந்து சேர்ந்தான்.

ஆனால், வந்தவுடன் அவனுக்கு யாரும் சிவப்புக் கம்பளமிட்டு வரவேற்கவில்லை. ஹரிஹரனிற்குத் தெரிந்தவர்களும் அவனுக்கு உதவவில்லை. அவனுக்குத் தெரிந்தவர்களும் அவனுக்கு உதவவில்லை. மனச் சோர்வு அதிகரித்தது.

ஒரு நாள் அப்படித்தான் ஒரு டீக் கடையில் டீ சொல்லி விட்டு அமர்ந்திருந்தான்.

அப்போது, “என்ன அர்ஜுன்... இப்படி ஓடி வந்தால் உன்னை விட்டுடுவேனு பார்த்தியா?” என்று குறும்பாக ஒரு குரல் கேட்க,

அதிர்ந்து போய்த் திரும்பிப் பார்க்க, அங்கே சிரித்தபடி பாரதி நின்றிருந்தாள்.

அவளைப் பார்த்ததும், “என்ன... நீ இங்கே எப்படி?” என்று கேட்க,

பாரதி, “ஹான்... டீ குடிக்கலாம்னு வந்தேன்... அண்ணே! டீ ஒண்ணு போடுங்கண்ணே!” என்று கூறி விட்டு, அவனிடம் அமர, அவனோ தள்ளி அமர்ந்தான்.

பாரதி அவன் விலகலைப் பார்த்து, “பாருடா... நடத்து நடத்து... என்ன அர்ஜுன்... வேலை ஏதாவது கிடைச்சுதா?” என்று கேட்க,

அர்ஜுன் எரிச்சலுடன், “ஓஹ்.. அதைக் கிண்டல் பண்ணத்தான் வந்தியா? உன் தயவு இல்லாமல் என்னால் ஜெயிக்க முடியாதுன்னு நினைக்கிறியா?” என்று கத்த,

பாரதி, “பாருடா... ஒரு வாரம் முன்னாடி சாகப் போனவரு... இப்போ ஜெயிக்கறதைப் பத்திப் பேசுறாரு.

இந்தத் தன்னம்பிக்கையைத்தான் நான் உன்கிட்ட எதிர் பார்த்தேன், அர்ஜுன். எப்பவுமே தற்கொலை எண்ணம் ஒரு நிமிஷம்தான் இருக்கும். அதை நாம் கடந்துட்டோம் என்றால் மனம் கெட்டிப்பட்டு விடும். அப்புறம் எந்தத் தோல்வியும் கஷ்டமும் உன்னை எதுவும் செய்யாது. அதுக்காகத்தான் நான் உன்னைத் தனியா விட்டேன்... உனக்குத் தெரியுமா அர்ஜுன்... நீ ஊருக்கு வந்த அடுத்த நாளே எனக்கு விவரம் தெரியும்... இவ்வளவு நாள் உனக்கே தெரியாமல் உன்னைக் கண்காணிச்சிட்டுத் தான் இருந்தேன்..." என்று கூற,

அர்ஜுன், "உனக்கு வேற வேலை இல்லையா பாரதி...? உனக்குன்னு ஒரு வாழ்க்கை இருக்கு. அதைப் போய் வாழு... என் கஷ்டத்தை உன் தலையில் போட்டுக் காதே. உன்கிட்ட வாங்கிய பணத்தைக் கொடுக்கத்தான் இந்த வேலைக்கு நாயாக அலையறேன். கண்டிப்பா அதைத் திருப்பிக் கொடுக்கிறேன்," என்று கூற, பாரதிக்கு மனம் அடிபட்டது.

கேவலம் அந்தப் பணத்திற்காகவா இவன் பின்னாடி சுத்துறேன்.. சரி பாரதி, விடு. அவன் இப்படித்தான்னு தெரியுமே! அவனை உன் வழிக்குக் கொண்டு வா என்று மனதுக்குள் கூறியவள்... அர்ஜுனிடம், "இதைப் பாரு, அர்ஜுன்... உன்னை ஒரு நல்ல நிலைக்கு வரவைச்சிட்டு நான் என் வேலையைப் பார்க்கப் போறேன். சரியா? இது உனக்காக இல்லை... என் அம்மாவிற்காக!" என்று தழு தழுக்கக் கூற...

அர்ஜுன், "ஏன் பாரதி, அதையே சொல்றே? அழாதே...!" என்று மென்மையாகக் கூற,

பாரதி, "ப்ளீஸ், அர்ஜுன்... தயவு செய்து என் உதவியை ஏத்துக்கோ. நீ ஏன் மத்தவங்ககிட்ட போய்க் கைகட்டி வேலை பார்க்கணும். நீ ஒரு முதலாளியாகத் தான் இருக்கணும், அர்ஜுன்!

"நான் சித்தப்பாகிட்ட சொல்லி பணம் வாங்கித் தர்ரேன். தயவு செய்து வாங்கிக்கோ. ஏதாவது ஒரு சின்ன இடத்தில் ஆபீஸ் போட்டுக்கலாம்... கொஞ்சம் கொஞ்சமா முன்னேறலாம். என்ன சொல்றே, அர்ஜுன்...?" என்று அவன் முகத்தையே பார்க்க... அர்ஜுனிற்கு மறுக்கச் சொல்லி மனது கூறினாலும், அவள் முகம் அவன் அடி வயிற்றில் ஏதோ ஒன்றைப் பிசைய வைக்க... மந்திரத் திற்குக் கட்டுண்டவன் போல் தலையாட்டினான்.

பாரதி, "ய்யயே.. சூப்பர் அர்ஜுன்... நான் நினைச்சுக் கூடப் பார்க்கலை, நீ ஒத்துப்பேனு... இனிமே நான் உன் கூடவே இருப்பேன் அர்ஜுன். நீ போகச் சொன்னாலும் போக மாட்டேன். சரியா?" என்று கத்த...

அர்ஜுன், "உன் சித்தப்பா, அண்ணாவெல்லாம்..." என்று வினவ...

பாரதி, "நான் ஏதாவது வேலை பார்க்கிறதா அண்ணன்கிட்ட சொல்லிக்கிறேன். அவன் எப்போதும் என் ஆசைக்குக் குறுக்கே நிக்கமாட்டான்... சித்தப்பா கிட்ட சொல்லிட்டுத்தான் வந்தேன். அவர் ஒண்ணும் தப்பா நினைக்க மாட்டார். முதலில் எனக்கு ஒரு ஹாஸ்டல் பார்க்கணும், அர்ஜுன். நாலு நாளா என் ஃப்ரெண்டு வீட்டில்தான் தங்கிட்டு இருக்கேன். அவளுக்கு எதுக்குக் கஷ்டம்... உனக்கு ஏதாவது தெரியுமா?" என்று கேட்க,

அவன் தலையாட்டிப் பின், "ஆனா நீ கொடுக்கிற பணத்தைக் கடனாத்தான் வாங்கிக்கிறேன். வட்டியும் முதலுமாத் திருப்பித் தந்திடுவேன். சரியா?" என்று அழுத்த மாகக் கூற...

அவளுக்கும் ஒத்துக் கொள்வதை விட வேறு வழி இருக்கவில்லை.

"சரி, அர்ஜுன்.. இனிமே நான் சொல்றதைக் கேளு. என்னைத் திட்டணும்னா திட்டு... அடிக்கணும்னாலும் அடி. எனக்குக் கவலையில்லை.. ஆனால், என்கிட்ட இருந்து எதையும் மறைக்கக் கூடாது. எதை நினைச்சும் ஃபீல் பண்ணக்கூடாது... முக்கியமா விரக்தியடைஞ்சு மனசைத் தளர விடக்கூடாது. சரியா?" என்று பேசிப் பேசியே அவன் மனதைத் திடப்படுத்தினாள்.

கொஞ்சம் கொஞ்சம் அவன் தன்னம்பிக்கையை வளர்த்தாள். அவனாலும் வெற்றியடைய முடியும் என்று நம்ப வைத்தாள்.

அவன் வளமான எதிர்காலத்திற்கு அடித்தளமாக அந்தத் தேநீர்க் கடையின் வானொலி அந்தப் பாரதியின் பாடலை இசைக்க ஆரம்பித்தது.

"மனதில் உறுதி வேண்டும்
வாக்கினிலே இனிமை வேண்டும்!
நினைவு நல்லது வேண்டும்
நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்
கனவு மெய்ப்பட வேண்டும்
கைவசமாவது விரைவில் வேண்டும்
மனதில் உறுதி வேண்டும்...!"

என்று ஜேசுதாஸின் குரலில் அந்தப் பாடல் ஒலிக்க... அவர்கள் வாழ்வும் மலர ஆரம்பித்தது.

**பி**ன் வெகு விரைவாக அனைத்து வேலைகளும் நடக்க ஆரம்பித்தன.

திரு அவனுக்குப் பணத்தைக் கொடுக்க... அடுத்த நாளே ஒரு சிறிய இடத்தில் தங்கள் 'நாதன் ஃபுட் ப்ராடக்ட்ஸ்...' தொடங்கினர்.

பாரதி கூட, "ஏன் நாதன் என்று பேர் அர்ஜுன்? எனக்குப் புரியலை!" என்று கேட்க,

"என் அப்பா பேர் விஸ்வநாதன்... இதுநாள் வரைக்கும் அவர் பேர் என்ன என்று கூடத் தெரியாமல் இருந்துட்டேன்... இனிமேலாவது அவர் பேரை உபயோ கிக்கலாம்னுதான்..." என்று கூறித் தன் தாயின் பெரிய புகைப்படத்தை ஆபீஸில் பெரியதாக மாட்டி வைத்தான்.

பாரதி முதலில் அங்கு வேலை செய்யவில்லை. அவனுக்கு உதவிகள் செய்தாளே ஒழிய அங்கேயே வேலை செய்து பி.ஏ.வாக எல்லாம் இல்லை. அர்ஜுனும் இப்போது மாதிரி அவளிடம் துவேஷம் காட்டமாட்டான். ஒட்டாமல் இருப்பானே ஒழிய அவளை அடக்கி அவமானப் படுத்தியதே இல்லை. ஆனால் அதற்கு ஏற்ற ஒரு நாள் நெருங்கிக் கொண்டிருந்தது.

அர்ஜுனிடம் உழைப்பு என்றால் அசுரத்தனமான உழைப்பு... இராப்பகல் பாராமல் உழைத்தான். ஆர்டர் களைப் பிடித்தான்... பாரதியும் அதற்கு உதவியாக இருந் தாள்.

தன் பேச்சுச் சாதுர்யத்தாலேயே அனைவரையும் வளைத்தாள். இதனால் அவர்கள் கம்பெனி முதல் ஆறு மாதங்கள் திணறினாலும்... பிறகு ஓரளவு சூடு பிடிக்க ஆரம்பித்தது.

என்னவோ ஹரிஹரனின் தலையீடு எதுவும் இப்போது இருப்பதாகத் தெரியவில்லை. நேர்மையும் திறமையும் மட்டுமே தங்கள் முதலீடாகக் கொண்டு அணுகினர்.

எனவே அது அவர்களை எடுத்துக் காட்டியது.. அர்ஜுன் தோல்விகளால் துவண்டு போகும் போதெல் லாம் பாரதிதான் அவனைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தேற்றினாள்.

அவனுக்கு ராஜ தந்திரம் கற்றுக் கொடுக்கும் சாணக்கியனாகவும் இருந்தாள். சில சமயம் அவன் தலையிலேயே கால் வைத்து அடக்கும் வாமனனாகவும் இருந்தாள்.

ஆனால், அவளுக்கு அவனிடம் பிடிக்காத ஒரே விஷயம் அவன் குடிப் பழக்கம்... என்னதான் இருந்தாலும் அவனால் குடிக்காமல் தூங்க முடியாது. கேட்டால், "தயவு செய்து இந்த விஷயத்தில் தலையிடாதே பாரதி... நீ என்ன சொன்னாலும் கேட்கிறேன். ஆனால், அது மட்டும் இல் லாமல் என்னால் தூங்க முடியாது!" என்று சொன்ன தையே கூற... அவளுக்கு அதற்கு மேல் பேச முடிய வில்லை. அப்படியே விட்டுவிட்டாள்.

ஆனால், அவன் கூறியபடி மற்ற விஷயங்களில் அவன் தட்டியதே இல்லை. இப்படியாகப் போய்க் கொண்டிருந்த உறவில் ஒரு நாள் சரிவு வந்தது.

ஒரு நாள் பாரதி, "அர்ஜுன்... ஒண்ணும் பேசாதே. அவரே வந்து தொகையைக் குறைப்பார். சும்மா சும்மா பேசினால் சண்டைதான் வரும். நான் சொல்றதைக் கேளு..." என்று ஒரு ஸ்பின்னிங் மில் வாங்கும் விஷய மாகத் தன் அறிவுரையைக் கூற,

அர்ஜுன், "அதில்லை பாரதி... அந்த ஹரிஹரன் மாதிரியே நானும் அவன் தொழிலிலேயே கால் பதிக் கணும்... அதுக்கு நான் அந்த ஸ்பின்னிங் மில் வாங்கியே ஆகணும். ஆனா அவன் சொல்ற தொகையைப் பார்த் தால் தலை சுத்துது..." என்று கம்மிய குரலில் கூற,

பாரதி, "கவலைப்படாதேடா... ஒரு அரை மணி நேரத்தில் உனக்குக் கால் வரும் பார்..." என்று கூறி விட்டுச் செல்ல... அதே போல் அரை மணி நேரத்தில் அவரே அழைத்து, அவன் கேட்ட தொகைக்குப் பேசி முடிக்க... அர்ஜுன் சந்தோஷத்தில் திளைத்து... பாரதியிடம் ஓடிச் சென்று விஷயத்தைக் கூறி, "எனக்கு ரொம்பச் சந்தோஷமா இருக்கு, பாரதி... எப்படி கரெக்ட்டா சொன்னே... எனக்கு எதையோ சாதிச்ச மாதிரி திருப்தி... நன்றி..." என்று கூற,

பாரதி, "நான்தான் சொன்னேன் இல்ல, அர்ஜுன். நாம கண்டுக்காமல் விட்டா அவங்களே வருவாங்க. உன் சந்தோஷமதான் என் சந்தோஷம் அர்ஜுன்... நன்றி யெல்லாம் சொல்லி என்னை வேத்து மனுஷியாக்காதே..." என்று கூற,

அவனுக்கு இருந்த உற்சாகத்தில், "உன்னை யார் அப்படி நினைச்சா...? அந்த உரிமையாளர் சொல்றார்,

உங்க வைஃபையும் கூட்டிட்டு வந்து பத்திரப் பதிவு செய்துக்கங்கன்னு... அந்த அளவிற்கு நீ என் கூடவே இருக்கே பாரதி... நான் சொல்லிட்டேன், அவ என் ஃபிரெண்டுதான். வேற ஒண்ணுமில்லைனு... எனக்காக உதவி செய்ய வந்துட்டு உன் வாழ்க்கை கேள்விக் குறி யாகிடக் கூடாது பாரு..." என்று உண்மையான அக்கறை யில் கூற,

பாரதி வாயை மூடிக் கொண்டு சும்மா இருந்திருக்க லாம். "ஏன் அர்ஜுன்... அவர் சொன்னதில் என்ன தப்பு...? உன் பொண்டாட்டியா நான் இருக்கக்கூடாதா?" என்று குறும்புடன் கேட்க,

அர்ஜுன் அதிர்ந்து போய், "ஏய்... என்ன சொல்றே? அப்படின்னா நீ என்னை..." என்று திணறலுடன் கேட்க....

பாரதி சற்றும் அசராமல், "அஃப்கோர்ஸ் அர்ஜுன்... நான் உன்னைக் காதலிக்கிறேன்தான்.. ஏன், கூடாதா?" என்று ஏதோ 'திருச்சிக்குப் போகக் கூடாதா?' என்பது போல் அசால்டாகக் கேட்க,

அர்ஜுன் சட்டென்று கோபம் ஏறி, அவள் கன்னத்தில் பளாரென்று அறைந்தான்.

பாரதிக்குக் கண்களில் பூச்சி பறக்க... சில வினாடிகள் என்ன நடந்தது என்றே அவளுக்குத் தெரிய வில்லை. அதிர்ச்சியுடன் அவனைப் பார்க்க, "எனக்குத் தெரியும்டி. கொஞ்ச நாளா உன் பேச்சு, பார்வை எதுவும் சரியில்லை. அப்போவே நினைச்சேன்... இது மாதிரி ஏதாவது இருக்கும்னு...

"உன்னைப் போய் ஏதோ தேவதை ரேஞ்சுக்கு வைச்சிருந்தேனேடி... கடைசியில் நீயும் எங்கிட்ட காதல் வேஷம் போட்டு ஏமாத்த வந்தவளா? இனிமே என் கண்ணிலயே முழிக்காதே. உன்கிட்ட வாங்கின பணத்தை வட்டியும் முதலுமா இன்னும் கொஞ்ச நாளில் தந்திடு றேன். போயிடு இங்கே இருந்து..." என்று கத்த...

பாரதிக்கு அப்போதுதான் தான் செய்த முட்டாள் தனம் தெரிந்தது. "சே! உனக்குக் கொஞ்சம் கூட அறி வில்லை பாரதி... இப்படியா சொல்லித் தொலைப்பே...!" என்று தன்னைத் தானே திட்டிக் கொண்டு, அர்ஜுனிடம், "இதைப் பாரு. உன்னை ஒருத்தி காதல் என்று பேர் சொல்லி ஏமாத்தி யிருக்கலாம். அதுக்காக எல்லாரையும் அப்படி நினைக்காதே...!" என்று கூற,

அர்ஜுன், "என்னைப் பொறுத்தவரை காதல் எல்லாம் சுயநலம்தான். அவள் வேற, நீ வேற இல்லை. இங்கே யிருந்து போயிடு. இனிமே நின்றால் நான் உன்னைக் கொல்லக் கூடத் தயங்க மாட்டேன்..." என்று கூறி விட்டுத் தன் அறைக்குச் சென்று விட்டான்.

பாரதியும் சில நிமிடங்கள் அங்கே நின்றுவிட்டுத் தன் விடுதிக்குச் சென்று விட்டாள்.

சில நாட்கள்தான்... அர்ஜுனால் தனியே வேலை செய்ய முடிந்தது. அதிலும் இப்போது வேலைப் பளு வேறு அதிகமாகி விட்டதால் அவனால் எல்லா வேலை களையும் ஞாபகம் வைத்துச் சரிவரச் செய்ய முடிய வில்லை. எனவே ரொம்பவே திணறிப் போனான். ஆனால், ஏனோ பாரதியை மறுபடியும் கூப்பிட அவன்

தன்மானமும் பிடிவாதமும் அவள் மேல் உண்டாகியிருந்த கோபமும் இடம் கொடுக்கவில்லை. எனவே என்ன செய் வது என்று தெரியாமல் விழித்த வேளையில்,

ஒரு நாள், "மே ஐ கம் இன் சார்..." என்று குரல் கேட்டது. அந்தக் குரல் கேட்டு அவன் அதிர்ந்து போய்ப் பார்க்க... அவன் நினைத்தது போல் அங்கே பாரதிதான் நின்றிருந்தாள். அவளைக் கண்டதும்,

"ஏய்... போ வெளியே! இங்கே ஏன் வந்தே?" என்று காச்மூச் என்று கத்த...

அவள் காதில் கை வைத்து, "ஓ.கே. பாஸ்... நான் ஒண்ணும் உங்க லவ்... சாரி ஃப்ரெண்டா வரலை... உங்களுக்கு ஒரு பி.ஏ வேணும்னு சந்திரன் சார்கிட்ட சொல்லியிருந்தீங்களாம். ரொம்ப வேலை ஜாஸ்தி யாகிடுச்சு. சமாளிக்க முடியலைனு சொன்னீங்களாம்... அவர்தான் என்னை அனுப்பி வைச்சார். இதோ என் ரெஸ்யூம்!" என்று மிக பவ்யம் போல் நடித்து அவனிடம் ஃபைலைத் தர,

அவன் தொட்டுக் கூடப் பார்க்காமல், "ஏய்... உன் னோட சால்ஜாப்பு எல்லாம் எனக்குத் தெரியும். சும்மா நடிக்காமல் இங்கே இருந்து போ. பி.ஏ.வாம்... பி.ஏ. உன்னை மறுபடியும் என்கிட்ட விடுற அளவிற்கு நான் முட்டாள் இல்லை..." என்று கத்த,

அவன் கூறியதைக் கேட்டுப் பாரதி வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரித்தாள்.

அர்ஜுன், "இப்போ என்ன நடந்திச்சுன்னு சிரிக்கிறே! என்ன நக்கலா?" என்று எகிற,

பாரதி ஆசுவாசப்பட்டுக் கொண்டு, "பின்ன என்ன பாஸ்... நீங்க இவ்ளோ பயந்தாங்கோலியா இருப்பீங் கன்னு நான் எதிர்பார்க்கவே இல்லை. என்கிட்ட விழுந்திடு வோம்னு பயமா இருக்கா?" என்று கண்ணடித்துக் கேட்க,

அர்ஜுன் வெகுண்டு எழுந்து, "யாருக்குடி பயம்... நீ என்ன ரதி தேவியா? உன்கிட்ட விழுறதுக்கு... அதுக்கு வேற ஆளைப் பாரு.." என்று கூற,

பாரதி விஷமப் புன்னகையுடன், "அப்படின்னா... என்னை வேலைக்கு வைச்சிக்கோங்க பாஸ். உங்க மேல நம்பிக்கை இருந்தால் என்னை வெளியே அனுப்ப மாட்டீங்க. அது இல்லாததால்தானே என்னை வெளியே அனுப்பறதில இருக்கீங்க..." என்று கேட்க,

அர்ஜுன், "என்ன... என்னைக் கார்னர் செய்றதா நினைப்பா? இப்போ சொல்றேன்... நீ தலைகீழா நின் னாலும் நான் உன் காதலை ஏத்துக்க மாட்டேன். அதுக்காக உனக்குப் பயப்படவும் மாட்டேன். நாளை யிலிருந்து வேலைக்கு வா. இனிமே எனக்கு நீதான் பி.ஏ..." என்றவன்,

அவள் முகத்தில் தெரிந்த சந்தோஷத்தைப் பார்த்து விட்டு, "ரொம்பச் சந்தோஷப்படாதே. எனக்குன்னு சில நிபந்தனைகள் இருக்கு. அதுக்கு ஒத்துக்கிட்டா நீ வேலைக்கு வரலாம்," என்று கூற...

அவளும் கேள்வியுடன் பார்க்க...

"இங்க உனக்கு எந்த விதமான சலுகையும் கிடை யாது... மாசம் எட்டாயிரம் சம்பளம். அதுக்குள்ளதான் நீ

உன் வாழ்க்கையை நடத்திக்கணும். உன் வசதி ஆடம் பரத்தை எல்லாம் இங்கே காட்டக் கூடாது. ஒரு பி.ஏ. என்ன வேலையெல்லாம் செய்வானோ அதை விட நிறைய வேலைகளை நீ பார்த்துக்கணும். எட்டு மணி நேரம்தான் வேலை செய்வேனு சொல்லக் கூடாது. கூப்பிட்ட நேரத்துக்கு வரணும்.

"சுருக்கமாச் சொல்லணும்னா ஒரு அக்மார்க் மிடில் கிளாஸ் பொண்ணா நீ மாறணும்..." என்று கூற,

பாரதிக்கு ஒன்றும் புரியவில்லை. இதை எல்லாம் ஏன் செய்யச் சொல்கிறான் என்று அவளுக்குத் தெரிய வில்லை...

அதற்குள் அவனே, "இதை எல்லாம் ஏன் சொல் றேன்னு ஆச்சர்யமா இருக்கா! அவ என்கிட்ட பணம் இல்லைன்னுதானே என்னை விட்டுப் போனா. நீயும் அந்தப் பண உதவி இல்லாமல் என்கிட்ட எவ்வளவு நாள் காலம் தள்ளுறேனு பார்க்கத்தான். ஆனால், அது சுலப மில்லை, பாரதி. நிறையக் கஷ்டங்களையும் அவமானத் தையும் தாங்க வேண்டியது வரும். இதெல்லாம் உனக்குத் தேவையா? பேசாமல் இங்கே இருந்து போயிடு. உன் வீட்டில் மகாராணி மாதிரி இருக்கலாம். உன்னால் இது முடியாது!" என்று கூற,

பாரதி உறுதியுடன் நிமிர்ந்தாள். "ஓஹ்... இதுதான் உன் எண்ணமா? இப்போ சொல்றேன், அர்ஜுன்... இந்த நிமிஷத்தில் இருந்து என் வசதி எல்லாம் விட்டு வர்றேன்... அதெல்லாம் இப்போ வந்தது. நான் ஒண்ணும் பொறந் ததில் இருந்து பணத்தில் கொழிக்கலை. அதனால் எனக்கு

அது ஒரு பிரச்சினையே இல்லை. நீ சொல்ற நிபந்தனைகளுக்கு ஒத்துக்கிறேன்... என் காதல் உண்மைன்னு காட்டுறேன். நீயே ஒரு நாள் பாரதி என்னைக் காதலினு என்கிட்ட வந்து கேட்க வைக்கிறேன்... நீ எவ்ளோ என்னை அவமானப்படுத்தினாலும் துவேஷம் காட்டினாலும் நானா இந்த ஆபீஸை விட்டும் உன்னை விட்டும் போக மாட்டேன். இது கண்டிப்பா என்னால் முடியும்..." என்று சூளுரைக்க,

அர்ஜுன், "நான் சொல்றேன். உன்னால் கண்டிப்பா முடியாது. நீ, 'என்னை விட்டுடு அர்ஜுன்! என்னால் தாங்க முடியாது!'னு உன் வீட்டுக்குப் போகிறவரைக்கும் நான் உன்னை விடமாட்டேன்..." என்று கூற,

பாரதி, "நான் சொல்றேன். என்னால் முடியும்... சவாலா?" என்று கேட்க,

அர்ஜுனும், "சவால்தான். பார்க்கலாம், நீயா நானா என்று!" என்று அறைகூவல் விட்டான்.

காதலிப்பவளும் காதலிக்கப்படுபவனும் அவர்கள் சவாலில் ஜெயிப்பார்களா - தோற்பார்களா?

# 19

பெண்ணென்று பூமிதனிற்
பிறந்து விட்டால் - மிகப்
பீழை யிருக்குதடி தங்கமே தங்கம்;
பண்ணொன்று வேய்ங்குழல்
ஊதி வந்தான் - அதைப்
பற்றி மறக்குதில்லை பஞ்சை உள்ளமே

நேர முழுதிலுமப் பாவிதனையே - உள்ளம்
நினைத்து மறுகுதடி தங்கமே தங்கம்!
தீர ஒரு சொல்லின்று
கேட்டு வந்திட்டால் - பின்பு
தெய்வமிருக்குதடி - தங்கமே தங்கம்!

"உனக்குக் கொஞ்சமாவது அறிவிருக்கா... இல்லை, இருக்கானு கேட்கிறேன்... எந்தத் தைரியத்தில் இப்படி அவன்கிட்ட சவால் விட்டுட்டு வந்தே... இப்படி நீ கஷ்டப் படவா நான் உனக்காக ஓடி ஓடி உழைச்சேன்... காதலில் விட்டுக் கொடுத்தல் இருக்கலாம். ஆனால், பைத்தியக் காரத்தனம் இருக்கக் கூடாது. நீ செய்றது முழுக்க முழுக்கப் பைத்தியக்காரத்தனம்!" என்று மூச்சு வாங்கக் கத்திக் கொண்டிருந்தான் திரு. அவன் திட்டுவதைக் கேட்டுத் தலை குனிந்திருந்தாள் பாரதி.

அவன் நிறுத்தாமல், "இப்ப தலை குனிஞ்சு என்ன பிரயோஜனம்? அவன்கிட்ட சவால் விடறதுக்கு முன்னாடி கொஞ்சமாவது யோசிச்சிருக்கணும்... இப்ப கூட ஒண்ணும் கெட்டுப் போயிடலை. உனக்கு அர்ஜுன்தான் வேணும்னா நான் பேசுறேன். அவனுக்கு எடுத்துச் சொல்லிப் புரிய வைக்கிறேன். இல்லைன்னா, இதைச் சொல்லக் கஷ்டமா தான் இருக்கு. ஆனால் சொல்றேன்... அவனை மறந்திடு. அவன்தான் இவ்ளோ தூரம் விடாப்பிடியா இருக்கானே!" என்று கூற,

பாரதி அவன் கூறியதைக் கேட்டுச் சட்டென்று நிமிர்ந்து, "என்ன சித்தப்பா சொல்றே...? நான் தலை

குனிஞ்சது நீ அவ்ளோ தூரம் எடுத்துச் சொல்லியும் அவசரப்பட்டு என் காதலைச் சொல்லிட்டேனே என்று தானே தவிர, அவன்கிட்ட சவால் விட்டதற்காக அல்ல. அப்புறம் என்ன சொன்னே... அவனை மறக்கிறதா? அது என்னால் சத்தியமா முடியாது, சித்தப்பா... நீ ஆறு மாசம் முன்னாடி கேட்டது போல், நான் தடுமாறாமல் மிகத் தைரியமா நம்பிக்கையோடதான் சொல்றேன்... அவனை எனக்குப் பிடிச்சிருக்கு சித்தப்பா... வாழ்ந்தால் அவன் கூட வாழ்வேன்!" என்று கூற,

திரு ஆயாசத்துடன் பார்த்தான். "ஓஹ்! இவ்ளோ தைரியமா உனக்கு... இதுக்கு நான் மறுத்தால் என்ன செய்வே? எனக்கு நீ அவன்கிட்ட அடிமையாக வேலை செய்வது பிடிக்கவில்லை என்று சொன்னால் என்ன பண்றதா இருக்கே?" என்று ஒருவித ஏளனத்துடன் கேட்க,

பாரதி அவனின் அதே விஷமத்துடன், "நான் என் அப்பா, அம்மா கூட இருந்த நாட்களை விட என் சித்தப் பாவிடம் இருந்த நாட்கள்தான் அதிகம்... அதனால் அவரின் வைராக்கியம், பிடிவாதம் எல்லாம் கொஞ்ச மாவது இருக்காதா? நான் என் முடிவில் இருந்து மாறு வதா இல்லை. எனக்குத் தெரியும், என் அப்பாவை விட என் திரு என்னைப் புரிஞ்சி வைச்சிருக்கார். அதனால் அவர் என் விருப்பத்தை மதிக்காமல் இருக்க மாட்டார்..." என்று கூற,

அவளின் குறும்பையும் அதே சமயம் பிடிவாதத் தையும் அவனால் ரசிக்காமல் இருக்க முடியவில்லை... அவள் கண்களில் உள்ள நேர்மையும் தைரியமும் தன்னம்பிக்கையும் அவனுள் ஏதோ ஒரு மாற்றத்தை

விளைவிக்க, இதுவரை தன்னிடம் வாயைத் திறந்து இது தான் வேண்டும் என்று கேட்டே இராத தன் அண்ணன் மகளுக்காய்த் தன் பிடிவாதத்தை விட்டுக் கீழே வரத் துவங்கினான்.

ஆனாலும், "குட்டி... என் ராஜாத்தி மாதிரி பார்த்துக் கணும்னு தானேடா நானும் உன் அண்ணனும் கொள்ளை ஆசையா இருக்கோம்... ஆனால், நீ உன் காதலைக் கொஞ்சம்கூடப் புரிஞ்சிக்காமல் எவளோ ஒருத்தி கூட உன்னை ஒப்பிட்டு உன்னை அடிமையாக்க நினைக்கிற ஒருத்தன் கூடப் போய் வேலை செய்யப் போறேன்னு ஒத்தைக் காலில் நிக்கிற... ப்ளீஸ் டா, குட்டி! யோசி..." என்று அவள் உச்சந் தலையை ஆதரவாகக் கோத...

அவன் கையை மெதுவாகப் பிடித்த பாரதி, "சித்தப்பா... நீயே அன்னைக்குச் சொன்னே – அவன் வாழ்க்கையில் சொல்ல முடியாத அளவிற்கு அடி பட்டிருக்கான் என்று. அவன் பின்னே எப்படி இருப்பான்? அவன்கிட்ட வேற என்ன எதிர்பார்க்க முடியும்...? நான் ப்ரப்போஸ் செய்ததும் உடனே எஸ் சொல்லி டூயட் பாடுவான் என்றா? இல்லை, சித்தப்பா... நான் செய்தது தான் தப்பு... கொஞ்சம் மெதுவா சொல்லி யிருக்கணும். தப்பு செய்துட்டேன். ஆனால், இப்போ நான் ஒத்துக் கலைன்னா அவன் நினைச்சது உண்மையாகிடும், சித்தப்பா... எல்லாப் பெண்களும் இப்படித்தான்னு நினைக்க ஆரம்பிச்சிடுவான்...

"அதனால் ப்ளீஸ் சித்தப்பா... அனுமதி கொடு... உன் பேச்சை மீறி என்னால் எதுவும் செய்ய முடியாது.

இப்போ கூட, நீ போகாதேனு சொன்னால் என்னால் எதுவும் செய்ய முடியாதுதான்... ஆனாலும் நீ என்னைப் புரிஞ்சிக்கணும்னுதான் இவ்ளோ சொல்றேன்..." என்று கூற,

திரு ஒரு நீண்ட பெருமூச்சிற்குப் பின், சில நிமிடங்கள் யோசனையில் திளைத்துப் பின், "சரி குட்டி... நீ போ... ஆனால் உன் பாதுகாப்பை எப்போதும் ஏதாவது வழியில் நான் கண்காணிச்சிட்டேதான் இருப்பேன். சரியா? உன் கண்ணில் இருந்து ஒரு சொட்டுக் கண்ணீர் வரக்கூடாது... அது என்னால் தாங்கவே முடியாதுடா... அப்புறம் அப்பப்போ வந்து எங்களைப் பாரு. உன்னைப் பார்க்காமல் எங்களால் இருக்க முடியாதுடா... இதுக்கு ஒத்துக்கிட்டா நீ போகலாம்..." என்று சம்மதம் தர,

ஓடி வந்து மகிழ்ச்சியுடன் அவனை அணைத்துக் கொண்ட பாரதி, "தேங்க்ஸ் திரு. ரொம்ப ரொம்ப தேங்க்ஸ்... நீ ஒத்துப்பேனு நான் நினைக்கவே இல்லை. என் கண்ணில் இருந்து ஒரு சொட்டுக் கண்ணீர் வராது, சித்தப்பா... கண்டிப்பா!" என்று தழுதழுக்க...

அவளை ஆதரவுடன் அணைத்த திரு, "உன் சந்தோஷம்தான் எனக்கு முக்கியம் குட்டி... நீ இது வரைக்கும் என்கிட்ட இதுதான் வேணும்னு கேட்டதே இல்லை... கேட்ட ஒரே விஷயம் இதுதான்... இதையும் என்னால் மறுக்கமுடியலை. ஆனால் எனக்கு இன்னும் நெருடலாத்தான் இருக்கு... ஆனால் உனக்கு ரொம்பக் கஷ்டமா இருந்தால் வந்திருடா... என்னால் தாங்க முடியாது..." என்று கண்களில் நீர் மல்கக் கூற, தன்

சித்தப்பாவின் அன்பில் வாயடைத்துப் போய் நின்றாள், பாரதி.

அதன் பின் காரியங்கள் மளமளவென நடந்தேறின.

அண்ணன் ராமிடம் தான் சென்னைக்குப் போவதாகக் கூறியபோது, அவன் தன் பங்கிற்கு ஜங்கு ஜங்கு என்று குதித்தான்.

"நீ என்ன நினைச்சிட்டு இருக்கே... மேல் படிப்புக்கு இரண்டு வருஷம் போகவே மூக்கால் அழுதே. இப்போ என்னடான்னா வேலை பார்க்கச் சென்னைக்குப் போறேன்னு சொல்றே... டெல்லியில் இல்லாத வேலையா? அதெல்லாம் வேண்டாம். வீட்டில் இரு!" என்று கூற,

பாரதி, "இல்லை, அண்ணா... அங்க நாங்க ஃப்ரெண்ட்ஸ் நாலு பேர் சேர்ந்து ஒரு ப்ராஜெக்ட் செய்யலாம்னு இருக்கோம்... அதான் சென்னையில் தான் அந்த ப்ராஜெக்ட் டீடெயில்ஸ் எல்லாம் ஏராளமா கிடைக்கும். அதான்..." என்று ஏதேதோ வாய்க்கு வந்ததைக் கூறிச் சமாதானம் செய்வதற்குள்... அவளுக்குப் போதும் போதும் என்றாகி விட்டது.

அதற்கு மேலும் விடாமல், "சரி. நான் சென்னைக்கு வந்து உன் ஃப்ரெண்ட்ஸைப் பார்த்துச் சொல்லிட்டுப் போறேன்..." என்று குண்டைத் தூக்கிப் போட,

பாரதி, "அய்யோ, அண்ணா...! ஏன் இப்படி உயிரை எடுக்கிறே? அதெல்லாம் நான் பார்த்துக்கிறேன்..." என்று தடுக்க... அவன் விடாப்பிடியாக இருக்க... திரு தான் ஆபத்பாந்தவனாக வந்து சேர்ந்தான்.

"ராம், இப்போ என்ன அவ பத்திரமா போறாளானு பார்க்கணும். அவ்ளோதானே... நான் போய் அவளை விட்டுட்டு பார்த்துட்டு வரேன். உனக்குத்தான் எக்கசக்க கேஸ் டென்ஷன்... எனக்கென்ன? நான் போறேன்... என்ன, சரியா?" என்று கேட்க,

ராமும் ஒருவாறு சமாதானமானான். ஆனாலும், "சரி சித்தப்பா... எல்லாம் பாதுகாப்பான இடமா? அவள் ஃப்ரெண்ட்ஸ் எல்லாம் எப்படி? எல்லாத்தையும் பார்த் துட்டு வாங்க. சரியா?" என்று அவனுக்கே ஆயிரத்தெட்டு அறிவுரை கூற,

திரு எரிச்சலுடன், "போதும்டா. நானும் போலீஸ் தான்... என் பொண்ணோட பாதுகாப்பைப் பார்த்துக்க எனக்கும் தெரியும். சும்மா துள்ளாமல் அடங்குடா...!" என்று கத்திய பிறகுதான் அவனே அடங்கினான்.

ஒரு வழியாக அவனையும் சமாதானப்படுத்தி, பாரதியைச் சென்னையில் விடுதியில் விட்டு விட்டுக் கண்ணீர் மல்க விடைபெற்றான் திருச்சிற்றம்பலம்.

பின் அவனிடம் காரியதரிசியாக வேலைக்குச் சேர்ந்து, கொஞ்சம் கொஞ்சமாக அவனைப் பற்றிப் புரிந்து அதற்கேற்றாற்போல் மாறி, அவன் தரும் அவமானத்தை யெல்லாம் பொறுத்துக் கொண்டு பணியாற்றி அவனின் மூளையாகச் செயல்பட்டு அலுவலக வேலை மட்டு மில்லாமல் வீட்டு நிர்வாகத்தையும் பார்த்துக் கொண்டு வருடத்திற்கு ஒரு வாரம் அவன் கையில், காலில் விழுந்து... மீண்டும் பெங்களூருக்கே மாற்றலாகி வந்திருக்கும் தன் குடும்பத்தைப் பார்த்துக் கொண்டு... அப்பாடி! இப்படியே நாலு வருடம் சென்றாகிவிட்டிருந்தது.

ஆனாலும் திருவின் ஆட்கள் அவளுக்கே தெரியாமல் அவளின் நிழல் போல் தொடர்ந்து கொண்டு அவளுக்குப் பாதுகாப்பாகத்தான் இருக்கின்றனர். எனவே தான் இரவு எத்தனை நேரமானாலும் பயமே இன்றி அவளால் வர முடிகிறது. இது எல்லாமே அர்ஜுன் என்ற ஒரு மனிதனுக்காகத்தான்.

"ஆனால், இவ்வளவு வருடங்களுக்குப் பிறகும் அவன் மனதில், குணத்தில் எந்த வித மாற்றமும் இல்லை..." என்று பாரதி, தன் வாழ்க்கையில் இதுநாள் வரை நடந்த நினைவலைகளில் இருந்து வெளியே வர, அவளையே கண் சிமிட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் மஹதி.

அவளைப் பார்த்ததும் பாரதிக்கே அறியாமல் அவள் கண்களில் இருந்து கண்ணீர் விழ... அவளிடம் சென்ற மஹதி அவளை ஆறுதலாக அணைத்துக் கொண்டாள்.

"சாரி பாரி... முழு விஷயமும் எனக்குத் தெரியாது. அதான் கொஞ்சம் எடக்குமடக்கா நடந்துக்கிட்டேன். உன் மனசை ரொம்பக் கஷ்டப்படுத்திட்டேனா...? என்னை மன்னிச்சிடு பாரி...!" என்று வேண்ட,

பாரதி அவள் தலையில் செல்லமாகக் கொட்டி, "இதுக்கெல்லாம் பெரிய மனுஷி மாதிரி மன்னிப்புக் கேட்காதே... என் மேலயும்தான் தப்பு. நான்தான் எல்லாத்தையும் உன்கிட்ட சொல்லியிருக்கணும். ஆனால் எனக்கு என்ன பயம்னா என்கிட்ட நெருங்கிப் பழக மாட்டியோனு தான். சாரி மஹி..." என்று அணைத்துக் கொள்ள... அங்கே நட்பின் ஊடலுக்குப் பின் அழகிய கூடல் அரங்கேறியது.

சிறிது நேரத்திற்குப் பின், "ஆமா மகி... இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்... உனக்கு யார் சொன்னா?" என்று கேட்க...

மஹதி சிரித்து, "அது அன்னைக்கு உன் பாஸ் வீட்டுக்குப் போனதில் இருந்தே எனக்குச் சந்தேகமா இருந்துச்சு, பாரி... அவருக்கும் உனக்கும் ஏதோ ஒரு உறவு இருக்குன்னு நல்லாத் தெரிஞ்சது. அதான் வினோத் கிட்ட சொன்னேன். நான்தான் சொல்லியிருக்கேனே, அவர் ஒரு பிரைவேட் டிடெக்டிவ். அவர்தான் எல்லா விவரமும் சொன்னார். அதாவது உன் குடும்பம், உன் படிப்பு... அந்த மாதிரிதான். மத்தப்படி வேற எந்த விஷயமும் எனக்குத் தெரியாது. இப்போதான் தெரிஞ்சது..." என்று கூற,

பாரதி விளையாட்டாக, "அடப் பாவிகளா! என்னைப் பத்தி புருஷனும் பொண்டாட்டியும் ரிப்போர்ட்டே ரெடி பண்ணிட்டீங்களா? நான் செத்தேன்..." என்று போலியாக அலற,

மஹதி சிரித்து, "போதுமடி. நீயெல்லாம் புளுகு மூட்டை. நீ பேசாதே. ஆமா, அர்ஜுன் உன் சித்தப்பா கிட்ட வாங்கின பணத்தைக் கொடுத்துட்டானா?" என்று தன் சந்தேகத்தைக் கேட்க,

பாரதி, "அதெல்லாம் ஒரு வருஷத்துக்குள்ளேயே அதைத் திருப்பித் தந்துட்டுதான் மறுவேலை பார்த்தான்!" என்று அலுத்துக் கொள்ள,

மஹதி, "அதானே பார்த்தேன்... அதான் உன்னைச் செமயா ட்ரில் வாங்குறான்..." என்று கிண்டலடிக்க,

பாரதி, "அடிங்க.... நக்கலா, உன்னை..." என்று தலையணை எடுத்து நாலு போட,

அது யுத்தமாக வலுத்துப் பின் களைத்து ஓய்ந்து கட்டிலில் படுத்து மூச்சு வாங்கிய மஹதி, "அது சரி... பாரி... நீ சொன்னது எல்லாம் சரிதான். ஆனால் உன் சித்தியை நினைச்சாதான் பாவமா இருக்கு. என்னவோ தெரியலை. என் எண்ணமெல்லாம் அவங்களைப் பத்திதான் இருக்கு. அவங்க இப்போ எங்கே இருக்காங்க...?" என்று கேட்க,

பாரதி, "தெரியலை மகி... அன்னைக்கு என்ன நடந்ததுன்னு ஒரு கலங்கிய காட்சிதான் என் மனதில் இருக்கு... எதுக்கோ கிச்சனுக்குப் போனேன். என் சித்தி என்னை அடி அடின்னு அடிச்சிட்டு ஓடினாங்க. அவ்ளோ தான். ஏதோ மெண்டல் பிளாக் மாதிரி, அது பத்தி எனக்கு ஞாபகமே வர மாட்டேங்குது. நானே கூட அடிக்கடி அவங்களைப் பத்தி கேட்பேன். ஆனால் சித்தப்பா அதட்டிப் பேச்சை மாத்திடுவார்.

"ஆனால், என் ஆசையெல்லாம் என்ன தெரியுமா? சித்தப்பாவும் சித்தியும் சேரணும்னுதான். சின்ன வயசில தான் ஏதோ மாதிரி ஒட்டாமல் இருந்துட்டேன்... ஆனால், இப்போ அவங்க எல்லாம் வேணும் போல இருக்கு...!" என்று கூற, அவள் கூறியது மஹதிக்குப் புரிந்தது.

அந்த வயதில் அவளுக்கு நேர்ந்த அதிர்ச்சியில் அவளுக்கு மறந்து போயிருக்கும் என்று நினைத்த அவள் அவளை மாற்றும் வண்ணம், "ஆமா. அது கண்டிப்பா நடக்கணும். நீயும் அர்ஜுனும் சேருவீர்களோ இல் லையோ, அவங்க ரெண்டு பேரையும் சேர்த்திடு. பாவம்,

உன் சித்தப்பா. அவருக்குன்னு இந்த வாழ்க்கையில் எதுவுமே இல்லை..." என்று கூற,

அதை ஆமோதித்த பாரதி, பின் குறும்புடன்... "எப்படி... எப்படி... நாங்க சேர மாட்டோமா? அடிப் பாவி. நீயெல்லாம் ஒரு ஃப்ரெண்டா? இப்படி உன் கருநாக்கால அடிக்கறியே!" என்று அலற,

மஹதி, "ஆமா, இப்பவும் சொல்றேன். உன் காதலுக்குக் கொஞ்சம் கூட லாயக்கில்லாதவன் அவன். அவனுக்கு நீ ஜாஸ்திதான்..." என்றவள், கொஞ்சம் இடைவேளை விட்டு,

"ஆனால், என்ன பண்றது... காதலுக்குக் கண் இல்லை. என் தோழியோட காதல் பைத்தியக்காரத்தனம் என்றாலும், அதுக்கு நான் துணையாய்த்தான் இருப் பேன். அது என் கடமை..." என்று கூற,

அவளை ஆதுரத்துடன் பார்த்த பாரதி, "நீ சொல்றது தப்பு மகி. நான்தான் அவன் காதலுக்கு லாயக்கில் லாதவள். அவன் மனசு சுத்தத் தங்கம். இப்பவும் சொல் றேன். அவனுக்கு என் மேல் காதல். ஆனால், ஒத்துக்கத் தான் மனசு வர மாட்டேங்குது..." என்று கூற,

மஹதி சிரித்தபடி, "உன் ஆசை ஜெயிக்கட்டும், மகளே! அந்த அர்ஜுனை மயக்க யாம் அமேசான் போன்ற அரிய வகைக் காட்டில் இருந்து மூலிகைகளைக் கொண்டு வசிய மை தயாரிக்கப் போகிறோம். அதைக் கொண்டு உன் நாதனை வசியப்படுத்துவாயாக...!" என்று நக்கலடிக்க,

பாரதி, “நீ எப்போதிலிருந்து இந்தப் பிசினஸை ஸ்டார்ட் பண்ணே மகி...? சொல்லவே இல்லை... ஆனால் நீ சொன்ன ஸ்லாங்குதான் தப்பு... இதை இப்படிச் சொல்லக் கூடாது. ஹோ சாமியோ... மை வாங்கலையோ சாமியோ... அப்படிச் சொல்லணும்...” என்று அவளை வார,

மஹதி, “அடிப் பாவி. என் இமேஜை டேமேஜ் பண்ணிட்டியே!” என்று அவள் முதுகிலேயே நாலு போட்டாள்.

இப்படியாகத் தோழிகள் இருவரும் நெடுநாட்களுக்குப் பின் கலகலக்க ஆரம்பித்தனர்.

**அ**ன்று காலையில் முந்தைய நாட்களின் உணர்ச்சி மேலீட்டாலோ என்னமோ தலை பாரமாக இருக்க... அவள் சற்றுத் தாமதமாகவே எழுந்து அலுவலகம் சென்றாள்.

அவளுக்கு முன்பே வந்திருந்த அர்ஜுன், வழக்கம் போல அவளைக் கண்டதும், “இதுதான் ஆபீசுக்கு வர லட்சணமா? உன் இஷ்டத்திற்கு வர இது ஒண்ணும் சந்தைக் கடை இல்லை. உன்னால முழு மனசோட வேலை பார்க்க முடியலைன்னா வேலையை விட்டுப் போயிட்டே இரு...” என்று கத்த,

பாரதி ஆயாசத்துடன் மனதுக்குள், ‘ஆமாடா. இப்படி சொல்லுவே. அப்புறம் நான் போயிட்டா மூக்கு முட்டக் குடிச்சிட்டு, ‘இந்தப் பொண்ணுகளே இப்படித்தான். புரிஞ்சி போச்சுடா!’ ‘அடிடா அவளை... உதைடா அவளை...’ என்று பாடாத குறையா என் மானத்தை வாங்குவே... சூ... உன்னை எல்லாம் திருத்த நூறு பெரியார் வந்தாலும் முடியாதுடா...!’ என்று பெருமூச்சு விட,

அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த அர்ஜுன், “ஏதோ ஒண்ணு மனசுக்குள்ள ஓடுது. ஆனா வாய்க்கு வரமாட்டேங்குது போல... எதுக்கு இந்தப் பெரு மூச்சு?” என்று பாயிண்டைப் பிடிக்க,

பாரதி கண்களில் சோர்வுடன், “இல்லை பாஸ். காலையில் இருந்து தலைவலி. அதான், சாரி பாஸ்... லேட்டாயிடுச்சு...” என்று கூற,

அர்ஜுன் சற்றே பதறினாலும், “ஏன்... என்ன திடீர்னு... சரி, நீ சீட்டுக்குப் போ...” என்று சுதாரித்துக் கொண்டான்.

கண நேரத்தில் அவன் முகத்தில் உண்டான பதற்றத்தையும் கனிவையும் வெற்றியுடன் குறித்துக் கொண்ட அவள், தன் இருக்கைக்குச் செல்ல,

அர்ஜுன் மனதுக்குள், ‘என்னாச்சு... இதுவரை அவள் இப்படி உடம்பு அசௌகரியம் எதுவும் சொன்ன தில்லையே...’ என்று நினைத்தபடி, பியூனிடம் அவளுக்குக் காபி கொடுக்குமாறு பணித்து விட்டுத் தன் வேலைகளில் ஆழ்ந்தான்.

பியூன் எம்.டி. சொன்னதாகக் கூறி, அந்தக் காபியைக் கொடுக்க... அவளுக்கு மட்டும் தலைவலி இல்லாதிருந்தால் எழுந்து ஒரு குத்தாட்டம் போட்டிருப்பாள். அவ்வளவு மகிழ்ச்சி!

ஆனால், அவள் தலைவலி பாடாய்ப் படுத்தியதால் அவளுக்கு வேண்டிய காபியைக் குடித்து, அது சற்றே மட்டுப்பட, தன் வேலைகளில் மூழ்கினாள்.

பின் ஏதோ கோப்புகளில் கையெழுத்து வாங்க அவள் அவன் அறைக்குச் செல்ல... அதில் கையெழுத்திட்ட அவன்... மென்மையாக ஆனாலும் ஒருவித அழுத்தத்துடன், "என்ன... இப்போ தலைவலி எதுவும் இல்லையே..." என்று உணர்ச்சிகளை வேண்டுமென்றே துடைத்து விட்டு வெற்றுக் குரலில் கேட்க,

அவளும் தன்னை விட்டுக் கொடுக்காமல், "ஹும்... பரவாயில்லை பாஸ்... சரி ஆயிடுச்சு... அப்புறம் காபிக்கு தேங்க்ஸ் பாஸ்..." என்று கூற,

அவன் கெத்தாக, "சரி... சரி. ரொம்ப டயர்டா இருந்தால் நீ ஐந்து மணிக்கே கிளம்பு. உடம்பு முடியாமல் வேலை பார்த்து மயங்கி ஏதாவது விழுந்து வம்பை இழுத்து விடாதே!" என்று கூற,

அவளாவது அசருவதாவது... "என்ன பாஸ், சின்னத் தலைவலிதானே... நானே சும்மா இருக்கேன். நீங்க எதுக்கு இவ்ளோ பில்டப் கொடுக்கறீங்க..." என்று குறும்பாகக் கேட்க,

அர்ஜுன், "இதைப் பார். உன் வேலையை ஆரம்பிக்காதே. இது ஒண்ணும் அந்த மாதிரி அக்கறை இல்லை. வீண் தொல்லை வேண்டாமேனு வந்த அக்கறை. அதையும் இதையும் குழப்பி ஏதாவது கற்பனை செய்யாதே!" என்று எகிற,

பாரதி, "பாஸ்... நான் என்ன சொன்னேன். நீங்க என்ன சொல்றீங்க... வர வர நீங்க ரொம்ப தடுமாறுறீங்க பாஸ். என்னை விட நீங்கதான் கற்பனை செய்றீங்க..." என்று அவனைக் கண்டு கொள்ள,

அர்ஜுனிற்கு அந்த வினாடியிலேயே வேர்க்க ஆரம்பித்தது.

அதைப் பார்த்த அவள், "வழியுது பாஸ்... துடைச்சிக்கோங்க..." என்று கூற,

அவன் பதற்றத்துடன் பார்க்க...

அவளோ விஷமத்துடன், "வியர்வையைத்தான் சொல்றேன். நீங்க அசடுன்னு நினைச்சீங்களோ!" என்று நக்கலாகக் கேட்க,

அவன் எரிச்சல் மேலேறி, வழக்கம் போல, "கெட் அவுட்..." என்று கத்த,

அவளும் வழக்கம் போல, "தேங்க் யூ!" என்று தேன் குரலில் கூறிவிட்டு வெளியேறினாள்.

தன் சீட்டுக்கு வந்தவள் யாரும் பார்க்காமல் சிரிப்பை அடக்கப் படாத பாடு பட்டாள்.

"நீ எவ்வளவு நடிச்சாலும் எங்கிட்ட வேலைக்கு ஆகாது, அர்ஜுன். ஒரு நாள் கையும் களவுமா மாட்டுவே... அப்போ இருக்கு மச்சான், உனக்கு..." என்று நினைக்க,

அவள் மனதில் எப்போதோ படித்த கவிதை வரிகள் ஓடின.

"நீ பூட்டாக இருந்தால்...

உன்னைத் திறக்கும் சாவியாய் நான்...

நீ வானமாக இருந்தால்...

உன்னைக் காக்கும் மேகமாய் நான்...

நீ பாறையாக இருந்தால்...

உன்னைச் செதுக்கும் சிற்பியாய் நான்...

கள்வனே... இத்தனை நன்மையையும்

நான் செய்வேன்...

உன் களவிற்குத் துணையிருப்பேன்... ஆனால்,

உன் மனதை மட்டும் கையூட்டாகத் தந்துவிடு...!

என்று அந்த வரிகளை நினைத்தவள்... 'ஆமா, கள்வன் தான்... சரியான திருடன். மனசைக் காட்டுறானா பார். அதனால் என்ன... நான் 'கள்வனின் காதலி'யாக இருந்து விட்டுப் போகிறேன்...' என்று மகிழ்ச்சியுடன் கனவுகளில் மூழ்கிய அவளுக்குத் தெரியவில்லை... அந்தக் கள்வன் தன் மனதைக் கூறுபோட்டு அறுக்கப் போகிறான் என்பது.

இப்படியாக இனிய நினைவுகளில் விடுதிக்கு வந்து சேர்ந்தவளின் கைபேசி சிணுங்க,

அதை எடுத்து, "ஹலோ..." என்று கூற,

மறுமுனை, "நீங்கள்தான் பாரதியா?" என்று கேட்டது.

அவள் புரியாமல், "ஆமா... நான்தான் பாரதி!" என்று கூற,

மறுமுனை, "நாங்க ஜெயம் ஹாஸ்பிடலில் இருந்து பேசுறோம்மா. இங்க அர்ஜுன்னு ஒருத்தர் அட்மிட் ஆகி யிருக்கார். ஒரு ஆக்சிடெண்ட். காரில் மோதிப் பலமான அடி... அவர் கடைசியா உங்ககிட்ட தான் ஃபோனில் பேசி யிருக்கார். அதான் கூப்பிடுறோம்... சீக்கிரம் வாங்கம்மா... சில ஃபார்மாலிட்டீஸ் இருக்கு..." என்று கூற,

பாரதி தன் காதுகளையே நம்ப முடியாமல், “என்னங்க... என்ன சொல்றீங்க...” என்று திக்கித் திக்கிக் கேட்க,

மறுமுனை, “என்னங்க விளக்கம் கேட்டுகிட்டு... எங்களுக்கு ஆயிரம் வேலை இருக்கு. கிளம்பி வாங்க...” என்று விலாசத்தைக் கூறிவிட்டு ஃபோனை வைக்க,

பாரதி தன் அதிர்ச்சியால் போனைத் தவற விட்டாள்.

## 20

உச்சி குளிர்ந்ததடீ – சகியே
உடம்பு நேராச்சு!
மச்சிலும் வீடுமெல்லாம் – முன்னைப்போல்
மனத்துக் கொத்ததடீ
இச்சை பிறந்ததடீ – எதிலும்
இன்பம் விளைந்ததடீ – சகியே
அச்ச மொழிந்தடீ – சகியே
அழகு வந்ததடீ...!

அந்த அழைப்பையும் அதில் வந்த சேதியையும் கேட்ட மாத்திரத்தில் பாரதி அப்படியே உட்கார்ந்து விட்டாள். சிறிது நேரத்திற்கு அவளுக்குக் கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை.

இரண்டு மணிநேரத்திற்குத் தன்னுடன் வாயடித்து வழக்காடிக் கொண்டிருந்தவனைப் பற்றித் திடீரென்று இப்படி ஒரு சேதி வந்தால் யாருக்குத்தான் பதற்றம் இருக்காது.

அதுவும் பாரதிக்கு அர்ஜுனைப் பற்றிய கெட்ட சேதியைத் தந்ததால்... வியர்வைப் பூ நெற்றியெங்கும் பூக்க, கை கால்கள் நடுங்க, அப்படியே சிலை போல் அமர்ந்திருந்தவளை மாடியில் தன் அறையில் இருந்து எதேச்சையாகப் பார்த்த மஹதி பதறிப் போனாள்.

பாரதி விடுதிக்குள் நுழைந்ததை மஹதி பார்த்தாள் தான்... பின் தோழி வருவாள் வருவாள் என்று காத்திருந்து இப்போது ஜன்னல் வழியாக எட்டிப் பார்க்க,

ஏதோ பேயறைந்த மாதிரி அமர்ந்திருந்தவளைப் பார்த்ததும், கீழே ஓடி வந்து,

"என்ன பாரி... என்னாச்சு... ஏன் ஏதோ மாதிரி உட்கார்ந்திருக்கே... என்ன விஷயம்...?" என்று கேட்க,

அவள் அப்போதுதான் உணர்வு வந்து, "மகி... மகி... அர்ஜுன்... அர்ஜுன்... ஆக்சிடெண்ட்..." என்று திக்கித் திணற... அவள் முதுகை மென்மையாக நீவி அவளை ஆசுவாசப்படுத்திய மஹதி,

"என்னம்மா... என்ன. தெளிவாச் சொல்லு. பதற்றப் படாமல் தெளிவாச் சொல்லு..." என்று கூற,

பாரதி மூச்சை இழுத்துவிட்டு, "மகி... அர்ஜுனுக்கு ஆக்சிடெண்ட்... ஹாஸ்பிடலில் அட்மிட் பண்ணி யிருக்காங்களாம்... எனக்கு என்ன பண்றதுன்னே தெரி யலை, மகி... அவனுக்கு ஒண்ணும் ஆகாது இல்லை... சொல்லு..." என்று உளற,

அப்போதே மஹதிக்குப் புரிந்தது. தன் தோழிக்குப் பதற்றத்தில் என்ன செய்வதென்று தெரியவில்லை என்று.

இல்லை என்றால் அவளுக்குத் தெரிந்த பாரதி இப்படி அதிர்ந்து போய் உட்காருபவள் அல்ல. அடுத்தது என்ன செய்யலாம் என்று யோசிப்பவள்... அதை அவளே பார்த்திருக்கிறாள்.

அன்று அவன் காணவில்லை என்றபோதும் கூட அவள் தெளிவாகத்தான் முடிவெடுத்தாள். ஆனால், இன்று தன்னிலை குழம்பியிருக்கிறாள் என்று முடிவெடுத்த மஹதி, 'ம்ஹும்... இவளைத் தனியா விட்டால் ஆபத்து. ஏற்கெனவே அதிர்ச்சியில் குழம்பி விட்டாள்...' என்று நினைத்த மஹதி மணியைப் பார்த்தாள்.

நல்ல வேளை. ஏழு மணிதான் ஆகியிருந்தது. இன்னும் தங்கள் நேர அளவீட்டைத் தாண்டவில்லை என்று ஆசுவாசமானவள்... விடுதிக் காப்பாளரிடம் விஷயத்தைக் கூறிவிட்டு, பாரதியிடம்... "பாரி, எழுந்திரு. வா, நாம ஹாஸ்பிடல் போகலாம்... நீ ஒண்ணும் கவலைப்படாதே... அவனுக்கு ஒண்ணும் ஆகாது... வா..." என்று சமாதானப்படுத்த,

பாரதி, "எனக்குப் பயமாயிருக்கு, மகி... குடிச்சிட்டு ஏதாவது ஓட்டி... பலமான அடின்னு சொன்னாங்க, மகி... அவனுக்கு ஒண்ணும் ஆகாது இல்லை..." என்று புலம்ப,

மஹதி, "ஒண்ணும் ஆகாதுடி. பேசாமல் வா..." என்று அதட்ட,

அவள் அமைதியாகிக் கண்ணீர் மட்டும் உகுக்க...

மஹதி, "அழாதே. இப்போ அழுது என்ன ஆகப் போகுதுனு அழுறே... சரி. அந்த ஹாஸ்பிடல் விலாசம் தெரியுமா?" என்று கேட்க,

பாரதி அவ்வளவு குழப்பத்திலும் பதற்றத்திலும் இருந்தாலும், தெளிவாக அந்த விலாசத்தைக் கூற,

மஹதி, 'ஆமா. இதில் மட்டும் தெளிவா இருப் பாளே!' என்று மனதுக்குள் செல்லமாகக் கடிந்து கொண்டது வேறு விஷயம்.

ஒரு வழியாக ஆட்டோவைப் பிடித்து ஹாஸ்பிட லுக்கு வர, அங்கே அவர்களைக் கண்டதும் மருத்துவர், "என்னம்மா... இவ்வளவு நேரம் கழிச்சா வர்றது. நாங்க எவ்ளோ நேரம்தான் வெயிட் பண்றது. இதோ பாருங் கம்மா... எதிரே வந்த காரில் மோதிச் சாய்ஞ்சதில் கதவைச் சரியாய்ப் பூட்டாததால் வெளியே தள்ளப்பட்டு உருண்டி ருக்கார். அது ஒரு வகையில் நல்லதுதான். ஆனா மறுவகையில் கெட்டது...

"ஏன்னா... அவருக்கு உடம்பில் எந்த விதப் பெரிய காயம் இல்லை. ஆனா தலையில் அடிபட்டிருக்கு. அதான் எம்.ஆர்.ஐ. செஞ்சு பார்த்தால்தான் எங்களால் தெளிவாக எதுவும் சொல்ல முடியும். அதுக்குத்தான்... உங்களை வரச் சொன்னோம். நீங்க இவருக்கு என்ன வேணும்...?" என்று கேட்க,

அவளோ, "டாக்டர் நான்... நான்..." என்று தயங்க,

மஹதி உடனே சற்றும் யோசிக்காமல், "அவர் கல்யாணம் செய்துக்கப் போறவங்க டாக்டர்... அவர் வுட்பி!" என்று கூற,

பாரதி, மஹதியை அதிர்ச்சியுடன் பார்க்க... அவள் கண்களாலேயே அவளை அடக்கினாள்.

மஹதி, "இப்போதைக்கு அவருக்கு இருக்கிற ஒரே சொந்தம் இவதான் டாக்டர்..." என்று அழுத்தமாகக் கூற,

அவரோ தோளைக் குலுக்கி, "ஓ.கே... நர்ஸ், இவங்க கிட்ட கையெழுத்து வாங்கிக்கோங்க. கவுண்ட்டரில் பணத்தைக் கட்டிடுங்க..." என்று ஆணைகளைப் பிறப் பித்துவிட்டுச் செல்ல...

பாரதி, "டாக்டர்... அவரைப் பார்க்கலாமா?" என்று தயங்கித் தயங்கிக் கேட்க,

அவர், "இப்போ ஐ.சி.யூ.வில் இருக்கார். நினைவு திரும்பலை... அண்டர் அப்சர்வேஷன்தான். எம்.ஆர்.ஐக்கு அப்புறம் நார்மல் என்று தெரிஞ்சால் ஜெனரலுக்கு மாத்துவோம்... அப்போ பாருங்க. அப்புறம் இவர்தான் உங்க வுட்பியை இங்கே அட்மிட் செய்தவர்!" என்று கூறி ஒரு நடுத்தர வயது ஆணைக் கை காட்டிவிட்டு, அதற்கு மேல் நிற்காமல் விரைந்தார்.

பாரதி கொஞ்சம் கொஞ்சமாக அதிர்ச்சியில் இருந்து தெளிந்தாள். பின் அந்த ஆளைப் பார்க்க அவன் என்னவோ... ஏதோ யோசனையான பார்வையுடன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். எப்படியும் முப்பது முப்பத்தைந்து வயதிருக்கும்... வசதியானவன் போல. உடலெங்கும் தங்கம் ஆங்காங்கே தன் இருப்பைக் காட்டியது.

அவனைப் பார்த்தவள், "ரொம்ப தேங்க்ஸ் சார்... எனக்கென்னன்னு போகாமல் இவ்வளவு உதவி செய் திருக்கீங்க... உங்களுக்கு எப்படி நன்றி சொல்றதுனே தெரியலை சார்..." என்று தழுதழுக்க,

அவனோ, “பரவாயில்லை... நீங்க அவர் வுட்பியா?” என்று சற்றே அழுத்தமாகக் கேட்க,

அவளோ வெள்ளந்தியாக, “இல்லை சார். அவர் ஃபேமிலி ஃப்ரெண்ட்தான்... மத்தப்படி எதுவுமில்லை. என் ஃப்ரெண்ட் ஏதோ அவசரத்தில் அப்படிச் சொல்லிட் டாள்...” என்று கூற,

அவன் முகத்தில் யோசனைக் கீற்று அதிகமாகியது. பின்னர் போலீஸ் வந்து அவனை விசாரிக்க... அவன் ஏதோ கூற, அத்துடன் அவனை மரியாதையாக ஒரு பார்வை பார்த்துப் பவ்யமாக விடைபெற்று விட்டு, பாரதி யிடம்... அர்ஜுன் மயக்கமாக இருப்பதால் நாளை வருவதாகக் கூறிவிட்டுச் சென்றார்.

பின் பாரதியிடம் விடைபெற்றுச் சென்றான் அவன்.

அவன் சென்ற பின் பாரதி, மஹதியிடம், “கேஷ் நான் ட்ரா செய்துட்டு வரேன் மகி... என்னோட பழைய பேங்க் அக்கவுண்டில் கண்டிப்பா பணம் இருக்கும். அதைப் பல வருஷமா நான் எடுக்கவே இல்லை... நீ கொஞ்சம் பார்த்துக்கோ. நான் ஏ.டி.எம். போயிட்டு வரேன்...” என்று கூறிவிட்டு விடைபெற,

மஹதி, “ஏய் இரு. நான் தரேன்...” என்று கூற, பாரதி, “நீயும் ஏ.டி.எம்.ல் இருந்துதானே எடுப்பே... எப்படியும் 20,000 கிட்ட ஆகும். நான் போய் எடுத்துட்டு வரேன்...” என்று கூறிவிட்டு விரைந்து சென்று பணத்தை எடுத்து வந்து கவுண்ட்டரில் கட்ட, அவர்கள் வேண்டிய சோதனைகளைச் செய்ய ஆரம்பித்தனர்.

பின் அவனைப் பார்க்கவும் முடியாமல், அவனின் நிலை என்னவென்றும் தெரியாமல், மிகவும் திணறிப் போனாள் பாரதி. மஹதிதான் பாவம். இரவு முழுக்க அவளுடன் இருந்து அவள் புலம்பல்களை எல்லாம் கேட்டு அவளைச் சமாதானப்படுத்திக் கொண்டிருந்தாள்.

பாரதி ஒரு வாய்த் தண்ணீர், சாப்பாடு எதுவும் சாப்பிடவில்லை. அவளை வற்புறுத்தி மஹதிதான் சோர்ந்து போய் இரண்டு இட்லிகளைத் தன் வயிற்றுக்குக் கொடுத்துவிட்டு வந்தாள்.

பாரதி, "அவனுக்கு எப்படி மகி ஆக்சிடெண்ட் ஆச்சு? குடிக்கவும் இல்லை. ஆனால் இப்படியெல்லாம் ஆனதே கிடையாதே. யாராவது கொலை செய்யப் பார்த்திருப் பார்களோ? அப்படி இருந்தால் அவனுக்கு யார் எதிரி மகி... அவனுக்கு யாரும் எதிரிகளை நான் உருவாக வைச்சதே கிடையாதே. அவனை அப்படித்தானே பார்த்துக்கிட்டேன். ஒருவேளை ஹரிஹரன் செய்திருப்பாரோ?" என்று புலம்ப,

தன் தோழியின் பிதற்றலைக் கேட்டு அவளுக்குச் சற்றே கோபம் வந்தாலும் மிகுதியாகப் பரிதாபம்தான் வந்தது. அவன் மேல் எவ்வளவு அன்பு... அவன் மட்டும் கண் விழிக்கட்டும். நாலு வார்த்தை நியாயம் கேட்டு விட்டுத் தான் போவதாக இருந்தாள்.

அதற்குள் மருத்துவரே வந்து, "ஒண்ணும் பிரச்சினை இல்லைம்மா... எல்லாமே நார்மல்... ஜஸ்ட் சூப்பர்ஃபிசியல் இன்ஜுரிதான். அதிர்ச்சியில் வந்த மயக்கம் தான். அவரை ஜெனரலுக்கு மாத்துவாங்க. நீங்க போய்ப்

பார்க்கலாம்," என்று கூற... பாரதியின் முகத்தில் அப்போதுதான் ஒளியே வந்தது.

"தேங்க்ஸ் டாக்டர்... தேங்க் யூ சோ மச்!" என்று நன்றியுரைத்துவிட்டு அவனைக் காணச் சென்றாள்.

பாரதியும் மஹதியும் அந்த அறைக்குள் நுழைய, அங்கே உடலில் ஆங்காங்கே பிளாஸ்திரிகளுடனும் தலை யில் பெரிய கட்டுடனும் மயக்கத்தில் படுத்துக் கிடந்தான் அர்ஜுன்.

அவனிடம் சென்று, "ஏன்டா! இப்படி என்னை உயிரோட கொல்றே... உன்னால் எனக்கு நிம்மதியே கிடையாதா? ஏன்டா இப்படிப் படுத்துறே... இப்படி கஷ்டப் படுத்துறதுக்கு ஒரு பாட்டில் விஷத்தை வாங்கிக் கொடு. நிம்மதியாப் போய்ச் சேர்ந்திடுறேன்... என்ன இம்சைடா இது உன்னோட..." என்று பா.ரதி கண்ணீர் தெறிக்கக் கத்த,

மஹதி அவளிடம் வந்து, "ச்சு பாரி! என்ன இது... அவன் என்ன... வேணும்னா செஞ்சான்... கண்ட்ரோல் மா... அவனே மயக்கத்தில் இருக்கான். கத்தாதே. யாராவது பார்த்தால் திட்டுவாங்க..." என்று அடக்க,

பாரதி, "என்னால் முடியலை, மகி. இவன் இல் லைன்னா நான்.... என்னால் அதை நினைக்கக் கூட முடியலை. இவன் அப்படி ஏதாவது நினைச்சுப் பார்க்கிறானா மகி... சட்டு சட்டுனு எல்லாத்தையும் செய்ய றான். என்னால்... என்னால் முடியலை மகி... இவனால் என் மூச்சே நின்னுடுச்சு..." என்று கதறிய தன் தோழியை ஆறுதலுடன் தட்டிக் கொடுத்துச் சமாதானப்படுத்தினாள் மஹதி.

ஏனோ அவளுக்கு அர்ஜுனின் செயல்களால் ஆதங்கமும் ஆற்றாமையும் அதிகரித்துக் கொண்டே வந்தது.

விடியற்காலையில் மெல்ல அர்ஜுனின் மயக்கம் தெளிந்தது. ஒரு நான்கு மணி இருக்கும்... ஏதோ அசௌகரியத்தில் அவன் அசைய, அவன் கட்டிலின் மேல் நடுப்பகுதியில் தலை சாய்த்துப் படுத்திருந்த பாரதியைக் கண்டு அதிர்ந்தான்.

'இவள் எப்படி? எனக்கு என்ன ஆச்சு...?' என்று யோசித்தவனுக்கு அப்போதுதான் கொஞ்சம் கொஞ்சமாக எல்லாம் ஞாபகம் வந்தது. வழக்கம் போல் சேகர் வராததால், தானே வண்டியை எடுத்துக் கொண்டு கிளப்புக்குச் செல்லும் வழியில் லாரி ஒன்று திருப்பத்தில் வர... அவன் வளைத்து ஒடிக்க, அங்கே ஹாரனே அடிக்காமல் வந்த கார்மீது எதிர்பாராத விதமாக அவன் கார் மோதிச் சாய... கதவைப் பூட்டாததால் வெளியே உருண்டதுவரைதான் ஞாபகமிருந்தது.

அதற்கு மேல் என்ன நடந்தது என்றே தெரிய வில்லை. அதனால் சுற்று முற்றும் பார்க்க, அது மருத்துவமனை என்று தெரிந்தது. அங்கே பக்கத்தில் போடப்பட்டிருந்த பெஞ்சில் யாரோ ஒரு பெண் படுத் திருந்தாள். அவனுக்கு அவள் யார் என்று தெரிய வில்லை. பாரதியின் தோழியாக இருப்பாள் என்று நினைத்தவன்... தன் அருகே கையருகே படுத்திருந்த பாரதியைப் பார்த்தான்.

அவளின் குழந்தை முகமும் அதில் தெரிந்த சோர்வும் அவனை ஏதோ செய்தது.

“கண்டிப்பா ரொம்பப் பதறியிருப்பா... சாப்பிட்டாளா, தெரியலையே... சே... நான் கொஞ்சம் கவனமா இருந் திருக்கணும்...” என்றவனுக்குத் தனக்காகத் துயரப்பட, பதற்றப்பட ஒரு பெண் இருக்கிறாள் என்று தெரிந்து, மனதில் சிறிய கர்வமும் மகிழ்ச்சியும் கூட எழுந்தது.

ஆனாலும் அவளை அவனால் ஏற்றுக் கொள்ள முடியுமா? தான் அதற்குத் தகுதியானவனா... என்ற நினைப்புத்தான் அவனைப் பாடாய்ப் படுத்தியது...

அவளால் தன் வாழ்வில் வந்த முன்னேற்றங்களை அவன் அறிந்திருந்தான்தான். ஆனாலும் அவன் முந்தைய வாழ்க்கை அவன் மனதில் நெருஞ்சி முள்ளாய்க் குத்த... அந்த வலியை முழுவதும் தன்னை நாடி வந்த பேதையிடம் இறக்கி வைத்தான் அவன்.

இன்னும் அவன் மனது அவனுக்கே புரியவில்லை. போ... போ.. என்று நினைப்பான்தான். அதே சமயம் அவள் சென்றால் அடுத்த நிமிஷம் உடைந்து விடுவான்... இன்று நேற்றா... நாலு வருடங்களாக இதுதான் நடந்து கொண்டிருக்கிறது... மொத்தத்தில் அவனுக்கு என்ன வேண்டுமென்று அவனுக்கே தெரியாது... அதனால் வரும் குழப்பங்கள் யாருக்கு... அவனுக்கா? அல்லது பாரதிக்கா?

ஏதோ யோசனையில் அவள் சற்று வேகமாக அசைந்து விட, சட்டென்று எழுந்தாள் பாரதி. அவன் விழித்திருப்பதைக் கண்டதும் முகமெல்லாம் பிரகாசம் பொங்க,

“கண்ணா! முழிச்சிட்டியா... என்னப்பா கொஞ்சம் பார்த்து ஓட்டியிருக்கக் கூடாதா...? நான் ரொம்ப பதறிட்

டேன். இப்போ ஒண்ணுமில்லையே? தலைவலி இருக்கா?" என்று அக்கறையுடன் கேட்டாலும்,

அவனுமே அவளின் 'கண்ணா!' என்ற அழைப்பில் தன் தாயையே கண்டாலும், அவனால் மனதார அதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஏனெனில் இதைவிட அக்கறையிலும் பாசத்திலும் திளைத்துவிட்டு, அதெல்லாம் கானல் நீராகத் தன் கண் முன்னே மாறியதைப் பார்த் திருந்தவன் அவன். எனவே உணர்ச்சிகளை எல்லாம் கட்டுப்படுத்தி, "நீ எங்கே இங்க...?" என்று கேட்க,

அவன் கேள்வியில் சற்றே துணுக்குற்றாலும், பாரதி புன்னகை மாறாமல்... "இல்லை அர்ஜுன்! நீ எனக்கு போன் செய்திருந்தே இல்லை... அதான் எனக்கு முதலில் போன் செஞ்சாங்க... நல்ல வேளை. இல்லைன்னா எவ்வளவு பிரச்சினை..." என்று கண்களை விரித்து அவள் கூற... அவள் பாவனை அவனை இளக்கினாலும் மீண்டும் அதை இறுக்கி,

"சரி, வந்தே... ஏன் இங்கே இருக்கே... உன் ஹாஸ்டலுக்குப் போக வேண்டியதுதானே..." என்று அழுத்தமாகக் கூற... பாரதி பல்லைக் கடித்தாள்.

"ஏன் இப்படிப் பேசுறே அர்ஜுன்... நான் வந்ததால் என்ன... என்னைத் தவிர யார் உன் கூடத் துணையா இருப்பாங்க... ஏதாவது அவசரமென்றால் யார் வரு வாங்க...?" என்று சற்றே கடினமாகக் கேட்க,

அர்ஜுன் நக்கலாக, "ஓஹ்! துணையா... நான் எப்போ என் துணையாய் அறிவிச்சேன்... எனக்கு எதுவும்

ஞாபகம் இல்லையே... எனக்குத் தெரிஞ்சு நீ எங்கிட்ட சம்பளம் வாங்குற பி.ஏ. அவ்வளவுதான்!" என்று முகத்தில் அடித்தாற்போல் கூற,

"ஆமா சார்... அவ பி.ஏ. தான்... அவள் ஏன் வந்தாள் என்றால் அந்த பி.ஏ. கூட இல்லைன்னா உங்களை அனாதைன்னு நினைச்சு சிகிச்சை குடுக்க மாட்டாங்க பாருங்க, அதான்..." என்று ஒரு குரல் பாய்ந்து வந்து தன் தோழிக்குப் பரிந்தது.

வேறு யார்! அவர்கள் பேச்சுச் சத்தத்தில் தூக்கம் கலைந்து எழுந்த நம் மஹதிதான்.

பாரதி, "மகி... ப்ளீஸ்.." என்று அடக்க,

மஹதி, "நீ வாயை மூடு... நானும் பார்க்கிறேன்... ஏதோ வேண்டாதவனுக்குப் பிள்ளையைப் பெத்துக் காண்டாமிருகம்னு பேர் வைச்ச மாதிரி வாய்க்கு வந்ததைப் பேசுறார்..." என்று கத்த,

பாரதி அவள் பேச்சைக் கேட்டு வந்த சிரிப்பை அடக்கப் படாத பாடுபட, அர்ஜுனின் முகமோ கோபத்தில் சுருங்கியது.

பாரதி அதைத் தடுக்கும் பொருட்டு, "விடு மகி... அவர் ஏதோ புரியாமல் பேசுறார்..." என்று அவனுக்குப் பரிந்து வர,

அர்ஜுன், "ஏய்... என்ன நடக்குது இங்கே.. என்ன ஃபிலிம் காட்டுறிங்களா ரெண்டு பேரும்...! நீங்க ரெண்டு பேரும் முதலில் இங்கே இருந்து கிளம்புங்க. என்னைப் பார்த்துக்க எனக்குத் தெரியும்!" என்று கூறிய அடுத்த

நொடி.... அவன் தலையில் அடிபட்ட இடம் வலி நிவாரணி குறைந்ததால் வலியெடுக்க ஆரம்பிக்க, "அம்மா.." என்று தலையைப் பிடித்துக் கொண்டான்.

பாரதி பதறி, "என்ன... அர்ஜுன், என்னாச்சு...?" என்று கேட்க,

அர்ஜுன், "உன்னை நான் போ என்று சொன்னேன்..." என்று அழுத்தமாகக் கூற,

மஹதிக்கு எரிச்சல் தலைக்கேறியது. "ஏய் பாரி, இதெல்லாம் உனக்குத் தேவையா? சாயந்திரத்தில் இருந்து நீ பதறின பதற்றம் என்ன... கிடந்த பட்டினி என்ன... புலம்பிய புலம்பல் என்ன...? எனக்குத் தெரியும்டி... இவர் இப்படித்தான் பேசுவாருன்னு. கொஞ்சம் கூட ஈரம் இல்லாத மனசு... சே! நீ இதுக்கு மேலயும் இங்கே இருக்கணுமா?" என்று கத்த,

பாரதி ஒன்றும் புரியாமல் விழிக்க...

அர்ஜுன் நக்கலாக, "அதான் கூப்பிடுறாங்களே மேடம், போ.. இன்னும் ஏன் இந்த ஈரமில்லாத மனுஷன் கூட இருக்கே..." என்று கேட்க,

அவள் மஹதியுடன் சென்றுவிட்டால் அது பாரதியில்லையே! மாறாக மஹதியிடம், "மகி.. சாரி. நீ போ மகி.. என்னால் தனியா விட்டுட்டு வர முடியாது. அவருக்கு யாருமே இல்லை. இதை அவர் ஒத்துக்காமல் இருக்கலாம்... ஆனால் எனக்குத் தெரியும். இப்போ நான் உன் கூட வந்தால் அப்போ தெரியும் சில பேரோட ரோஷம்.." என்று மறைமுகமாக அர்ஜுனையும் குத்தியவள்... தன்

தோழியின் கையில் காலில் விழுந்து சமாதானப்படுத்தி னாள்.

மஹதி தலையில் அடித்துக் கொண்டு, "எக்கேடோ கெட்டுப் போங்க. எனக்கு என்ன வந்துச்சு...? ஏதோ ஆற்றாமையில் சொன்னேன்.. உன் தலையெழுத்து எப்படியோ அப்படியே நடக்கட்டும். சரி. உனக்குத் தேவை யான திங்ஸ் எல்லாம் எடுத்துட்டு ஒரு பத்து மணிக்கா வரேன்..." என்று திட்டினாலும், தன் தோழிக்கு உதவும் தோழி என்றால் சந்தேகமில்லாமல் மஹதி மட்டுமே...!

பின் பாரதி அழுத்தமாக அவனை முறைத்து விட்டுச் சட்டமாக உட்கார்ந்து கொண்டு, 'என்னடா செய்து விடுவாய்!' என்பது போல் பார்க்க... அவன் ஆயாசமாகக் கண்களை மூடினான்.

பின் நேரம் செல்லச் செல்ல விஷயம் தெரிந்து அலுவலக ஆட்கள் வந்து பார்த்து விட்டுச் சென்றனர்.

பாரதிதான் அவனைக் கூட இருந்து பார்த்துக் கொண்டாள். அவன் அவ்வப்போது ஒத்துழையாமை இயக்கம் நடத்தினாலும் அதைத் தன் திறமையால் அறவே ஒதுக்கிவிட்டு அவனுக்கு வேண்டியதைச் செவ்வனே செய்தாள்.

அப்போதுதான் காலை ஒரு 11 மணி இருக்கும்... பாரதி அர்ஜுனிற்குச் சாத்துக்குடி பிழிந்து கொண்டிருக்க, அப்போதுதான் அந்த ஆள் வந்தான்... அர்ஜுனை மருத்துவ மனையில் சேர்த்தவன்.

அவனைப் பார்த்ததும் பாரதி மகிழ்ச்சியுடன், "சார் சார்... வாங்க... உங்களை எதிர்பார்க்கவே இல்லை...

பாருங்க... நேத்து இருந்த பதற்றத்தில் உங்க பேர் கூடக் கேட்கவில்லை... உங்க பேர்?" என்று கேட்க,

அவனோ சிறிதளவு கூட உணர்ச்சியின்றி, "கேசவ்!" என்றான்.

அவன் பேச்சு, பதில் ஒன்றுமே பாரதிக்குத் திருப்தி கரமாக இல்லைதான். ஆனாலும் அர்ஜுனைக் காப் பாற்றியவன் என்பதால் உட்கார வைத்து உபசரித்தாள்...

அர்ஜுனோ அவளைக் கேள்வியுடன் பார்க்க... அவள், "பாரு, சொல்ல மறந்துட்டேன்... அர்ஜுன். இவர் தான் உன்னை ஆஸ்பத்திரியில அட்மிட் செய்தார்..." என்று விவரங்களைக் கூற,

அவனோ தலையாட்டி கேட்டு, "ரொம்ப நன்றி சார்..." என்று நன்றியுரைக்க....

கேசவனோ, "பரவாயில்லை. போலீஸ் விசாரணை எல்லாம் முடிஞ்சதா?" என்று இலகுவாகக் கேட்க,

அர்ஜுன், "அதெல்லாம் நான் எதுவும் கம்ப் ளெய்ண்ட் கொடுக்கலைனு சொல்லிட்டேன் சார். நடந்தது விபத்துதான். அவங்க என்னவோ கொலை முயற்சி ரேஞ்சுக்குப் பேசினாங்க... அந்தப் பிரச்சினை எல்லாம் நமக்கு எதுக்கு சார்... அதான் அதை ஷட் செய்துட்டேன்... ஆனா சார்... எனக்கு உங்களை எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கு. இது என் பிரமையான்னு தெரியலை. ஆனால் கண்டிப்பா உங்க முகம் பரிச்சயம்தான்..." என்று கூற,

அவன் ஒருவிதப் படபடப்புடன் காணப்பட்டான். பாரதிக்கு அவனின் உடல் மொழிகள் எல்லாம் ஏதோ தவறு என்பது போல் தெரிய, யாரும் எதிர்பாராத விதமாக அவன் அர்ஜுனின் கையைப் பிடித்து, "அர்ஜுன்... நீங்க நினைச்சது கரெக்ட்தான். நான்... கேசவ்... நான் மினியோட அண்ணன்!" என்று கூற,

அர்ஜுனும் பாரதியும் ஒரு சேர அதிர்ந்தனர்.

அவனுக்கும் பாரதிக்கும் ஒன்றும் புரியவில்லை... முற்றும் போட்டாயிற்று என்று நினைத்த அத்தியாயத்திற்குத் தொடரும் போட்டது போல் கேசவின் வருகை...

அர்ஜுனின் கைகளைப் பிடித்துக் கொண்டு, கேசவ், "அர்ஜுன்! எனக்குத் தெரியும். நீ எங்க மேல் கோபத்திலேயும் வெறுப்பிலேயும் இருப்பேனு... ஆனா, எனக்கு வேற வழி தெரியலை அர்ஜுன். நேத்து உன்னைக் காப்பாத்தினதும் எனக்கே முதலில் அடையாளம் தெரியலை. அப்புறமா யோசிச்சுப் பார்த்ததற்கு அப்புறம்தான் உன் முகம் ஞாபகம் வந்தது. அன்னைக்கு டெல்லியில் எங்கப்பா வீட்டுக்கு வந்தே... ஞாபகம் இருக்கா? அன்னிக்குத்தான் நான் உன்னைப் பார்த்தேன்... அதான் என் முகம் உனக்குப் பரிச்சயமா தோன்றியிருக்கு.

"அர்ஜுன், நான் ஒரே ஒரு உதவி கேட்கிறேன். செய்வியா அர்ஜுன்... எங்க மேல உள்ள வெறுப்பை எல்லாம் மறந்துடச் சொல்லலை. ஆனா அதை ஒதுக்கி வைச்சிட்டு இந்த ஒரு உதவி!" என்று வேண்ட,

அர்ஜுனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. ஆனாலும், "சரி, சொல்லுங்க..." என்று கூறி விட்டான்.

ஆனால் அந்தப் பதிலில் மிகவும் உடைந்தது பாரதிதான். மினியின் அண்ணன் என்று தெரிந்ததும் இவன் அடிக்கப் போவான்... குறைந்தபட்சம் கத்தவாவது செய்வான் என்று பார்த்தாள். ஆனால், அதற்கு நேர் மாறாக அவன் கேசவிடம் அமைதியாகப் பேச, அவளுள் ஏதோ உடைவது போல் இருந்தது.

ஆனால், கேசவோ அர்ஜுனின் பதிலில் மகிழ்ந்து, "ஒரு தடவை, ஒரே ஒரு தடவை என் வீட்டுக்கு வந்து மினியைப் பாரு அர்ஜுன்... அவள் கல்யாணம் செய் துக்கலை அர்ஜுன். உனக்காகத்தான் காத்திட்டு இருக்கா... உயிரைக் கையில் பிடிச்சுக் காத்திட்டு இருக்கா... வா அர்ஜுன்... அவ சத்தியமா முன்னாடி மாதிரி இல்லை, அர்ஜுன்... ரொம்ப மாறிட்டா... உன்னையே நினைச்சு ஒரு சன்னியாசி மாதிரி வாழ்ந்துக்கிட்டு இருக்கா அர்ஜுன். ஒரு வாட்டி, ஒரே ஒரு வாட்டி அவளை வந்து பாரு..." என்று மீண்டும் அவன் கையைப் பிடித்துக் கொண்டு குலுங்கிக் குலுங்கி அழ,

அர்ஜுன் வாய் பேசாமல் அமர்ந்திருக்க...

மனதுள் ஒரு பெரும்புயல் உருவாக நின்றிருந்தாள், பாரதி.

## 21

தஞ்ச முலகினில் எங்கணு மின்றித்
தவித்துத் தடுமாறிப்
பஞ்ச பறைய னடிமை புகுந்தேன்,
பாரமுனக் காண்டே;
ஆண்டே பாரமுனக் காண்டே

துன்பமு நோயு மிடிமையுந் தீர்த்துச்
சுகமரு ளல்வேண்டும்
அன்புட நின்புகழ் பாடிக் குதித்துநின்
ஆணை வழி நடப்பேன்,
ஆண்டே - ஆணை வழி நடப்பேன்!

அவன் கூறியதைக் கேட்டுப் பாரதி சிலை போல் நிற்க, அர்ஜுனோ ஆழ்ந்த சிந்தனையில் ஆழ்ந்தான். ஏனோ பாரதிக்கு அதுவே எரிச்சலைக் கொடுத்தது.

அவனின் இந்தப் பிரதிபலிப்பு அவளுக்குப் புரியாத புதிராக மாறியது. 'இவன் என்ன இப்படி இருக்கான். மினிதான் இவனை ஜெயிலுக்கு அனுப்பக் காரணமாக இருந்தாள். ஆனா இவன்கிட்ட அதுக்கான கோபமோ, ஆத்திரமோ எதுவும் இருக்கிற மாதிரி தெரியலையே... அப்படி என்றால் அவனுக்கு இன்னும் அவள் மேல் காதலா?' என்று பல்வேறு நினைவுகளில் குழம்பியவள்... அர்ஜுனின் முகத்தையே பார்க்க...

அவன் கிஞ்சித்தும்,அவளை நிமிர்ந்து பார்த்தான் இல்லை... அது பாரதியை வேதனைக்கு உள்ளாக்கியது. அதைச் சற்றே ஒதுக்கியவள் நடப்பதை வேடிக்கை பார்க்கத் துவங்கினாள்...

ஆனால் கேசவோ பேசி முடித்துப் பாரதியைப் பார்த்தவன், அர்ஜுனிடம் திரும்பி, "நான் உங்ககிட்ட கொஞ்சம் தனியா வெளிப்படையா பேசணும், அர்ஜுன்... ப்ளீஸ்..." என்று கெஞ்ச,

அவன் பாரதியை வெளியே போகச் சொல்கிறான் என்று தெரிந்தது. ஆனால் பாரதி அது புரிந்தும் அர்ஜுன் என்ன சொல்கிறான் என்பதற்காக அவனையே பார்க்க,

அவனோ, "நீ கொஞ்சம் வெளியே இரு..." என்று முகத்தில் அடித்தாற் போல் கூற, அவள் மனதளவில் மிகவும் நொறுங்கிப் போனாள்.

ஆனாலும் சண்டையிடுவதற்கோ தன் உரிமையை நிலைநாட்டவோ இது நேரமில்லை என்று உணர்ந்தவள் அமைதியாக வெளியேற,

அர்ஜுன், கேசவ்விடம், "சொல்லுங்க... என்ன சொல லணும்?" என்று கேட்க,

அவன், "நடந்தது எல்லாத்தையும் சொல்றேன், அர்ஜுன். அன்னைக்கு நடந்த பிரச்சினையைப் பற்றி என் தங்கச்சிக்கு ஒண்ணும் தெரியாது. அவ பாவம். நீ ஹரிஹரனுக்கு வாரிசு இல்லைனு தெரிஞ்சதும் எங்கப்பா அவளுக்கு வேற ஒரு மாப்பிள்ளையோட கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்துட்டார். அவளுக்கு இந்தக் கல்யாணத்தில் கொஞ்சம் கூட இஷ்டமில்லை, அர்ஜுன். அதுவும் நீ ஜெயிலுக்குப் போனது தெரிஞ்சதும் ரொம்ப நொடிஞ்சுப் போயிட்டா அர்ஜுன். அந்தக் கல்யாணத்தை நிறுத்திட்டா...!" என்று கூற,

அர்ஜுன் சட்டென்று, "அப்போ எப்படி கோர்ட்டுக்கு வந்து எனக்கெதிராகச் சாட்சி சொன்னாள்? சாட்சிகள் விசாரணையில் அவ பேரும் இருந்ததே..." என்று கூர்மை யான பார்வையுடன் கேட்க,

கேசவ் அதிர்ந்தான்.

அர்ஜுன், "சாட்சி விசாரணை அப்போ குற்றவாளி இல்லைன்னாலும் அவனுக்கு ஒண்ணும் தெரியாமல் இருக்காது, கேசவ்!" என்று கூற,

கேசவ், "அர்ஜுன்! நீ ஒண்ணைப் புரிஞ்சே ஆகணும். எல்லாச் சாட்சிகளும் மனச்சாட்சிப்படி சொன்ன தில்லை. அவள் சொன்னது பொய்யாய் இருக்கலாம்... ஆனால் அது அவ மனசாரச் சொன்னதில்லை, அர்ஜுன். எங்க அப்பா அவளைப் பயமுறுத்தி வற்புறுத்திச் சொல்ல வைச்சது, அர்ஜுன். ஆனால், அப்படிப் பொய்ச்சாட்சி சொன்னதால் அவள் உன்னை வெறுத்துட்டாள் என்று அர்த்தமில்லை அர்ஜுன்...

"அவளால் அதனால்தான் இன்னொருத்தனுக்குக் கழுத்தை நீட்ட முடியலை. அதான் கல்யாணத்தை நிறுத் திட்டா, அர்ஜுன். இதுநாள்வரை உன்னையே மனசில் வைச்சு வாழ்ந்துட்டு இருக்கா... தயவு செய்து அவளை வந்து பாரு, அர்ஜுன். அவளை நீ கல்யாணம் செய்துக் கணும்னு நான் கூப்பிடலை. ஆனால், ஒரு தடவை அவளை வந்து பார்த்துவிட்டுப் போ. அது போதும்!" என்று காலில் விழாத குறையாகக் கெஞ்ச... அர்ஜுன் ஒன்றும் பேசாமல் மௌனமாக இருந்தான்.

கேசவ், "உன் மனசு நான் சொன்னவுடன் மாற ணும்னு எதிர்பார்க்கிறது முட்டாள்தனம் என்று எனக்குத் தெரியும், அர்ஜுன்... ஆனால் அவள் இப்போ ரொம்ப மாறிட்டா... முன்னே மாதிரி சுயநலவாதியா இல்லை. அதான் நீ எங்கே எப்படி இருக்கேனு தெரியாட்டியும்

உனக்காக வாழ்ந்துட்டு இருக்கா... சரி. நீ இப்போ ரெஸ்ட் எடு, அர்ஜுன்... நல்லா யோசி. நல்ல முடிவா சொல்லு. என் தங்கச்சி வாழ்க்கை உன் கையில்தான் இருக்கு...” என்று கூறிவிட்டு வெளியேற,

அவன் சென்றதும், சில நிமிடங்கள் கழித்துச் சுருங்கிய முகத்துடன் உள்ளே நுழைந்தாள் பாரதி.

அவள் முகம் ஒரு மாதிரி இறுகிக் கிடந்தது. அவள் அனைத்தையும் கேட்டிருக்கிறாள் என்று அவள் முகத்தில் இருந்தே தெரிந்தது.

பெண்களுக்கே உரிய ரகசியங்கள் அறிந்து கொள்ளும் ஆர்வக் கோளாறான குணத்தில் அவள் மட்டும் விதி விலக்கா என்ன...?

வந்தவள் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் அவனுக்குப் பழச்சாறைப் பிழிந்து கொடுக்க, அதை வாங்கிப் பருகிய அவனுக்கு... அவள் முகம் எதையோ உணர்த்தினாலும், அதை அவன் பெரிதாக எண்ண வில்லை. ஆனாலும் அவன் வாயை மூடிக்கொண்டு சும்மா இருந்திருக்கலாம்.

“அவர் சொன்னதைக் கேட்டியா? என்ன சொல்றே...? நான் அவளைப் பார்க்கப் போகவா - வேண்டாமா?” என்று மண்டூகம் போல் அவளிடமே கேட்டான்.

அவன் ஏன் கேட்டான் என்று அவனுக்கே தெரியவில்லைதான். ஆனால் கேட்டே ஆக வேண்டும் என்ற உந்துதலில் பாரதியிடம் அந்தக் கேள்வியைக் கேட்டு விட,

அவள் பளாரென்று அறைவாள், தாட்பூட்டென்று குதிப்பாள் என்று எதிர்பார்த்தவனுக்கு அவள் மௌனமான நிர்மலமான முகம் சில்லிட வைத்தது.

ஆனாலும் விடாப்பிடியாக, "சொல்லு. போகவா - வேண்டாமா?" என்று கேட்க...

ஒரு பெருமூச்சு விட்ட பாரதி, அதே முகத்துடன், "உன் இஷ்டம், அர்ஜுன். வாழ்க்கையில் எல்லாச் சமயமும் நான் உனக்கு யோசனை தர முடியாது. சில முடிவுகளை நீயே எடுக்கணும்..." என்று அழுத்தமான பார்வையுடன் கூறிவிட்டு, அவனுக்குச் சாப்பாடு வாங்க வெளியேற... அவளிடம் தெரிந்த அந்த மாற்றத்தில் முதன் முறையாக வாயடைத்துப் போனான் அர்ஜுன்.

அதற்கு மேல் தேவையில்லாத பேச்சுகளோ செயல் களோ இல்லாமல் மௌனத்தின் ஆட்சியில் பொழுது கரைய...

மதியத்திற்கு மேல் மற்றும் ஒரு அதிசயச் சந்திப்பு நிகழ்ந்தது.

காரணம் யாழினியும் செண்பகமும் அவன் மருத்துவ மனையில் இருப்பதை அறிந்து அவனைக் காண ஓடி வந்திருந்தனர்.

அர்ஜுன் அவர்களைப் பார்த்ததும், வெகுண்டு, "இங்கே எதுக்கு வந்தீங்க...? நான் இருக்கேனா செத் தேனான்னு பார்க்க வந்தீங்களா? உங்களை ஃபோன் கூடச் செய்ய வேண்டாம்னு எத்தனை வாட்டி மூஞ்சியில் அடிச்ச மாதிரிச் சொல்லியாச்சு. அப்புறம் ஏன் வந்தீங்க?" என்று கத்த,

யாழினியும் செண்பகமும் அர்ஜுனை நெடுநாட்கள் கழித்துப் பார்த்த சந்தோஷத்திலும், அவனை இப்படி மருத்துவ மனையில் பார்க்க வேண்டி வந்ததே என்ற வருத்தத்திலும் கண்ணீர் உகுத்தபடி நின்றனர்.

இது நாள்வரை அர்ஜுனிடம் போனில் பேசிக் கொண்டிருந்தது இவர்கள் இருவரும்தான். முதல் நாள் பொற்கொடியிடம் பேசிய அடாவடிக் குரல் செண்பகத் தினுடையது. பின் ஒரு நாள் அர்ஜுனிடம் பேசியது யாழினி.

அவர்களைப் பார்த்த பாரதி, "அர்ஜுன்... அவங்க ஏதோ பயத்தில் உன்னைப் பார்க்க வந்திருக்காங்க. அவங்களைப் போய்க் கத்துறே?" என்று பரிந்து வர,

அர்ஜுன், "இதைப் பார்... அவங்களுக்குப் பரிந்து வந்தால் நீயும் அவங்களோட போகலாம்... உன்னை மட்டும் இருன்னு நான் கெஞ்சலை... அது மட்டுமில்லாமல் அவங்க யாரு எனக்கு... நான் அனாதைதான். எனக்குச் சொந்தபந்தம் யாருமில்லை..." என்று எகிற,

பாரதி, "வாயை மூடு, அர்ஜுன். என்கிட்ட பேசுற மாதிரி எல்லார்கிட்டயும் பேசாதே. பாவம், சின்னப் பொண்ணு...!" என்று அவளும் அதட்ட,

யாழினி, அர்ஜுனிடம், "அண்ணா... ஏண்ணா இப்படிப் பேசுற... என்னதான் இருந்தாலும் நான் உன் தங்கச்சிதான். நீ என் அண்ணன்தான். நம்ம இரண்டு பேருக்கும் அம்மா ஒண்ணுதானே, அண்ணா... இப்படி ஆனது தெரிஞ்சதும் சும்மா இருக்க முடியலை, அண்ணா... அதான் ஓடி வந்துட்டோம். வேற ஒண்ணும்

வேண்டாண்ணா... நீ நல்லா இருக்கேனு தெரிஞ்சால் போதும்..." என்று அழுது கொண்டே கூற, பாரதிக்கு யாழினியைப் பார்த்துப் பாவமாக இருந்தது. அவளைக் குழந்தையாய் இருக்கும்போது தானும் ராமுவும் தூக்கிக் கொள்ள அடித்துக் கொண்டது ஞாபகம் வந்தது.

அப்போதெல்லாம் அர்ஜுன் தங்கையை யாருக்கும் தரமாட்டான். சின்ன வயதிலேயே ரோஜாப் பந்து போல் அழகாக இருப்பாள். கன்னத்தில் அழகுக் குழி வேறு. கேட்கவா வேண்டும்... அவளைத் தொட்டாலே கரகாட்டம் ஆடுவான். அதெல்லாம் சற்றே கலங்கலாக ஞாபகம் வந்தது. தனக்கே அப்படி என்றால்... இப்போது இவளுக்கு அதெல்லாம் கண்டிப்பாக ஞாபகம் இருக்காது. ஆனால், அதே அழகு முகம்தான். எப்படியும் தன்னிலிருந்து நான்கு வயது சிறியவள் என்றால் இருபத்திரண்டு வயதிருக்கும். சற்றே பூசினாற்போல் தேகம். கன்னத்தில் அதே குழி என்று அவளை ரசித்துக் கொண்டிருந்தவளைச் செண்பகத்தின் குரல் கலைத்தது.

"அண்ணன் மவனே... அந்தப் பிள்ளை சொல்றதும் சரிதானய்யா... உங்க ரெண்டு பேரைப் பெத்த மவராசி என் மதினிதானே... அதுக்காகவாவது உன் கோபத்தைக் குறைச்சிக்கய்யா!" என்று தன் அடாவடித்தனத்தைக் கொஞ்சம் தள்ளி வைத்துவிட்டு மன்றாட... பாரதிக்கு அதுதான் செண்பகம்... அவனின் ஒன்றுவிட்ட அத்தை என்று புரிந்தது.

ஆனால் அர்ஜுனோ, "முதலில் என்னை அண்ணன் மவன்னு கூப்பிடுறதை நிறுத்துங்க. அவ்வளவுதான்.

சொல்லிட்டேன்... நீங்க சொன்னீங்களே... எங்க ரெண்டு பேரையும் பெத்த மகராசிக்காகத்தான் உங்க ரெண்டு பேரையும் இவ்ளோ நேரம் நிக்க வைச்சுப் பேசிக்கிட்டு இருக்கேன். இல்லைன்னா எப்பவோ கழுத்தைப் பிடிச்ச வெளியே தள்ளியிருப்பேன்..." என்று கூற,

பாரதிக்கே அவன் பேசியது குத்தீட்டியைப் பாய்ச்சியது போல் இருந்தது என்றால்... அவர்களுக்கு...?

அவள் சற்றே சங்கடத்துடன் யாழினியையும் செண்பகத்தையும் பார்க்க, அவர்கள் அதற்கெல்லாம் அசருவதாய்த் தெரியவில்லை.

செண்பகம், "என்ன 25 வருசமா அப்படித்தானே கூப்பிட்டுட்டு கிடந்தேன். அப்போ இனிச்சது... இப்போ எரியுதாமா... நல்லா இருக்கே..." என்று எகிற,

பாரதி அவளுக்கு மனதுக்குள் 'சபாஷ்...' போட்டுக் கொண்டாள்.

யாழினி, "பரவாயில்லை, அண்ணா... உனக்கு நாங்க பிடிக்காதவங்கதான். அப்படியே இருந்துட்டுப் போறோம். உன்னைப் பார்க்கணும் போல இருந்தது. அதான் வந்தோம். இப்ப உன்னை டிஸ்டர்ப் செய்யலை. நீ நல்லா இருக்கேனு தெரிஞ்சது... அது போதும்..." என்று கூறிவிட்டு, அத்தையிடம் திரும்பி, "வாங்க அத்தை, போகலாம்..." என்று கூற,

செண்பகம், அர்ஜுனிடம், "அந்தப் பிள்ளையோட முகத்தைப் பாருய்யா... நாலஞ்சு வருசமா அது சிரிச்சே நான் பார்க்கலை. இந்த வயசில் அதுக்கு ஏன் இவ்வளவு

பாரத்தைக் கொடுக்கிறே... உங்கப்பன் செய்த தப்பு..." என்று கூறி முடிக்குமுன்...

அர்ஜுன், "வாயை மூடுங்க. அவர் எனக்கு அப்பாவும் இல்லை. நான் அவர் பிள்ளையும் இல்லை. அவர் என்னைக்கு என்னை வீட்டை விட்டுப் பரதேசியா வெளியே அனுப்பினாரோ அப்பவே எல்லாம் முடிஞ்சது. இப்போ நீங்க உங்க பங்குக்குச் சொந்தம் கொண்டாட வர்றீங்களா? எனக்கு யாரும் தேவையில்லை. வெளியே போங்க... போங்கன்னு சொல்றேன் இல்லை..." என்று கத்த,

யாழினி ஒரு பெருமூச்சுடன், "நீ இப்படிப் பேசுறது என்ன புதுசா அண்ணா...? என்ன, மனசு கேட்கலை. அதான் வந்துட்டோம்..." என்றவள், பாரதியிடம் திரும்பி, "அண்ணாவை நல்லாப் பார்த்துக்கோங்க..." என்று பரிதாபமாகக் கூறிவிட்டுத் தன் அத்தையுடன் செல்ல... பாரதிக்கு ஏனோ அவளைக் கண்டு பாசம் பொங்கியது.

உண்மையில் சொல்லப் போனால் யாழினிக்கு இருக்கும் பொறுமையிலும் சமயோசிதத்திலும் துளிக்கூட அர்ஜுனிடம் அவள் பார்த்ததில்லை. அவள் அப்படியே வேதவல்லியின் மறுவார்ப்பு... என்று நினைத்தாள்.

இதனால் அவள் பேசியது மனதை ஏதோ பிசைய... அர்ஜுனை ஒரு தடவை முறைத்து விட்டு அவர்கள் பின் ஓடியவள்... "யாழினி... அத்தை..." என்றழைக்க...

அவர்கள் நின்று திரும்பிப் பார்த்தனர். அவர்களைப் பார்த்ததும் வார்த்தைகள் தட்டுப்படாமல் அவளுக்குக் கண்ணாமூச்சி காட்ட...

"இல்லை... என்னை உங்களுக்குத் தெரியாது. ஆனா உங்களைப் பத்தி எனக்குத் தெரியும். ஆனால் பார்க்கக் கூடிய சூழ்நிலை அமையலை. இன்னைக்கு அமைஞ்சதையும் வீணாக்க விரும்பலை. என்னைப் பத்திச் சொல்லிக்கிறேன். என் பேர்..." என்று கூறி முடிப்பதற்குள்,

யாழினி, "பாரதி... அண்ணாவோட பி.ஏ.ங்கிற பேரில் வந்திருக்கும் அண்ணி. என்ன கரெக்ட்டா?" என்று சற்றே குறும்பாகக் கேட்க,

பாரதி வாயடைத்துப் போனாள். அவள் சத்தியமாக இதை எதிர்பார்க்கவில்லை.

ஆனால் யாழினியோ, "என்ன ஆச்சரியமா இருக்கா... எங்க அண்ணனைத் துரத்தித் துரத்தி அவன் செய்றதை எல்லாம் இத்தனை வருஷமா பார்த்துக்கிட்டு இருந்தவளுக்கு... உங்களைத் தெரியாதா அண்ணி?" என்று கூறி விட்டுச் செண்பகத்தைப் பார்க்க... அவள் சிரித்தாள்.

பின், "யாழிம்மா... பாரு, அவ வாயடைச்சுப் போயிட்டா. இவளுக்குப் போய் எப்படி உங்கண்ணன் அடங்கிப் போறான்..." என்று நக்கலாகக் கேட்க,

பாரதி அவரைச் செல்லமாக முறைத்து, "என்ன ரெண்டு பேரும் விளையாடுறீங்களா? என்னைப் பத்தி உங்களுக்கு எப்படி...?" என்று விவரம் கேட்க,

யாழினி, "லாயர் சார்தான் உங்களைப் பத்தி அடிக்கடி சொல்வார். அண்ணனைப் பத்தி எல்லா விவரமும் சொல்றது அவர்தான். அப்போ உங்களைப்

பத்தியும்தான் சொல்வார். அது மட்டுமில்ல. அம்மா இருந்தவரை உங்களை, உங்க குடும்பத்தைப் பத்திப் பேசாத நாளே கிடையாது. ஒரு ஆல்பமே இருக்கு, உங்க ஃபோட்டோஸ் எல்லாம் சேர்த்து.

"அதில்தான் உங்களைப் பத்தித் தெரிஞ்சுகிட்டேன். ஷர்மிளா ஆன்ட்டி, மேகநாதன் அங்கிள் செய்த தியாகம்... உங்க கஷ்டம், நீங்க வீட்டை விட்டுப் போனது எல்லாமே சொல்லியிருக்காங்க. சின்ன வயசில் அம்மா சொன்ன தாலாட்டே உங்க கதைதான். என் மனசில் ஆழமாப் பதிஞ்சிடுச்சு. அப்புறம் லாயர் சாரும் சொல்ல... எல்லாம் சேர்த்து நான் உங்களைப் பத்தி எல்லாம் தெரிஞ்சிக் கிட்டேன்..." என்று கூற, பாரதி இன்பப் பெருக்கில் அவளை அணைத்துக் கொண்டாள்.

"யாழிக் குட்டி! உன்னைச் சின்ன வயசில் பார்த்தது.... இப்போ எப்படி வளர்ந்துட்டே! என்ன வெல்லாம் பேசுறே...!" என்று தழுதழுக்க, அங்கே பாசத்தின் அழகான காட்சி அரங்கேறியது.

செண்பகமும் லேசாகப் பாரதியின் தலையைக் கோதி, "விடும்மா... உன்கிட்ட பேசணும்னு நினைப்போம். ஆனால் எங்க கூடத் தொடர்பு இருக்குன்னு தெரிஞ்சா... அவன் உன்னை அனுப்பிடுவானோன்னு பயந்துதான் பேசாமல் இருந்துட்டோம்..." என்று கூற,

பாரதி, "இல்லை அத்தை! தப்பு என் மேலதான். நானாவது உங்ககிட்ட பேச முயற்சி செய்திருக்கணும். ஏதோ தயக்கத்தில் அப்படியே விட்டுட்டேன்..." என்று வேண்ட,

யாழினி,, "விடுங்க அண்ணி... நடப்பதெல்லாம் நன்மைக்கேனு அம்மா அடிக்கடி சொல்வாங்க. இதுவும் நன்மைக்குனு நினைச்சுக்கலாம்..." என்று கூற,

அவள் முதிர்ச்சியான பேச்சை ரசித்தாலும், "யாழி, என்னை அண்ணின்னு கூப்பிடாதே. இன்னும் உன் அண்ணி மதில் மேல் பூனையாதான் இருக்கா... அதனால் என்னை அண்ணின்னு கூப்பிடாதேம்மா...!" என்று சொல்ல,

யாழினி கலகலவெனச் சிரித்து, "இன்னும் உங்க ரெண்டு பேருக்குள்ளே கண்ணாமூச்சி ஆட்டம் முடியலைன்னு சொல்லுங்க. ஆனால் எனக்கு நம்பிக்கை இருக்குப்பா. நான் என் வருங்கால அண்ணி கூடத்தான் இப்போ பேசிக்கிட்டு இருக்கேன்னு..." என்று குறும்பாகக் கூற,

பாரதி, "போக்கிரி..." என்று அவள் தலையில் வலிக்காமல் குட்டினாள்.

பின், "அத்தை... யாழினி.... அப்பா மாறிட்டாரா? இல்லை. இன்னும் அதே வன்மத்தோடுதான் இருக்காரா? அவரைப் பத்திக் கேட்கக் கூடாதுன்னுதான் இருந்தேன். ஆனால் மனசு கேட்கலை. அதான்..." என்று கம்மிய குரலில் கேட்க,

அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு மௌனம் சாதித்தனர்.

பாரதி, "என்னாச்சு... ஏன் மௌனம் ஆகிட்டீங்க...? அவர் இன்னும் மாறலையா? அதானே பார்த்தேன். அவராவது மாறுவதாவது...!" என்று முகத்தைச் சுழிக்க...

செண்பகம், "இல்லை பாரதி... அவன் செஞ்ச தப்புக்குக் கடவுள் அவனுக்குத் தண்டனை கொடுத்துட்டார். அதை எப்படிச் சொல்றதுன்னு தெரியாமல்தான்... இது அர்ஜுனுக்குக் கூடத் தெரியாது..." என்று தயங்க, அவள் கண்களில் இருந்து நீர்த்துளிகள் சிதறின.

பாரதி அதிர்ந்து, "என்ன அத்தை... என்ன அவருக்கு...?" என்று கேட்க,

யாழினி ஒருவித உறுதியுடன், "நான் சொல்றேன் அண்ணி... அத்தையால இனிமே பேச முடியாது..." என்று கூறிவிட்டு அவருக்கு என்ன என்பதைக் கூற ஆரம்பிக்க,

பாரதி அதைக் கேட்டு மிகவும் அதிர்ச்சியுற்றாள். அவளை அறியாமலேயே அவள் கண்களில் ஹரிஹர னுக்காய்க் கண்ணீர்த் துளிகள் பெருகின.

**அ**வர்களிடம் பேசி முடித்து, அர்ஜுனின் அறைக்கு வந்தவளின் முகம் இருண்டு போயிருக்க...

அவனோ எரிச்சலுடன், "என்ன... அவங்க கூடப் போய்க் குலாவிட்டு வந்தாச்சா? எவ்ளோ தைரியம் இருந்தால் அவங்க எனக்குப் பிடிக்காதவங்க என்று தெரிஞ்சும் அவங்க பின்னாடியே போயிருப்பே...!" என்று கத்த,

பாரதி அவனிடம் ஹரிஹரனின் விஷயத்தை அப்போதைக்குச் சொல்ல வேண்டாம் என்று முடிவெடுத்திருந்ததால்... "ஆமா. என்னால் உன்னை மாதிரிக் கல் மனசா இருக்க முடியாது. ஞாபகம் வைச்சிக்கோ. நீ இப்படியே வர்றவங்களை எல்லாம் இப்படி நாக்கால் அடிச்சிக்கிட்டு இருந்தால் கடைசியில்

யாரும் உன்கூட இருக்க மாட்டாங்க. ஜாக்கிரதை!" என்று எச்சரிக்க...

அர்ஜுன், "ஓஹ் பயமுறுத்துறியா! அதுக்காக அவங்க வந்ததும் அப்படியே வாங்க வாங்கன்னு வாய் நிறைய வரவேற்கணுமா?" என்று கண்கள் தெறிக்கக் கத்த...

பாரதி, "ஆமா. உன்னால் முடியாதுதான். அவங்க செஞ்சது தப்புதான். துரோகம்தான். ஆனால் நீ இந்த மனநிலையை எல்லார்கிட்டயும் காண்பித்தால் சரி.. அவங்களுக்கு மட்டும் ஒரு நியாயம், மத்தவங்களுக்கு ஒரு நியாயமா?" என்று பதில் கொடுக்க,

அர்ஜுன், "ஏய்... என்ன உளர்ற?" என்று கேட்க,

பாரதி, "ஆமா. அவங்க செஞ்சது துரோகம் என்று அவங்களை அவமானப்படுத்தி அனுப்பின. சரி... ஆனால் இதே மினியோட அண்ணன் சமாதானக் கொடியோட வந்தானே... அவனை ஏன் அவமானப் படுத்தாமல் விட்டே... அவன் மினியைப் பற்றிச் சொன்னதும் அப்படியே கிறங்கிப் போய் நின்னே... அதுக்கென்ன அர்த்தம்? அவ மட்டும் உன்னை ஏமாத்தலையா...? துரோகம் செய்யலையா?" என்று கேட்க,

அர்ஜுன் ஒன்றும் பேசாமல் முகத்தைத் திருப்பிக் கொண்டான். ஆனால் பாரதி விடவில்லை.

"நீ பேச மாட்டே அர்ஜுன்... ஆனா ஒண்ணு, நீ எதுக்காக இப்படி எல்லாம் செய்றேனு எனக்குத் தெரி யலை. ஆனால் நீ செய்றது எதுவும் நல்லதுக்கில்லை.

அது மட்டும் ஞாபகம் வைச்சிக்கோ. இதுதான் கடைசி. இனிமேல் இந்த விஷயத்தைப் பத்தி நான் பேச மாட் டேன்..." என்று கூறி விட்டுத் தன் வேலையைப் பார்க்க ஆரம்பிக்க...

அர்ஜுன் முகத்தில் அப்போது எவ்வித உணர்வும் இல்லை.

தலைக் காயமும் சற்றே ஆற ஆரம்பிக்க... இரண்டாவது நாளே டிஸ்சார்ஜ் செய்யப்பட்டான், அர்ஜுன். பிறகு அவனை வீட்டில் சேர்ப்பித்து விட்டு, தன் விடுதிக்குச் சென்ற பாரதி, மஹதியிடம் நடந்தது அனைத்தையும் ஒன்றுவிடாமல் கூற... அவள் வெகுண்டாள்.

"ஏய்... நீயெல்லாம் இன்னும் திருந்தலைன்னா நீ மனுஷியே இல்லைடி... அவன் என்ன பெரிய மன்மதனா? விட்டுட்டு வாடி. பழைய காதலியோட அண்ணன் வந்தானாம். இவனும் கிறங்கி நின்னானாம். என்ன விளையாடுறானா? வாயில் நல்லா வந்திடும்... நீ என்ன நினைச்சாலும் சரி, பாரி... ஆனால் நீ பண்றது முழுக்க முழுக்க முட்டாள்தனம். அவ்வளவுதான் நான் சொல்வேன்..." என்று கூற,

பாரதி கம்மிய குரலில், "உண்மையிலேயே அவன் மனசில் நான் இல்லையா மகி... அவன் ஏன் இப்படி நடந்துக்கிறான்? அவன் ஒரு வார்த்தை அவனை எதிர்த்துப் பேசலை மகி. அவளைப் பார்க்கப் போகவா வேண்டாமான்னு எங்கிட்டயே கேட்கிறான். எவ்வளவு தைரியம் பாரு. நான் என்ன மகி தப்பு செய்தேன்...?" என்று அழுது புலம்ப...

தன் தோழியை எப்படிச் சமாதானப்படுத்துவது என்றே அவளுக்குத் தெரியவில்லை. ஆனால் பாரதி ஒரு முடிவோடுதான் இருந்தாள்.

"ஆனால் ஒண்ணு மகி... என்னதான் நடக்குதுன்னு பார்க்காமல் நான் அவனை விட்டுப் போக மாட்டேன்..." என்று கூற,

மஹதி, "நீ என்ன லூசா... இனிமேலும் அங்கே இருந்தால் உடைஞ்சிடுவடி... வேண்டாம். சொன்னாக் கேளு... அவனை விடு..." என்று கூற,

பாரதி உறுதியுடன், "முடியாது..." என்று தலை யசைக்க...

மஹதிக்கு அவளைக் கண்டு பரிதாபப்படுவதைத் தவிர, என்ன செய்வது என்று தெரியவில்லை.

ஆனால், மஹதி கூறியதைப் போல்தான் அடுத் தடுத்துக் காரியங்கள் நடந்தேறின.

பாரதியிடமிருந்து கொஞ்சம் கொஞ்சமாக விலக ஆரம்பித்தான் அர்ஜுன். ஆபீஸ் விஷயங்களையும் ஓரளவு அவன் கட்டுப்பாட்டிலேயே வைத்திருக்க நினைத்தான். அவளிடம் ஒரு விஷயத்தைப் பற்றியும் கூறுவதில்லை. விவாதிப்பதில்லை. எப்போதும் யோசனைதான். பிறகு ஒரு நாள் அந்தக் குண்டையும் தூக்கிப் போட்டான்.

அடுத்த வாரத்தில் பாரதி கூறியது போல் அவனே முடிவெடுத்து மினியைப் பார்க்கச் சென்றான், அர்ஜுன்... அதுவும் அவளிடம் சொல்லாமல்.

பாரதி வழக்கம் போல் காலையில் வந்து அவனுக்காகக் காத்திருக்க... அவன் வந்தபாடில்லை.

காத்திருந்து காத்திருந்து சோர்ந்து போய் ரவியிடம், "சார்... அந்த டெண்டர் கொட்டேஷன் முடிச்சாச்சா சார்...?" என்று பேச்சை ஆரம்பிக்க...

ரவி ஆச்சரியமாக, "என்ன பாரதி, உனக்குத் தெரியாதா? அதை முடிச்சு இரண்டு நாளைக்கு முன்னாடியே அனுப்பிட்டோமே... எப்பவும் நீதான் இதெல்லாம் செய்வே!" என்று கூற,

பாரதி துணுக்குற்றாள். இப்போதெல்லாம் இப்படித் தான் அவளிடம் எந்த வேலையும் கொடுப்பதில்லை. அவனே செய்யத் துவங்கியிருந்தான். இது சற்றே அவளை வருத்தினாலும், அதை வெளியே காட்டாமல், "எங்கே சார்... பாஸ் இப்போவெல்லாம் வேலை வாங் குறதே இல்லை. நான் ரொம்ப ஃப்ரீ..." என்று குறும்பாகக் கூற,

ரவி, "ஹ்ம்ம்... நடத்து... நடத்து..." என்று புன்னகைத்தான்.

பாரதி அவனிடம் மெதுவாக, "என்ன சார்... காலையில் இருந்து ஆபீஸ் அமைதியா இருக்கு. பாஸ் வரலையா?" என்று கேட்க,

ரவி, "அவர் உன்கிட்ட சொல்லலை...? யாரோ கேசவாம். அவரைப் பார்க்கப் போறேன். வர லேட் டாகும்னு சொன்னார்..." என்று கூற,

பாரதி அதிர்ந்து போனாள். கேசவை என்றால் மினியைப் பார்க்கத்தான் சென்றிருக்க வேண்டும் என்பதை அறியாத முட்டாள் இல்லையே அவள்...

ரவியிடம் அதற்கு மேல் எதுவும் பேசாமல், மெதுவாக வந்து தன் சீட்டில் அமர்ந்தாள். எப்போதும் போலத் தலைவலி மண்டையைப் பிளக்க ஆரம்பித்தது.

அதிர்ச்சியில் கை, கால்கள் அனைத்தும் தளர்ச்சியுற, தலையைப் பிடித்துக் கொண்டு, அப்படியே தன் மேஜையில் சாய்ந்து கண்ணீர் உகுத்தாள். அவள் கூறிய ஒரே வார்த்தை, 'என்னை ஏமாத்திட்டே அர்ஜுன்...' என்பதுதான்.

ஆம். அவன் மேல் வைத்திருந்த அவளின் அளவில்லா நம்பிக்கையைக் குலைக்க ஆரம்பித்தான், அர்ஜுன்.

**கே**சவின் வீட்டிற்கு வந்திருந்தான், அர்ஜுன். அவனைக் கண்டதும் கேசவ் தன் உடம்பே தரையில் புரளுமாறு பணிந்து வரவேற்க...

அர்ஜுன் எவ்வித உணர்ச்சியுமின்றி உள்ளே சென்றான். அவனைக் கண்டதும் அவன் குடும்பத்தார் அனைவரும் வெளியே வந்தனர்.

அவன் கண்கள் யாரையோ தேட... கேசவ், "மினி உள்ளே இருக்கா. நீங்க வருவீங்கன்னு எனக்குக் கண்டிப்பா தெரியும். இருங்க, மினியை அழைச்சிட்டு வர்றேன்..." என்று கூறிவிட்டு, உள்ளே சென்று அவளை அழைத்து வந்தான்.

அவளைப் பார்த்ததும் அர்ஜுனிற்கு ஏதேதோ உணர்வுகள் அலையென மோதின. ஆனால் அதில் எதையும் வெளியே காட்டாமல் இருக்க...

அவன் அருகே வந்த மினி, அவனைப் பார்த்ததும் ஓடி வந்து, அவன் கால்களைக் கட்டிக் கொண்டு, "என்னை மன்னிச்சுடு அர்ஜுன்... நான் செஞ்சது தப்புதான். உனக்கெதிராய்ச் சாட்சி சொன்னது தப்புதான். அதுக்காக நான் ரொம்ப அனுபவிச்சுட்டேன். ஆனால், உன்னைத் தவிர வேற யாரையும் மனசால கூட நினைச்சுப் பார்க்கலை..." என்று கெஞ்ச.

அவள் முகத்தை நன்றாகப் பார்த்தான், அர்ஜுன். நன்கு இளைத்து விட்டிருந்தாள். கண்களுக்குக் கீழ்க் கருவளையம் சூழ்ந்திருந்தது. குறுக்கெலும்புகள் மேலெழும்பி இருந்தன.

அதைப் பார்த்த அர்ஜுனின் முகம் சற்றே இளக...

மினி, "என்ன அர்ஜுன்... நல்லாப் பார்த்துக்கோ அர்ஜுன்... நான் ஒண்ணும் உன்னைப் பிரிஞ்சு சந்தோஷமா இல்லை. என் அப்பா, என்னைப் பார்த்து வெம்பாத நாளில்லை அர்ஜுன். அதான் நான் அண்ணன் வீட்டுக்கு வந்துட்டேன். சத்தியமா உன்னைப் பிரியணும்னு நான் நினைச்சதே இல்லை அர்ஜுன். என் அப்பாவோட வற்புறுத்தலுக்காகத்தான் நான் சம்மதிச்சேன். என்னை மன்னிச்சிடு அர்ஜுன்..." என்று கதற,

அர்ஜுன், "தேவையில்லை மினி... நீ இவ்ளோ அழுது புலம்பணும்னு நான் எதிர்பார்க்கலை. நீ செஞ்ச தப்பை உணர்ந்துட்டா, அதுவே போதும். உன் குற்ற வுணர்ச்சியைப் போக்கலாம்னுதான் வந்தேன்..." என்று கூற,

மினி, சந்தோஷத்தில் முகம் மலர்ந்து, "இது போதும் அர்ஜுன்... இது போதும். இந்த வார்த்தை போதும். நான் உயிர் வாழ்ந்திடுவேன்..." என்று கூற,

அர்ஜுன், கேசவ்விடம், "உங்க அப்பா அம்மா... எல்லாம்..." என்று கேட்க,

கேசவ் முகமலர்ச்சியுடன், "அவங்க டெல்லியிலதான் இருக்காங்க. அங்க பிசினஸ் பார்க்கிறாங்க..." என்று கூற,

அர்ஜுன், "ஓ..." என்று கேட்டுக் கொண்டான். பின், "சரி, நான் வர்றேன்..." என்று கூறிவிட்டு நடக்க...

கேசவ், அவன் பின்னாடியே ஓடி வந்து, "அர்ஜுன்... அவளைப் பார்த்தீங்களே... என்ன முடிவு எடுத்திருக்கீங்க? நீங்களே சொல்லுங்க. அவள், நீங்க இல்லைன்னா செத்திடுவா, அர்ஜுன்!" என்று மன்றாட...

அர்ஜுன், அவனைப் பார்த்து ஒரு மென்சிரிப்புச் சிரித்து விட்டுத் தன் வண்டியில் ஏற...

கேசவ், அந்தச் சிரிப்பையே சம்மதமாக நினைத்துக் குதூகலமடைந்தான்.

தன் தங்கை வாழ்க்கையில் அமைந்த திருப்பத்தை எண்ணி அவனுக்குத் தலையும் புரியவில்லை. காலும் புரியவில்லை.

**பா**ரதி, அதன் பிறகு அர்ஜுனிடம் எதுவுமே கேட்கவில்லை. அன்று மருத்துவ மனையில் கூறியது போல், அந்த விஷயத்தில் அதற்கு மேல் தலையிடுவது நாகரிகமாக இருக்காது என்று விட்டு விட்டாள். ஆனால், அலுவலகத்தில்தான் ஒரு சின்னத் துப்பு என்றாலும்

துலாபாரம் ஆக்கிவிடுவார்களே... அதனால் அர்ஜுனிடம் கேட்காமலேயே எல்லா விஷயமும் பாரதிக்கு வந்து கொண்டுதான் இருந்தது.

அவன், கேசவ்வின் வீட்டிற்குச் சென்றது, யாரோ ஒரு பெண்ணுடன் அடிக்கடி வெளியில் செல்வது என்ற செய்திகள் அடிக்கடி வர... பாரதிக்கு, எந்த அலுவலகம் அவளது தாய்வீடு போல் அமைதியையும் பாதுகாப்பையும் தந்ததோ... இப்போது அதுவே ஒவ்வொரு நிமிடமும் ஊசி மேல் நிற்க வைப்பது போல் இருந்தது.

அவளைச் செல்லாக் காசாகச் சிறிது சிறிதாக மாற்றியிருந்தான் அர்ஜுன். அவள் மனதைக் கூறு கூறாகப் போட ஆரம்பித்தான்.

எந்த முகத்தைப் பார்த்து ஆனந்தம் கொண்டாளோ... அந்த முகத்தில் சற்றும் தெரியாத காதல், அவளைத் தினம் தினம் தீக்குளிக்கச் செய்தது.

அன்று அப்படித்தான், அவனிடம் ஏதோ பேசப் போனபோது...

"சரி, மினி... நான் சரியா வந்திடுறேன். யூ பி ரெடி..." என்று கூறிவிட்டு, ஃபோனை வைக்க... பாரதி இதுநாள் வரை தான் கேட்டது அனைத்தும் ஒருவேளை பொய்யாக இருக்குமோ என்ற சிறு நப்பாசையான நம்பிக்கை, அன்று தூள் தூளாகச் சிதறியது.

ஆனால், ஒன்றையும் வெளிக்காட்டாது, அவனிடம் சென்று, "பாஸ்... ஆடிட்டர் நாளைக்கு உங்களை மீட் பண்ணணும்னு சொன்னார். நீங்க எப்போ ஃப்ரீ?" என்று கேட்க,

அர்ஜுன், சில விநாடிகள் யோசித்து விட்டு, "காலையில் வேண்டாம். நாளைக்கு மினிக்கு பர்த் டே. நான் போகணும். அதனால் சாயந்திரம் வீட்டுக்கு வரச் சொல்லு..." என்று கூற,

பாரதி, தன்னைக் கட்டுப்படுத்தப் படாத பாடு பட்டாள். பின், "சரி சார்..." என்று கூறிவிட்டுச் செல்ல...

அவனோ, "ஒரு நிமிஷம். ஏதோ நான் மினிகிட்ட பேசுறது உனக்குப் பிடிக்கலை போல..." என்று நக்கலாகக் கேட்க,

பாரதி அவனை வெற்றுப் பார்வை பார்த்து விட்டு, ஒரு வார்த்தை கூடப் பேசாமல் வெளியேறினாள். பாரதியிடம் ஒரு பழக்கம் உண்டு. தன்னை ஒருத்தருக்குப் பிடித்தால், அவர்களை அன்பால் குளிப்பாட்டவும் தெரியும். அதே சமயம் தன்னைத் துச்சமாக மதித்தால், அவரை வேம்பின் கசப்பாக வெறுக்கவும் தெரியும்.

மொத்தத்தில் அவளை விட ஏமாளியும் கிடையாது. அவளை விட வில்லியும் யாரும் கிடையாது. அர்ஜுன், இன்னும் சில நிமிடங்களில் அதை அனுபவிக்கப் போகிறான்.

அவனைப் பார்த்து விட்டுச் சென்றவள்... மறுபடியும் கதவைத் தட்ட, அவனோ... "என்ன திமிரா? கேள்வி கேட்டா பதில் சொல்ல மாட்டியா? எவ்வளவு தைரியம் உனக்கு..." என்று கத்த ஆரம்பிக்க,

அவள் பதில் ஏதும் கூறாமல் அவனிடம் ஒரு கடிதத்தை நீட்டினாள்.

அவன் நக்கலாக, "என்ன ஸ்பீச்சா... இன்னைக்கு ஏதும் விழா இல்லையே..." என்று கூறிவிட்டுப் பிரித்துப் படித்தவன் அதிர்ந்தான்.

காரணம், அது பாரதியின் ராஜினாமா கடிதம்.

## 22

சேரி முழுதும் பறையடித் தேயருட்
சீர்த்திகள் பாடிடுவேன்;
பேரிகை கொட்டித் திசைகள் அதிரநின்
பெயர் முழக்கிடுவேன்!
ஆண்டே - பெயர் முழக்கிடுவேன்!
பண்ணைப் பறையர்தன் கூட்டத்திலே இவன்
பாக்கிய மோங்கிவிட்டான்!
கண்ணன் அடிமை இவனெனுங் கீர்த்தியில்
காதலுற் றிங்குவந்தேன்
ஆண்டே - காதலுற்றிங்கு வந்தேன்!

**அ**ர்ஜுன் அந்த ராஜினாமா கடிதத்தை ஒரு பார்வை பார்த்து, அவளையும் பார்க்க... அவள் முகம் ஒருவிதத் தீவிரத்தைத் தாங்கியபடி அவன் முன் நின்றது.

அதற்கு முன் அர்ஜுன் அவள் முகத்தை அப்படிப் பார்த்ததே இல்லை. அவள் முகத்தில் உள்ள தீவிரம், நிமிர்வு, கண்களில் தெரிந்த துயரம் அனைத்தையும் அன்றுதான் முதலில் பார்த்தான் அர்ஜுன்.

ஆனாலும் தன்னை விட்டுக் கொடுக்காமல், "இது என்ன?" என்று கேட்க,

அவளோ சற்றும் அசராமல், "பார்த்தால் தெரியலை. என் ராஜினாமா கடிதம்..." என்று கூற, அந்தக் குரலில் சற்றும் இளக்கம் இல்லை. மாறாக, ஆயிரம் கிலோ இரும்பின் கடுமைதான் இருந்தது.

அதைக் கேட்ட அர்ஜுன், "என்ன திடீரென்று?" என்று ஒரு வித நக்கலுடன் கேட்க, பாரதிக்குக் கோபம் தலைக்கேறியது.

அதனால், "கொஞ்ச் நாளாவே நான் நினைச்சிட்டு இருந்ததுதான். இனிமே எனக்கு இங்கே வேலை இல்லைன்னு நீ ஒவ்வொரு நாளும் மறைமுகமாக உணர்த்திக்கிட்டே இருந்தே. அப்பவே தோணிச்சுதான். நான்தான் யோசனையில் இருந்தேன். அப்புறம் காலையில் நான் ஹாஸ்பிடலுக்குக் கட்டின பணத்துக்காக நீ என் டேபிளில் வைத்திருந்த செக் பார்த்தேன். அதுக்கப்புறம் அந்த யோசனை இன்னும் அழுத்தமாச்சு. அப்புறம் நீ இப்போ பேசினியே ஃபோன்... அதில் சுத்தமாத் தெள்ளத் தெளிவாத் தெரிஞ்சது. அதான் நான் இந்த முடிவெடுத்தேன்..." என்று கூற,

அர்ஜுன் அவளையே பதில் பேசாமல் ஒருவித ஏளனப் பார்வையுடன் பார்த்துக் கொண்டிருக்க,

அவள், "நான் போறதைப் பத்தி நீ ஒரு நிமிஷம் கூடக் கவலைப்பட மாட்டேன்னு தெரியும், அர்ஜுன்! நான் இந்த ஆபீசை விட்டுப் போகணும்னுதானே நீ இந்த மாதிரி எல்லாம் செஞ்சே. அதான் இனியும் உனக்குக் கஷ்டம் கொடுக்க வேண்டாம்னு நானே போகலாம்னு முடிவு பண்ணிட்டேன்.

“என்ன... இந்த முடிவை நாலு வருசம் முன்னாடியே நான் எடுத்திருக்கலாம். என்னைச் சுத்தியிருக்கிறவங்க மனசாவது நிம்மதியா இருந்திருக்கும்...” என்று கூற, அவன் அவளை முறைத்தான்.

அவளோ, “ஏன் முறைக்கிற, அர்ஜுன்? நான் பேசு வேன்தான். ஏன்னா... நான் அவ்ளோ இழந்திருக்கேன். இழந்தவனோட வலி உனக்குத்தான் தெரியுமே, அர்ஜுன்! நாலு வருசம் முன்னாடி நான் எந்த முடிவைப் பெருமையா நினைச்சேனோ... அதே முடிவு இன்னைக்கு வடிகட்டின முட்டாள்தனமாத் தோணுது. அதுக்குக் காரணம் நீ, அர்ஜுன்... நீ மட்டும்தான். என் சித்தப்பா, என் ஃபிரெண்ட்ஸ் எல்லாரும் என்னை என்னென்னவோ திட்டினாங்க.

“ஆனால் நான் உன் நலம், உன் எதிர்காலம்தான் முக்கியம்னு என் வாழ்க்கையையே உன்கிட்ட பணயம் வைச்சேன். அதுக்கு நல்ல கைம்மாறு செஞ்சிட்டே, அர்ஜுன். ரொம்ப... ரொம்ப தேங்க்ஸ். குடும்பத்தை விட்டு வசதியை விட்டுக் கொடுத்து கூப்பிட்ட குரலுக்கு நாய் மாதிரி ஓடி வந்து, உன் வீட்டு வேலைக்காரி மாதிரி அத்தனை வேலையும் செஞ்சேன். ஏன்... உன் சொத்துக்காகவா? புல்ஷிட்... உன்மேல் வைச்சிருந்த காதலுக்காக...

“சே... அந்த வார்த்தையைச் சொல்லக்கூட எனக்கு எரிச்சலா வருது இப்போ... ஆனால் உன் குணத்துக்கும் உன் எண்ணத்துக்கும் உன்னோட கசப்பான கடந்த காலம்தான் காரணம்னு நினைச்சு நான் மனசைத் தேத்திக்கிட்டேன். ஆனால் இப்போதான் தெரியுது. அந்த மினியை மனசில் வைச்சிக்கிட்டுத்தான் என்னை ஒதுக்கி

யிருக்கேனு... எனக்கு இப்போ எப்படி இருக்கு, தெரியுமா! அப்படியே எரியுற நெருப்பில் இறங்கிடலாமானு இருக்கு, அர்ஜுன்... இப்ப என் முகத்தைப் பார்த்து நானே அருவருக்கிற அளவுக்குச் செஞ்சிட்டியே, அர்ஜுன்..." என்றவளுக்குக் கோபம் பெருகிக் கண்கள் இடுங்கி மூச்சு வாங்கியது.

ஆனாலும் ஆசுவாசப்படுத்திக் கொண்டு, "இப்போதான் எனக்கு ஒண்ணு புரியுது, அர்ஜுன்... உன்னால் காதலை உணர முடியாது. அப்படி ஒரு வியாதி உனக்கு...! உனக்கெல்லாம் செத்த பிணத்தில் கூட ஆதாயம் இருக்கானு தேடுற அந்தச் சுயநலக்காரி மினிதான் சரி. உன் குணத்திற்கு நீ அவளைத்தான் கட்டிக்கணும். ஆனால் கேவலம் என்னை விரட்ட... நீ ஒரு பெண்ணையா உபயோகப் படுத்தணும்!

"ஒரு பெண்ணால் நான் இந்த ஆபீசை விட்டுப் போறதை நினைச்சால் எனக்கே கேவலமா இருக்கு, அர்ஜுன்... ஆனால் என்ன பண்றது... என்னால் அந்த மாதிரி ஒரு பெண்ணோட மூச்சுக்காத்து பட்ட இடத்தில் கூட வாழ முடியாத மாதிரி எனக்குக் கொஞ்சமே கொஞ்சம் தன்மானத்தை ஊட்டி வளர்த்துட்டார் என் சித்தப்பா. இப்பகூட நான் இருந்திடுவேன், அர்ஜுன்...! ஏன்னா, எனக்குத்தான் மானம், ரோஷம் எதுவும் கிடையாதே! ஆனால் இனிமேலும் நான் இங்கே இருந்தா என்னைக் கண்ணுக்குக் கண்ணா வளர்த்தாரே ஒரு பைத்தியக் காரன்... அவருக்கு இது மரியாதையா இருக்காது. அதனால்தான் நான் போறேன்.

"அன்னைக்கு ஜெயில் வாசலில் நீ பாரதின்னு சொன்னே... ஒரு வார்த்தையில்தான் உன் மேல் காதல் வந்திச்சு... அதே காதல் மினி என்கிற ஒரு வார்த்தையில் கலைஞ்சு போச்சே... அர்ஜுன்! அப்புறம் இன்னொரு விஷயம்... நீயும் நானும விட்ட சவாலில் நான் தோத்துட்டேன், அர்ஜுன்! கேவலமாத் தோத்துட்டேன். நீ உன்னை ஒரு காலத்தில் பூஜ்யம்னு சொன்னே... ஆனா நானே இப்ப பூஜ்யமாகித் தோத்துட்டேன், அர்ஜுன்... ஆனால் என்ன... பரவாயில்லை. உன்கிட்ட தானே தோற்றேன். சே... இப்ப கூடப் பாரேன். என் மனசு உன் பக்கம்தான் பேசச் சொல்லுது. நான் ஒரு லூசு இல்ல..." என்றவள் கண்களில் இயலாமையின் வலி அப்பட்டமாகத் தெரிந்தது. அதைக் கண்ட அர்ஜுன், அப்போதும் அசரவில்லை.

அவன் முகம் கல்லைப் போல் ஒரு உணர்ச்சி யையும் காட்டாமல் இருக்க... அவளோ, "ஒண்ணு சொல்றேன் அர்ஜுன்... இந்த நாலு வருசத்தில் என் அன்பையும் காதலையும் நீ புரிஞ்சுக்கலைன்னா நீயெல்லாம் மனுஷனே இல்லை. ஏன்னா... இந்த உலகத்தில் அல்ஜிப்ரா தெரியாதவன் முட்டாள் இல்லை, அர்ஜுன்! அன்பைப் புரிஞ்சுக்காதவன்தான் முட்டாள். அதில் நீயும் ஒருத்தன். இப்படி எல்லாம் நான் உன்னைத் திட்டுவேன்னு சத்தியமா என் கனவில் கூட நினைச்சுப் பார்த்ததில்லை... அர்ஜுன்! என்னைப் போய் இப்படித் தரம் இறங்க வைச்சிட்டியே... செஞ்சதை எல்லாம் சொல்லிக் காட்ட வைச்சிட்டியே... ஏன் அர்ஜுன்... ஏன்?" என்று கத்தியவள்,

பின், "நீ என்னை எத்தனையோ வாட்டி அசிங்கப்படுத்தியிருக்கே. அவமானப்படுத்தியிருக்கே... என் மனசைச் சுக்குநூறாய் உடைச்சிருக்கே... ஆனால் நான் எவ்ளோ பொறுமையா இருந்தேன். ஒரு வாட்டி உன்னை விட்டுக் கொடுத்திருப்பேனா? ஆனால் நானே இப்படி ஆகிட்டேன்னா... அதுக்கு யார் காரணம்னு நீயே உன் மனச்சாட்சியைக் கேட்டுப் பாரு அர்ஜுன்... ஆ... ஊன்னா இந்தக் காலத்துப் பொண்ணுங்களுக்குப் பொறுமை இல்லை. சகிப்புத் தன்மை இல்லைங்கறீங்களே... நாங்க எல்லாம் பொறுமையில் பூமாதேவிதான்யா... ஆனால் அதைப் புரிஞ்சுக்க நீங்க மனுஷனா இருக்கணும்.

"எங்கே... சரி விடு. அர்ஜுன், இனியும் பேசி உன் பொன்னான நேரத்தை வீணாக்க விரும்பலை. நீ அந்த லெட்டரைக் கிழிச்சிப் போட்டாலும் சரி, பத்திரமா வைச்சாலும் சரி... உன் இஷ்டம். நான் வர்றேன்... இனிமே என்னால் உனக்கு எந்தத் தொந்தரவும் இருக்காது..." என்று கூறிவிட்டுத் தளர்ந்த நடையுடன் கதவுவரை சென்றவள்... திரும்பி, "திரும்பக் குடிச்சிட்டு அழிச்சாட்டியம் பண்ணி என்னை வரவைக்கணும்னு நினைக்காதே. அது நடக்காது. ஆனால் இப்போ நீ அதைச் செய்ய மாட்டேனு நினைக்கிறேன். ஏன்னா உனக்குத்தான் மினி இருக்காளே...!" என்று நக்கலுடன் கூறிவிட்டு அலுவலகத்தில் யாரிடமும் ஒரு வார்த்தை கூடக் கூறாமல் வெளியேறினாள்.

அவள் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்த அர்ஜுனின் முகம் சிறிது நேரக் கன்றலில் இருந்து குறுநகைக்கு மாறியது.

அதன் காரணம் என்னவோ? அந்த ஆண்டவனுக்கே வெளிச்சம்.

அன்று சோர்வுடன் விடுதிக்குள் நுழைந்து செருப்பைக் கழற்றி வைத்து விட்டுத் தன் அறைக் கதவைத் திறந்தாள் மஹதி. திறந்தவளுக்கு ஆச்சரியம் காத்திருந்தது. அங்கே சமோசா, கட்லட், பானிப்பூரி என்று வாங்கி வந்து கடைபரப்பி இருந்தாள் அவள் அறைத் தோழி பாரதி. அதை எல்லாம் பார்த்த மஹதிக்குச் சிரிப்பு வர,

"என்னடி... நீ சீக்கிரமா வந்ததே ஆச்சரியம். இதில் என்னடான்னா இதை எல்லாம் கடைபரப்பி இருக்கே... என்ன உன் பாஸ் பிரமோஷன் ஏதாவது கொடுத்துட்டாரா?" என்று நக்கலாகக் கேட்க,

எந்தக் கவலையுமின்றி ஃப்ரூட்டியை உறிஞ்சிக் குடித்துக் கொண்டிருந்த பாரதி, "அவர் ஒண்ணும் பிரமோஷன் கொடுக்கலை. நான் அவனை டிபிரமோட் பண்ணிட்டேன். புரியலை...? வேலையை ராஜினாமா செய்துட்டேன்..." என்று கூற,

மஹதி அதிர்ச்சியுடன், "என்னடி சொல்றே?" என்று கேட்க,

பாரதி, "ஆமா. இதுக்கு எதுக்குடி நீ இப்படி வாயைத் திறக்கிற! ஈ ஏதாவது போயிடப் போகுது. ஆமாடி. வேலையை விட்டுட்டேன். இனிமே அவனுக்கு ஒரு கும்பிடு..." என்று அசால்ட்டாகக் கூற,

மஹதி, "அப்போ ஏதோ நடந்திருக்கு. உண்மையைச் சொல்லு பாரி... என்ன நடந்தது? இல்லைன்னா... நீ வேலையை விட்டிருக்க மாட்டியே...!" என்று கேட்க,

பாரதி, "ஆமா மகி... என் பொறுமைக்கு ஒரு எல்லை இருக்கு. அது இன்னைக்குக் கடந்ததால்தான்..." என்று கூறிவிட்டு நடந்ததை எல்லாம் கூறி முடித்தவள், "இனியும் என்னால் அவன் செய்யுறதை எல்லாம் பார்த்துட்டு சும்மா இருக்க முடியாது, மகி... நாளைக்கே அவளை ஆபீசுக்குக் கூட்டிட்டு வந்து கொஞ்சுவான். அதை நான் பார்த்துட்டு இருக்கணுமா? அதான் வந்துட்டேன்..." என்று பொரிய...

மஹதி, "ஓ.கே. கூல். கூல்... நல்ல காரியம் செஞ்சே பாரி. இதை நீ முன்னாடியே செய்திருக்கணும். ஆனால் நீ இவ்ளோ சாதாரணமா இருக்கே... இந்நேரத் துக்கு அழுது ரூமையே நனைச்சிருப்பியே!" என்று குறும்பாகக் கேட்க...

பாரதி சிரித்து, "எதுக்கு மகி... நான் அழணும்... என் அழுகைக்குக் கொஞ்சம் கூட லாயக்கில்லாதவனுக்காக நான் அழ முடியாது. எனக்கு ஆத்திரம்தான் வருது. அழுகை வரலை. என்னைப் பத்திதான் உனக்குத் தெரியுமே மகி! எனக்கு ஒண்ணு வேணும்னா வேணும். வேண்டாம்னா வேண்டாம்தான். அதை அறவே ஒதுக் கிடுவேன். அப்படித்தான் ஒதுக்கிட்டேன்..." என்று கழுத் தெலும்புகள் புடைக்கும் அளவிற்குக் கத்த,

மஹதி, "சரி... சரி. கத்தாதே. ஆமா, என்ன இவ்வளவு சாப்பிடுற அயிட்டம்?" என்று கேட்க,

பாரதி, "அதான் என் அமர காதல் புட்டுக்கிச்சு இல்லை. அதுக்குத்தான் இந்தப் பார்ட்டி. பிரேக் அப்

பார்ட்டி. இந்தா, நீயும் எடுத்துக்கோ..." என்று கூறிவிட்டு சமோசாவைக் கடிக்க...

அவளை என்ன செய்வது என்று தெரியாமல் தலையில் கை வைத்துக் கொண்டாள்.

இதுதான் பாரதி... எந்தளவிற்கு அவள் மனம் மென்மையோ அந்த அளவிற்குக் கடினமானது.

ஒன்று வேண்டாம் என்றால் அவ்வளவுதான். தன் முடிவில் இருந்து மாறவே மாட்டாள். அவ்வளவு வில்லத்தனம். இது மஹதிக்கும் தெரியும் என்பதால், அவளிடம் அதற்கு மேல் எதுவும் பேசி வாங்கிக் கட்டிக் கொள்ளக் கூடாது என்று முடிவெடுத்து அமைதியாகி விட்டாள்.

சிறிது நேரத்திற்குப் பின், "நான் நாளைக்குச் சாயந்திரம் பெங்களூருக்குக் கிளம்புறேன், மகி..." என்று கம்மிய குரலில் கூற,

மஹதி அதிர்ந்தாள். பின்னே அடித்தாலும் பிடித்தாலும் அவளின் உயிர்த் தோழி அல்லவா! எனவே, "என்ன பாரி... நாளைக்கே போகணுமா? கொஞ்ச நாள் கழிச்சுப் போயேன்..." என்று கேட்கும்போதே அவள் குரல் தளர்ந்தது.

பாரதி, "இல்லை மகி... சித்தப்பாவையும் அண்ணாவையும் நேரில் பார்த்துதான் எல்லாத்தையும் சொல்லணும்... அதுக்கு நான் போகணும். உன்னை விட்டுப் போகணும்னு நினைச்சா கஷ்டமா இருக்கு மகி..." என்று அர்ஜுனைப் பிரிந்து வந்ததற்கே அழாதவள்... தன் தோழியின் பிரிவை நினைத்துக் கண்ணீர் விட... அந்தப்

பாசத்தில், நட்பில் கரைந்த மஹதி... அவளைத் தன் மடியில் சாய்த்துக் கொண்டு தலைமுடியைக் கோத... அவளின் கண்களிலும் கண்ணீர்ப் பெருக்கெடுத்தது.

ஆனால் இதுதானே வாழ்க்கை. பெண்களின் நட்பு ஒரு எல்லைக் கோட்டுக்கு உட்பட்டதுதான், நம் சமூகத்தில். ஒரு குறிப்பிட்ட நேரம் வரைதான் நம் நட்பு நமக்குச் சொந்தம். அந்தந்த நேரம் வருகையில் நம் நட்பை அருகிலிருந்து சுவைக்க முடியாது. தூரத்திலிருந்து ரசிக்க முடியும். இதை உணர்ந்தே இருந்ததால்... மஹதி, “விடு பாரி... இப்போ போய்விட்டால் அவ்வளவுதானா! இனிமே பார்க்கவே மாட்டோமா... என்ன? ஸ்கைஃப் இருக்கு... ஃபேஸ்புக் இருக்கு. செல்போன் இருக்கு... இது பிரிவுதான் பாரி. நிரந்தரம் இல்லை. நாளைக்கே எனக்கு ஒண்ணுன்னா நீ வரமாட்டியா? உனக்கு ஒண்ணுன்னா நான் வரமாட்டேனா...? இதுக்குப் போய்ச் சின்னப்பிள்ளை மாதிரி அழாதே...!” என்று பலவாறு சமாதானம் கூறித் தன் தோழியைத் தேற்றினாள் மஹதி.

கொஞ்சம் கொஞ்சமாகத் தேற்றிய பின், பழைய கதையைப் பேச ஆரம்பித்தவர்கள்... அந்த நினைவில் மூழ்கி அப்படியே உறங்கினர். இப்போது கண்ணீர் போய் அவர்கள் முகத்தில் உறைந்திருந்தது ரம்யமான புன்னகை.

அங்கே அழகிய நட்பு பிரிவிலும் அழகாய்ப் பூத்து நறுமணம் வீசியது.

**கா**லையில் அரக்கப் பரக்க எழுந்தே பழக்கப் பட்டவள், இன்று நிதானமாக எட்டு மணிக்கு எழ,

அவளைப் பார்த்துச் சிரித்த மஹதி, "இன்னைக்குதான் நீ ரெஸ்ட் எடுத்து நான் பார்க்கிறேன்டி... சரி, எனக்கு ஆபீசுக்கு லேட்டாச்சு. நான் கிளம்புறேன்... நைட் தானே ஃப்ளைட். அதற்குள் வந்திடுவேன்... நீ சாப்பிட்டுக் கொஞ்சம் ரெஸ்ட் எடு... உன் திங்ஸ் எல்லாம் எனக்குத் தெரிஞ்சவரை கொஞ்சம் பேக் செய்துட்டேன். ஏதாவது விட்டுப் போயிருந்தா எடுத்துக்கோ. பை மா... டைம் ஆச்சு..." என்று காலில் வெந்நீர் ஊற்றியது போல் கூறிவிட்டுத் தன் அலுவலகத்திற்குச் செல்லும் தோழியை ஆதுரத்துடன் பார்த்த பாரதி எழுந்து... தன் வேலைகளை முடித்து விட்டு மஹதி எடுத்து வைத்த பொருட்களைச் சரி பார்த்துக் கொண்டிருந்த வேளையில் அவளின் கைபேசி அழைத்தது.

அழைத்திருந்தது யாழினி. அன்று மருத்துவ மனையில் பேச ஆரம்பித்ததற்குப் பின் அவர்களின் எண்கள் பகிரப்பட்டுத் தினமும் பேசிக் கொண்டுதான் இருந்தனர்.

நேற்றுதான் ஏதேதோ நினைவுகளில் அழைக்க மறந்து விட்டிருந்தாள். அதனால்தான் அழைக்கிறாளோ என்று நினைத்தவள்... கைபேசியை உயிர்ப்பித்துக் காதில் வைக்க... யாழினி கேட்ட முதல் கேள்வி இதுதான்... "அண்ணி, ஆபீசில் இருந்து ராஜினாமா செய்துட்டீங்களா! ஏன் அண்ணி?" என்பதுதான்.

அவளோ, "யாழி, தயவு செய்து என்னை அண்ணின்னு கூப்பிடாதே. உன் அண்ணன் அதுக்கு வேற ஒரு பெண்ணைப் பார்த்துட்டார். இப்போ தெரியுதா, நான் ஏன் வேலையை விட்டேன்னு?" என்று கூற,

யாழினி, "அண்ணி, எனக்கு ஒண்ணும் புரியலை. லாயர் சார் ஏதேதோ சொல்றாரு... அதெல்லாம் உண்மையா அண்ணி?" என்று கெஞ்சலுடன் கேட்க,

அவள் குரலில் கரைந்த பாரதி, "ஆமா யாழி... அவர் மனசில் நான் இல்லை. அதை இனியும் நான் புரிஞ்சுக்கலைன்னா என்னைவிடப் பைத்தியக்காரி இந்த உலகத்தில் கிடையாது..." என்று கூறிவிட்டு, அவளிடம் நடந்தது அனைத்தையும் கூற, அதைக் கேட்ட யாழினி சில நிமிடங்கள் வாயடைத்துப் போனாள்.

பின், "என்ன நினைச்சிட்டு இருக்கான் அவன்... அவன் கூட இருக்கிற எல்லாரையும் வெளியே அனுப்பிட்டு யாரோ ஒருத்தியைச் சேர்த்துக்கப் போறானாம். இல்லை, அண்ணி... இதை இப்படியே விட முடியாது. அவனுக்கு எல்லாம் ஷாக் ட்ரீட்மெண்ட்தான். இனியும் அவன் மனசு மாறி வீட்டுக்கு வருவான் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. அதனால் நான் அவனுக்கு ஒரு குண்டைத் தூக்கிப் போடப் போறேன்.

"என் பழைய அண்ணன் கொஞ்சமாவது மிச்சம் இருந்தால்... என்னைக் கொல்றதுக்கு வீட்டுக்கு ஓடி வருவான். இதுதான் எனக்கு இருக்கிற கடைசித் துருப்புச் சீட்டு. இதை நான் செயல்படுத்தப் போறேன்..." என்று உறுதியுடன் கூற...

பாரதிக்கு ஒன்றும் புரியவில்லை. "என்ன, கொல்ற துக்கா...! யாழி! அவசரப்பட்டு எதுவும் செய்யாதே. அவன் முரடன்..." என்று எச்சரிக்க,

யாழினி மெல்லிய சிரிப்புடன், "நானும் முரடுதான், அண்ணி. நான் இப்போ சொல்லப் போறது கண்டிப்பா

அவனுக்குக் கோபத்தை மூட்டும். அடிச்சுப் புரண்டு வீட்டுக்கு வருவான். அதுதான் எனக்கு வேணும்..." என்று கூறிவிட்டு ஃபோனை வைக்க...

பாரதிக்குக் கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை. இவள் ஏதாவது செய்யப் போய் அவன் இருக்கும் கோபத்தில் சின்னப் பெண் என்றும் பார்க்காமல் இவளை ஏதாவது செய்து விடுவான் என்று பயந்து, 'எதற்கும் நாம் அவள் வீட்டுக்குச் செல்வோம். அப்போ தான் அவளைக் கொஞ்சமாவது அடக்கலாம்.." என்று நினைத்து, உடனே யாழினியின் வீட்டுக்குக் கிளம்பினாள்.

**அ**தே சமயம் மினியின் பிறந்த நாள் விழாவிற்கு வந்து பரிசைக் கொடுத்து விட்டு, உடனே திரும்பிய அர்ஜுனை மினி வழி மறித்து, "என்ன அர்ஜுன்... வந்ததும் போறே! இன்னைக்குப் பூரா நீ என்கூடத்தான் இருக்கணும்..." என்று சிணுங்க...

அர்ஜுன், "இல்லை, மினி... எனக்கு வேலை இருக்கு. இன்னொரு நாள் வர்றேன்..." என்று சிரித்தபடி கூற,

மினி, "அர்ஜுன்... நீ இப்போ எல்லாம் ரொம்ப மாறிட்டே... என்னை ரொம்பத் தள்ளி வைக்கிற!" என்று கண்களில் போதையுடன் கூற,

அர்ஜுன் அவளை விட்டுத் தள்ளி நின்று, "இப்போ எல்லாம் வயசாயிடுச்சு மினி... என்ன... சின்ன வயசா? சம்பாதிக்கணுமே... அந்தச் சம்பாத்தியத்தோட அருமையை உணர்ந்தவன் நான்... மினி!" என்று ஒருவித விஷமத் துடன் கூற,

மினி, “என்ன அர்ஜுன்... குத்திக் காட்டுறியா! என்னை நீ நம்பலையா?” என்று கேட்க,

அர்ஜுன், “நம்பாமலா... உன்னை மன்னிச்சேன். சரி, மினி... உங்க வீட்டில் இருந்து யாரும் வரலையா?” என்று கேட்க,

மினி, “எல்லாரும் நாளைக்கு வர்றாங்க, அர்ஜுன்! அப்பாவுக்கு இன்னைக்கு ஏதோ வேலையாம். நாளைக்கு வர்றேன்னு சொன்னார்...” என்று கூற, அர்ஜுன் முகத்தில் சிறு ஏமாற்றம் வந்து உடனே மறைந்தது. பின்னர் அவன் கைபேசி அடிக்க ஆரம்பிக்க... எடுத்து அதைக் காதிற்குக் கொடுத்தவனின் முகத்தில் நெருப்பு ஜுவாலை பூக்க ஆரம்பித்தது.

கை முஷ்டிகள் இறுக... மறுமுனை கூறிய செய்தியைக் கேட்டவன்... கைபேசியை அணைத்து விட்டு, மினியிடம், “ஒரு அவசர வேலை மினி. நான் போயே ஆகணும்... நான் வர்றேன்...” என்று கூறிவிட்டு, அவள் பதிலுக்குக் கூட நிற்காமல் காரில் விருட்டென்று கிளம்பிச் செல்ல...

அவனைப் பார்த்துக் கொண்டிருந்த மினியின் முகம் கோபத்தில் சுருங்கியது.

“எனக்கென்னமோ அவன் உன்னை வைச்சு கேம் ஆடுறான்னு தோணுது, மினி...” என்ற குரல் கேட்க... மினி திரும்பிப் பார்க்க... அங்கே மதுபானக் கோப்பையுடன் கேசவ் நின்றிருந்தான்.

அவனைக் கண்டு சிரித்த மினி, “அவனாவது என்னை வைத்துக் கேம் ஆடுறதாவது... அவனுக்கு

அந்த அளவிற்கு மூளை கிடையாது, கேசவ்...” என்று கெக்கலித்தாள்.

கேசவ், “இல்ல மினி... நீ செஞ்ச தப்புக்கு அவன் ஒரு வார்த்தைகூட உன்னைத் திட்டலை. ஏன், ஒரு கோபமா பார்வை கூடப் பார்க்கலை. நான் சொன்னதை அப்படியே நம்பிட்டான். அதுவே எனக்குச் சந்தேகம். இப்போ அவன் நடந்துக்கிறதைப் பார்த்தால் இன்னும் சந்தேகமா இருக்கு...” என்று கூற,

மினி எரிச்சலுடன், “ஆமா. நீ இப்படியே சந்தேகப்படு. நல்லா விளங்கிடும். இதைப் பாரு கேசவ், இவ்வளவு வருசம் நான் காத்திருந்ததற்கான பலன் இப்போ கிடைச்சிருக்கு. யாருக்கும் மயங்காத அவன் அப்போவே எனக்கு மயங்கினான். இப்போ அவனைச் சுத்தி யாருமே இல்லை. எனக்கு மயங்காமலா போவான்! சும்மா கெத்து காட்டுறான். கூடிய சீக்கிரம் என் வழிக்கு வந்திடுவான். எல்லாத்துக்கும் சந்தேகப்பட்டு இல்லாத மூளையைக் கசக்காதே!” என்று கூறிவிட்டுத் தன் அறைக்குச் செல்ல... அவளைப் புரியாமல் பார்த்தான் கேசவ்.

கேசவ் அர்ஜுனிடம் கூறியது போல் மினி ஒன்றும் மாறவில்லை. திட்டம் போட்டுத்தான் அனைத்தும் நடந்தது.

அன்று போலீஸ் கேஸ் என்று பெரிய பிரச்சனை ஆனதால் மினியின் திருமணம் நின்றுவிட்டது. கல்யாணக் கனவுகளுடன் காத்துக் கொண்டிருந்த மினிக்கு இது பலத்த அடி. அதற்குள் சரசரவென்று அவர்கள் குடும்பத்திற்கும் அடி விழ ஆரம்பித்தது.

அர்ஜூன் விவகாரம் தொடர்பாகக் கட்சி மேலிடம் கேள்வி கேட்டதற்கு ஜெயதேவ் கோபத்தில் கைநீட்டி விட, கட்சி அவரைக் காலடியில் போட்டு மிதித்தது. அவரின் செல்வாக்கு சரிய... அந்தக் கட்சியின் தொண்டன் நிலைக்கு மாற்றப்பட்டார். அரசியலில் முன்னேறவும் தாழவும் ஒரு நாள் போதும் அல்லவா! அந்த ஒரு நாள் அவரைத் தலைகீழாக மாற்றியது.

அவரைக் கட்சியில் இருந்து நீக்கினர். எதிர்க் கட்சியிலும் இவரைச் சேர்த்துக் கொள்ளவில்லை. பினாமியாக இருந்த சொத்துகள் எல்லாம் பிடுங்கப் பட்டன. இப்போது அவருக்கு ஓரளவு வசதியைக் கொடுத்தது அவரின் கிரானைட்டும் இரும்புத் தொழிற் சாலையும்தான்.

அதாவது அரசியல்வாதியிலிருந்து தொழிலதிபராக மாறினார். அவர் வாழ்ந்த வாழ்க்கைக்கு இந்த நிலையே அவருக்குக் குறைவுதான். இதனால் மிகவும் பாதிக்கப் பட்டது மினி. முன்போல் அவளால் ஆடம்பரமாகச் செலவு செய்தது போய் இப்போது அனைத்திற்கும் தந்தையிடம் கைகட்டி நிற்கும் நிலை வர, அவள் அதை எதிர்த்துத் தன் அண்ணன் வீட்டிற்கு வந்துவிட்டாள். அங்கேயும் அதே நிலை இருக்க... அவளுக்கு மூச்சு முட்டிப் போயிருந்த வேளையில் ஒரு நாள் கேசவ் ஓடி வந்தான்.

“மினி, நான் இன்னைக்கு அந்த அர்ஜூன் இல்ல... அவனைப் பார்த்தேன்...” என்று கூற, மினிக்கு ஒன்றும் புரியவில்லை.

அவன், “ஆமா மினி... இன்னைக்கு ஒரு ஆக்சிடெண்ட். நான் போய் யாருன்னு பார்த்தேனா,

அவன்தான். முதலில் ஞாபகம் வரலை. அப்புறம்தான் தெரிஞ்சது... கொண்டு போய் ஹாஸ்பிடலில் சேர்த்தா... யாரோ ஒரு பொண்ணு வுட்பின்னு சொல்லிட்டு வந்தா. அப்புறமா கொஞ்சம் நோண்டி விசாரிச்சேன். அவ யாரோ ஃபேமிலி ஃபிரெண்டாம். ஆனா, மினி... நாம் நினைச்சது மாதிரி இல்லை... வசதிதான் போல. பி.எம்.டபிள்யூ. கார். செயின், பிரேஸ்லெட்...

"அப்புறம்... அவன் விசிட்டிங் கார்டு பார்த்தேன். நாதன் குரூப்ஸ் எம்.டி.யாம். அது நல்லா வளர்ந்து வர்ற கம்பெனி. நான் கேள்விப்பட்டிருக்கேன் மினி... இவ்வளவு நாள் சென்னையில் இருந்திருக்கேன். எனக்குத் தெரியலை பாரேன்..." என்று கூறிக் கொண்டே இருந்தவனைத் தடுத்த மினி, கண நேரத்தில் அந்த முடிவை எடுத்தாள்.

"அண்ணா... நீ என்ன செய்வியோ, ஏது செய்வியோ, எனக்குத் தெரியாது. அந்த அர்ஜுனை எனக்குக் கட்டி வைக்கணும். அவனால்தானே என் கல்யாணம் நின்னு அப்பாவுக்குக் கட்சி போய் இப்படிக் கஷ்டப்படுறோம். அதனால் அவன்தான் என் கழுத்தில் தாலி கட்டணும்..." என்று உறுதியுடன் கூற,

கேசவ் அதிர்ந்தான். "அது எப்படி மினி... நாம் அவனை ஜெயிலுக்கு... அவன் எப்படி நம்புவான்?" என்று வினவ,

மினி, "ஏன்... நீ பொய்யே சொல்லாத தர்மனா! என்னவோ செய்... ஏதோ சொல்லிச் சமாதானப்படுத்து. ஆனா, அவன்தான் எனக்கு வேணும். அவ்வளவுதான்... எனக்குத் தேவை யாரும் கேள்வி கேட்காத வசதி. அதை அவனால் எனக்குத் தர முடியும்னா... எனக்கு வேற

எதுவும் வேண்டாம்..." என்று கூறிவிட்டுச் செல்லும் தங்கையின் மனதை இனிமேல் மாற்ற முடியாது என்று தெரிந்து கேசவ் அவனிடம் பேசச் சென்றான்.

இப்படி நடந்ததை எல்லாம் நினைத்துப் பார்த்த கேசவ், "போ... போ. என் சந்தேகம் ஒரு நாள் உண்மையாகத்தான் போகுது. அப்போ பாரு..." என்று கூறிவிட்டுக் கோப்பை முழுவதையும் தன் தொண்டையில் கவிழ்த்தான்.

அதே சமயம் தான் எந்த வீட்டை விட்டுத் துரத்தி அடிக்கப்பட்டானோ... எந்த வீட்டிற்குத் தான் சாகும்வரை செல்லக் கூடாது என்று நினைத்தானோ, அந்த வீட்டின் வாசலில் நரசிம்ம அவதாரமாக முகத்தில் கோபக்கனல் வீச நின்றிருந்தான் அர்ஜுன்.

## 23

காடு கழனிகள் காத்திடுவேன் – நின்றன்
காலிகள் மேய்த்திடுவேன்;
பாடுபடச் சொல்லிப் பார்த்தனன் பின்னரென்
பக்குவம் சொல்லாண்டே!
ஆண்டே – பக்குவம் சொல்லாண்டே!
தோட்டங்கள் கொத்திச் செடிவளர்க்கச் சொல்லிச்
சோதனை போடாண்டே!
காட்டு மழைக்குறி தப்பிச் சொன்னால் எனைக்
கட்டியடி ஆண்டே
ஆண்டே – கட்டியடி ஆண்டே...!

அவன் வந்ததை இன்னும் செண்பகத்தால் நம்ப முடியவில்லை. காலையில் இருந்தே யாழினியின் முகமே சரியில்லை.

அதுவும் பாரதியிடம் பேசியதில் இருந்து அவள் முகமே தெளிவற்றுக் குழம்பிப் போயிருக்க... அவளிடம் காரணம் கேட்டதற்குச் சரிவரப் பதிலும் இல்லை.

பின் வற்புறுத்தி, "யாழி... இதென்ன அடமா இருக்கே... இப்போ சொல்லப் போறியா இல்லையா?" என்று அதட்டியதும்தான்... அர்ஜுனிடமிருந்து பாரதி விலகியதை அறிந்தவள் இன்னும் அதிர்ந்து போனாள்.

"என்ன சொல்றே... பாரதி அவன்கூட சண்டை போட்டுட்டாளா?" என்று கேட்க,

அவள் சினந்து, "ஆமா... உங்க அருமை அண்ணன் மவன்தான். அவங்களைப் படுத்தாத பாடுபடுத்தி இப்போ அவங்க ஊரை விட்டே போகப் போறாங்க... இன்னும் எத்தனை பேரைத்தான் விரட்டி அடிக்கப் போறானோ?" என்று கத்த...

செண்பகம் ஒன்றும் புரியாமல் விழித்தாள்.

இன்னும் அர்ஜுனைச் சிறிது நேரம் திட்டிய யாழினி, "இதோ பாருங்க அத்தை... அவன் அண்ணியையே இப்படி விரட்டி விட்டுட்டான் என்றால் அவன் ரொம்ப இறுகிப் போயிருக்கான் என்று அர்த்தம். அதனால் அவனா மனசு மாறி நம்ம வீட்டுக்கு வருவான் என்பது நடக்காத காரியம். அதனால் அவனுக்கு நான் ஒரு அதிர்ச்சி கொடுக்கப் போறேன். அதுக்கு நீங்கதான் உதவி

செய்யணும். ஏன்னா... இதை நானா சொல்றதை விட, நீங்க சொன்னால்தான் அவன் நம்புவான்..." என்று கூற,

செண்பகம், "என்ன சொல்றே யாழி... என்ன செய்யப் போறே... எனக்கு நீ சொல்றது ஒண்ணும் புரியலை..." என்று கூற,

யாழினி தலையில் அடித்துக் கொண்டு, "அய்யோ அத்தை! நான் உன்னை வைச்சிக்கிட்டு என்ன பண்றது?" என்று சலிக்க...

அவளோ அவளை லேசாக முறைக்க... யாழினி சிரித்துக் கொண்டு, "சரி, சரி. முறைக்காதீங்க. நான் சொல்றபடி கேளுங்க... உங்க அண்ணன் மவனுக்கு ஃபோன் பண்றீங்க..." என்று கூற,

அவள் அதற்குள், "ஆமா. அவன் உடனே எடுத்துப் பேசிடுவான் பாரு..." என்று அலுத்துக் கொள்ள,

யாழினி சலிப்பாக, "அத்தை, ப்ளீஸ்... நான் சொல்றதைக் கொஞ்சம் குறுக்கே பேசாமல் கேளுங்க..." என்று கூற,

அவள், "சரி, சொல்லு..." என்று கூற,

யாழினி, "இப்போ நீங்க என்ன பண்றீங்க... அவனுக்கு ஃபோன் பண்ணி அழுதுகிட்டு... உன் தங்கச்சி நம்மளை மோசம் பண்ணிட்டாப்பா. எவனையோ காதலிச்சு ஏமாந்து கர்ப்பமாகிட்டு இப்போ விஷத்தைக் குடிக்கப் போயிட்டாப்பானு சொல்லணும்..." என்று கூறுவ தற்குள்,

அத்தை அவளை, "ஏய் கூறுகெட்டவளே..." என்று அறையச் சென்றாள். பின் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு, "உனக்கு என்ன கிறுக்குப் பிடிச்சுப் போச்சா, யாழி? உன்னை இவ்வளவு தரம் தாழ்த்தித்தான் அவன் வரணும்னா... அப்படி அவன் வரவே வேண்டாம். நீ ஒரு குடும்பப் பொண்ணு. இப்படிப்பட்ட வார்த்தையே உன் வாயில் வரக்கூடாது. நான் உன்னை அப்படியா வளர்த்தேன்?" என்று கூற,

யாழினியின் விழிகளில் நீர் திரையிட, "நீங்க என்னை அப்படி வளர்க்கலைதான் அத்தை! இந்த நிமிஷம்வரை என் விரல் நுனிகூட களங்கப்படலைதான். மனசு பளிங்கு போல் சுத்தம்தான். ஆனா எனக்கு வேற வழி தெரியலை அத்தை... நாம இப்படியே கெஞ்சிக்கிட்டு இருந்தால் அவன் நம்மகிட்ட வர மாட்டான் அத்தை.. அவனோட கோபத்தைக் கிளறிவிடணும்.

"எங்க அம்மாவுக்கு அடுத்தபடி என்னைக் கண்மாதிரி பார்த்துக்கிட்டான் அத்தை அவன்... அதனால் அவன் இதைத் தாங்கிக்க மாட்டான். ஆத்திரம்தான் முதலில் அவன் கண்ணை மறைக்கும். கண்டிப்பா என்னை வெட்டிப் போடுற கோபத்தில் அவன் இங்கே வருவான். நம்ம வீட்டுக்கு வருவான் அத்தை... அதனால்தான் அத்தை... ப்ளீஸ்!" என்று கெஞ்ச,

செண்பகம், "ஆனால் யாழி... இப்படிப் பொய் சொல்லி அவன் இங்கே வந்தாலும் உண்மை தெரிஞ்சதும் அவன் நம்மளை விட்டுப் போகத்தான் போறான். அப்புறம்..." என்று தயங்க,

யாழினி, "இல்லை அத்தை... அவன் இங்கே வந்து அப்பாவை ஒருவாட்டி பார்த்துட்டான்னா கண்டிப்பா அவன் மனசு இரங்கிடும். எனக்கு என் அண்ணனைப் பத்தித் தெரியும்..." என்று கூற,

செண்பகம், "சரி. அவன் நான் சொல்ற பொய்யை நம்பாமல் வராமல் இருந்துட்டான்னா?" என்று கேட்க,

அவள், "அவன் ஆத்திரக்காரன், அத்தை! ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு. அவன் மூளையை மழுங்கடிச்சிடும். கண்டிப்பா கோபத்தில் என்னைக் கொல்றதுக்குத்தான் வருவான். அந்தச் சமயத்தில் நாம் உண்மையைச் சொல்லி, அப்பாவைப் பார்க்க வைச்சிடலாம்..." என்று உற்சாகத்துடன் கூற,

செண்பகம் இன்னும் தயக்கத்தில்தான் இருந்தாள். "ஆனா யாழி, இவ்வளவு மெனக்கெட்டுத்தான் அவன் வரணுமா? எனக்கு என்னமோ இப்படிப் பொய் சொல்ல மனசு அறுக்குதும்மா!" என்று கூற,

அவளைப் பார்த்து மென்மையாகச் சிரித்த யாழினி, "அத்தை, நெருப்புன்னா வாய் வெந்திடுமா? ஒரு பொய்தானே... இது நமக்காக இல்லை. ஆனால் அவன் அப்பாவைப் பார்க்கணும், அத்தை... அதான்!" என்று தழுதழுக்க...

செண்பகத்திற்கு அவளைப் பார்க்கப் பெருமையாக இருந்தது. என்ன பெண் இவள்! இவளிடம்தான் இந்த வயதிலேயே எவ்வளவு முதிர்ச்சி... எவ்வளவு பெருந் தன்மை! சரி. யாருக்காக இல்லாவிட்டாலும் இவளுக்காகத் தான் செய்வோமே... என்று நினைத்து அவ்வாறே அவள்

சொல்லிக் கொடுத்தது மாதிரியே அர்ஜுனிற்குப் பேசி, “ய்யா அர்ஜுன்... உன் தங்கச்சி நம்மளை மோசம் செய்துட்டாப்பா... எவன்கிட்டயோ ஏமாந்து வயித்தில் பிள்ளையை வாங்கிட்டு வந்து விசம் குடிச்சிட்டா... நீ வாய்யா அர்ஜுன்... தயவுசெய்து வாய்யா... என்னால் தாங்க முடியலையே...!” என்று அழுதுகொண்டே கைபேசியை வைக்க... அடுத்த பதினைந்தாவது நிமிடத்தில் அர்ஜுனின் கார் வீட்டின் முன் நிற்க... அவளுக்கே சற்று அதிர்ச்சிதான்.

வந்தவன் செண்பகத்திடம், கோபக் கனல் கக்கும் பார்வை ஒன்றை வீசி விட்டு, “எங்கே... அவ எங்கே?” என்று கத்த,

அவளுக்குச் சற்று நேரம் என்ன செய்வதென்றே புரியவில்லை. அவள், “அர்ஜுன்... அர்ஜு...” என்று திக்க...

அவன், “என்ன அர்ஜுனுக்கு... அத்தை, உண்மையைச் சொல்லுங்க. அவ எங்கே?” என்று கேட்க,

அவள், “நீ கொஞ்சம் பொறுமையா இரு அர்ஜுன்...” என்று கூறிக் கொண்டிருக்கும்போதே யாழினி, அங்கே மெதுவாக வர...

அவன் தடதடவென்று நடந்து சென்று பளாரென்று அவள் கன்னத்தில் அறைய... அவள் தடுமாறித் தரையில் விழ... “அய்யோ யாழி...” என்று கத்திக் கொண்டே செண்பகம் அவளைத் தாங்கிக் கொள்ள... அவளை அவளிடமிருந்து விலக்கிய அர்ஜுன்,

“என்னடி திமிரா? வாயிருக்குன்னு என்ன வேணா பொய் சொல்வியா! எவ்வளவு தைரியம்டி உனக்கு...”

என்று கத்திக் கொண்டே இன்னொரு அறை அவள் கன்னத்தில் அறைய...

யாழினி அதிர்ந்தாள். "அண்ணே... நான் சொன்னது உண்மை!" என்று சற்றே தைரியமாகக் கூற, அவள் முடியைக் கொத்தாகப் பற்றிய அவன், "சே... வாயை மூடு. என் கூடப் பிறந்தவ அந்த மாதிரி தப்பு செய்ய மாட்டா... எங்கம்மா வளர்த்த வளர்ப்புப் பற்றி எனக்குத் தெரியும்... ஆனாலும் உன் வாயிலிருந்து எப்படி அந்த வார்த்தை வரலாம்.... என்ன உங்கப்பன் உன்னை மாத்தி வைச்சிருக்கானா?" என்று பளார் பளார் என்று அறைந்தான்.

அதிசயமாக யாழினிக்கு அவன் அடியால் அழுகை வரவில்லை. அவன் தன் மேல் வைத்திருந்த பாசத்தால், நம்பிக்கையால் ஆனந்தக் கண்ணீர் பொங்கியது.

தன் அண்ணன் தன்னை வெறுக்கவில்லை. இன்னும் தான் இது மாதிரிச் செய்ய மாட்டேன் என்று நம்புகிறான் என்றால் அவனுக்குத் தன் மேல் எவ்வளவு அன்பு என்று நினைக்க நினைக்க... தேனாய் இனிக்க... அவன் அடிகளை எல்லாம் மெல்லிய புன்னகையுடன் ரசிக்கவே துவங்கி விட்டாள் அவள்.

செண்பகமோ ஒரு படி மேல் சென்று, "இவன் இவ்வளவு பாசத்தையும் நம்பிக்கையையும் தங்கச்சி மேல் வைச்சிக்கிட்டு எப்படி பிரிஞ்சிருந்தான்... இந்தப் பயலுக்குத் தங்கச்சி மேல் எவ்வளவு பிரியம்..." என்று அவனை இத்தனை வருடங்கள் கழித்து முழுதாய் அறிந்து

கொண்டதால் உண்டான ஆச்சரியத்தில் வாயடைத்துப் போய் விட்டாள்.

பாசம் என்பது அணைப்பிலும் முத்தத்திலும் மட்டுமல்ல... அடியிலும் உதையிலும் கூட இருக்கிறது. செல்லமான தட்டு, மண்டையில் ஒரு குட்டு - இவை போதும்... உறவுகள் வளர. அதுதான் உண்மையான பாசம். அதை இங்கே கண்கூடாக நடத்திக் கொண்டிருந் தனர், அந்த அண்ணனும் தங்கையும்...

யாழினிக்கோ தன் அண்ணனைப் பார்க்கப் பார்க்கத் தெவிட்டாமல் அவன் தந்த அடிகளை வாங்கிக் கொண்டிருக்க... செண்பகமோ அவனைத் தடுக்கத் தோன்றாமல் வாயடைத்துப் போய் நிற்க...

யாழினிக்கு உதடு பிய்ந்து ரத்தமே வந்துவிட்டது. அதுவரை அங்கே யாழினி, செண்பகத்தைத் தாண்டி அந்தப் பாசப் போராட்டத்தை இன்னொருவரும் பார்த்துக் கொண்டிருந்தார்.

அதுதான் பாரதி. அவள் அவன் உள்ளே நுழையும் போதே வந்துவிட்டிருந்தாள். ஆனால் அடுத்தடுத்து அவன் பேசியது அவள் மனதைக் குளிர்விக்க, அப்படியே சிலையாய் நின்று விட்டிருந்தாள்.

அவள் அவன் இந்த மாதிரிக் கண்டுபிடிப்பான் என்று துளியும் எதிர்பார்க்கவில்லை. முன்னிருந்த ஆத்திரக்கார அர்ஜுன் இல்லை இவன்... இவனிடம் ஏதோ மாற்றம் தெரிகிறது என்று யோசித்துக் கொண்டிருந்தவள்... யாழினியின் உதடுகளில் ரத்தம் வருவதைப் பார்த்ததும் ஓடிச் சென்று அவன் கையைத் தடுத்துப் பிடித்து,

“அர்ஜுன்... ப்ளீஸ்! அவ தாங்க மாட்டா. பாரு, ரத்தம் வருது...” என்று கூற, அவன் அவளைக் கண்டு சற்றே அதிர்ந்தாலும்... உடனே சுதாரித்துத் தட்டி விட்டு...

“நீ வாயை மூடு. அவ செஞ்ச வேலைக்கு அவளை நான் உயிரோடவே விடக் கூடாது. எங்கம்மா பேரைக் கெடுக்க வந்தவ. இல்லைன்னா இப்படிப் பொய் சொல்வாளா...?” என்று மறுபடியும் அடிக்கப் போக,

அவனைத் தடுத்த பாரதி, “அர்ஜுன்... இன்னும் ஒரு அடி அடிச்சா அவ மயங்கிடுவா. ஏன் இப்படி இருக்கே... அவதான் பொய் சொன்னானு தெரிஞ்சிடுச்சு இல்லை... அப்புறம் ஏன் அடிக்கிற? அதுதான் அவ தப்பு செய்யலையே...” என்று கத்த,

அர்ஜுன் எரிச்சலுடன், “அவ தப்பு செஞ்சிருந்தா அவளைக் கொன்னு போட்டிருப்பேன். பொய் சொன்னதால்தான் அடியோட விடுறேன்...” என்று கூற, அவளுக்குச் சிரிப்பதா அழுவதா என்றே தெரியவில்லை. என்ன மாதிரியான அன்பு இது என்று அதிசயம்தான் வந்தது.

அவள் யாழினியைப் பார்க்க, அவளோ சற்றே பெருமையுடன் தன் அண்ணனைப் பார்க்க... பாரதிக்கு அவன் என்னதான் அவளைத் துயரப்படுத்தி யிருந்தான் என்றாலும், ஒரு அண்ணனாய் ஜெயித்து விட்டிருந்தான் என்றே எண்ணினாள்.

எனவே, “பாரு, அர்ஜுன்! அவளை அடிக்கிறதை ஒரு நிமிஷம் விட்டுட்டு அவ ஏன் இப்படிச் செஞ்சான்னு கேளேன்...” என்று கூற,

அவன், "வேற எதுக்கு... இவங்க கூட வந்து சேர்ந்து இருக்கணும். திரும்பவும் அந்த ஆள் கிட்ட அவமானப் படணும்... அதுதான் இவங்க ஆசை!" என்று கறுவ,

யாழினி பதறி, "இல்லைண்ணா... உன்னை இங்கே வரவழைக்க, பல வருஷமா முயற்சி செய்தோம்... ஆனால் நீ வரலை... சரி பாரதி அண்..." என்று கூறி யதும்,

பாரதி அவளை ஒரு கோபப் பார்வை பார்க்க, அதற்குள் அண்ணியை நீக்கி, "பாரதி உன்னை எப்படி யாவது மாற்றி உன்னை வரவைச்சிடுவாங்கன்னு நினைச் சோம்... ஆனால் இப்போ அவங்களும் இல்லை. அதான் எனக்கு என்ன பண்றதுன்னே தெரியலை அண்ணா. ஏதோ தைரியத்தில் இப்படிப் பொய் சொல்லச் சொல்லி அத்தை கிட்ட சொன்னேன். என் வற்புறுத்தலுக்காகத் தான் அவங்க பொய் சொன்னாங்க..." என்று கூற,

அப்போதுதான் சுயநினைவுக்கு வந்த செண்பகமும், "ஆமா அண்ணன் மவனே... அந்தப் பிள்ளை பாவம்யா... உன்னை எப்படியாவது வர வைக்கணும்னு அது படாத பாடு இல்லை... கொஞ்சம் பொறுமையா இருய்யா..." என்று கெஞ்ச,

அர்ஜுன் தலையைப் பிடித்துக் கொண்டு, "அய்யோ! என்னை ஏன் எல்லாரும் டார்ச்சர் பண்றீங்க... நான் பாட்டுக்குத் தனியாய் இருந்துட்டுப் போறேன். எனக்கு யாரும் வேண்டாம்... இந்த வீட்டில் இருக்கிற ஒவ்வொரு நிமிஷமும் ஆறு வருஷத்துக்கு முன்னாடி நான் பட்ட அவமானம்தான் என் கண்ணுக்கு வருது... முள் மேல்

நிக்கிற மாதிரி இருக்கு. நான் போறேன்!" என்று கூறிவிட்டுத் தளர்ந்த நடையுடன் செல்ல...

அவனை, "கொஞ்சம் நில்லு... அர்ஜுன்..." என்ற பாரதியின் அதட்டல் தடுத்து நிறுத்தியது.

அவன் அவளை ஒரு பார்வை பார்த்துவிட்டு, மறுபடியும் வாயிலை நோக்கி நடக்க... "நில்லுன்னு சொல்றேன்... சாகக் கிடக்கிற ஒரு உயிருக்குக் கொஞ்சமாவது மரியாதை கொடுக்கணும்னு எண்ணம் இருந்தால் நில்லு..." என்று எச்சரிக்க,

அந்த வார்த்தையில் ஸ்தம்பித்து நின்றான் அவன். உடனே திரும்பி அவளைக் கேள்வியாய்ப் பார்க்க,

அவன் அருகில் வந்த அவள், அவன் கையைப் பிடித்து, "என் கூட வா அர்ஜுன்..." என்று கூறி அவனை மாடிப்படிக்குக் கூட்டிச் சென்றாள். மற்ற நாள் என்றால் அவள் கையைத் தட்டி விட்டிருப்பான். இன்று அது கூடத் தோன்றாமல் ஏதோ மாயம் போல்... அவன் ஒரு வார்த்தை கூட சொல்லாமல் அவளைப் பின்தொடர மாடிப்படியைக் கடந்து மேல் மாடியில் உள்ள அவன் தந்தையாக ஒரு காலத்தில் இருந்த ஹரிஹரனின் அறைக்குப் பாரதி கூட்டிச் செல்ல அவன் அறைக்குச் செல்வதைக் கண்களில் கண்ணீர் குளம் கட்டப் பார்த்துக் கொண்டிருந்தார்கள் யாழினியும் செண்பகமும்...

உள்ளே சென்றவன் மெய்யாலுமே சிலையென நின்று விட்டான். அங்கே படுத்திருந்தது யார் என்றே முதல் சில வினாடிகள் அடையாளம் தெரியவில்லை. உடலெல்லாம் ஏதோ டியூப்கள் செருகப்பட்டிருக்க கண்கள்

மட்டும் விழித்திருக்க, மார்புக் கூடு மட்டும் உயிரோடு இருக்கும் அறிகுறியாக ஏறி இறங்க... கட்டிலில் கிழிந்த நாராய்க் கிடந்தார் ஹரிஹரன்.

பிறகுதான் பாரதி அவனை உணர்ந்து, "என்ன பார்க்கிற அர்ஜுன்! இது உன் அப்பா... சாரி சாரி. ஒரு காலத்தில் அப்பாவா இருந்தாரே ஹரிஹரன்தான்..." என்று அவன் சந்தேகத்தைத் தெளிவாக்க...

அவனுக்குச் சாதாரணமாக சந்தோஷம்தான் தோன்றியிருக்க வேண்டும், மகிழ்ச்சியில் கூத்தாடியிருக்க வேண்டும். ஆனால் அவனுக்கு அதெல்லாம் தோன் றாமல் அதற்கு எதிர்மறையாக அவனுள் ஏதோ உடைந்து சிதறுவது போல் இருந்தது. அது அவனின் பகையா? அல்லது கோபமா? அல்லது அவனே அவனுக்குப் போட்டுக் கொண்டிருந்த இரும்புத் திரையா? இதில் ஏதோ ஒன்றுதான் அவனுக்குள் உடைந்தது. தானாடா விட்டாலும் தன் தசை ஆடும் என்பார். இங்கு அவர் தன் தசையே இல்லாவிட்டாலும் அதாவது அவர் தனக்குத் தந்தையே இல்லாவிட்டாலும் அவன் ஆடித்தான் போனான்... அந்த அளவிற்கு நொடிந்திருந்தார் அவர்...

ஒரு காலத்தில் அவர் படுத்து உறங்கியே அவன் பார்த்தது கிடையாது. எப்போதும் வேலை வேலை என்று நிற்காது ஓடிய கால்கள் இன்று நலிந்து போய், ஒரு காலத்தில் சாட்டையெனத் தன்னைப் பேசிய நாக்கு இன்று உலர்ந்து போய், ஈரமே இல்லாத நெஞ்சு வற்றிப் போய் ஏதோ கட்டை போல் கிடந்த அவரைப் பார்க்க அவனால் தாங்க முடியாமல் பார்வையைத் திருப்பிக்

கொள்ள... அப்போதுதான் அவனைப் பார்த்த அவரின் கண்கள் சற்றே அதிர்ச்சியைக் காட்டின.

அவர் மனதில் என்ன நினைக்கிறார் என்பதை அவரின் முகத்தின் மூலமே தெரிந்து கொள்ள முடிந்தது. அவனைப் பார்த்ததும் அவர் முகத்தில் குரோதம் இல்லை. ஏக்கம்தான் தெரிந்தது. 'இன்னும் என்னை மன்னிக் கிறாயே, உனக்கு அவ்வளவு பெரிய மனதா!' என்ற கேள்வி இருந்தது.

அதை அர்ஜுனும் பார்த்தான். அவரின் இந்தச் செயல்கள் அவன் கண்களில் கண்ணீரை உற்பத்தி செய்ய... பாரதி, "தண்டுவடத்தில் கேன்சர் அர்ஜுன்... பார்க்காமல் விட்டிருக்கார். நல்லா முத்திப்போய் எல்லா உறுப்புகளுக்கும் பரவிடுச்சு. கைகால் எல்லாம் செயலிழந் திடுச்சு... பேச்சு கூட குழறல்தான்... மூச்சு விடுறதே மெஷினால தான்... மிஞ்சிப்போனா மூணு மாசம்தான் என்று டாக்டர் சொல்லிட்டார்... இந்தக் கடைசிக் காலத்தில் அவர் உன்னைத் தவிர யாரையும் தேடலை அர்ஜுன்...

"டெய்லி அவர் சொல்ற ஒரே வார்த்தை அர்ஜுன்... அர்ஜுன்... அர்ஜுன்... அவர் செஞ்ச தப்பை உணர்ந் துட்டார் அர்ஜுன்... அவர் கெட்டவரா நல்லவரானு நாம் இந்த நிலையில் பார்க்கக் கூடாது அர்ஜுன். என் கண் ணுக்கு அவர் இப்போ நோயாளியாகத்தான் தெரியறார்... உனக்கே தெரியும் அர்ஜுன்... உன்னை விட நான் இவர் மேல் பகையோட இருந்தேன்... அவ்ளோ வெறுப்பு இருந்தது இவர் மேல் எனக்கு... ஆனால் இவரைப் பத்தி

அன்னைக்கு ஹாஸ்பிடலில் சொன்னதும் எனக்கே கண்ணீர் வந்திருச்சு அர்ஜுன்...

"நானும் தினமும் வந்து பார்க்கிறேன்... அர்ஜுன் என்ற ஒரு வார்த்தையைத் தவிர வேற எதுவும் அவர் பேசுறதில்லை. இவருக்காகத்தான் யாழினி இவ்ளோ பெரிய பொய் சொன்னா. அது தப்பா அர்ஜுன்...? நீ கூட நினைக்கலாம்... என்னடா நேத்து பெரிய இவ மாதிரி பேசிட்டு இன்னைக்கு நம்ம விஷயத்தில் தலையிடுறாளே என்று. ஆனா நான் இன்னைக்கு உன்னைக் காதலிச்ச பாரதியா பேசலை! சின்ன வயசில் உன் பக்கத்து வீட்டில் இருந்தாளே, அந்த பாரதியா தான் பேசுறேன்... அங்கிளை முடிஞ்சா மன்னிச்சிடு. நான் வரேன்..." என்று கூறிவிட்டுக் கீழே சென்று யாழினியிடமும் செண்பகத்திடமும்,

"நான் வரேன்... எல்லாம் நல்லதே நடக்கும். கவலைப்படாதீங்க..." என்று கூறிவிட்டு, அதற்கு மேல் நிற்காமல் அந்த வீட்டை விட்டு வெளியேறினாள்.

அவள் சென்றதும் மேலே வந்த யாழினியும் செண்பகமும் அங்கே அசையாமல் அவரைப் பார்த்த படியே நின்றிருந்த அர்ஜுனிடம் வந்து நின்றனர்.

யாழினி அர்ஜுனிடம், "நீ போனதுக்கப்புறம் நான் இவர்கிட்ட ஒரு வார்த்தை கூடப் பேசினதில்லை, அண்ணா! நீ நம்ப மாட்டே தான். ஆனா அதுதான் உண்மை... அத்தை கூட தேவைக்குப் பேசுறதோட சரி... தனித்தீவா தான் இந்த வீட்டிற்குள் இருந்தோம். ஆனால் இவருக்கு இந்த நோய் வந்து படுத்த படுக்கையான பிறகு என்னால் முடியலை அண்ணா... இவர்கூடவேதான் இருக்கேன்...

இவர் முகத்தில் ஒரு தடவை கூட நிம்மதியை நான் பார்த்ததே இல்லைண்ணா! கண் எப்போ பார்த்தாலும் அலைபாஞ்சுட்டே இருக்கும். இன்னைக்குத்தான் அவர் கண்ணில் ஒரு நிம்மதியைப் பார்க்கிறேன். என்னதான் என்னைப் பெத்தவரா இருந்தாலும் ஒரு தடவைகூட இவர் என் பேர் சொன்னதில்லை.

"எப்போ பார்த்தாலும் உன் பேர் தான்... அதனால் தான் உன்னை எப்படியாவது வரவழைக்கணும்னு இந்தப் பொய் சொன்னேன். அதுவும் நல்லதுக்குத்தான். நீ என் மேல் வைச்சிருந்த பாசம், நம்பிக்கை எல்லாம் அதனால்தான் புரிஞ்சிக்கிட்டேன். நீ போய் நில்லு அவர் பக்கத்தில்..." என்று நிப்பாட்டி விட்டுத் தன் அத்தையுடன் வெளியே சென்றாள்.

அவன் சென்றான். தன் தந்தையின் அருகில் சென்றான். கால்கள் நடுங்க அவன் அருகே சென்றவனைப் பார்த்து அவர் தன் மூச்சுப் பையை எடுக்க முயற்சிக்க,

"இல்லை. வேண்டாம்..." என்று அவன் தடுக்க... அந்த ஸ்பரிசத்தில் அவர் மேனி சிலிர்த்ததை அவனால் உணர முடிந்தது...

எனவே, "ஏன்... இதுக்காகவா இவ்வளவு பகை... இவ்வளவு போராட்டம். அந்தப் பகையா உங்களுக்கு நிம்மதியைக் கொடுத்தது. இல்லை... அந்தப் பழி உணர்ச்சி உங்களை நோயில் இருந்து காப்பாத்திச்சா...?

"இல்லையே... அப்புறம் ஏன் மனுஷ வாழ்க்கையை இப்படி அர்த்தமில்லாம ஆக்கிக்கிறீங்க... சொல்லுங்க...

என்னதான் வாழும்போது அடங்குறது ஆறடி நிலத்தில் தான். அது புரியாமல் ஏன் இந்தக் கோபம்? நீங்க என்னைக் கருவறுத்தீங்கதான்... என் நம்பிக்கையை சுக்குநூறாக்கினீங்கதான்... ஆனால் ஒரு நாள் கூட உங்களைப் பழிவாங்கணும், உங்களை அழிக்கணும்னு நினைச்சதில்லை... நான் நினைச்சதெல்லாம் உங்க முன்னாடி வாழ்ந்து காட்டணும்னுதான்... நீங்க வாழ்கிற அதே ஊரில் காலூன்றி நிக்கணும்னுதான். அது நிறைவேறிடுச்சு... மத்தப்படி உங்களை எதிர்க்கணும்னு நான் கனவில் கூட நினைச்சதில்லை...

"ஏன் தெரியுமா? என் அம்மா கூட வாழ்ந்தீங்க... மனசில் வெஞ்சினத்தை வைச்சிருந்தாலும் அவங்க சாகிற வரைக்கும் நல்லாதான் பார்த்துக்கிட்டீங்க... அதுக்காகத் தான். இதை நினைச்சு நானே என்னை வெறுத்திருக் கேன்... என்னடா நம்மால் இவருக்கு எதிராய் ஒண்ணுமே செய்ய முடியலையேன்னு மனசளவில் புழுங்கி யிருக் கேன்... ஆனா அதெல்லாம் நன்மைக்குத்தான்னு இப்போ தெரியுது. என் அம்மாதான் தெய்வமா நின்னு என்னைக் காப்பாத்தியிருக்காங்க. இல்லைன்னா உங்களோட இந்த நிலை என்னை உறுத்திக்கிட்டே இருந்திருக்கும்.

"இப்போ கூட இந்த மாதிரி எல்லாம் உங்ககிட்ட அமைதியா பேசுவேன்னு நான் எதிர்பார்த்ததே இல்லை. ஆனா உங்க மன ஆறுதலுக்காக உங்க முன்னாடி வந்து பேசிக்கிட்டு இருக்கேன். ஆச்சர்யமா இருக்கு... அடுத் தடுத்து என்ன நடக்கும்னு தெரியாத ஒரு சுவாரஸ்யமான மர்ம நாவல்தான் வாழ்க்கைன்னு யாரோ சொன்னதுதான் இப்போ ஞாபகம் வருது..." என்று கூறிவிட்டு, வழிந்த

கண்ணீரை அவன் துடைத்துக் கொள்ள... அவரின் கண்களில் இருந்தும் கண்ணீர் வந்தது.

அதையே அவன் பார்த்துக் கொண்டிருக்க, அவர் தன் மூச்சுப்பையைக் கழற்றி, "நா... நான் செ...செஞ்ச... பா... பாவம் என்ன... முடி... முடிஞ்சா... மன்... மன்னிச்சுடு... அர்... அர்ஜுன்..." என்று திக்கித் திணற, அதற்குள் அவருக்கு மூச்சுத் திணறல் ஏற்பட... அந்த மூச்சுப்பையை மாற்றிய அர்ஜுன்,

"ஏன் கவலைப் படுறீங்க... உங்க மேல் இந்த நிலையில் கோபத்தைக் காட்டுற அளவுக்கு என் மனசு ஒண்ணும் இறுகிப் போகலை... நீங்க செஞ்ச தப்பை மன்னிக்க முடியாது. அதனால் மறக்க முயற்சி செய்ய றேன்..." என்று மெல்லிய புன்னகையுடன் கூற, அவர் கண்களில் கண நேர நிம்மதி தோன்றினாலும், மறுபடியும் ஒரு அலைப்புறுதல் ஆரம்பிக்க,

அவர் பார்வை நிம்மதியின்மையைப் பிரதிபலிக்க, அவன் அதைப் புரிந்து கொண்டு தன் ஆறு வருடக் கோபத்தையும் பகையையும் தன்னைக் கிட்டத்தட்ட இருபது வருடங்கள்.... நடித்தாலும் பாசம் காட்டி வளர்த்த தன் கடைசி நாட்களை எண்ணிக் கொண்டிருக்கும் ஒரு சாதாரண மனிதனுக்காக அதைச் செய்தான்.

ஆம் அவரை, "அப்பா..." என்று அழைத்தான்... அவன் அழைப்பில் அவர் உருகிப் போனதை உணர்ந்த அவன், "போதுமா அப்பா... கவலைப்படாமல் இருங்க... நான் இருக்கேன்..." என்று கூறிவிட்டு அவர் தலையை வாஞ்சையுடன் கோத,

அவர் கண்களில் சொல்ல முடியாத நிம்மதி உருவாக ஆரம்பித்தது.

ஒருவரை நாம் பழிவாங்க உபயோகிக்கும் மிகப் பெரிய ஆயுதம் மன்னிப்பு. அதைவிட ஆயுதம் இவ் வுலகில் ஒன்றும் இல்லை. அதைத்தான் சூரனை அழிக்க நம் அறுபடைகுமரனாம் முருகன் செய்தான். அவனை, "இன்று போய் நாளை வா!" என்று பணித்தான். அவன் திருந்த வாய்ப்புக் கொடுத்தான்.

ஆனால் அதற்கு மேலும் திருந்தாத சூரனைத் தான் வதம் செய்து சூரசம்ஹாரம் படைத்தான், கந்தன்...

அன்று அந்தப் பார்வதி மைந்தன் செய்ததை இந்த வேதவல்லி மைந்தனும் செய்தான். அவர் திருந்த வாய்ப்புக் கொடுத்தான். அதில் அவரது மனமும் குளிர ஆரம்பித்தது. அந்தக் குளிர்ச்சி அவரின் உருகும் உடலின் வேதனையைச் சற்றே தணித்தது.

**யா**ழினியும் செண்பகமும் எவ்வளவுதான் வற்புறுத்தினாலும், அங்கேயே தங்க மறுத்தான் அர்ஜுன்.

"இல்லை. நான் இங்கே தங்கினால் நல்லா இருக் காது... நான் காலையில் ஒரு தடவை, நைட் ஒரு தடவை பார்த்துட்டுப் போறேன்..." என்று கூற,

யாழினி, "அண்ணா... ஏன் இன்னுமா உன் கோபம் போகலை...? ஏன்னா இப்படி செய்றே..." என்று சிணுங்க,

அத்தைதான் விடாப்பிடியாக நின்றாள். "இதைப் பாரு அண்ணன் மவனே... நீ இங்கேயே தங்குறதா இருந்தா இரு. சும்மா அப்பப்போ விருந்தாளி மாதிரி

வந்துட்டுப் போறதா இருந்தால் நீ வர வேண்டாம்... இவ்ளோ நாள் நாங்க மட்டும்தானே பார்த்துக்கிட்டோம். இப்பவும் நாங்களே கண்ணாய்ப் பார்த்துக்கிடுறோம்..." என்று அதட்ட,

அவன் வழி தெரியாமல், "அத்தை... நான் சொல்றதை..." என்று கூறுமுன்,

செண்பகம், "வாயை மூடு... இந்தப் பிள்ளை மூஞ்சியைப் பாரு... உன் மேல் வைச்ச பாசத்துக்காக மூஞ்சி முகரை எல்லாம் பிஞ்சி போய் நிக்குது... இதைப் பார்த்தும் கூடவா உனக்கு மனசு வரலை... என்ன மனுஷன் நீ..." என்று திட்ட, அப்போதுதான் தான் அவளைச் சற்றுமுன்பு கண்மண் தெரியாமல் அடித்தது ஞாபகம் வந்து... தன் தவறு உணர்ந்து அவள் கையைப் பிடித்தவன், அவள் உதட்டைத் தொட்டுப் பார்த்து,

"சாரிடா யாழி... ஏதோ கோபத்தில் உன்னை... என்னை மன்னிச்சிடுடா... நான் மிருகம் மாதிரி நடந்துக் கிட்டேன்..." என்று அவள் கையைத் தன் தலையால் தொடப் போக,

அவனைத் தடுத்த யாழினி, "அதெல்லாம் வலிக்கலை அண்ணா. நான்தான் சொன்னேனே. உன் பாசத்தை நினைச்சு சந்தோஷமா இருந்திச்சு. தயவு செய்து வீட்டிலயே இருண்ணா... அப்பாவுக்காக மட்டுமில்ல, எனக்காக அண்ணா!" என்று கெஞ்ச,

போதாக்குறைக்கு அத்தை வேறு திட்ட, அவன் ஒரு பார்வை ஹரிஹரனைப் பார்த்தான்... அவர் கண் இமைகள், "ஒத்துக் கொள்" என்பது போல் திறந்து மூடின.

இப்படி அனைவரும் சூழ, அவனும் வேறு வழியின்றிச் சம்மதிக்க... யாழினி சந்தோஷத்தில் தன் அண்ணனைக் கட்டிக்கொள்ள, அவள் உச்சியில் முத்தமிட்டு மகிழ்ந்தான்.

அடுத்த நாள் மினிக்குக் கொண்டாட்டமாக ஆரம்பித்தது. அவள் குடும்பத்தினர் அனைவரும் வந்திருந்தார்கள். அர்ஜுனும் வேறு வருவதாகக் கூறியிருந்தான்.

எப்படியும் திருமண விஷயம் பேசத்தான் இருக்கும் என்று நினைத்தவளுக்கு, ஹரிஹரனிடம் அர்ஜுன் சேர்ந்து விட்டான் என்ற சேதி இன்னும் தேனாகப் பாய்ந்தது.

கேசவ்விடம், "பார்த்தியா... என்னவோ சொன்னே... இப்போ பாரு அத்தனை சொத்துகளும் எனக்குத்தான்..." என்று கொக்கரிக்க, அவனோ உதட்டைப் பிதுக்கினான்.

அதற்குள் அர்ஜுன் வந்துவிட, அவனை ஓடிச் சென்று வரவேற்ற மினி, "அர்ஜுன்... என் ஃபேமிலி எங்கே... ஃபேமிலி எங்கேன்னு ஓயாமல் கேட்டுக்கிட்டு இருப்பியே... இதுதான் என் ஃபேமிலி... என் அப்பா, அம்மா, தாத்தா, பாட்டி, அத்தை, சித்தப்பா, சித்தி... நாங்க எல்லாம் பெரிய கூட்டுக்குடும்பம்..." என்று ஒவ்வொருவராக அறிமுகப்படுத்த... அந்தக் கூட்டத்தில் இருந்த ஒருவரை மட்டும் உன்னிப்பாகக் கவனித்தான் அர்ஜுன்.

பின் அவன் கையை ஓடி வந்து பிடித்த ஜெயதேவ், "என்னை மன்னிச்சிடு. அர்ஜுன்... அன்னைக்கு உன் அப்பா பேச்சை நம்பி அப்படிச் செய்துட்டேன்... உனக்குத்தான் எவ்ளோ நல்ல மனசு... மினி எல்லாம் சொன்னா... கல்யாணத்தை எப்போ வைச்சிக்கலாம்...?" என்று கேட்க,

அவனோ தன் விஷமப் புன்னகையை உதிர்த்தபடி, "கல்யாணமா! யாருக்கும் யாருக்கும்...?" என்று கேட்க,

அங்கே உள்ளவர்கள் அனைவரும் அதிர்ந்தனர்.

மினி, "என்ன அர்ஜுன், விளையாடுற நேரமா இது. சீரியஸா கேட்கிறார், டாடி..." என்று முகம் கன்றக் கூற,

அர்ஜுன், "நானும் சீரியஸாத்தான் சொல்றேன். நான் உன்னைக் கல்யாணம் பண்றேன்னு எப்போ சொன்னேன்...?" என்று கேட்க,

மினி, "நீ சொல்லலைதான். ஆனா என் ஃபேமிலி பார்க்கணும்னு ரொம்ப ஆர்வமா இருந்தியே... கல்யாணத்தைப் பத்திப் பேசத்தானே...?" என்று நப்பாசையுடன் கேட்க,

அவள் ஆசையைத் தன் துச்சமான சிரிப்பினால் தள்ளிவைத்த அர்ஜுன், "உன் ஃபேமிலிக்கும் கல்யாணத்துக்கும் என்ன சம்பந்தம் மினி...? எனக்கு ஒருத்தரை உன் குடும்பத்தில் பார்த்துப் பேச வேண்டி இருந்தது... அதான் உன்னை வைச்சு வரச் சொன்னேன்..." என்று கூற,

ஜெயதேவ், "என்ன சொல்றே அர்ஜுன்... யாரைப் பார்த்துப் பேசணும்...? மினி, எங்களைக் கூப்பிட்டு வைச்சு அசிங்கப்படுத்தத்தான் வரச் சொன்னியா?..." என்று அதட்ட,

மினி, "இருங்க டாடி!" என்றவள், அவனிடம் சென்று, "அர்ஜுன், விளையாடாதே... நீ சொல்றது எல்லாம் பொய்தானே!" என்று ஆற்றாமையில் கேட்க,

அர்ஜுனோ, "இல்லை!" என்று தலையாட்டினான்...

பின் வெகுண்ட மினி, "சரி. அப்படி யாரைப் பார்க்க வரச் சொன்னே... என் குடும்பத்தில் உனக்கு யாரைத் தெரியும்?" என்று கேட்க,

அவன் சிரித்தபடி, "உங்க அத்தை... உங்க அத்தை கிட்டதான் நான் பேசணும்..." என்றவன் மினி அறிமுகப் படுத்திய அவளின் அத்தையிடம் சென்று,

"வணக்கம்மா. என் பேர் அர்ஜுன்... நான்தான் உங்க பெண் பாரதியைக் கல்யாணம் செய்துக்கப் போறவன்... திரு என் மாமனார்... அப்போ நீங்க என் அத்தைதானே..." என்று கூற,

அவன் பேசிய வார்த்தைகளைச் சற்றும் எதிர்பாராது கண்ணிமைக்கக் கூட மறந்து போய் நின்றாள் கஸ்தூரி.

ஆம்... பாரதியின் சித்தி... இப்போது அர்ஜுனின் அத்தை.

## 24

காக்கைச் சிறகினிலே நந்தலாலா - நின்றன்
கரியநிறந் தோன்றுதையே நந்தலாலா
பார்க்கு மரங்களெல்லாம் நந்தலாலா - நின்றன்
பச்சைநிறந் தோன்றுதையே நந்தலாலா
கேட்கு மொலியிலெல்லாம் நந்தலாலா - நின்றன்
கீத மிசைக்குதடா நந்தலாலா
தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா - நின்னைத்
தீண்டுமின்பந் தோன்றுதடா நந்தலாலா

அவன் கூறியதைக் கேட்டதும், சிலைபோல் நின்ற கஸ்தூரியைப் பார்த்து நமுட்டுச் சிரிப்புச் சிரித்த அர்ஜுன், "என்ன அத்தை... உங்களுக்குப் பாரதியை ஞாபகம் இருக்குதானே...?" என்று கேட்க,

அந்த வார்த்தையில் அடிபட்டாற்போல் நிமிர்ந்த அவள், "என்ன தம்பி... அவளும் எனக்குப் பொண்ணு மாதிரிதான். மாதிரி என்ன, ஒரு வகையில் என் மூத்த மகள்..." என்று மென்மையாக ஆனாலும் அழுத்தமாகக் கூற... அவன் பார்வையில் ஒரு மெச்சுதல் இருந்தது.

அவள் கூறிய அந்த ஒரு வரியிலேயே அவளுக்குப் பாரதியின் மேலும் அவள் கணவனின் மீதும் ஒரு பிடிப்பு இருக்கிறது என்பதை நெத்தியடியாகக் கூறிவிட,

அதற்கு மேல் அவனால் அவளிடம் சந்தேகப் பார்வையை வீச முடியவில்லை...

எனவே அர்ஜுன் அந்த முடிவை எடுத்தான்... சுற்றி நிறைந்திருந்த ஜெயதேவோ, அவனைத் தீப் பார்வையால் பொசுக்கிக் கொண்டிருந்த மினியோ, யாரும் அவன் கண்ணிற்குப் படவில்லை. அவர்களை எல்லாம் புழுவைப் போல் மதித்தபடியாக கஸ்தூரியிடம் மட்டுமே தன் பார்வையைப் பதித்துப் பேசிக்கொண்டிருந்தான்.

எதிர்பாராத விதமாக அங்கே நின்ற யாருக்கும் அவனை எதிர்க்கும் தைரியமும் வரவில்லை...

ஏனென்றால் இப்போதுள்ள பொருளாதார நிலையில் அவன் கை உயர்ந்தும் இவர்கள் கை தாழ்ந்தும் அல்லவா இருக்கிறது. இக்காலத்தில் பிணம் பேசாத இடத்தில் கூட பணம் பேசுமே... அதனால் அவன்

செய்வதை எல்லாம் கண்டு குமுறத்தான் முடிந்ததே தவிர, அவனைத் தடுக்க இயலாததால், அர்ஜுன் சற்றே விஸ்தாரமாகக் கஸ்தூரியிடம் பேச ஆரம்பித்தான்...

"எனக்கு உங்ககிட்ட கொஞ்சம் தனியா பேசணும்... ப்ளீஸ்... தோட்டத்துப் பக்கம் போகலாமா?" என்று கேட்க,

அவள் வருகிறேன் என்று கூறும் நிலையிலும் இல்லை. மாட்டேன் என்று கூறும் நிலையிலும் இல்லை... தர்மசங்கடமான நிலையில் தன் அண்ணனைப் பார்க்க,

அவரோ, "என்ன அர்ஜுன்... எங்களைக் கூப்பிட்டு வைச்சுப் பழி வாங்கப் பார்க்கிறியா? இன்னைக்கு உங்கிட்ட வசதி இருக்குன்னு ஓவரா ஆடாதே...!" என்று எச்சரிக்க,

அர்ஜுனோ குறுநகையுடன், "சார்... நான் இன்னும் உங்க கணக்குக்கு வரலை. வரேன்... முதலில் எனக்கு உங்க தங்கைகிட்ட பேசணும். அவங்க உங்களோட அனுமதிக்காகத்தான் கத்திருக்காங்க... அவங்க கிட்ட பேசிட்டு உங்ககிட்ட பேசுறேன்..." என்று கூற,

அவர் கஸ்தூரியிடம், "போ... ஏன் நிக்கிறே... துரை சொல்லிட்டாரு... அவரை எதிர்த்து என்ன பேசுறது?" என்று தன் இயலாமையைக் காட்ட,

மினியோ அத்தையை ஏதோ பேயைப் போல் பார்த்துக் கொண்டிருந்தாள்... அவளைப் பார்வையாலயே அடக்கிய ஜெயதேவ், "இரு என்னதான் நடக்குதுன்னு பார்ப்போம்... நீ அவசரப்பட்டு எதையும் செய்யாதே..." என்று கூற, அவள் காலை உதறிக் கொண்டு தன் அறைக்குச் சென்று தாழிட்டுக் கொண்டாள்.

கேசவ்வுக்கோ நடப்பதை எல்லாம் பார்த்து அதிசயமாகச் சிரிப்புதான் வந்தது... அவன் புன்னகை மாறாமல் இவர்களுக்கு ஆப்பு வைப்பது என்ன... இவர்கள் அவனை எதிர்க்காமல் பம்முவது என்ன? இதையெல்லாம் நினைத்தவன்,

"நீ தப்பிச்சிட்டே அர்ஜுன்... நான் நினைச்ச மாதிரி இல்லை... நீ புத்திசாலி... இன்னையில் இருந்து நான் உன் விசிறியாவே ஆகிட்டேன்..." என்று கூறிக்கொண்டு அவன் அறைக்குச் செல்ல, மற்றவர்களும் அங்கு நடந்ததைக் கண் காது மூக்கு வைத்துக் கதை கட்டிச் சலசலத்தபடி செல்ல, ஜெயதேவ் மட்டும் வரவேற்பறை யிலேயே அமர்ந்து கொண்டு, நடப்பதை எதிர்பார்க்கத் துவங்கினார்.

அங்கே தோட்டத்தில் கஸ்தூரியிடம் பேச ஆரம் பித்தான் அர்ஜுன்.

"பாருங்க அத்தை... நான் சுத்திவளைச்சுப் பேச விரும்பலை. உங்களுக்குத் திரு மாமா கூடச் சேரணும்ற எண்ணம் இருக்கா இல்லையா?" என்று எடுத்தவுடன் விஷயத்திற்கு வர, அவள் அவன் கேள்வியில் சற்றே பதறினாலும் கொஞ்சம் நிமிர்வாகவே, "எனக்கு இருக்கிறது இருக்கட்டும்... முதலில் உங்க திரு மாமாவுக்கு அந்த எண்ணம் இருக்கா?..." என்று கேட்க,

அர்ஜுன் சிரிப்புடன், "பரவாயில்லையே... போலீஸ் காரர் பொண்டாட்டி இல்லை... அதான் வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டுன்னு பேசுறீங்க... பரவாயில்லை...

"ஆனால் அதுக்கு முன்னாடி நீங்க ஏன் அவரைப் பிரிஞ்சீங்க என்பதற்கான உண்மையான காரணம்

எனக்குத் தெரியணுமே... இது உங்க கணவரா யூகம் செய்துக்கிட்ட காரணம் இல்லை. உண்மையான காரணம். பாரதியை ஏன் அன்னைக்கு கிச்சனில் விட்டுட்டு நீங்க மட்டும் மேல இருந்தீங்க என்பதற்கான காரணம்... என்ன பார்க்கிறீங்க... இதெல்லாம் எனக்கு எப்படித் தெரியும்னு பார்க்கறீங்களா? அதெல்லாம் அந்த ஓட்டைவாய் பாரதி எத்தனையோ வாட்டி சொல்லக் கேட்டதுதான்... தன்னால் தான் நீங்க பிரிஞ்சிட்டீங்கன்னு அடிக்கடி புலம்புவா... அந்தப் புலம்பல் தாங்காமல் தான் இங்கே உங்களைப் பிடிச்சுக் கெஞ்சிக்கிட்டு இருக்கேன்... அத்தை, இந்த மருமகனைப் பார்த்தால் பாவமா இல்லையா?... தயவு செய்து சொல்லுங்க அத்தை..." என்று சிறுபிள்ளை போல் கெஞ்ச,

கஸ்தூரிக்குச் சிரிப்புத்தான் வந்தது... "என்னப்பா அவ மேல் இவ்ளோ பாசமா? அவளுக்காக இவ்ளோ பார்த்துப் பார்த்துச் செய்றே... உண்மையிலயே பாரதி கொடுத்து வைச்சவ..." என்று கூற,

அர்ஜுன், "நீங்க வேற அத்தை! அவளைப் பிடிச்சிருக்கு... அவ இல்லாமல் வாழ முடியாதுங்கிற உண்மையே அவள் என்னை விட்டுப் பிரிஞ்சி போனதுக்கப்புறம்தான் தெரிஞ்சதுன்னு சொன்னால் நீங்க நம்புவீங்களா?..." என்று கேட்க,

கஸ்தூரி அதைக் கேட்டு அதிர்ந்தாள். "அர்ஜுன், நீ என்ன... நான், நீ பேசினதில் இருந்து உனக்கு மினி மேல் எந்த அபிப்பராயமும் இல்லைன்னு தெரிஞ்சிக்கிட்டேன். ஆறு வருஷம் முன்னாடி ஏதோ உன்னால் பிரச்சினை என்று என் அண்ணன் சொல்லிக்கிட்டு இருந்தார்...

மத்தப்படி எனக்கு உன்னைப் பத்தி எதுவும் தெரியாது. இப்போ கூட உனக்குப் பாரதியை எப்படித் தெரியும்னே முழுசா எனக்குத் தெரியாது... அதனால் எது சொல்றதா இருந்தாலும் புரியும்படியா சொல்லுப்பா..." என்று கூற,

அர்ஜுன் ஒரு நீண்ட பெருமூச்சுடன், "அத்தை! எங்க ரெண்டு பேர் விஷயத்தைப் பத்தி இப்போ பேசுறது தேவையில்லாதது. எல்லாம் காலப் போக்கில் உங்களுக்கே தெரியும். இப்போதைக்கு ஒரே வார்த்தையில் சொல்லணும்னா எங்க ரெண்டு பேருக்குள் ஒரு சிறு ஊடல்... அதைக் கண்டிப்பா நாங்க சரி பண்ணிடுவோம்... அந்த நம்பிக்கை எனக்கு இருக்கு... அவ மனசில் என் மேல் அவ்ளோ காதல் இருக்குன்னு எனக்குத் தெரியும்... அதைக் கூட எனக்கு அவளோட பிரிவுதான் உணர்த்தியது... அதே மாதிரி நீங்களும் கிட்டத்தட்ட 15 வருஷமா மாமாவை விட்டுப் பிரிஞ்சிருக்கீங்க... அது உங்க மனசில் எந்த மாதிரியான மாற்றத்தை உண்டு பண்ணிருக்குன்னு எனக்குத் தெரிஞ்சாகணும்... அவரை இன்னும் விரும்புறீங்களா இல்லை வெறுக்கிறீங்களா?" என்று கேட்க,

கஸ்தூரி விரக்திச் சிரிப்புடன், "இதைச் சொல்ல எனக்கே கூச்சமாத்தான் இருக்கு அர்ஜுன்... ஆனால் நீ வெளிப்படையாக் கேட்கிறதால் நானும் வெளிப்படையா சொல்றேன்... அவர் மேல் எனக்குள்ள விருப்பம் இம்மியளவும் குறையாமல் அப்படியேதான் இருக்கு. இதை யாரும் நம்பமாட்டாங்க. ஆனாலும் இதுதான் உண்மை. இவ்வளவு நாள் என் உயிரைக் கையில் பிடிச்சிக்கிட்டு இருக்கேன்னா அதுக்குக் காரணம் அவர் மேல் நான் வைச்சிருந்த அன்புதான். அதே மாதிரி

வாழ்ந்த சொற்ப காலத்திலயும் அவர் என் மேல் அன்பாகத் தான் இருந்தார். அந்த ஒரு நாளை விட்டுட்டா...

"ஆனால் அன்னைக்கு நடந்தது இப்போ நினைச்சுப் பார்த்தாலும் என் நெஞ்சில் சூடு போட்ட மாதிரி இருக்கு அர்ஜுன்... என்னால் அதை மறக்கமுடியலை... அவர் காட்டின அன்பை அந்த நிகழ்ச்சி அடியோடு மாத்தி வைச்சிடுச்சு... ஒரு வார்த்தை கூட என் பக்கம் நியாயத்தைக் கேட்காமல் எப்போ என்னை வீட்டை விட்டு வெளியேறச் சொன்னாரோ அப்பவே நான் செத்துட்டேன். நான் உயிரை இன்னும் வைச்சிக்கிட்டு இருக்கேன்னா அதுக்குக் காரணம் என் மகள்தான்... அவ மட்டும் என் வயிற்றில் இல்லைன்னா நான் எப்பவோ செத்திருப் பேன்..." என்று கூற,

அர்ஜுன் அதிர்ந்தான்... "என்ன சொல்றீங்க... உங்களுக்கு மகள் இருக்காளா!" என்று கேட்க,

கஸ்தூரி சிரித்து, "ஆமா ஏன் ஆச்சர்யமா இருக்கா? அதான் பாரதியை என் மூத்த மகள் என்று சொன்னேன்... உங்க மாமா என்னை வீட்டை விட்டு வெளியேற்றும் போது நான் இரண்டு மாதச் சிசுவை என் வயிற்றில் சுமந்துக்கிட்டு இருந்தேன்..." என்று கூறும்போதே, அவள் பலம் எல்லாம் இழந்து போய்க் கண்களில் இருந்து முத்துக்கள் சிதற ஆரம்பிக்க,

அர்ஜுன் அவள் கையை ஆறுதலாகப் பற்றி, "தயவு செய்து அழாதீங்கம்மா... என்ன நடந்ததுன்னு மட்டும் சொல்லுங்க... மத்ததை நான் பார்த்துக்கிறேன்..." என்று திடமான வார்த்தைகளைக் கூறிச் சமாதானப்படுத்தத்

துவங்க, அவளும் சற்றே ஆசுவாசப்பட்டு அன்று நடந்ததையும் அதற்குப் பின் நடந்ததையும் கூறத் துவங்கினாள்.

"அன்னைக்குக் காலையில் அவர் எங்கிட்ட சண்டை போட்டுக்கிட்டு வெளியே கிளம்பிப் போனார். என் மனசே சரியில்லை... அப்புறம் கொஞ்சம் கொஞ்சமா சமாதானப் படுத்திக்கிட்டு வீட்டு வேலையைப் பார்க்க ஆரம்பித்தேன்... எனக்குப் பாரதி மேலயும் ராம் மேலயும் வெறுப்பு எல்லாம் இல்லை அர்ஜுன்... கோபம்தான் இருந்தது... அவங்க என்னை எல்லா விதத்திலயும் தவிர்த்ததால் வந்த கோபம்... ஆனால் அந்தக் கட்டத்தில் என் முதிர்ச்சியின்மை தான் இதற்குக் காரணம் அர்ஜுன்... நானும் சின்னப் பொண்ணுதானே! அப்போ எனக்கு மட்டும் குழந்தை வளர்ப்பைப் பத்தி என்ன தெரியும்? தெரிஞ்ச அவரும் என்னைச் சமாதானம்தான் செய்தாரே ஒழிய, எனக்கு அதைப் பத்தி எதுவும் கத்துக்கொடுக்கலை அர்ஜுன்.

"இப்போ ஒரு பெண்ணைப் பெத்து வளர்த்ததற்கு அப்புறம்தான் அந்த ரெண்டு தளிர்களோட பயம், பாதுகாப்பின்மை எல்லாம் புரிஞ்சது... அதனால் எனக்கு அவங்க மேல் இப்போ எந்தக் கோபமும் இல்லை... ஆனால் அவர் என்னை... அவர் வார்த்தையால் சுட்டாரே அது இன்னும் என் மனசில் ஆறாத ரணமாக மாறிடுச்சு அர்ஜுன்... உண்மையிலயே என்ன நடந்ததுன்னா அன்னைக்கு நான் வேலை செய்யும்போது தலை சுத்தல் வாந்தி அதிகமா வந்தது... ரொம்பத் தளர்ச்சியா இருந்தது... அப்புறம் நாள் கணக்கைப் பார்த்ததும்தான் நான் அம்மாவாகப் போறேன்னு தெரிஞ்சது அர்ஜுன்... அது எவ்ளோ பெரிய பாக்கியம்... ஒவ்வொரு பெண்ணிற்கும்

அந்த நாள் எவ்ளோ பொக்கிஷம்... ஆனால் அந்த நாளே எனக்குக் கரிநாளாய் அமையும்னு நினைச்சுக்கூடப் பார்க்கலை அர்ஜுன்..." என்று கூறிவிட்டுச் சிறிது நேர உணர்ச்சிகளின் போராட்டத்தால் மௌனம் காக்க, அர்ஜுன் குறுக்கிடாமல் பார்வையை அவள் மேலயே வைத்தபடி இருந்தான்...

பின் சுதாரித்த கஸ்தூரி... "சந்தோஷத்தில் எனக்குத் தலை கால் புரியலை... அந்த மாதிரி சமயத்தில் பெண்கள் ரொம்ப உணர்ச்சிவசப்படுவாங்க அர்ஜுன்... அதேதான் எனக்கும் நடந்தது. தலைசுத்தல் ரொம்ப அதிகமாக இருக்க... நான் தூங்கிட்டேன். எவ்ளோ நேரம் தூங்கி னேன்னு கூடத் தெரியலை. அப்புறம்தான் கீழே ஏதோ சத்தம் கேட்டது. போய்ப் பார்த்தா... பாரதி ஸ்கூலில் இருந்து வந்ததும் கிச்சனுக்குப் போய் ஸ்டூல் போட்டு ஏறி நின்னு ஸ்டவ் பக்கத்தில் ப்ரட் டோஸ்ட் செய்யறேன்னு எல்லாப் பாத்திரத்தையும் கீழே தள்ளி விட்டுட்டா. எனக்கு அவ பாத்திரங்களைத் தள்ளிவிட்டது கூடக் கோபம் வரலை அர்ஜுன். ஆனால் பசிக்குது சித்தி, ஏதாவது செய்து தாங்க... என்றால் நான் செய்ய மாட்டேனா அர்ஜுன்...? அதுக்குத்தானே காத்துக் கிடந்தேன். ஆனா அவளே கிச்சனுக்குப் போய் இதெல்லாம் செய்து.. அப்போ அவளுக்குப் பத்து வயசு கிட்டதான்.

"அந்த வயசில அவளே பேன் (Pan) எடுத்து ஸ்டவ்வில் வைச்சு ஏதோ செய்துகிட்டு இருந்ததும் எனக்கு ஆத்திரம் வந்தது அர்ஜுன். அதான்..." என்று கூறி அந்த நினைவுகளில் ஆழ்ந்தாள்.

கிச்சனில் பாரதி ஸ்டூலில் ஏறி நின்றுகொண்டு ஸ்டவ்வைப் பற்ற வைக்கப் போக, அதுவரை அவளைப் பார்த்துக் கொண்டிருந்த கஸ்தூரி, "பாரதி..." என்று கத்த, அவள் தீப்பெட்டியைப் பதறிக் கீழே போட்டு விட்டாள். ஆனால் ஸ்டவ்வை அணைக்கவில்லை. அதைக் கஸ்தூரியும் கவனிக்கவில்லை.

அவளிடம் வந்தவள், "ஏன்டி... ஏன்டி... இப்படி என்னைச் சித்திரவதை செய்றே... பசிக்குதுன்னா வாயைத் திறந்து கேட்க மாட்டியா? அந்த அளவுக்காடி நான் வேண்டாதவளா போயிட்டேன். ஏன்டி... நான் உனக்கு என்னதான்டி செய்யணும்...? ஏன்டி என்னை ஒதுக்கி வைக்கிறே...?" என்று கேட்க,

பாரதியோ மிரள மிரள விழிக்க... கஸ்தூரிக்கு ஆத்திரம் கண்ணை மறைத்தது. "பேசுடி... வாயைத் திறந்து பேசு. இப்பவாவது பேசு..." என்று அதட்ட,

அவளோ பேசாமல் நிற்க, கஸ்தூரி, "பேசமாட்டே இல்லை... பேசமாட்டே இல்லை... அவ்ளோ திமிரா உனக்கு.. அப்படி என்னடி நான் உனக்குச் செய்தேன்...?" என்று கத்தி அவளைக் கண்மண் தெரியாமல் அடிக்க ஆரம்பித்தாள். அவளின் நிலையும் பாரதியின் செயலும் அவளை ரொம்பவே உணர்வுபூர்வமாகத் தாக்கியிருந்தது.

எல்லாக் குழந்தைகளையும் தாய் ஏதாவது ஒரு கட்டத்தில் இப்படி அடித்திருப்பாள்தான். அதே பாசத்தில் தான் கஸ்தூரியும் செய்தாள். ஆனால் அதைப் பாரதிக்குச் செய்ததுதான் பெரிய தப்பாகிவிட்டது.

ஏனென்றால் பாரதி அவள் பெண் இல்லையே... அதுதான் அவள் செய்த தவறு.

அடித்து அடித்து ஓய... அதற்குள் அவள் செயலின் மீது அவளுக்கே வெட்கம் வந்தது. சே! பிள்ளையைப் போய் இப்படி அடிச்சிட்டேனே... என்று நினைத்து அவளைத் தூக்கப் போக, அப்போது பார்த்து வாந்தி வர ஆரம்பித்தது.

எங்கே அங்கேயே எடுத்து விடுவோமோ என்று பயந்து அவளை அங்கேயே விட்டு விட்டு சிங்கில் போய் வாந்தி எடுத்தாள். அது முடிந்ததும் கூடவே தலைச் சுற்றலும் வர... அவளால் எதிலேயும் கவனம் செலுத்த முடியவில்லை. அப்படிச் செலுத்தி இருந்தால், அவள் பாரதி மயங்கி விழுந்ததைப் பார்த்திருப்பாள்.

ஆனால் அவளோ தலைச்சுற்றலுக்கான மாத் திரையை மாடியறையில் எடுக்கப் போனாள். அதே சமயம் மாத்திரையை எடுப்பதற்குள் தலைச்சுற்றல் அதிகமாகி ரத்தழுத்தமும் சேர மயங்கி விட்டாள்.

அந்த அறையின் கதவு குமிழ் போன்ற அமைப் புடையது என்பதால், குமிழ் அழுத்தி வைக்கப்பட்டிருக்க... காற்றில் கதவும் அடைத்துக் கொள்ள, தாழிடப்பட்டு விட்டது.

இப்படித்தான் அவள் அறைக்குள் அடைபட்டது.

“திரு வருவதற்குச் சில வினாடிகள் முன்புதான் மயக்கம் தெளிந்து எழுந்தாள். அதே சமயம் பார்த்துத் திருவும் கதவைத் திறக்க, அனைத்தும் நடந்தேறி விட்டது...”

என்று அவள் கூறி முடிக்க, அர்ஜுன் எதுவும் பேச முடியாத நிலைக்குச் சென்று விட்டிருந்தான்.

அவனை உணர்ந்த கஸ்தூரி, "என்ன தம்பி, பேச முடியலையா? இதுதான் நடந்தது. கெட்ட காலம் வந்தா தன் நிழல் கூடப் பேயா மாறுமாம். அந்த மாதிரிதான் அன்னைக்கு நடந்தது. ஆனா என்கூட ஆறு மாசம் குடும்பம் நடத்தினவர் என் மேல் காதலை வைத்த அளவு கொஞ்சமாவது நம்பிக்கை வைத்திருக்கலாம், அர்ஜுன்... நான் போய் அந்தக் குழந்தையைக் கொல்ல நினைப்பேனா...?

"எந்தப் பொண்ணாவது அப்படி நினைப்பாளா? ஒரு போலீஸா இருந்துகிட்டு இப்படி ஒருதலைபட்சமாவே பார்த்துட்டாரே அர்ஜுன்... அவர் பேசிய வார்த்தைகளை இப்போ நினைச்சாலும் முடியலை, அர்ஜுன். அப்போ நான் கர்ப்பமா இருக்கேன்னு சொல்லி அவரோட அனுதாபத்தைச் சந்திக்க நான் தயாரா இல்லை, அர்ஜுன்...

"சரி... என்னை வெறுத்தால் வெறுத்துக்கோங்கன்னு வந்துட்டேன். பதினைஞ்சு வருஷமாச்சு. இன்னும் நான் இருக்கேனா செத்தேனானு கூட அவருக்குத் தெரியாது..." என்று கூற,

அர்ஜுன், "ஜெயதேவ் உங்களுக்கு அண்ணன் என்றால், அவரை மாமாவுக்குத் தெரிஞ்சிருக்குமே... டெல்லியில் இருக்கும்போது அவர் கண்டிப்பா பார்த்திருப்பாரே... அவர் வேற எம்.பி.யா இருந்திருக்கார்...?" என்று தன் சந்தேகத்தைக் கேட்க,

கஸ்தூரியும், "இல்லை அர்ஜுன்.. நான் அவர்கூட சண்டை போட்டுக்கிட்டு என் அப்பா வீட்டுக்குத்தான்

வந்தேன் தமிழ்நாட்டில்... வீட்டுக்கு நான் ஒரே பொண்ணு. அதனால் அப்பா எப்படியாவது சேர்த்து வைச்சிடுறேனு கெஞ்சினார். ஆனால் நான்தான் விடாப்பிடியா அவர்கிட்ட என் சார்பா யாரும் போகக் கூடாதுன்னு பிடிவாதமா தடுத்தேன். பொண்ணு பிறந்தாள்.

"அவ அப்படியே அவங்க அப்பா ஜாடைதான், தெரியுமா? கொஞ்ச நாள் அவளை வளர்த்துக்கிட்டு காலம் தள்ளிக்கிட்டுதான் இருந்தேன். ஜெயதேவ் அண்ணன் என் பெரியப்பா மகன். ஒரு காலத்தில் ரொம்ப நெருக்கம். அப்புறம் பெரியப்பா பர்மாவுக்குப் போயிட்டார். பேச்சுவார்த்தையே இல்லை. அப்புறமாதான் கொஞ்ச நாள் கழிச்சு பெரியப்பா, அவர் மகன் அவர் குடும்ப மெல்லாம் அப்பாவைப் பார்க்க வந்தாங்க. அப்போ ரொம்ப நொடிஞ்சி போய் இருந்தாங்க.

"அப்பாதான் பண உதவி செஞ்சு தன் செல்வாக்கை வைத்து ஜெயதேவ் அண்ணாவைக் கட்சியில் சேர்த்து விட்டாங்க... அப்புறம் அப்பாவும் பெரியப்பாவும் அடுத் தடுத்துத் தவறிப் போக, ஜெயதேவ் அண்ணன்தான் சித்தப்பா செய்த உதவிக்காக எங்க கூடவே இருனு சொன் னாங்க...

"அன்னையில் இருந்து எனக்கும் ஒரு பாதுகாப்பு. என் மகளுக்கும் ஒரு பாதுகாப்பு என்றுதான் நான் இவங்க கூட இருக்கேன்... மத்தப்படி என் பேரில் பேங்கில் இருக்கிற பணத்துக்கான வட்டியையும் அண்ணன் கிட்டயே தர்றேன்... ரொம்ப ஒட்டி உறவாடுறதில்லை... ரொம்பவும் தள்ளி நிக்கிறதில்லை.. மினியெல்லாம் எங்கிட்ட ஐந்து நிமிஷம் பேசினா அதிசயம்..." என்று கூற,

அப்போதே அவர் பணத்துக்காகத் தான் ஜெயதேவ் இவரைத் தன்னோடவே தங்க வைத்திருக்கிறார் என்பது அர்ஜுனுக்குப் புரிந்தது.

அவரைப் பற்றித்தான் தெரியுமே! ஆனாலும் அவனுக்குக் கஸ்தூரியைப் பார்த்து அதிசயமாக இருந்தது.

தனி ஒரு மனுஷியாக நின்று அனைத்தையும் தாங்கி, ஒரு ஆண்துணை இல்லாமல், ஒரு பெண்ணை வளர்த்து, உண்மையிலேயே மிகப்பெரும் சாதனைதான்.

இவரை எப்படியாவது திருவிடம் சேர்த்து வைத்துவிட வேண்டும் என்று மனதில் உறுதி பூண்டான்.

பின் கஸ்தூரியிடம், "அத்தை... உங்க பொண்ணு இப்போ...?" என்று கேட்க, ஒரு வித வலியுடன் கூடிய புன்னகை அவர் முகத்தில் ஓடியது.

"அவளுக்கென்ன தம்பி... நல்லாதான் இருக்கா. ஊட்டி கான்வென்ட்டில்தான் படிக்கிறா. எங்க அண்ணன் எல்லாப் பிள்ளைகளையும் அங்கேதான் சேர்ப்பார். அதனால்தான். இப்போ பத்தாம் கிளாஸ். அதான் வரலை. அம்மாவுக்குப் படிப்புன்னா உசிரு... அப்படியே அப்பாவை மாதிரி!" என்று கூறும்போது, அவள் குரலில் இருந்த வலியை அவனால் உணர முடிந்தது.

அர்ஜுன் அதை மாற்றும் பொருட்டு, "அதானே! திரு மாமா பொண்ணா கொக்கா...?" என்று நக்கலடித்துப் பின், "ஆமா, அவ பேர் என்ன அத்தை...?" என்று கேட்க,

அவள் "ஷர்மிளா..." என்று கூற, அவனோ அதிர்ந்து போய், "என்ன... என்ன சொன்னீங்க?" என்று கேட்க,

கஸ்தூரி, "ஆமா அர்ஜுன். அவர் அடிக்கடி சொல்லு வார், பொண்ணு பொறந்தா ஷர்மிளான்னும் பையன் பிறந்தா மேகநர்தன்னும் வைக்கணும்னு... அதான் வைச்சேன்..." என்று எவ்வித உணர்வையும், குரலில் காட்டாமல் இருந்தாலும், அவளின் கண்கள் இதயத்தின் வலியை அப்பட்டமாகக் காட்டின.

அர்ஜுன், "போதும்... போதும் அத்தை.. இனி மேலும் ஏதாவது சொல்லி என் மனசைக் கொன்னுடா தீங்க. உங்க கஷ்டத்தை எல்லாம் கேட்டா என் மனசைப் பிசையுது. இந்த உலகத்திலேயே நான்தான் அதிகமா கஷ்டப்பட்டிருக்கேன்னு நினைச்சேன்... ஆனா ஒரு பொண்ணா நீங்க பட்டதற்கு முன்னாடி அதெல்லாம் தூசு மாதிரித் தெரியுது.

"இப்போ சொல்றேன் அத்தை. உங்களைச் சமா தானப்படுத்தி மாமாகிட்ட கூட்டிட்டுப் போய்ச் சேர்த்து வைக்கலாம்னுதான் இருந்தேன். ஆனா நீங்க பட்ட கஷ்டத்தைக் கேட்டதற்கு அப்புறம் மாமாவேதான் வந்து உங்களை அழைச்சிட்டுப் போகணும்... நான் வரேன் அத்தை..." என்று கூற,

அவனைப் பார்த்த கஸ்தூரி, "ஏன் அர்ஜுன்! இப்படி கஷ்டப்படுறே... எங்களைச் சேர்த்து வைச்சு உனக்கென்ன ஆகப் போகுது?" என்று கம்மிய குரலில் கேட்க,

அர்ஜுன் லேசாகச் சிரித்து, "எனக்குப் பாரதியைப் பிடிக்கும். பாரதிக்கு அவ சித்தப்பாவைப் பிடிக்கும். அவ சித்தப்பாவுக்கு நீங்க வேணும். அதான்... மொத்தத்தில் எனக்கு என் ரதியோட சந்தோஷம் முக்கியம்..." என்று கூறி

விட்டுச் செல்ல... அவன் கூறியதைக் கேட்டுப் பெரு மிதத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள் கஸ்தூரி.

அவன் வெளியே வரும் வேளையில், அவனை ஜெயதேவின் குரல் தடுத்து நிறுத்தியது. "நில்லு..." என்று அவர் அவனை அதட்டும் குரலில் கூற,

அர்ஜுனோ அவரை ஒரு நக்கல் பார்வை பார்த்து விட்டுத் தன் நடையைத் தொடர்ந்தான்.

அவரோ வெகுண்டு, "நில்லுன்னு சொல்றேன் இல்லை, அர்ஜுன்.." என்று கத்த,

அவனோ திரும்பி, "என்ன..." என்பது போல் பார்த் தான்.

அவர் அவன் அருகில் வந்து, "அர்ஜுன்... ரொம்ப ஆடாதே. நீ என் பொண்ணுக்குச் செஞ்ச துரோகத்துக்கு நீ ஒரு நாள் அனுபவிச்சே தீருவே..." என்று கறுவ,

அதற்குள் அங்கு ஓடி வந்த மினி, அவன் சட்டையைப் பிடித்து, "ஏன்டா இப்படிச் செஞ்சே... ஏன் நல்லவன் மாதிரி நடிச்சே... என்னைப் பார்த்தா உனக்கு முட்டாள் மாதிரி தெரியுதா?" என்று அவளும் தன் பங்கிற்குக் கத்தித் தீர்க்க,

அர்ஜுனோ அதை எல்லாம் கண்டுகொள்ளாமல் அவள் கையில் இருந்த தன் சட்டையை லாவகமாக எடுத்து, அதைச் சிறிது தட்டிவிட்டு மென்மையாகச் சிரித்து, "Pot calling kettle black... என்று ஒரு பழமொழி உண்டு தெரியுமா? உங்க ரெண்டு பேருக்கும்... அது நல்லாவே பொருந்தும்.

"நம்பிக்கைத் துரோகம், வஞ்சகம் இதெல்லாம் நான் செஞ்சேன்னு நீங்க குற்றம் சாட்டுற மாதிரி நிலைமை வந்திருக்கே, அதைத்தான் சொன்னேன். ஆமா, நான் செஞ்சது தப்புன்னா, ஆறு வருஷம் முன்னாடி நீங்க எனக்குச் செஞ்சதுக்குப் பேர் என்ன?" என்று கேட்க,

அவர்கள் இருவரும் ஒரு சேர அதிர்ந்தனர்.

ஆனால், அவனே தொடர்ந்தான்... "இப்போ எதுக்கு அதிர்ச்சி ஆகிறீங்க? நான் அதெல்லாம் மறந்திருப்பேன்னு நினைச்சீங்களா என்ன...?" என்று கேட்க,

மினிதான் முதலில் சுதாரித்து, "சரி... என்னைப் பிடிக்கலைன்னா எதுக்கு நான் மன்னிப்புக் கேட்டப்போ ஒத்துக்கிட்டே. எங்கண்ணன் வந்து அழுதப்போ ஏன் என்னைப் பார்க்க வந்தே? வரமுடியாதுன்னு சொல்லி அனுப்பியிருக்க வேண்டியதுதானே!" என்று காட்டுக் கத்தல் கத்த,

அர்ஜுன் அருவருப்புடன் காதைப் பொத்திக் கொண்டு, "சே... ஏன் இப்படி பஜாரி மாதிரி கத்துறே...? உன்னையும் போய் நான் காதலிச்சேன்... இல்லை இல்லை, காதலிச்சதா நினைச்சேன். ஆனா சத்தியமா உன்னைக் காதலிக்கலை. அது ஒரு மாதிரி சுயநலம் தான்... உனக்காக நீ என்னை யூஸ் செய்துகிட்டே. அதைப் போய்க் காதல் என்று சொல்ல முடியாது.

"ஆங்... என்ன கேட்டே... வரமுடியாதுன்னு சொல்லி யிருக்க வேண்டியதுதானேவா! எப்படி செல்லம்... முதலில் உங்க அண்ணன் வரும்போதே எனக்கு அவனை வெட்டிப் போடுற ஆத்திரம் வந்தது. ஆனால், அவன் ஏன்

என்னைத் தேடி வந்தான்னு யோசிக்க ஆரம்பிச்சேன். ஆள் வைச்சு உங்களோட குடும்ப வரலாற்றையே தெரிஞ்சிக்கிட்டேன்.. அப்போதான், உங்கப்பாவுக்குப் பதவி பறி போனது, நீ வசதி இழந்தது, எல்லாம் தெரிஞ்சது...

"அப்போதான் உன்னைப் பத்திய முழு விவரம் தெரிஞ்சது. அதனால்தான் பொறுமையா இருந்தேன். கூடவே உங்க அத்தைதான் பாரதியோட சித்தி என்று தெரிந்தது. அதனால்தான் உன்கூட ஒத்துழைக்கிற மாதிரி நடிச்சேன். என் வாயில் இருந்து உனக்குச் சாதகமா ஏதாவது வார்த்தை வந்ததா... சொல்லு. உன் குடும்பம் எப்படா வரும்னு காத்துக்கிட்டு இருந்தேன். அதுக்கு உன்னை யூஸ் செய்துகிட்டேன். நீ எனக்குச் செஞ்சதுக்கும் இதுக்கும் சரியாப் போச்சு..." என்று கையை விரிக்க...

அவனையே தீப் பார்வை பார்த்துக் கொண்டிருந் தாள் மினி.

உடனே ஜெயதேவ், "எனக்குத் தெரியும்டா. அந்தப் பாரதி, அந்தப் பொண்ணுக்காகத்தானே என் பொண்ணை இப்படி ஏமாத்துறே! இதுக்கு நீ அனுபவிப்பே... வசதி வந்துருச்சுன்னு ஆடாதே!" என்று கத்த,

அர்ஜுன் அவரை முறைத்து, "இதைப் பாருங்க... அவளைப் பத்தி உங்க ரெண்டு பேரில் யாராவது ஒரு வார்த்தை பேசினீங்க... நான் என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது. அவ எனக்குக் கிடைச்ச தேவதை. எல்லோருக்கும் சாமி ஒவ்வொரு உருவில் வந்து உதவி செய்யும். அந்த மாதிரிக் கிடைச்ச சாமி அவ.

"அவ பட்ட கஷ்டத்தில் நூத்தில் ஒரு பங்கு கஷ்டம் கூட நான் உன் பொண்ணுக்குக் கொடுக்கலை, ஞாபகம் வைச்சிக்கோ.. அவளைப் பேரைச் சொல்லக் கூட யாருக்கும்... ஏன், எனக்கே அந்தத் தகுதி கிடையாது தான்..." என்று கூற,

அவன் முகத்தில் தெரிந்த கோபத்தைப் பார்த்து, அவர் அடங்கியே போனார். அவன் சொன்னால் சொன்னதைச் செய்யும் வசதியும் அதிகாரமும் அவனிடம் இருக்கிறது என்பதை அறிந்தே இருந்ததால்... அவருக்கு அதைத் தவிர வேறு வழி தெரியவில்லை.

அவரையும் மினியையும் ஒரு பார்வை பார்த்தவன், ஏதோ நினைவுகளில் மூழ்கிப் பின் நெற்றியைத் தடவிக் கொண்டு, "இதைப் பாரு மினி. இன்னும் நான் உன்னைத் தேவையான அளவுக்குத் தண்டிக்காமல் இருக்கேன்னா அதுக்கும் ஒரு காரணம் இருக்கு.. என்னை ஜெயிலுக்கு அனுப்பின உன் அப்பாவை இன்னும் உயிரோட விட்டு வைச்சிருக்கேன்னா அதுக்கும் ஒரு காரணம் இருக்கு. என்ன பார்க்கிறீங்க... ரெண்டு காரணமும் ஒண்ணுதான். அதுதான் என் பாரதி.

"ஆறு வருஷத்துக்கு முன்னாடி என்னைச் சுத்தி எல்லாமே தப்பா இருந்துச்சு. என் வாழ்க்கை எல்லாமே தலைகீழா ஒரே நாளில் மாறிடுச்சு. அதுக்கு என் அப்பா, நீ, உன் அப்பா எல்லோருமே காரணம்தான். ஆனால் எல்லோரையுமே நான் மன்னிச்சிட்டேன். ஏன் தெரியுமா? என்னைச் சுத்தி எல்லாமே ஒழுங்கா, நல்லதா நடந்திருந்தால், நான் சந்தோஷத்தில் திளைச்சிருந்தால்... என் பாரதி இப்போ எனக்குக் கிடைச்சிருக்க மாட்டா. என்

துரதிர்ஷ்டத்தில் முளைவிட்ட அதிர்ஷ்ட தேவதை அவள். அதுக்காகத்தான் உங்க எல்லாரையும் விடுறேன்.

"பொழைச்சுப் போய்க்கோங்க. இல்லை, அதெல் லாம் என்னால் ஒத்துக்க முடியாது. பழி வாங்கியே தான் தீருவேன்னு நினைச்சாலும்... எனக்குக் கவலை இல்லை. ஏன்னா... நான் பழைய அர்ஜுன் இல்லை. அது உங்க ளுக்கே தெரியும்..." என்று கூர்பார்வையுடன் புன்னகைத் தாலும், அவன் குரலில் மறைந்துள்ள எச்சரிக்கையைக் கண்டதும், அவர்கள் சற்றே அஞ்சினர்.

அவர்கள் கண்களில் மிரட்சியைப் பார்த்த அர்ஜுன், "ஓ.கே. புரிஞ்சிடுச்சுன்னு நினைக்கிறேன். நான் வரேன். அதுவரைக்கும் என் அத்தையை நல்லாப் பார்த்துக் கோங்க. அவங்களை ஏதாவது சித்திரவதை செஞ்சீங் கன்னு தெரிஞ்சது... அப்புறம் இதுவரை நானே பார்க்காத அர்ஜுனை நீங்க பார்ப்பீங்க..." என்று கண்ணில் வெறி யுடன் சொல்லிவிட்டுத் தன் காரைக் கிளப்பிக் கொண்டு சென்றான்.

ஜெயதேவும் மினியும் ஒருவித இயலாமையுடன் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர்.

அந்தப் பார்வையே அவர்கள் அத்தியாயம் அர்ஜுனின் வாழ்க்கைப் புத்தகத்தில் முடிவிற்கு வந்ததை உணர்த்தியது.

**அ**தே நேரம் பெங்களூரில் இருந்த பாரதியின் வீட்டில், இதுவரை தன் செல்லக் குழந்தையாகப் பார்த்துக் கொண்டிருந்த பாரதியைப் பளாரென்று கன்னம் பழுக்க வாழ்வில் முதன்முறையாக அறைந்திருந்தான் அவள் அண்ணன் ராம்...

அதைப் பார்த்த திரு, பதறி, “ராம்ம்ம்... என்ன இது?” என்று கத்த,

அடி வாங்கிய பாரதியோ சற்றும் தளராமல் ஒருவித நிமிர்வுடன் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

**25**

*இதுவரை பாடிய கண்ணனின்*
*காதல் பாடல்கள், இன்றிலிருந்து*
*கண்ணம்மாவிற்கு...*

நின்னைச் சரணடைந்தேன் கண்ணம்மா –
நின்னைச் சரணடைந்தேன்!
பொன்னை உயர்வைப் புகழை விரும்பிடும்
என்னைக் கவலைகள் தின்னத் தகாதென்று
நின்னைச் சரணடைந்தேன் கண்ணம்மா –
நின்னைச் சரணடைந்தேன்!
மிடிமையு மச்சமும் மேவி யென் நெஞ்சில்,
குடிமை புகுந்தன கொன்றவை போக்கென்று
நின்னைச் சரணடைந்தேன் கண்ணம்மா –
நின்னைச் சரணடைந்தேன்!

---

அடி வாங்கி நிமிர்ந்த தன்னையே பார்த்துக் கொண்டிருந்த தங்கையைக் கண்டு மனம் கொதித்தது ராமிற்கு...

எவ்வளவு தைரியம்... நாலு வருடங்கள்... அந்தப் பொய், இந்தப் பொய் என்று அத்தனை பொய்களையும்

கூறித் தன்னை ஏய்த்து விட்டு, அந்த அர்ஜுனிடம் வேலைக்காரி போல் வேலை செய்திருக்கிறாள்.

இவள் என் தங்கைதானா... என்று அவனுக்கு எழுந்த ஆத்திரத்தில்,அவள் இன்னொரு கன்னத்திலும் அறை கொடுக்க... அதை வாங்கிக் கொண்டு கல்போல் நின்றவளை என்ன செய்வதென்றே அவனுக்குத் தெரிய வில்லை...

அவன் அடித்த அடியில்... கன்னத்தில் அவன் கை விரல்கள் தடம் சற்று அழுத்தமாகவே பதிந்துவிட... ஓடி வந்து அவனை மேலும் அடிக்காமல் தடுத்த திரு,

"டேய்! உனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு... உன் போலீஸ் அடியைப் பச்சை மண்ணுகிட்ட போய்... அவ சின்னப் பொண்ணுடா. பாவி... இனி நீ அவளை ஒரு அடி அடிச்சே, நானே உன்னை ஜெயிலில் போட்டு அடி பின்னிடுவேன்..." என்று கத்த,

பாரதி அவரைத் தடுத்து, "சித்தப்பா... அவன் அடிக் கட்டும். அவன் என்னை அடிக்க எல்லா உரிமையும் இருக்கு. ஏன்னா நான் அவனை நாலு வருஷமா ஏமாத்தி யிருக்கேன்..." என்று அழுத்தமாகக் கூற,

அவள் குரலில் கரையாவண்ணம் மனதை இழுத்துப் பிடித்த ராம், "என்ன... இப்படிப் பேசினால் நீ ரொம்ப நல்லவள் ஆனதா நினைப்போ! நீ செஞ்சது தப்புக்கூட இல்லை. துரோகம். அதை முதலில் புரிஞ்சிக்கோ..." என்று கண்ணில் கோபம் தெறிக்கக் கத்தினான்.

திரு, "இதைப் பாரு ராம்... உனக்கு அர்ஜுனைப் பிடிக்காது. அதனால்தான் அவ பொய் சொன்னா.

அதுக்குப் போய்த் துரோகம்... அது இதுன்னு பெரிய வார்த்தை பேசுற!" என்று கம்மிய குரலில் கேட்க,

அவனோ அவரை ஒரு தடவை முறைத்து, "நீங்க பேசாதீங்க, சித்தப்பா. இவளுக்கு இவ்வளவு தைரியம் வந்திருக்குன்னா அதுக்குக் காரணம் நீங்களாதான் இருக்க முடியும். எல்லாரும் ஒண்ணாச் சேர்ந்துட்டு, கடைசியில் என்னைக் கோமாளியாக்கிட்டீங்க இல்லை. என் கோபத்தைக் கிளப்பாம இதோட அமைதியாகிடுங்க..." என்று கூற,

திருவால் அதற்கு மேல் என்ன பேச முடியும்? அவரோ, "ராம்... கொஞ்சம் அமைதியாக் கேளு... அவள் அம்மாவுக்குக் கொடுத்த சத்தியம். அதுக்கப்புறம் உண்டான காதல்... இதெல்லாம்தான் அவளை இப்படிச் செய்ய வைச்சிடுச்சு. நான் இதுக்கு முன்னாடி உன்னை விட கோபப்பட்டேன்தான். ஆனால் அவ மனசைப் பத்தி உனக்குத் தெரியாதா? அவ கேட்டு எதையாவது நாம் இல்லை என்று மறுத்திருப்போமா?" என்று தழுதழுப்பாகக் கேட்க,

இப்போது ராமின் மனமும் சற்றே இளக்கமுற்றது. ஆனாலும் அவள் செய்த காரியத்தின் வீரியம் அந்த இளக்கத்தை எதிர்க்க... அவன், "அதேதான் நானும் சொல்றேன். அவ எங்கிட்ட எல்லாத்தையும் சொல்லி யிருக்கலாம். ஆனால் அப்படியே அவ சொல்லியிருந் தாலும், அவ வேற யாரைக் காதலிச்சிருந்தாலும், நான் ஒத்துக்குவேன்.

"ஆனால் அந்த அர்ஜுன்... சே! அவன் அப்பா சின்ன வயசில் பேசின ஒவ்வொரு வார்த்தையும் என்

மனசில் நிக்குது. அதுவும் இல்லாமல் அவனும் இவ்வளவு நாள் இவளை வேலைக்காரியை விடக் கேவலமா நடத்திட்டு இப்போ கருவேப்பிலை மாதிரி யாரோ ஒரு பொண்ணுக்காகத் தூக்கிப் போட்டுட்டான். இப்போ தெரியுதா, நான் ஏன் அந்தக் குடும்பத்தை வெறுக்கிறேன் என்று...?" என்று கத்த... அவரால் எப்படி எதிர்த்துப் பேச முடியும்!

அவன் கூறிய அனைத்தும் உண்மைதானே...

முதலில் பாரதி சொல்லாமல் கொள்ளாமல் அன்று வீட்டிற்கு வந்ததே அவருக்கு அதிர்ச்சி... வந்தவள் அப்படியே சிலை போல் நின்று கொண்டே இருக்க... அங்கே அவளைப் பார்க்க ஓடி வந்த திரு,

"என்ன குட்டி... இப்படிச் சொல்லாமல் வந்திருக்கே. என்ன, லீவா? ஏன் இப்படி பேயறைஞ்ச மாதிரி இருக்கே?" என்று பதறிப் போய்க் கேட்க,

அவளோ அவரை ஒரு கலங்கிய பார்வை பார்த்து, "இனிமே மொத்தமா லீவுதான், சித்தப்பா... அவனை விட்டுட்டு வந்துட்டேன்..." என்று கூற,

அவருக்குத் தலையும் புரியவில்லை, காலும் புரியவில்லை.

"என்ன சொல்ற குட்டி... என்னாச்சு? ஏன் அவனை விட்டுட்டே வந்தே! அவன் ஏதாவது உன்னை ரொம்ப அவமானப்படுத்திட்டானா?" என்று தன்னால் எழுந்த பாச உணர்வுடன் கேட்க...

அவள், "அவமானப்படுத்தினால் கூடப் பட்டுப்பேன் சித்தப்பா... அவன் என்னை உயிரோட கொன்னுட்டான்.

உயிரில்லாத பிணமா நான் எப்படி அங்கே இருக்க முடியும். அதான் வந்துட்டேன்..." என்று கூற,

அவருக்கு அதிர்ச்சியில் ஒன்றும் பேச முடிய வில்லை. ஆனாலும் வலுக்கட்டாயமாக, "என்ன குட்டி! என்ன என்னமோ சொல்றே... எனக்கு ஒண்ணும் புரியலை... இப்படி எல்லாம் பேசாதடா. என்ன நடந்த துன்னு சொல்லு...." என்று வேண்ட, அவளுக்கு இன்னும் பலகீனமானது. ஆனாலும் அவள் வரும்பொழுதே ஒரு முடிவுடன்தான் வந்திருந்தாள்.

அதன்படி, "சித்தப்பா... நான் எல்லாத்தையும் சொல்றேன். அதுக்கு முன்னாடி அண்ணனை வரச் சொல்லுங்க. அவன் கிட்ட எல்லா உண்மையும் சொல் லிட்டுத்தான் நான் வீட்டுக்குள் வருவேன்!" என்று கூற, திரு இன்னும் அதிர்ந்தார்.

"என்ன விளையாடுறியா! இப்போ நீ இருக்கிற நிலையில் நீ அவன்கிட்ட சொல்லணுமா என்ன? அதான் எல்லாம் முடிஞ்சிருச்சே... ஒண்ணும் பேசாமல் வா. பார்த் துக்கலாம்!" என்று அவள் கையைப் பிடித்து உள்ளே அழைக்க,

மெதுவாக அவர் கையை விடுவித்துக் கொண்ட பாரதி, "இல்லை சித்தப்பா... அவனுக்கு நான் செஞ்சது துரோகம். என் மேல் அவன் வைச்சிருந்த நம்பிக்கைக்கு நான் பாத்திரமா இல்லை. அதனால்தான் சொல்றேன். அவனைக் கூப்பிடுங்க சித்தப்பா. எல்லா விஷயத்தையும் சொல்லி அதுக்கு மேலயும் அவன் என்னை இருக்கச் சொன்னால் நான் இருக்கேன்..." என்று விரக்திக் குரலில் கூற,

அவள் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் அவர் மனதை அறுத்தது.

பிறகு அவர் எவ்வளவோ வற்புறுத் தியும், அவள் கேட்கவில்லை. வேறு வழியில்லாமல் அவர் ராமை அழைத்து வந்தார்.

தங்கை வந்ததை அறிந்து மகிழ்ச்சியுடன் ஓடி வந்த ராம்... அவள் முகத்தைப் பார்த்ததுமே ஏதோ சரியில்லை என்பதை உணர்ந்து கொண்டான்.

"என்னடா! பாரு... என்னாச்சு? முகமே சரியில்லை. என்ன பிரச்சினை?" என்று அவள் அருகில் வந்தபடி கேட்க, அவன் குரலிலேயே அவளுக்கு இருந்த உறுதி லேசாக ஆட்டம் காண, அதைத் தடுத்தவள்,

"இருண்ணா... அங்கே இரு. நான் உன்கிட்ட சில உண்மைகள் சொல்லப் போறேன். அதெல்லாம் கேட்டுட்டு அப்புறமா என்னை வீட்டுக்குக் கூப்பிடு..." என்று கூற,

ராம் திகைத்தான். இதே மற்ற சமயமாக இருந்தால் தங்கையைப் பார்த்து நகைத்திருப்பான். ஆனால் அவள் முகமே ஏதோ ஒரு தீவிர விஷயத்தை அவனுக்கு உணர்த்த... தன் விளையாட்டுத்தனத்தை விட்டுவிட்டுக் கையைக் கட்டி, "சரி சொல்லு... என்ன உண்மைகள்?" என்று கேட்க,

பாரதி தன் மனதைத் திடப்படுத்திக் கொண்டு, அனைத்தையும் ஒன்று விடாமல் கூற ஆரம்பித்தாள்.

நான்கு வருடங்களுக்கு முன் தான் அர்ஜுனைச் சந்தித்ததில் இருந்து இரண்டு நாட்களுக்கு முன்பு தான் சண்டையிட்டு வெளியேறியவரை அனைத்தையும் ஒன்று விடாமல் கூறினாள்.

அனைத்தையும் கேட்டுவிட்டு ராமின் இந்த ஆட்டத்திற்கு நாம் அடங்கித்தான் போக வேண்டும் என்று நினைத்த திரு அமைதி காக்க... பாரதி அப்போதும் எவ்வித உணர்ச்சியும் காட்டவில்லை.

ராம் எரிச்சலுடன் திருவிடம், "பாருங்க. இப்போ கூட கல்லு மாதிரி உட்கார்ந்திருக்காளே தவிர, நான் செஞ்சது தப்பு, மன்னிச்சிடுங்கன்னு ஒரு வார்த்தை கேட்கிறாளா பாரு, சித்தப்பா!" என்று பொரிய... பாரதி அப்போதுதான் தலை நிமிர்ந்து தன் மனதில் உள்ளதைக் கூறினாள்.

"நான் மன்னிப்புக் கேட்கிறேன், அண்ணா. ஒரு தடவை இல்லை. ஆயிரம் தடவை மன்னிப்புக் கேட்கிறேன். ஆனால் நான் உன்கிட்ட சொல்லாமல் மறைச்சதுக்கு... உன்னைப் பொய் சொல்லி ஏமாத்தினதுக்கு வேணா சாரி கேட்கிறேன். நான் காதலிச்சதுக்காக நான் உன்கிட்ட மன்னிப்புக் கேட்க முடியாது. மன்னிப்புக் கேட்க வேண்டிய அவசியமும் இல்லை. ஏன்னா நான் காதலிச்ச ஆள் வேணா தப்பானவரா இருக்கலாம். ஆனால் என் காதல் தப்பு கிடையாது... என் காதலை நான் கொஞ்சம் கர்வமாகவே நினைக்கிறேன். அதனால் அதுக்காக என்னால் மன்னிப்புக் கேட்க முடியாது..." என்று அமர்த்தலாகக் கூற, ராமுவும் திருவும் அவள் பேச்சில் ஆடிப் போயினர்.

ஆனாலும் ராம் விட்டுக் கொடுக்காமல், "ஏன் பேச மாட்டே... சித்தப்பா செல்லம் உன்னை இப்படிப் பேச வைக்கிறது. நீ சொல்ல வேண்டியது சொல்லிட்டே... இனி நான் சொல்றதைக் கேளு. இனி, இந்த வீட்டை விட்டு எங்கேயும் போகக் கூடாது. நான் சொல்ற பேச்சைக்

கேட்டுட்டு இங்கேயேதான் இருக்கணும். என்னை மீறி எங்கேயாவது போனே, உனக்கு ஒரு அண்ணன் இருந்தான் என்பதையே மறந்திடு. கூடிய சீக்கிரம் நானே ஒரு நல்ல மாப்பிள்ளையாப் பார்த்து உனக்குக் கல்யாணத்தைச் செய்து வைக்கிறேன்..." என்று கூற,

அவள் சட்டென்று நிமிர்ந்து அவனை அடிபட்ட பார்வை பார்க்க...

ராம், "என்ன பார்கிறே... நான் ஒண்ணும் உன்னை வற்புறுத்தலை. உனக்கு இந்தக் கல்யாணம் வேண்டாம் என்றால் கண்டிப்பா சொல்லலாம். ஆனால் அதுக்கப்புறம் உனக்கு ஒரு அண்ணனும் சித்தப்பனும் இருந்ததையே மறந்திடு. என்ன சொல்றே...?" என்று தீவிரக் குரலில் கேட்க,

அவளால் அதற்கு மேல் ஒன்றும் பேசத் தோன்றவில்லை. இப்படியான இக்கட்டான சூழ்நிலையில் தன் அண்ணன் தன்னை நிறுத்திவைப்பான் என்று கனவிலும் கூட எதிர்பார்த்ததில்லை அவள். ஆனாலும் அவள் குடும்பத்தை மீறி அவள் என்றுமே சிந்தித்ததில்லை.

எப்படியான சூழ்நிலையிலும் அவள் வீட்டுப் பறவைதான். ஆனாலும் காதல் மனதும் ஒருபுறம் வாட்ட, அதன் உயிரைப் பிடுங்கிக் கணநேரத்தில் அதை நடைபிணமாக்கி விட்டு, "உனக்கு எது சரி என்று படுதோ செய் அண்ணா... உங்க ரெண்டு பேரையும் மீறி நான் என்னைக்கும் யோசிச்சதில்லை. யோசிக்கவும் மாட்டேன். எனக்கென்ன நீங்க கெட்டதா நினைப்பீங்க...?" என்று உயிரே இல்லாத குரலில் கூறிவிட்டு, மெதுவாகத் தன் பொருட்களை எடுத்துக் கொண்டு தன் அறைக்குச் செல்ல,

ராமுவும் ஒரு தீவிரத்துடன் தன் அறைக்குச் சென்று கதவை அறைந்து சாத்த...

திருதான் எந்தப் பக்கம் சாய்வது என்று தெரியாத குழப்பத்தில் தனித்து விடப்பட்டார்.

ஆனால் அவர் மனதில் இருந்ததெல்லாம் பாரதி யின் மகிழ்ச்சிதான்.. அதற்கு ஒரே வழி. அவள் காதல் கைகூட வேண்டும் என்பதுதான்.

அதை மட்டும்தான் அவரால் நினைக்க முடிந்தது. அவர் எண்ணம் ஈடேறுமா...?

இப்படியாக ஒரு முழு நாள் கழிந்தது. ராம் பாரதியிடம் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. பாரதியும் தன் அறையை விட்டு வெளியே வரவில்லை.

திருவும் பாரதியிடம் எவ்வளவோ கெஞ்சினார். "குட்டி! இப்படி அடைஞ்சு கிடந்தால் எல்லாம் சரியாகிடுமா...? உங்கண்ணன் ஒரு லூசு. அவன்தான் ஏதோ சொன் னான் என்றால், நீயும் இப்படி இருக்கியே... வெளியே போ. கொஞ்சம் உன் ஃப்ரெண்ட்ஸைப் பாரு... மனசு லேசாகிடும். கொஞ்சம் சாப்பிடு. இப்படி உன்னை நீயே வருத்திக்கிட்டா எதுவும் ஆகாது..." என்று கூற,

பாரதி, "இல்லை சித்தப்பா... நான் இவ்வளவு தூரம் பாதிக்கப்படுவேன் என்று நானே நினைக்கலை. அங்கே இருந்தப்போ கூட அவ்ளோ தெரியலை. ஆனால் இங்கே வந்ததும் ரொம்ப கஷ்டமா இருக்கு... அதான். அண்ணன் சொன்னதை இனியும் நான் மீறமாட்டேன், சித்தப்பா. எனக்குக் கொஞ்சம் டைம் குடுங்க... ப்ளீஸ்...!" என்று கெஞ்சியவளை,

கண்ணீர் மல்க அவர் பார்த்துக் கொண்டிருந்த அதே நேரம்... வீட்டில் அழைப்பு மணி தன் சங்கீதத்தைக் காற்றில் பரப்பியது.

ஏனோ அது எரிச்சலைத் தர, "சே... யாரு இந்த நேரத்தில்...?" என்றபடியே திரு எழுந்து போய்க் கதவைத் திறக்கவும், அங்கே நின்றிருந்தவனைப் பார்த்து ஆச்சரி யத்திலோ அதிர்ச்சியிலோ... "அர்ஜுன்!" என்று கொஞ்சம் சத்தமாகவே அழைத்துவிட,

அந்த வார்த்தை கீழ்த் தளத்தில் உள்ள தன் படுக்கையறையில் ஏதோ இழந்துவிட்டதைப் போல் அமர்ந்திருந்தவளின் காதுகளைச் சட்டென்று சிலிர்க்க வைக்க, எழுந்தவள்... "என்ன... அர்ஜுனா!" என்றவள், தன் அறையை விட்டு வெளியேறக் கிளம்பினாலும், ஏதோ ஒன்று தடுக்க, அப்படியே அறையின் வாயிலில் சிலை யென நின்றுவிட்டாள்..

"வேண்டாம் பாரதி... சொன்னாக் கேளு. அவன் வேற எதுக்காவது வந்திருப்பான். இல்லை, சண்டை போட வந்திருப்பான். இப்போ நீ போனா உனக்கு இருக்கிற கொஞ்ச நஞ்ச மானமும் இல்லைன்னு ஆகிடும். இங்கேயே இரு..." என்று தனக்குள்ளேயே கூறிக் கொண் டாலும்... அவனைப் பார்க்கத் தவித்த கண்களையும் அவனிடம் செல்லத் துடித்த கால்களையும் கட்டுப்படுத் துவதற்குள் அவளே நொந்து போனாள்.

அதை நினைத்து அவளே, "சே... இந்த அளவுக்கா அவன் மேல் அடிக்ட் ஆகிருக்கே பாரதி... அவனை மறந்திடு... மறந்திடு..." என்று மந்திரம் போல் அதையே கூறிக் கொண்டிருந்த அந்த முட்டாளுக்குத் தெரிய வில்லை.

இது வெறும் உடலின் தேடல் அல்ல. அவள் உயிரின் தேடல் என்று... அந்த உயிர் அவளைக் காண வந்ததா? இல்லை, இவளுக்கு உயிர் கொடுக்க வந்ததா? அதுதான் இப்போதைய கேள்வி.

அதே நேரம் வெளியே நின்றிருந்த அர்ஜுனைக் கண்டு, முதலில் அதிர்ந்த திருவும் இப்போது சற்றே சுதாரித்து, அவன் மேல் உண்டாகியிருந்த கோபத்தில்,

"எதுக்கு வந்த அர்ஜுன்...? என் பொண்ணு உயிரோட இருக்காளா? இல்லை, பொணமாகிட்டாளானு பார்க்க வந்தியா? அவ உயிரோடதான் இருக்கா. ஆனால் உயிர்ப்பே இல்லாமல் இருக்கா. அதுக்குக் காரணம் நீ... அவ உனக்கு என்ன செய்தா அர்ஜுன்...? தூக்கத்தில் கூட உன் நன்மையைப் பத்தியே யோசிச்சிட்டு இருந்தவளைப் பிரிய உன்னால் எப்படி முடிஞ்சது?

"நான் உன்னை வேதவல்லி அக்காவின் மகன் என்றுதான் நினைச்சிருந்தேன், அர்ஜுன்... அதான் அவளை நம்பி உன்கூட அனுப்பினேன். ஆனால் இப்போதுதான் தெரியுது, நீ ஹரிஹரனின் மகனாத்தான் இப்போவும் இருக்கே..." என்று திட்ட, அதைக் கேட்டுக் கொண்டிருந்த அர்ஜுன் மென்மையான புன்னகையுடன்,

"திட்டுங்க மாமா... நீங்க திட்டாமல் வேற யார் திட்டப் போறா! ஆனால் வீட்டுக்கு வந்த மருமகனை இப்படி வெளியே நிற்கவைத்துப் பேசலாமா? உங்களுக்காக இரண்டு நாள் சோறு தண்ணி கூட இல்லாமல் அலைஞ்சு இப்போ வீட்டுக்கு வந்திருக்கேன். கொஞ்சம் கருணை காட்டுங்க மாமா...!" என்று கேலிக் குரலில் கூற,

திருவிற்கு அவன் கூறுவதெல்லாம் உண்மையா பொய்யா என்று கூடத் தெரியவில்லை.

"என்ன மாமாவா? மருமகனா? என்ன சொல்றே அர்ஜுன்... நீ விளையாடுறதுக்கு இது நேரம் இல்லை. இங்கே இருந்து போ. ராம் வந்தால் பெரிய பிரச்சினை ஆகிடும்..." என்று கூற,

அர்ஜுன், "இதைப் பாருங்க. அவன் என் மச்சான். அவனைச் சமாளிக்க எனக்குத் தெரியும். ஒரு முக்கியமான விஷயம் உங்ககிட்ட பேசணும்... அது உங்களை நேரில் பார்த்துச் சொல்லணும்னுதான் இவ்வளவு கஷ்டப்பட்டு வந்திருக்கேன்.

"உங்களுக்கு வேண்டாம்னாலும் சொல்லியே தீருவேன்... அது என் கடமை!" என்று இப்போது ஒருவித தீவிரத்துடன் கூற,

திருவிற்குத் தலை சுற்றியது. "என்ன அர்ஜுன்... என்னவோ சொல்றே... சரி, உள்ளே வா.. பேசலாம்," என்று கூறி அவனை அழைக்க,

அவனும் அந்த வீட்டிற்குள் நுழைய, அதற்கு மேல் தாங்காமல்... தன் அறையில் இருந்து வெளியே வந்த பாரதி, திருவிடம்,

"சித்தப்பா.. உனக்குக் கிறுக்குப் பிடிச்சுப் போச்சா...? எதுக்குக் கண்டவங்களையும் உள்ளே வரச் சொல்றே?" என்று கத்த, அவள் கத்துவதை ஒரு வித சுவாரஸ்யத் துடன் அர்ஜுன் பார்த்துக் கொண்டிருந்தானே தவிர, ஒன்றும் பேசவில்லை. ஆனால் அந்தப் பார்வை அவளை ஏதோ செய்ய...

“என்ன பார்வை... இது என் வீடு. இங்கே உனக்கு என்ன வேலை? வெளியே போ!” என்று திட்ட,

அவனோ அதைக் காதிலேயே வாங்கிக் கொள்ளாமல், சாவகாசமாகச் சோபாவில் அமர்ந்து அவளிடம், “சரி சரி.. கத்தினது எல்லாம் போதும். போ... போய் மாமனுக்கு டீ எடுத்து வா...” என்று அமர்த்தலாகக் கூற,

திருவிற்கே அவன் பாவனையில் சிரிப்பு வர, அதைக் கஷ்டப்பட்டு அடக்கி, “அர்ஜுன்... இரு. நான் போய் எடுத்து வரேன்...” என்று உள்ளே செல்ல,

அர்ஜுன், “நில்லுங்க... மாமா... அவளே போடுவா. அதெல்லாம் உங்க பொண்ணுக்குப் பழக்கிக் கொடுத் துட்டேன். ஒரு டீ கூடப் போடத் தெரியாத அடங்காப் பிடாரியா வளர்த்து வைச்சிருக்கீங்க, உங்க பொண்ணை. என்ன பண்றது, எல்லாம் நானே கத்துக் கொடுக்க வேண்டியதா இருக்கு...” என்று அந்த எல்லாமில் சற்றே அழுத்தம் கொடுத்துக் கூற,

பாரதிக்கு எரிச்சல் மூண்டது. “ஏய்... என்ன திமிரா! நீ பாட்டுக்கு என் சித்தப்பாவை மாமாங்கிறே... ஜம்பமா வேலை வாங்குறே... என்ன கிண்டலா! உனக்கு நான் என்ன கிள்ளுக்கீரையா போயிட்டேனா? முதலில் இங்கே இருந்து கிளம்பு!” என்று அவனை விரட்டுவதிலேயே குறியாய் இருக்க,

அர்ஜுன் திருவை ஒரு பார்வை பார்க்க... அவர் தான் இடையில் புகுந்து, “பாரதி... ஏதோ முக்கியமான விஷயமாம். என்னதான் சொல்றாருன்னு கேட்போமே...

தயவு செய்து கொஞ்சம் பொறுமையா இரு குட்டி..." என்று கெஞ்ச, அவளும் அதற்கு மேல் பேசாமல் அமைதியாக....

அர்ஜுனும் சும்மா இல்லாமல், "மாமா... அந்த டீ...!" என்று நக்கலாகக் கேட்க,

திருவும் சிரிப்புடன் திரும்பிப் பாரதியைப் பார்க்க, "எடுத்து வரேன். எல்லாம் என் தலையெழுத்து. அவன் வீட்டில்தான் என்னை அதிகாரம் செய்தான்னு பார்த்தா... என் வீட்டில் வந்து என்னையே அதிகாரம் பண்ணுறான். சே... இதுக்கு இந்த திருவும் சப்போர்ட். எனக்கு வேணும்... இதுவும் வேணும், இன்னமும் வேணும்..." என்று முணு முணுத்தபடியே சென்று, தேநீரை எடுத்து வர, உதட்டால் தேநீரை ரசித்துக், கண்களால் தன் காதலியை ரசித்து நிதானமாகக் குடித்துக் கொண்டிருந்த அவனைத் திருவின் குரல் கலைத்தது.

"அர்ஜுன்... நீ இங்கே இருக்கிற ஒவ்வொரு வினாடியும் பாரதிக்குத்தான் கஷ்டம். ஏற்கெனவே அவ அண்ணன்கிட்ட உண்மையைச் சொன்னதுனால அவன் பேயாட்டம் ஆடிட்டான்.

"அதனால்தான் உன்னை அவசரப்படுத்துகிறேன். சீக்கிரம் சொல்லு..." என்று வேண்ட, அப்போதுதான் அவள் கன்னத்தில் பதிந்திருந்த விரல் தடத்தைப் பார்த்த வனின் கண்கள் நிலைகுத்தி நிற்க.

பாரதி அவன் பார்வையின் அர்த்தம் அறிந்து, "என்ன... இப்போ ரொம்ப சந்தோஷமா இருக்குமே... என்ன விஷயமோ சொல்லிட்டு சீக்கிரம் கிளம்பு..." என்று அதிலேயே நிற்க,

அர்ஜுன், "மாமனுக்குக் கொஞ்சமாச்சும் மரியாதை கொடு, கண்ணு..." என்று கொஞ்சல் குரலில் கூறிக் கண்ணடிக்க...

பாரதி, "ஏய் மாமா சோமான்னு ஏதாவது சொன்னே உன்னைக் கொன்னுடுவேன்..." என்று வார்த்தைகள் கோபத்தைக் காட்டினாலும், முகம் ஏனோ சிவப்பைப் பூச, அது எதனால் என்று அவளுக்கே தெரியவில்லை.

ஆனாலும் அதற்கு எரிச்சல் என்று பேர் சூட்டிக் கொண்டாள்.

அர்ஜுன் அவள் அலைப்புறுதலை ரசித்தாலும், அதற்கு மேல் தாமதிக்காமல் விஷயத்திற்கு வந்தான்.

"மாமா... சுத்திவளைச்சு நான் பேச விரும்பலை. நீங்க நான் பாரதியின் விஷயம் பேச வந்திருப்பதாகத்தான் நினைப்பீங்க. ஆனால் நான் இப்போ அதுக்கு மட்டும் வரலை... எனக்கு உங்ககிட்ட ஒரு முக்கியமான விஷயம் சொல்லணும். அத்தை இருக்கிற இடம் எனக்குத் தெரியும்..." என்று மெதுவாகக் கூற, கணநேரத்தில் பாரதியின் முகத்தில் பிரகாசமும் திருவின் முகத்தில் எரிச்சலும் உண்டானது.

எனவே திரு, "இதைப் பாரு அர்ஜுன்... பாரதியைப் பத்தி எது வேணாலும் பேசு. கண்டவங்களைப் பத்தி எதுவும் பேச வேண்டாம். அதுவும் ஒரு கொலைகாரியைப் பத்தி..." என்று கத்த,

அவரை ஆச்சர்யமாகப் பார்த்த அர்ஜுன்... "உங்களுக்கு இவ்வளவு கோபம் வருமா மாமா...! ஆனால் உங்க கோபம் ஒரு அப்பாவி மேல் வந்ததுதான் எனக்குக்

கஷ்டமா இருக்கு... அவங்க கொலை செய்யப் பார்த்தாங்க என்று உங்களுக்குத் தெரியுமா? நீங்க உங்க கண்ணால பார்த்தீங்களா?" என்று கேட்க,

அவரோ, "ப்ளீஸ் அர்ஜுன்...! இதைப் பத்தி நிறையப் பேசியாச்சு. இனிமேல் அதைப் பத்திப் பேச வேண்டாம்..." என்று நிர்தாட்சண்யமாக மறுக்க...

இப்போது பாரதி தான் நடுவில் புகுந்து, "சித்தப்பா... சித்தியைப் பத்தி இவ்வளவு வருஷத்துக்கு அப்புறம் தகவல் கிடைச்சிருக்கு. நீங்க என்னடான்னா இப்படிப் பேசுறீங்க... இதைப் பாரு சித்தப்பா... என்னைக்கோ நடந்த சின்ன விஷயத்துக்காக நீ சித்தியை இவ்வளவு வருஷமா தண்டிச்சது போதும். சொன்னாக் கேளு... இது என் மேல் சத்தியம்!" என்று உறுதியாகக் கூற,

அதற்கு மேல் பேச முடியாமல் அவர் மௌனித்தார்.

அர்ஜுன், திருவிடம், "நீங்க ஒரு போலீஸ். இரண்டு பக்க நியாயத்தையும் விசாரிச்சிருக்கணும். ஆனால் நீங்க உங்க மனசு சொன்னதைத்தான் கேட்டீங்க. அது கூடப் பரவாயில்லை. அந்த நேரத்தில் உணர்ச்சி வசப்பட்டிருந்தாலும் அதுக்கப்புறம் கூட உங்க மனசு அவங்க பக்கத்தை விசாரிச்சுப் பார்க்கச் சொல்ல வில்லையா? இப்படித் தப்பு செய்துட்டீங்களே மாமா...!" என்று கூற,

அவர் அவனைப் பார்த்துக் கொண்டிருந்ததோடு சரி. ஒன்றுமே பேசவில்லை.

அர்ஜுன், "சரி. எல்லா விஷயத்தையும் நானே சொல்றேன். நான் ஏன் மினியைப் பார்க்கப் போனேன்...

ஏன் அவ குடும்பத்தைச் சந்திச்சேன் என்று எல்லாருக்கும் சந்தேகம் இருக்கும். ஏன் கோபமே இருக்கும்..." என்றவன் பாரதியின் முகத்தைப் பார்க்க... அவளோ முகத்தைத் திருப்பிக் கொள்ள... அர்ஜுன் சிரிப்புடன்,

"மினியை நான் திரும்பிப் பார்த்ததற்குக் காரணம் கஸ்தூரி சித்தி மினியோட அத்தை. அதனால்தான்..." என்று கூற, இருவரும் அதிர்ந்தனர்.

திரு, "என்ன சொல்றே அர்ஜுன்... அவ எப்படி... அவளுக்குக் கூடப் பிறந்தவங்க யாரும் கிடையாது..." என்று பதறிப் போய்க் கூற,

அர்ஜுனிடம் ஒரு வெற்றி முறுவல். "பரவா யில்லையே... மாமாவும் கொஞ்சம் அவங்க நினைப் போடதான் இருக்கார்..." என்று நினைத்தவன், பாரதியைப் பார்க்க...

அவள் அவனைக் கூர்மையாகப் பார்த்துக் கொண்டிருந்தாளே தவிர, முகத்தில் எவ்வித உணர்ச்சி யையும் காட்டவில்லை.

அர்ஜுன், "இருங்க மாமா. நான் எல்லா விஷயத்தையும் சொல்லிடுறேன். அதுக்கப்புறம் எது உண்மை, எது பொய் என்று முடிவு செய்யுங்க..." என்று கூறிவிட்டு, தான் மினியின் குடும்பத்தைப் பற்றி விசாரித்தது.. அப்போது கஸ்தூரியைப் பற்றித் தெரிந்தது... தான் அவள் குடும்பத்தைச் சந்தித்தது... கஸ்தூரியிடம் பேசியது... அவளின் நியாயம், உண்மையாக நடந்த விஷயம்... என்று அனைத்தையும் ஒரு மணி நேரமாக விவரித்தான்.

அனைத்தையும் கேட்டவர்கள், மூச்சுக் கூட விட முடியாத அதிர்ச்சியில் இருக்க...

அர்ஜுனோ சிரிப்புடன், பாரதியிடம், "பாரு... நீ சின்ன வயசில் செய்த வாலுத்தனம்தான் எல்லாத்துக்கும் காரணம். பத்து வயசுப் பொண்ணு கிச்சனில் இந்தக் கூத்தா அடிப்பாள்? இதிலிருந்து ஒண்ணு தெரியுது... நீ அப்போதிலிருந்தே கொஞ்சம்... இல்லை இல்லை, நிறையவே ஆர்வக் கோளாறுன்னு..." என்று கேலியாகக் கூற,

பாரதியின் கண்கள் தளும்பின. திருவிடம் சென்று, "சித்தப்பா... என்னை... என்னை மன்னிச்சிடு. என்னால் தானே இதெல்லாம்... என்னை மன்னிச்சிடு. எனக்குச் சத்தியமா ஞாபகம் இல்லை..." என்று கெஞ்ச,

அவர் கூறுவதற்கு முன், அர்ஜுன், "சே பைத்தியம்... நீ என்ன செய்வே? யோசிக்கிற அளவிற்கு வளர்ந்தவங் களே யோசிக்கலை..." என்று மறைமுகமாகத் திருவைக் குத்த...

அவரோ நிமிர்ந்து, பாரதியின் தலையைக் கோதி, "உன் மேல் என்னடா தப்பு... நான்தான் அவசரப்பட்டு எனக்கு ஒரு பொண்ணு இருக்கானு கூடத் தெரியாமல்... சே... என்னை உங்க சித்தி மன்னிப்பாளான்னு கூடத் தெரியலையே?" என்று கம்மிய குரலில் குற்ற வுணர்ச்சியுடன் கூற,

அர்ஜுன் சிரித்தபடி, "மாமா, நான் எல்லாம் சொல்லி முடிச்சதும் நீங்க இதெல்லாம் உண்மையான்னு கூட ஒரு வார்த்தை கேட்கலை. உடனே நம்பிட்டீங்க. உங்களுக்கு

ஒரு காரணம்தான் தேவைப்பட்டுச்சு. அவங்க நிரபராதி என்பதற்கான காரணம்... இதிலிருந்தே தெரியுது. அவங்க மேல் உங்களுக்கு அன்பு இருக்குன்னு... அதே மாதிரிதான் அவங்களுக்கும் இருக்கும். நீங்க இப்போவே கிளம்புங்க. என்ன பார்க்கிறீங்க... ஃப்ளைட் டிக்கெட்டோட தான் வந்திருக்கேன். இன்னும் ரெண்டு மணி நேரத்தில் ஃப்ளைட். நீங்க மட்டும் போறீங்க. அத்தையைக் கூட்டிட்டு வர்றீங்க... சரியா?" என்றவன், திருவிடம் டிக்கெட்டுகளைக் கொடுக்க...

அவரோ பாரதியைப் பார்க்க...

பாரதி, "என்ன பார்க்கிற சித்தப்பா... இன்னும் என்ன தயக்கம்! போ சித்தப்பா... வரும்பொழுது சித்தியோடதான் வரணும். கூடவே தங்கையையும்..." என்று கூற,

திரு, "இல்லை குட்டி. அவ வர மாட்டேனு சொல் லிட்டான்னா?" என்று டீன் ஏஜ் பையன் போல் பதற்ற மாகக் கேட்க,

அர்ஜுன், "விடுங்க மாமா... காலில் விழுந்திடுங்க. அதான் பெஸ்ட். இன்னும் கொஞ்ச நேரத்தில் நானும் அதைத்தான் செய்யப் போறேன்..." என்று பாரதியைப் பார்த்தபடியே கூற,

அவளோ வழக்கம்போல் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். திருவோ அர்ஜுனைத் தனியாக அழைத்துப் போய், ரகசியமாக, "அர்ஜுன்... நீ சொல்றது ஒண்ணும் கேலி இல்லையே... நீ பாரதியை விரும்புறதானே?" என்று தான் பெறாத மகளின் மேல் இருந்த அசைக்க முடியாத பாசத்தில் கேட்க,

அவரைக் கண்டு நெகிழ்ந்த அர்ஜுன், "என்ன மாமா... வாய் நிறைய மாமா மாமான்னு கூப்பிடுறேன். இன்னும் என்ன சந்தேகம்? ஆனால், இதுக்கு மேல் உங்க கிட்டே விலாவாரியாச் சொல்ல முடியாது மாமா. என் காதலை முதன் முதலில் பாரதியிடம்தான் சொல்வேன். அதுக்கப்புறம்தான் எல்லார் கிட்டேயும்..." என்று கூற,

அவர் நிம்மதியுடன் ஏர்போர்ட்டிற்குப் புறப்பட, பாரதி மகிழ்ச்சியுடன் அவரை வழியனுப்ப, அவள் தோளில் ஒரு கரம் விழுந்து, "மாமனைப் பார்க்காத ரெண்டே நாளில் இளைச்சிட்டியேடி தங்கம்..." என்று காதோரத்தில் கிசுகிசுப்பாகக் கேட்க,

அந்த ஸ்பரிசத்தில், குரலில் பதறி விலகிய பாரதி, "நீ இன்னும் இங்கே என்ன பண்ணுறே? அதான் சித்தப்பா போயிட்டாரு இல்ல... நீயும் கிளம்பு," என்று முகத்தில் அடித்தாற் போலக் கூற,

இதற்கெல்லாம் அசருவானா அர்ஜுன். "உன் சித்தப்பாவுக்கு எவ்ளோ பெரிய ஹெல்ப் செய்திருக்கேன். மாமனுக்கு ட்ரீட் கிடையாதா?" என்று அவள் கையைப் பிடித்து இழுத்துக் கேட்க,

அதை விடுவித்த பாரதி, "ஏய்... மாமா அது இது என்று வெறுப்பேத்தாமல் கிளம்பு. நீ செய்த உதவிக்கு ரொம்பத் தேங்க்ஸ்... அவ்வளவுதான்," என்று கூற,

அர்ஜுன், "பாரேன்... இப்போ நான் உன்னை மாதிரி ஆகிட்டேன். நீ என்னை மாதிரி ஆகிட்டு வர்றே. நான்தான் ஏன் இப்படிச் செஞ்சேன் என்று சொன்னேனே... உனக்கு எல்லாத்தையும் முதலில் இருந்து விலாவாரியாச் சொல்றேன்..." என்று கூற,

அவனைக் கையமர்த்திய பாரதி, "போதும் அர்ஜுன்... மினி கிட்டே பேசினதை நியாயப்படுத்தப் போறே... அவ்வளவுதானே! நான் பிரிஞ்சதும் என் மேல் காதல் வந்திருச்சின்னு சொல்லப் போறே, அதானே! ஆனால், அதுக்காக நீ இவ்வளவு வருஷம் என்னை வெறுத்ததெல்லாம் இல்லைன்னு ஆகிடுமா, அர்ஜுன்?

"இப்போது கூட நீ இப்படி எல்லாம் பேசுறதை என்னால் ஏத்துக்க முடியலை, அர்ஜுன். உன்னைக் காதலிச்சதைத் தவிர எந்தத் தப்பையும் நான் செய்யலையே அர்ஜுன். என்னை ஏன் ஒவ்வொரு நாளும் தண்டிச்சே? உன் காரில் ஏறக் கூடாது...உன் கூடச் சேர்ந்து சாப்பிடக் கூடாது... என்னை... என்னை உன் ஆபீசில் ஒரு அடிமை மாதிரிதானே வெச்சிருந்தே! ஏன்?

"எனக்கு அப்போது இதெல்லாம் தோணலை. ஏன்னா உன் மனசில் நான் இருக்கேன்னு இறுமாப்பில் இருந்தேன். ஆனால், இப்போ அதையெல்லாம் நினைச்சு எனக்கு ஆறமாட்டேங்குது. தயவு செய்து போயிடு. இனியும் நீ இங்கே இருந்தால், நான் ஏதாவது வாய் தவறிச் சொல்லிடுவேன். போ..." என்று கண்ணீருடன் கத்தவும், ராம் தன் காரில் வாசலுக்கு வரவும் சரியாக இருந்தது.

பாரதி அவனைக் கண்டு பதற்றத்துடன், "போ, அர்ஜுன்... ராம் வந்துட்டான். போயிடு..." என்று தள்ள, அர்ஜுன் அசையாமல் நின்றிருக்க,

அவன் அருகில் வந்த ராம், பாரதியிடம், "உன்னை வீட்டை விட்டு வெளியே வரக் கூடாதுன்னு சொன்னேன் இல்லை. இது யாரு...?" என்று கேட்க, அவளோ பேசாமல் இருக்க,

ராம், அர்ஜுனிடம், "யார் நீங்க...?" என்று அதிகாரத் தோரணையில் கேட்க,

அந்த நிலைமைக்குச் சற்றும் பொருத்தம் இன்றி அங்கே ஒரு நிகழ்ச்சி நடந்தது.

ஆம்! அர்ஜுன், ராமை, "மச்சாஆஆஆன்..." என்று அணைத்திருந்தான்.

அவன் செயலில் அதிர்ந்த ராம், 'ஏய்... யார் நீ...? யார் உனக்கு மச்சான்?" என்று அவன் அணைப்பில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்ளப் போராட, அவன் பிடியோ இரும்புப் பிடியாக இருந்தது.

அர்ஜுனோ தன் அணைப்பை இறுக்கி, "உன்னைப் பார்த்து எவ்ளோ வருஷமாச்சு மச்சான்... சின்ன வயசில் பார்த்தது. இப்போ பெரிய போலீஸ் ஆகிட்டே..." என்று கூச்சலிட,

பாரதி கண்ணைக் கூடச் சிமிட்டாமல், அவன் சேட்டைகளை என்ன செய்வது என்று தெரியாமல் ஓய்ந்து போக, ராமிற்கு மெதுவாகப் புரிந்தது.

"அர்ஜுன்... நீ அர்ஜுன்தானே...? விடுடா என்னை..." என்று கத்த,

ஒரு வழியாக அவனை விட்ட அர்ஜுனைப் பார்த்து, "எவ்வளவு தைரியம் இருந்தால் என் வீட்டுக்கு வருவே? இனிமேல் என் தங்கச்சி கூடப் பேசுறதைப் பார்த்தேன்... உன்னை என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது. வெளியே போ. வாட்ச்மேன்..." என்று காவலாளியை அழைக்க,

அர்ஜுன், "மச்சான்... இதெல்லாம் சரியில்லை. வருங்காலத் தங்கச்சி புருஷனை நீ இப்படி எல்லாம் அவமானப்படுத்தக் கூடாது. சொல்லிட்டேன்..." என்று கேலியாகக் கூற,

பாரதி, 'இவனுக்குத் தலையில் ஏதாவது அடிபட்டிருச்சா... இப்படிப் போட்டுத் தாக்குறானே...?' என்று அயர்ந்து போக,

அர்ஜுன் அவளைப் பார்த்து, "என்ன... தலையில் அடிபட்டிருச்சின்னுதானே நினைக்கிறே. அப்படி எல்லாம் இல்லை செல்லம்..." என்று அவளைக் கொஞ்ச,

ராம் எரிச்சலுடன், "ஏய்... நீ ரொம்ப ஓவராப் போறே... இனிமேலும் என் தங்கச்சியை உன் கூட விட்டு வைக்க நான் ஏமாளி இல்லை. நீ ஒரு கொடுமைக்காரன். அதான் அவளைப் போட்டுப் படுத்தி எடுத்திருக்கே. இனிமேல் அவள் உன்னைக் கனவில் கூட நினைக்க மாட்டாள். இங்கே இருந்து போ..." என்று வாசலைக் கை காட்ட,

கலகலவெனச் சிரிக்க ஆரம்பித்தான், அர்ஜுன். அவன் சிரிப்பை இருவரும் புதிராகப் பார்க்க, சிரித்து முடித்த அர்ஜுன், "நீ இல்லை மச்சான்... இந்த உலகத்தில் எந்தக் கொம்பன் தடுத்தாலும் அவதான் என் பொண்டாட்டி. சுத்திச் சுத்தி நீ என் கிட்டேதான் வரணும். அதனால் நான் இப்போ கிளம்பறேன்..." என்று கிளம்பியவன், சட்டென்று திரும்பி ராமின் கன்னத்தில் பளாரென்று அறைந்தான்.

பாரதி அதிர்ந்து, "ஏய்... என்ன பண்றே?" என்று கத்த, ராமோ எதிர்பாராத தாக்குதலில் அதிர,

அர்ஜுனோ தன் புன்னகை முகம் மாறாது, “என்னடா... வந்ததும் அணைச்சான், இப்போ அடிக்கிறானேன்னு பார்க்கிறியா ராம். இது என் பாரதியை அடிச்சதுக்கு. அவளை நான் அடிப்பேன், கொல்லக்கூடச் செய்வேன். மத்தவங்க யாரும் அவ மேலே கை வைக்கக் கூடாது. அது அவ பாசமலராகவே இருந்தாலும்தான். என்னை விட இரண்டு மூணு வயசு சின்னவன்தானே நீ? ஒண்ணும் தப்பில்லை. வரட்டா... என் மச்சான்...” என்று கூறி விட்டு, விடை பெற,

பாரதி அவனைப் புரியாமல் பார்த்துக் கொண்டிருக்க, ராம் உள்ளே செல்ல, அவன் பின்னாலேயே சென்ற பாரதி,

“அண்ணா...! தப்பா நினைச்சுக்காதே, அண்ணா! அவனுக்கு இன்னைக்கு என்ன ஆச்சுன்னே தெரியலை. நான் போகலை அண்ணா... அவனாகத்தான் வந்தான். சித்தியைப் பத்தி விஷயம் தெரிஞ்சிடுச்சு, அண்ணா. சித்தப்பா அவங்களைக் கூட்டிட்டு வரத்தான் சென்னைக்குப் போயிருக்கார்...” என்று பலதும் கூறிக்கொண்டே வர,

அவனோ ஒரு பதிலும் பேசாமல் தன் அறைக்குள் சென்று தாழிட்டுக் கொள்ள, பாரதியோ செய்வதறியாது திகைத்தாள்.

**சி**ல மணி நேரங்களுக்குப் பிறகு சென்னையை அடைந்திருந்தாலும், ஜெயதேவ் வீட்டு வாசலைக் கூட அடைந்திருந்தாலும், திருவினால் அந்த வீட்டின் உள்ளே செல்ல இயலவில்லை. ஏதோ ஒன்று தடுக்க, தன் காரிலேயே அமர்ந்தபடி நோட்டம் விட்டுக் கொண்டிருந்தார்.

தன் மனைவியின் நிழலையாவது பார்க்க இயலுமா என்று காத்திருந்தவரின் தவத்திற்குப் பதிலளித்தாள் அந்தப் பேரிளம் மங்கை. கஸ்தூரி தன் வீட்டை விட்டு, பூஜைக்கான சாமான்களுடன் பக்கத்தில் இருந்த கோயிலை நோக்கி நடக்க ஆரம்பிக்க, அவளைப் பல வருடங்களுக்குப் பிறகு அதே அழகுடன், இப்போது அதனுடன் கூடிய முதிர்ச்சியின் தேஜஸுடன் பார்த்த திருவின் கால்களும் கைகளும் தன்னையே அறியாமல் காரை இயக்கிக் கஸ்தூரியைப் பின் தொடர, அவளோ இதை எல்லாம் அறியாமல் கோயிலுக்கு எட்டி நடை போட்டாள்.

கோயிலுக்குச் சென்றவள், மனமுருக வேண்டியபடி பிரதக்ஷணத்தை முடித்து விட்டு, அர்ச்சனையையும் முடித்துப் பிராகாரத்தில் அமர்ந்து தியானம் செய்ய ஆரம்பிக்க, அவள் முன் வந்து எதிர்ப் பக்கமாக அமர்ந்தார் திருச்சிற்றம்பலம்.

சத்தியமாக அவர் மனதில் தான் என்ன நினைக்கிறோம் என்றே கூற முடியவில்லை. அவருடைய எண்ணம் எல்லாம் தன் மனைவி தன்னுடன் வந்துவிட வேண்டும் என்பதுதான். ஏனென்றால் அந்த அளவிற்குத் தான் அவளுக்குத் தீராத பாவம் இழைத்து விட்டதாக நினைத்தபடி, அமைதியாகத் தியானிக்கும் தன் மனைவியைப் பார்க்கப் பார்க்கத் தெவிட்டவில்லை அவருக்கு.

தியானம் முடித்துக் கண்களைத் திறந்த கஸ்தூரி, எதிரில் அமர்ந்திருந்த திருவைப் பார்க்க, அவளுக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை. 'இது பிரமையா? நிஜமா?' என்று நினைத்தபடி கண்களைக் கசக்கிப் பார்க்க,

அப்போதும் திருதான் தெரிந்தார். அவரையே பார்க்கப் பார்க்க, அவள் கண்களில் நீர் தளும்ப, அதில் தெரிந்த கணவனின் முகம் மறைய, தன் கண்ணீரையும் சபித்தபடி, அவரையே பார்த்துக் கொண்டிருந்தாள் கஸ்தூரி.

அப்போது திரு எழுந்து வந்து கஸ்தூரியின் அருகில் அமர்ந்தார். ஒன்றும் பேசவில்லை. ஆனாலும் அவர் கண்களில் இருந்து வழிந்த கண்ணீர், ஆயிரம் சமாதானங்கள் கூற, அங்கே ஒரு பிரிவு, தன் மௌனத்தையே ஆயுதமாக்கிக் கூடியது. திரு ஒன்றுமே பேசவில்லை.

கண்ணீர் மல்கத் தன்னையே பார்த்துக் கொண்டிருக்கும் தன் மனைவியின் பிறை நெற்றியில், சுவரில் இருந்த குங்குமத்தை எடுத்து இட, அதுவே கஸ்தூரிக்குப் போதுமானதாக இருந்தது. வார்த்தைகளால்தான் காதல் புரியுமா? செயல்களினால் புரியாதா என்ன?

அர்ஜுன் கூறியது போல், அவரே தன்னைத் தேடி வந்து, தன் நெற்றியில் பொட்டு வைக்க, அதுவே அவளது கவலைகள் அனைத்தும் அடித்துச் செல்லப் போதுமானதாக இருந்ததுதான். ஆனால், திருவிற்கு அது போதுமானதாக இல்லை.

ஆதலால், "என்னை மன்னிப்பாயா கஸ்தூரி...? நான் எல்லாருக்கும் நியாயமா இருந்திருக்கேன்னு நினைச்சேன். ஆனால், உனக்கு மட்டும் எவ்ளோ துரோகம் செய்திருக்கேன். சே...! என்னை நினைச்சா எனக்கே அசிங்கமா இருக்கு. ஒரு வார்த்தை சொல்லி யிருக்கலாமே, கஸ்தூரி, நான் உண்டாயிருக்கேன்னு... சொல்லியிருந்தா நான் உன்னை... என்னை இப்படிப்

பாவம் செய்ய வெச்சிட்டியே கஸ்தூரி?" என்று அவள் கையைப் பிடித்துக் கொண்டு கரைய,

கஸ்தூரி, தன் கணவன் இப்படி உணர்ச்சி வசப்படுவான் என்று சற்றும் நினைக்கவில்லை. இன்னும் தன் கணவன் மேல் அவளுக்கு அளவிட முடியாத பிரியம் இருந்ததுதான். அந்தப் பிரியத்திற்கும் இவ்வளவு நாள் இருந்த கோபத்திற்கும் இருந்த யுத்தத்தில் பிரியமே ஜெயிக்க,

தன் கணவனிடம், "எனக்கு அன்னைக்கு இருந்த கோபத்தில் அந்த விஷயத்தைச் சொல்லணும்னு தோணலைங்க. நானும்தான் தப்பு செய்திருக்கேன்... நான் பாரதியை அடிச்சிருக்கக் கூடாது. அவ உங்களுக்கு எவ்ளோ முக்கியம்னு தெரிஞ்சும் நான்..." என்று அவள் மன்னிப்பு வேண்ட,

அவள் வாயை மெல்ல மூடிய திரு, "வேண்டாம் கஸ்தூரி... நீ மன்னிப்புக் கேட்காதே. நான்தான் கேட்கணும். ஷர்மிளா அண்ணி பேரை வெச்சிருக்கியே, நம்ம பொண்ணுக்கு. உன் மனசில் கள்ளங் கபடமில்லைன்னு இதிலிருந்தே தெரியலை...? ஏன் என் மேல் இவ்வளவு அன்பு வெச்சே கஸ்தூரி... நான் உனக்கு என்ன செய்தேன்? ஏன் என் மேல் இவ்வளவு பாசம்...?" என்று கேட்க,

கஸ்தூரி தன் கண்ணீரைத் துடைத்துக் குறும்பாகச் சிரித்து, "பதில் தெரிஞ்சிட்டே கேள்வி கேட்டால் நான் என்ன சொல்வது?" என்று கேட்க,

திரு, "என்னை மன்னிச்சிடு, கஸ்தூரி. என் கூட வருவியா? நீயும் நம்ம பொண்ணும் என்னை மன்னிச்சு

ஏத்துப்பீங்களா? நாம எல்லாம் சேர்ந்து வாழலாமா? எனக்கு இன்னொரு சந்தர்ப்பம் தருவியா? பாரதிக்கும் ராமிற்கும் நீ மறுபடியும் ஒரு தாயா இருப்பியா...?" என்று கண்களில் ஆசையைத் தேக்கிக் கேட்க,

அதுவரையில் மனதில் இருந்த கொஞ்ச நஞ்ச வேற்றுமைகளும் அலையடித்த மணல் வீடாய்க் கலைந்து போக, அவரையே பதில் கூறாமல் பார்த்துக் கொண்டிருந்த கஸ்தூரியின் பதிலாய், கோயில் மணி தன் நாதத்தை எழுப்பி, அவளின் சம்மதத்தைத் தெரிவிக்க, பல காலம் கழித்து அங்கேயும் ஒரு காதல் ஜோடி ஒன்று சேர்ந்தது.

பின் ஜெயதேவ் வீட்டிற்கு வெளியே நின்று கொண்டு, திரு, "நான் உள்ளே வரலை, கஸ்தூரி. அர்ஜுனை ஜெயிலுக்கு அனுப்பிய குடும்பம் இது. உன்னை இது நாள்வரைக்கும் பணத்துக்காகவாவது பார்த்துக்கிட்டு இருந்தாங்க என்றுதான் இவ்வளவு தூரம் வந்தேன். அந்தப் பணத்தை அவங்களையே வெச்சிக்கச் சொல்லி விட்டு வந்திரு. நான் காத்திருக்கேன்..." என்று கூற,

கஸ்தூரி, "என்னங்க... எனக்கென்னவோ... வயசுப் பிள்ளைங்க ஊரை விட்டு ஓடப் பிளான் போடுற மாதிரி இருக்கு. நீங்களும் வாங்க..." என்று கெஞ்ச,

திரு சிரிப்புடன், "ஏய்... நீ என் பொண்டாட்டி. உன்னை ஏன் நான் இழுத்துக்கிட்டு ஓடணும்? தைரியமா உன் அண்ணன்காரன்கிட்டச் சொல்லிட்டு வா. ஆனால், நான் வரலை," என்று கூற,

அவளும் வேறு வழியின்றித் தன் உடைமைகளை எல்லாம் எடுத்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறிய படி, ஜெயதேவிடம்,

"அண்ணா... அவர் வந்துட்டார், என்னை அழைச் சிட்டுப் போக. நான் போறேன். அந்தப் பேங்க் பணத்தை நீங்களே வாங்கிக்கோங்க. நான் ஷர்மிக்குப் போன் பண்ணி, நேராய் பெங்களூருக்கு வரச் சொல்லிடுறேன். இது நாள்வரை என்னைப் பார்த்துக்கிட்டதுக்கு நன்றி அண்ணா. வரேன்... மினி, கேசவ்..." என்று அனை வருக்கும் கூறிவிட்டு விடைபெற,

ஜெயதேவோ, "தங்கச்சி... உனக்கு எவ்ளோ பெரிய மனசு. பணத்தை வாங்காட்டி உன் மனசு கஷ்டப்படும். அதனால்தான் வெச்சிக்கிறேன். அடிக்கடி வந்து உன்னைப் பார்க்கிறேன். பத்திரமாப் போயிட்டு வா. போயிட்டு வாங்க மாப்பிள்ளை..." என்று தன் காவிப் பற்கள் தெரிய வழியனுப்பிய ஜெயதேவை, அருவருப் புடன் பார்த்த திரு,

"தயவு செய்து அந்தப் பக்கம் வந்திடாதீங்க. அவ்வளவுதான் சொல்லுவேன்..." என்று எரிச்சலுடன் கூறி விட்டுக் கஸ்தூரியை அழைத்துக் கொண்டு செல்ல,

அவர்களையே அதிர்ச்சியுடன் பார்த்துக் கொண் டிருந்த ஜெயதேவ், "போனாப் போகுதுங்க... அதான் பணம் இருக்கே. இனிமே அந்தக் குடும்பத்துக்கே ஒரு கும்பிடு. வா மினி..." என்று கூறி விட்டுத் தன் மகளையும் அழைத்துக் கொண்டு வீட்டிற்குள் சென்றார்.

மினியும், "சீச்சீ... இந்தப் பழம் புளிக்கும்..." என்று நினைத்து, வேறு பழத்திற்காகக் காத்திருக்க ஆரம்பித்தாள்.

பின் வீட்டிற்குச் சென்ற திருவையும் கஸ்தூரியையும் பாரதி கால் தரையில் படாத உற்சாகத்துடன் வரவேற்றாள்.

"சித்தி... உங்களைப் பார்த்து எவ்வளவு வருஷம் ஆச்சு? என்னை ஞாபகம் இருக்கா சித்தி? நான்தானே நீங்களும் சித்தப்பாவும் பிரிஞ்சதுக்குக் காரணம். என்னை மன்னிப்பீங்களா சித்தி...?" என்று கேட்க,

ராமுவும், "ஆமா சித்தி. நாங்க ரெண்டு பேரும் உங்களை ரொம்ப ஒதுக்கிட்டோம். பாரதி எல்லா விஷயத்தையும் சொன்னாள். எங்களை மன்னிச்சிடுங்க சித்தி," என்று அவனும் மன்னிப்பு வேண்ட,

கஸ்தூரி, "அடடா... இன்னும் எவ்வளவு மன்னிப்புதான் நீங்க மூணு பேரும் கேட்பீங்க. குடும்பம் என்று இருந்தால் பிரிவு சகஜம்தான். ஆனால், அது முறிவாகத்தான் இருக்கக் கூடாது. அன்னைக்கு இருந்த கோபம் ஏதோ நடந்து போச்சு. கடந்த காலத்தை நினைச்சு நிகழ்காலத்தில் வருந்தி, அதோட இனிமையைக் குறைக்கக் கூடாது. என்னைக்கும் நீங்கதான் எங்க ளுக்கு மூத்த பிள்ளைங்க..." என்று கூற, அவளை அணைத்துக் கொண்டனர் பாரதியும் ராமுவும்.

பாரதி, "இல்லை சித்தி... இனிமே ஷர்மிளா வுக்குத்தான் சித்தப்பாவின் அன்பு கிடைக்கணும். நாங்க ஒதுங்கிக்கிறோம்..." என்று கூற,

திருவின் முகம் அதிர்ந்தது. கஸ்தூரியோ ஒரு படி மேல் சென்று, "என்ன சொன்னே பாரதி...? ஒதுங்கிக்கப் போறியா? இதுதான் உன் சித்தப்பா மேல் வைத்திருக்கும் அன்பா? உனக்காகத்தானே அவர் என்னைப் பிரிஞ்சார். இப்போ நீ இப்படிச் சொன்னால், அப்புறம் அவர்

செஞ்சதுக்கு என்ன அர்த்தம்? சொல்லு... நான் ஷர்மி கிட்டே சொல்லியிருக்கேன்... உனக்கு ஒரு அண்ணன் அக்கா இருக்காங்கன்னு. அவளுக்கு எல்லா விஷயமும் தெரியும் பாரதி. அவ புரிஞ்சுப்பா. அதுக்காக நீங்க ரெண்டு பேரும் தத்துப்பித்துன்னு உளறாதீங்க... சரியா?" என்று கூற, அவர்களால் பேச முடியவில்லை.

பாரதிக்கு என்னவோ தன் தாயையே பார்த்தது போல் இருந்தது. அந்த நிமிடம், 21 வருடங்களாகத் தோன்றாத ஆசை அவளுக்குத் தோன்றியது.

திருவையும் கஸ்தூரியையும் அருகில் அழைத்து, "இனிமேல் நான் உங்க ரெண்டு பேரையும் அம்மா அப்பான்னு கூப்பிடட்டா...? எனக்கு ரொம்ப ஆசையா இருக்கு... ப்ளீஸ்..." என்று கூறித் தன் அண்ணனைப் பார்க்க,

அவனும், "ஆமா... இதை விட ஒரு பெற்றோரால் என்ன செய்ய முடியும்? அது எல்லாத்தையும் நீங்க செஞ்சிருக்கீங்க... எனக்கும் அதே ஆசைதான்," என்று ஆமோதிக்க,

கஸ்தூரி ஒரு தடவை திருவைப் பார்த்துச் சிரித்து, "அதற்குத்தானே நாங்க ரெண்டு பேரும் காத்திருக்கோம். இதுக்கு எதுக்கு அனுமதி குட்டி? நீங்க அப்படிக் கூப்பிடாவிட்டாலும் நாங்கதான் உங்க பெற்றோர். என்னங்க... நான் சொல்றது சரிதானே?" என்று திருவைக் கேட்க,

அவரோ பதறி, "என்ன... என்ன சொன்னே...?" என்று கேட்க,

கஸ்தூரி போலிக் கோபத்துடன், “நல்லா இருக்கு... உங்க கவனம் எல்லாம் எங்கே இருக்கு?” என்று கேட்க,

பாரதி குறும்புடன், “நீங்க வேறம்மா... திரு உங்களை சீரியஸா சைட் அடிச்சிக்கிட்டு இருந்தார். அதான் திடீரென்று கேள்வி கேட்டதும் திணறிவிட்டார். என்னப்பா... நான் சொல்றது கரெக்டா?” என்று கண்ணடித்துக் கேட்க,

திரு, “அடிங்க வாலு...” என்று அவள் காதைத் திருக, அதைக் கண்டு ராமும் கஸ்தூரியும் சிரிக்க, அங்கே அந்த அழகான கூடு, பல வருடங்களுக்குப் பிறகு மீண்டும் தன் உறுப்பினர்களுடன் பூத்துக் குலுங்கியது.

## 26

## *கண்ணம்மா கண்ணன் தன் காதலியாகிறாள்...*

பாயுமொளி நீ எனக்கு பார்க்கும் விழி
நான் உனக்கு!
தோயுமது நீ எனக்கு, தும்பியடி நான் உனக்கு!
வாயுரைக்க வருகுதில்லை,
வாழிநின்றன் மேன்மையெல்லாம்
தூயசுடர் வானொளியே!
சூறையமுதே! கண்ணம்மா!
தாரையடி நீ எனக்கு,
தண்மதியடி நானுனக்கு
வீரமடி நீ எனக்கு,
வெற்றியடி நான் உனக்கு!

தாரணியில் வானுலகில்
சார்ந்திருக்குமின்ப மெல்லாம்
ஓருருவமாய்ச் சமைந்தாய்!
உள்ளமுதே! கண்ணம்மா!

இப்படியாக அந்தக் கூடு கூடிய வேளை நல்வேளையாக அமைய, அங்கே நெடுநாட்களுக்குப் பின் சந்தோஷம் கூத்தாட ஆரம்பித்தது.

ஆனால் என்னதான் இருந்தும் பாரதியின் மனதில் உண்டான வெற்றிடத்தை அவளால் மறைக்க முடிய வில்லை. அது அங்கிருந்த அனைவருக்கும் அறிந்தே இருந்தது. ஆனாலும் அதைப் பற்றி அவர்கள் எதையும் கேட்கவில்லை.

என்னதான் கஸ்தூரியும் திருவும் அதட்டினாலும் அவள் தனக்குத் தானே போட்டுக் கொண்ட சிறையை மீறி வர இயலவில்லை.

அதற்கும் ஒரு முடிவு காலம் ராமினால் வந்தது.

அடுத்த நாள் பாரதியின் அறைக்கு வந்தவன்... ஒன்றும் பேசாமல் “அரை மணி நேரத்தில் கிளம்பு... பக்கத்தில் இருக்கும் காஃபி ஷாப்புக்குப் போகணும்...” என்று கூற,

அது எதற்கு என்று கேட்கக் கூட அவளுக்குத் தோன்றவில்லை. இயந்திரம் போல் அவள் கிளம்ப ஆரம்பிக்க..

கஸ்தூரிதான் கேட்டாள். “என்ன ராம் திடீர்னு?” என்று கேட்க,

அவனோ, "இல்லைம்மா. என் ஃபிரெண்டுக்குத் தெரிஞ்ச பையன் ஒருத்தர் இருக்காராம். நல்ல பையனாம். சென்னையில் இருக்காராம். பிசினஸ்தான். அதான் அவரைப் பாரதிக்குப் பார்க்கலாம்னு பேசச் சொன்னேன். அவரும் ஒத்துக்கிட்டார். ஃபார்மலா வேண்டாம். ஏதாவது பொர்து இடத்தில் சந்திக்கலாம்னு சொல்லியிருக்கார். அதான்..." என்று கூற,

பாரதிக்கு மனதுக்குள் ஏதோ உடைந்தது போல் இருந்தது. "அண்ணா... எனக்கு இப்போதைக்கு வேணாம். கொஞ்ச நாள் போகட்டும்..." என்று கூற,

ராம், "எதுக்கு, அந்த அர்ஜுன் குட்டையைக் குழப்பறதுக்கா? பேசாமல் கிளம்பு. நான் சொல்றதை எல்லாம் கேட்பேனு சொல்லியிருக்கே. மறுத்துப் பேசாமல் சொன்னதைச் செய்..." என்று கூற, கஸ்தூரி பாரதியின் அருகில் வந்து, "சும்மா போ குட்டி... உனக்குப் பிடிக்காததை யாரும் செய்ய மாட்டோம். நீ போகலைன்னா ஏதாவது சொல்வான். அதான்..." என்று கூற,

அவளும் வேறு வழியின்றிக் கிளம்பினாள். அங்கு சென்றதும் ராம் ஒரு இருக்கையில் திரும்பி அமர்ந் திருந்தவரைக் காட்டி, "அதோ மஞ்சள் சட்டை. அதில்தான் வருவேன்னு சொன்னார். வா, போய்ப் பார்க்கலாம்..." என்று கூறி, அழைத்துச் செல்ல, அவளும் வேண்டா வெறுப்பாக அவனைப் பின்பற்ற,

அவரின் அருகில் சென்றதும், "ஹலோ சார்..." என்று பவ்யமாக ராம் அழைக்க... திரும்பிய அந்த மஞ்சள் சட்டைக்காரனைப் பார்த்ததும் அதிர்ந்து போயினர் அண்ணனும் தங்கையும்.

ஏனெனில் அது சாட்சாத் அர்ஜுனேதான். பார்த்துச் சிரித்தவன் உடனே தன் வழக்கம்போல்... "மச்சாஆன்..." என்று ராமை அணைத்துக் கொள்ள,

ராம், "விடு. விடுன்னு சொல்றேனில்ல..." என்று கத்த, பாரதி தலையில் அடித்துக் கொண்டாள்.

'ஆனா ஊனா கட்டிப் பிடிச்சிக்கிட்டு... பாவம் அண்ணன்...' என்று மனதுக்குள் நினைத்துக் கொண் டாலும், வந்த சிரிப்பை அடக்கப் படாத பாடு பட்டாள்.

ஒரு வழியாக அர்ஜுன் ராமை விட,

"ஏய்... நீ எப்படி... மாப்பிள்ளை எங்கே?" என்று கத்த,

அர்ஜுன், "அட... என் முட்டாள் மச்சான்... நான்தான் அந்த மாப்பிள்ளை. உன் ஃபிரெண்டு ஆஹா ஓஹோன்னு புகழ்ந்த மாப்பிள்ளை நான்தான். என்ன... இப்போ புரியுதா? நான்தான் சொன்னேனே... நீ சுத்திச் சுத்தி என்கிட்டதான் வந்தாகணும், மச்சான்... வேற வழி யில்லை..." என்று நக்கலாகக் கூற,

அதற்கு ராம் பதில் கூறுவதற்குள் முந்திய பாரதி, "இதைப் பாரு, நீ விளையாடுறதுக்கு இனிமே வேற ஆளைப் பாரு. நான்தான் அன்னைக்கே சொன்னேன் இல்லை... எனக்கு நீ வேண்டாம். வேண்டாம். வேண்டாம்... புரிஞ்சுதா? தயவு செய்து என் வாழ்க்கையை இனிமேலாவது தனியா வாழ விடு. நான் கொஞ்ச நாளாவது எனக்காக வாழணும்னு ஆசைப்படுறேன். ப்ளீஸ்... என் அண்ணனுக்கும் எனக்கும் இடையில் வராதே..." என்று கையெடுத்துக் கும்பிட்டு விட்டு... ராமிடம், "வா அண்ணா!" என்று அழைத்துக் கொண்டு வெளியேற,

"ஏய் பொண்டாட்டி... நீ என்ன சொன்னாலும் சரி. உன்னை நான் விடமாட்டேன். அது உங்க அண்ணனே நினைச்சாலும்தான்..." என்ற அர்ஜுனின் அறைகூவல் காற்றோடு கரைந்தது.

ராம் அதற்கு மேல் எதுவும் பேசாமல் காரை ஓட்ட... பாரதியும் பேசாமல் அவன் அருகில் அமர்ந்து கொண்டிருந்தாள்.

இரும்புத் திரை போல் அங்கு நிலவிய அந்த மௌனம் இருவருக்குமே சங்கடத்தைக் கொடுத்தாலும் இருவருமே அதைப் பிரிக்க நினைக்கவில்லை. இருவரும் நீயா நானா... என்று மௌனத்தையே யுத்தமாகப் புரிய... அதில் முதலில் வென்று தகர்த்தெறிந்தான் ராம். அவன் பாரதியிடம் கேட்ட ஒரே கேள்வி, "உனக்கு அர்ஜுனைப் பிடிக்குமா குட்டி?" என்பதுதான்.

அதைக் கேட்டுச் சில விநாடிகள் சென்றுதான் அந்த வார்த்தைகளின் அர்த்தமே பாரதிக்கு உறைத்தது. சட்டென்று நிமிர்ந்த பாரதிக்கு, அவன் கேட்ட கேள்வியிலும், குட்டி என்ற அழைப்பிலும்... அவள் கண்களில் கண்ணீர் வழிய, அதையே அவளின் பதிலாக எடுத்துக் கொண்டான், அவள் தமையன்.

**அ**டுத்த நாள் தன் ஹோட்டலில் பாரதியை நினைத்துக் கொண்டே இலக்கின்றி வெறித்துப் பார்த்தபடி அமர்ந்திருந்தான் அர்ஜுன்.

உண்மைக் காதலின் வலியை அப்போதுதான் உணர ஆரம்பித்திருந்தான். பாரதியின் பாராமுகமும் அவள் தனக்குத் தானே போட்டுக் கொண்ட சிறையும் அவனைப் பாடாய்ப் படுத்தியது. அவன் காதலுக்கு யார்

குறுக்கே வந்தாலும் அவன் கவலைப்பட மாட்டான். அதை மீறும் தைரியமும் வீரமும் அவனிடம் இருந்தது. ஆனால் அவன் காதலுக்கோ காதலியே குறுக்கே நிற்கிறாள் என்னும்போது அவன் அடிபட்டுப் போனான்.

"ஒரு வாட்டி என் கூடத் தனியாப் பேசேன், கண்ணம்மா... நான் என் மனசில் உள்ளதை எல்லாம் வெளிப்படையாச் சொல்றேன். ஆனா அந்தச் சந்தர்ப்பம் கூட எனக்குத் தர மாட்டேங்கிறியே... நான் செஞ்சது தப்புதான். ஆனால் நீ அதைவிடத் தவறு செய்துகிட்டு இருக்கே. உன்னைச் சுத்தி நீயே ஒரு வட்டம் போட்டுக் கிட்டு... ஏன்டி என்னைக் கொல்றே?" என்று புலம்பிய படியே படுத்துக் கிடக்க...

அவன் கைபேசி மணியடித்தது. அதை எடுத்துக் காதிற்குக் கொடுக்க... அவன் பாரதியைக் கண்காணிக்கப் போட்டிருந்த ஆள் தான் பேசினான். அதன்படி இன்று பாரதிக்கு யாருடனோ நிச்சயதார்த்தம் என்று கூற, அர்ஜுன் அதிர்ந்தான்.

"யோவ்! என்னய்யா சொல்றே... எனக்குத் தெரி யாமல் எப்படி? யாரு மாப்பிள்ளை?" என்று கத்த,

அவனோ பதறி, "தெரியலை சார்... இன்னைக்குக் காலையில்தான் ஏற்பாடெல்லாம் நடக்குது. உடனே வாங்க சார்..." என்றபடி ஃபோனை வைக்க..

அடுத்த பதினைந்தாவது நிமிடம் பாரதியின் வீட்டின் முன்பு அவன் கார் நின்றது.

உள்ளே சென்றவனின் முகத்தில் வெறிகொண்ட வேங்கையின் ரௌத்திரம் இருந்தது. உள்ளே சென்றதும்,

அங்கிருந்த ராமின் சட்டையைப் பிடித்தவன்... "என்ன தைரியமிருந்தா நான் இருக்கும்போதே உன் தங்கச்சிக்குக் கல்யாண ஏற்பாடு செய்வே... உனக்கு அவ்வளவு திமிராடா? நான் நினைச்சா உன்னை என்ன வேணாலும் செய்வேன். பார்க்கிறியா?" என்று கர்ஜிக்க... ராமோ எதுவும் பேசாமல் அவனையே பார்க்க...

திரு தான் அவனைத் தடுத்தார். "அர்ஜுன், பொறுமையா இரு. மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வர்ற நேரம். பிரச்சினை பண்ணாதே!" என்று அடக்க,

கஸ்தூரியும், "ஆமா அர்ஜுன்! பாரதி விடாப்பிடியா உன்னை வேண்டாம்னு சொல்லிட்டா. நாங்க என்ன பண்றது? ராம்தான் என்ன செய்வான்?" என்று கூற,

அவன் கஸ்தூரியிடம் திரும்பி, அதே கர்ஜனையுடன், "அவ எங்கே? என்ன பார்க்கிறீங்க... உங்க பொண்ணு எங்கே?" என்று கேட்க,

கஸ்தூரி, "அதோ அந்த ரூம்..." என்று கைகாட்ட,

அவன் அதை நோக்கிச் செல்ல, மூவரும், "வேண்டாம் அர்ஜுன். அவளை ஒண்ணும் பண்ணிடாதே..." என்று கெஞ்ச,

அதை எல்லாம் கேட்காமல் உள்ளே செல்ல... அங்கே மஹதி அலங்காரம் செய்து கொண்டிருக்க... முகமெல்லாம் பூரிப்புடன் மணப் பெண்ணுக்குரிய வெட்கத்தோடு அமர்ந்திருந்தவளைப் பார்க்க, அவனுக்கு ஆத்திரம்தான் கிளம்பியது.

மஹதி ஏதோ அவள் காதில் கிசுகிசுக்க... அவள் முகம் அந்தி வானமாகச் சிவக்க... மற்ற நேரமாக

இருந்திருந்தால் அர்ஜுன் என்ன செய்திருப்பானோ? ஆனால் இப்போது அவனுக்கு எரிச்சல் மூள... "நான் உன்கிட்ட தனியாப் பேசணும்..." என்று அழுத்தத்தோடு கூற,

அப்போதுதான் அவன் நிற்பதைப் பார்த்த பாரதி, "அர்ஜுன்... என்ன இது! வெளியே போ. எல்லாரும் இருக்காங்க..." என்று பதற,

அவனோ, "நான் உன்கிட்ட தனியாப் பேசணும். உன் உயிர்த் தோழியை வெளியே போகச் சொல்லு..." என்று அதே அழுத்தத்துடன் கூற,

பாரதியும் வேறு வழியில்லாமல் மஹதியிடம் சைகை காட்ட... அவளும் அர்ஜுனுக்குத் தெரியாமல் பாரதியிடம் லேசாகக் கண்ணடித்து விட்டுக் குறும்புடன் வெளியே செல்ல...

அர்ஜுன் உடனே கதவைச் சாத்த... பாரதி, "ஏய், எதுக்குக் கதவைச் சாத்தினே?" என்று நடுங்க....

அவன், "ஹான்... உன்கூட அப்பா அம்மா விளையாட்டு விளையாடத்தான்..." என்று கூறிவிட்டுத் தாழிட...

வெளியே நின்று பதற்றப்பட வேண்டியவர்களோ, "அப்பாடி! நம்ம வேலை முடிஞ்சது. இனிமே பாரதி பார்த்துப்பா..." என்று ஒருவித நிம்மதியோடு சோபாவில் ஹாயாக அமர்ந்தனர்.

உள்ளே...

அர்ஜுன் பாரதியை நெருங்க... அவள் இதயமோ தடதடவென்று அதிர... அவன் அவள் முகத்தைப் பார்த்தே

என்ன நினைக்கிறாள் என்பதை உணர்ந்து, "சே... என்னை என்ன கேவலமானவன் என்று நினைத்தாயா? நான் ஒண்ணும் அதுக்கு வரலை. ஏன்டி இதுக்குச் சம்மதிச்சே... அந்த அளவிற்கு என் மேல வெறுப்பு வந்திடுச்சா? நான்தான் ஏன் அப்படிச் செஞ்சேன்னு சொன்னேனே... அதுக்குக் கூடவா உன் மனசு இரங்கலை..." என்று அடிபட்ட குரலில் கேட்க... பாரதி ஒன்றும் பேசவில்லை.

அர்ஜுன், "இல்லை... நீ என் பழைய பாரதி இல்லை. அந்தப் பாரதியா இருந்திருந்தா... என் மேல கோபமே பட்டிருக்க மாட்டா. நீ என்ன வேணாலும் செய்துக்கோடா, நான் உன்கூடத்தான் இருப்பேன்னு ஒத்தைக் காலில் நின்னுருப்பா..." என்று கூற,

பாரதி நக்கலாக, "ஓஹ்... அப்போ நீ என்னை எவ்வளவு வேணாலும் அவமானப்படுத்துவே... நான் அடங்கிப் போகணும்... அதுதான் உன் ஆசையா?" என்று கேட்க,

அர்ஜுன், "இல்லை. நான் அப்படிச் சொல்லலை. என் பக்கத்து நியாயம் என்னவென்று கூட நீ கேட்கலையே...? இதுதான் உன் குணமா... சொல்லு!" என்று கேட்க,

பாரதி ஒன்றும் பேசவில்லை.

அர்ஜுன், "இப்போ சொல்றேன். இந்த நாலு வருசத்தில் நடந்தது எல்லாம் சொல்றேன். அதுக்கப்புறம் நீ என்ன முடிவு எடுத்தாலும் சரி..." என்று கூறியவன், "உண்மையில் சொல்லப் போனால் உன்னைச் சின்ன வயசில் எனக்கு அவ்வளவாகப் பிடிக்காது ரதி... சாரி...

பாரதி... ஏன்னா, எங்கம்மாவுக்கு உன்னை ரொம்பப் பிடிக்கும் என்ற உரிமைப் பிரச்சினையில் கூட இருக்கலாம்.

"அதுக்கப்புறம் ஆற்றில் விழுந்தது. அதுக்கப்புறம் நடந்த நிகழ்ச்சிகளால் நான் உன்னைத் தள்ளியே நிறுத்தினேன். ஆனால், ஆறு வருஷம் முன்னாடி உன்னை ஜெயில் வாசலில் பார்த்தேனே... ஏனோ தெரியவில்லை, ஒரு அமைதி என் மனசுக்குள்ளே. அதை என்னால் சொல்லக்கூட முடியலை. அதுதான் காதலா என்னன்னு தெரியலை.

"ஆனால், என் வாழ்க்கையில் என்ன மிச்சம் இருக்கு என்கிற நினைப்புத்தான் உன்னை விட்டு விலகிப் போகச் சொல்லிச்சு. அதான் தற்கொலைக்குத் தூண்ட வெச்சிச்சு. அன்னைக்கு நீ கொடுத்தியே அறை... அதுதான் என் வாழ்வில் கிடைத்த மிகப் பெரிய பரிசு. என் வாழ்க்கையையே புரட்டிப் போட்ட பரிசு. அதனால்தான் தனியா சென்னைக்கு வந்தேன்.

"அந்த டீக்கடையில் உன்னைப் பார்த்தப்போ அதே மாதிரி அமைதி இன்னொரு வாட்டி வந்துச்சு. ஒரு பாசிட்டிவ் வைப்ரேஷன் எனக்குள்ளே... அதுக்கப்புறம் இனிமே உன்னை விலக்க முடியாது, நீதான் அஸ்திவாரம்னு நினைச்சேன். ஆனால், சத்தியமா காதல் என்ற உணர்வு எனக்குள் தோணியதே இல்லை பாரதி. ஆனால், அன்னைக்கு நான் கேட்டப்போ நீ சொன்னே இல்லை... 'அப்கோர்ஸ் அர்ஜுன்... நான் உன்னைக் காதலிக்கிறேன்!' என்று. அந்த வார்த்தை பல நாள் தூக்கத்தைக் கெடுத்திருக்குடி. என்ன ஒரு தெளிவு... என்ன ஒரு திடம் அந்தப் பதிலில்!

"எந்தப் பொண்ணுகிட்டேயும் அப்படி ஒரு திடத்தை நான் பார்த்ததில்லைடி. அன்னைக்கு நான் உன்னை அடிச்சது காதலிச்சதுக்காக இல்லை... என்னைப் போல் ஒருத்தனைக் காதலிக்கிறியேன்னுதான். நீ ஒரு பொக்கிஷம்டி. அது என்னை மாதிரிப் பரதேசி கிட்ட இருக்கக் கூடாதுன்னு நினைச்சேன். அன்னையில் இருந்துதான் எனக்கு நானே கள்ளத்தனம் செய்துக்க ஆரம்பிச்சேன். மனசுக்குள்ளே கள்ளத்தனம் புகுந்துடுச்சு. என் மனசை மறைக்க உன் கிட்ட நான் கொடூரமா நடிச்சேன். ஆனால், என் மனசே என்னை நிறையச் சமயத்தில் பழி வாங்கும்.

"நீ வேண்டாம்னு உன்னை ஒதுக்கச் சொல்லும். அதே சமயம், அவதான்டா உன் சொர்க்கம், போடான்னு சொல்லும். இப்படி இரண்டுக்கும் இடையில் நான் பட்ட பாடு கொஞ்ச நஞ்சம் இல்லைடி. உன்னைப் போ போன்னு சொன்ன வாயால் வா வான்னு கூப்பிட வைக்கும். அதுதான் அந்த அவார்ட் பங்ஷன் அன்னைக்கு நடந்தது.

"சத்தியமா அன்னைக்குத்தான் நீ இல்லாமல் என்னால் ஒரு துரும்பைக்கூட அசைக்க முடியாதுன்னு தெரிஞ்சது. இதைச் சொல்லிக்க நான் வெட்கப்படலைடி. சக்தி இல்லாமல் சிவம் இல்லைங்கிற மாதிரி, இந்தப் பாரதி இல்லைன்னா இந்த அர்ஜுன் இல்லை. அதை நான் நெஞ்சை நிமிர்த்திச் சொல்லிப்பேன்," என்று கூறிவிட்டு அவளைப் பார்க்க, பாரதியோ அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அர்ஜுன், "என்ன... நம்ப முடியலையா? என்னவோ சொன்னியே அன்னைக்கு... காரில் ஏத்த மாட்டேன், உன்

கூட உட்கார்ந்து சாப்பிட மாட்டேன் என்றெல்லாம் குற்றப் பத்திரிகை வாசிச்சியே. அதெல்லாம் ஏன்னு சொல்லவா? நீ கிட்ட வந்தாலே என்னை என்னால் கட்டுப்படுத்திக்க முடியாது. நான் அதை எல்லாம் அனுமதிச்சிருந்தா என்ன நடந்திருக்கும் தெரியுமா...?" என்று கூறியவன்,

அவளை இழுத்து, அவள் இடுப்பை வளைத்து, அவள் கன்னத்தில் முத்தமிடப் போக, பாரதி, "ஏய்... விடு. ஐயோ..." என்று பதறி விலக,

அர்ஜுன், "இப்போ தெரியுதா? அது மட்டுமில்லை... என் மனசில் உனக்கு எவ்வளவு பெரிய உயரம் கொடுத்திருக்கேன்னு உனக்குத் தெரியுமா? அது, அந்தக் கடவுளுக்கு அடுத்த இடம். நீ ஒரு புண்ணிய நதி. நீ களங்கப்படக் கூடாது. என்னால் உனக்கு எந்தப் பிரச்சினையும் வரக்கூடாது. உன் மனசை எந்த விதச் சலனமும் படுத்தக் கூடாதுன்னுதான் நான் என்னையே வில்லனாகக் காட்டிக் கொண்டேன். அதுதான் தப்பாப் போச்சு...

"அப்புறம் என்ன சொன்னே? ஆபீசில் நீ அடிமையா? நீதான்டி எஜமானி. இந்தா... இந்தப் பேப்பர்ஸைப் பாரு. என் தொழில்கள் எல்லாத்திலேயும் நீதான் பார்ட்னர். வளைச்சு வளைச்சுப் படிச்சுப் பார்க்காமல் கையெழுத்துப் போட்டியே... ஒரு வாட்டி படிச்சிருந்தால் என் மனசு உனக்குப் புரிஞ்சிருக்கும். எங்கே அந்த மூளை உனக்கு இருந்தால்தானே...!" என்று அவளிடம் அத்தனை தஸ்தாவேஜுகளையும் தூக்கிப் போட்டான்.

அதையும் பார்த்துப் பின் அர்ஜுனையும் ஒரு பார்வை பார்த்த பாரதி, தலை குனிய,

அர்ஜுன், "ஆனாலும் அன்னைக்குப் போட்ட பாரு ஒரு ஆட்டம்... ஏன்டி, அந்த மினியை மறுபடியும் காதலிக்கிற அளவுக்கு நான் என்ன முட்டாளா? ஏன் இப்படிச் செஞ்சேன்னு கூட யோசிக்க முடியலை இல்லை உனக்கு. நான் மொத்தத்தில் அவளைக் காதலிக்கவே இல்லை. நீதான் பெரிய இவளாட்டம் பேசிட்டு வந்தே. ஆனால், இதுவும் நல்லதுதான்.

"நீ என்னை விட்டுப் போயிட்டேன்னு தெரிஞ்ச பின்னாடிதான் என்னால் உன்னைப் பிரிஞ்சு இருக்க முடியாது என்ற உண்மையே எனக்குத் தெரிஞ்சது. சே...! மரணக் கொடுமைடா சாமி. என் மனசில் நானே போட்டுக்கிட்டிருந்த கள்ளத்தனம் எல்லாம் மாறி, வெள்ளத்தில் அடிச்சிட்டுப் போய், நீயில்லாமல் எதுவுமே இல்லைன்னு உன்னைத் தேடி வந்த இந்த வேளையில், எனக்கு நல்லா பரிசு கொடுத்திட்டே... நன்றி... ரொம்ப நன்றி," என்றபடியே அவன் ஜன்னலோரம் சென்று நிற்க, அவன் மனதில் உணர்ச்சியலைகள் சுனாமியாக மாறிப் பேயாட்டம் போட, பாரதியின் கைபேசி மெல்லச் சிணுங்கியது.

எடுத்துப் பேசியவள், வைத்து விட்டு அர்ஜுனிடம், "மாப்பிள்ளை வீட்டில் இருந்து வந்துட்டாங்க... நான் போறேன்..." என்று கூற,

அந்த வார்த்தையில் சட்டென்று கோபத்தோடே திரும்பியவன், என்ன நினைத்தானோ, அவன் கோபம் விரக்தியாக மாறி,

"நான் இவ்வளவு சொல்லியும் உன் மனசு இரங்கலை இல்லை. சரி, போ பாரதி. உன் இஷ்டம்..." என்று கூற, அவளும் மெல்ல நடந்து கதவை நெருங்க,

இப்போது அவன் கைபேசி சிணுங்கியது. எடுத்தவன், "சொல்லுங்க ராதா..." என்று கூறவும், அவள் நடை நிற்க,

அவனோ அதைக் கண்டு கொள்ளாமல், "இட்ஸ் ஓ.கே. ராதா. உங்களை மாதிரி ஒருத்தர் பி.ஏ.வா கிடைக்க நான்தான் கொடுத்து வெச்சிருக்கணும். உங்க பயோடேட்டா என்னை மிகவும் இம்ப்ரஸ் பண்ணிடுச்சு..." எனவும், பாரதி இப்போது அவனைத் திரும்பி முறைக்க ஆரம்பிக்க, அவன் அப்போதும் அவளைப் பார்க்க வில்லை.

அர்ஜுன், "நீங்க நாளையில் இருந்து வேலையில் ஜாயின் பண்ணலாம். நோ ப்ராப்ளம்..." என்று கூறிவிட்டுப் போனை வைக்கவும், பாரதி பாய்ந்து வந்து அவன் போனைப் பிடுங்கிப் போட்டு உடைத்தாள்.

அதைப் பார்த்த அர்ஜுன், "ஏய்... பைத்தியமா உனக்கு? எதுக்குடி போனை உடைச்சே?" என்று கத்த,

பாரதி, "போனை மட்டுமில்லைடா... உன் மண்டையையும் உடைப்பேன்..." என்றபடி அவன் தலையைப் பிடித்து ஆட்ட,

அர்ஜுன், "ஆஹ்... தலை... ஏய்... தலையை விடுடி..." என்று கத்த,

பாரதி, "ஏன்டா... ஒருத்தி சண்டை போட்டு வேலையை விட்டு வந்தா, இதுதான் சாக்குன்னு

இன்னொரு பெண்ணை வேலைக்கு வைப்பியா? எவ்வளவு தைரியம் உனக்கு? நான் இருந்த இடத்தில் வேற ஒருத்தியா? எப்படி எப்படி... உன்னை இப்ம்ரஸ் பண்ணிட்டாளா அந்த மேனாமினுக்கி. பொறுக்கி... உன்னைப் போய்க் காதலிச்சேனே..." என்று கத்த,

அர்ஜுன், "ஏய் ராட்சசி... தலையை விட்டுட்டு ஒரு நிமிஷம் கேளு..." என்று கெஞ்ச,

பாரதி, "வாயை மூடு. உனக்காகக் காலையில் நாலு மணிக்கே எழுந்து அலங்காரம் செய்து, சாப்பிடாமல் பட்டினி கிடந்தா... நீ என்னடான்னா இப்படிப் பொறுக்கித் தனம் செய்துகிட்டு வந்து நிற்கிறே..."

அர்ஜுனுக்கு அந்தப் பதற்றத்திலும் அவள் கூறிய சேதி தேனாய்ச் செவிகளில் பாய,

"என்ன சொல்றே...? எனக்காகவா?" என்று கேட்க,

பாரதி அவன் தலையை விட்டு விட்டுச் சட்டையைப் பிடித்து, "ஆமா இடியட்... உனக்கும் எனக்கும்தான் நிச்சயதார்த்தம். செண்பகம் அத்தையும் யாழினியும் வந்துட்டாங்க. அதுக்குத்தான் வெளியே போனேன். அதுக்குள்ளதான் நீ வேற ஆளை செட் பண்ணிட்டியே, போ. அந்த ராதா கூடவே போய்க் கூத்தடி..." என்று ஆத்திரத்தில் கத்த,

அவளை உற்சாகத்துடன் அணைத்துக் கொண்ட அர்ஜுன், "ரதிம்மா... என் செல்லம்..." என்று சரசமாட,

பாரதி, "சே விடு... என்னை விடு... போ... அந்த ராதாவையே போய்க் கொஞ்சு. நான் இருந்த இடத்தில் வேற ஒரு பொண்ணை வைக்க உனக்கு எப்படிடா மனசு

வந்தது?” என்று கேட்கும்போதே குரல் தழுதழுத்து, இதோ அதோ என்று கண்ணீர் முத்துக்கள் விழப் பார்க்க,

அர்ஜுன், “சே பைத்தியம்...” என்று விழி நீரைத் துடைத்து, “நான் நினைச்சாக்கூட அந்த ராதாவைக் கொஞ்ச முடியாது ரதிம்மா...” என்று சிரிப்புடன் கூற,

பாரதி, ‘ஏன்?’ என்பது போல் விழியுயர்த்திப் பார்க்க, அவனோ, “ஏன்னா... அவள் ஆம்பளைடி. ராதாகிருஷ்ணன்...” என்ற கூறிவிட்டு, வயிற்றைப் பிடித்துக் கொண்டு விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பிக்க, பாரதி அசடு வழிய, “ஆம்பளையா?” என்று கேட்க,

அவள் தலையில் வலிக்காமல் குட்டி, “ஆமாடி என் மக்குப் பொண்டாட்டி... உன்னைத் தவிர எந்தப் பொண்ணையும் என் பக்கத்தில் வெச்சிக்க மாட்டேன். போதுமா?” என்று கூற, அவளுக்கு வெட்கம் பிடுங்கித் தின்ன, கதவை நோக்கி ஓடப் பார்க்க,

அவள் இடையை வளைத்துப் பிடித்து நிறுத்திய அர்ஜுன், அவளுக்கு வலிக்காமல் சுவரோடு சேர்த்துப் பொருத்தி, “என்னடி... செய்யறதை எல்லாம் செஞ்சிட்டு, இப்போ ஓடப் பார்க்கிறியா? சொல்லு... எல்லா உண்மையும் சொல்லு. இல்லை... நீ செஞ்ச ஒவ்வொரு தப்புக்கும் தண்டனைதான்...” என்றவன், அவள் காதோரமாக, “அதுவும் என் ஸ்டைலில்...” என்று கிசுகிசுக்க,

பாரதி சிணுங்கலுடன், “சீ போ அர்ஜுன். நீ என்னென்னவோ பேசுற. ரொம்பக் கெட்டுப் போயிட்டே, போ...” என்று அவனைத் தள்ளி விட, அவனோ விடாக் கண்டனாய் அவளைத் தன் கைவளைவிலேயே வைத்துக் கொள்ள,

அவனுடன் போராடித் தோற்ற பாரதி, “கண்ணா, ப்ளீஸ்... எல்லாரும் வந்துட்டாங்க. இனிமே போகலைன்னா தப்பா நினைச்சுப்பாங்க. என் செல்லம் இல்லை... ப்ளீஸ்...” என்று கெஞ்ச,

ஒரு வழியாக அவளை விட்ட அர்ஜுன், “சரி. பொழைச்சுப் போ. ஒரு நாள் என் கிட்டே மாட்டுவே. அப்போ பார்த்துக்கிறேன்...” என்றபடி கதவைத் திறக்க,

மொத்தப் பட்டாளமும் கதவிற்குப் பக்கத்திலேயே கூடாரத்தைப் போட்டிருந்தது.

ராம்தான், “சித்தப்பா... நான் சொல்லலை... ஒரு மணி நேரம் கழித்துத்தான் கதவைத் திறப்பாங்கன்னு. நான்தான் ஜெயிச்சேன். எடுங்க ஆயிரத்தை. இதுங்க ரெண்டையும் போய் டீசென்ட்ன்னு சப்போர்ட் பண்ணி இப்படித் தோத்துட்டீங்களே சித்தப்பா...” என்று குதூகலிக்க,

யாழினிதான் ராமை முறைத்தபடி, அர்ஜுனிடம், “ஏண்ணா... இப்படியா எங்க மானத்தை வாங்குவே...?” என்று போலிக் கோபத்துடன் கேட்க,

ராமோ சட்டென்று அவளைப் பார்க்க, அந்தப் பார்வையில் என்ன இருந்ததோ... யாழி தலையைக் குனிந்து கொள்ள... நல்ல வேளை அதை யாரும் பார்க்க வில்லை.

வெளியே வந்த இருவரையும் வாட்டி எடுத்த ராமின் காதுகளைப் பிடித்துத் திருகிய அர்ஜுன், “ஏன்டா... பெரிய இவனாட்டம் நேத்துப் பேசினே... இன்னைக்கு என்ன டான்னா குரங்குச் சேட்டை செய்யுறே... உன் பாசமலரை எனக்குத் தரச் சொல்லிப் பட்சி சொல்லிச்சா?” என்று கேட்க,

ராம், "என்னதான் செய்யறது... என் தங்கச்சி நீங்கதான் வேணும்னு அழுதா... அதான் கழுதையைக் கட்டிக் கொடுத்திடுவோம்னு முடிவு செய்துட்டேன்..." என்று கூற,

அவன் சித்தப்பாவும் சித்தியும் தங்கள் பங்கிற்குத் தலையில் குட்டி, "வாயை மூடுடா..." என்று அதட்ட,

ராம், "சரிப்பா... சரி. எல்லாரும் ஒண்ணு கூடிட்டீங்க... நடந்ததைச் சொல்றேன்..." என்று நேற்று காரில் நடந்ததைக் கூறத் துவங்கினான்.

"உனக்கு அர்ஜுனை ரொம்பப் பிடிக்குமா குட்டி..." என்று கேட்டவுடன் அழுத பாரதியைப் பார்த்து, அவனுக்கே வியப்புதான். எதற்கும் பாரதி உணர்ச்சி வசப்பட்டு அவன் பார்த்ததே இல்லை. எதிலும் பொறுமையாக இருப்பவள் அவள். அறிவு பூர்வமாகச் சிந்திப்பவள். அவளே உடைந்தது அவனுக்கு வியப்பாக இருந்தது.

"இப்போ எதுக்கு அழுறே குட்டி... எதுவென்றாலும் சொல்லு..." என்று கேட்க,

அவள், ஆம்... என்று தலையை மட்டும் ஆட்டிப் பின், "ஆனா உன் சம்மதம் இல்லாமல் எதுவும் நடக்காது அண்ணா... எனக்கு என் குடும்பம்தான் முதலில் முக்கியம்..." என்று கூற,

அவள் பதிலில் மென்மையாகச் சிரித்த ராம்... அவள் தலையைக் கோதி, "எனக்குத் தெரியும் குட்டி... இந்த நாலைஞ்சு நாளா நீ படுகிற பாடு எனக்குத் தெரியும். எனக்குச் சின்ன வயசில் அர்ஜுனைப் பிடிக்காதுதான்.

ஆனால் எப்போ அவர் உனக்காக என்னை அடிச்சாரோ அப்பவே என் மனசில் ஏதோ உறுத்தல்... அவர் மேல் இளக்கம்.

"இன்னைக்குத்தான் அது முழுக்க நிரூபணமாச்சு. எனக்கு வேற என்ன வேணும்? என் தங்கச்சி சந்தோஷமா இருக்கணும்... அவளை அப்படி பார்த்துக்கிற மாப்பிள்ளை வேணும். அது அர்ஜுனாகத்தான் இருக்க முடியும்னா அதை மாத்தவா முடியும்..." என்று கூற,

அவன் கூறியது புரிய... அவளுக்குச் சில வினாடிகள் பிடித்தன.

ஒருவழியாக அவளுக்கு அவன் கூறியது புரிய, "அண்ணா..." என்று கண்ணீர் மல்க அவனைக் கட்டிக் கொண்டாள். பின்னர் மகிழ்ச்சியுடன் வீட்டிற்கு வந்து சித்தப்பாவிடமும் சித்தியிடமும் விஷயத்தைக் கூறி, பின்னர் செண்பகத்திடமும் யாழினியிடமும் கூறி வரவழைத்துத் தான் எதிர்பார்த்தபடி அர்ஜுன் வந்தது... அனைத்தையும் ஒன்று விடாமல் கூறியவன்... அர்ஜுனிடம், "என்ன... இன்னும் கொஞ்ச நேரம் ஓட்டலாம்னு இந்த லூசு கிட்ட சொன்னேன். இதுதான் உளறிடுச்சு போல..." என்று பாரதியின் தலையில் தட்ட...

அவளோ, "அண்ணா, நான் ஒண்ணும் வேணும்னே சொல்லலை. அவன்தான் என்னை வெறுப்பேத்திச் சொல்ல வெச்சான்..." என்று குற்றம் சாட்ட,

அர்ஜுன், "ஆமா, நீ ஆம்பளையைப் பொம் பளைன்னு நினைச்சா... அதுக்கு நானா பொறுப்பு!" என்று அவளை வார,

யாழினி, “அடடா... போதும். போதும். இப்படி வாயாடுறதை விட்டுட்டு வேலையைப் பார்த்தா கொஞ்சம் நல்லா இருக்கும்...” என்று கூற,

அனைவரும், “ அதானே...” என்று ஆமோதிக்க...

ராமோ, மறுபடியும் அவளைப் பார்க்க... அவன் பார்வைக்கு என்ன அர்த்தம் என்று தெரியாத அவளோ, ‘ஏன்... இவன் இப்படிப் பார்க்கிறான்?’ என்ற யோசனை யுடன் விடப்பட்டாள்.

பின்னர் மஹதி பாரதியை ஓட்ட ஆரம்பித்தாள்.

“நானும் பார்த்தாலும் பார்த்தேன்... உங்களை மாதிரி லவ்வர்ஸைப் பார்க்கலைபா... ஆனா பாரி... அந்த ராத்திரி ஃபோன், த்ரில் எல்லாம் நான் ரொம்ப மிஸ் பண்ணுவேன். கல்யாணம் ஆனாலும் நீங்க அதே மாதிரிக் காதலர்களா இருக்கணும். அதுதான் என் ஆசை. என்ன அர்ஜுன்... என் தோழியை நல்லாப் பார்த்துப்பீங்க தானே...?” என்று கலங்கிய குரலில் கேட்க,

அர்ஜுன், “கண்டிப்பா...” என்று ஆமோதிக்க... பாரதி அந்த நட்பில் கரைந்து மஹதியை அணைத்துக் கொண்டாள்.

பின் அர்ஜுன், செண்பகத்திடம், “அத்தை...! அப்பா...” என்று தயங்க,

அவளோ மென்மையாக, “நீ எதுக்குக் கவலைப் படுறே அர்ஜுன்... அப்பாவைப் பார்த்துக்க நர்ஸ் வைச்சிக் கிட்டுத்தான் வந்தோம். அதான் உடனே கிளம்பப் போறோமே... உன் விஷயத்தைப் பத்தி எல்லாத்தையும்

சொன்னோம். அவருக்கு ரொம்பச் சந்தோஷம்தான். அவர் முகத்தில் இருந்தே தெரிஞ்சது..." என்று கூற,

பாரதி, "கண்ணா... அவரைப் போய்ப் பார்த்து ஆசிர்வாதம் வாங்கிக்கலாமா?" என்று கேட்க,

அர்ஜுனும் அவளை ஒரு மெச்சுதலுடன் தலையாட்டி ஆமோதிக்க...

யாழினி, "அண்ணா... இப்போவே தலையாட்டிப் பழக்கப்படுத்திக்கிற போல..." என்று குறும்புடன் கேட்க,

அர்ஜுன், "ஹே வாலு..." என்று அவளை அதட்ட அனைவரும் சிரித்தனர்.

இப்படிச் சிறு சிறு கேலிகளும், மகிழ்ச்சியும் உற்சாக முமாக அந்த நிச்சயதார்த்தம் செவ்வனே நிறை வடைய, அனைவரும் அர்ஜுனின் வீட்டிற்குச் சென்று ஹரிஹரனின் ஆசிர்வாதத்தைப் பெற, அவர்களின் அன்பைக் கண்டு நெகிழ்ந்து, அவரின் கண்களில் மகிழ்ச்சியின் சாரலாய் ஆனந்தக் கண்ணீர் பூக்க... வருங்காலத் தம்பதியர் முகத்திலும் மெல்லிய கீற்றாய்ச் சந்தோஷம் பூத்தது.

அந்தக் கள்வன் தன் காதலியைச் சிறையெடுத்தது எப்படி?

"**கெ**ட்டிமேளம்... கெட்டிமேளம்..." என்று ஐயர் கூறியதும், கெட்டிமேளம் ஒலிக்க முப்பத்து முக்கோடி தேவர்கள் சாட்சியாகக் கூடவே தன் மனச்சாட்சியையும் சாட்சியாக வைத்து, அக்னியின் முன்பு தன் வாழ்வில் அரிதாக வந்த தேவதைப் பெண்ணைத் திருமகளை... அன்று தன் மணமகளாய் ஆக்கிக் கொண்டான் அர்ஜுன்.

மஞ்சள் தங்கத்தில் தாலித் தங்கம் மினுமினுக்க... பட்டுப் புடவை சரசரக்க மிதமான அழகுடன் தேவதை போல் இருந்தவளைப் பார்க்கப் பார்க்கத் தெவிட்டவில்லை அவனுக்கு.

ஆனாலும் என்னதான் அடுத்த முகூர்த்தத்திலேயே திருமணத்தை வைத்தாலும் நிச்சயத்திலிருந்து இதுவரை அவர்களுக்குத் தனிமையே கிடைக்கவில்லைதான்.

அவளுடன் ஏதேதோ பேச வேண்டும் என்று இருந்தும் அவனால் பேச முடியவில்லை. அதற்குத் தக்க தருணம் எதிர்நோக்கியிருந்தான் அர்ஜுன்.

அப்போது மணமேடையில் ஏதோ எடுத்து வைக்க யாழினி செல்ல... அவள் புடவை கட்டியிருந்ததால் அதன் முந்தானை விளக்கின்மீது உரசி விட, அதைப் பார்த்த ராம் எங்கிருந்தோ ஓடி வந்து அவளை இழுத்து, “அறிவில்லை... கீழே பார். முந்தானையை ஒழுங்கா மடிச்சு வை. நான் மட்டும் பார்க்கலைன்னா... என்ன ஆகியிருக்கும்...” என்று கத்த ஆரம்பிக்க...

அவன் கூறியதும்தான் நிலைமையின் தீவிரமே அவளுக்குப் புரிந்தது. திக்கித் திணறி, “தேங்க்ஸ்...” என்று கூற,

ராம் எரிச்சலுடன், “உன் தேங்க்ஸைத் தூக்கிக் குப்பையில் போடு. மனுஷனை நிம்மதியா இருக்க விடுறியா?” என்று புலம்பியபடியே சென்றவன் திட்டினாலும்... ஏனோ அவன் கடுமை கூட அவளுக்கு இனித்தது. தன்னை மறந்து அவனையே பார்த்துக் கொண்டிருந்தவள் பின்னர் தலையில் தட்டிக் கொண்டு, தன் வேலையைப் பார்க்க ஆரம்பிக்க... அந்தக்

காட்சியைப் பார்த்த மணமக்கள் தங்கள் மனத்தில் குறித்துக் கொண்டனர்.

பின்னர் அலுவலகத்திலிருந்து ஒவ்வொருவராய் வர, அர்ஜுனும் பாரதியும் அவர்கள் கேள்விக்குப் பதில் கூற முடியாமல் திணறிப் போயினர்.

ரவி, "எனக்கு அப்பவே தெரியும். இவங்களுக்குள் ஏதோ ஒரு கெமிஸ்ட்ரி இருக்குன்னு... ஹாஹா..." என்று சிரிக்க,

வத்சலா, "இப்படி ஏமாத்திட்டியே பாரதி... எவ்ளோ பெரிய பொண்ணு... கொஞ்சம் கூடப் பிகு பண்ணாமல் எங்க கூடச் சகஜமாப் பழகினது பெரிய விஷயம். எவ்வளவு பெரிய உதவி செய்திருக்கே..." என்று புகழாரம் சூட்ட... இப்படி அனைவரும் தங்கள் பங்கிற்கு அவர்களை வார, மணமக்கள் திணறிப் போக... நந்தினியோ, தன் பங்கிற்கு, "சார்... இதுக்கு அவங்களை பி.ஏ. என்று கூப்பிட்டா கோச்சிக்கிட்டீங்களா?" என்று கேட்க,

அர்ஜுன் சிரிப்புடன், "அதுக்கு ஒண்ணும் கோவிக்கலை. உங்க பாரதி பி.ஏ.க்கு கொடுத்த விளக்கம் அப்படி..." என்று கண்ணைச் சிமிட்ட,

பாரதி, "கண்ணா... ப்ளீஸ் சொல்லாதே..." என்று கெஞ்ச....

நந்தினியும் மற்றவர்களும், "இல்லை. சொல்லித் தான் ஆகணும்..." என்று அடம் பிடிக்க,

அர்ஜுன், "சரி பி.ஏ. என்றால் என்ன அர்த்தம்?" என்று கேட்க,

நந்தினி, "பெர்சனல் அசிஸ்டென்ட்..." என்று கூற,

அர்ஜுன், "கரெக்ட். ஆனா இவளுக்கு என்ன அர்த்தம் தெரியுமா?" என்று கேட்க,

அனைவரும் "என்ன... என்ன...?" என்று கேட்க,

பாரதியோ நடுவில் புகுந்து, "நீ என்ன சொல்றது நானே சொல்றேன். பிரியமான ஆத்துக்காரி (பி.ஏ.). வத்சலா மாமி ஒரு நாள் நீங்க உங்க ஐயர் பாஷை கத்துக் கொடுத்தேளே... ஞாபகம் இருக்கா? அதிலிருந்து வந்ததுதான்..." என்று கண்ணடித்துக் கூற,

வத்சலா, "அடி பொண்ணே... சமத்துதான் போ..." என்று அசந்து போக... அனைவரும் சிரித்து மகிழ்ந்தனர்.

வரிசையாக மாணிக்கம் தாத்தா, பொற்கொடி ஆகியவர்களும் வந்து தங்கள் வாழ்த்தைத் தெரிவிக்க... அர்ஜுனும் பாரதியும் நெகிழ்ந்தனர்.

மாணிக்கம் தாத்தா, "எங்க ரெண்டு பேரால விலை யுயர்ந்த பொருள் எல்லாம் வாங்கிட்டு வர முடியலைம்மா... முடிஞ்சது இந்த நூத்தியொரு ரூபாய் மொய்தான்..." என்று தர,

அதை வாங்க மறுத்த பாரதி, "இந்தப் பணத்தைவிட உங்க ஆசிர்வாதம்தான் பெரிசு... உங்க ரெண்டு பேர் மனசை விடப் பரிசு இந்த உலகத்திலேயே கிடையாது. போங்க. போய்ச் சாப்பிடுங்க. கண்டிப்பா சாப்பிட்டுத்தான் போகணும்..." என்று அனுப்பி வைக்க...

அர்ஜுன் அவளைப் பெருமிதத்தோடு பார்க்க... பாரதி குறும்பாக, "இதெல்லாம் தனியா இருக்கும்போது பார்க்காதே... இப்படிக் கூட்டத்தில் பார்த்து என் மானத்தை வாங்கு..." என்று அலுத்துக் கொள்ள, அர்ஜுன்

கிசுகிசுப்பாக... "இருடி. உனக்கு இருக்கு. இன்னைக்கு என்கிட்ட..." என்று பயமுறுத்த ஆரம்பித்து, மயக்கத்தில் முடிக்க... அவனைப் பார்த்துக் கலகலவெனப் பாரதி சிரிக்க... அதைப் பார்த்துப் பெரியவர்களான திரு, கஸ்தூரி, செண்பகம் மூவரும் மனம் நெகிழ்ந்தனர்.

"என்ன கஸ்தூரி... ஷர்மிளா கிட்ட இன்னும் இந்த விஷயத்தை எல்லாம் சொல்லவில்லையா? பாரதி கேட்டுக்கிட்டே இருந்தாளே?" என்று கேட்க,

கஸ்தூரி, "நான் சொன்னேன் அண்ணி... ஆனால் இவர்தான் வேண்டாம்னுட்டார். எவ்வளவோ சொல்லிப் பார்த்தாச்சு. அவள் பரிட்சை முடிஞ்சுதான் இந்த விஷயத்தைச் சொல்லணுமாம்..." என்று திருவைக் கைகாட்ட....

அவரோ சிரித்தபடி, "எப்போ பார்த்தாலும் என்னைக் கைகாட்டிடுவியே..." என்று குறும்புடன் கூறிவிட்டு, பின் செண்பகத்திடம், "இல்லை செண்பகம்... அவளுக்கு இது முதன் முதலாக எழுதப் போற பெரிய பரிட்சை. டென்த்... அதான் அவளுக்கு மனசளவில் எந்தக் குழப்பமும் வரக்கூடாது. இப்போ என்ன ஆத்துநீரை வெள்ளமா அடிச்சிடப் போகுது. எப்படி இருந்தாலும் அவள் என் மகள். அதை இப்போ சொன்னா என்ன... அப்புறம் சொன்னா என்ன?" என்று பெருந்தன்மையாகக் கூற,

செண்பகம், "ம்ஹும்... நீ சொல்றதும் சரிதான். ஆனால் அதை அவ எப்படி எடுத்துப்பாளோ தெரியலையே?" என்று வினவ,

கஸ்தூரி, "நீங்க ஒண்ணும் கவலைப்படாதீங்க, அண்ணி... அவ குணத்தில் எல்லாம் அப்படியே அவங்க

அப்பா மாதிரிதான். எல்லா விஷயமும் சின்ன வயசிலேயே கொஞ்சம் சொல்லிட்டேன். அதாவது இவருக்கும் எனக்கும் கொஞ்சம் மனஸ்தாபம். அதான் பிரிஞ்சு இருக்கோம் என்று. அதிலிருந்து அவள் அதைப் பத்திப் பேசியதே இல்லை. இப்போ உண்மை எல்லாம் சொன்னால் கண்டிப்பா புரிஞ்சிப்பா..." என்று கூற,

செண்பகம் ஆறுதலாக, "உங்களை மாதிரிக் குடும்பம் கொடுத்து வைச்சாலும் கிடைக்காதும்மா. குணமான புருசன், அன்பைத் தவிர எதையும் காட்டாத பொண்டாட்டி... இப்போ அறிவான பொண்ணு!. கண்ணு பட்டுடப் போகுது... சுத்திப் போட்டுக்கோ..." என்று கூற,

திருவும் கஸ்தூரியும் ஆதுரத்துடனும் காதலுடனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

**தி**ருமணம் முடிந்து மூன்று பேரையும் ஒன்றாக நிற்க வைத்து, ஆசிர்வாதம் வாங்கிய மணமக்கள் பின்னர் வீட்டிற்குச் சென்றதும் வாயிலையே ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்த ஹரிஹரனிடம் ஆசிர்வாதம் வாங்க... அவர், "ந... நல்லா இருக்கணும்..." என்று மனம் நிறைய வாழ்த்த... பின் பூஜை அறைக்குச் சென்று விளக்கேற்றி, ஷர்மிளா, மேகநாதன், வேதா மூன்று பேர் படத்தின் முன் விழுந்து கும்பிட்டு மனதார, "நீங்க மூணு பேரும் மனிதர்களாய் இருந்து எங்களுக்குப் பெரிய உதவி செய்திருக்கீங்க. அதே போல் தெய்வமாகவும் நின்று எங்க ரெண்டு பேரையும் சுத்தி இருக்கிறவங்களையும் நல்லாப் பார்த்துக்கோங்க. நான் இந்தக் குடும்பத்தில் உள்ளவங்க சந்தோஷத்தைக் கெடுக்காமல் நடந்துக்க... தக்க அறிவுரையை நீங்கதான் சொல்லி வழி நடத்தணும். அதுக்கு உங்க உதவி கண்டிப்பா தேவை..." என்று

மானசீகமாக மனமுருகி வேண்ட, அதற்கு ஆமோதிப்பாய் வேதாவின் படத்தில் இருந்த பூ கீழே விழ... அனைவரின் முகத்திலும் சந்தோஷத்தின் கீற்று.

இப்படியாக அனைத்துச் சடங்குகளும் முடிய, இரவில் தங்களுக்கே உரித்தான முதலிரவு அறையில் இத்தனை நாளாய் எதிர்பார்த்த தனிமை அவனுக்குக் கிடைக்க...

பாரதியை லாவகமாகத் தன் கை வளைவுக்குள் கொண்டு வந்து படுக்கையில் விழுந்த அர்ஜுன், அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருக்க...

பாரதிக்கு அவன் பார்வையில் கூச்சம் எடுத்தாலும், சுதாரித்துக் கொண்டு, "ஏய்... என்ன அப்படி பார்க்கிறே?" என்று சிணுங்க,

அர்ஜுன், "இன்னும் நீ எனக்கே சொந்தம் என்று என்னால் நம்ப முடியலைடி... நிஜமாவே நம்மளுக்குக் கல்யாணம் நடந்ததா?" என்று கேட்க,

பாரதி, "அடப் பாவி. திரும்பவும் உனக்காக எல்லாம் கல்யாணம் செய்ய முடியாது..." என்று குறும்புடன் கூற,

அர்ஜுனின் முகம் தீவிரத்திற்கு மாறி, "ஏன்டி என்னைக் காதலிச்சே... எனக்காக உன் குடும்பத்தையே பகைச்சிக்கிட்டே... அப்படி நான் உனக்கு என்ன செய்தேன்... நான் உன் முன்னால் ஒண்ணுமே இல்லைடி..." என்று தழுதழுக்க...

பாரதி பதறி, "என்ன அர்ஜுன்... இதுக்குப் போய்... நீ மட்டுமில்லை, அர்ஜுன்.... நிறையப் பேர் என்கிட்ட கேட்டிருக்காங்க... அதுக்கெல்லாம் எனக்கு ஒரே

பதில்தான்... என்னைத் தவிர உன்னை யாரும் நல்லாப் பார்த்துக்க முடியாது அர்ஜுன்... உன்னை முதன் முதலில் டெல்லியில் பார்த்தப்போ எனக்கு அதுதான் தோணிச்சு..." என்று கூற,

அர்ஜுன் அவள் பதிலில் நெகிழ்ந்து, "ஆனாலும் கண்ணம்மா... என்னால் முடியலைடி. உன்னை நான் எவ்ளோ கஷ்டப்படுத்தியிருக்கேன். அதை எல்லாம் நினைச்சா எனக்கே ஆற மாட்டேங்குது. நீ எப்படித் தாங்கினே?" என்று வினவ,

பாரதி தன் அக்மார்க் புன்னகையுடன், "கண்ணா, நீ என்னதான் என்னைக் கஷ்டப்படுத்தினாலும் என் மேல் இருந்த உரிமையால் வந்தது என்றுதான் நினைப்பேன். எனக்கென்னவோ அது கஷ்டமாவே தோணாது. ஆனால் என் மனதை உறுத்திய ஒரே ஒரு விஷயம் நீ தண்ணியடிக்கிறதுதான். ப்ளீஸ், அதை மட்டும் கொஞ்சம் நிறுத்திடேன்..." என்று கண்களால் கெஞ்ச,

தன் காதல் மனைவி தன் வாழ்வில் கிடைத்தற்கரிய தேவதை கேட்ட ஒரே ஒரு வேண்டுகோளை அவன் மீறுவானா என்ன... அந்தக் காதலனோ சிரிப்புடன், "நீ இப்போதானே கேட்குற... நான் நீ எப்போ ஆபீஸ் விட்டு வந்தியோ, அப்போதிலிருந்தே குடிக்கிறதில்லை. நான் குடிச்சதே நீ எனக்கு வேணுமா வேண்டாமாங்கிற குழப்பத்தில்தான். நீ என்னை விட்டுப் போன பிறகு நீதான் வேணும்னு ஆணித்தரமா தோணிடுச்சு. அப்புறம் ஏன் குடிக்கணும்... நான் இனிமே அதைத் தொட மாட்டேன் கண்ணம்மா..." என்று மையலுடன் கூற, அவனைக் கட்டிக் கொண்ட அவன் ரதி, "இதை விட வேறு என்ன

வேணும் அர்ஜுன் எனக்கு! நான் உனக்காகச் செய் ததை விட நீ எனக்காகச் செய்ததுதான் அதிகம். எனக்காகத்தானே உன் அப்பாவை ஏத்துக்கிட்டே. நான் சொன்னதனால்தானே... அப்புறம் கஸ்தூரிம்மாவை திரு சித்தப்பாவோடு சேர்த்து வைச்சே... இது போதும், அர்ஜுன். இன்னைக்கே செத்துட்டாகூடத் தேவலை..." என்று கண்ணீர் விட... அதிர்ந்து போய் அவள் வாயைப் பொத்திய அர்ஜுன், "வேண்டாம் ரதி... இன்னொரு தடவை அந்த வார்த்தையைச் சொல்லாதே. நீ எனக்கு எப்பவும் வேணும். அப்பாவை நீ காட்டலைன்னா நான் எவ்ளோ பெரிய பாவத்துக்கு ஆளாகி யிருப்பேன். இந்த நிலைமை யில் அவரைத் தண்டிச்சு என்னாகப் போகுது. அதனால் தான் ரதிம்மா... நம் திருமணத்தைச் சீக்கிரம் வைக்கச் சொன்னேன்..." என்று கூற,

பாரதி, "ஆமா கண்ணா. இப்போ அவருக்குத் தேவை நிம்மதியான இறப்புதான். அவர் முகத்தில் நான் இன்னைக்குத்தான் சந்தோஷத்தைப் பார்த்தேன். வேதாம்மா, அம்மா, அப்பா எல்லாரும் சந்தோஷப் பட்டிருப்பாங்க இல்லை..." என்று கூற, அதைத் தலை யாட்டி ஆமோதித்தவன்,

சட்டென்று முகம் சுணங்க, "ஆனாலும் நீ உன் அண்ணன் சொல்லே வேதம் என்று சீன் போட்ட பாரு... அதை நினைச்சு நினைச்சு எனக்கு ஆற மாட்டேங்குது. அந்தப் பய என்ன ஆட்டம் ஆடினான்... இருக்கு அவனுக்கு... நான் யாருன்னு காமிக்கிறேன்..." என்று பொய்க் கோபத்துடன் கூற,

அவன் கேசத்தைச் சிரிப்புடன் கோதிய பாரதி, "ஹப்பா... என்ன கோபம்! கோபத்தாலதான் ஆ ஊன்னா

மச்சான் மச்சான்னு கட்டிப்பிடிச்சிட்டியா?" என்று கேட்க, அவன் அசடு வழிய....

பாரதி, "அவன் என்னை உயிராப் பார்த்துக்கிட்டான் கண்ணா... என்ன நான்... அவன்கிட்ட பொய் சொன்னதுதான் தப்பு. அதனால்தான் என்னால் அவனை எதிர்க்க முடியலை. சாரி அர்ஜுன். உன்னை ரொம்பப் படுத்திட்டேனா?" என்று கேட்க,

அர்ஜுனோ கலகலவெனச் சிரித்து, "சே... சே... அதெல்லாம் இல்லை குட்டி. என் மச்சான அதுக் கெல்லாம் சேர்த்து வைச்சு என்கிட்ட வாங்கப் போறான் பாரு... எனக்கும் தங்கச்சி இருக்கா... பய அவகிட்ட கவுந்துட்டான்.... பொண்ணு கேட்பான் இல்லை... அப்போ பாரு..." என்று கூறிவிட்டுச் சிரிக்க,

பாரதியும் கண்களில் பிரகாசத்துடன், "ஆமா அர்ஜுன்... நான் கூடப் பார்த்தேன். ஹப்பா... என்ன அக்கறை... என்ன அக்கறை... விளக்கில் பட இருந்த அவ முந்தானையை எடுத்ததும் இல்லாமல் ஒன்றரை பக்கத்துக்கு டயலாக் பேசுறான். எனக்கு ஒரு நியாயம்... அவனுக்கு ஒரு நியாயமா? இந்த வாட்டி நான் உன் கட்சி அர்ஜுன். அவனை ஒரு வழி செய்துட்டுத்தான் யாழினியைக் கட்டி வைக்கணும்..." என்று கூறி விட்டு, அவன் மார்பில் சாய... அந்தக் கள்வனோ அவளின் கணவன் செயல்களில் ஈடுபட,

பாரதி, "டேய் பொறுக்கி... சும்மா இரு. கொஞ்சம் கையை வைச்சிக்கிட்டு..." என்று அதட்ட,

அவள் பதிலில் நல்ல பிள்ளையாக மாறிய அவன், "என்னென்னவோ கேட்கணும்னு நினைச்சேன். எல்லாம்

மறந்திருச்சுடி..." என்று பாவமாகக் கூற, அவன் பாவனையில் சிரித்த அவள்,

"இது பேசுற நேரமாடா, தத்தி தத்தி... எனக்குன்னு வந்து சேர்ந்தியே..." என்று அலுத்துக் கொள்ள,

அர்ஜுனோ சிலிர்த்து, "ஏய், என்னடி சொன்னே... இப்போ பாரு... ஐயாவோட சேட்டையை... பதினைஞ்சு நாள் என்கூட ஃபோனில் கூடப் பேசலை இல்லை... அதுக்கு இருக்கு உனக்குத் தண்டனை..." என்று அவளை இறுக்கமாக அணைக்க...

பாரதி, "ஆமா... நாலு வருசம் ஒரே ஆபீசில் எலியும் பூனையுமா இருப்பாராம். பதினைஞ்சு நாளுக்கு ஓவரா சீன் போடுறார்... ஐயோ கடவுளே!" என்று அவனை வார,

அர்ஜுன், "அடிப்பாவி. பாவம் மாதிரி இருந்துட்டு இந்தப் போடு போடுறே... சரியான கள்ளிடி நீ..." என்று அவள் கன்னத்தைக் கிள்ள,

பாரதி, "நான் கள்ளி இல்லை. நீதான் கள்வன். மனசுக்குள் கள்ளத்தனம் வைச்சிக்கிட்டு இருந்தே..." என்று சிணுங்க,

அவனோ, "சரி... அப்போ நீ இந்தக் கள்வனின் காதலி. சரியா ரதி?" என்று சரசத்துடன் கேட்க,

பாரதி, "சீ... அதென்ன ரதி... எல்லாரும் கிண்டல் பண்றாங்க கண்ணா...!" என்று அவன் நெஞ்சில் புதைந்தாள்.

அர்ஜுன், "ஆமா, நீ பாரதி... நான் உனக்குக் கண்ணன். அப்படின்னா நீ எனக்குக் கண்ணம்மா..." என்று ரசிப்புடன் கூற,

அந்தக் காதலில் கரைந்து அவனுடன் ஒன்றிய பாரதியை அணைத்துக் கொண்ட அர்ஜுன், "உனக்கு ஒரு முத்தம் கூட நான் கொடுத்ததில்லை. எல்லாமே ஸ்பெஷலா இருக்கணும். அதுதான் இவ்வளவு நாள் பொறுத்திருந்தேன். என் முதல் முத்தம் எங்கே தெரியுமா?" என்று கேட்க,

அவளோ, எங்கே என்றுகூட கேட்க முடியாத அளவிற்கு நாணம் என்னும் கடலில் கரைந்து கொண் டிருக்க... அந்தக் கள்வனோ அவள் முகத்தை நிமிர்த்தி, அவள் மதி வதனத்தை ரசித்து, அவள் நாணச்சிவப்பைத் தரிசித்து, "எனக்கு உன் ஓயாமல் பேசுற வாயை அப்படியே கடிச்சா எப்படி இருக்கும்னு தீராத ஆசை. அதனால் அதுக்குத்தான் என் ஸ்பெஷல் முத்தம்..." என்றபடி, தன் காதலியின் இதழமுதத்தைச் சுவைக்க ஆரம்பிக்க... அந்த ஸ்பரிசத்தில் அவள் தன்னையே மறந்து, அவனுள் தொலைந்து போக... அந்தக் கள்வன் தன் காதலியோடு கலந்தது போல்... வானில் இருந்து வீழ்ந்த மழைத் துளி ஒன்று மண்ணோடு கலக்க ஆரம் பித்தது.

**மூ**ன்று வருடங்களுக்குப் பிறகு...

"வேதா... வேதா... நிற்கப் போறியா இல்லையா?" என்று பாரதி, தன் பட்டுப் புடவையை இழுத்துச் செருகிக் கொண்டு துரத்த... அவளின் கைகளுக்குத் தட்டுப்படாமல் தத்தித் தத்தி நடை போட்டபடி விடாக்கண்டனாக ஓடினான். இரண்டு வயது வேதாந்த். ஆம் பாரதி, அர்ஜுனின் ஒரே மகன். செல்ல வாண்டு. குண்டுக் கன்னங்களும், அகல விழிகளும் துறுதுறுப்பும் தன் தாயை நினைவுபடுத்த...

அவள் பெயரையே வைத்திருந்தார்கள் அர்ஜுனும் பாரதியும்.

அவள் துரத்தியதை ஓரக் கண்ணால் ரசித்தவாறே தினசரியில் தலையைப் புதைத்துக் கொண்டு சிரித்துக் கொண்டிருந்த தந்தையிடம் ஓடி வந்து, “ப்பா... தூக்கு...” என்றான் வேதாந்த்.

அவனின் கட்டளையைச் சிரமேற்கொண்டு பணிந்து அவனைத் தூக்கிக் கொண்டு கன்னத்தில் முத்தமிட்ட அர்ஜுன், தன் மனைவியைப் பார்த்து, “ஏன்டி, இப்படி அவனை விரட்டுறே! காலங்கார்த்தாலே உனக்கு வேற வேலை இல்லையா?” என்று தன் மகனுக்கு ஆதரவளிக்க... அவனும் பெரிய மனிதன் போல் தன் தாயை முறைக்க...

பாரதி, “ஆமா... ஏன் சொல்ல மாட்டேன்... இன்னும் இரண்டு மணி நேரத்தில் கிளம்பணும். நான்தான் ரெடி யாகியிருக்கேன்... நீங்க ரெண்டு பேரும் புடிச்சு வைச்ச பிள்ளையாராட்டம் உட்கார்ந்திருக்கீங்க... நீ எப்படியாவது போ. என் பையனைக் கொடு. நான் கிளம்பணும்...” என்று வேதாந்தை வாங்கிக் கொள்ள முயல,

அவனை லாவகமாக இழுத்துக் கொண்ட அர்ஜுன், “முதலில் குழந்தைக்கு அப்பனைக் கிளப்பி விடுடி. அப்புறம் பிள்ளையைக் கிளப்பலாம்...” என்று கண்களில் குறும்புடன் கூற,

இந்த மூன்று வருடத்தில் அவன் பார்வையின் அர்த்தத்தை அக்குவேறு ஆணிவேறாக உணர்ந்தவள் ஆதலால், “நோ அர்ஜுன். நோ... அப்படிப் பார்க்காதே.

வர வர உன் தொல்லை கட்டுக்கடங்காமல் போச்சு. வேதா, அம்மாகிட்ட வாடா செல்லம்... குட்டி... சமத்து கண்ணா நீ..." என்று கொஞ்ச,

தாயின் கொஞ்சலில் மயங்கிய அந்த வாண்டு தன் தந்தையுடன் நம்பிக்கையில்லாத் தீர்மானம் போட்டுக் கொண்டு, தன் தாயிடம் கூட்டணி அமைத்து, "ம்மா... தூக்கு... ப்பா... விது..." என்று கட்சி விட்டுக் கட்சி தாவ... அவன் செய்கையில் அர்ஜுன் சிரித்தபடி, "பிள்ளையை முதல் கொண்டு மயக்கி வைச்சிருக்கேடி. நீ யாரு, என் ரதியாச்சே..." என்று அவளை இழுக்க,

பாரதி திகைத்து, "அர்ஜுன், செண்பகம் சித்தி இருக்காங்க. வெளியே வந்தாங்கன்னா மானம் போயிடும். ஒழுங்கா வந்து குளிடா கண்ணா... ப்ளீஸ்!" என்று அவனையும் கெஞ்ச...

அதற்கு மேல் கரையாமல் இருப்பதற்கு அவன் என்ன ரிஷ்யசிருங்கரா! எனவே, தன் மனைவியின் சொல் பேச்சைக் கேட்டபடி குளித்து விட்டுக் கிளம்ப... பாரதியும் வேதாந்தைக் கிளப்பிக் கொண்டிருந்தாள்.

அப்போது...

"அக்கா... வேதா குட்டி..." என்று கீழே கூச்சல் ஆரம்பிக்க...

பாரதி பதறிப் போய்த் திரும்ப, அர்ஜுன் சிரிப்புடன்... "வந்துட்டா உன் அருமைத் தங்கச்சி. என்னடா இன்னும் தொல்லையைக் காணோமேன்னு பார்த்தேன்..." என்று கேலி செய்ய,

பாரதி அவனை முறைத்து, “ஹலோ... என்ன கிண்டலா... என் தங்கச்சி என்னைப் பார்க்க வந்தா உனக்கு என்ன?” என்று அதட்ட,

அர்ஜுன் பயந்தது போல் நடித்து, “அய்யோ... நான் ஒண்ணும் சொல்லலைம்மா. சும்மாவே என்னை வாருவா... இதில் நீ வேற போய் ஏதாவது சொல்லிக் கொடுத்து... அப்புறம் அவளுக்கு ஐஸ்கிரீம், சாக்லேட் எல்லாம் வாங்கிக் கொடுத்தே என் சொத்து அழிஞ்சிடும்...” என்று கூற,

பாரதி அவன் தலையில் கொட்டி, “ஏய்... நீ ரொம்ப பேசுறேடா... இரு, உனக்கு இருக்கு...” என்று கூறும்போதே,

மறுபடியும், “அக்காஆஆஆ...” என்று குரல் கேட்க,

பாரதி, “இதோ வர்றேன்டா...” என்றபடி, தன் மகனையும் தூக்கிக் கொண்டு கீழே போக... அவளை இதழ் விரிந்த சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான் அர்ஜுன்.

“உன்னால் மட்டும் எப்படி கண்ணம்மா... எல்லாரையும் விரும்ப வைக்க முடியுது. உன்கிட்ட ஏதோ இருக்குடி...” என்றபடி பழைய நினைவுகளை அசை போட்டான்.

இவ்வளவு நேரம் அவர்கள் பேசிக் கொண்டிருந்தது ஷர்மிளாவைப் பத்தித்தான்.

மூன்று வருடங்களுக்கு முன் பரிட்சை முடிந்து வீட்டிற்கு வந்த ஷர்மிளாவிடம் விஷயம் எல்லாவற்றையும் கூற, அவளோ அதிர்ச்சியில் சிலையாகிப் போனாள்.

அவள் இவ்வளவு நாள் தன் தந்தையைப் பற்றி நினைக்காத நாளே இல்லைதான். என்னவோ மனஸ் தாபம்... அதனால்தான் பிரிந்திருக்கிறார்கள் என்று அவள் நினைத்திருக்க... செய்யாத குற்றத்திற்காகத் தன் அன்னை தண்டிக்கப்பட்டிருப்பதை எண்ணி அதிர்ந்த அவள், திருவிடம், "நீங்க இப்போ எதுக்கு வந்தீங்க? எங்க அம்மாவை இன்னும் நோகடிக்கவா? எப்படி உங்களால் அம்மாவைத் தண்டிக்க முடிஞ்சது? இதுநாள்வரை நீங்க வரலையேன்னு ஏக்கமா இருந்தது. ஆனால் இப்போ எனக்கு ஆத்திரமா இருக்கு... ஏன் இப்படி? இவ்வளவு நாள் எவ்வளவு கஷ்டம்... எவ்வளவு அவமானம்... நான் உங்களால் பட்டிருப்பேன். அதுக்கெல்லாம் என்ன சொல்லப் போறீங்க?' ' என்று கத்தியபடி ஒரு கட்டத்தில் ஆத்திரம், அழுகையாக மாறி... அழுகை இயலாமையாக மாறி, அவர் சட்டையைப் பிடிக்க...

அவளின் செய்கைக்கு நேர்மாறாக அப்படியே அணைத்துக் கொண்ட திரு, "என்னை மன்னிச்சிடுடா. என்னை என்ன வேணாலும் திட்டு. அடி... ஆனால் என்னை வெறுத்துடாதேடா... என்னை மன்னிச்சிடு. நான் என்ன செய்யணும்னு சொல்லு. நான் செய்றேன்..." என்று வேண்டியபடி கண்ணீர் விட, அங்கு நின்றிருந்த அனைவரின் கண்களிலும் கண்ணீர் மழை பொழிய... அங்கே வாய் மூடி மௌனிக்க... உணர்ச்சிகள் மட்டும் குதியாட்டம் போட்டன.

அவரின் அணைத்திருந்த கைகளை விடுவித்த ஷர்மி, "எனக்கு நீங்க வேண்டாம். எனக்கு உங்களைப்

பிடிக்கலை. எங்கம்மாவையும் தண்டிச்சு, என்னையும் தண்டிச்ச நீங்க எனக்கு வேண்டாம்..." என்று கத்த, அனைவரும் அதிர்ந்தனர்.

கஸ்தூரி அதற்கு மேல் தாங்க முடியாமல், "ஏய், என்னடி ரொம்பத்தான் ஆடுறே... அவர்தான் மன்னிப்புக் கேட்கிறாரே...! அப்புறம் என்ன உனக்கு இறுமாப்பு?" என்று அதட்ட,

ஷர்மி, "அம்மா, நீ வேணும்னா அவரை மன்னிக்கலாம். என்னால் ஏத்துக்க முடியாது. ஏன்னா நீ வெளியுலகத்தையே பார்க்காமல் வீட்டிலேயே இருந்துட்ட... ஆனால் நான் இவரால் பட்ட கஷ்டம் கொஞ்ச நஞ்சமில்லை..." என்று ஆத்திரத்துடன் கூற,

திரு, கஸ்தூரியிடம், "கஸ்தூரி, நீ அமைதியா இரு. நான் அவ அப்பா. அவளுக்கு என்னைத் திட்ட எல்லா உரிமையும் இருக்கு. அவளை அதட்டாதே. ஷர்மி, இப்போ நான் என்ன செஞ்சா உன் கோபம் போகும், சொல்லு... அதைச் செய்யறேன்..." என்று கூறிவிட்டு அவளையே பார்க்க...

அவர் பார்வை அவளுள் ஏதோ இளக்கினாலும் அதை இறுக்கி, "ஓஹ்... இப்படி நீங்க பேசினால் நான் எல்லாத்தையும் மறந்துடுவேனா...? பிறந்ததிலிருந்து அப்பான்னு ஒருத்தரை யாருக்கும் காட்ட முடியாமல் கூனிக் குறுகி நின்றேனே... அந்த அப்பாவை எனக்கே எனக்கா தர முடியுமா, உங்களால? இவ்வளவு நாள் நான் இருக்கேனா, இல்லையான்னு கூடத் தெரியாமல் யாரோ இரண்டு பேருக்கு உங்க பாசத்தைக் கொடுத்திட்டு

இருந்தீங்க. அந்தப் பாசம், நான் இழந்த நேசம்... அதைத் தர முடியுமா உங்களால... சொல்லுங்க. அதைத் தர முடியுமா, உங்களால?" என்று கூறிவிட்டு, அதற்கு மேல் தாங்க முடியாமல் அப்படியே அமர்ந்து அழ ஆரம்பிக்க... அந்தப் பதினாறு வயது அறியாப்பேதை கேட்கும் சாட்டையடி போன்ற கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியாமல் திரு, கஸ்தூரி, செண்பகம், ராம், யாழினி, ஏன்... அர்ஜுனே ஸ்தம்பித்துப் போக, ஒருவர் மட்டும் அசரவில்லை.

அதுதான் பாரதி. அவள் அருகில் வந்தவள், மென்மையாக அவள் தலையைக் கோத, ஷர்மியோ அதை வெடுக்கெனத் தட்டிவிட... அதைக் கண்டு சிரித்த பாரதி, "நீ என்ன செஞ்சாலும் உன் மேல் என்னால் கோபப்பட முடியாதுடா. ஏன்னா உனக்கு இருக்கிறது எங்கம்மா பேர். உன்னை நான் என் அம்மாவாத்தான் பார்க்கிறேன். உனக்கென்ன, இவ்வளவு நாள் நீ இழந்த பாசம் வேணும். உன் அப்பா உனக்கே சொந்தமா இருக்கணும். அவ்வளவுதானே! அது கண்டிப்பா உனக்குக் கிடைக்கும். அவரோட பாசம் மட்டுமில்லை. இந்தக் குடும்பத்தைப் பாரு... என்னைப் பார், உங்க அண்ணன் ராமைப் பார். எங்க ரெண்டு பேர் பாசமும் இரட்டிப்பா உனக்குக் கிடைக்கும். எங்கம்மா கேட்டு எங்களால் மறுக்கமுடியுமா? எடுத்துக்கோ. எங்களை இத்தனை நாள்வரை உயிராப் பார்த்துக்கிட்ட எங்க சித்தப்பா... சீச்சீ... அப்பாவை எடுத்துக்கோ. நான் வேணாங்கலை. கூடவே எங்களையும் ஏத்துக்கோ. அதைத்தான் வேண்டுறேன்..." என்று தன் புன்னகை மாறாமல் கூற,

அங்கிருந்த அனைவரும் நெகிழ... அந்த வரத்தைத் தரப் பெற்றவளோ கூனிக் குறுகிப் போனாள். தான்... தன் தந்தையை அவர்களிடம் இருந்து சுயநலத்துடன் பெறப் பார்க்க, இவளோ உன் தந்தையை மட்டுமல்ல.... எங்களையும் எங்கள் பாசத்தையும் எடுத்துக் கொள் என்று கூறுகிறாளே... என்று நினைக்க... அவளுக்குத் தன்னை நினைத்தே அருவருப்பாக இருந்தது. தன் மனத்தில் அதுவரை இருந்த கோபம், துவேஷம் அனைத்தும் அழிந்து போக...

அவளைக் கட்டிக் கொண்ட ஷர்மி, "என்னை மன்னிச்சிடுங்க அக்கா. நான் ரொம்பக் கீழ்த்தரமா நடந்துகிட்டேன். ஏதோ லூசு மாதிரி பேசிட்டேன். உங்க பெருந்தன்மைக்கு முன்னால் நான் எதுவுமே இல்லைக்கா... என்னை மன்னிச்சிடுங்க..." என்று தேம்பித் தேம்பி அழ, அவளை ஆதுரத்துடன் அணைத்துக் கொண்ட பாரதி,

"ஹே பைத்தியம்... நீ என்ன பணம் சொத்தா கேட்டே... பாசத்தைத்தானே கேட்டே. இதில் என்ன தப்பு... நானா இருந்தாலும் உன்னை மாதிரிதான் கோபப்பட்டிருப்பேன்டா குட்டி... அழாதேம்மா. தலை வலிக்கும்..." என்று பாசத்துடன் கூற,

ஷர்மி, "போதும்க்கா... என்னை ரொம்பக் கூனிக் குறுக வைக்காதீங்கக்கா... என்னால் முடியலை..." என்று கதற,

ராம் வந்து அவள் தோளை ஆதரவாகத் தட்டி, "ஏய் குட்டி... இதில் என்ன இருக்கு... உன்னை யாரும் தப்பா

நினைக்கலை. எங்க மேலயும் தப்பு இருக்கு... நாங்க கஸ்தூரி அம்மாவுக்குச் சின்ன வயசில் செய்தது தப்பு. அதுக்குத்தான் இப்போ பிராயச்சித்தம் பண்றோம். இதில் என்ன தப்பு..." என்று கூற,

ஷர்மிளா, "என்னை மன்னிச்சிடுங்கண்ணா... நான் அப்படி பேசியிருக்கக் கூடாது..." என்று வருத்தப்பட்டவள் தன் தந்தையிடம் சென்று, "அப்பா. என்னை மன்னிப்பீங் களாப்பா...? அக்காவையும் அண்ணாவையும் மாதிரி என்னையும் நல்லவளா வளர்ப்பீங்களாப்பா?" என்று வேண்ட,

திரு கண்ணீருடன், "சே... என்னடா பேசுறே நீ... நீ எங்க எல்லாரோட ரத்தமும்தான்டா. நீ எப்படி கெட்ட வளா இருப்பே... உன்னை நீயே வருத்திக்காதே குட்டி..." என்று அவளை அணைத்து உச்சி முகர... அங்கிருந்த அனைவரின் உணர்ச்சிக் கொந்தளிப்பும் தணிந்து தென்றல் வீச ஆரம்பித்தது.

அன்றிலிருந்து அவளுக்குத் தன் பெற்றோருக்கு அடுத்தபடியாக ராமுவும் பாரதியும்தான் செல்லம் ஜாஸ்தி.

கூடவே ஒட்டிக் கொண்டு அலைவாள். இதனால் அர்ஜுனும் கொஞ்சம் அவளை வாருவது உண்டு. இப்போது மருத்துவம் முதலாமாண்டு படிக்கிறாள்.

இன்னும் அதே சுட்டித்தனம்தான்... என்று அவளின் நினைவுகளில் இருந்து வெளியே வந்தவன் கீழே போக...

அங்கே சாப்பாட்டு மேஜையில் அமர்ந்து வேதாந்திற்கு ஷர்மி ஊட்டிக் கொண்டிருக்க... அவளுக்குப் பாரதி ஊட்டிக் கொண்டிருக்க...

கஸ்தூரியோ பாரதியைக் கடிந்து கொண்டிருந்தாள். “நீதான் அவளைச் செல்லம் கொடுத்துக் கெடுக்கிறே பாரு... வேதாவுக்கு நீ ஊட்டி விடு... அந்தக் கழுதை அதுவே சாப்பிடட்டும். சும்மா பக்கத்து வீட்டில் இருக்கிறதால் ஓடி ஓடி வந்திடுறா. நீயும் அவளுக்கு ஏற்ப ஆடுறே...” என்று கூற,

ஷர்மிளா அவரை முறைக்க... பாரதி சிரித்தாள்.

ஆம். இப்போது அவர்கள் முன்பு வாழ்ந்த வீட்டையே ராம் வாங்கி விட்டான்.

பாரதி அவர்களைப் பிரிய ரொம்பவே கஷ்டப்பட, அர்ஜுன் தான் இந்த யோசனையை அளித்தான்.

அந்த வீட்டு உரிமையாளரிடம் பேசி முடித்து, அந்த வீட்டை ராம் ஷர்மியின் பேரில் வாங்க... அர்ஜுனும் அதற்குத் துணை நிற்க... பழைய வீட்டையே சற்றுப் பெரிதாக்கிப் புதுப்பித்து, தன் தாய் தகப்பனாரின் அடையாளமாகத் திகழ்ந்த அந்த வீட்டில்தான் பாரதியின் குடும்பம் இருந்தது.

திருவும் தன் வேலையை இங்கே மாற்றல் வாங்கிக் கொண்டு வந்துவிட... ராம் மட்டும் மாற்றல் கிடைக்காததால் பெங்களூரில்தான் இருந்தான். அவ்வப்போது விடுமுறைக்கு வந்து விடுவான்.

அதனால் பாரதிக்கும் திருவையும் ராமையும் பிரிந்திருக்கும் துயர் இல்லை. ஷர்மிளாவும் அடிக்கடி வந்துவிடுவாள். இதனால் அவர்கள் மறுபடியும் ஒரு குடும்பமாக இருந்தனர்.

அவள் கூறியதைப் பார்த்து முறைத்த ஷர்மியிடம், "என்ன முறைப்பு... காலேஜுக்குப் போறே... சாப்பிட முடியாதா? கழுதை..." என்று திட்ட,

பாரதி, "ஏன் திட்டுறீங்கம்மா...? அவளுக்கு ஊட்டுறதில் என்ன வருது..." என்று சப்போர்ட் செய்ய,

அவளைப் பார்த்துக் கெத்துடன் சிரித்த ஷர்மி, "பார்த்தியா... நீ ரொம்பப் பேசினே... என் டார்லிங் வேதாவை விட்டு உங்களை உதைக்கச் சொல்லுவேன், ஜாக்கிரதை!" என்றவள் வேதாந்தைப் பார்த்து,

"வேத்ஸ்... டார்லிங். நிஞ்சா ஹட்டோரி மாதிரிப் பாட்டியை உதைக்கலாமா?" என்று கேட்க,

அதற்குப் புரிந்ததோ இல்லையோ, "நீங்கா... ஹட்டோதி... கத்து (கஸ்தூரி) பாத்தி உதை..." என்று உற்சாகத்துடன் கூற,

"ய்ய்யே..." என்று அவனைக் கட்டிக்கொண்டு, அவன் கன்னத்தில் முத்தமிட... அன்றைய ஷர்மிளாவும் வேதாவையும் போல இவர்களுக்கு இடையிலும் ஒருவிதப் பாசம் இழையோடியதைக் கண்ட பாரதியின் மனம் குதூகலித்தது. இதனால் அவளுக்குத் தன் தாயும் வேதாம்மாவும் இல்லாத குறையே தெரியவில்லை. அந்த அளவிற்கு இவர்களின் செய்கையில் அவர்களைக் கண்டு கொண்டிருந்தாள் அவள்.

அங்கே நடந்ததையும் தன் மனைவியின் மனம் நிறைந்த சிரிப்பையும் கண்டவாறே வந்த அவன், "என்ன காலையிலேயே மாநாடு ஆரம்பிச்சிருச்சு போல... அடடா

ஷர்மிளா மேடம்! நீங்க எப்போ வந்தீங்க...? நீங்க வந்த சத்தமே கேட்கலையே...!" என்று கேலி செய்ய,

அவனை முறைத்த ஷர்மிளா, "என்ன அத்தான் கிண்டலா... நான் கத்தியது கேட்டு என்னைக் கழுவிக் கழுவி ஊத்திட்டு கீழே வந்து நடிக்கிறீங்களா?" என்று கேட்க,

அர்ஜுன் சிரிப்பை அடக்கிக் கொண்டு, "ஷர்மியா... இவ்வளவு அறிவா பேசுறது.... அடடே ஆச்சரியக்குறி!" என்று கலாய்க்க...

அனைவரும் சிரிக்க... செண்பகம் அத்தை வந்து அவன் தட்டில் தோசையை வைத்து, "அவளை வார்றதே பொழைப்பா வைச்சிக்கிட்டு இருக்கே... கொஞ்ச நேரமாச்சும் வாயாடாமல் சாப்பிடுடா!" என்று அர்ஜுனை அதட்டி விட்டு, ஷர்மிளாவிடம், "ஷர்மிக் கண்ணு... தோசை வேணுமா?" என்று அன்பாகக் கேட்க,

அவளோ, "போதும் சித்தி. வயிறு ஃபுல்..." என்று சைகை காண்பிக்க,

அர்ஜுன், "அதிசயமா இருக்கு. பத்து தோசைதானே சாப்பிட்டே. அதுக்குள்ளேயே ஃபுல்லா! என்னடா கண்ணு, உடம்புக்கு ஒண்ணுமில்லையே..." என்று ஆரம்பிக்க,

ஷர்மிளா, "அக்கா... பாருக்கா, உன் ஹஸ்பெண்டை..." என்று சிணுங்க,

பாரதி, "அர்ஜுன்... சும்மா இருக்க மாட்டே..." என்று அதட்ட,

அர்ஜுன், “அய்யோ மேடம், சாரி சாரி... நீங்க இருக்கிறதையே பார்க்கலைங்க, மேடம்...” என்று அவளையும் வாரியவன்,

“ப்பா... சுப்...” என்று வேதாந்த் கையை உதட்டின் மீது வைத்து மிரட்ட... அந்தப் பெரிய மனிதனுக்குத் தான் இறுதியில் அடிபணிந்த நம் வீரன், “சரிங்க சார்... பேசலை!” என்று பவ்யமாகக் கூற, அனைவரும் சிரித்தனர்.

பிறகு சாப்பிட ஆரம்பித்த அர்ஜுன், கஸ்தூரியிடம், “நீங்களும் சாப்பிடுங்க அத்தை...” என்று கூற,

அவளோ, “இப்போதான் சாப்பிட்டு வந்தேன் அர்ஜுன்....” என்று கூறினாள்.

பின், “அத்தை! மாமா எங்கே?” என்று கேட்க,

அவள் கூறுவதற்குள் ஷர்மிளா புகுந்து, “அப்பாவுக்கு ஏதோ மீட்டிங். காலையிலேயே கிளம்பிப் போயிட்டார். நேரா பங்ஷனுக்கு வந்திடுவேன்னு சொல்லிட்டார்,” என்று முந்திரிக் கொட்டையாக முந்த,

சிரித்த அர்ஜுன், “அதானே பார்த்தேன். என்னடா அப்பாவை விட்டுட்டு வந்திட்டியோன்னு ஒரு நிமிஷம் நம்பிட்டேன். அப்பா இல்லைன்னா அண்ணா, இல்லைன்னா அக்கா... நடத்து மச்சினிச்சி நடத்து... கொடுத்து வெச்சிருக்கணும் உன்னைப் போல வாழ...” என்று அவளை வம்பிழுத்தாலும், உளமார்ந்த மகிழ்ச்சி அவன் குரலில் தெரிய,

ஷர்மியும், "பின்னே... நாங்களெல்லாம் வரம் வாங்கி வந்தவங்க. அதான் என் மேல் பாசத்தைப் பொழிய இத்தனை பேர்... என்னக்கா, நான் சொல்றது சரிதானே?" என்று பாரதியிடம் கேட்க,

அவளும், "ஆமாம்டா கண்ணு..." என்று அவளை அணைத்துக் கொண்டாள்.

பின் அர்ஜுன், "ஆமா... உன் அண்ணன் எங்கே? ஆளையே காணோம்... பெங்களூரில் இருந்து வந்ததும் குறட்டை விட்டுத் தூங்க ஆரம்பிச்சிட்டானா?" என்று கேட்க,

"ஹலோ... நாங்க ஒண்ணும் சோம்பேறி இல்லை. கரெக்டா வருவோமில்ல..." என்று பின்னாலிருந்து வந்தது ராமின் குரல்.

அதைக் கேட்ட பாரதி ஓடிச்சென்று, "அண்ணா... வா, வா! நீ வருவியோ மாட்டியோன்னு இருந்தேன்," என்று அழைக்க,

"உங்க அண்ணனை மட்டும் கூப்பிடுறீங்க... எங்களை எல்லாம் கூப்பிட மாட்டீங்களா அண்ணி?" என்று அவன் பின்னாலிருந்து குரல் கொடுத்தாள், அவனின் ஆறு மாதச் சிசுவைச் சுமந்து கொண்டிருந்த குறும்புக்கார யாழினி.

யாழினியும் ராமும் இப்போது கணவன் - மனைவி. அவர்கள் திருமணம் நடந்ததே பெரிய கூத்து. ராம் மனதில் ஆசை இருந்தாலும், வெளியே சொல்லாமல் போக்குக் காட்டிக் கொண்டிருக்க, அர்ஜுன் தடாலடியாக யாழினிக்கு வேறு மாப்பிள்ளை பார்க்க ஆரம்பிக்க,

ஒரு நாள் அவனிடம் வந்த ராம், "அத்தான்... யாழினியை எனக்குக் கட்டி வையுங்க..." என்று வந்ததும் வராததுமாகக் கேட்க,

அப்போதுதான் சாப்பிட்டு விட்டுத் தண்ணீர் குடித்துக் கொண்டிருந்த யாழினிக்கு அதிர்ச்சியில் புரையேறிக் கண்ணீரே வந்து விட்டது.

அர்ஜுனோ அதிர்ச்சியில், "டேய் என்னடா... என்ன சொல்றே...?" என்று புரியாத மாதிரிக் கேட்க,

ராமோ நக்கலாக, "புரியாத மாதிரி நடிக்காதீங்க அத்தான். உங்களுக்கு ஏற்கெனவே தெரியும்னு எனக்குத் தெரியும். என் வாயில் இருந்து வரணும்னுதானே இருந் தீங்க? இப்போ நானே கேட்கிறேன்... எனக்கு யாழினி வேணும். நான் அவளை விரும்புறேன்," என்று கூற, அர்ஜுன் யாழினியைப் பார்க்க, அவளுக்கோ அந்த அதிர்ச்சியையும் மீறிக் கன்னங்களில் வெட்கம் பட்டுச் சிவந்தது.

அதைக் கண்ட அர்ஜுன், உள்ளுக்குள் சிரித்துக் கொண்டாலும், வெளியே காட்டாமல், "என்ன தைரியம் இருந்தால் என் தங்கையைக் கேட்பே? நீ மட்டும் உன் தங்கச்சியை நான் கேட்டவுடன் தந்துட்டியா? நான் மட்டும் ஏன் தரணும்? அவளுக்கு நான் உன்னை விட நல்ல மாப்பிள்ளை பார்த்து வெச்சிருக்கேன்..." என்று கெத்துக் காட்ட, யாழினியின் முகம் குழப்பத்தில் மூழ்க,

ராம் அதற்கெல்லாம் அசருவானா என்ன...? அர்ஜுனிடம், "நீங்க என் கிட்ட வந்து கேட்டீங்களா? என் தங்கச்சியைக் கஷ்டப்படுத்துனீங்க... அதனால் மறுத்

தேன். உங்க தங்கச்சியை நான் ஒண்ணும் கஷ்டப் படுத்தலையே... நேர்மையா உங்க கிட்டே வந்துதானே கேட்கிறேன்... நீங்க ஒத்துக்கிட்டா சரி... இல்லைன்னா உங்க ஸ்டைலில் பொய் சொல்லி உங்க தங்கச்சியைக் கூட்டிட்டுப் போயிடுவேன், அவ வரவில்லை என்றாலும்..." என்று அழுத்தமாகக் கூற,

பாரதி, அர்ஜுனின் காதலி, "இது தேவையா உனக்கு... சும்மா கெத்துக் காமிச்சிக்கிட்டு... யாழினி எங்கண்ணனுக்குத்தான். அவ முகத்தைப் பார்த்தாலே தெரியுதே! ஒத்துக்கோ அர்ஜுன்," என்று தன் அண்ண னுக்கு ஆதரவளிக்க,

அர்ஜுனோ அதிர்ச்சியுடன், "அடிப் பாவி... நீதானே அவனை அலையவிடச் சொன்னே... இப்போ பல்டி அடிக்கிறே. ஒண்ணு மட்டும் புரியுதடி... இந்தப் பொண் ணுங்க எப்பவும் புருஷனை விடப் பொறந்த வீட்டுக்குத் தான் சப்போர்ட் செய்வாங்க. இதுக்கு மேல் நான் என்ன சொல்ல... டேய் ராம்... அடுத்த முகூர்த்தத்திலேயே கல்யாணம்... சரியா?" என்று கேட்க,

அவனும் வெட்கத்துடன், "சரி அத்தான்..." என்று கூற,

அர்ஜுன், "டேய்... இப்படி எல்லாம் செய்யாதேடா, பயமா இருக்கு..." என்று வார,

யாழினி இடையில் புகுந்து, "என்ன, எல்லாரும் அவரைக் கலாய்ச்சிக்கிட்டு... இதெல்லாம் எனக்குப் பிடிக்கலை," என்று தன் காதலனுக்கு வக்காலத்து வாங்க,

ராம், "அப்படிச் சொல்லடி, என் செல்லக்குட்டி!" என்று அவளை அணைக்கப் போக,

அர்ஜுன் அவனைத் தடுத்து, "டேய், டேய்... ம்ஹூம்... இதெல்லாம் கல்யாணத்துக்கு அப்புறம் மச்சான்..." என்று கிண்டலடித்து, அவனை அணைக்கப் போக,

ராம் தலையில் கை வைத்து, "அத்தான்... என்னை அசிங்கமாகக் கூடத் திட்டுங்க. ஆனால், இந்த மச்சான்னு சொல்லிக் கட்டிப் பிடிக்கிறதைக் கொஞ்சம் நிறுத்துங்க... எனக்குப் பயமா இருக்கு..." என்று அலற, அவனைக் கண்டு அனைவரும் வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரிக்க,

அங்கே கல்யாணக் களை மெருகு பெற ஆரம்பித்தது. அவர்களுக்கும் திருமணமாகி இரண்டு வருடங்களாக... இப்போது யாழினி ஆறு மாதக் கர்ப்பிணி. பிறக்கும் குழந்தைக்கு மேகா அல்லது மேகநாதன் எனப் பேர் வைப்பதாக முடிவு செய்திருந்தனர்.

இப்போது யாழினி கூறியதைக் கேட்டதும், பாரதி சிரிப்புடன், "பாருடா... இந்த அம்மாவை நாங்க மறக்கிறோமாம்... மறந்தாலும் நீ விட்டுருவியா?" என்று கேட்க,

யாழினி சிணுங்கலுடன், "போங்க அண்ணி..." என்றபடி, "அண்ணா..." என்று அர்ஜுனை நோக்கி ஓட,

ராம் பதறி, "ஏய் லூசு... இப்படி ஓடாதேடி. இந்தப் பாசமலர் சாவித்திரி தொல்லை என்னால் தாங்க முடியலைடா சாமி," என்று அலுத்துக் கொள்ள,

அதைக் கேட்ட அர்ஜுன், தன் தங்கையை ஒரு கையால் அணைத்தபடி, "என்னால் கூடத்தான் தாங்க முடியலை... நான் பொறுத்துப் போகலை? நீயும் பொறுத்துக்கோ... என்னடா யாழி?" என்று கேட்க,

அவளும், "ஆமாண்ணா..." என்று தலையாட்டினாள்.

அதற்குள் அங்கே இருந்த பெரிய மனுஷி, "சே சே... இந்த வீட்டில் யாருக்கும் பொறுப்பே இல்லை. ஒரு பெரிய பங்ஷனை வெச்சிக்கிட்டு, எல்லாம் கதை பேசிக்கிட்டு இருக்குதுங்க. நீ வாடா டார்லிங். நாமதான் சமத்து... கார்ல போய் இருக்கலாம்..." என்று வேதாந்தை அழைத்துக் கொண்டு போக,

அவள் காதைப் பிடித்துத் திருகிய ராம், "வரேன்டி... உனக்கு இருக்கு. வர வர உன் வாலு பெரிசாகிடுச்சு..." என்று அதட்ட,

ஷர்மிளாவோ, "வெவ்வே..." என்று ஒழுங்கு காட்டி, "நான்தான் டாக்டர் ஆச்சே! ஆபரேஷன் செய்துக்கிறேன். நீ போய் திருடனைப் பிடிக்கிற வழியைப் பாரு. வந்துட்டாரு போலீஸு..." என்று அசால்ட்டாகக் கூறி விட்டுத் தன் டார்லிங்குடன் செல்ல, அனைவரின் முகத்திலும் புன்னகைச் சாரல்.

இப்படியாக அரட்டைகளுடனும், சிரிப்புகளுடனும், கிண்டலுடனும் காலைச் சிற்றுண்டி முடிய, அனைவரும் விழாவிற்குச் செல்ல ஆயத்தமானார்கள்.

கிளம்பியவர்கள், கடவுளுக்கு உரிய நன்றியைச் செலுத்தி விட்டுத் தங்கள் வாழ்வில் முக்கியப் பங்கு வகித்த

நால்வரின் படத்திற்கு முன் வந்து நின்றனர். அதில் ஷர்மிளா, மேகநாதன், வேதவல்லியின் புகைப்படத்துடன் ஹரிஹரனின் புகைப்படமும் சேர்ந்திருந்தது.

ஆம்... இரண்டு வருடங்களுக்கு முன்பு, தன் நோயின் கடுமை அதிகரிக்க, ஒருநாள் தூக்கத்திலேயே அவர் உயிர் அவரை விட்டுப் பிரிந்தது. அன்றிலிருந்து இன்றுவரை அவரையும் மற்றவர்களுடன் ஒன்றாகவே பார்க்க ஆரம்பித்திருந்தான் அர்ஜுன்.

அவனைப் பொறுத்தவரை வாழும்வரை அவர் தவறானவராக இருந்தாலும், இறக்கும் போது ஒரு மனிதன் நல்லவனாக இறந்தால், அதுவே அவன் செய்த பாவங்களுக்கு விடை என்பதை அறிந்திருந்ததால், அவன் மனதில் எந்த விதக் குழப்பமும் தோன்றவில்லை.

ஹரிஹரனின் சொத்துகளை எப்போதும் யாழினியின் பெயரிலேயே வைத்தவன், அதை நிர்வகிக்க மட்டும்தான் செய்தான். தன்னுடைய ஆபீசைப் பார்த்துக் கொள்ள ரவியைத் துணை எம்.டி.யாக நியமித்திருந்தான். அவ்வப்போது பாரதியும் சென்று பார்த்துக் கொள்வாள். இப்படி அனைத்தையும் திட்டமிட்டுச் செய்தவன், தன் வளர்ச்சிக்காக மட்டுமின்றிச் சமூகத்தின் வளர்ச்சிக்காகவும் ஒரு அடியை எடுத்து வைத்திருந்தான். அதற்கு அடிக்கல் நாட்டத்தான் இந்த விழா.

அப்படி என்ன விழா அது? பார்க்கலாம், வாருங்கள்!

சரியான நேரத்தில் சென்று, வந்திருந்த எல்லாரையும் இன்முகத்துடன் வரவேற்றுச் சிறப்பு விருந்தினராக

வந்திருந்த மாவட்ட ஆட்சியரின் கையால் விளக்கேற்றி, அந்த 'விதை பவுண்டேஷன்ஸ்' இனிதே ஆரம்பிக்கப் பட்டது.

முழுக்க முழுக்க வறுமையில் வாடுபவர்களுக்கும், குடும்பச் சூழ்நிலைகளால் தங்கள் லட்சியக் கனவுகளைப் பலிக்க வைக்க முடியாமல் துவண்டவர்களுக்குமான அமைப்பு அது. புத்திசாலி மாணவர்கள், தொழிலில் சாதிக்க வெற்றிப் படிகளை எதிர் நோக்கியிருப்பவர்களுக் காகவே ஆரம்பிக்கப்பட்ட அமைப்பு இது.

இதைத் தொடங்கிட, விஸ்வநாதனின் தந்தை - அதாவது அர்ஜுனின் தாத்தா மூலமாக வந்த சொத்துகள்தான்.... நிறைய வருடங்களாக அவன் எங்கே இருக்கிறான் என்று தெரியாமல், பங்காளிகளால் வழக்குப் போடப்பட்டு அபகரிக்க முயன்ற அந்தப் பெரும்பான் மையான சொத்துகள் அவனுக்குச் சேர்ந்ததால், அதை நல்ல காரியத்திற்காகப் பயன்படுத்தத் திட்டமிட்டு இருந்தான். அதற்கு விதைதான் இந்த 'விதை.'

இதை இப்போது பாரதியும் யாழினியும் தான் நிர்வகிக்க இருந்தனர். இந்த யோசனை பாரதியால் தூண்டப்பட்டு அர்ஜுன் எடுத்த முடிவு.

விழாவில் பேசிய அர்ஜுனின் உரை அனைவரை யும் நெகிழ வைத்தது.

"எனக்குப் பணத்தோட அருமை சின்ன வயதில் தெரியவில்லை. அதனால் எதிர்காலமோ, அதைப் பற்றிய லட்சியங்களையோ நான் என்றைக்குமே வளர்த்துக்கிட்டது

இல்லை. அப்படிப்பட்ட நானே என் வாழ்வில் மிகப் பெரும் தோல்வி வந்தபோது, துவண்டு போய்ச் சக்கையாகத்தான் மாறிப் போனேன். சொல்லப் போனால் அடுத்த வேளைச் சாப்பாட்டுக்குக் கூட என்ன வழின்னு தெரியாத நிலைதான்.

"அன்னைக்கு எனக்கு அதிர்ஷ்ட தேவதையாக என் மனைவி என் கூட இருந்தாள். என் தோல்வியில் அடிபட்டு, என் வெற்றியில் சந்தோஷப்பட்டு, ஏன்... நானே கொடுத்த கஷ்டங்களைக் கூடத் தன்னோட அழகான புன்னகையால் தட்டி விட்டு, என்னை ஒரு தூணாக நின்று தாங்கினாள்.

"இந்த நாட்டின் சுதந்திரப் போராட்டத்தில் கிடைத்த பாரதி மாதிரி, என் வாழ்க்கைப் போராட்டத்தில் இந்தப் பாரதி எனக்குக் கிடைத்தாள். எனக்குக் கிடைத்த மாதிரி எல்லா அர்ஜுன்களுக்கும் - அதாவது கஷ்டப்படுகிற எல்லாருக்கும் பாரதி மாதிரி ஒருத்தர் கிடைக்க மாட்டாங்க இல்லையா...? அதனால்தான் இந்த அமைப்பை ஆரம்பிச்சிருக்கோம்.

"நீங்க லட்சியம்கிற தரிசு நிலத்தோட வாங்க... நாங்க அதுக்கு விதையைக் கிள்ளிப் போடுறோம். உங்கள் விடாமுயற்சி என்னும் உரத்தால் அந்த வாழ்க்கைப் பயிர் எப்படி வளருதுன்னு பாருங்க. நாங்க ஒரு கொழு கொம்பாகத்தான் இருப்போம். உங்க கிட்ட இருக்கிற திறமைதான் உங்களை ஜெயிக்க வைக்கும். அதற்கான எல்லா உதவிகளும் 'விதை'யில் கிடைக்கும்.

"வாருங்கள்... வாழ்ந்து பார்க்கலாம். இதுதான் இந்த இயக்கத்தின் தாரக மந்திரம்..." என்று மென்மையாக,

ஆனால் அழுத்தமாக ஒரு உறுதியுடன் அவன் கூறி முடிக்க,

அனைவரின் கண்களிலும் மகிழ்ச்சியின் பூரிப்பு. பாரதியின் கண்களில், தடுத்தாலும் நிற்க மாட்டாமல் கண்ணீர் பொழிய, அவள் அருகில் இருந்த திரு, "குட்டி... உன்னை நாங்க கூட இவ்ளோ உயர்வாக நினைத்த தில்லை. ஆனால், அர்ஜுன்... என் மனசில் அவன் எங்கேயோ போயிட்டான். இப்போ சொல்றேன்... அவன்தான் உனக்குக் கிடைச்ச பொக்கிஷம்..." என்று கூற, அவர் தோளில் சாய்ந்து கொண்டாள் அவள்.

பின்னர் வேலைகள் பம்பரமாகச் சுழல வைக்க, நிற்கக் கூட நேரமின்றி அனைவரும் ஓடிக் கொண்டிருந் தனர்.

மஹதியும் வினோத்தும் கூட வந்திருந்தனர். வந்தவள் பாரதியை வாட்டி எடுத்து விட்டாள். "ஏய்... என்ன லவ்வு... என்ன அன்பு... சே! அர்ஜுன் அண்ணா...! நீங்க எங்கேயோ போயிட்டீங்க. என்னை மன்னிச்சிடுங்க அண்ணா. நான் உங்களை எவ்வளவோ திட்டியிருக்கேன். ஆனால், இன்னைக்குத்தான் உங்க மனசு புரிஞ்சுது. இவ அடிக்கடி சொல்லுவா... உங்க காதலுக்குத்தான் அவ லாயக்கில்லை இல்லைன்னு... அது உண்மைதான், அண்ணா. எனக்கு என்ன பேசுறதுன்னே தெரியலை..." என்று தழுதழுக்க,

வினோத்தும், "ஆமா சார். இவ எப்போ பார்த்தாலும் உங்களைப் பத்தித்தான் பேசிக்கிட்டே இருப்பா. இந்த மாதிரிக் காதல் கிடைக்க சிஸ்டர் ரொம்பக் கொடுத்து

வெச்சிருக்கணும். அவங்களைப் பத்திப் பேசும்போது உங்க கண்ணில் மின்னிய காதல், அன்பு, நேசம்... சே... கொன்னுட்டீங்க சார். இன்னைக்கு உங்களை எப்படி யாவது பார்த்துப் பேசிடணும்னுதான் வந்தேன் சார். உங்களைப் பார்த்ததில் ரொம்பச் சந்தோஷம்..." என்று அவன் கையைப் பிடித்துக் கொள்ள,

அர்ஜுன் கூச்சத்தில் நெளிந்து, "அய்யோ... என்னப்பா, ரெண்டு பேரும் என்னவோ சொல்றீங்க... என் மனசில் தோணினதைச் சொன்னேன்... அவ்வளவுதான். ப்ளீஸ்... இப்படி எல்லாம் பேசி என்னைப் பெரிய ஆளாக் காதீங்க..." என்று கூற, அவர்களோ இன்ப மேலீட்டில் பேசிக் கொண்டே இருக்க,

பாரதி அலுப்பாக, "போதும்டி... ரொம்பத்தான் உருகாதே. நீ என் பிரெண்டா, அவர் பிரெண்டா?" என்று செல்லமாகப் பொறாமையுடன் கேட்க,

அதைக் கேட்டுச் சிரித்த மஹதி, "பாருடா பொறாமையை... சரிம்மா, நான் பேசலை. உன் புருஷனை நீயே வெச்சிக்கோ..." என்று அவளைத் தள்ளிவிட,

அர்ஜுனின் மீது மோதிய பாரதி சட்டென்று விலகி நிற்க, அவளை விலகாதவாறு தடுத்து நிறுத்திய அர்ஜுன், "ஆமா மஹதி... பொண்ணு எங்கே?" என்று அவர்களின் ஒரு வயதுக் குழந்தை வினயாவைக் கேட்க,

வினோத், "அவளுக்குக் கொஞ்சம் உடம்பு சரியில்லை. சளி, இருமல். இவளும் விழாவிற்குப்

போயே ஆகணும்னு அடம். அதான் அம்மா கிட்டே விட்டுட்டு வந்தோம்..." என்று கூற,

பாரதி, "உனக்குக் கொஞ்சமாவது அறிவிருக்கா? பிள்ளையை விட்டுட்டு வந்திருக்கே... உடனே கிளம்பு..." என்று அதட்ட,

மஹதி, "அடிப்பாவி... வா, வான்னு கத்தினவ, இப்போ போ போங்கிறே..." என்று பொய்க் கோபத்துடன் கேட்க,

பாரதி, "பாப்பாவுக்கு உடம்பு சரியா இருந்தா உன்னை விடக் கூடச் செஞ்சிருக்க மாட்டேன். இப்போ வினயாதான் முக்கியம். நீ போ," என்று பாசத்துடன் கூறி விட்டு, அவர்கள் முகம் கோணாமல் வழியனுப்ப,

மஹதி அவள் கையைப் பிடித்துக் கொண்டு, "பாரி... உன் நல்ல மனசுக்குத்தான் எல்லாம் நல்லபடியா நடக்குதுடி. நீ என் பிரெண்டாக் கிடைச்சதுக்கு நான் கொடுத்து வெச்சிருக்கணும். இதே மாதிரி நம்ம நட்பு நீடிச்சிருக்கணும். அதுதான் என் ஆசை," என்று தழு தழுக்க,

பாரதியும் கண்கள் கலங்கி, "ஆமா மகி... என் ஆசையும் இதுதான். நீ இல்லைன்னா நான் தன்னந் தனித் தீவாத்தான் இருந்திருப்பேன். எனக்கு நீ நிறைய உதவி செஞ்சிருக்கே மகி. அதுவும் நான் யாருன்னே தெரியாமல் நீ செஞ்ச உதவி ரொம்பப் பெரிசு மகி. நிச்சயமாக நம்ம நட்பு நீடிச்சிருக்கும்... இருக்கணும்," என்று ஆமோதிக்க, தோழிகள் இருவரும் தம் உணர்ச்சி களில் மூழ்கி விட்டுத் தெளிந்தனர்.

பின்னர் அவர்களை அனுப்பி வைத்து, வந்திருந்தவர்களுக்கு உணவளித்து, மரியாதையுடன் வழியனுப்பி வைத்து, அனைத்து வேலையும் முடித்து நிமிர்ந்து வீட்டிற்குப் போக இரவு பத்தாகியது.

திரு, கஸ்தூரி, ராம், யாழினி என அனைவரிடமும் சொல்லி விட்டுப் பின் வேதுவும் ஷர்மியும் தூங்கி விட, அவர்களை எழுப்பிப் படுக்க வைத்து, செண்பகம் அத்தைக்குப் பி.பி. மாத்திரை தந்து தூங்க வைத்து விட்டு மேலேறி வர, அர்ஜுனின் அலுவல் அறையில் விளக்கெரிந்தது.

அதைப் பார்த்துச் சிரித்துக் கொண்ட பாரதி, 'எப்போ பார்த்தாலும் வேலை, வேலை. சரியாகத் தூங்குறதே இல்லை. இன்னைக்குப் பாரு...' என்றபடியே திட்டம் தீட்டினாள்.

உள்ளே அர்ஜுன், தங்கள் அமைப்பின் பயனாளிகளுக்காக வந்திருந்த விண்ணப்பங்களைப் பார்வையிட்டபடி இருக்க, அப்போது கதவு தட்டப்பட, அர்ஜுன் தலையைக் கூட நிமிர்த்தாமல், "நான் தூங்க லேட்டாகும் ரதி. வேலை இருக்கு... நீ போய்த் தூங்கு..." என்று குரல் கொடுக்க,

ஆனால், வந்த பதிலோ வேறு மாதிரி இருந்தது. "பாஸ்... மே ஐ கம் இன்..." என்று பவ்யமாக அழைக்க, அர்ஜுனோ சட்டென்று நிமிர்ந்து பார்க்க, அங்கே பாரதிதான் நின்றிருந்தாள். அவளை அவன் கேள்வியுடன் பார்க்க,

பாரதியோ, “என்ன பாஸ்... நான்தான் உங்க பி.ஏ. உள்ளே வரலாமா? நீங்கதானே சொல்வீங்க பாஸ்... கதவைத் தட்டிட்டு உள்ளே வரணும்னு...” என்று குறும்பாகக் கூறிக் கண்ணடிக்க,

அர்ஜுன் சிரிப்பை அடக்கி, “வா... வந்து தொலை...” என்று பழைய அர்ஜுனாகக் கடுகடுக்க, பாரதிக்கு அவன் பாவனையில் சிரிப்பு வர, அதை அடக்கிக் கொண்டு,

“ஏன் பாஸ் கோபமாக இருக்கீங்க...? கோபம் வந்தா பி.பி. வரும் பாஸ். உடம்புக்கு நல்லதில்லை. என்னாச்சு பாஸ்... உங்க வொய்ப் திட்டிட்டாங்களா?” என்று பாவமாகக் கேட்க,

அர்ஜுன், “ஆமா பி.ஏ. என் வொய்ப் என்னை வர வரக் கண்டுக்கவே மாட்டேன்றா. அவ குழந்தை, அண்ணன், தங்கச்சிதான் அவளுக்கு முக்கியம். என்னைக் கண்டுக்கிறதே இல்லை,” என்று கூற,

பாரதி, “அச்சோ... பாவம் பாஸ் நீங்க. இதுக்குத்தான் அப்பவே என்னைக் கட்டிக்கோங்க, கட்டிக்கோங்கன்னு சொன்னேன். கேட்டால்தானே! இப்போ நல்லாப் படுங்க...” என்று கூற,

அவள் கையைப் பிடித்து இழுத்துத் தன் மேல் பரவ விட்ட அர்ஜுன், “இவ்ளோ கட்டிக்கிட்டாப் போதுமா மேடம்...?” என்று கேட்க,

அவன் மடியில் அமர்ந்து, அவன் முகத்தைப் பார்த்த பாரதியும் சிரித்து, “போதும் பாஸ்...” என்று மூக்கை ஆட்டி, அவனைக் கட்டிக் கொண்டு, “கண்ணா... என்

மேல் ஏன்டா இவ்ளோ பாசம்? மூணு வருஷத்துக்கு முன்னாடி நீ கேட்ட கேள்வி, இன்னைக்கு நான் கேட்கிறேன். சத்தியமா நீ இன்னைக்குப் பேசியதும் என்னால் முடியலை. அங்கே மட்டும் யாருமில்லைன்னா உன்னை ஓடி வந்து கிஸ் செய்திருப்பேன். என் மேல் அவ்வளவு லவ்வா உனக்கு?" என்று தன் அழகிய விழிகளை விரித்துக் கேட்க,

அர்ஜுன் அவள் மூக்கைப் பிடித்து ஆட்டி, தன் பாக்கெட்டில் இருந்த அவள் பழைய போனை எடுத்து, "பிடிக்காமல்தான் உன் கிட்டே இருந்து பிடுங்கின போனை பாக்கெட்டில் வைத்துச் சுத்துவேனா...?" என்று கேட்க,

பாரதி, "அடப்பாவி... இது என் போன்தானே? இதில் என்னவெல்லாம் நோண்டினே?" என்று கேட்க,

அர்ஜுன், "அடிச்சுச் சாத்திடுவேன். ஆசையா என்னை ஏதாவது போட்டோ எடுத்திருப்பே... அதான் மெமரி கார்டைக் கேட்டேன்னு பார்த்தால், முழுக்க உன் சித்தப்பா, அண்ணா, ரோட்டில் கிடந்த நாய்க்குட்டி, கசங்கிப் போன பூ எல்லாத்தையும் எடுத்து வெச்சிருக்கே. மருந்துக்குக் கூட என் போட்டோ இல்லை. நீயெல்லாம் பேசாதே!" என்று பொய்க் கோபம் கொள்ள,

பாரதி அசடு வழிந்து, "ஹி...ஹி... அதான் நான் உன் பக்கத்திலேயே இருந்தேனே... அப்புறம் எதுக்குப் போட்டோ...?" என்று கேட்க,

அர்ஜுன், "நல்லா சமாளிக்கிறேடி என் பி.ஏ." என்று அவளைக் கொஞ்சினான்.

சிரித்த பாரதி, "நம்மைச் சுத்தி எல்லோரும் சந்தோஷமாக இருந்தால் அது நமக்கும் சந்தோஷத்தைத் தருது இல்லை கண்ணா... இன்னைக்கு நான் ரொம்பச் சந்தோஷமாக இருக்கேன். நீ, நம்ம குழந்தை, அப்பா, அம்மா, அண்ணா, யாழி, சித்தி அழகான குடும்பம். இதை விட வேற என்ன வேணும் அர்ஜுன்? எனக்கு முழுமை அடைஞ்ச மாதிரி இருக்கு இன்னைக்கு..." என்று கூற,

அவளை ரசித்த அர்ஜுன், "உனக்கு இன்னைக்குத் தோணியது, எனக்கு எப்பவோ தோணிச்சு ரதி. நீ என் வாழ்வில் வந்தப்பவே என் வாழ்க்கை முழுமையாகிடுச்சு. காதலன் ஒருவன் கைப்பிடித்தே அவன் காரியம் யாவிலும் கைகொடுத்தே என்று பாரதி சொன்ன மாதிரி நீ கிடைச்சதே சந்தோஷம்தான். கூடவே நம்ம உறவுகளும்... உறவுகள் என்னைக்குமே நமக்குத் தேவைதான் கண்ணம்மா. கெட்டதே செஞ்சாலும் அது நமக்கு வேணும். பொய்யாகவாவது உறவுகளை நாம் உருவாக்கிக்கணும். இதுதான் நான் தெரிஞ்சுக்கிட்டது. என்ன சொல்றே...?" என்று கேட்க,

பாரதி தலையசைத்து, "ஆமா அர்ஜுன்... நீ சொல்றது சரி... ஹாவ்..." என்று கொட்டாவி விட்டவள், அவன் நெஞ்சின் மீது சாய்ந்து, "சரி... நான் ஒருநாள் உனக்குத் தாலாட்டுப் பாடினேன் இல்லை... அந்த மாதிரி நீ எனக்குப் பாடுவியாம். நானும் தூங்குவேனாம்..." என்று குறும்பாகத் தலை சாய்த்துக் கேட்க, அந்தக் காதலியைப் பார்த்துச் சிரித்த நம் கள்வன் தன் உயிரான அவளின் ஆணைப்படியே அவளை நினைக்கும்போதெல்லாம் தன் மனதில் தோன்றும் பாடலைப் பாடினான்.

'பூவே செம்பூவே உன் வாசம் வரும்
வாசல் என் வாசல் உன் பூங்காவனம்
வாய் பேசிடும் புல்லாங்குழல்
நீதானொரு பூவின் மடல்
நிழல் போல நானும் நடை போட நீயும்
தொடர்கின்ற சொந்தம் நெடுங்கால பந்தம்
கடல் வானம் கூட நிறம் மாறக் கூடும்
மனம் கொண்ட பாசம் தடம் மாறிடாது
நான் வாழும் வாழ்வே உனக்காகத்தானே
நாள்தோறும் நெஞ்சில் நான் ஏந்தும் தேனே
எந்நாளும் சங்கீதம் சந்தோஷமே
வாய் பேசிடும் புல்லாங்குழல்
நீதானொரு பூவின் மடல்
உனைப்போல நானும் ஒரு பிள்ளை தானே
பலர் வந்து கொஞ்சும் கிளிப் பிள்ளை நானே
உனைப்போல நாளும் மலர் சூடும் பெண்மை
விதி என்னும் நூலில் விளையாடும் பொம்மை
நான் செய்த பாவம் என்னோடு போகும்
நீ வாழ்ந்து நான்தான் பார்த்தாலே போதும்
எந்நாளும் எந்நாளும் உல்லாசமே
வாய் பேசிடும் புல்லாங்குழல்
நீதானொரு பூவின் மடல்!'

அவனின் நேசக் குரலில் மதி மயங்க, அவன் உணர்ச்சிகள் அவளையும் அணைக்க, அவன் நெஞ்சில் சாய்ந்து முகத்தில் நிலைத்த புன்னகையுடன் நித்திரையைத் தழுவினாள், அந்தக் கள்வனின் காதலி.


கள்வனி
காதலி
சக்தி திருமலை

